2977

T.N.L.A. Debates
Official Reports

Vol 39 No. 3

22nd April 1987

©

V211,31 N87
N87.39.3
136522

வெளியீடு 25-4-1988 Issued 25-4-1988

2977

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

529/AL/88

**புதன்கிழமை, ஏப்ரல் 22, 1987-தொகுதி 39-எண் 3**
Wednesday, the 22nd April 1987-Volume 39-No. 3

**சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009**
**Legislative Assembly Secretariat Fort St. George,**
**Madras-600 009**

விலை ரூ.3 00 காசுகள்] [Price Rs-3.00 pais.

136522
சென்னை-600 008.

# உள்ளடக்கம்.

22—4—1987

| | புக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 587—630 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) மதுரை மாவட்டம் சின்னமனூரி லுள்ள வெற்றிலைக் கொடிக்கால் களுக்குத் தண்ணீர் விடுதல் குறித்து. | 630—631 |
| (ஆ) அரசு நிகழ்ச்சிகளிலே உறுப்பினர்கள் பங்குபெற வாய்ப்பளிப்பது குறித்து. | 631—634, 636—642 |
| (இ) சேலம் மாவட்டத்திலே உறுப்பினர்கள் தாக்கப்பட்டதாகச் சொல்லப்படுவது. | 634 |
| (ஈ) கன்னியாகுமரி மாவட்ட ஆலயப்பணி யாளர்களின் ஊதியஉயர்வு கோரிக்கை. | 634—635 |
| 3. கவன ஈர்ப்பு— | |
| (அ) கோவை தொழிலாளர் அரசு கூட்டுறுதி மருத்துவமனையில் மருத்துவர்கள் நிய மனம். | 643—645 |
| (ஆ) கரூர் சாயப்பட்டறைக் கழிவு நீரால் பாதிப்பு. | 645—647 |
| (இ) மார்த்தாண்டம் மேல்நிலைப் பள்ளி யில் சில மாணவர்களுக்கு தேர்வு எழுத அனுமதியின்மை. | 647—648 |
| (ஈ) திருமங்கலம் தொகுதி எம். [illegible] நதிக்கருகில் பாலம் செப்பனிடுதல். | 648—650 |
| (உ) பாலக்கோடு வட்டத்தில் பேருந்துகள் விடுதல் குறித்து. | 650—651 |
| (ஊ) தீப்பெட்டி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்காமை. | 651—661 |
| (எ) நீலகிரி மாவட்டத்தில் சில பகுதிகளில் அடிக்கடி மின்தடை ஏற்படுதல். | 661—663 |
| (ஏ) அறநிலையத் துறை பணியாளர்கள் ஊதிய நிலை. | 663—668 |
| (ஐ) வேளச்சேரி ஏரி நீர்ப்பிடிப்பு மட்டத்தைக் குறைத்து வெள்ளப் பாதிப்பைத் தவிர்த்தல். | 668 699 |
| (ஒ) இராமாநதி நீர்த்தேக்கத்தின் ஆயக்கட்டு களை விஸ்தரித்தல். | 669—671 |
| (ஓ) தமிழக மீனவர்கள் கேரளக் கடற்பகுதி யில் மீன் பிடிக்கத் தடை. | 671—674 |
| (ஔ) பழனித் தொகுதி நெய்க்காரப்பட்டி யில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்ட டம் கட்டுதல். | 675—676 |

| | பக்கங்கள் |
|---|---|
| (அஅ) நாகை மருத்துவமனைக்குப் புதிய நோயாளி ஊர்தி. | 676—677 |
| (ஆஆ) திருவொற்றியூர் தொகுதியில் கடல் அரிப்பால் குப்பங்கள் பாதிப்பு. | 678 |
| (இஇ) அடையாறு ஆற்றின் கரையோரத்து மக்களுக்கு மாற்று இருப்பிடம் அளிக்க நடவடிக்கை. | 679—683 |
| 4. அரசினர் சட்ட முன்வடிவு,— | |
| கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1987. | 683—684 |
| 5. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு— (தொடர்ச்சி) | 684—862 |
| (அ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை. | 684—685 |
| (ஆ) கோரிக்கை எண் 9— மாநில ஆட்சித் தலைவர் அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள். | 685—686 |
| (இ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம். | 686 |
| (ஈ) கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. | 687 |
| (உ) கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். | 688—689 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். | 812—860 |
| *திரு. மு. இராசாங்கம் | 689—697 |
| திரு. கி. மனோகரன் | 697—716 |
| திரு. த. மாரிமுத்து | 717—722 |
| திரு. கோ. வீரய்யன் | 722—730 |
| திரு. ச. பாலகிருஷ்ணன் | 730—737 |
| *திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் | 737—747 |
| திரு. பி. என். இராமச்சந்திரன் | 748—755 |
| திரு. எஸ். சிவராமன் | 755—760 |
| திரு. கு. தமிழரசன் | 760—767 |
| திரு. அ. வெங்கடாசலம் | 767—775 |
| *திரு. வை. பாலச்சந்திரன் | 775—779 |
| *திரு. பொ. உத்திராபதி | 779—789 |
| திரு. என். எஸ். வி. சித்தன் | 790—812 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 863 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

2477

1987, ஏப்ரல் 22, புதன்கிழமை

சித்திரை 9, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு".

செய்யத்தக்க செயலை ஆராய்தலும், அதற்குரிய வழிகளை ஆராய்ந்து செய்தலும், துணிவாகக் கருத்தைச் சொல்லுதலும் வல்லவன் அமைச்சன்.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### அரசு மருத்துவமனைகளில் நிர்வாக அதிகாரிகளை நியமித்தல்.

440—(*வினா எண். 1326) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள பெரிய அரசு மருத்துவமனைகளில் நிர்வாகப் பொறுப்பை சிறப்பாக கண்காணிக்கும் பொருட்டு நிர்வாக அதிகாரிகள் (Administrative Officers) நியமிக்கும் சொற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஐந்து பெரிய அரசு மருத்துவமனைகளில் நிர்வாகப் பொறுப்பை சிறப்பாக கண்காணிக்கும் பொருட்டு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் அவர்களை நியமிக்கும் சொற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

{1987 ஏப்ரல் 22

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவ மனைகளிலே கூட டி.எம்.ஓ. போன்றவர்கள் தலைமைப் பொறுப்பை வகிக்கின்றார்கள். அவர்கள் மருத்துவ மனைப் பொறுப்பையும் நிர்வாகப் பொறுப்பையும் மேற்கொள்கின்ற பொழுது, முழுமையாக, மருத்துவ மனையிலுள்ள நோயாளிகளைக் கவனிப்பது அல்லது, மற்றைய டாக்டர்களை முறைப்படுத்தி பணி வாங்குவது பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே, அதைக் கருத்திலே கொண்டு, குறைந்தபட்சம் எல்லா மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலாவது இப்படிப்பட்ட அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர்களைப் போடுவதற்கு அரசு விரைவாகப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது 5 இடங்களில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நான் சொன்னேன். சென்னையிலுள்ள ஸ்டான்லி மருத்துவ மனை, அரசு பொது மருத்துவ மனை, இராயப்பேட்டை மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவ மனை, மதுரையிலுள்ள இராஜாஜி மருத்துவ மனை ஆகியவற்றில் இப்பொழுது இருக்கிறார்கள் மீதம் இருக்கிற கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய கல்லூரிகளிலே நியமிக்கலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அவற்றிற்கு நியமித்ததற்குப் பிறகு, மாவட்டங்களுக்குத் தேவைப்பட்டால் அரசு பரிசீலிக்கும்

**தஞ்சை மாவட்டத்தில் கருத்தடை செய்துகொண்டவர்கள்.**

441—(* வினா எண். 2856) திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85 மற்றும் 1985-86-ல் தஞ்சை மாவட்டத்தில் கருத்தடை செய்துகொண்டவர்களில் உடல் நலம் பாதிக்கப்பட்டதாக அரசிடம் உதவி கேட்டு மனுக்கள் ஏதேனும் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனின், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாவை?



1987 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மனுக்கள் ஏதும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாவட்டத் தலைநகரங்களில் குழந்தைகளுக்கு தனி மருத்துவமனை.**

442—(*வினா எண் 4085) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை, கோவை, திருச்சி, சேலம் போன்ற மாவட்டத் தலைநகரங்களில் குழந்தைகளுக்குத் தனியாக மருத்துவமனை (Children Hospital) நிறுவ அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களில் குழந்தைகளுக்குத் தனியாக மருத்துவமனை நிறுவ அரசிடம் திட்டம் ஏதும் இல்லையென்று சொல்வார்கள். ஆனால், அரசு மருத்துவ மனைகளில் குழந்தைகளுக்கு என்று ஏதேனும் தனியாக வார்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா? எத்தனை படுக்கைகள், என்னென்ன வசதிகளோடு ஒதுக்கப்பட்டுள்ளன என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, சேலம் தலைமை மருத்துவ மனைகளில் குழந்தை சிகிச்சைப் பிரிவு எல்லா வசதிகளோடும் இயங்கி வருகிறது. மற்றும் கோவையிலே, குழந்தைகள் நல மருத்துவ மனைக்காக சிறை வளாகத்திலே இடம் ஒதுக்கும்படியாகக் கேட்டோம். ஆனால், அங்கே இடம் இல்லையென்று சொல்லி விட்டார்கள். கலைக் கல்லூரி வளாகத்திலே இடம் பெறுவதென தீர்மானிக்கப்பட்டது. அது சம்பந்தமாக மருத்துவக் கல்வி இயக்குநருக்கும், கோவை மருத்துவக் கல்லூரி முதல்வருக்கும் இடையே கடிதப் போக்குவரத்து நடந்துள்ளது. மதுரை இராஜாஜி மருத்துவ மனையிலும் கோவை மருத்துவக்

[1987 ஏப்ரல் 22

கல்லூரி மருத்துவ மனையிலும் உள் நோயாளிகளாகக் குழந்தைகள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகள் பெறுவதற்கு ஏற்ற படுக்கை வசதிகள் முறையே 87, 70 ஆக உள்ளது.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் மூலம் பயனடையும் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து வருகிறார்கள். ஆனால், கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தால், அந்தக் குழந்தைகள் மருத்துவ மனைகளிலே நிரந்தரமாக சிகிச்சை பெறுவதற்கு அரசு வசதி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி செல்கின்ற சிறுவர்களுக்குப் பள்ளியிலே சென்று மருத்துவ பரிசோதனை செய்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல், கடுமையான நோய்கள் உள்ளவர்கள் இருப்பார்களானால் அவர்களுக்கு சிகிச்சை செய்வதற்குத் தனி ஏற்பாடு செய்யலாம்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, கோவையிலே ஒரு குழந்தைகள் மருத்துவ மனை தனியாக ஏற்படுத்தப்பட வேண்டும். பல நூற்றுக்கணக்கான குழந்தைகள் சிகிச்சை செய்து கொள்வதற்கு வழியில்லாமல் மிகுந்த கஷ்டங்களுக்கு ஆளாகி இருப்பதை அரசுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு நான் சொல்லிய பிறகு, கோவை சிறை வளாகத்தில் இடத்தை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவு அனுப்பி அங்கே இருக்கிற சி.எம்.சி. மருத்துவ மனையினுடைய டீன் அவர்களுக்கு அந்த உத்தரவு போய், அந்த இடத்தைப் பெற்றுக்கொள்ளச் சொன்னார்கள். அதற்குப் பிறகு, அந்த இடம் இல்லையென்று யார் சொல்கிறார்கள்? சிறைக் கண்காணிப்பாளர் சொல்கிறாரா? அரசு அதற்கு இடம் கொடுக்க வேண்டுமென்று சொன்ன பிறகு அந்த இடம் கொடுக்காமல் இருப்பது சரியல்ல. அதைக் கொடுக்க வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுத்து நிறைவேற்றித் தருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 22]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல் கோவையில் இருக்கிற சிரமத்தை அரசு உணர்ந்திருக்கிறது. சிறை வளாகத்திற்குப் பக்கத்திலே கட்டலாம் என்று முடிவு எடுக்கப்பட்டு இடம் கேட்கப்பட்டது. ஆனால் இடம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள் என்று என்னிடத்திலே குறிப்பு இருக்கிறது. நான் கோவைக்கு விரைவிலே வருவதாக இருக்கிறேன். அப்போது தேவைப்பட்டால் சிறை அதிகாரிகளோடு கலந்தாலோசித்து அரசு இறுதி முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையிலே பிரசவித்திருந்த குழந்தையை இரண்டு நாட்களுக்கு முன்பு நாய் எடுத்துச்சென்று தின்றுவிட்டது; இனிமேலாவது அதுபோன்று நடக்காமல் பார்த்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டுவிட்டதால் இதற்குப் பதில் சொல்கிறேன். அந்தச் செய்தி தெரிந்தவுடன் நடவடிக்கை எடுத்து விசாரணை நடந்து வருகிறது. நிச்சயமாக உரியவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே குழந்தைகள் நல்ல மருத்துவ வசதிகளைப் பெறுகிற வகையில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் குழந்தைகள் பிரிவுகளை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட யோசனை இல்லை.

**திரு. எஸ். சிவராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழகத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இளம் குழந்தைகள் மீது பற்றும் பாசமும் வைத்து சத்துணவுத் திட்டம், சீருடைத் திட்டம், காலணித் திட்டம் போன்ற திட்டங்களையெல்லாம் கொண்டு

வந்து இருக்கிறார்கள். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று சொல்வார்கள். எல்லாச் செல்வங்களையும்விட குழந்தைச் செல்வம்தான் மிக முக்கியமானது என்பதாலும் குழந்தைகள் நன்றாக வளர்ந்தால்தான் அந்தக் குடும்பம் நன்றாக இருக்கும் என்ற அடிப்படையிலும் மாவட்ட மருத்துவ மனைகளிலே குழந்தைகளுக்கான வார்டுகள் ஒதுக்கப்பட்டிருந்தாலும் தாலுகா மருத்துவ மனைகளிலும் குழந்தைகளுக்கு தனி வார்டுகளை ஏற்படுத்தி அவர்களுக்கு நல்ல சிகிச்சை வசதிகளை அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாகச் செய்யலாம். ஆனால் காலத்தைப் பொறுத்து நிதியைப் பொறுத்து அது இருக்கிறது.

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, கோவை, சேலம், திருச்சி ஆகிய இடங்களிலே உள்ள மருத்துவ மனைகளிலே குழந்தைகள் பிரிவுகள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தர்மபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம். இப்போது அது முன்னேறும் மாவட்டமாக இருக்கிறது. தர்மபுரியில் தனியாக குழந்தைகள் பிரிவை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகள் இருக்கிற இடங்களில் தனியாக குழந்தைகள் பிரிவுகளைக் கட்டிவிட்டு அதற்குப் பிறகு தாலுகா தலைமையிடங்களுக்கு வரலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள எக்மோர் குழந்தைகள் மருத்துவ மனையிலே கூட்டம் அதிகமாக இருக்கிற காரணத்தினால் இன்னொரு குழந்தைகள் மருத்துவ மனையை ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கிற குழந்தைகள் மருத்துவ மனையில் இடம் போதவில்லை என்ற காரணத்தினால்தான் 10 மாடிக் கட்டடம் ஒன்றை சமீபத்திலே மாண்புமிகு



முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து இருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் பிரிவுகள் முக்கியமான மாவட்டத் தலைநகரங்களிலும் சென்னை போன்ற இடங்களிலும்தான் இருக்கின்றன. ஆங்காங்கே கிராமங்களிலிருந்து வருகிறவர்கள் இங்கே அதிகமான சிரமங்களை அடைகிறார்கள். அதே போல் கிராமங்களிலே உள்ள மருத்துவமனைகளிலே குழந்தைகள் வைத்தியம் பயின்ற டாக்டர்களை அதிகமானவர்களை நியமிக்கிற காரணத்தினால், அந்தந்த தாலுகா மருத்துவ மனைகளிலே Paediatricians நியமிக்கப்படும்போது அந்த மருத்துவ மனைகளிலே இடங்கள் இருந்தால் குறைந்தது 10 படுக்கைகளையாவது போட்டு விரிவுபடுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக Paediatricians ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் நிரந்தரமாகப் போட்டால்தான் தனியாக அவர்களுக்கு வார்டுகளைப் பிரித்து படுக்கைகளை ஒதுக்க முடியும். தற்காலிகமாகப் போடப்படுகிற Paediatricians- களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு வார்டுகள் தனியாக ஒதுக்கினால் அவர்கள் அங்கிருந்து மாற்றப்படுகிறபோது அந்த வார்டுகளை மூடுவது என்பது இயலாத காரியம். எனவே Paediatricians நிரந்தரமாக நியமிக்கப்படும்போது அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர், ஜெயங்கொண்டம் ஆகிய பகுதிகளிலே கடந்த சில ஆண்டுகளாகவே ஒவ்வொரு ஆண்டும் Encephalitis என்ற மூளைக்காய்ச்சல் நோயால் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அந்தப் பகுதிகளிலே அரசு மருத்துவ மனைகளிலே சிறப்பாக இந்தக் குழந்தைகள் பிரிவுகளைத் துவங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் மருத்துவமனைகள் திறக்கப்பட்டால் எப்படி Encephalitis லிருந்து குழந்தைகள் காப்பாற்றப்படுவார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. Encephalitis

[1987 ஏப்ரல் 22]

என்பது ஒரு கொடூரமான வியாதி. அதற்குத் தனியாக மருத்துவ வசதி, சிகிச்சை வசதி, வைத்திய வசதிகள் [illegible] இருக்கின்றன. எனவே இதற்கும் அதற்கும் தொடர்பு இல்லை.

**தமிழகத்தில் மீன்பிடித் தொழிற்பயிற்சிப் பள்ளி அமைத்தல்.**

**543—(* வினா எண். 5412) திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடித் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**மாண்மிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கடற்கரையோரப் பகுதிகளில் ஏற்கனவே மீன்துறையின் கட்டுப்பாட்டில் ஆறு மீனவர் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் புதிதாக மீனவர் பயிற்சி நிலையங்கள் ஏதும் அமைக்க உத்தேசம் தற்போதில்லை.

(முற்பகல் 10-10)

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 இடங்களில் அமைக்கப்பட்டிருக்கிற விவரத்தைச் சொன்னார்கள். அவை எந்த, எந்த இடங்கள் அதிலே ஒவ்வொன்றிலும் எவ்வளவு பேர்கள் பயிற்சி பெறுகிறார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், குளச்சல், தூத்துக்குடி ஆகிய 6 இடங்களிலே இப்பொழுது இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு இடத்திலும் 50, 50—மண்டபத்தில் மட்டும் 60-ஆக இருக்கிறது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே பயிற்சி பெற்று முடிந்த பிறகு அவர்களுக்கு அரசின் சார்பாக சொந்தமாக மீன்பிடிக்க ஏதாவது உதவிகள் வழங்கப்படுகின்றனவா? அப்படியானால், என்ன உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.



1987, ஏப்ரல் 22]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, பயிற்சி முடிந்ததற்குப் பிறகு உதவிகள் இல்லை. பயிற்சியில் இருக்கும்பொழுதுதான உதவிகள் வழங்குகிறோம். பயிற்சி முடிந்ததற்குப் பிறகு அரசுக்குத் தேவைப்பட்டால் நியமித்துக் கொள்கிறோம். இல்லையேல் தனியார்களிடத்தில் அவர்கள் வேலை செய்கிறார்கள்.

**திரு. எம். இராசரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலே உள்ள குளச்சலில் இருக்கக்கூடிய பயிற்சிப் பள்ளியில் குறைவான மாணவர்களே பயிற்சி பெறுகின்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அதிகமான மாணவர்கள் பயிற்சி பெறுகின்ற அளவுக்கு அதை விஸ்தரிக்கின்ற நிலைமையை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று நான் இந்த நேரத்தில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் குளச்சலில் இருக்கிற அந்தப் பயிற்சிப் பள்ளியில் 50 மாணவர்களுக்கு இடம் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால், 1985 ஆம் ஆண்டு 32 பேர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். 1986-ல் 43 பேர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை 50 ஆகக் கொண்டுவருவதற்கு முயற்சிப்பார்களானால் அதை விரிவுபடுத்துவதற்கு மேற்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கலாம்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சிப் பள்ளியில் படித்துவிட்டு வெளியே வருகின்றவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. அதே நேரத்தில் தனியாக அவர்கள் மீன் பிடிப்பதற்குக் கட்டுமரங்கள், போட்டுகள் வாங்க வேண்டுமென்று சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன்கள் வேண்டுமென்று கேட்டாலும் கிடைப்பதில்லை. வேலைவாய்ப்பும் அரசாங்கத்தில் கிடைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லையென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே, படித்து முடித்தவர்களுக்குச் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கு போட்டுகள் வாங்குவதற்கு மானியங்கள், கடன்கள் போன்றவற்றை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 22

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சி பெற்றவர்களுக்கு அரசாங்கத்தில் வேலை வாய்ப்பு இல்லை என்று நான் சொல்லவில்லை. அரசாங்கத்தில் இப்பொழுது வேலை வாய்ப்பு இருக்கிற இடங்களில் நாங்கள் எடுத்துக்கொள்கிறோம். வேலை வாய்ப்பு இல்லையென்ற காரணத்திற்காக தனியார்களிடத்திலே வேலை வாய்ப்பு பெறுகிறார்கள், சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்; வேலையற்றவர்கள் என்று எந்தப் பட்டியலும் எங்களிடத்திலே இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளிலே மீனவ மாணவர்கள் மட்டும்தான் சேர்க்கப் படுகிறார்களா? மீனவர் அல்லாத மாணவர்களும் சேர்க்கப்படு கிறார்களா? சில இடங்களிலே மீனவ மாணவர்களுக்கு இடம் கொடுக்கப்படவில்லையென்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது.

திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பயிற்சிப் பள்ளி களிலே பயின்ற மீனவர்களுக்கு அரசு மூலம் மீன் படகு அல்லது இயந்திரப் படகு அல்லது மீன் துறையில் வழங்கப்படுகிற கருவிகள் வழங்கப்படுவதிலே முன்னுரிமை கொடுக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி நிலையம் பற்றிய கேள்வி இது. மற்ற விவரங்கள் பற்றி தனியாகக் கேட்டால் தனியாகப் பதில் சொல்ல முடியும்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 இடங்களிலே பயிற்சிப் பள்ளிகள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், பெரியவளையல், எரியூர் போன்ற இடங்களில் மீனவர்கள் அதிக மான பேர்கள் வசிப்பதன் காரணமாக, பெரியவளையலில் ஒரு பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 6 இடங்களிலும் ஒதுக்கப்பட்ட இடங்களை ஒவ்வொரு ஆண்டும் பூர்த்தியாவதே கிடையாது. கடைசியாக, 1986 ஆம் ஆண்டை எடுத்துக் கொண்டால்கூட, சென்னையிலே 50 இடங்கள் ஒதுக்கப்பட்டன, 41 பேர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். கடலூரில் 50 இடங்களில் 35 பேர்கள், நாகப்பட்டினத்தில் 50 இடங்களில் 38 பேர்கள், மண்டபத்தில் 60 இடங்களில் 57 பேர்கள், குளச்சலில் 50 இடங்களில் 49 பேர்கள், தூத்துக்குடியில் 50 இடங்களில் 45 பேர்கள், இப்படிக் குறை வாகத்தான் சேர்ந்திருக்கிறார்கள். எனவே, இருக்கிற இடங் களை நிரப்பாமல் மேற்கொண்டு அதிகமாக்குவதிலே அர்த்தமே இல்லை. இருக்கிற இடங்களை நிரப்பியதற்குப் பிறகு அரசு மேற்கொண்டு பரிசீலிக்கும்.

## கொடைக்கானலில் ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

444—(*வினா எண். 9544) டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் மலைப் பகுதியில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன?

(ஆ) அவை எங்கெங்கு உள்ளன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கொடைக்கானல் மலைப்பகுதிகளில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது.

(ஆ) அது மன்னவனூரில் செயல்பட்டு வருகிறது.

டாக்டர் த. முகம்மது சலீம்: தலைவர் அவர்களே, கொடைக் கானல் மேல்மலைப்பகுதி, கீழ்மலைப்பகுதி என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. மேல்மலைப் பகுதியில் பூண்டி, மன்னவ னூர், கவுஞ்சி, போளூர் போன்ற 14 கிராமங்கள் வருகின்றன. அதில் மன்னவனூரில் மட்டும் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று இருக்கிறது. அது போதுமானதாக இல்லாததால் நடைபாதை இல்லாத இடங்களிலிருந்து மக்கள் டோலிகளைக் கட்டிக்

கொண்டு மக்கள் கொடைக்கானலுக்கு வருகிறார்கள். ஆகவே மேல் மலைப்பகுதியில் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும் ஏற்படுத்தப்பட வேண்டும். கீழ்மலைப் பகுதியில் தாண்டிக் குடிக்கு அடுத்துள்ள மங்களகொம்பு, தவசிப்பட்டி, கிருஷ்ணாபட்டி போன்ற இடங்களில் ஏதாவது ஒரு இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த வேண்டும். அதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு சில விதிகளை வைத்திருக்கிறோம். சுற்று வட்டாரத்தில் எட்டு கி.மீ., தூரத்திற்கு எந்த மருத்துவமனையும் இருக்கக்கூடாது என்றும், 30 ஆயிரம் மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்றும் வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல மலைப்பிராந்தியமாக இருக்கிற காரணத்தால் இதுபற்றி தனியாகப் பரிசீலிக்கலாம்.

**டாக்டர் த. முகம்மது சலீம்:** தலைவர் அவர்களே, தவசிப்பட்டி என்பது தாண்டிக்குடி அரசு மருத்துவமனையிலிருந்து 35 கி.மீ. தூரத்தில் இருக்கிற இடமாகும். அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தால் கீழ்மலைப் பகுதியில் உள்ள மக்கள் அங்கே சென்று வைத்தியம் செய்துகொள்ள வசதியாக இருக்கும். எனவே அந்த இடத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா? அங்கு ஏற்படுத்திக் கொடுத்தால் அரசுக்கு நாங்கள் நன்றி சொல்லக் கட்டுப்பட்டிருக்கிறோம். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்வார் என்பதற்காக விதிகளைத் தளர்த்தி செய்ய முடியாது. ஊருக்கு ஊர் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க முடியாது. கொடைக்கானல் மலைப்பிராந்தியமாக இருப்பதால், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நோயாளிகள் செல்வதற்கு சிரமமாக இருக்குமானால், அதுபற்றி தனியாகப் பரிசீலிக்கலாம் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.





**திரு. கூடலூர் இ. வி. வேலு:** தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் ஆரோக்கியமாக வாழ வேண்டுமென்ற அடிப்படையில் அங்கே துவக்கப்படுகிற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மருத்துவ மனைகளுக்கு மத்திய அரசு ஏதாவது தனியாக அந்த மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்ற அடிப்படையில் நிதி ஒதுக்குகிறதா? அப்படி ஒதுக்கப்படுகிற நிதியின் மூலம் எந்த அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டு மருத்துவமனை உருவாக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்காக என்று தனியாக ஒன்றும் ஒதுக்குவதில்லை. எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் மத்திய அரசு எப்படி அளிக்கிறதோ அதைப்போல அதற்கும் அளிக்கும்.

## திருமங்கலம் தொகுதி, கூடக்கோவிலில் ஆரம்ப சுகாதார நிலையம்.

445—(*வினா எண் 12427) **திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதியில் உள்ள கூடக்கோவிலில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திருமங்கலம் தொகுதியில் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் செக்கானூரணி என்ற கிராமத்தில் ஏற்கெனவே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. மீண்டும் திருமங்கலம் தொகுதியில் கூடக்கோவிலில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு தற்போது திட்டம் எந்த விதமான செயற்குறிப்பும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது திருமங்கலம் ஒன்றியத்தில் செக்கானூரணியில் ஒரு நிலையம் இயங்கி வருவதாகக் குறிப்பிட்டார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்த கூடக்கோவில் என்பது கல்லிக்குடி ஒன்றியத்தில் இருக்கிறது. இது பிற்படுத்தப்பட்ட பகுதியில் இருக்கிறது. பழைய இராமநாதபுரம் மாவட்ட எல்லையில் இருப்பதால் அந்த மாவட்டத்திற்கே உரிய வறட்சியும், பிற்பட்ட நிலையும் இந்த ஊருக்கும் இருப்பதால், இந்தத் தனித்தன்மையைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டிலே ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அங்கு அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, 30 ஆயிரம் மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று வைத்திருக்கிறோம். அதனைக் கேட்கிறபோது ஐந்து ஏக்கர் நிலம் இனாமாகக் கொடுக்க வேண்டும், 10 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம் கட்டவேண்டும் என்று இருக்கிறது. சுற்று வட்டாரத்தில் எட்டு கி.மீ. தூரத்திற்கு எந்த மருத்துவமனையும் இருக்கக் கூடாது என்று விதி இருக்கிறது. அந்த விதிகளுக்கு உட்பட்டிருக்குமானால் இந்த ஆண்டு அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, அந்த ஒன்றியத்தில் சற்றேறக்குறைய 75 ஆயிரம் மக்கள் தொகை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல சுற்றுவட்டாரத்தில் எந்த மருத்துவமனையும் இல்லாமல் இருக்கிற காரணத்தால், மற்ற நிபந்தனைகளை பூர்த்தி செய்வோமானால் இந்த ஆண்டே அதனை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு 150 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். நிச்சயமாக இதுபற்றி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.



**விடுதலைப் போராட்ட ஈடுபாடு காரணமாக தலைமறைவாக இருந்துள்ளவர்களுக்கு தியாகிகள் பென்ஷன்.**

**446—(*வினா எண் 4836) திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1947 ஆகஸ்டு 15-ம் தேதி வரை விடுதலை போராட்ட ஈடுபாடு காரணமாக தலைமறைவாக இருந்துள்ளவர்களையும் தியாகி பென்ஷன் பெறத் தகுதியுள்ளவர்களாக மாநில அரசு அறிவித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருக்கு இந்த அடிப்படையில் பென்ஷன் அனுமதிக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தகுந்த ஆதாரங்களை அளிக்கும் விடுதலை போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியங்கள் வழங்கி ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. இவ்வகை ஆணைகள் சிறை சென்றவர்களுக்கும், தலைமறைவாக சென்றவர்களுக்கும் தனித்தனியாக வெளியிடப்படுவதில்லை

**திரு. கே. சுப்பராயன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசு பென்ஷன் பெறுகிற தியாகிகளுக்கு மாநில அரசு பென்ஷன் வழங்க முற்படுகிறபோது பல்வேறு ரெக்கார்டுகளைக் கேட்கிறார்கள். மத்திய அரசு சுதந்திர போராட்ட வீரர்கள் என்று அங்கீகரித்து பென்ஷன் கொடுக்கிற நிலையில், மாநில அரசு பென்ஷன் கொடுக்க தனியாக ரெக்கார்டு கேட்பது எந்த அடிப்படையில் நியாயமானது என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே. அப்படி ஏதாவது தனிப்பட்ட முறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் தகவல் இருந்தால், சொல்லவேண்டும். [illegible] அரசு ஒப்புதல் [illegible] தருவதற்காக கேட்கிறபோதே, மாநில அரசுதான் அத்தனை ரெக்கார்டுகளையும் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. எனவே அந்த அடிப்படையில்

ஏற்கனவே மாநில அரசுக்கு இது முறையாக தெரிந்திருக்கிற காரணத்தால் இதிலே பிரச்சனை இருக்காது என்று நான் கருதுகிறேன். எனவே அப்படி இருந்தால், அதைப்பற்றி தனியாகச் சொல்லலாம்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மனு போட்டும் எவ்வளவு காலதாமதம் ஆகிறது என்பதற்காகக் குறிப்பிடுகிறேன். அவிநாசிக்கு அருகிலே உள்ள கருவலூர் என்ற ஊரைச் சேர்ந்தவர் தெய்வசிகாமணி என்று சொல்கிற தியாகி, 13—5—1953-லே இறந்துவிட்டார்கள். அவருடைய மனைவி, தன்னுடைய கணவர் விடுதலைப் போராட்ட வீரர் என்ற முறையில் மனு போட்டு—1968-லே மனு போட்டு—இன்றைக்கு வரையிலும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. மரியாதைக்குரிய மாண்புமிகு ம.பொ.சி. அவர்கள்கூட அவர் விடுதலைப் போராட்ட வீரரின் மனைவி என்று எடுத்துச் சொல்லியும் கூட, சான்றிதழ் அளித்தும் கூட, இன்றைக்கு வரையிலும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. தற்போது முதியோர் பென்ஷன் வாங்கி பிழைத்துக்கொண்டு இருக்கிறார். எனவே இவ்வளவு கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிற விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு, அந்த மனுவின் மீது நடவடிக்கை எடுத்து, நீதி கிடைக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதைப் போல அது உண்மையான மனுவாக இருக்குமானால், நிச்சயமாக இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். இருக்கிற சிக்கல் என்னவென்றால், நாம் ஏற்கனவே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இப்படி யாராவது பொது வாழ்விலே ஈடுபட்டு இருப்பவர்கள், முக்கியமானவர்கள் சான்றிதழ் கொடுத்தால் போதும். அதை வைத்துக்கொண்டு இந்த ஓய்வு ஊதியத்தைக் கொடுத்து விடலாம் என்று நாம் முடிவு எடுத்தபோது கணக்கில் அடங்காத அளவிற்கு மனுக்கள் வந்த காரணத்தால் மீண்டும் அதற்கு ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுவர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. காரணம் தவறானவர்களுக்கு கொடுக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான். ஏன் என்றால், தியாகிகள்

...பெற்றுக்கொண்டிருப்பவர்களுக்கு ஒரு மரியாதை இல்லாமல் ...போய்விடுமே என்பதற்காகத்தான் அதைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்படிக் கட்டுப்படுத்துகிற போது, யார் யார் உண்மையாக அந்தச் சான்றிதழ் வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் கொடுக்க முடியும், அப்படித்தான் கொடுக்கவேண்டும் என்ற முடிவை எடுத்தபோது, சரியான, முறையான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால், ...கிலே காலதாமதம் ஆகியிருக்கலாம். நீங்கள் அந்தக் கடிதத்தைத் தனியாக அனுப்பினால், உண்மையான நிலவரம் என்ன என்பதைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்க ஏதுவாக இருக்கும்.

**திரு. ஆர். செங்காளியப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு தமிழகத்திலே பென்ஷன் கொடுக்கப்படுகிறது. ஆனால் இரண்டு ...தமாக கொடுக்கப்படுகிறது. ஒரு சிலருக்கு 100 ரூபாயும், ஒரு சிலருக்கு 250 ரூபாயும் கொடுக்கப்படுகிறது. ஏன் இந்த வித்தியாசம் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மாநில அரசிலிருந்து மட்டும் பென்ஷன் பெறக்கூடியவர்களுக்கு 250 ரூபாய் கொடுக்கிறோம். மத்திய அரசிலிருந்து பென்ஷன் பெறக்கூடியவர்களுக்கு மாநில அரசு 100 ரூபாய் கொடுக்கிறது. எனவே, அங்கேயும் பெற்று, இங்கேயும் பெறுகிறபோது, 100 ரூபாய் கொடுக்கப்படுகிறது. மத்திய அரசிலிருந்து கிடைக்காதவர்களுக்கு மட்டும் 250 ரூபாய் கொடுக்கிறோம். அதனால்தான் இந்த வித்தியாசம். மொத்தத்திலே பார்க்கிறபோது, ஏறத்தாழ இரண்டு பேர்களுக்கும் ஒன்றாகக் கிடைக்கிறது.

**திரு. சு. சிவராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மத்திய அரசிலே இலவச ரயில் பாஸ் வழங்கியிருக்கிறார்கள். அதைப் பின்பற்றி தமிழகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்களில் அந்தத் தியாகிகள் பயணம் செய்வதற்கு இலவச பஸ் பாஸ் வழங்க தமிழக அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, வெவ்வேறு வகையிலே அவர்களுக்கு இந்த அரசாங்கம் சலுகைகளை அதிகரித்துக்கொண்டு போகிறது. குறிப்பாக அவர்களுக்கு வருமான வரம்பு என்று ஒரு நிர்ணயம் வைத்திருந்தது. அதை இப்போது எடுத்துவிட்டோம். மிகவும் குறைவாக இருந்தது. ஏறத்தாழ 50 ரூபாய் என்று இருந்ததை மாற்றி தற்போது 250 ரூபாய் என்று மாற்றியிருக்கிறோம். எனவே ஏதாவது ஒரு வகையிலே அவர்களுக்கு சலுகைகளை ஏற்படுத்திக்கொண்டு போவது கூட அவர்களுக்கு வசதியாக இருக்கும். சில பேர்களுக்கு பஸ் பாஸ் பயனில்லாமல் போய்விடக் கூடும். எனவே பஸ் பாஸ்களுக்கு பதிலாகத்தான் இந்தக் காரியங்கள் எல்லாம் செய்யப்பட்டு இருக்கின்றன என்று கூட நான் கருதுகிறேன். சில பேர்கள் வயதானவர்களாக இருப்பார்கள். அவர்கள் பஸ் பாசை பயன்படுத்த முடியாது. எனவே இதிலே பாரபட்சம் கூட வந்து விடலாம். எனவே இந்த முறைதான் சரியானதாக இருக்கும். இதிலே அவசியம் இருந்தால் எதிர்காலத்திலே நடவடிக்கை எடுக்கலாம்.

### மோட்டார் வாகனங்களுக்கு காலக்கெடு.

447—(* வினா எண் 9165) **திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு மேற்பட்ட மோட்டார் வாகனங்களை தடை செய்யும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்தை எடுத்துக்கொண்டால் விபத்துக்களில் இறப்பவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகிறது. குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அந்த



குறைந்து கொண்டு போகிற வண்டிகளுடைய கண்டிஷன் காரணத்தால் இப்படிப்பட்ட சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே இதை மறுபரிசீலனை செய்து, அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர்

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** அவர்களே, குறிப்பிட்ட காலத்திற்குள் இருக்கிற வண்டிகளை தடை செய்வது என்பது நம்முடைய பொருளாதார முறையிலே, குறிப்பாக இந்தியாவிலே இருக்கிற பொருளாதார சூழ்நிலைக்கு அவ்வளவு உகந்ததாக இருக்காது என்ற நிலையிலேதான் அதை மறுபரிசீலனை செய்ய முடியாத நிலை இருக்கிறது என்று நான் தெரிவித்தேன். இன்னும் அவ்வப்போது 6 மாதத்திற்கு ஒருமுறை, பொதுவாழ்விற்காக பயன்படுத்தப்படுகிற அந்த வாகனங்களுக்கு ஃபிட்னஸ் சர்டிபிகேட் வாங்குகிறார்கள், தகுதிச் சான்றிதழ் தருகிறார்கள். அந்த நேரத்திலே இந்த வண்டி ஓட்டுவதற்குத் தகுதியானதா, இல்லையா என்பதை முடிவு எடுக்கிறார்கள். அதையும் நாம் கடுமையாக்க வேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறோமேயொழிய, இப்படி ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேலே இருக்கிற வண்டிகள் இயங்கக் கூடாது என்று தடை விதிப்பது இப்போது உள்ள பொருளாதார முறையிலே, நம்முடைய நாட்டுக்கு அது உகந்ததாக இருக்காது. இது நல்ல யோசனையாக இருந்தாலும் கூட, இதை அமுல்படுத்துவதால் பல நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்

**திரு. வே. கு. சின்னசாமி:** அவர்களே, சில நேரங்களிலே வண்டிகள் டி.சி., எப்.சி.-க்காகச் செல்லுகின்றபோது அவைகளைச் சரியாக ஆய்வு செய்யாமல், சின் நேரங்களில் சர்டிபிகேட் கொடுத்துவிடுகிறார்கள். அப்படி இருக்கின்ற வண்டிகளை கடுமையாக சர்வே செய்து, கடுமையாக அவைகளை ஆய்வு செய்து, அதனுடைய கண்டிஷன் என்ன என்பதை தெளிவாகத் தெரிந்த பிறகுதான் சான்றிதழ் வழங்க வேண்டுமென்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத்

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இப்போது தகுதிச் சான்றிதழ் கொடுக்கின்ற போது, முறையாகப் பார்த்து கொடுக்கப்படவேண்டுமென்றுதான்

அரசினுடைய விதியே இருக்கிறது. ஆகவே, அதை முறையாக கடைபிடிக்காமல், சரியாக வண்டிகளைப் பார்க்காமல் சான்றிதழ்களை முறையற்று கொடுப்பார்களானால் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக்கூட ஏதாவது அப்படி தகவல் வருமானால் அவ்வப்போது, சட்டமன்றம் கூடவேண்டுமென்று எதிர் பார்க்காமல், எங்களுக்குச் சொன்னால் அதுபற்றி விசாரிப்பதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் கொஞ்சம் ஏதுவாக இருக்கும்.

திரு. டி. ஆர். வேங்கடராமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிலுள்ள ராணுவத்தினுடைய ஜீப்புகள், மோட்டார் சைக்கிள்கள் போன்றவற்றையெல்லாம் விற்பனை செய்கின்றபோது பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு முன்னுரிமை வைத்து வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அதைப்போல தமிழக அரசு நிறுவனங்களில், தமிழக அரசு பொது நிறுவனங்களில் பல வாகனங்களெல்லாம் வாங்கப்பட்டு, சிறிது காலத்திற்கு உபயோகப்படுத்தப்பட்ட பிறகு அவற்றை விற்கின்றபோது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விற்பனையிலே முன்னுரிமை கொடுப்பதற்கு அரசு ஆராயுமா என்று அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டியது அரசினுடைய கடமை. எனவே உங்களுக்கு அப்படிப்பட்ட தண்டனையைக் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை. காரணம், 10 ஆண்டு காலம் அந்த வண்டிகள் பயன்படுத்தப்பட்ட பிறகுதான் அதை கழிவு செய்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட வண்டிகளை உங்களுக்குக் கொடுக்க வேண்டுமா என்பது ஆராய்ச்சிக்கு உரிய ஒன்று. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை மனதிலே வைத்து எதிர்காலத்திலே முடியுமா என்று பார்க்கலாம்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலை சகாயமாகக் கிடைக்கிறது என்ற காரணத்திற்காக 5 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு வாகனத்தை வாங்கி



தினந்தோறும் பழுதுபார்த்து திவாலாகி 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கடனாளியாகிய குடும்பங்கள் இன்றையதினம் ஏராளமாக இருக்கின்றன. லாரியாக இருந்தாலும், பஸ்ஸாக இருந்தாலும், காராக இருந்தாலும், கொஞ்சம் கொஞ்சமாக முன்னுக்கு வரக்கூடியவர்கள் இந்த வண்டிகளை வாங்கி இயக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் அவர்கள் கேள்விக்கு பதில் சொல்கின்றபோதே, இதற்குரிய விளக்கமான பதிலையும் சொல்லி இருக்கிறார், அந்த சித்திரவதைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளாகக் கூடாது என்று. இப்படி பல்வேறு தொழிலாளர்கள் கொஞ்சம் முன்னுக்கு வரவேண்டுமென்று நினைக்கக்கூடியவர்களுக்கு சிக்கல் இருக்கின்ற காரணத்தால் இந்த விபத்திலிருந்து அவர்களைத் தவிர்க்கக்கூடிய வகையில், இத்தனை ஆண்டுகளுக்குப்பின் வாகனத்தைப் பயன்படுத்தக்கூடாது என்றும், புதிய புதிய வாகனங்கள் அறிமுகமாகின்ற நேரத்தில் இவையெல்லாம் தேவையில்லை என்றும் அரசு அறிவிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் யாரை மனதிலே வைத்து சொல்கிறார்களோ, அவர்களை மனதிலே வைத்துத்தான் நானும் சொல்கிறேன். இன்றையதினம் சென்னையிலே நீங்கள் பார்த்தால்கூட குறைந்த விலையில் வண்டிகளை வாங்கி வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிற நிலையை நாம் கண்கூடாகக் கண்டுகொண்டிருக்கிறோம். அதிலே ஆபத்து விளையக்கூடிய நிலையிருந்தால் தடை செய்வதற்கான நடவடிக்கையை நாம் எடுக்கலாம். இப்போது இருக்கின்ற விதிமுறைகூட, எந்தெந்த வண்டிகள் ரோட்டிலே ஓட்டுவதற்கு தகுதியற்றவையோ அவைகளையெல்லாம் எடுத்துவிட வேண்டு மென்பதுதான் இருக்கின்ற விதிமுறை. அதை நாம் கடுமையாக கடைப்பிடித்தாலும்கூட சரியாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

இன்னொன்று, இந்த வண்டிகளை வாங்கி கடனாளியாகி விடுகிறார்கள் என்றெல்லாம் தெரிவித்தார்கள். அது அவரவர் களுடைய பொறுப்பு. அதாவது இந்த வேலைகளைச் செய்கின்ற

போது பொறுப்பாக கவனித்து, ஒழுங்காகச் செய்வார்களே யானால் நிச்சயமாக இதிலே இந்தப் பிரச்சினை ஏற்படாது என்று நான் கருதுகிறேன். அதை அவரவர்கள்தான் பார்த்துக் கொள்ளவேண்டுமேயொழிய, அதற்கும் அரசாங்கம் ஒரு வழிமுறையை ஏற்படுத்துவது என்பது முடியாத காரியம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த வினாவினை இங்கே தொடுத்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காலகெடுவுக்கு மேற்பட்ட மோட்டார் என்று சொல்வதற்குரிய காரணம், அது சாலையிலே ஓடுகின்ற காரணத்தினாலே பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற இடைஞ்சலைத்தான். அதிலும் குறிப்பாக, அதிகமாக புகையினை வெளியிட்டு காற்றை மாசு படுத்துவது; அதிகமாக சப்தத்தை வெளியிட்டு காதுகளுக்கு சீரழிவு ஏற்படுத்துவது; இப்படிப்பட்ட வாகனங்களைக் கண்டுபிடிப்பதற்கு உரிய கருவிகள் நமது அரசிடம் இருக்கிறதா? வாங்குகின்ற உத்தேசம் உண்டா? அப்படியென்றால் அது பயன்படுத்தப்படுகின்ற விவரங்களைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய வண்டிகளிலேதான் புகை வர வேண்டுமென்பதல்ல, சப்தம் வரும் என்பதல்ல. புதிய வண்டிகளிலேகூட புகை வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகள் ஓடுகின்ற வண்டிகளிலேகூட புகை வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஹாரன் எந்த வண்டியிலே வைத்தாலும் சப்தம் வரத்தான் செய்கிறது. எனவே இதையெல்லாம் கண்டுபிடிப்பதற்கு என்று கருவிகள் இல்லை என்று சொன்னாலும், அதிலே தேர்ச்சி பெற்றவர்கள் இன்றைக்கு அதைப் பார்க்கிறார்கள், சான்றிதழ் வழங்குகிறார்கள். அப்போது அவர்கள் வண்டியை ஓடவிட்டுப் பார்த்தாலே இருக்கிற குறைபாடுகளை நிச்சயமாகத் தெரிந்துகொள்ள முடியும். அதையும் மீறி சில வெளியே வருகிறதென்று சொன்னால் அது அவர்களுடைய தவறாக இருக்கலாம். அதில் வேண்டுமானால் நடவடிக்கை எடுக்கலாமேயொழிய, அதற்குக் கருவிகள் அவசியம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஏதாவது அப்படி இருக்கிறது என்று தெரிந்தால், அதுபற்றி பார்க்கலாம்.





திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களில் ஜீப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஜீப்புகள் பல ஆண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்டவை. இதற்காக எங்களுக்கு 50 லிட்டர் பெட்ரோல் கொடுத்து இருக்கிறீர்கள். நாங்கள் அந்த ஜீப்புகளில் ஏறி உட்கார்ந்தால் ஆட்டம் கொடுக்கிறது. அந்த ஜீப்புகள் 10 மைல் தூரம்கூட போவதில்லை. இப்படி எல்லாம் ஜீப்புகள் இருக்கின்றன. ஆகவே தயவுசெய்து 25 ஆண்டுகளுக்கு முன்பாக எந்தெந்த யூனியனில் பழைய ஜீப் இருக்கிறதோ அதை எல்லாம் மாற்றிவிட்டு, அதற்கு பதிலாக புதிய ஜீப்புகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமோ என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற அடிப்படையில் அப்படி வண்டிகள் இருக்கிறதா என்பது தெரியாது. ஒருவேளை வண்டிகள் அப்படி இருக்குமானால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல், நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட கால அளவு அல்லது ஒரு குறிப்பிட்ட தூரம் ஓடிய பின்பு, அதை கழிவிடை செய்யவேண்டும் என்ற நிபந்தனையை நாம் வைத்து இருக்கிறோம். அப்படி சில இடங்களில் இருக்குமானால், அவை செயல் இழந்த வண்டிகளாக இருக்குமானால், அவைகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். இப்போது 20 ஆண்டுக்கு மேல் இருக்கிற ஜீப்பை பயன்படுத்தக்கூடாது என்று யூனியன்களுக்கு உத்திரவிட்டு இருப்பதாக தெரிகிறது. அதைப்பற்றி தனியாக பார்த்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய வாகனங்களை தடை செய்ய வசதி இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பழைய வாகனங்கள், புதிய வாகனங்கள் ஆகிய இரண்டுக்கும் குவார்ட்டர்லி டாக்ஸ் ஒன்றாகத்தான் இன்றைக்கு தமிழக அரசால் வசூல் செய்யப்படுகிறது. ஆனால் அண்டை மாநில

மான கர்நாடகாவில் லைப் டாக்ஸ் என்று வசூல் செய்கிறார்கள். அப்படி வசூல் செய்கிறபோது லைப் டாக்ஸில் டிப்பிரிசியேஷன் போட்டு பழைய வண்டிகளுக்கு கழித்துக்கொண்டு மீதியை வசூல் செய்கிறார்கள். அந்த முறையை தமிழக அரசும் கடைபிடிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான்-டிரான்ஸ்போர்ட் வெகிகிள்ஸ்-ஐ பொறுத்தவரையில், போக்குவரத்துக்கு பயன்படாத வண்டிகள், தனியார் வைத்து இருக்கிற வண்டிகளைப் பொறுத்த வரையில் ஒரே நேரத்தில் அதற்குண்டான வரியை வசூல் செய்யலாமா என்ற ஒரு ஆய்வு இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆனால் டிரான்ஸ்போர்ட் வெகிகளைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட ஒரு முடிவை நாம் எடுக்கமுடியாது. அதை குவார்ட்டருக்கு ஒரு முறையோ, அல்லது ஆண்டுக்கு ஒரு முறையோ வசூல் செய்யவேண்டும் என்று இருக்கிறது. அந்த முறை ஆந்திராவில் இருப்பதால் இங்கே செய்வது என்பதை தனியாக ஆய்வு செய்ய வேண்டும். அதைப்பற்றி குறிப்பான தகவல் என்னிடத்தில் இல்லை. அதுபற்றி தனியாக ஆய்வு செய்யலாம்.

## தஞ்சையில் தென்னை சம்பந்தப்பட்ட தொழில்கள்.

448—(*வினா எண். 9261) **திரு. த. சிவஞானம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சையில் தென்னை சம்பந்தப்பட்ட தொழில்களை ஆரம்பிப்பதற்கு அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், கல்லகம் அன்னைக்காடு என்னும் சிறு கிராமம் மாவட்ட ஆட்சியாளரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தென்னை சார்ந்த கூட்டுறவு தொழிற் பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு தாலுக்கா, பட்டுக்கோட்டை தாலுக்காவில் தென்னை மரங்கள் அதிகமான அளவில் இருக்கின்றன. அதனுடைய மூலப்பொருட்களைக் கொண்டு தென்னை தொழில் ஆரம்பிக்கவேண்டும் என்று கருத்தரங்கு ஒன்று 2 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்து, ஒரு முக்கிய தொழில் ஆரம்பிக்க நம்முடைய அரசுக்கு ஏதாவது செயற்குறிப்பு வந்து இருக்கிறதா? அப்படி வந்திருக்குமானால் விரைவில் அந்தத் தொழிலை தொடங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலில் பேராவூரணி வட்டத்தில் அதை ஆரம்பிப்பதற்கு ஒரு செயற்குறிப்பு வந்து இப்போது அதற்காக பணம் ஒதுக்கப்பட்டு அந்த வேலை துவங்கப்பட்டு இருக்கிறது. எனவே இதுதவிர வேறு இடத்தில் தொடங்குவதற்கான குறிப்பு எதுவும் அரசிடத்தில் இப்போது இல்லை.

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் தென்னை உபப் பொருட்களைக் கொண்டு ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிப்பது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பேராவூரணி வட்டத்தில் ஒரு கிராமத்தில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அங்கே ஏறத்தாழ வேதாரண்யத்திலிருந்து பட்டுக்கோட்டை எல்லை வரையில் கடல் ஓரப் பகுதி முழுவதும் தென்னை 4, 5 வட்டங்களில் நிறைந்து இருக்கிறது. எனவே அதை மையப்படுத்தி பட்டுக்கோட்டை வட்டம் அதிராமப்பட்டினம் பகுதியில் ஒரு தொழில் கூடத்தை துவக்க அரசு முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு இருக்கின்ற சூழ்நிலைக்கு ஏற்ப ஆய்வு செய்துதான் இப்போது நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். இப்போது புதிதாக கேட்கிற இடத்தைப் பொறுத்த வரையில் இன்னும் ஒன்று அவசியமா என்பதைப் பார்த்து

நடவடிக்கை எடுக்கவேண்டும். தனியாக இன்னும் ஒன்று தேவையா என்பதைப் பார்த்து, ஆய்வு செய்து பின்னால் சொல்லப்படும்.

**திரு. பி. என். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பேராவூரணி வட்டத்தில் துவங்க இருக்கின்ற அந்தத் தொழில் கூடத்தின் மதிப்பீடு எவ்வளவு? எத்தனை ஆண்டு காலத்தில் அது செயலாக்கத்திற்கு வரும் என்று அறிய விரும்புகிறேன். தென்னையிலிருந்து பேட்டரி செல்லுக்கு தேவையான கார்பனை தயாரிக்க தென்னை கொட்டாங்குச்சியிலிருந்து முடியும் என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். அந்த தொழிற்பேட்டையில் இந்தத் தொழிலும் அடங்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஏக்கர் நிலப் பரப்பிலே இதை இப்போது துவக்குகின்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பங்கு மூலதனமாக அரசாங்கம் ரூ. 5 இலட்சத்தை இதற்காக ஒதுக்கி, 1987—38-ல் ரூ. 0.23 இலட்சத்தை ஒதுக்கி, வேலையை துவங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்றபடி வேறு எந்த தகவலும் தற்போது இல்லை.

## புதுக்கோட்டை நகரில் மினி பேருந்து.

449—(*வினா எண். 10367) **திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரில் மினி நகரப் பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) ஆம்.

(ஆ) மினி பேருந்துகளுக்கு அனுமதிச் சீட்டு வழங்குவதற்கான நடவடிக்கை அரசால் எடுக்கப்பட்டு வருகிறது.





**திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இந்தத் திட்டம் எப்போது செயலுக்கு வரும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அந்த ஆய்வு செய்யப்பட்டு, அனுமதிச் சீட்டு கிடைத்தவுடன் அது செயலாக்கத்திற்கு வரும்.

**திரு. மா. கதிர்வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் வடாற்காடு மாவட்டத் தலைநகரான வேலூரில் அரசு பேருந்தும், தனியார் பேருந்தும் ஒருவருக்கொருவர் முந்திக்கொண்டு, பஜாரிலுள்ள ஒரு ஜவுளிக் கடைக்குள் புகுந்து, ஒரு கணவனும், மனைவியும் இறந்து, அவர்களுடைய இரண்டு குழந்தைகளும் அதே இடத்தில் இறந்துவிட்டனர். வேகக் கட்டுப்பாடு விதியே இல்லாமல் அரசுப் பேருந்துகள் இன்றைய தினம் ஓடிக்கொண்டிருக்கின்றன. போக்குவரத்து அதிகமாக உள்ள வேலூர் போன்ற தலைநகரங்களில், கடுமையான வேகக் கட்டுப்பாடு விதிகளை கடுமையாக கடைப்பிடிக்க அரசு உத்தரவிடுமா? அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விருபுகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் கொஞ்சம்கூட சம்பந்தமே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் முகம்மது கனி அவர்கள் பஸ் விட வேண்டுமென்று கேட்கிறார்கள். இவர்கள் விட்ட பஸ்ஸைப் பற்றி குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே வேகக் கட்டுப்பாடு இல்லாத காரணத்தினால் மிக அதிகமான வேகம் செல்கிறார்கள் என்று இங்கே சொன்னார்கள். இந்த விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் பொதுவாகச் சொல்கிறேன். குறிப்பிட்ட விபத்தைப் பற்றிய தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை. பொதுவாக ஓட்டுநர்களை மட்டும் நாம் குறைசொல்லிவிட்டால் போதாது. எல்லா வகையிலும் எல்லோருமே ஒத்துழைப்பு தரவேண்டும். பொதுமக்களாக இருந்தாலும், பாதையிலே நடந்துசெல்லக் கூடியவர்களாக இருந்தாலும், எல்லோரும் ஒத்துழைப்பு கொடுக்கிறபோதுதான் அதிலே ஒரு நல்ல சூழ்நிலையை

உருவாக்க முடியுமே ஒழிய, ஒரு தரப்பை மட்டும் கட்டுப் படுத்துவது என்பது அவ்வளவு சரியாக வராது. அதற்காக வேகத்தை கட்டுப்படுத்த வேண்டாம் என்று நான் நினைக்க வில்லை. கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது. அந்த சம்பந்தப்பட்ட பேருந்திலே என்ன நடந்திருக் கிறது என்பதைப் பற்றி நாங்கள் பார்த்து வருகிறோம்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகளில் மினிப் பேருந்துகளை விடும் திட்டம் தமிழகத்திலுள்ள ஒரு இலட்சம் மக்களுக்கு மேலுள்ள எல்லா நகரங்களுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, எங்கெங்கு மினி பஸ் வேண்டுமோ அங்கேதான் விடமுடியுமே ஒழிய, எல்லா இடங்களுக்கும் விடவேண்டுமென்ற அவசியமில்லை. பெரிய பேருந்துகள் போய் திரும்பமுடியாத இடங்களிலேதான் மினி பஸ் விடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறதே ஒழிய, பெரிய பேருந்துகள் எங்கெங்கு போய் திரும்ப முடியுமோ, எங்கே அவர்கள் வசதியாக ஓட்ட முடியுமோ, அங்கே அந்த இடங் களுக்கு அது அவசியமில்லை. எனவே எங்கே அவசியம் இருக் கிறதோ, பெரிய பேருந்துகளை ஓட்ட முடியாத இடம், இப்படிப் பட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்துத்தான் நாங்கள் மினி பஸ்களை விட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979-ஆம் ஆண்டு நிலக்கோட்டையில் மினி பேருந்து ஆரம்பிக்கப்பட்டது. அங்கே சரியான ரோடு வசதிகள் இல்லாத காரணத்தினாலே, பெரிய பஸ்கள் விடமுடியாது என்று மினி பஸ் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இப்போது அங்கே ஓடிக்கொண்டிருந்தவை வேறு தடங்களுக்கு சென்ற காரணத்தினால், அங்கே சரிவர மினி பேருந்து விடவில்லை. கேட்டால் அந்த பஸ்களை வேறு இடங்களுக்குக் கொண்டுபோய் விட்டார்கள், ஆகவே சரியான நேரத்திற்கு விடவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே அங்கே விடப்பட்டிருந்த அந்த மினி பஸ்களை அங்கேயே நிரந்தரமாக





வைத்து அந்த குறுகலான பகுதிகளில், விடுவதற்கான ஏற்பாட்டை அமைச்சரவர்கள் செய்வார்களா, என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஒரு தனிப்பட்ட வழித் தடத்தைப் பற்றி அவர்கள் சொல்கிறார்கள். அதிலே பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்குமேயானால், பொது மக்களுக்கு அவசியம் என்று இருந்து, அந்த வண்டிகள் சரியாக வராமல் இருக்குமேயானால், தேவையான நடவடிக் கையை, அது சம்பந்தப்பட்ட போக்குவரத்து நடவடிக்கையை எடுக்கலாம்.

### மேற்கு ஜெர்மனி, மொரிஷியஸ் ஆகிய நாடுகளில் பூம்புகார் விற்பனை நிலையம்.

450—(* வினா எண் 10403) **திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கு ஜெர்மனி, மொரிஷியஸ் ஆகிய நாடுகளில் பூம்புகார் விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10-40)

**திரு. எஸ். இராசாராமன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு 'இல்லை' என்று சொன்னார்கள். தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளான மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற பகுதிகளில் பூம்புகார் விற்பனை நிலையங்கள் ஆரம்பிப்பதற்கு அரசு உத்தேசித்து உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கனவே இல்லை என்று சொன்னேன். இப்போது நம்முடைய மாநிலத்திலே கொஞ்சம் அதிகமாக விற்பனை செய்வதற்கான முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறோம். புதுடெல்லி, பெங்களூரில் இப்போது இருக்கின்றன. கல்கத்தாவிலே ஒன்று ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்படி நம்முடைய நாட்டில் எங்கெங்கு அதிகமாக விற்பனை செய்ய முடியுமோ அதைப் பார்த்துவிட்டு வெளிநாடுகளைப்பற்றி யோசிக்கலாம் என்பதற்காகத்தான் இல்லை என்று சொன்னேன்.

**திரு. எஸ். இராசாராமன்:** தலைவர் அவர்களே, அந்நிய நாட்டிற்கு பூம்புகார் சம்பந்தப்பட்ட சில கைவினைப் பொருள்கள் எல்லாம் அனுப்பி வைப்பதன் மூலமாக அந்நியச் செலாவணி நமக்குக் கிடைக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் பல்வேறு தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்றது. நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற நல்ல கைவினைஞர்களுக்கு பெருமை கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே வெளிநாடுகளில் பூம்புகார் விற்பனை நிலையங்களைத் துவக்குவதற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் வெளிநாடுகளில் ஆரம்பித்து நடத்துவது என்பது கடுமையான நிலைமை. வெளியிலே ஏற்றுமதி செய்து அங்கே தனியாக ஷோ ரூம் வைப்பது என்பது, நம்முடைய தகுதியை உயர்த்திய பின்புதான் அதைப்பற்றி யோசிக்க முடியும்.

### மோட்டார் வாகன சட்டத் திருத்தம்:

451—(* வினா எண். 11559) திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ). மோட்டார் வாகனச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர மத்திய அரசு மாநில அரசைக் கேட்டுள்ளதா?

(ஆ). ஆம் எனில், அதன் விவரம் யாது?





**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மோட்டார் வாகனச் சட்டம் 1939-க்கு திருத்தம் கொண்டுவர மத்திய அரசு மாநில அரசுகளின் குறிப்புரைகளைப் பெற்றுள்ளது. இச்சட்டத் திருத்தங்கள் மத்திய அரசின் ஆய்வில் இப்போது உள்ளன.

**திரு. செ. செம்மலை:** தலைவர் அவர்களே, பெருகி வரும் வாகனங்கள், அதிலிருந்து வரும் சாலை விபத்துக்கள் இவற்றைக் கருத்தில் கொண்டு சாலை பாதுகாப்பு, சாலை விதிகள் இவற்றை கடுமையாக்குவதற்கு நம்முடைய அரசின் சார்பிலே என்னென்ன கருத்துக்களை அந்த சட்ட மாற்றம் ஏற்படுகின்றபோது வலியுறுத்திச் சொல்வதற்கு நம்முடைய அரசு சார்பிலே ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஒரு விபத்து ஏற்பட்டுவிட்டால், அந்த ஓட்டுநர் சரியாக வண்டி ஓட்டுகிறாரா, குறைபாடு இருக்கிறதா என்பதைப் பற்றியெல்லாம் ஆய்வு செய்து, அவர் பயிற்சிக்கு மறுபடியும் அனுப்பப்பட வேண்டும். இப்படிப்பட்ட பல்வேறு பரிந்துரைகளை மாநில அரசிடமிருந்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். மிகப் பெரிய நீண்ட பட்டியல் இருக்கிறது. தேவை என்று நினைத்தால் அதைப்பற்றி தனியாக ஒரு அறிக்கை வைக்கத் தயாராக இருக்கிறேன். நீண்ட பட்டியல் என்பதால் ஒவ்வொன்றையும் சொல்ல முடியாது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொன்னேன். என்னென்ன பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்ற அந்த குறிப்புகளை தனியாகக் கொடுக்கிறேன்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, மோட்டார் வாகனச் சட்டங்களை [illegible] நடவடிக்கைகள் எடுக்கும்போது, [illegible] டேங்கர்கள், பெட்ரோல், டீசல், எண்ணெய்களை [illegible] வண்டிகளை [illegible] பல [illegible] கொண்டு, [illegible] பகுதிகளில் எல்லாம் [illegible] ஏராளமான வண்டிகள் நான் இருக்கும் [illegible] கிறார்கள். [illegible] வைத்து, அதை நான் ரிப்போர்ட் செய்தும்

நடவடிக்கை எடுக்கவில்லை, அது ஒரு அபாயகரமான நிலையாகும். ஹைலி இன்ஃப்ளேமபிள் மெட்டீரியல்ஸ் கொண்டுபோகக் கூடிய வண்டிகள் எல்லாம் பிரத்யேகமான ஷெட்டுகளில்தான் நிறுத்த வேண்டும், ரோடுகளில் நிறுத்தக்கூடாது என்பதற்கான வழிவகைகளை அந்தச் சட்டத் திருத்தத்திலே கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இது ஒரு பிரச்சனைக்குரிய விஷயம்தான். ஆனால் நடைமுறையிலே எவ்வளவு சிக்கல் இருக்கிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். அதையெல்லாம் ஆய்வு செய்துதான் நாம் ஒரு பரிந்துரை செய்ய முடியுமே தவிர தனிப்பட்ட முறையில் நாம் இந்த இந்த ஷெட்டுகளில்தான் நிறுத்த வேண்டும் என்று சொன்னால் அதற்குண்டான ஏற்பாடுகள் எல்லா இடத்திலும் இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. நடைமுறை சிக்கலையும் பார்த்து அதற்கேற்ப நாம் பரிந்துரை செய்யலாம்.

**திரு. செ. செம்மலை:** தலைவர் அவர்களே, 1939 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த பழமையான சட்டத்திலே மாற்றங்களைச் செய்வதற்கு 1984 ஆம் ஆண்டு பி. ஆர். சவான் அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்ட கமிட்டி ட்ராஃப்ட் புரோபோசல்களை நம்முடைய மத்திய அரசுக்குக் கொடுத்தபோது, அதிலே மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டிருக்கிற—இந்த ரோட் டாக்ஸை சீரமைப்பது பற்றி ஏதாவது கருத்து சொல்லப்பட்டு இருக்கிறதா? அப்படி அந்த கருத்து சொல்லப்பட்டிருந்தால் அதில் நம்முடைய மாநில அரசுக்கு உடன்பாடுதானா? அந்த ரோட் டாக்ஸை சீரமைப்பது குறித்து நம்முடைய மாநில அரசு என்ன கருத்தை வலியுறுத்தி இருக்கிறது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, டாக்ஸ், அதுபோன்று கட்டணங்கள்—இவற்றைப் பொறுத்த வரையில்—மத்திய அரசாங்கத்திலே இல்லை. அந்தக் கமிட்டியிலே இருந்தவர்கள் சில கருத்துக்கள் தெரிவித்தார்கள். சீராக, ஒரே மாதிரியாக இருக்கவேண்டும் என்று சில பேர் சொன்னார்கள். சில பேர் அப்படித் தேவையில்லை; அந்தந்த மாநிலங்கள் என்ன தேவை என்கின்றனவோ, அந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்தார்கள். நாம் அரசைப்



பொறுத்தவரையில் நாம் எதுவும் சொல்லவில்லை. கட்டணத்தைப் பொறுத்தவரையில், மாநில அரசிலே ஒரு குழு அமைக்கப்பட்டு அது அவ்வப்போது பரிசீலனை செய்து, உயர்த்துவதோ, குறைப்பதோ போன்ற நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று தெரிவித்து இருக்கிறோம்.

**திரு. ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் ஆக்சிடென்டுகளால் இறப்பவர்களுக்கு மத்திய அரசு 15 ஆயிரம் ரூபாய் ஒரு மாதத்திற்குள் உடனடியாக கொடுக்கவேண்டும் என்ற சட்டத்தை இயற்றியிருக்கிறது. ஆனால் அதனுடைய பிரிமியம் தொகையைப் பார்க்கிறபோது, இந்த நாட்டிலே வசதியுள்ளவர்கள் இறந்தாலும்கூட, 1½ இலட்சம் ரூபாய்தான் பிரிமியம் தொகை என்று இந்திய இன்சூரன்ஸ் சட்டத்திலே நிர்ணயித்து இருக்கிறது. ஆனால், மேலைநாடுகளில் பார்க்கிறபோது, அவர்கள் லவ் செய்யும்போது உதட்டைக் கடித்துவிட்டால்கூட, பல கோடி டாலர்களை கிளெயிம் செய்கிறார்கள் என்று சொல்லி செய்திகளிலே பார்க்கிறோம். ஆனால், இங்கே ஆக்சிடென்ட் ஆனவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொடுப்பதில்லை. அதை மேலும் அதிகப்படுத்துவதற்கு இந்த அரசு, மத்திய அரசிற்கு சிபாரிசு செய்யுமா? அதுவும், கை, கால் முறிந்தவர்களுக்கு உதவித் தொகையை உடனடியாக இன்சூரன்ஸ் கம்பெனிகள் கொடுப்பதில்லை. அதையும் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்களுக்கு வெளிநாட்டிற்குப் போகவேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது என்று நான் கருதுகிறேன். அதனால்தான் என்னென்னவோ உதாரணங்களை அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது 15 ஆயிரம் ரூபாயை அதிகப்படுத்தவேண்டுமா என்பது—இப்போது சமீபத்திலேதான் 15 ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும் என்ற முறையைக் கொண்டு வந்தார்கள். இதற்கு முன்பு இது கூட இல்லை. இப்போது மத்திய அரசாங்கம் அந்த நடவடிக்கையை எடுத்து, அதைக் கொண்டு வந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் [illegible]டைய பொருளாதாரச் சூழ்நிலை—நான் ஏற்கனவே சொன்னதைப்

போல, பல இடங்களிலே அந்த சிக்கல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக, தொழிலாளிகளை வைத்து இருக்கிற போதுகூட, தொழிலாளிகளுக்கு உரிய சம்பளம் கொடுக்கப்படுகிறதா தனியார் துறையிலே என்பது எல்லாம் ஆய்வுக்குரிய ஒன்றாகத்தான் இருக்கிறது. எனவே, எல்லோரும் அதைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்ற முயற்சி எடுக்கிறபோது, நிச்சயமாக ஓரளவுக்கு அது சாதகமாக வந்து அமையும் என்று கருதுகிறேன். ஆனால் இந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டும் என்று நினைத்தாலும், பொருளாதாரச் சூழ்நிலையிலே அதை அதிகப்படுத்துவது என்பது சிக்கலாகத்தான் இருக்கும். அதோடு, விபத்திலே உள்ளாகி இறந்து விடக்கூடியவர்கள், யார் இறக்கிறார்களோ, அவர்கள் மீது தவறு இருந்தாலும்கூட அவர்களுக்கும் கிடைத்து விடுகிறது. எனவே, அதிகமாகப் பெறுவது கூட, அதிகமாக விபத்துக்களுக்கு வழி வகுத்து விடுமோ என்ற ஒரு எண்ணம் கூட ஏற்படுகிறது. எனவே, இரண்டு பக்கமும் சீர்தூக்கிப் பார்த்துத்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**கன்னியாகுமரி-சென்னை சிறிய விமான போக்குவரத்து.**

[illegible]—(*வினா எண் 13170) திரு. எம். எம். இராசேந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி-சென்னை சிறிய விமான போக்குவரத்து அமைப்பது பற்றி செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இல்லை.

திரு. எம். எம். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய விமானங்கள் இறங்குவதற்கு வசதியில்லாத நகரப் பகுதிகளில் சிறிய விமானப் போக்குவரத்து இப்போது பிரபலம் அடைந்து வருகிறது. எனவே, இவைகளை முன்னுதாரணமாகக் கொண்டு கன்னியாகுமரி உலக சுற்றுலா மையமாக வளர்ந்து வரும் நிலையில் உள்ளது என்பதை



அனைவரும் அறிவார்கள். எனவே, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கக்கூடியவர்கள், பல பகுதி மக்கள் மட்டுமல்லாமல், உலகத்திலுள்ள எல்லா நாடுகளைச் சேர்ந்தவர்களும் அங்கு வந்து செல்கிறார்கள். அவர்கள் வந்து செல்வதற்கு வசதிகளைச் செய்து கொடுக்கும் முறையிலே, இயற்கையாக முக்கடலும் சங்கமமாகும் இயற்கைச் சூழ்நிலையை அடக்கிய, இந்தியாவினுடைய தென் கோடி முனையிலே இருக்கக்கூடிய கன்னியாகுமரி முனைக்கு, தமிழ்நாட்டில் தலைநகரமாக உள்ள சென்னையிலிருந்து விமானப் போக்குவரத்து—சிறிய விமானப் போக்குவரத்து—அமைக்கவும், சிறிய விமான தளம் அமைக்கவும், அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: தலைவர் அவர்களே, தூத்துக்குடிக்கு அருகாமையிலே புதிதாக ஒரு விமான தளம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்படி அமைக்கிறபோது, கன்னியாகுமரிக்கும், தூத்துக்குடிக்கும் 70 அல்லது 75 கிலோமீட்டர் தூரம்தான் இருக்கும். எனவே, அந்த வசதி போதும் என்று நாம் நினைத்தாலும், எதிர்காலத்தில் எல்லா மாவட்டத் தலைநகரங்களுக்கும் இந்த சிறிய விமானங்கள் கொடுக்கப்படவேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை நாம் கேட்கலாம். ஆனால் மத்திய அரசாங்கத்திற்கு, இது நடைமுறையில் சாத்தியமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. காரணம், இப்போது சேலம், தூத்துக்குடி இதுபோன்ற இடங்களுக்கு நாம் கேட்கிறபோதே கூட, அவர்கள் கொஞ்சம் இதற்கு செலவழிப்பதற்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன என்று தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் நம்முடைய ஆசை எல்லா இடங்களுக்கும் விமானப் போக்குவரத்து வசதி கொடுக்கப்படவேண்டும் என்பது தான். அதிலே வலியுறுத்துவதிலே பிரச்சினை இல்லை. ஆனால் நடைமுறையில் எப்படி இருக்கும் என்று தெரியவில்லை.

திரு. எம். எம். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாயுதூத் என்று சொல்லி, தனியார் கம்பெனிகளோடு ஒரு உடன்பாட்டைச் செய்து கன்னியாகுமரிக்கு விமானப் போக்குவரத்து அமைக்க இயலுமா என்பதோடு

[1987 ஏப்ரல் 22

விமானப் போக்குவரத்துக் கழகம் என்று சொல்லக்கூடிய ஒரு புதிய அமைப்பை உருவாக்கி அதன் மூலமாக நகரப் பகுதிகளுக்கு அந்த வாய்ப்பை உருவாக்கித் தரமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, விமானப் போக்குவரத்தைப் பொறுத்தவரை, எதைச் செய்தாலும் மத்திய அரசாங்கம்தான் செய்யவேண்டியிருக்கிறது. ஏற்கனவே அதற்கான அமைப்பு இருக்கிறது. புதிய அமைப்பு தேவையில்லை. எல்லா இடத்திற்கும் விமானப் போக்குவரத்து கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசாங்கம் நினைத்தால் கொடுக்கலாம். ஆனால் நிதிநிலைமை அதை அனுமதிக்குமா என்பதை அங்கேதான் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். எனவேதான், அந்தக் காரணத்தால்தான் நான் சொன்னேன்—நமக்கு ஆசை இருந்தாலும், அவர்களுக்கு நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் இருப்பதாக எனக்குத் தெரிகிறது என்று சொன்னேன்.

**சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகம்.**

453—(* வினா எண் 3902) **திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்தில் நந்தனார் கல்விக்கழகம், நந்தனார் மடம் என்ற பெயரால் அதன் பொறுப்பில் உள்ளவர்கள் சில ஆண்டுகளில் மட்டும் (1975-க்கு முன்) ரூ. 1.00 லட்சத்திற்கு மேல் கையாடல் செய்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகம் என்ற பெயரில் சங்கப் பதிவுச் சட்டத்தின்கீழ் 1923 ஆம் ஆண்டு காலஞ்சென்ற திரு. சகஜானந்தா அவர்களால் அந்தச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. சங்கத்தின் நோக்கம் ஆதிதிராவிட மக்களுக்கு கல்வி புகட்ட வேண்டும், வாழ்க்கை



1987 ஏப்ரல் 22]

நெறிமுறைகளைக் கற்பிக்க வேண்டும் என்பதுதான். இந்தச் சங்கத்திற்கு சர்க்கார் சுமார் 50 ஏக்கர் நிலத்திற்கு மேல் இனாமாகக் கொடுத்திருக்கிறது. அவற்றைத் தவிர திரு. சகஜானந்தா அவர்களும் நிலங்களை வாங்கியிருக்கிறார்கள். மொத்தத்தில் சுமார் 100 ஏக்கர் நிலம் சங்கத்தின் நிர்வாகத்தில் இருந்திருக்கிறது. 1959 ஆம் ஆண்டிலிருந்து 1972 ஆம் ஆண்டு வரை மேற்படி சங்கத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் திரு. எல். இளையபெருமாள் அவர்கள் நிர்வகித்த வகையில் சுமார் ரூ. 1,04,300 கையாடி இருக்கிறார் என்று சிதம்பரம் கோட்டாட்சித் தலைவராக இருந்தவர் அரசுக்கு ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்கள்.

இந்தச் சங்கத்தின் பதிவுச் சட்டத்தின் புதிய திருத்தப் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டும் சரியாக வரவு செலவுக் கணக்கை கொடுக்கவேண்டும். அந்த முறையில் அவர்கள் கொடுக்கவில்லை என்பதால் அவருக்கு ஒரு ஷோ-காஸ் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். ஐ.ஜி. ஆப் ரெஜிஸ்ட்ரேஷன் அவர்கள் இந்தச் சங்கம் சரியாகக் கணக்கு வழக்குகளை வைத்துக் கொள்ளவில்லை என்பதால் 28—1—1987 அன்று மேற்படி சங்கத்தின் பதிவை ரத்து செய்திருக்கிறார்கள். அதை எதிர்த்து அவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார். பதிவுத் துறைக்கும் அவர் மேல்முறையீடு செய்து, அதுவும் துறையின் ஆய்வில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகம் என்ற பெயரில் அங்கே பொறுப்பில் இருந்தவர்கள் செய்த தவறுகள் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கமாகச் சொன்னதற்கு நன்றி.

1981 ஆம் வருஷம் அந்தப் பொறுப்பில் இருந்தவர் வழக்குத் தொடர்ந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த வழக்கு இப்போது எந்த நிலையில் உள்ளது? தொடர்ந்து அது இன்னும் கோர்ட்டில் நிலுவையில் உள்ளதா? இது சம்பந்தமான தஸ்தாவேஜுகள் யாரிடம்—எந்தத் துறையில்—இருக்கின்றன. ஏனென்றால் இங்கு நந்தனார் மடத்தைக் கலைத்துவிட்டதாகக் குறிப்பிட்டார்கள்.

மடம் கலைக்கப்பட்ட பிறகு அந்த மடத்தை நிர்வகிப்பதற்காக நிர்வாகஸ்தர்களை நியமனம் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா? அப்படியென்றால் எப்போது நியமனம் செய்ய உத்தேசித்திருக்கிறது? அதுமட்டுமல்ல, இந்த மடத்தில் தவறு செய்தவர்மீது நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்துள்ளதா? அது சம்பந்தமான அறிக்கையை அரசு தயாரித்துள்ளதா என்பதையெல்லாம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீ. வீ. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி வருவாய் வாரியத்தின் ஆணையர் மூலம் அரசு அறிக்கை பெற்றிருக்கிறது. அந்தச் சங்கத்தின் பதிவு தற்போது ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதற்குச் சொந்தமான பல்வேறு சொத்துக்கள் கல்வியைப் பரப்புவதற்காகக் கொடுக்கப்பட்டவை. ஆனால் இப்போது தமிழக அரசே ஆரம்பப் பள்ளியிலிருந்து பிளஸ் 2 வகுப்புவரை பூரா செலவையும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்தச் சொத்துக்கள் ஆதிதிராவிட வகுப்பினருக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் அந்தச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. எனவே அந்தச் சங்கத்தினுடைய சொத்துக்களை மேற்பார்வையிட மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் சிதம்பரம் கோட்டாட்சித் தலைவரின் எல்லைக்குட்பட்ட மேற்படி நிலங்களை ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர், மற்றும் காட்டுமன்னார் கோயில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர், தற்போது மாநிலங்கள் அவையில் உள்ள முன்னாள் அமைச்சர், இந்நாள் உறுப்பினர் திரு. இராசாங்கம், மாவட்ட ஆட்சித் தலைவரால் நல்லவர், தகுதியானவர் என்று கருதப்படக்கூடிய இன்னொரு ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர் ஆகியோரால் அறிவுரை வழங்கப்பட்டு, குழு நியமித்து அதன் கீழ் சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றலாம் என்று அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. முன்னாலே இருந்தவர் ஏற்கனவே சொன்னதைப் போல் ரூ. 1.04,300 கையாடல் செய்தது பற்றியும் 1972 ஆம் ஆண்டுக்குப் பிறகு நாளது வரையில் சுமார் 100 ஏக்கர் நிலங்களிலிருந்து வந்த வரவு செலவுக் கணக்குகளைக் காட்டாமல் இருப்பதற்கும் தனியாக அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இது வருவாய்த் துறை சம்பந்தமானது.



என்றாலும் வருவாய்த் துறை இந்த நிலத்தை கொடுத்திருக்கிறது. வருவாய்த் துறை அமைச்சரிடம் விரிவாக மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைப் போட வேண்டும். ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள் சமூகநலத் துறையிலே இருக்கின்ற போது இந்த சொத்தை ஆதி திராவிட மக்களுக்குப் பயன்படும்படியாக எப்படி அமைக்கலாம் என்று ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி சொத்துக்களில் இருந்து வரும் வருமானத்தைக் கொண்டு ஆதி திராவிட மாணவ மாணவியர்களுக்கு காட்டுமன்னார்கோவிலிலும், சிதம்பரம் தாலுக்காவிலும் பயன்படும் அளவிற்கு ஒரு ஐ.டி.ஐ.-யை நிறுவலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் உள்ள நந்தனார் கல்விக் கழகத்தைப் பொறுத்த மட்டில் பிரச்சினைகள் உருவாகியிருக்கின்ற காரணத்தால் இதுகுறித்து முழுமையான விளக்கத்தை அரசு ஓர் அறிக்கையாக சமர்ப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீ. வீ. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். மேலும் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி இந்த அவைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து கொண்டு அறிக்கையை சமர்ப்பிக்கலாம்.

**திரு. கே. ஆர். கணபதி:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது 1972—1975 க்கு முன்னால் கையாடல் செய்திருப்பதாகவும் அதற்குப் பிறகு இன்று வரை கணக்கு காட்டவில்லை என்றும், ஆகவே மேற்படி கல்விக் கழகத்தின் தலைவர் திரு. இளைய பெருமாள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஐ.டி.ஐ. ஸ்தாபனம் ஆரம்பிக்கலாம் என்று சொன்னார்கள். நந்தனார் கல்விக் கழகத்திற்குச் சொந்தமான சுமார் 4 ஏக்கர் நிலத்தை ஏக்கர் ஒன்றுக்கு ஒரு லெட்சம் பெறுமான இடத்தை தனியாருக்கு அரசின் அனுமதியில்லாமல் விற்றிருப்பது தெரியுமா? அவ்வாறு விற்றிருந்தால் அந்த நிலத்தை மீண்டும் கையகப்படுத்தி, நந்தனார் கல்விக் கழகத்திடம் ஒப்படைத்து ஐ.டி.ஐ.-யை ஆரம்பிக்க அரசு உத்திரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 22

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி நந்தனார் கல்விக் கழகத்திற்குச் சொந்தமான நான்கு சொத்துக்களை திரு. எல். இளைய பெருமாள் விற்றிருக்கிறார் என்று விற்ற பத்திரத்தின் நகலோடு அரசுக்கு புகார் வந்திருக்கிறது. அதைப்பற்றி சர்க்கார் உரிய நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நந்தனார் கல்விக் கழகம் கலைக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கலைக்கப்படுவதற்கு முன்னால் 100 ஏக்கர் நிலத்தை இதற்கு முன் இருந்தவர்கள் நிர்வகித்து வந்தார்கள். அந்த மடத்திற்குச் சொந்தமான சொத்துக்களை இதற்கு முன்பு யார் யார் நிர்வகித்தார்களோ, யார் யாரை அரசு நீக்கியிருக்கிறதோ அவர்களே மீண்டும் அந்தச் சொத்துக்களை நிர்வகித்து வருவதாகச் சொல்லுகிறார்கள். அவர்களே சென்று அமர்ந்து கொண்டு பல வேலைகளைக் கவனிப்பதாகத் தெரிகிறது. அது மட்டுமல்லாமல் அது சம்பந்தமான ஃபைல்கள் வருவாய்த் துறையில் இருப்பதாகக் கூறினார்கள். வருவாய்த் துறை அதிகாரிகள் இதை அரசுக்கு சமர்ப்பிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மானிய கோரிக்கை வருவாய்த் துறையைப் பற்றியதுதான். மாண்புமிகு உறுப்பினர் விரிவாக அதைப் பற்றி பேசலாம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நந்தனார் கல்விக் கழகம் சுவாமி சகஜானந்தா அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. அந்தப் பள்ளியில் படித்த காரணத்தால்தான் எங்களைப் போன்றவர்கள் இங்கே அமர வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த சொத்து, மலேஷியா போன்ற நாடுகளுக்குச் சென்று அவர் பிச்சை எடுத்து சம்பாதித்த சொத்து. ஆகவே யாராக இருந்தாலும் அதைக் கையாடல் செய்ததற்காக அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, அரசாங்கம் தன் பொறுப்பிலே ஐ.டி.ஐ. யை ஆரம்பிப்பதோடு அரிசன பெண்களுக்காகவும், ஆண்களுக்காகவும் தனித்தனியாக பாலிடெக்னிக்குகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 22]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. இளையபெருமாள் தனியாகவும், பினாமி மூலமும் அந்த சொத்துக்களை நாளது வரையில் நிர்வாகம் செய்து வருகிறார். நான் ஏற்கெனவே சொன்னபடி ஆதிதிராவிட மாணவ மாணவியர்களுக்காக சிதம்பரம் தாலுக்காவில் ஒரு தொழிற் கூடம் அமைக்க அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களின் பெருந்தலைவராகவும் ஒரு சுவாமிஜியாகவும் இருந்த சுவாமி சகஜானந்தா அவர்களால் நந்தனார் மடம் ஆரம்பிக்கப்பட்டு பேரோடும், புகழோடும் நடைபெற்று வந்தது. அந்த மடத்தை அதே பெயரிலே ஆதி திராவிடர்களைக் கொண்டு நடக்கக் கூடிய நிலையிலே, ஆதி திராவிடர் நலத் துறையிலே நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11.00)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காலஞ்சென்ற ஸ்வாமி சகஜாநந்தா அவர்கள் பெயரை அந்தக் தொழிலியல் கூடத்திற்கு வைக்கவும், ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்த பெரியவர்கள், நல்லவர்களைக் கொண்டுதான் அந்த வருமானத்தை நிர்வகிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது.

### கால்நடை ஆய்வாளர் பயிற்சி.

454—(*வினா எண். 7716) **திரு. கோ. இரகுபதி :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கால்நடை ஆய்வாளர் பயிற்சியை மீண்டும் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1976-க்குப்பின் நிறுத்தி வைக்கப்பட்ட கால்நடை ஆய்வாளர் பயிற்சி, 1981-ல் மீண்டும் துவக்கப்பட்டது. 1981—82-ல் 100 தடுப்பூசியாளர்களுக்கும், 1984—85-ல்

99 தடுப்பூசியாளர்களுக்கும், 1985—86-ல் 82 தடுப்பூசியாளர்களுக்கும், கால்நடை ஆய்வாளர் 11 மாதப்பயிற்சி அளிக்கப்பட்டது. மீண்டும் 125 பேர்களுக்கு கால்நடை ஆய்வாளர் பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி கிரமங்கலத்தில் கால்நடை மருத்துவமனை.

455—(*வினா எண் 8120) திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கிரமங்கலத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வரும் நிதியாண்டில் துவக்கப்படுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிரமங்கலத்தில் ஏற்கனவே ஒரு கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. இக் கால்நடை மருந்தகத்தை, மருத்துவ மனையாக உயர்த்தும் திட்டம் எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், எழுமகளூர் ஸ்ரீமாரியம்மன் ஆலயத் திருப்பணி.

456—(*வினா எண் 10937) திரு. [illegible]: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், எழுமகளூர் ஸ்ரீமாரியம்மன் ஆலயத் திருப்பணிக்கு அரசு மான்யம் அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.





குளத்தூர் தொகுதி, இலுப்பூரில் துணை மின் நிலையம்.

457—(*வினா எண் 12388) திரு. கு. மாரிமுத்து: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி இலுப்பூர் நகரில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 1987—88-ம் ஆண்டு இறுதிக்குள் நிறுவப்படும்.

தென்னாற்காடு மாவட்டம், கடலூர் வட்டம் குறிஞ்சிப்பாடியிலுள்ள புத்துமாரியம்மன் ஆலயம்.

458—(*வினா எண் 13490) திரு. எ. தங்கராசு: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கடலூர் வட்டம், குறிஞ்சிப்பாடியில் உள்ள புத்துமாரியம்மன் ஆலயத்திற்கு சொந்தமான இடம் தனியார் இருவரின் ஆக்கிரமிப்பில் உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த ஆக்கிரமிப்பை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், கடலூர் வட்டம் குறிஞ்சிப்பாடியில் உள்ள புத்துமாரியம்மன் ஆலயத்திற்குச் சொந்தமான நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புதாரர்களை அகற்ற தொடரப்பட்ட வழக்குகள் கடலூர் மாவட்ட நீதிமன்றத்திலும், சென்னை உயர்நீதிமன்றத்திலும் நிலுவையில் உள்ளன.

[1987 ஏப்ரல் 22

### ஏனாதி கிராமத்தில் மின் கம்பங்கள்.

419—(வினா எண். 13691) திரு. க. பாரமலை: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் மாவட்டம்—மானாமதுரை வட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், ஏனாதி கிராமத்தில் இருபதுக்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் இற்றுப்போய் கீழே விழும் நிலையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தக் கம்பங்களுக்குப் பதிலாக புதிய மின்கம்பங்கள் நட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஒரே ஒரு சிமின்ட் மின் கம்பம் மட்டும் பழுது அடைந்து இருந்ததாக கண்டுபிடிக்கப் பட்டது.

(ஆ) மேற்படி பழுதான சிமின்ட் மின் கம்பம் 25—3—1987 அன்று மாற்றப்பட்டுவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) மதுரை மாவட்டம் சின்னமனூரிலுள்ள வெற்றிலைக் கொடிக்கால்களுக்கு தண்ணீர் விடுதல் குறித்து.

**திரு. கே. சுப்பாராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டம் சின்னமனூர் கருக்கன்காட்டுக்குளம் பகுதியைச் சேர்ந்த வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகள்





தங்கள் கொடிக்கால் விவசாயத்திற்கு தண்ணீர் விடக்கோரி, 27 ஆம் தேதி அனைத்துக் கட்சிகள் சார்பாக ஒரு புல் மறியல் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். அது குறித்து அரசினுடைய நிலை என்ன? அவர்களுக்குத் தண்ணீர் விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதே பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வே. இரா. ஜெயராமன் அவர்களும், திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். சேர்த்தே பதில் சொல்லிவிடலாம். (குறுக்கீடு) அதே தந்திதான். 3 பேருக்கும் அதே தந்திதான் கொடுத்திருக்கிறார்கள். படிக்க வேண்டாம். (குறுக்கீடு) அதை ஏன் மீண்டும் படிக்க வேண்டும்? படித்ததாகக் கருதப்பட்டு, பத்திரிகையில் வரும்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கோரிக்கையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். பெரியார் பகுதியாக இருந்தாலும் சரி, வைகைப் பகுதியாக இருந்தாலும் சரி, இப்போது குடிநீருக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற உணர்வை அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட கோரிக்கையை இன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதிகாரிகளுடன் கலந்து பேசி, இதற்கு உதவ முடியும் என்று அதிகாரிகள் சொல்வார்களானால், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

### (ஆ) அரசு நிகழ்ச்சிகளிலே உறுப்பினர்கள் பங்குபெற வாய்ப்பளிப்பது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. மா. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் ஒரே பிரச்சினை பற்றிக் கேட்டிருக்கிறார்கள். திரு. துரை கிருஷ்ணமூர்த்தி . . .

[1987 ஏப்ரல் 22

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் நேற்றையதினமே கேட்டார். இரண்டும் ஒரே பிரச்சினை. (குறுக்கீடு) இரண்டு பேர் கருத்தும் ஒரே கருத்து என்று எடுத்துக்கொள்வோம்.

திரு. துரை கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவையினுடைய தலைவரவர்களே, நம்முடைய தமிழக முதல்வரவர்கள். தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத் திறப்பு விழாவுக்கு வருகை தந்த நேரத்தில், என்னுடைய தொகுதியிலே அவர்கள் கலந்துகொண்ட அந்த விழாவிலேகூட, என்னையேகூட அங்கே அனுமதிக்காமல், கீழே இறக்கி, அங்கே ஒரு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொறுப்பாளர் அமர்ந்திருந்த ஓர் இருக்கையில், நாங்கள் இருவருமாக அமர்ந்திருந்தோம். இப்படிப் பல்வேறு சந்தர்ப்பங்களிலே தமிழக முதல்வரவர்களை ஆலோடு சந்தித்து மாலை அணிவித்து, வரவேற்புக் கொடுக்கும் அந்த நிகழ்ச்சிகளிலேகூட, 3 முறை எங்களைத் தடுத்திருக்கிறார்கள். அங்கே ஒரு காவல் துறை நகர கண்காணிப்பாளர், பாதுகாப்புக்காக மேடையிலே நின்றுகொண்டிருந்தவர் என்னைக் கீழே இறக்கி, எதிரே போய் உட்காருங்கள் என்று என்னுடைய தொகுதியிலே நடந்த நிகழ்ச்சியிலேயே அவமரியாதையாக என்னை நடத்தியிருக்கிறார். இது நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வரவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா என்பதை மட்டும் கேட்க ஆவலாக இருக்கிறேன்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேதாரண்யத்திற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூட்டுக் குடிநீர் திட்டத்தைத் துவக்கி வைப்பதற்காக வந்த நேரத்தில், என்னையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அழைத்திருந்தார்கள். நான் மேடை அருகே சென்றபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் என்னிடம், நீங்கள் பேசுவதை யாரும் விரும்பவில்லை, ஆகையால் பேசக்கூடாது என்று சொன்னார்கள். மேடையிலே அமரக் கூடாது என்றும் தடுத்துவிட்டார்கள். நான் மேடையிலே ஏறி அங்கேயிருந்த இரண்டு அமைச்சர் பெருமக்களிடத்திலே இதைப் பற்றி நேரே சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் மேடையிலே அமரக் கூடாது என்று சொல்



1987 ஏப்ரல் 22] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

கிறார்; பேசவும் அனுமதியில்லை. முதலமைச்சரைப் பார்க்கக் கூட அனுமதியில்லை, ஆகையால் வீட்டுக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். மாவட்ட ஆட்சித் தலைவர் கூடவே இருந்தார். ஆனால் அமைச்சர் பெருமக்கள் நான் சொன்னதைக் கேட்டுக்கொண்டே இருந்தார்களே தவிர, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கூப்பிட்டு என்ன என்று கேட்கவில்லை. ஆக, மாவட்ட ஆட்சித் தலைவர் பெரியவரா, அமைச்சர்கள் பெரியவர்களா என்பதற்கு ஒரு விளக்கம் தெரிவிக்க வேண்டும். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தொகுதியில் நடக்கும்போது, எங்களை எல்லாம் கூப்பிட்டு அவமானப்படுத்தும் அளவுக்கு இருப்பது அதிகாரிகளினுடைய நடவடிக்கையா அல்லது அமைச்சர்கள் கொள்கை அப்படி இருக்கிறதா என்பதையும் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அன்றையதினம் மேடையில் இருந்த அமைச்சர்களில் நானும் ஒருவன். மாண்புமிகு முதல்வரவர்கள் மேடைக்கு வருகிறபோது பேச வேண்டிய அமைச்சரவர்கள் எல்லாம் பேசிவிட வேண்டும், ஏதாவது ஓர் அமைச்சர்தான் பேசும்படியாக இருக்க வேண்டும் என்ற நியதிப்படிதான் அந்த நிகழ்ச்சி அங்கே ஏற்பாடு செய்யப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் மாத்திரமல்ல, ஆளுங்கட்சி உறுப்பினர்களானாலும், வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களானாலும் மேடையில் அமர வைக்கப்படுவதில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினரை உதாசீனப்படுத்தும் நோக்கம் யாருக்கும் இல்லை.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே நீங்களே ஒரு மரபினை உருவாக்குகின்றீர்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் வருகின்ற பகுதிகளுக்கு அந்தந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் வருவதாக இருந்தால் அவர்களுடைய பெயர்களை அந்த அழைப்பிதழ்களிலே போடுகிறார்கள். அவர்கள் திறக்க இருக்கின்ற கல்வெட்டுகளிலே அவர்களுடைய பெயர்களைப் பொறிக்கிறீர்கள்.

[திருமதி டி. யசோதா] [1987 ஏப்ரல் 22

அப்படி இருக்கும்போது அந்தப் பகுதிக்கு அமைச்சராக இருந் தாலும் சரி, முதலமைச்சராக இருந்தாலும் சரி, அப்படி வருகின்ற போது சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது மக்களுடைய பிரதி நிதிகள் இவர்களை அந்த மேடையிலே ஏற்றுவதற்குக்கூட முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது என்று சொன்னால் இதற்கு தாங்கள் என்ன உத்தரவாதம் கொடுத்திருக்கிறீர்கள்? அது சம்பந்தமாக தங்களுடைய தீர்ப்பு என்னவென்பதை அறிய விரும்புகிறேன்.

**(இ) சேலம் மாவட்டத்திலே உறுப்பினர்கள் தாக்கப்பட்டதாகச் சொல்லப்படுவது.**

**திரு. கூடலூர் இ. வி. வேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப் பினர்களைப் பாதுகாப்பது என்பது தங்களுடைய தலையாய கடமை. கடந்த 20 ஆம் தேதி சேலம் மாவட்டத்திலே என்னு டைய கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளர், இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர், இன்னொரு உறுப்பினர் டாக்டர் கே. பி. இராமலிங்கம் இரண்டு பேர்களும் சேலம் மாவட்டத்திலே சுற்றுப்பயணம் செய்கின்றபோது மகுடம் சாவடி என்ற இடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் குறுக்கே மறித்து, அடித்து கொலை செய்கின்ற அளவுக்கு முயற்சி செய்திருக்கின்றார்கள். இது பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரியுமா? அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(பதில் இல்லை.)

**(ஈ) கன்னியாகுமரி மாவட்ட ஆலயப் பணியாளர்களின் ஊதிய உயர்வு கோரிக்கை.**

**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஏ. பி. கண்ட்ரோ லில் இருக்கின்ற இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத



1987 ஏப்ரல் 22] [திரு. வை. பாலச்சந்திரன்]

திருக்கோயில்களிலே பணியாற்றுகின்ற பணியாளர்கள் ஊதிய உயர்வு வேண்டும், அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும என்று பல்வேறு கோரிக்கைகளை வைத்து கடந்த ஒரு மாத காலமாகப் போராடி வருகின்றார்கள். அதன் காரண மாக நேற்றிலிருந்து அங்கே திருக்கோயில்களில் திருவிளக்குப் பூஜை நடைபெறாமல் அவர்கள் கதவடைப்பு செய்துகொண்டு இருக்கின்றார்கள். இதன் காரணமாக இந்து பக்தர்கள் கொந்தளிப்புக்கு ஆளாகியிருக்கின்றார்கள். அதற்கு ஆதரவாக வேறு திருக்கோயில்களில் உள்ள பணியாளர்களும் கதவடைப்பு நடத்துவதாகவும், அங்கெல்லாம் பூஜை நடத்துவதில்லை என்றும் முடிவிற்கு வந்திருக்கின்றார்கள். இந்த நிலைமை கன்னியா குமரி மாவட்டத்திலே இந்து மக்கள் மத்தியிலே ஒரு கொந் தளிப்பை உருவாக்கியிருக்கிறது. அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. பெருமாள் பிள்ளை அவர்களும் இதே பிரச்சினை குறித்து எழுதி அனுமதி கேட்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிரச்சினையில் துறை பணியாளர்கள் என்றும் ஆலய ஊழியர்கள் என்றும் தனியாக இருக்கின்றார்கள். துறைப் பணியாளர் களைவிட ஆலயப் பணியாளர்களுக்குச் சலுகையில்லை என்றும், தங்களுக்குப் பணம் வேண்டும், அகவிலைப்படி வேண்டும் என்றும் அவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று 1—4—1986 முதல் ரூ. 10 வீதம் அவர்களுக்குக் கொடுக்கச் சொல்லி ஆணை யிட்டு அந்த ஆணையை அமல் செய்ய நேரிலே சம்பந்தப்பட்ட வர்கள் சென்றிருக்கின்றார்கள். பிரச்சினை எதுவாக இருந்தா லும் துறை ஆணையாளர் மற்றும் அரசுப் பிரதிநிதிகளிடம் அவர்கள் பேசவேண்டுமே தவிர இப்படி ஆலயங்களை மூடுவது என்பது உகந்தது அல்ல. ஆலயங்கள் தொடர்ந்து திறக்கப் பட்டு, விளக்கு ஏற்றப்பட்டு, அர்ச்சனை செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1987 ஏப்ரல் 22

**(ஆ) அரசு நிகழ்ச்சிகளிலே உறுப்பினர்கள் பங்குபெற வாய்ப்பளிப்பது குறித்து—(தொடர்ச்சி)**

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியைச் சார்ந்த திரு. துரை கருப்பையா அவர்களும், துணைத் தலைவர் திருமதி யசோதா அவர்களும் முக்கிய பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையிலே தஞ்சையிலே கலந்துகொண்ட நிகழ்ச்சியிலே அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பெயர் பொறிக்கப்படும் மேடையிலே ஏற்றப்படவில்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். நான் நினைக்கிறேன், அது முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கூட வந்திருக்காது. ஆனால் எதிர்காலத்திலே இந்த மாதிரி சட்டமன்ற உறுப்பினர்களை தங்களுடைய சொந்தத் தொகுதியிலே மேடையில் ஏற்றாவிட்டால் பல பிரச்சினைகளை சொல்லவேண்டிய கடமை அவர்களுக்கு இல்லாமல் போய்விடும். ஆகவே நான் உங்கள் மூலமாக மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடம் சொல்ல விரும்புவது எதிர்காலத்திலே இதுமாதிரி நிகழ்ச்சி நடந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதிகாரிகளாக இருந்தாலும்கூட, முதலமைச்சர் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதிலே நாங்கள் எந்தவிதத்திலும் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் தொகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினருக்கு மரியாதை கொடுக்கப்பட வேண்டும். அதற்கு ஒரு Categorical assurance உறுதிமொழிதான் கேட்கிறேன். அதைக் கேட்பதிலே என்ன தவறு இருக்கமுடியும்? நான் யாரையும் குற்றம் சாட்டி சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு சிறிய பிரச்சினை. தயவு செய்து யோசிக்கவேண்டும். சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு அவர்களுக்குரிய மரியாதை தேவை. நமக்கு யார் மீதும் காழ்ப்புணர்ச்சியில்லை. ஆனால் உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், பிரதம அமைச்சர் அவர்கள் வருகின்றார்கள். பிரதம அமைச்சர் அவர்கள் வரு



1987 ஏப்ரல் 22] [திரு. சு. முத்துசாமி]

கின்றபோது, அந்த மேடைகளிலே அமைச்சருக்குக்கூட அனுமதி இல்லை. அதைக் குறைசொல்லவும் முடியாது. அங்கே இருக்கின்ற நிலைமையைப் பொறுத்திருக்கின்றது. யார் யாரை அனுமதிக்கவேண்டும் என்று பார்க்கவேண்டும். அங்கேயிருக்கின்ற செக்யூரிட்டி ரீசன்தான். வேறு ஒன்றும் இல்லை. இதிலே உள்நோக்கம் இருக்க முடியாது. அதற்கு உள்நோக்கம் நாம் சொல்லிக்கொண்டிருந்தால் அது சரியாக இருக்காது. (குறுக்கீடு) எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருகிற போது சில இடங்களைப் பொறுத்து, பாதுகாப்பாக இருக்க வேண்டிய நிலை ஏற்படுவதால் அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கட்டுப்பாடாக அங்கே வரவில்லை. உள்நோக்கத்தோடு எதையும் செய்யவில்லை. இன்றையதினம் பல நிகழ்ச்சிகளுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களைக் கூட எங்கள் காரிலேயே அழைத்துச் செல்கிறோம் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஆகவே இதிலே உள்நோக்கம் கற்பிப்பது சரியல்ல. செக்யூரிட்டிதான் காரணமே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இதுபற்றிப் பல தடவை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அரசு நிகழ்ச்சிகள் என்றால் அதிலே அமைச்சர்கள், அந்தத் தொகுதியைச் சார்ந்த நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற இடத்தைச் சார்ந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக விளங்குகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களுக்கு உரிய மரியாதைகள் தர வேண்டும் என்றும், அவர்களும் அந்த நிகழ்ச்சியில் பங்கு பெற செய்ய வேண்டுமென்றும்தான் பொதுவாக ஆணையிடப்பட்டு பெரும்பாலான நிகழ்ச்சிகளில் அவர்களும் பங்கு பெறுகின்ற சூழ்நிலைகள்தான் ஏற்பட்டு வருகின்றன. ஆனாலும் சிலபல நேரங்களில், குறிப்பாக தஞ்சையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட வகையில், எல்லா துறைகளையும் சார்ந்த நிகழ்ச்சிகளையும் ஓரிடத்

திலேயே, அதாவது பல்கலைக் கழகத்தின் சார்பில், அங்கேயே எல்லா நிகழ்ச்சிகளையும் ஓரிடத்திலேயே நடத்தியதால் 42 பேச்சாளர்கள், நான் படித்துப் பார்த்ததில் இருந்தார்கள். அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப் பினர்கள் இப்படி எல்லோரையும் சேர்த்து 42 பேர்கள் வருகிறார்கள். இவர்கள் அத்தனை பேரும் பேசுவதற்கு அங்கே வாய்ப்பு ஏற்படவில்லை. சில வாரியத் தலைவர்களும், சில அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினரான திரு. சிங்காரவடி வேல் அவர்களும் மட்டும்தான் அங்கே பேச முடிந்தது. மற்ற வர்கள் பேச முடியவில்லை. எந்த ஒரு சட்டமன்ற உறுப் பினரையோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினரையோ மரியாதைக் குறைவாக அவமதிக்க வேண்டுமென்று அரசுக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ எந்த ஒரு எண்ணமும் இல்லை. அதுபோல் குறிப்பிட்ட உறுப்பினர்களைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற எண்ணமும் அரசுக்கு இல்லை. ஆங்காங்கே ஏற்படுகின்ற சூழ்நிலையையொட்டி எல்லோரும் பொதுவாகக் கூப்பிடப்பட்டு, உரிய மரியாதை அளிக்கப்பட வேண்டும் என்பது தான் அரசின் எண்ணம். அப்படி அழைக்கப்படவில்லை என்றால் அதைத் திருத்த வேண்டும் என்பதும், இன்னமும் கூட மக்களால் தேர்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளான ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும், ஊராட்சி மன்ற தலைவர்களையும் கூட அதிலே சேர்க்க வேண்டும் என்பதும்தான் அரசின் எண்ணம்.

நான் நாளையதினம் செய்யாறுக்கு போகிறேன். அங்கே நான் கலந்துகொள்கிற நிகழ்ச்சிகளில்கூட மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டு வந்துள்ள ஊராட்சி ஒன்றியத் தலைவர் போன்ற வர்களையும் அதிலே சேர்க்க வேண்டுமென்று சொல்லியிருக் கிறேன். அவர்களுடைய பெயர்களையும் அதிலே இன்றைய தினம் போட்டிருக்கிறார்கள். தனித் தனியாக இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்கிறபோது எல்லோருடைய பெயர் களையும் சேர்ப்பதில் சங்கடம் ஒன்றுமில்லை. ஆனால் மாவட்ட அளவில் நிகழ்ச்சிகள் என்று வருகிறபோது சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று அவ்வளவு பேர்களையும் சேர்த்து போடும்போது ஒருசிலர் பேசுகின்ற தன்மையும், சிலர் அதில் இல்லாத தன்மையும் ஏற்பட்டுவிடு கின்றன அமைச்சர்களுக்கும்கூட சில நேரங்களில் இப்படிப்





பட்ட நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இங்கே மாண்புமிகு உறுப் பினர்கள் சொல்வதுபோல எல்லாவற்றிலுமே அனுமதிக்கவில்லை யென்றால் அதுகுறித்து தனியாகத் தான் விசாரிக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது குறுக்கிடக் கூடாது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலையில், உரியமுறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குத்தான் கொண்டு வர வேண்டும். உரிய முறையிலே கொண்டு வந்தால் கவனித்திருப்பார்கள். என்னையேகூட மதுரையிலே தடுத்து நிறுத்தினார்கள். அந்த நிலைமையிலே வருகின்றபொழுது, நானேகூட புகார் செய்ய வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டது என்கிற நிலைமையை நானே எடுத்துச் சொல்லியிருக்கின்றபொழுது, புகார் சொல்லாமல், இங்கே வந்து சட்டமன்றத்திற்கும், பேரவைத் தலைவருக்கும், இங்கே இருக் கின்ற உறுப்பினர்களுக்கும் சொல்லிக் கொண்டிருப்பதால் நிவர்த்தி செய்ய முடியாது என்பதற்காகத்தான் நான் சொல் கிறேனே தவிர, புறக்கணிக்கப்பட்டது என்றால் உடனே கம்ப் ளெயின்டாக எழுதி உரிய அமைச்சரிடத்தில் கொடுத்திருந்தால் உரிய அமைச்சர்கள் கவனித்திருப்பார்கள் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேனே தவிர, அப்படியே எங்கேயாவது ஒன்றிரண்டு நடந்திருக்கக்கூடும், நடந்திருக்காது என்று நான் சொல்ல வர வில்லை. அப்படி நடந்திருந்தால் தவறு, யாராவது தவறான நடவடிக்கையிலே ஈடுபட்டிருப்பார்களேயானால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் பொதுவாக இந்த அரசுக்கு அந்த நோக்கம் இல்லை; அதிகாரிகள் அப்படி நடக்க வேண்டு மென்று வற்புறுத்துவதும் இல்லை. உரிய மரியாதையைச் சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அளிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தைத்தான் இந்த அரசு கொண்டிருக் கிறது என்பதைத் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் மறுமுறை யும் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

[1987 ஏப்ரல் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 15 நிமிட் நேரம் விரைந்த தாகி விட்டது.

திரு. அ. ரகுமான்கான் : செக்யூரிட்டிக்காக என்று சொல்கிறார்கள். நாங்கள் என்ன பயங்கரவாதிகளா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுவதைப் போல நாங்களும் பேச முடியும். (குறுக்கீடு), நான் சொல்வதைக் கேட்டுவிட்டுப் பதில் சொல்லுங்கள். (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு முறையைத் தயவு செய்து கையாளுங்கள். நான்கு பேர்கள் இப்பொழுது எழுந்திருக்கிறீர்கள், எந்த விதி உங்களை அனுமதித்தது? யாராவது ஒரு உறுப்பினர் பேசலாம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய உள்ளத்தைப் புண்படுத்தியிருந்தால் அவர்கள் அதைச் சரியாக எடுத்துக்கொள்ளவில்லை என்றுதான் பொருள். தயவுசெய்து நான் சொன்னதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு பிரச்சினையான இடத்திலே, மேடையிலே, அமைச்சர்களைக்கூட பிரதம அமைச்சர் வருகின்ற பொழுது அவர்கள் அனுமதிக்காததற்குக் காரணம் அமைச்சர்கள் மீது சந்தேகப்பட்டு அல்ல. அங்கே மேடையிலே கூட்டம் அதிகமாகின்றபொழுது அதைக் கவனிக்கக் கூடியவர்களுக்கு, பாதுகாக்கக் கூடியவர்களுக்குப் பல பிரச்சினைகள் ஏற்பட்டுவிடுகின்றன; கவனிக்க முடிவதில்லை. எனவேதான் அதைக் கட்டுப்படுத்துகிறார்கள். அதே நிலைமையிலேதான் அந்த இடத்திலே இந்தப் பிரச்சினை ஏற்பட்ட காரணத்தினாலேதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் என்று நான் சொன்னேனேயொழிய உங்கள் மீது சந்தேகம் அல்ல. அப்படியென்றால், அமைச்சர்களை அனுமதிக்கவில்லை என்று சொன்னால் அமைச்சர்கள்மீது சந்தேகப்படுகிறார்கள் என்று பொருளா? அது அல்ல.



1987 ஏப்ரல் 22] [திரு. சு. முத்துசாமி]

இன்னும் சொல்லப்போனால் காங்கிரஸ் [illegible] மாநிலத்திற்குப் போகின்றபொழுது அங்கேயேகூட காங்கிரஸ் அமைச்சர்களைக் கூட அனுமதிப்பதில்லை. அதற்குக் காரணம் அமைச்சர்கள் மீது சந்தேகம் என்பது அல்ல. அங்கே நிறையப் பேர் மேடைக்கு வந்துவிட்டால் கண்காணிப்பதோ, அவர்களைப் பாதுகாப்பதோ பிரச்சினையாக வரும் என்கின்ற [illegible] தான் செய்யப்பட்டிருக்கிறதேயொழிய, அதே [illegible] உங்களைச் சந்தேகப்பட்டுச் சொல்லவில்லை. [illegible] நீங்கள் [illegible] சட்டமன்ற உறுப்பினர்கள் நிறையப் பேர் [illegible] இருபது, முப்பது சட்டமன்ற உறுப்பினர்கள் [illegible] மேடைக்கு வந்துவிட்டால், பாதுகாப்பு என்பதற்குச் சிரமமாக இருக்கும். பாதுகாப்பு அதிகாரிகளுக்கு ஏதாவது சிரமமாகப் போய்விடும் என்ற காரணத்தால்தான் அந்த நடவடிக்கையை எடுத்திருக்கக்கூடும். எனவே, அப்படி நீங்கள் நினைத்துக் கொள்ள வேண்டுமேயொழிய, உங்களைக் குறை கூறுவதாகவோ அல்லது உங்கள் மேல் அபாண்டமாகப் பழி சொல்வதாகவோ எடுத்துக் கொள்வது தவறேயொழிய நான் அப்படிச் சொல்லவில்லை.

திரு. பொ. உக்கிரபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிக் கொள்வதெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருகின்றபொழுது பாதுகாப்பு கொடுக்க வேண்டும், எல்லாம் இருக்க வேண்டும். அதில் எங்களுக்கு ஒன்றும் பிரச்சினை கிடையாது. எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் பேசியே தீர வேண்டும் என்பது மாதிரி நான் கேட்க விரும்பவில்லை. ஆனால் அந்த நிகழ்ச்சி நடக்கின்றபொழுது, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாகவும் அந்தக் கல்வெட்டைச் செதுக்கிக் கொண்டுபோய் வைக்கிறோம். ஆனால் அந்தக் கல்வெட்டிலே நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது தொகுதி சட்டமன்ற உறுப்பினர், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் பெயர் குறிப்பிட வேண்டுமென்பதை மரபாகச் சொல்லி வருகிறீர்கள். ஆனால், அதிகாரிகளைக் கேட்கின்றபொழுது எங்களுக்கு அந்த உத்தரவு கிடையாது; முதலமைச்சர் பெயரை மட்டும்தான் போடுவோம் என்பது மாதிரி மக்கள் பிரதிநிதிகளைக்கூட புறக்கணிக்கக்கூடிய அளவிற்கு பதிக்கப்பட்டிருப்பது சரிதானா? ஆனால் கலெக்டரே ஆணையிட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும், கவனத்தை ஈர்த்தாகிவிட்டது. இருபது நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. பொ. உத்திராபதி : நான் பிரச்சினையை உருவாக்கவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆள்விட்டு, நீங்களெல்லாம் அங்கே போனீர்கள் என்றால் உங்களுக்குப் பாதுகாப்பு இல்லை, நீங்கள் உங்களுக்கான பாதுகாப்பைத் தேடிக்கொள்வது என்றால் நீங்கள் போகலாம் என்று அதிகாரி மூலமாக எங்களுக்குச் சொல்வது சரிதானா? இந்த முறை நீடித்தால் எப்படி மக்கள் பிரதிநிதிக்குப் பாதுகாப்பு, மரியாதை கிடைக்கும்? இந்த ஆட்சியிலே இப்படி நடப்பது நல்லதுதானா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சொல்லி, இனிமேலாவது இப்படி நடக்காமல் பார்த்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, சமீபத்தில் பாரதப் பிரதமர் சென்னைக்கு வந்து, கிறித்துவக் கல்லூரி நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றபோது தமிழக அரசின் சார்பில் நான் (Waiting) ஆக அனுப்பிவைக்கப்பட்டேன். அப்போது என்னையும் மேடையில் அனுமதிக்கவில்லை. அமைச்சர் என்ற முறையில் என்னை யாரும் சந்தேகப்படவும் இல்லை; நான் கோபித்துவிடவும் இல்லை. 'செக்யூரிட்டி' என்ற முறையில் நல்லமுறையில் கண்காணிப்புச் செய்வதற்காகச் சில ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். காரணம் மேடையில் அதிகமானவர்கள் இருந்தால் செக்யூரிட்டிக்குத் தடையாக இருக்கும் என்று கருதலாம். அதைப்போன்று நெய்வேலியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாரதப் பிரதமர் அவர்கள் கலந்துகொண்டபோது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சென்றிருந்தார்கள். அவர்களையும் மேடையில் உட்கார அனுமதிக்கவில்லை. ஆகவே அமைச்சர்களைச் சந்தேகப்படுகிறார்கள் என்று கருதிவிட முடியாது. இருக்கிற சூழ்நிலையைப் பொறுத்து, சந்தர்ப்பத்தைப் பொறுத்து, செக்யூரிட்டி ஏற்பாடுகளை முன்னிட்டு, இப்படிப்பட்ட சில நடவடிக்கைகளை எடுக்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை; அதிலே தவறு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



3. கவன ஈர்ப்பு.

(அ) கோவை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் மருத்துவர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. சுப்பராயன், ஈ.வே.கி.ச., இளங்கோவன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் கடந்த 6 மாத காலமாக 7 மருத்துவ நிபுணர்களின் காலியிடம் நிரப்பப்படாததால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டக் தலைமையிட மருத்துவமனைகளில் மக்கள் சிறந்த முறையில் சிகிச்சை பெற வேண்டுமென்ற நோக்கில், அங்கெல்லாம் சிறப்புத்துறைகள் படிப்படியாக உருவாக்கப்படுகின்றன. இதனடிப்படையில் இதுகாறும் பொதுமருந்தியல், பொது அறுவை மருத்துவம், மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல், முடநீக்கியல், காது, மூக்கு, தொண்டை இயல், சரும இயல், பால்வினை நோயியல் போன்ற துறைகளில் சிறப்பு மருத்துவர்கள் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பணியிடங்கள் அந்தந்த துறைகளில் பட்ட மேற்படிப்புப் பட்டம் பெற்ற குறித்தகாலம் பணிமுடித்து அனுபவம் மிக்கோரை முதுநிலைப்படி பணியமர்த்தி நிறை செய்யப்பட்டு வருகின்றன. இதற்கென ஒவ்வொரு

சிறப்புத்துறைக்கும் ஒரு தேர்ந்த பட்டியல் முதற்கண் தயார் செய்யப்பட்டு, அப்பட்டியலிலிருந்த முதுநிலை வரிசைப்படி சிறப்பு மருத்துவர்கள் பணியமர்த்தப்படவேண்டும். எல்லா சிறப்புத்துறைகளுக்கும் தேர்ந்தபட்டியல்கள் தயார் செய்யும் செயற்குறிப்புகள் அரசின் தீவிர பரிசிலனையில் உள்ளன. மேலும் இப்பட்டியலில் இடம்பெறுவோரைக்கொண்டு, பட்டிய லுக்கு ஒப்பளிப்பு அளிப்பதை எதிர்நோக்கி, காலியிடங்களை நிரந்தரமாகவும் நிறைசெய்யலாமென்பது குறித்தும் அரசு தீவிர மாகப் பரிசீலித்து வருகிறது. இது குறித்து அரசு ஆணைகள் விரைவில் வெளியிடப்படும் நிலையில் உள்ளன. இது சமயம் கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை யில் காலியாக உள்ள 7 சிறப்பு மருத்துவ பணியிடங்களும் நிறை செய்யப்படும்.

இதற்கிடையில், ஒரு உதவி அறுவை மருத்துவர் தன்பெயரைத் தேர்ந்த பட்டியல் ஒன்றில் சேர்க்கவில்லையென்று உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார். இதன் மீது உயர்நீதி மன்றமும் ஒரு இடைக்காலத்தடை விதித்துள்ளது. ஆதனால் தேர்ந்த பட்டியல்கள் வெளியிடுதல், அதன்படி பணி யிடங்களை நிறை செய்தல் ஆகிய நடவடிக்கைகள் இந்த இடைக் காலத்தடை நீக்கப்படும் வரை நிறுத்திவைக்கப்படவேண்டிய நிலை உருவாகியுள்ளது. இந்த இடைக்காலத்தடை நீக்கப்பெறு வதற்கு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் எல்லாச் சிறப்புத் துறைகள் ஏற்படுத்தி தொழிலாளர்களும் பிறமக்களும் சிறந்த முறையில் சிகிச்சை பெற வாய்ப்பளிக்க வேண்டுமென்பதுதான் இவ்வரசின் நோக்கம். காலியிடங்கள் அனைத்தும் அதிவிரை வில் நிறை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் ஒரு உதவி அறுவை மருத்துவர் தன் பெயரை தேர்ந்த பட்டியலில் சேர்க்கவில்லை என்று உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார் என்று இருக்கிறது. நடை முறையில் காலி இடங்களை நிரப்புவதில் பிரச்சனை வருகிற போது கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். பாதிக்கப்பட்ட அந்த





உதவி அறுவை மருத்துவரை அழைத்துப் பேசி, வழக்கை முடிவுக்குக் கொண்டுவந்து, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அந்த மருத்துவர் நீதிமன்றத்தில் தடை ஆணை வாங்கியிருக்கிறார். தடை ஆணையை விலக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தடை ஆணையை விலக்கிய பிறகுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும்.

**(ஆ) கரூர் சாயப்பட்டறைக் கழிவு நீரால் பாதிப்பு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் க. சோலை ராசு, சு. ஜெகதீசன் ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத் திற்கு அதைக் கொண்டுவருவார்.

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, "கரூர் நகரில் உள்ள சாயப்பட்டறைகளில் இருந்து வெளி யேறும் கழிவு நீரால் அப்பகுதி மக்களுக்கு பல், ஈறு வீங்குதல், தோல் வியாதி, வயிற்றுப் போக்கு தோன்றுவதால் பாதிக்கப் பட்டு அவர்களது நிலைமை" குறித்த அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26 வது பிரிவின் கீழ் அன்றாடக் கழிவுநீர்/தொழிற் சாலைக் கழிவுநீரினை வெளிவிட வாரியத்தின் அனுமதி கோரி, கரூரில் உள்ள 46 சாயம் ஏற்றும் தொழிற்சாலைகள் விண்ணப்பித் துள்ளன.

[திரு. ப. உ. சண்முகம்] [1987 ஏப்ரல் 22

வெளுத்தல், படையிடுதல், சாயம் போடுதல் முதலியன தயாரிப்பு முறைகளாகும். அமராவதியில் 11 தொழிற்சாலைகள் தங்களது தொழிற்சாலைக் கழிவு நீரினை வெளியேற்றுகின்றன. மீதமுள்ள தொழிற்சாலைகளின் தொழிற்சாலைக் கழிவுநீரையும் அன்றாடக் கழிவுநீரையும் சேர்த்து திறந்த வடிகாலில் தொழிற்சாலைகள் வெளியேற்றுகின்றன. இந்த வடிகால் திறந்த வெளி நிலத்தை அடைகின்றன அல்லது அருகிலுள்ள நீர்நிலைகளை அடைகின்றன. தொழிற்சாலைக் கழிவுநீரானது நிறமுடையதாகும். இது மிதக்கும் திடப் பொருட்களையும், கரைந்த திடப் பொருட்களையும், உயிர் இரசாயன உயிரகத் தேவை, இரசாயன உயிரகத் தேவையும் மிக அதிக அளவில் கொண்டுள்ளது. சுத்திகரிக்கப்படாத கழிவுநீர், நீர் நிலைகளிலோ அல்லது நிலத்திலோ வெளியேற்றப்படும்பொழுது நிலநீர் மற்றும் நிலத்தடிநீர் மாசுபட வாய்ப்புள்ளது.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி அன்றாடக் கழிவுநீர்/தொழிற்சாலைக் கழிவு நீரினை வெளியிடுவதற்கு அனுமதி கோரி விண்ணப்பிக்காத கரூரிலுள்ள 28 தொழிற்சாலைகளின் மீது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வழக்குத் தொடர்ந்துள்ளது. 31 தொழிற்சாலைகளுக்கு வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கும்போது தொழிற்சாலைகள் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்கேற்ப சுத்திகரிப்பு செய்து வெளிவிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. இது குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

*திரு. க. சோலைராசு: தலைவரவர்களே, நான் இதே கவன ஈர்ப்புத் தீர்மானத்தை ஒரு ஆண்டுக்கு முன்னால் கொடுத்த போது அப்போது அளிக்கப்பட்ட விவர அறிக்கையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருந்தார்கள். அது தொடர்பான வழக்கு இன்னும் நீதிமன்றத்தில் இருக்கிறது என்று இப்போது சொல்கிறார்கள். வழக்கு நீதிமன்றத்தில் இருந்தாலும், அங்கே பாதிக்கப்படுகிற மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகின்ற காரணத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையிலும் இனிமேல் மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் வழக்கு முடிந்து



1987 ஏப்ரல் 22] [திரு. க. சோலைராசு]

தீர்ப்பு வருவதற்கு இடையில் அந்த சாயப் பட்டறைகளை நிறுத்திவைக்க அரசு உத்தரவிடுமா? திருச்சி மாநகரில் இதைப் போன்று சாயப்பட்டறைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீரை பரிசோதனை செய்து பார்ப்பதற்கு ஆய்வுக்கூடம் இல்லை. ஆகவே, திருச்சி மாவட்டத்தில் இதுசம்பந்தமாக ஒரு ஆய்வுக் கூடத்தை நிறுவ மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவல்கள் அரசுக்குத் தெரியும். மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிறு, சிறு யூனிட்டுகளாக இருப்பதால் ஒவ்வொன்றும் தனித்தனியாக கழிவுநீரை சுத்திகரிப்பு செய்வதற்கு சாத்தியக்கூறு இருக்கிறதா என்று தெரியவில்லை. சிறிய அளவில் இயந்திரங்களை வைத்து கழிவுநீரை சுத்திகரிப்புச் செய்கின்ற சாத்தியக்கூறு இருக்கிறதா என்று ஆராயச் சொல்லி மாசு கட்டுப்பாடு வாரியத்தை அரசு கேட்டிருக்கிறது.

அடுத்து, திருச்சியிலே மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் ஆராய்ச்சிக் கூடம் ஒன்று அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டார்கள். இப்போது அதுபற்றிய பரிசீலனை இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**(இ) மார்த்தாண்டம் மேல்நிலைப்பள்ளியில் சில மாணவர்களுக்கு தேர்வு எழுத அனுமதியின்மை.**

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை கல்வி மாவட்டத்திற்குட்பட்ட மார்த்தாண்டம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 1985-86 ஆம் கல்வி ஆண்டிலிருந்து ஆசிரியர் பயிற்சி (டி.டி.சி) வகுப்பில் படித்துவரும் மொத்தம் 17 மாணவர்களும் தேர்வு எழுத அனுமதி வழங்கப்படாததால் அம்மாணவர்களும் பெற்றோர்களும் அடைந்துள்ள கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

**அறிக்கை.**

மார்த்தாண்டம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1985-86 ஆம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வி இயக்குநரின் முன் அனுமதியின்றி தலைமை ஆசிரியரே 24—10—1985 முதல் "இடைநிலை ஆசிரியர் பயிற்சி" வகுப்பினை தொழிற் படிப்பு பிரிவின் கீழ் தொடங்கியமைக்கு, அப்பயிற்சியில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் நலன் கருதி தலைமை ஆசிரியரின் செயலுக்கு அரசு ஆணை எண் 448, கல்வி, நாள் 19—3—1987-ல் பின்னேற்பு அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

**திரு. வை. பாலச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கையை ஏற்று கனிவோடு பரிசீலனை செய்து அந்த மாணவர்கள் தேர்வு எழுத ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் முன்னனுமதி இல்லாமல் இப்படி இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்புக்கு மாணவர்களைச் சேர்க்கின்ற நிலைமை கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் இருக்கிறது. அதைத் தடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அரசு அதை ஆய்ந்து வருகிறது.

**(ஈ) திருமங்கலம் தொகுதி எம். போத்தநதிக்கருகில் பாலம் செப்பனிடுதல்.**

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தொகுதியில் உள்ள எம். போத்தநதிக்கு அருகில் உள்ள பாலம் உடைந்து பல மாதங்கள் ஆகியும் அது திரும்பக் கட்டப்படாததால் பஸ் மற்றும் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதால் அப்பகுதியில் வாழும் 50.000-க்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்படுவது குறித்த"



அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன். இதனை பின்வருமாறு திருத்தி வாசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போது அந்தப் பால வேலை முடிந்துவிட்டதாகவும், அந்தப் பாலத்தின் வழியாக போக்குவரத்து நடந்துகொண்டிருப்பதாகவும் தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

**அறிக்கை.**

கவன ஈர்ப்பு தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள பாலம் வடமாலகுறிச்சி சாலை கி.மீ. 3/6-ல் போத்தநதி என்ற கிராமத்தின் அருகில் உள்ளது. இச்சாலை இதர மாவட்ட சாலையாகும் (O.D.R.) இதன் நீளம் 5 கி.மீ. ஆகும். இச்சாலையின் ஓடுதளம் தார் பரப்பு கொண்டதாகும். இச்சாலையில் கி.மீ. 3/6-ல் உள்ள கல்பாலம் சமீபத்தில் இடிந்து விட்டதால் இந்த இடத்தில் போக்குவரத்து தற்போது விலக்குபாதை வழியாக (Diversion Road) செல்கிறது. எனவே இவ்விடத்தில் மூன்று வரிசை குழாய் பாலம் அமைக்க ரூ. 47,000-க்கு மதிப்பீடு அங்கீகரித்து டெண்டர் கோரப்பட்டு வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பாலத்திற்குத் தேவையான சிமெண்ட் மற்றும் குழாய்கள் வாங்கப்பட்டுவிட்டன. ஓரிரு நாட்களில் வேலை துவங்கப்பட்டு மார்ச்சு இறுதிக்குள் முடிக்கப்பட்டு பாலம் போக்குவரத்துக்கு திறந்து விடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல வேளையாகத் திருத்திக் கொண்டார்கள். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கை நேற்றிரவுதான் கொடுக்கப்பட்டது. அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது தெரியுமா? ஓரிரு நாட்களில் வேலை தொடங்கப்பட்டு மார்ச் இறுதிக்குள் அந்தப் பாலம் போக்குவரத்திற்காகத் திறந்து விடப்படும் என்று கொடுத்திருக்

கிறார்கள். இப்படிக் கொடுக்கலாமா? நான் கூட சந்தேகப் பட்டேன், அடுத்த ஆண்டு மார்ச் மாதமோ என்று நினைத்துக் கொண்டேன். இது 47 ஆயிரம் ரூபாயிலே கட்டி முடிக்கப்பட வேண்டிய பாலம். இது அண்மையில் உடையவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே உடைந்துவிட்டது. ஓராண்டுக்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சுற்றுப்பயணம் செய்தார்கள். இப்படி சிறிய சிறிய வேலைகளைப் பொறுத்த வரையில் கூட கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்த பிறகு தான் நிறைவேறும் என்பது சரியாக இருக்காது. எனவே உரிய காலத்தில் செய்ய வேண்டிய பணிகளைச் செய்யவேண்டும். அந்த வகையில் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே நேரடியாகப் பார்த்துத் தெரிந்திருப்பார்கள் என்று நான் கருதினேன். ஆனால் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாகத்தான் அவர்களுக்கே தெரிந்திருக்குமோ என்ற சந்தேகம் இப்போது வருகிறது. (குறுக்கீடு) இன்னொன்று சொன்னார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்துதான் நிறைவேற்றுவதா என்பது அவ்வளவு சரியாக இருக்காது என்று சொன்னார்கள். நிறைவேற்றுகிறபோது கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தால் இப்படித்தான் இருக்கும். எனவே முறையாக உரிய காலத்தில் நிறைவேற்றுகிற போது கவன ஈர்ப்புத் தீர்மானம் வருவதால் அதற்கும், இதற்கும் சரியாகப் போகிறது. எதிர்காலத்தில் குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(உ) பாலக்கோடு வட்டத்தில் பேருந்துகள் விடுதல் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. தீர்த்த ராமன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். அவர் சார்பில் திரு. டி. ஆர். வேங்கட ரமணன் அவர்கள் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பாலக்கோடு வட்டத்திற்கு அண்ணா போக்குவரத்துக் கழகம் டிப்போ அமைத்தும், அங்கு போதிய நகரப்



பேருந்துகள் விடப்படாத காரணத்தினால் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன். அதிலே பின்வருமாறு திருத்தம் செய்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். 1—4—1987 முதல் தனியாக ஒரு போக்குவரத்துக்கழகம் துவங்கப் பட்டு அங்கே செயல்பட்டு வருகிறது. எனவே அதில் இருக்கிற பெரும்பாலான பிரச்சினைகளை விரைவாக அந்தப் போக்கு வரத்துக் கழகம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக் கிறது.

**அறிக்கை.**

பாலக்கோடு பணிமனைக்கு 12—2—1987 அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. பணி மனை நிறுவ தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பாலக்கோட்டை மையமாகக் கொண்டு கீழ்க்காணும் இரு வழித்தடங்களில் நகரப் பேருந்து விடப்பட்டுள்ளது :—

(1) பாலக்கோடு—கேசர்குழி அல்லாடேம்.

(2) பாலக்கோடு—தர்மபுரி.

மேலும் 3 புதிய வழித்தடங்களை இயக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

தவிரவும், 1—4—1987 முதல் தர்மபுரி மாவட்டத்துக்கெனத் தனியாக ஒரு போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்தப்படவுள்ள தால் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு போதிய பேருந்துகள் விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(ஊ) தீப்பெட்டி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்காமை.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் வி. பி. பாலசுப்பிரமணியன், வி. பாலகிருஷ்ணன், வி. எஸ். பஞ்ச வர்ணம், கு. ரமணி, கோ. வீரய்யன், ஜே. ஹேமச்சந்திரன்,

வை. ப. சிந்தன், ச. குமரகுருபர ராமநாதன், எ. எல். வ. ஆறுமுகம், மற்றும் இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மாநிலத்தில் 250-க்கும் மேற்பட்ட தீப்பெட்டி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படாமல் இருப்பதால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

**அறிக்கை.**

தமிழ்நாட்டில் 1977-78-ம் ஆண்டில் 14 சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், 28 தீப்பெட்டி தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வந்தன. மேற்கண்ட தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், தீப்பெட்டி தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் பாரம்பரிய பகுதிகளான சிவகாசி, சாத்தூர் மற்றும் கோவில்பட்டி பகுதிகளில் செயல்பட்டு வந்தன.

*வளர்ச்சி :*

(2) தீப்பெட்டித் தொழில் பாரம்பரியமான பகுதிகளில் மட்டுமல்லாது தமிழ்நாடு முழுவதும் பரவலாகத் தோற்றுவிக்கப்பட வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் தமிழகத்தின் பல பகுதிகளிலும் 1981-82-ம் ஆண்டில் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், தீப்பெட்டித் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் ஆரம்பிக்கப்





பட்டு இவ்வாண்டின் இறுதியில் இச்சங்கங்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு உயர்ந்தது.

| | |
|---|---|
| 1. சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 107 |
| 2. தீப்பெட்டித் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 468 |

மேற்கண்ட சங்கங்கள் ஆரம்பித்த காலத்தில் மத்திய கலால் வரிச் சலுகை ஒரு குரோஸ் தீப்பெட்டிக்கு ரூ. 1-60 எனவும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் பொது லேபில் வசதியும் மத்திய அரசினால் அளிக்கப்பட்டிருந்த காரணத்தால் தீப் பெட்டித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபகரமாகச் செயல் பட்டு வந்தன. இச்சங்கங்களின் உறுப்பினர்களும் மிகுந்த ஆர்வத்துடன் உற்பத்தியில் ஈடுபட்டு வந்தனர்.

***சரிவு :***

3. தீப்பெட்டி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டு வந்த மத்திய கலால் வரிச் சலுகையும், பொது லேபில் வசதியும் 1982-83-ம் ஆண்டில் தனியார் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அனைத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டதால் மேற்படி தனியார் தீப்பெட்டித் தொழிற்சாலைகளின் கடும் போட்டியைக் கூட்டுறவுச் சங்கங்கள் சந்திக்க வேண்டிய தாயிற்று. பாரம்பரியமற்ற பகுதிகளில் முறையான அமைப்பின் கீழ் இயங்கி வந்த சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் தனியார் தீப்பெட்டித் தொழிற் சாலைகள் மற்றும் தீப்பெட்டி டிரேடிங் கம்பெனிகளின் கடும் முறையற்ற போட்டிக்கு ஈடுகொடுக்க முடியாமல், தீப்பெட்டி கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியும், விற்பனையும் குறைய ஆரம்பித்தன. இதனால் பாரம்பரியமற்ற பகுதிகளில் இயங்கி வந்த சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை தொழிற் கூட்டுற வுச் சங்கங்கள் மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களிடையே ஆர்வம் குறைந்ததுடன், உற்பத்தி விலைக்கும் குறைவாகவே தீப்பெட்டி பண்டல்களை விற்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டு உற்பத்தி மற்றும் விற்பனை வெகுவாகப் பாதிக்கப்பட்டன. அதன் விளைவாக ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தி மற்றும்

விற்பனை குறைந்து கொண்டே வந்தது. அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | உற்பத்தி (பண்டல) (இலட்சம்) | மதிப்பு (ரூ. இலட்சம்) | விற்பனை (பண்டல்) (இலட்சம்) | மதிப்பு (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|---|
| 1981–82 | 27.65 | 1390 | 23.95 | 1669 |
| 1982–83 | 28.34 | 1442 | 30.78 | 1926 |
| 1983–84 | 28.41 | 1627 | 27.40 | 1787 |
| 1984–85 | 20.98 | 1282 | 21.70 | 1514 |
| 1985–86 | 17.61 | 1120 | 17.11 | 1233 |
| 1986–87 (பிப்ரவரி முடிய) | 12.70 | 819 | 12.9? | 966 |

4. ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தி மற்றும் விற்பனை குறைந்து கொண்டே வந்ததன் விளைவாகவும், தொடர்ந்து ஏற்படும் நட்டத்தைத் தாங்க இயலாததாலும் உறுப்பினர்கள் இத்தொழிலில் ஆர்வமிழந்து உற்பத்தி செய்வதை நிறுத்தி விட்டனர். இதன் விளைவாகப் பல சங்கங்கள் செயலிழந்தன. தற்போது அதாவது 28—2—1987 நிலவரப்படி தீப்பெட்டிச் சங்கங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன :—

| | செயல்படும் சங்கங்கள். | செயலிழந்த சங்கங்கள். | கலைக்கப்பட்ட சங்கங்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|
| 1 தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள். | 24 | 53* | 30 | 107 |
| 2 தீப்பெட்டித் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 22 | 68* | 378 | 468 |

(53+68) அனைத்தும் கலைப்பு

* செயலிழந்த சங்கங்கள் நடவடிக்கைகளில் உள்ளன



**சங்கங்களைப் புதுப்பிக்கும் முயற்சிகள் :**

5. செயலிழந்த நிலையில் உள்ள சங்கங்களைப் புதுப்பிக்கவும், நட்டத்தில் இயங்கும் சங்கங்களை இலாபகரமாக நடத்திடவும், ஆர்வமிழந்துள்ள உறுப்பினர்களை முழு ஆர்வத்துடன் தீப்பெட்டித் தொழிலில் மீண்டும் ஈடுபடுத்தவும், கீழ்க்கண்ட சலுகைகளை வழங்கிடுமாறு மத்திய அரசாங்கத்தினை மாநில அரசு மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(1) முன்பு மத்திய அரசால் அனுமதித்தபடி மத்திய கலால் வரி சலுகையினை தொழிற் கூட்டுறவு தீப்பெட்டிச் சங்கங்களுக்கு மட்டும் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(2) பொது லேபில் வசதியைத் தொழிற் கூட்டுறவுத் துறையின் கீழ் உள்ள தீப்பெட்டிச் சங்கங்கள் மட்டுமே பயன்படுத்த வசதி செய்து தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள சலுகைகளை வழங்குமாறு கோரி தமிழ்நாடு சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் இணையப் பெருந்தலைவர் திரு. ஆர். கே. பெருமாள் (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்) அவர்கள் தலைமையில் ஒரு தூதுக்குழு 6—1—1987 அன்று டெல்லி சென்று மத்திய அரசின் நிதி மற்றும் வர்த்தக அமைச்சகங்களில் தொடர்பு கொண்டு மேற்படி சலுகைகளை வழங்கக் கோரி வற்புறுத்தியுள்ளது. இப்பொருள் குறித்து மைய அரசின் ராஜாங்க நிதி அமைச்சர் மற்றும் ராஜாங்க தொழில் அமைச்சர் அவர்களுக்கு போக்குவரத்து மற்றும் ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களிடமிருந்து நேர்முகக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் அதிகாரிகளுக்கும் இவ்வரசின் நேர்முகக் கடிதத்தின் மூலம் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஆணைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மேற்படி சலுகைகள் மத்திய அரசாங்கத்தால் வழங்கப்படுமேயானால் அனைத்து தீப்பெட்டி உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் நல்ல முறையில் செயல்பட்டு தீப்பெட்டி உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரித்து ஆயிரக்கணக்கான உறுப்பினர்களுக்கும், தீப்பெட்டித் தொழிலாளர்களுக்கும் தொடர்ந்து வேலை அளிக்க இயலும்.

[1987 ஏப்ரல் 22

**திரு. வி. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவா அறிக்கையில் ஒருசில குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஏறத்தாழ நூற்றுக்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் 10 ஆயிரம் உறுப்பினர்கள் இருந்தார்கள். இன்றையதினம் 3,000 உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள். மத்திய அரசின் மூலமாக விதிக்கப்பட்டுள்ள கலால் வரிச் சலுகையைப் பொறுத்தவரையில் தனியாகத் தொழில் செய்பவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருப்பதால் கூட்டுறவுச் சங்கங்கள் நலிவடைந்துள்ளன. எனவே தொழில் கூட்டுறவு தீப்பெட்டிச் சங்கங்களுக்கு மட்டும் அந்தச் சலுகையினை வழங்குமாறு இந்த அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறது. அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கைத்தறி உற்பத்தியாளர் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு எப்படி தனியாக ஒரு ரிபேட் கொடுக்கிறார்களோ அதுபோல் இங்கே இருக்கிற உறுப்பினர்களுக்கும் மத்திய அரசின் மூலமாக ரிபேட் கொடுக்க வேண்டுமென்று கேட்கிற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மத்திய அரசாங்கத்தை நாம் கோரியுள்ளோம். அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுமானால் அதிலே எந்த விதமான சிக்கலும் வருவதற்கு வாய்ப்பு இல்லை. இப்போது சமீபத்திலே கூட மத்திய அரசாங்கத்திற்கு நாம் கடிதம் எழுதியிருக்கிறோம். எனவே அதன் பதிலைப் பார்க்கலாம். அதிலே நமக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற புதிய ஆலோசனையைப் பற்றி பின்னால் பரிசீலிக்கலாம்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிலுக்குப் பெயர் போன முக்கியமான இடமாகிய சிவகாசியிலேயே 250-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன என்றால் ஆயிரக் கணக்கில் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள். தொழிலாளர்கள்



1987 ஏப்ரல் 22] [திரு. கு. ரமணி]

என்று சொன்னால் சிறிய வயது பையன்களும் பெண்களும் ஆக அவர்கள் இருப்பார்கள். இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் நலிந்து போவதற்கு என்ன காரணம் என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டியது மிக அவசியம். இந்தக் கலால் வரியை மத்திய சர்க்கார் குறைப்பதும், பொது வசதிகளை இலவசமாக அவர்களுக்கு மட்டும்—தனியார் துறைக்குக் கொடுக்காமல்—கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்தால் நல்லது. அந்தச் சலுகை வந்தது என்று சொன்னால் இந்தத் தொழிலுக்கு மிகவும் நல்லது. ஏனென்றால் தீப்பெட்டித் தொழில் பொதுவாக லாபகரமான தொழில், நஷ்டத்திலே போகக் கூடிய ஒன்றல்ல. அங்கே வேலை செய்கிற பெண்களுக்கும் பையன்களுக்கும் ரூ. 3, ரூ. 4 என்று தான் கூலி கொடுக்கிறார்கள். ஆகவே இந்தச் சங்கங்களில் முறையான நடவடிக்கைகள் இல்லாமல் முறைகேடுகள் நடந்து, அதில் இருக்கிற பொது மக்கள் எல்லாம் மோசடி செய்யப்பட்டு, ஏதாவது ஆகியிருக்கிறதா? இருந்தால் விசாரணை செய்து அச்சங்கங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கத்தில் மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** துணைத் தலைவர் அவர்களே, சங்கங்களிலே முறைகேடுகள் இருப்பதாக தகவல் இல்லை. சிலவற்றில் இருக்கலாம். பெரும்பாலான சங்கங்களில் ஏதேனும் முறைகேடுகள் இருந்ததாக தகவல் இல்லை. அதை ஆய்வு செய்வதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. அதிலே இருக்கிற சிக்கல் என்னவென்றால் மத்திய அரசாங்கம் கலால் வரியைப் பொறுத்தவரையில் சலுகை கொடுத்திருந்தார்கள். அந்தச் சலுகை முன்பு கூட்டுறவுச் சங்கங்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் மட்டும் இருந்தது. இப்போது தனியார் துறைக்கும் அதை விரிவுபடுத்திய காரணத்தினால் தனியார் துறையோடு போட்டி போட முடியாத நிலை இருக்கிறது. எந்தத் தேதியிலிருந்து சலுகை தனியார்களுக்குக் கொடுக்கப்பட்டதோ அதிலிருந்து நஷ்டம் ஏற்பட்டு வந்தது. அதற்கு முன்னால் லாபகரமாகத்தான் ஓடிக் கொண்டிருந்தது. எனவே அதுவே தான் முழுக் காரணம் என்று நம்புகிறோம். இருந்தாலும் மொத்தமான பிரச்சினை என்ன என்பதைப் பற்றித் தனியாக யோசித்துச் செய்யலாம்.

[1987 ஏப்ரல் 22

* திரு. எ. என். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கலால் வரிச்சலுகையையும் தொழில் வரிச் சலுகையையும் தனியார்களுக்கு வில்தரித்த காரணத்தினால் தான் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்திலே ஓடுகின்றன என்று சொன்னார்கள். தனியார்கள் என்று சொன்னால் இந்தத் தொழிலிலே சாதாரணமாக கிராமங்களிலே இருக்கக்கூடிய சாதாரண மக்கள் தாம். அவர்களோடு ஏன் இவர்களால் போட்டிபோட முடியவில்லை. மாண்புமிகு திரு. ரமணி அவர்கள் சொன்னது போல இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் மோசடிகள் இருப்பதாக ஐயப்பாடு இருக்கிறது. தனியார்களோடு போட்டிபோட முடியவில்லை என்று சொல்வதை ஒத்துக் கொள்ள முடியவில்லை. அத்தோடு புதிதாக வட மாநிலங்களுக்கு லாரிகளில் தீப்பெட்டிகளை ஏற்ற ஒரு சிக்கல் இப்போது வந்திருக்கிறது. நாமக்கல் போன்ற பகுதிகளில் நேஷனல் பர்மிட்டுகள் உள்ள லாரிகள் இருக்கின்றன. அவற்றின் சொந்தக்காரர்கள் தீப்பெட்டிகளை ஏற்ற அதிகக் கட்டணம் நிர்ணயம் செய்ததால் கட்டுப்படியாகவில்லை. அதனால் வேறு லாரிகளைப் பிடித்து சாத்தூர், விருதுநகர், சிவகாசியிலிருந்து நாமக்கல் வழியாக லாரிகள் சென்றால் அவற்றை நடுவிலேயே தடுத்து நிறுத்தி விடுகிறார்கள். அதனால் இங்கு கதவடைப்பு பல நாட்கள் நடைபெற்றது. அந்த நிலைமை 1 மாதத்திற்கு முன்னால் கூட இருந்தது. இப்போது அந்த நிலைமை என்ன ஆயிற்று? அதற்கு இந்த அரசு என்ன ஏற்பாடு செய்தது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, இதிலே நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களுக்கு சொன்ன பதிலைத்தான் சொல்ல வேண்டும். அந்தக் கலால் வரியைச் சலுகையை என்றைக்கு மற்ற இடங்களுக்கும் கொடுத்தார்களோ அன்றையிலிருந்துதான் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. தனியார்கள் வேலை ஆட்களை நியமிப்பது அவர்களுக்கு சம்பளம் வாங்குவது போன்றவற்றில் அவர்களாகவே சில சலுகைகளை எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் விதிப்படி, சட்டப்படி நடக்க வேண்டியிருக்கிறது. அதனால் போட்டி போட முடியவில்லை.



1987 ஏப்ரல் 22] [திரு. க. முத்துசாமி]

அதனால் செலவுகளும் கூடுதல் ஆகிறது. எனவேதான் போட்டி போட முடியாத நிலை இருக்கிறது. இன்னொன்று. லாரிகளைப் பற்றிச் சொன்னார்கள். இதில் இரண்டு பக்கமும் பார்க்க வேண்டியிருக்கிறது. தீப்பெட்டித் தொழிலும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது. லாரித் தொழிலும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது. இரண்டையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போதுதான் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் ஏற்கனவே இதுபற்றி ஏறத்தாழ 15 நாட்களாகப் பேசி வருகிறார்கள். நாங்கள் அவர்களையெல்லாம் அழைத்துக்கூடப் பேசியிருக்கிறோம். அதே இடத்திற்கு சிவகாசிக்கு சென்று அவர்களைச் சந்தித்துப் பேசி முடிவுக்கு வந்துவிட்டதாக எனக்குத் தெரியவருகிறது. எனவே இதிலே பிரச்சினை எதிர்காலத்தில் இருக்காது என்று நம்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: துணைத் தலைவர் அவர்களே, சங்கங்களைப் புதுப்பிப்பதற்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களுக்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். மிக்க நன்றி. நூற்றுக்கு மேற்பட்ட சங்கங்கள் செயல்படாமல் இருக்கின்றன. அதற்கு காரணம் ஒன்று இருக்கிறது. தலைவர்கள், டைரக்டர்கள் என்று சொசைட்டிகளில் இருக்கிறார்கள். வடநாட்டிலிருந்து சேட்டுகள் வந்து தீப்பெட்டி வாங்குகிறபோது அந்த வியாபாரிகளை இந்தத் தலைவர்களும், டைரக்டர்களும் தலையிட்டு நிறுத்திவிடுகிறார்கள். அவர்கள் தனியாக தீப்பெட்டித் தொழிற்சாலை வைத்திருக்கிற காரணத்தால் அந்த வியாபாரிகளை மடக்கி அவர்களுடைய தொழிலை விருத்தி பண்ணிக்கொண்டு, அந்த சொசைட்டியை இயங்கவிடாத அளவிற்கு சிவகாசி, விருதுநகர், ஸ்ரீவில்லிப்புத்தூர் போன்ற பகுதிகளில் செய்கிறார்கள். இந்தக் கொடுமை அங்கே நடக்கிறது. இதைக் கண்காணித்து அரசு நடவடிக்கை எடுக்குமா? அடுத்து இந்த சொசைட்டிகளைப் புதுப்பிப்பதற்கு தனியாக ஏதாவது நடவடிக்கையெடுக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். இதனை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவரே நேரடியாக கடிதம் எழுதுவார்களானால்

மத்திய அரசில் விரைவில் நிவாரணம் கிடைக்க வாய்ப்பு இருக்கும். அதை அரசு செய்யுமா? அத்துடன் ஸ்ரீவில்லிப்புத்தூரில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், உட்காருங்கள். இப்படி அடுக்கடுக்காக கேள்விகளைக் கேட்டுக்கொண்டு போனால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல இயலாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினை. ஒரே ஒரு கேள்வி மட்டும அனுமதிக்க வேண்டும். ஸ்ரீவில்லிப்புத்தூரில் வத்திராயிருப்பு கூட்டுறவுச் சங்கம் என்று இருக்கிறது. அதிலே அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட குதிரை வீரன் லேபிள் போட்டு தீப்பெட்டித் தொழில் இலாபகரமாக ஓடிக்கொண்டு வந்தது. இடையில் தனிப்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலை முதலாளிகள் கோர்ட்டிலே ஸ்டே வாங்கிவிட்டார்கள். ஐந்து ஆண்டுகளாக அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அதிகாரிகளும், பொறுப்பில் இருப்பவர்களும் காலதாமதம் செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கண்காணிப்பார்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 468 சொசைட்டிகள் இருக்கிறபோது, இப்படி ஒரு சொசைட்டியைப் பற்றி திடீரென்று கேட்டால் அமைச்சர் அவர்கள் எப்படி பதில் சொல்ல இயலும்? முதல் கேள்விக்கு மட்டும் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களை, அந்த நிலைமைகளைப் புரிந்துகொள்ள முடிந்தது. குறிப்பாக அந்த சொசைட்டிகளில் பொறுப்பில் இருப்பவர்கள் தனியாக தீப்பெட்டித் தொழிற்சாலை வைத்திருந்தோ அல்லது தனியார் தீப்பெட்டித் தொழிற்சாலையினைத் தொடர்பு கொண்டோ இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதாக அவர்கள் சொல்கிறார்கள். அப்படி யாராவது தொடர்பு கொண்டு இந்தக் கூட்டுறவுச் சங்கம் நசிந்து போகிற வகையில் செயல்படுவார்களானால் நிச்சயமாக இந்த அரசாங்கம் கடுமையான நடவடிக்கையெடுக்கும். இப்போது





மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்களையே மனுவாக ஏற்றுக்கொண்டு அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அடுத்து ஸ்டே வாங்கியிருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அதனைத் தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்யலாம். என்னிடத்தில் இப்போது அது பற்றித் தகவல் இல்லை. இருந்தாலும் அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இலாபகரமாக, சிறப்பாக நடப்பதற்கு என்னென்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றித் தனியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து ஆய்வு செய்து, யாராவது ஒரு பெரிய அதிகாரி நேராக அங்கே சென்று பார்த்து, நிலைமைகளை அறிந்து வந்து, உரிய நடவடிக்கையெடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

**(எ) நீலகிரி மாவட்டத்தில் சில பகுதிகளில் அடிக்கடி மின் தடை ஏற்படுதல்.**

**திரு. கே. உச்சி:** துணைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தைச் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களிலும் மின்சார விநியோகத்தில் குறைவழுத்தம் ஏற்பட்டுள்ளதாலும், அடிக்கடி மின்தடை ஏற்படுவதாலும், அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

நீலகிரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட பகுதிகள் தாழ்வு அழுத்தம் உள்ளவைகளாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளன:—

(1) குன்னூர் நகரின் சில பகுதிகள்; (2) வெலிங்டன்; (3) கோத்தகிரி; (4) குந்தா.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 ஏப்ரல் 22

இப் பகுதிகளில் மேம்பாட்டு வேலைகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. கூனூரில் பல பகுதிகள், மற்றும் வெலிங்டன் பகுதியின் மின் அழுத்தம் சீரான நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மற்ற பகுதிகளில் மேம்பாடு வேலைகள் மூன்று மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு, சீரான மின் அழுத்தில் மின்சாரம் வழங்கப்படும். கூனூர் நகரத்தின் பகுதிகள், கோத்த கிரி மற்றும் குந்தா பகுதிகளில் ரூ. 3 லட்சம் செலவில் மேம்பாட்டு வேலைகள் நடந்து வருகின்றன. இந்த வேலைகள் அனைத்தும் மூன்று மாதங்களில் முடிக்கப்படும்.

கோத்தகிரியில் ஒரு 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் இன்னும் சில தினங்களில் செயல்படத் தொடங்கும். அதனால் கோத்தகிரி தாலுக்காவில் உள்ள எல்லாப் பகுதிக்கும் குறைந்த மின் அழுத்தக் குறை முழுவதுமாக நிவர்த்திக்கப்படும்.

(முற்பகல் 11-40)

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; இந்த விவர அறிக்கையிலே குன்னூர் நகரிலே உள்ள சில பகுதிகளிலேயும், வெலிங்டன், கோத்தகிரி, குந்தா ஆகிய பகுதிகளிலேயும் மின் குறைவழுத்தம் இருப்பதாகச் சொல்லப் பட்டு இருக்கிறது. அதை நீக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப் பட்டு இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நான் நீலகிரி மாவட்டம் முழுமையும் உள்ள கிராமங்களில் உள்ள மின் குறைவழுத்தம் பற்றி கோடிட்டுக் காட்டியுள்ளேன். இதிலே என்னுடைய தொகுதியான் கூடலூர் தொகுதி இடம் பெற வில்லை. கூடலூர் தொகுதியில் உள்ள பெரும்பான்மையான கிராமங்களில், மின்சாரப் பற்றாக்குறை, மற்றும் மின் குறை வழுத்தம் ஏற்படுவதால், விளக்குகள் சரியாக எரிவதில்லை. அந்தப் பகுதியில் உள்ள மின்சார விளக்குகள் பிரகாசமாக எரிய ஒரு சப்-செண்டர் அமைக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய தொகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க



1987 ஏப்ரல் 22] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். இதுபற்றி தனியாகக் கேட்டால், அதற்கு நான் பதில் சொல்கிறேன். போதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மொத்தமாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள மின் அழுத்தக் குறைவுபற்றிக் கேட்டபோது, இந்தத் தகவலை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஏ) அறநிலையத் துறை பணியாளர்கள் ஊதிய நிலை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு இந்து அறநிலையத் துறை பணியாளர்களை ஆலயப் பணியாளர் மற்றும் துறைப் பணியாளர்கள் என்று பிரித்து, துறைப் பணியாளர்களுடைய சம்பளத்தையும், பதவி எண்ணிக்கையையும் வரைமுறையின்றி கூட்டுவதால், ஆலயப் பணியாளர்களிடையே தோன்றியுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

இந்து சமய அறநிலையத்துறை அறக்கட்டளை சரியாக இயங்குவதற்கும் அவைகளின் வருமானத்தை பெருக்குவதற்கும் சட்டபூர்வமாக தோற்றுவிக்கப்பட்ட துறையாகும். இவ்வறக் கட்டளைகள் செம்மையாக செயல்படுவதை கண்காணிக்கும் பொருட்டு இத்துறையின் தலைவராக ஆணையாளர் ஒருவரும், நிர்வாக உதவியாக தலைமையகத்தில் இரு இணை ஆணையர் (அண்மையில் நியமிக்கப்பட்டவர்கள்) துணை ஆணையர் களும் [illegible] இரு தேர்வுக உதவியாளர்களும், மூதுநிலை கணக்கு [illegible] மேற்பார்வை பொறியாளர் போன்ற அலுவலர்களும் மண்டலம் மற்றும் மாவட்ட அளவில் துணை

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 ஏப்ரல் 22

ஆணையர், உதவி ஆணையர்களும் உள்ளனர். இவ்வலுவலர்களுடன் கண்காணிப்பாளர் மற்றும் எழுத்தர்கள் ஆகிய இன்ன பிற பணியாளர்களும் உள்ளனர்.

2. மேலே குறிப்பிட்டுள்ள துறை பணியாளர்கள் அரசுத் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இத்துறையின் பணிகள் பல்வேறு கால கட்டத்தில் விரிவடைந்துள்ளன. 1951-ம் ஆண்டு திருக்கோவில்கள் இத்துறையின் ஆளுகையின்கீழ் கொணரப்பட்டபோது சுமார் 5,000 திருக்கோவில்கள் நிர்வகிக்கப்பட்டன. இவ்வெண்ணிக்கை பல்வேறு நிலைகளில் படிப்படியாக உயர்ந்து தற்போது இத்துறையின் ஆளுகையின்கீழ் 34,401 அறநிலையங்கள் உள்ளன. மேலும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை தற்போது ஆலயத்தின் வருமானத்தைப் பெருக்குவதோடு அல்லாமல் இவ்வாலயங்களின் நிர்வாகத்தை செம்மைபடுத்தும் பணி மட்டுமல்லாமல், இவ்வாலயங்களைப் பழுதுபார்த்தல், ஆலயங்களின் பூஜைகள் செவ்வனே நடைபெறும் வகையில் திட்டங்கள் வழிவகுத்தல், இவ்வாலயப்பணியாளர்களின் நலங்காக்கும் திட்டங்கள் ஆகிய பல்வகைப்பட்ட நற்பணிகளிலும் ஈடுபட்டுள்ளது. இவ்வாறு விரிவடைந்துள்ள துறையின் பணிக்கு ஏற்றவாறு, அத்துறைக்கு ஓரளவு தேவையான பணியிடங்களை அவ்வப்போது அரசு அனுமதித்து வருகின்றது.

3. இத்துறையின் ஆளுகையினுள் உள்ள திருக்கோவில் மற்றும் அறநிலையங்களிலுள்ள பணியாளர்கள், துறைப்பணியாளர்கள் போன்றில்லாமல், சம்மந்தப்பட்ட திருக்கோவில் நிர்வாகத்தினாலேயே நியமிக்கப்படுபவர்களாவார்கள். இத்திருக்கோவில் பணியாளர்களுக்கும் துறைப்பணியாளர்களுக்கும் உள்ள வேறுபாடுகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன :—

| | ஆலய ஊழியர்கள் | அரசு ஊழியர்கள் |
|---|---|---|
| 1 | எவ்வொரு ஆலயத்தில் உள்ள வேலையை அனுசரித்து ஊழியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். | அரசு இலாகாவில் கடிதப் போக்குவரத்து கணக்குகள் மற்றும் பணியாளர்களின் சம்பளம் சம்பந்தமானவை முதலியன ஒரே ரீதியில் இருக்கும். எனவே, பொதுவாக எல்லா அரசு இலாக்காக்களுக்கும் ஒரே ரீதியில் பணியாளர்கள் நியமிக்கப் படுகின்றனர். |



1987 ஏப்ரல் 22] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

| | ஆலய ஊழியர்கள் | அரசு ஊழியர்கள் |
|---|---|---|
| 2 | ஆலய ஊழியர்கள் நியமனத்திற்கு 25 வயது முடிந்து 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்கலாம். | அரசு ஊழியர்கள் நியமனத்திற்கு 28 வயதிற்கு மேல் இருக்கக் கூடாது. |
| 3 | தேர்வு எதுவுமின்றி ஆலய நிர்வாகிகளால் நேரிடையாக நியமனம் செய்யப் படுகிறார்கள். | தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் நடத்தப்படும் தேர்வில் வெற்றி பெற்றால் மட்டுமே அரசு ஊழியர்களாக நியமனம் செய்யப் படுகிறார்கள். |
| 4 | 2 வருட காலத்திற்கு சேர்ந்தாற்போல் 1 வருட காலம் பணியில் இருந்தால் தகுதிகாண் பருவம் பூர்த்தி ஆகும். | மூன்று வருட காலத்திற்குள் 2 வருடம் தொடர்ந்து பணியில் இருந்தால் தகுதிகாண் பருவம் பூர்த்தியாகும். |
| 5 | எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவர்களும் இருக்கிறார்கள். | எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே அரசு ஊழியர்களாக நியமிக்கப் படுகிறார்கள். |
| 6 | கண்டநிலை ஊழியர்கள் காவல்காரர் மற்றும் உள்துறை ஊழியர்களுக்கும் கல்வித் தகுதி நிர்ணயிக்கப்படவில்லை. | கடை நிலை ஊழியர் மற்றும் வாட்ச் மேன் பதவிக்கு எட்டாம் வகுப்புத் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும். |
| 7 | ஓய்வு பெறும் வயது 60. | ஓய்வு பெறும் வயது 58. |
| 8 | வயது வரம்பு விதியிலிருந்து மற்றும் கல்வித் தகுதி விதி விலக்கு ஆலய ஊழியர்களுக்கு அளிக்கப் படுகிறது. | வயது வரம்பு விதி விலக்கு, கல்வித் தகுதி விதி விலக்கு அளிக்கப்படுவதில்லை. |
| 9 | ஒரே இடத்தில் வேலை செய்வதால் நன்மைகள் பல. | வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்படுகிறார்கள். |

4. மேற்படி விவரங்களிலிருந்து ஆலயப் பணியாளர்கள் துறைப் பணியாளர்களிடமிருந்து பல்வேறு வகைகளில் மாறுபட்டவர்கள் என்பது தெளிவாகிறது. துறைப்பணியாளர்களின் எண்ணிக்கை கூடிய பொழுது, திருக்கோவில் பணியாளர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படவில்லை என்ற கூற்று சரியானதில்லை. 1980 ஆம்

ஆண்டில் சுமார் 80,000 ஆக இருந்த ஆலயப்பணியாளர்கள் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து தற்போது ஏறத்தாழ ஒரு லட்சத்தை எட்டியுள்ளது. மேலும் தமிழக திருக்கோவில் பணியாளர்களின் ஊதிய செலவினம் ஆண்டொன்றுக்கு, அந்தந்த திருக்கோவிலின் வரிவிதிப்பு நிர்ணய வருமானத்தின் அடிப் படையில் அமைய வேண்டும். இதன்படி 1960-ஆம் ஆண்டில் 25 சதவிகிதத்திற்குள் இருந்த இச்செலவினம் 33-1/3% என இருக்கலாம் என அரசு நிர்ணயித்துள்ளது.

5. இத்திருக்கோவில் பணியாளர்கள் அடைந்து வரும் பல்வேறு சலுகைகள், துறைப்பணியாளர்களுக்கு கிட்டாமலிருந்த போதிலும் ஆலய பணியாளர்களுக்கான பணி நியமனம், கல்வித் தகுதிகள் ஆகியவைகள் துறைப்பணியாளர்களிடமிருந்து பெருத்த அளவில் மாறுபட்டிருந்தபோதும், அரசு முதன் முறையாக, ஆலய ஊழியர்களுக்கும் ஊதிய விகிதங்கள் நன்முறையில் அமைக்கப்படவேண்டும் என்ற கருத்துடன் அன்னாருடைய கோரிக்கைகளை பரிவுடன் அணுகி, 125 ஆக இருந்த ஊதிய விகிதங்களை 20 ஆகக் குறைத்து, 1—4—1986 முதல் பணியாளர்களுக்கு திருத்திய ஊதிய விகிதங்கள், பணப் பயன் ரூ. 20-க்கு குறையாமல் அனைவருக்கும் கிட்டும் வகையில், அனுமதித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதனால் 2.944 ஆலய பணியாளர்கள் பயனடைவதுடன், ரூ. 22.32 லட்சம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்கு கூடுதல் செலவினம் ஏற்படுகிறது.

6. தற்போது சீரமைக்கப்பட்டுள்ள திருத்திய சம்பள விகிதங்கள், முதல்நிலை முதல் நான்காம் நிலை வரையிலுள்ள திருக்கோவில் பணியாளர்களுக்குப் பொருந்தாது. ஆகையால் இப்பணியாளர்கள் பயனடையும் வகையிலும் அவர்களது அவாவினை நிவர்த்தி செய்யும் வகையிலும் கருணைப் பணிக் கொடையாக தலா ரூ. 200 (ரூபாய் இருநூறு மட்டும்) ஒரே தவணையாக அவர்களுக்கு வழங்கலாம் என்று இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையருக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

7. இவை அல்லாமல் திருக்கோவில் பணியாளர்களுக்கு 1—3—1986 மற்றும் 1—5—1986 தேதிகளில் அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட அகவிலைப்படி தவணைகள் முறையே





1—9—1986 மற்றும் 1—11—1986 தேதிகளிலும், 1—7—1986 முதல் விழுக்காடாக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அகவிலைப்படி தவணையினை 1—1—1987-லிருந்தும் முதுநிலை ஆலயப்பணியாளர்களுக்கு வழங்கப்பெறலாம் என்றும் அரசு அறிவித்துள்ளது.

8. மேற்படி சூழ்நிலையில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் பணியாளர்களின் எண்ணிக்கை மட்டும் கூடிக் கொண்டே போகிறது என்ற கூற்று சரியானதன்று என்று எடுத்து இயம்புவதுடன், இவ்வாலயப் பணியாளர்களின் நலனையும் அரசு பரிவுடன் அணுகுகிறது என்பதையும் தெளிவுபடுத்தலாம்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எங்களுடைய பகுதியிலே, "ஒண்ட வந்த பிடாரி ஊர் பிடாரியை விரட்டியது" என்று கதை சொல்வார்கள். அதைப்போல அறநிலையத்துறையிலே உள்ள ஆலயப் பணியாளர்களை கவனிக்க வந்த இந்தத் துறைப் பணியாளர்கள், இந்த ஆலயப் பணியாளர்களை கொத்தடிமைகளாக ஆக்குகின்ற நிலைமையிலே இங்கே விவரமான அறிக்கை புத்திசாலித்தனமாக அளிக்கப்பட்டு இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஒரே ஒரு கேள்வியைக் கேட்க ஆசைப்படுகிறேன். இந்தத் துறைப் பணியாளர்களில் குறைந்தபட்ச ஊதியமாக வாங்குகின்ற ஊழியர்களுடைய சம்பளம் எவ்வளவு? அதைப்போல ஆலயப் பணியாளர்களில் கூடுதலாக சம்பளம் வாங்குகின்ற ஓதுவார், நாதஸ்வர வித்வான் அல்லது அர்ச்சகர்களுடைய உயர்ந்தபட்ச சம்பளம் எவ்வளவு? இந்த இரண்டு சம்பளங்களை வைத்து ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அது எணி வைத்தாலும் எட்டாத அளவிற்கு, அவ்வளவு வித்தியாசமாக இருக்கிறதே, இது நல்லதுதானா? கோடிக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள ஆலய விக்ரகங்களையும், நகைகளையும் பாதுகாக்கின்ற பொறுப்பிலே ஈடுபட்டுள்ள இந்த ஆலயப் பணியாளர்களுக்கு இவ்வளவு குறைவான சம்பளம் கொடுப்பது, தர்மம்தானா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, ஆலயப் பணியாளர்களுடைய தேவைகளை ஆய்வு செய்து அதற்குரிய நியாயம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு 15 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒருவருக்கு ஒரு துணைக் கேள்விதான் என்ற அடிப்படையிலே எல்லோரும் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். (குறுக்கீடு). நீங்கள் இன்னொரு கேள்வி கேட்க வேண்டும் என்றிருந்தால், முன்கூட்டியே சொல்லியிருக்க வேண்டும்.

**(ஐ) வேளச்சேரி ஏரி நீர்பிடிப்பு மட்டத்தை குறைத்து வெள்ளப் பாதிப்பைத் தவிர்த்தல்.**

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வேளச்சேரி ஏரியில் நீர் பிடிப்பு மட்டத்தை குறைப்பதற்கான பணிகள் விரைவில் துவக்கப்படாததால் மக்களுக்கு ஏற்படும் இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

வேளச்சேரி ஏரியின் எதிர்வாயிலில் உள்ள குடியிருப்புகளின் வெள்ளப் பாதிப்புகளை களைய வேளச்சேரி ஏரியின் முழு நீர் மட்டத்தை 4' குறைக்க தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் அனுப்பிய ரூ. 4.80 லட்சம் திட்ட மதிப்பீட்டிற்கு அரசு ஆணை எண். 712, பொதுப்பணித்துறை, நாள் 21—3—1986-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. இவ்வேலைக்கான ஒப்பந்தங்கள் நிச்சயிக்கப்பட்டு வளைவு கரைபணிகள் முடிந்து மற்ற வேலைகள் துவக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு மழைக் காலத்திற்குள் வேலைகள் முடிவு பெறும். வேளச்சேரி குடியிருப்போர் நல சங்கத்தின் கோரிக்கையின்படி, கலுங்கலினின்று உபரி நீர்க் கால்வாய் அமைத்து, அருகில் உள்ள சதுப்பு நிலத்தில் சேர்க்க விட திட்டம் பொதுப்பணித்துறை அதிகாரிகளால் தீட்டப்பட்டு வருகிறது.

* **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அறிக்கையில் 21—3—1986 அன்று உத்தரவு வழங்கப்பட்டது, இன்றும் அந்தப்



பணி முழுமை பெறவில்லை என்பது மாத்திரமல்ல, துவங்கப்பட்ட நிலையிலே இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, வருகின்ற காலம் மழைக்காலமாக இருக்கிற காரணத்தால், விரைந்து அந்தப் பணியை முடித்து வைக்கவும், அதேநேரத்திலே அந்தக் கலுங்கலிலிருந்து உபரி நீர்க் கால்வாய் அமைப்பதாக சொல்லப்பட்டுள்ளது, அதற்கு எவ்வளவு நிதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது, அந்தப் பணி எப்போது துவங்கப்படும் என்பதையும் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டப் பணியை வேகமாக ஆரம்பித்து, முடிக்க வேண்டும் என்ற உணர்வை அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். புதிதாக கலுங்கல் கட்டுவதற்கு முன்பாக தண்ணீர் உள்ள அந்தப் பகுதியிலே கரையை வெட்டவேண்டியதாக இருப்பதால் வளைவாக அந்த மண் அணைப்பை இப்போது அமைத்திருக்கிறார்கள். வேகமாக வேலையைச் செய்ய வேண்டும் என்ற உணர்வை அந்த அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். கால்வாய் வெட்ட வேண்டுமென்று சொன்னாலும், அதற்கு நிரம்பப் பணம் ஆகும் என்பதால், நிதிநிலைமை சீரான பிறகு அந்த வேலையை எடுக்கலாம் என்று வைத்து இருக்கிறோம்.

**(ஒ) இராமநதி நீர்த்தேக்கத்தின் ஆயக்கட்டுகளை விஸ்தரித்தல்.**

**திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "இராமநதி அணையில் வீணாகப் போகும் தண்ணீரை சேர்வைக்காரன்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த கேளையாப்பிள்ளையூர் குளத்திலிருந்து அணைந்த பெருமாள் நாடானூர் ஊராட்சியிலுள்ள அனைத்து மானாவாரிக் குளங்களுக்குக் கால்வாய் வெட்டிக் கொண்டு வந்தால் சுமார் 250 ஏக்கர் நிலம் நிரந்தர பாசன வசதி பெற ஏதுவாவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 22

**அறிக்கை.**

இராமாநதி தாமிரவருணியாற்றின் உபகிளை நதியாகும். இது ஜம்புநதியுடன் சேர்ந்து (ஜம்புநதி சங்கமத்திற்குப்பின் இது வீராநதி என்று அழைக்கப்படுகிறது) பின் கடனா நதியுடன் இணைகிறது. கடனா நதி, தாமிரவருணியுடன் அதன் மூன்றாவது அணைக்கட்டுக்குக் கீழே இணைகிறது. தாமிர வருணியின் மூன்றாவது அணைக்கட்டுக்குக் கீழே உள்ள ஆயக்கட்டு சுமார் 68,000 ஏக்கர், இராமாநதி நீர்த்தேக்கத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டு சுமார் 4500 ஏக்கர்.

இராமாநதி நீர்த்தேக்கத்தின் 4500 ஏக்கர் ஆயக்கட்டுப் பாசனம் போக உபரியாகும் நீர் தாமிரவருணியின் அணைக் கட்டுகள் மூலம் திருப்பிவிடப்பட்டு ஆயக்கட்டுகளின் பாசன வசதிக்கு உபயோகமாவதால், இது வீணாகும் சூழ்நிலை ஏற்படுவது இல்லை.

**திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இராமாநதி சிறிது தூரத்தில் தாமிரவருணிநதியுடன் சேர்ந்தபிறகு கீழே உள்ள சுமார் 68 ஆயிரம் ஏக்கருக்கு பாசன உதவி செய்வதாக அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இராமாநதி நீர்த்தேக்கத்தின் மூலம் சுமார் 4,500 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறுகிறது. இந்த இராமாநதிக்கு பக்கத்திலேயே சேர்வைக் காரன்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த மானாவரி குளங்கள் இருக்கின்ற காரணத்தால் அந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குளங்களுக்கு இந்த இராமாநதித் தண்ணீரை கொடுத்தால் சுமார் 250 ஏக்கர் நிலம் நிரந்தர பாசன வசதி பெறுகிறது. தாமிரவருணிக்குக் கீழே உள்ள 68 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு இந்த இராமாநதித் தண்ணீர் போய்தான் விளையவேண்டு மென்பதில்லை. அதற்கு கடனா நதி, மணிமுத்தாறு, தாமிர வருணி முதலிய அணைகளிலிருந்து ஏராளமான தண்ணீர் வருவதன்மூலம் அந்த ஆயக்கட்டுகளெல்லாம் விளைச்சல் பெறும். ஆகையால், இந்த இராமாநதி பக்கத்திலுள்ள சேர்வைக்காரன் பட்டி ஊராட்சி மானாவரி குளங்களுக்கு இந்த இராமாநதி யிலிருந்து தண்ணீரைக் கொடுக்க அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய ஆசைப்படுகிறேன்.



1987 ஏப்ரல் 22]

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாமிர வருணி அணைக்கட்டுத் திட்டத்திலே மொத்தம் 8 ஆயக்கட்டுகள் இருக்கின்றன. 11 வாய்க்கால்களிலிருந்து தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த இராமாநதி என்பது மூன்றாவது அணைக்கட்டுக்குக் கீழே வந்து இந்த நதி சேர்ந்துகொண்டு இருக்கிறது. பொதுவாக தாமிரவருணியைப் பொறுத்த அளவிற்கு, கடலிலே போய் தண்ணீர் சேருவதில்லை. அவ்வளவு தண்ணீரையும் நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். உபரியாக தாமிரவருணியில் தண்ணீர் இல்லை. இராமாநதி அதனுடைய கிளை நதியாக இருக்கின்ற காரணத்தால் அங்கே அணைக்கட்டு வேண்டுமென்று சொன்னால், தாமிரவருணிக்கு வருகின்ற தண்ணீர் வரத்து குறையும். கீழே இருக்கின்ற ஆயக்கட்டுகள் பாதிக்கும் என்று அதிகாரிகள் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே இதை யோசித்துத்தான் செய்ய முடியும்.

**(ஓ) தமிழக மீனவர்கள் கேரளக் கடற்பகுதியில் மீன் பிடிக்கத் தடை.**

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழக மீனவர்கள் கேரள மாநில கடல் பகுதியில் மீன் பிடிக்கக்கூடாது என்று தடை செய்து கேரள முதல்வர் அறிக்கை வெளியிட்டது தொடர்பாக குமரி மாவட்டத்தில் உள்ள சுமார் 500 மீனவர் குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மீனவர்கள் நவம்பர் முதல் ஏப்ரல் திங்கள் வரை வறட்சி நிலவுகின்ற காலத்தில் வழக்கமாக அண்டை மாநிலமான கேரளாவில் கடலோரப் பகுதிகளில் மீன்பிடித்தொழில் செய்து வருகின்றார்கள். இந்நிலை கேரளாவில் உள்ள மீனவதொழிலாளர்களின் ஒத்துழைப்

[திரு. ப. உ. சண்முகம்] [1987 ஏப்ரல் 22

போதும், அன்போடும் எவ்வித பிரச்சனைகளும் இல்லாமல் பல்லாண்டு காலமாக நடைபெற்று வருகின்றது. ஆனால் 1986-ஆம் ஆண்டில் டிசம்பர் திங்களில் இம்மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் கேரளா மாநிலத்தின் பல கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழிலுக்கு செல்லும்போது, மீன்பிடி சாதனங்களும், பிடித்த மீன்களும் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் மீன்பிடி தொழில் செய்ய விடாமல் தடுத்தல் மற்றும் மீனவர்களை தாக்குதல் போன்ற தீய செயல்களில் ஈடுபட்டு வந்தனர். மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு மற்றும் நஷ்டத்திற்குக் காரணம், 9—12—1986 அன்று மாத்ரு பூமி என்ற கேரள நாளிதழில், கேரள மாநில முதல்வர் அவர்கள் பத்திரிகையாளரிடம் பேட்டி அளிக்கையில், வெளிமாநிலத்தைச் சேர்ந்த மீனவர்கள் எவரும் கேரள மாநில கடற்கரையில் மீன்பிடிக்கவோ அல்லது விற்கவோ கூடாது என்று அறிக்கை விடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளதுதான் என்று 22—12—1986 நாளிட்ட தனது முறையீட்டில் குமரி மாவட்ட மீனவர் நல இயக்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். கேரள முதலமைச்சர் அவர்கள் அளித்த பேட்டி, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த, கோழிக்கோடு மாவட்ட பகுதியில் மட்டும் மீன்பிடி தொழில் செய்துகொண்டிருந்த சுமார் 500 குடும்பத்தினருக்கு தொழில் செய்யமுடியாமல் வறுமையான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

ஆகவே, இது தொடர்பாக கேரள அரசுடன் தொடர்பு கொண்டு ஆணையினை ரத்து செய்து கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் கேரள மாநில கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழில் செய்வதற்கு மற்றும் மீனவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கையினை அரசின் உயர்மட்ட அளவில் மேற்கொள்ளுமாறு வேண்டிக் கொண்டுள்ளனர். இது குறித்து, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளர் மற்றும் மீன் துறை இயக்குநர் அவர்களின் பரிந்துரையை ஏற்று தமிழ்நாடு அரசு, 17—2—1987 நாளிட்ட நேர்முக கடிதத்தில், கேரள மாநிலத்தின் மீன்துறை செயலருக்கு, கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு கேரள மாநிலத்தில் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் இழப்பினை எடுத்துக்காட்டி, கேரள அரசின் ஆணையினை ரத்து செய்து பல ஆண்டுகாலமாக வழக்கமாக மீன்பிடி தொழில் செய்கின்ற கன்னியாகுமரி மாவட்ட



1987 ஏப்ரல் 22] [திரு. ப. உ. சண்முகம்]

மீனவர்களுக்கு, கேரள கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழில் செய்ய அனுமதி அளிக்கும் பொருட்டு விரைவான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழக மீன்துறை இயக்குநர் அவர்களும், கேரள மாநில மீன்துறை இயக்குநருடன் இது குறித்து தொடர்பு கொண்டுள்ளார். இதற்கு பதிலளிக்கையில், கேரள மாநில 'மீன்பிடித்தலை முறைப்படுத்துதல்' சட்டத்தின் கீழ் வெளி மாநிலத்தைச் சேர்ந்த மீனவர்கள் எவரையும் கேரள கடற்கரை பகுதிகளில் மீன்பிடிக்க அனுமதிக்க இயலாது என்றும், கேரள மாநில கடற்கரையில் மீன்பிடிக்க வேண்டுமானால் கேரள மாநில 'மீன்பிடித்தலை முறைப்படுத்தும்' சட்டத்தின் கீழ் படகுகள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும், கேரள மீன்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். இதுபற்றி கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு தக்க அறிவுரை வழங்குமாறு, நாகர்கோவில் மீன்துறை உதவி இயக்குநர் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கவன ஈர்ப்பு கொடுத்த நேரத்திலே அங்கே வேறு அரசாங்கம் இருந்தது. இப்போது மாற்று அரசாங்கம் வந்திருக்கிறது. அந்த அரசாங்கத்திடம் நமது தமிழக மீன்துறை இயக்குநர் அவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தொடர்பு கொண்டார்களா? அதுமாத்திரமல்ல, சுமார் 500 மீனவக் குடும்பங்கள் நம்முடைய தமிழகத்தில், கன்னியா குமரியில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் குறைந்த பட்சம் 5 ஆயிரம் ரூபாய்க்கான போட்டும், வலைகளும் நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நஷ்டத்தை கேரள அரசாங்கத்திடமிருந்து பெற்று நமது மீனவர்களுக்குக் கொடுக்க அரசு முன் வருமா? இல்லையென்றால் நமது அரசாங்கமே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகையாக அந்த 5 ஆயிரம் ரூபாயைக் கொடுக்க முன்வருமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. கேரள அரசில் மீன் பிடித்தல் முறைப்படுத்துதல் என்று ஒரு சட்டத்தை இயற்றி கேரளத்தைச் சேர்ந்தவர்களைத் தவிர வேறு யாரும் கேரளக் கடற்கரையிலே மீன்

பிடிக்க கூடாது என்ற ஒரு சட்டத்தை இயற்றி இருக்கிறார்கள். அதனால்தான் இந்தப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஒரு சட்டம் இயற்றுவது சரியா, முறையா, செல்லுமா என்பதெல்லாம் சட்டத்துறை மூலமாக ஆலோசிக்க வேண்டிய ஒன்று எங்களுக்குத் தெரிந்தமட்டில் அப்படி சட்டம் இயற்றுவது சரியல்ல, செல்லாது என்பதுதான். அந்தந்த மாநிலமே அந்த மாநிலத்தின் எல்லைக்கு உட்பட்டவைகளைத் தனித்தனியாக வைத்துக்கொள்வது என்று சொன்னால் அது மாநிலமாக இருக்காது: தனி நாடாகத்தான் ஆக வேண்டும். கேரளம் தனி நாடு அல்ல. இந்தியாவில் ஒரு மாநிலம். அப்படி ஒரு சட்டம் இயற்றி இருப்பது சரியல்ல என்பது நம்முடைய வாதம். அரசு மாறினாலும், அதனுடைய வாதம் மாறாது. நிச்சயம் அதை அரசு வற்புறுத்தும்.

(முற்பகல் 11-50)

**(ஔ) பழனித் தொகுதி நெய்க்காரப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டுதல்.**

**திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பழனி தொகுதி, நெய்க்காரப் பட்டி பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டும் பணி இதுவரை தொடங்கப்படாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் பின்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

**அறிக்கை.**

அரசின் கொள்கைப்படி ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்குவதற்கு தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்கு 5 ஏக்கர் பரப்பளவுள்ள நிலமும், ரூ. 10,000மும் நன்கொடையும் பொது மக்களிடமிருந்து அரசுக்கு கிடைக்கப் பெறவேண்டும். 1985-86 ஆம் ஆண்டு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 20 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களுள் அண்ணா மாவட்டத்தைச் சார்ந்த நெய்க்காரன் பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார





நிலையம் கட்டுவதற்கு நன்கொடையாக கிடைக்க வேண்டிய 5 ஏக்கர் நிலத்திற்கு பதில் அந்நிலையம் கட்டுவதற்காக 2.80 ஏக்கர் நிலம் மட்டும் இலவசமாக தருவதற்கு திரு. பி. ஆர். குருசாமி நாயக்கர், ரேணுகா உயர் தொடக்கப்பள்ளி தாளாளர் அவர்கள் முன் வந்துள்ளார்கள். நிலத்திற்கு நிலவும் உயர்நிலை, சூழ்நிலை இவற்றை உத்தேசித்து, அங்கு இப்பொழுது கிடைக்கப் பெற்ற 2.80 ஏக்கர் நிலத்திலேயே செங்குத்தான வடிவமைப்புக் கொண்ட பல மாடிக் கட்டடங்கள் கட்டலாம் என்று பரிந்துரைத்து ஒரு செயற்குறிப்பு ஆரம்ப சுகாதார இயக்குநர் அவர்களிடமிருந்து ஏப்ரல் 1987-ல் அரசுக்கு வரப்பெற்று, அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

அரசின் கொள்கைப்படி பொது மக்களிடமிருந்து ரூ. 10,000 நன்கொடையாக கிடைக்கப் பெறவேண்டிய தொகை இன்னும் பெறப்படவில்லை. இந்த நன்கொடை தொகை கிடைக்கப் பெற்றதும் வருகின்ற ஆண்டுகளில் நிதி வசதியைப் பொறுத்து பழனி தொகுதி நெய்க்காரன்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ஏக்கர் நிலமும் 10 ஆயிரம் ரூபாயும் அரசுக்கு கொடுக்க வேண்டும் என்பது அரசினுடைய கொள்கை. அதை நாங்களும் அறிந்து இருக்கிறோம். ஆகவேதான் இந்த ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டி குருசாமி நாயக்கர் என்பவர் 2 ஏக்கர் 80 சென்ட் நிலத்தையும் அதற்கான 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும் அமைச்சருடைய கரங்களில் அன்றைக்குக் கொடுத்து அவர்களும் அமைச்சரோடு இருந்து போட்டா எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவரையும் அமைச்சர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். எனவே பணம் 10 ஆயிரம் வரவில்லை என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டு இருக்கிறது. இது உண்மையா? இது மிகவும் அதிர்ச்சி தரக்கூடிய விஷயமாக இருக்கிறது. இது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் கொடுக்கப் பட்டுள்ள குறிப்பில் பணம் வரவில்லை என்று இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதை வைத்துக் கொண்டு விசாரித்துச் சொல்லுகிறேன். தவறு இருந்தால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

(அஅ) நாகை மருத்துவமனைக்குப் புதிய நோயாளி ஊர்தி.

**மாண்மிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் கோ. வீரய்யன் மற்றும் எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், நாகை மருத்துவ மனையில் 5—5—1983 முதல் ஆம்புலன்ஸ் இல்லாததால் அப்பகுதியில் திடீர் பாதிப்புகள் ஏற்படும் போது பாதிக்கப் பட்டவர்களை மருத்துவமனைக்கு கொண்டு வருவதற்கு ஏற்படும் இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்மிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழத் தக்க அளவுக்கு பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

## அறிக்கை.

தஞ்சை மாவட்டம், நாகப்பட்டினம் அரசு தலைமையிட மருத்துவமனையிலிருந்து ஒரு பழைய ஊர்திக்கு பதிலாக, ஒரு புதிய ஊர்தி தமிழ்நாடு சுகாதாரப் போக்குவரத்து துறை இயக்குநரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த புதிய நோயாளி ஊர்தி தஞ்சாவூர் மாவட்ட காசநோய் அலுவலர் மூலமாக மாவட்ட மருத்துவ அலுவலர் நாகப்பட்டினத்திற்கு கொடுக்கப்படுகிறது. மேலும், "விபத்து மற்றும் அவசர சிகிச்சை பணியின்" கீழ் நாகப்பட்டிணம் அரசு தலைமையிட மருத்துவமனைக்கு இரு நோயாளி ஊர்திகள் ( **Ambulance vans)** வாங்கவும், எரிபொருள், பராமரிப்பு, மருந்து போன்ற



செலவினங்களுக்கு நிதி ஒப்பளிப்பும் சமீபத்தில் வழங்கப் பட்டுள்ளது. மற்றும் ஓட்டுநர், செவிலியர் போன்ற பணியிடங்கள் ஏற்படுத்தவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி இரு நோயாளி ஊர்திகள் போக்குவரத்து ஆணையர் மூலமாக வாங்கப்பட உள்ளன.

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிக்கையை நான் படித்தேன். அறிக்கையில் இருப்பதை விட மகிழத் தக்க அளவுக்கு நிகழ்ச்சிகள் நடந்து இருக்கின்றன. அறிக்கையை நேற்று இரவு கொடுக்கும்போது கூட அதை சரி பார்த்துக் கொடுக்காமல் அதிகாரிகள் கொடுத்து இருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். மேற்படி இரு நோயாளி ஊர்திகள் போக்குவரத்து ஆணையர் மூலமாக வாங்கப்பட உள்ளன என்று இருக்கிறது. இரண்டு ஊர்திகள் நாகை மருத்துவமனையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டு இருக்கின்றன. அதற்கான அந்த பராமரிப்பு, எரிபொருள் வாங்குவதற்கான உத்தரவுகள் இன்னும் பிறப்பிக்கப்படாததால் தான் அது பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது. உதாரணமாக ஒன்று சொல்ல வேண்டுமானால் ஒரு சங்கடம் ஏற்பட்டது. ஒரு பொது விபத்து ஏற்பட்டு மார்ச் மாதம் 6 ஆம் தேதி அன்று தீ அணைப்பு நிலையத்திலிருந்து ஆம்புலன்ஸ் கொண்டு வந்து அந்த நோயாளிகளைக் கொண்டு வரும் நிலை ஏற்படும்போது அந்த தீ அணைப்பு நிலைய அதிகாரிகள் அந்த நோயாளிகளிடம் 60 ரூபாய் கட்டணம் வசூல் செய்து விட்டு கொடுத்து இருக்கிறார்கள். ஒரு நோயாளியை மருத்துவ மனைக்கு கொண்டு போவதற்கு அந்த தீ அணைப்பு நிலையம் 60 ரூபாய் கட்டணம் வசூல் செய்து இருக்கிறது. அது திரும்ப அந்த ஏழை மக்களுக்கு கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது பற்றிய விவரங்களை எழுதித் தருவார்களானால், அரசு பரிசீலிக்கும். வாகனங்கள் எல்லாம் வாங்கப்பட்டு விட்டன என்பது அரசுக்குத் தெரியும். அதை திருத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[1987 ஏப்ரல் 22

## (ஆஆ) திருவொற்றியூர் தொகுதியில் கடல் அரிப்பால் குப்பங்கள் பாதிப்பு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு திரு. ஜி. கே. ஜெ. பாரதி அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் இருக்கையில் இல்லாததால் திருமதி டி. யசோதா அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருவொற்றியூர் தொகுதியைச் சேர்ந்த பல குப்பங்கள் கடல் அரிப்பால் பாதித்துள்ளது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

திருவொற்றியூர் தொகுதியில் நல்ல தண்ணீர் ஓடைக் குப்பத்திலிருந்து நெட்டுக்குப்பம் வரை 16 கிலோ மீட்டர் தூரத்தில் சில பகுதிகளில் கடலரிப்பு ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ள கீழ்க்கண்ட குப்பங்களும் இதில் அடங்கியுள்ளன:

1. அப்பர் குப்பம்
2. திருவொற்றியூர் குப்பம்
3. பலகைத் தொட்டி குப்பம்
4. காசி விசுவநாதர் கோயில் குப்பம்
5. விசாலாட்சிபுரம்
3. பலகைத்தொட்டி குப்பம்
7. இந்திராகாந்தி குப்பம்
8. எர்ணாவூர் குப்பம்
9. சின்ன குப்பம்
10. பெரிய குப்பம்.

மேலே கூறப்பட்டுள்ள குப்பங்களில் ஒன்றான பலகைத் தொட்டிக் குப்பம் அமைந்துள்ள, 3,120 மீட்டர் முதல் 4,120 மீட்டர் தூரத்திற்கு ஏற்கனவே கடலரிப்பு தடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்பர் குப்பம், திருவொற்றியூர்





குப்பம், காசி விசுவநாதர் கோயில் குப்பம், விசாலாட்சிபுரம் ஆகிய நான்கு குப்பங்களில் கடலரிப்பு பணிக்கான மதிப்பீடுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

2. பெரிய காசிகோயில் குப்பம், இந்திராகாந்தி குப்பம், எர்ணாவூர் குப்பம், சின்ன குப்பம் மற்றும் பெரிய குப்பம் அமைந்துள்ள பகுதிகளில் கடலரிப்பு ஏதுமில்லை.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதில் நீங்கள் கேள்வி கேட்க முடியாது. அடுத்த உறுப்பினருடைய கவன ஈர்ப்பை மூவ் செய்தால் கேள்வி கேட்க முடியாது. முறையை மாற்றினால் தொடர்ந்து அது பாதிக்கும் (குறுக்கீடு) அப்படி ஒரு கன்வென்ஷனாக நாம் வைத்து இருக்கிறோம். வேறு ஒன்றும் இல்லை. அதை மாற்றினால் இன்றைக்கே கேட்பார்கள், ஏன் அவர்களுக்கு கொடுத்தீர்கள், எங்களுக்கும் கொடுங்கள் என்று கேட்பார்கள்.

**திருமதி டி. யசோதா:** எங்களிடம்தான் இந்த நடைமுறையைப்பற்றி எல்லாம் பேசுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படி இல்லை. உங்களுக்காக மட்டும் நடைமுறையை மாற்றிக்கொள்ள முடியாது. நீங்கள்தான் நடைமுறையை மீற முயற்சிக்கிறீர்கள். அதனால்தான் இப்படிச் சொல்ல வேண்டியிருக்கிறது.

## (இஇ) அடையாறு ஆற்றின் கரையோரத்து மக்களுக்கு மாற்று இருப்பிடம் அளிக்க நடவடிக்கை.

***திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்தபடி அடையாறு ஆற்றின் கரையோர மக்களுக்கு மேடான பகுதிகளில் மாற்று இடம் கொடுக்க, குடிசை மாற்று வாரியம் அறநிலையத் துறைக்கு சொந்தமான இடத்தில் ஏற்கனவே பெற்ற அனுமதியின் பேரில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் பாதியிலேயே அறநிலையத் துறை தடை ஆணை பிறப்பித்தக் காரணத்தினால் ஏற்பட்டுள்ள நிலை

"குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை.

மேற்படி கவன ஈர்ப்பு தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள வேளச்சேரி அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான ச. எண் 21-ல் சுமார் 1.25 ஏக்கர் நிலத்தையும் வேளச்சேரி அருள்மிகு யோகநரசிம்ம சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான ச. எண் 252-ல் உள்ள சுமார் 60 செண்ட் நிலத்தையும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் தனது உபயோகத்திற்காக கேட்டு வந்தது. அத்துடன் கோட்டூர் அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயிலைச் சேர்ந்த 2.04 ஏக்கர் நிலத்தையும், மேட்டுப்பாளையம் அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயிலின் 17 கிரவுண்டு நிலத்தையும் குடிசை மாற்று வாரியம் கேட்டது. இதுபற்றி நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் இந்த நிலங்கள் மிக மதிப்பு வாய்ந்த காலி மனைகள் என்றும், மனை ஒன்றுக்கு ரூபாய் ஒரு லட்சத்திற்கு மதிப்புள்ளவை என்றும், குடிசை மாற்று வாரியத்திடம் எடுத்துச் சொல்லப்பட்டது. பின்னர் இது குறித்து சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் முன்பாக 3—11—1986-ல் நடைபெற்ற கூட்டத்தில் இந்த திருக்கோயில் நிலங்கள் மனை ஒன்றுக்கு ரூ. 20,000 லிருந்து ரூ. 1,00,000 வரையில் மதிப்புடையவை என்பதை அறநிலையத் துறை சுட்டிக்காட்டி, குடிசை மாற்று வாரியம் இந்தத் தொகையை தருவதற்கு தயாராக இருந்தாலொழிய திருக்கோயில்களின் இந்த நிலங்களை தருவதற்கு விருப்பமில்லை என்று மேலும் சுட்டிக்காட்டி, இந்த நிலங்களை கையகப்படுத்த நில ஆர்ஜித நடவடிக்கையைத்தான் மேற்கொள்ள வேண்டும் என்றார். இதை விடுத்து அவர்களின் ஒப்புதலைப் பெற்றோ அல்லது வேறு விதமாகவோ இந்த நிலங்களை கையகப்படுத்த முயல்வது தவறானது என்று குடிசை





மாற்று வாரியத்திற்கு தெரிவிக்கப்பட்டது. இப்படியிருந்தும் இந்து சமய அறநிலையத் துறையின் அனுமதி பெறாமலும், திருக்கோயிலின் அனுமதியின்றியும், அரசு அனுமதியின்றியும், குடிசை மாற்று வாரியம், வேளச்சேரி அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு யோகநரசிம்ம சுவாமி திருக்கோயில் நிலங்களில் புகுந்து சாலைகள் அமைத்தும் மற்றும் பல வேலைகளை தன்னிச்சையாக செய்வதாக தெரிந்ததின் பேரில் இந்த திருக்கோயில்களின் நலன்களை காப்பாற்றுவதற்காக இதைத் தடுத்து நிறுத்த தகுந்த நடவடிக்கை எடுக்க செயல் அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டது. அவரும் ஓ.எஸ். எண் 1554/87 என்ற வழக்கினை சிட்டி சிவில் கோர்ட்டில் தாக்கல் செய்து அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலை பொறுத்தவரை ஐ. ஏ. எண் 3903/87 என்ற விண்ணப்பத்திலும், அருள்மிகு யோக நரசிம்ம சுவாமி திருக்கோயிலை பொறுத்தவரை ஐ. ஏ. எண் 3902/87 என்ற விண்ணப்பத்திலும் குடிசை மாற்று வாரியத்தின் மீது தடை உத்தரவுகள் பெற்று இருக்கிறார். இந்த தடை உத்தரவுகள் குடிசை மாற்று வாரியத்திற்கு சார்பு செய்யப்பட்டுள்ளன.

மேலும், சென்னை நகரில் இருக்கிற பல கோயில்களுக்குச் சொந்தமான குடிசைப் பகுதிகளை தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் எடுத்துக் கொண்டுள்ளது. இதில் மனை ஒன்றுக்கு ரூ. 7,000 வீதம் விலை நிர்ணயம் செய்து அரசாணை எண். 337, நாள் 18—5—1981-ல் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், நீண்ட நாட்களாக ஈட்டுத் தொகை பெறப்படாமல் நிலுவையில் இருப்பதால், பல திருக்கோயில்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய ஈட்டுத் தொகையான ரூ 7,000 மிகக் குறைந்த விலை என்று முறையீடுகள் வந்துள்ள நிலையிலும், இது ஒரு அரசின் கொள்கைத் திட்டம் என்பதால் உடனடியாக தீர்வு காண வேண்டுமென்று கருதி அரசு நிர்ணயித்துள்ள ஈட்டுத் தொகை ரூ. 7,000த்தையாவது நிர்ணயித்து உடன் செலுத்துமாறு குடிசை மாற்று வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், இந்து சமய அறநிலையத் துறைக்கு, குடிசை மாற்று வாரியத்திடமிருந்து சென்னை நகரிலுள்ள 15 திருக்கோயில்களுக்கு மட்டும் ரூ. 33,06,828.70 கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. ஆனால், இது சம்பந்தமான நிலங்களை

குடிசை மாற்று வாரியம் 1970-71 ஆம் ஆண்டிலேயே அனுபோகம் செய்து கொண்டு விட்டது. இந்த 15 ஆண்டுகளில், 33 லட்சத்தை வங்கிகளில் முதலீடு செய்திருந்தால் குறைந்தது மூன்று மடங்கு தொகையாவது ஆகியிருக்கும். இந்த நிலையில், திருக்கோயில் நிலங்களில் குடிசை மாற்று வாரியம் பிரவேசிக்க முயன்றதினால் கோயில் நிர்வாகம் மேற்படி வாரியத்தின் மீது வழக்கு தொடர்ந்து தடை உத்திரவு பெற்றுள்ளது. எனினும் மேற்படி நிலை பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து பேசி ஆலயத்திற்கு சேர வேண்டிய பணத்தை வாரியம் அளித்த பின்னர் நிலத்தை வாரியத்திடம் ஆலயங்கள் ஒப்படை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரங்களில் மாறுபாடுகள் உள்ளன. வீட்டு வசதி வாரியமோ, அல்லது குடிசைப் பகுதி மாற்று வாரியமோ, சென்னை நகரத்திற்குள்ளேயோ அல்லது வெளியேயோ நிலத்தைக் கையகப்படுத்த வேண்டுமென்று சொன்னால், ரூ. 7,000 என்றுதான் அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. அதை அதிகரிக்கவோ, குறைக்கவோ இந்த வாரியங்களுக்கு அதிகாரம் கிடையாது. அப்படி இருக்கையில், அறநிலையத் துறை ஏற்கனவே பல இடங்களை வழங்கியிருக்கிறது. வழங்கி யிருக்கின்ற இடங்களுக்கு ரூ. 7,000 என்று நிர்ணயித்து இருக்கிறபோது, இப்போது எடுத்திருக்கின்ற அந்த இடத்திற்கு ரூ. 20,000 என்றும் ரூ. 1 இலட்சம் என்றும் மதிப்பீடு என்று விவர அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அது பத்திரப் பதிவுத் துறையை வைத்து செய்கிறார்களா அல்லது வெளி மார்க்கெட்டிலே உள்ள நிலையை வைத்து முடிவு செய்கிறார்களா என்றும் தெரியவில்லை. இருந்தாலும் இது மக்கள் பிரச்சினையாக இருப்பதனாலே தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டு நடக்கும் பணி இது. ஏற்கெனவே இருந்த அறநிலையத் துறை அமைச்சர் அவர்களோடும், அதிகாரி களோடும், முன்னாலே இருந்த வாரியங்களின் தலைவர்களோடும் நேரடியாகப் பேசி, செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்திலே பாதி யிலே தடை வாங்கி இன்றைக்கு வேலைகளை நிறுத்தியிருக் கிறார்கள். காலதாமதம் ஏற்படுவதால் இந்த வேலைகளின்



மதிப்பீடும் அதிகமாகும். பொது மக்களும் அடையாறு ஆற்றில் வெள்ளம் வரும்போது அந்த அபாயத்திற்கு ஆட்படுவார்கள். எனவே அந்த மக்களை மாற்று இடத்தில் குடியமர்த்த. இந்தத் திட்டம் விரைந்து நடைபெற, தடையாணை வாங்கியிருக்கின்ற அறநிலையத் துறை, உடனடியாக அந்தத் தடையாணையை ரத்து செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனை ஒன்றுக்கு ரூ. 7,000 என்பது, விலை நிர்ணயம் செய்த அரசாணை எண். 337, நாள் 18—5—1981-படி கோயில் நிலங்களில் ஏற்கனவே ஆக்கிரமித்திருக்கின்ற நிலங்களைப் பொறுத்து, அந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆக்கிரமிப்பே இல்லாத நிலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற பிரச்சினை இருக்கிறது. அந்த நிலப் பிரச்சனையில், மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்த் துறை நிர்ணயிக்கிற விலைக்கு அறநிலையத் துறை ஒத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, ஒரு கூட்டு ஆலோசனைக் கூட்டம், குடிசைப் பகுதி மாற்று வாரியம், அறநிலையத் துறை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைய கூட்டம் கூட்டப்பட்டு, அதற்கு ஒரு பரிகாரம் கண்டு, விரைவில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணை நிறைவேற்றப்பட்டு, அதற்கான தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவு.

### கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

[1987 ஏப்ரல் 22

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. வரவுசெலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண். 1—நிலவரித் துறை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 20,12,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் சுமார் 10 ஆண்டுகளாக இயற்கை பாதிப்பால் குத்தகை விவசாயிகள் குத்தகை பாக்கிகளைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ளபோது ரெவின்யூ கோர்ட்களைத் திறந்து, நில வெளியேற்றம் செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 20,12,54,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பல்லடம் வட்டம், நல்லூர் கிராமம் பெரிச்சிபாளையம் க.ச. 736/1 எதி, 3.10 ஏக்கர் உபரி நிலத்தில் ஏழு ஆண்டு காலமாகக் குடியிருந்து வரும் 177 ஏழைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு பட்டா வழங்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 20,12,54,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



1987 ஏப்ரல் 22]

Thiru M. SUNDARADAS : Sir, To discuss the need to appoint Ex-Village Officers as Village Administrative Officers in the State ', move that—

"the allotment of Rs. 20,12,54,000 under Demand No. 1—Land Revenue Department be reduced by Rs. 100".

கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 41,61,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

(நண்பகல் 12-00)

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தில் பணியாற்றுவோர்கள் ஒரு ஆண்டுக்கு மேலாக 13 பேர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்திருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,61,17,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தில் இருந்து அரசு அச்சகத்திற்குச் செய்தி எடுத்துப் போகக் கூடியவர்களுக்கு வாகன வசதி ஏற்படுத்திக் கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,61,17,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1987 ஏப்ரல் 22

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள், உறுப்பினர்களின் கடிதங்கட்கு பதில் கடிதங்கள் அனுப்புவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,61,17,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 50,71,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழத் தஞ்சை மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தை மேலத் தஞ்சையில் நடத்துவதைத் தவிர்த்து கீழத் தஞ்சையிலேயே நடத்துவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 50,71,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

**திரு. எஸ். ரெத்தினராஜ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வருவாய்க் கிராமங்கள் எல்லாம் மிகப் பெரிதாக இருப்பதால் நிர்வாக வசதிக்காக எல்லா வருவாய் கிராமங்களையும் இரண்டாகப் பிரிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 50,71,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



1987 ஏப்ரல் 22]

(ஈ) கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 59,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 59,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. சோ. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 59,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. ஜே. முகம்மது கனி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் அரவம்பட்டி என்ற ஊரில் அம்பலகாரத் தெரு தாழ்வாகவும் காட்டுவாரி உயர்வாகவும் இருப்பதால் வெள்ளம் ஊருக்குள் புகும் அபாயத்தை நீக்க தடுப்புச் சுவர் கட்டுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின், கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 59,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1987 ஏப்ரல் 22

(உ) கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 30,62,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இயற்கை பாதிப்பால் புயல், வெள்ளம், தீ போன்றவைகளால் வீடுகளையும் பொருட்களையும் இழப்பவர்களுக்கு இப்போது விட்டிற்கான ரூ. 300 கொடுப்பதை ரூ. 500 ஆக உயர்த்தித் தர வேண்டும் என்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 30,62,07,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீயினால் முழுவதும் எரிந்துவிட்ட வீடுகளுக்கு ரூபாய் 500 வீதம் உதவித் தொகை வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 30,62,07,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.



1987 ஏப்ரல் 22]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் பற்றிய விளக்கமான விளக்கக் குறிப்புகள்** அவை உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கிறது. அவற்றையெல்லாம் இந்த அவையிலே உரையாக நிகழ்த்தப் பெற்றனவாக ஏற்றுக் கொண்டு அவைக் குறிப்பிலே சேர்த்து விவாதத்தைத் தொடங்கும்படியாக கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதற்குப் பிறகு இறுதி உரையாற்றுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் ஒரு மணிக்கு முடிவு அடைந்து பேரவை மாலை 4 மணிக்கு மீண்டும் கூடும்.

***திரு. மு. இராசாங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலவரித் துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் குறித்த மானியக் கோரிக்கைகளின் மீது நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழக அரசு 1985 ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது என்று அறிவிப்பு செய்திருக்கிறது. அதேபோல 1986 ஆம் ஆண்டு வறட்சியாலும், இந்த ஆண்டு தொடர்ந்து வறட்சியாலும் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே கிராமப்புறத்தில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பல்வேறு சலுகைகளும், அரசுக்கு வரக்கூடிய பல்வேறு கடன்களை ஒத்திவைத்தும் அறிவிப்பு செய்திருக்கிறது. அரசு அலுவலர்களுக்கு பல்வேறு நிவாரணங்களையும், கடன் தொகையையும் உதவி செய்திருக்கிறது. ஆனாலும் கூட ஒத்தி வைத்த நில வரி, இந்த ஆண்டு கட்டாயமாக வசூல் செய்யப்படுகின்றது. குறிப்பாக நான் சார்ந்திருக்கின்ற தஞ்சை மாவட்டத்திலே இந்த ஆண்டு கடுமையாக நிலவரி வசூல் செய்யப்பட்டு இருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக ஒத்தி

** 853—952 ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

[திரு. மு. இராசாங்கம்] [1987 ஏப்ரல் 22

வைக்கப்பட்டுள்ள நிலவரியை இந்த ஆண்டு சட்டாயப்படுத்தி, ஒரே ஆண்டிலே திருப்பிச் செலுத்த வேண்டும் என்று வசூலிக்கப் பட்டிருக்கிறது. குறிப்பாக இப்போது கூட கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகளுடைய நிலங்களிலே சிவப்புக் கொடி நட்டு, வசூலிப்பதன் காரணமாக அவர்கள் சர்க்கரை ஆலையிலே கரும்பு வெட்டுகின்ற உத்தரவைப் பெற்றாலும் கூட, கரும்பை வெட்ட முடியாத நிலையிலே இருக்கிறார்கள். அதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப் பட்டிருக்கின்றேன். ஆனால், அதே நேரத்தில் என்னுடைய தொகுதியிலே பல்வேறு கோயில்களும், மடங்களும் இருக்கின்ற காரணத்தால் அவர்கள்—அரசு ஒத்தி வைத்த ஆண்டுகளிலே நஞ்சை நிலக் குத்தகை அவர்களுக்கு வசூல் ஆகவில்லை. அதனால், அந்த ஆண்டுகளில் நிலவரி கட்ட முடியாது என்று உச்ச நீதிமன்றத்திலே தடை வாங்கியுள்ளார்கள்.

அதன் காரணமாக, அரசிற்கு வர வேண்டிய நில வரியை வசூல் செய்ய முடியாத நிலையில் இருக்கிறது. அரசு வசூலிக்க முடியாத ஒரு நிலை இருக்கிற காரணத்தால் ஊராட்சி மன்றங்களுக்கும் ஊராட்சிகளுக்கும் கிடைக்கக்கூடிய 'செஸ்' கிடைக்கவில்லை. ஊராட்சி மன்றம் மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்கள் தடைபட்டு, ஊராட்சி மன்றங்கள் இயங்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகவே, இந்த மடங்களும், கோயில்களும், உச்ச நீதிமன்றத்திலே வாங்கியுள்ள தடையை நீக்குவதற்கு அரசு உரிய முயற்சியை மேற்கொண்டு, குறிப்பிட்ட தொகையை வசூல் ஆவதற்கான முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், ஒத்தி வைத்த நில வரியை தாங்கள் எந்தெந்த ஆண்டுகளிலே நீக்கமுடியும் என்பதைப் பரிசீலித்து அவர்களுக்கு நிலவரி வஜா செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நில அளவைப் பொறுத்தவரையில், தஞ்சை மாவட்டத்திலே நிலப் பட்டா புத்தகம் முன்பு கொடுப்பதாக அறிவிக்கப் பட்டது. ஆனால் என்ன காரணத்தினாலோ, பெரும்பான்மையான விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அந்த நிலப்பட்டா புத்தகம் கிடைக்கவில்லை. பழைய கிராம அதிகாரிகள் நீக்கப் பட்டு, பின்னாலே கிராம நிர்வாக அலுவலர்கள் அவர்களுடைய



1987 ஏப்ரல் 22] [திரு. மு. இராசாங்கம்]

தலைமையின் கீழே கிராமங்கள் உட்படுத்தப்பட்டபோது, பழைய கிராம அதிகாரிகள், புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அதிகாரிகளுக்கு, உரிய கணக்குகளைக் கொடுக்காததன் காரணமாக அவர்கள் நில வரிக் கணக்குகளை நிலச் சொந்தக் காரர்களுக்குக் கொடுக்கும்போது சரியான கணக்குகளைக் கொடுக்க முடிவதில்லை. சரியான கணக்குகள் கொடுக்க முடியாததன் காரணமாகவும், தற்போதுள்ள கிராம அதிகாரிகளின் நிர்ப்பந்தத்தின் காரணமாகவும், அவர்கள் தங்களுடைய மனசாட்சிக்கு விரோதமாக கேட்கின்ற தொகையை இன்று கொடுக்கின்ற ஒரு நிலை இருக்கின்றது. ஆகவே, அரசு பரிசீலித்து—அரசினுடைய கொள்கைக் குறிப்பிலே நில உரிமைப் பதிவேடு வழங்கல் திட்டம் என்று திட்டத்தை அறிவித்திருக் கிறது. அதை விரைவிலே செயல்படுத்தி, எல்லா நிலச் சொந்தக் காரர்களுக்கும் அவர்களுக்குரிய நிலமும், செலுத்த வேண்டிய வரியும் குறிப்பிட்டு விரைவிலே கொடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்திலே உள்ள திருவிடைமருதூர் தாலுகா, கும்பகோணத்திலிருந்து கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் பிரிக்கப்பட்டது. துணை வட்டாட்சியர் அலுவலகமாக இருந்த அதே கட்டிடத்தில், அதே இடத்தில் இன்று வட்டாட்சியர் அலுவலகம் இயங்குகின்ற காரணத்தால், அங்கேயுள்ள அலுவலர்களுக்கு இட நெருக்கடி இருக்கின்றது. ஆனால் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் வட்டாசியர் அலுவலகம் கட்டுவதற்கு இடம் ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் என்ன காரணத்தாலோ, அதை நடைமுறைப் படுத்த முடியாத நிலையில் இருக்கிறது. அங்கே உள்ள கிளைச் சிறைச்சாலையில் தாலுகா அலுவலகங்களுடைய ஒரு பகுதி இயங்கிக் கொண்டிருக் கிறது. கிளைச் சிறைச்சாலை கடந்த 5 ஆண்டுக் காலமாக இயங்கவில்லை. ஆகவே, அந்த வட்டாட்சியர் அலுவலகத்தைக் விரிவுபடுத்தி உரிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணத்திலிருந்து திருவிடைமருதூர் தாலுகா பிரிக்கப் பட்ட பின்பு, கும்பகோணம் தாலுகாவிலிருந்து பலவிதமான நிலக்கணக்குகள் திருவிடைமருதூர் தாலுகாவிற்கு வந்து

[திரு. மு. இராசாங்கம்] [1987 ஏப்ரல் 22

சேரவில்லை. திருவிடைமருதூர் வட்டாட்சியரிடம் இராமத்திலுள்ள விவசாயிகள் பல கணக்குகளைக் கேட்கும்போது, அவர்கள் கும்பகோணத்திலேயே இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆகவே, அந்தக் கணக்குகளையும் திருவிடைமருதூர் தாலுகாவிற்குக் கிடைப்பதற்கான வகையில் அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பிரிப்பது பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று தெரிய வருகிறது. ஆனால் அதே நேரத்தில், இன்றைக்குத் தஞ்சை மாவட்டம் இரண்டு பகுதிகளாக —கிழக்கு, மேற்கு என்ற வகையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றது. இரண்டு மாவட்டங்களிலும் இரண்டு கல்வி மாவட்ட அலுவலகங்களும், காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகமும், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகளும் இருக்கிறார்கள். அதையெல்லாம் காரணமாகக் கொண்டு தஞ்சை மாவட்டமானது தஞ்சைக் கோட்டம், பட்டுக்கோட்டைக் கோட்டம், நாகப்பட்டினம் கோட்டம், மன்னார்குடி கோட்டம், மயிலாடுதுறைக் கோட்டம், கும்பகோணம் கோட்டம் என்றிருக்கிறது. இதைப் பரிசீலித்து, வர இருக்கிற ஆண்டுகளில் நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் கும்பகோணத்தில்தான் பிறந்து வளர்ந்தார் என்பதை நினைவில் இருத்தி, கும்பகோணத்தை மற்றொரு மாவட்டத் தலைநகராக ஆக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

அடுத்து, மாவட்ட நிர்வாக அலுவலர்களைப்பற்றி ஒரு சில கருத்துக்களைக்கூற விரும்புகிறேன். கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய்த் துறை சம்பந்தப்பட்ட அலுவலர்களைக் கவனிப்பதோடு, கிராமங்களில் அன்றாடம் ஏற்படக் கூடிய பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியும் தலையிட்டு, தீர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆனால், பெருவாரியான கிராம நிர்வாக அலுவலர்கள் அந்தந்தக் கிராமங்களிலேயே இருக்க முடிவதில்லை. காரணம் அவர்கள் வேறு தாலுக்காக்களில்தான் பணியாற்ற வேண்டும் என்று அரசு விதி இருப்பதால், அவர்கள் பல நேரங்களில் அந்த கிராம அலுவல்களைக் கவனிப்பதற்குக் கிராமங்களில் இருப்பதில்லை.



1987 ஏப்ரல் 22] [திரு. மு. இராசாங்கம்]

குறிப்பாக எனக்குப் பக்கத்துத் தொகுதியான கும்பகோணம் தொகுதியில் நடந்த 18 ஆம் தேதி இரவு சில சமூக விரோதிகளால் நாச்சியார்கோயில் கடைத் தெருவில் ஒரு கலவரம் ஏற்படுத்தப்பட்டது. அந்தக் கலவரத்தைக் குறித்து வட்டாட்சியர் அல்லது கோட்டாட்சியர் ஆகியோர்க்குத் தெரிவிக்கவும், நாச்சியார்கோயில் வருவாய்த் துறை அதிகாரியும், கிராம நிர்வாக அலுவலரும் அங்கே ஸ்தலத்தில் இல்லாத காரணத்தால், அந்தத் தொகுதியின் உறுப்பினர் திரு. கே. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், நானும் சென்றுதான் வருவாய்த் துறையின் வட்டாட்சி அதிகாரியிடம் தெரிவித்தோம். அதற்குப் பிறகு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்தோடு கூடிய வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை இங்கே வைப்பதோடு, கிராம நிர்வாக அலுவலர்கள் எல்லாம் அவரவர்களின் தாலுக்காக்களிலேயே பணியாற்றுகிற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். மேலும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கான பதவி இடங்கள் 195 காலியாக இருப்பதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்னதாக இங்கே அவையில் குறிப்பிட்டார்கள். ஆனால், தேர்வாணைக் குழு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 382 பேர்களுக்கும் பயிற்சி அளித்து, அவ்வாறு காலியாக உள்ள இடங்களை நிரப்ப வேண்டுமென்றும், பாக்கி உள்ளவர்களுக்கும் பணி நிச்சயமாகக் கொடுக்கப்படும் என்ற உறுதியையும், அரசு இங்கே தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பகுதி நேர கிராம ஊழியர்கள், கிராமக் காவலர்கள், கிராமப் பணியாளர்கள் ஆகியோர்கள் கிராமங்களில் அன்றாடம் ஏற்படுகிற பிரச்சினைகளிலும், சமுதாயத்தில் ஏற்படுகிற சின்னச் சின்ன கலவரங்கள் மற்றும் பிரச்சினைகளைப்பற்றி உரிய நேரத்தில் அறிந்து, உரிய அதிகாரிகளுக்குத் தெரிவிக்கிற வகையில், முழு நேரமும் கிராமங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு ரூ. 310 மட்டுமே ஊதியமாகக் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கும் அரசு ஊழியருக்கு அளிக்கிற மற்ற பல்வேறு சலுகைகளையும் அளிக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளு

[திரு. மு. இராசாங்கம்] [1987 ஏப்ரல் 22

வதோடு, அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பும் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் அவர்கள் எல்லாம் கிராமங்களிலிருந்து வட்டாட்சியர் அலுவலகத்திற்கும், வருவாய்த்துறை அதிகாரிகளையும் சந்திக்கச் சென்று, அவர் தனிடத்தில் கிராமங்களில் உள்ள நிலைமைகளைத் தெரிவிக்க வேண்டியிருப்பதால், அவர்களுக்கு அரசு சைக்கிள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திங்கள்தோறும், காலையில் குறை தீர்க்கும் நாள் என்று மக்களிடையே மனுக்களைப் பெற்று, குறைகளை முடிந்த அளவு தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போல் கோட்டாட்சித் தலைவர்களும், வட்டாட்சித் தலைவர்களும் மனுக்களைப் பெற்றாலும்கூட, வட்டாட்சியர்கள் பெற்ற மனுக்கள்மீது உரிய பதில் இல்லாததால், மக்கள் அடிக்கடி வட்டாட்சியர்களைச் சந்தித்து, திரும்பத் திரும்ப மனு கொடுக்கும் நிலை இருக்கிறது. அரசின் கொள்கைக் குறிப்பில் மனுக்கள் கொடுப்பவர்களுக்கு வெள்ளை நிற அட்டையும், பின்னால் இளஞ்சிவப்பு நிற அட்டையும் கொடுத்து விரைவில் மனுக்களை பரிசீலிக்க, அரசு ஆணை பிறப்பிக்க இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை அளித்தல்) சட்டம், 1971 என்று ஒரு சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். இதைக் குறித்து, நான் ஒன்றை அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். எங்கள் பகுதியில் நான் முன்பே குறிப்பிட்டபடி கோயில்கள் மிக அதிகமாக இருப்பதால், பல ஆயிரக்கணக்கான குடியிருப்பு தாரர்கள் அந்தக் கோயில் நிலங்களில் குடி இருந்து கொண்டிருக் கிறார்கள். அவர்கள் பட்டா வேண்டி விண்ணப்பித்தாலும், அவர்களுக்கு இந்து சமய அறக்கட்டளைத் துறையின் அனுமதி வேண்டும் என்ற நிலை இருக்கின்ற காரணத்தால், அவர்கள் பட்டா வழங்குவதில்லை. அவர்கள் பட்டா பெற முடியாத காரணத்தால், அரசிலிருந்து கிடைக்கக் கூடிய N.R.E.P., R.L.E.G.P போன்ற திட்டங்களின் பயன்களைப் பெற முடியாமல்



1987 ஏப்ரல் 22] [திரு. மு. இராசாங்கம்]

நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே கோவில் நிலங்களுக்கு பட்டா கொடுக்கிற உத்தரவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்க அரசு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். கிராமப்புறத்தில் பல்வேறு ஊழியம் புரிந்து கொண் டிருக்கிறவர்கள் கிராம சமுதாய நிலங்களில் குடியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பட்டா கொடுக்க வழிவகை இல்லை என்பதால் மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியின் பேரில் பட்டா கொடுக்க அரசு உத்தரவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மூன்றாவதாக, கிராமங்களில் உள்ள குளத்து புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டுக் காலமாக, இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வருகிறார்கள். அதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அவர்களுக்கு குடியிருப்பு மனை பட்டா வழங்க அரசு அனுமதி இல்லாததால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவற்றை பரிசீலித்து வழங்கு வதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 100 வட்டங்களில் வேலை முடிந்துவிட்டது. மீதமுள்ள 14 மாவட்டங்களில் 49 வட்டங்களில் நடைபெற்று வருகிறது என்று கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்ட நிலச் சொந்தக்காரர்களை அருகிலே வைத்துக் கொண்டு நிலங்களை அளந்தால்தான் அங்கே பிரச்சினைகள் இல்லாமல் அவர்களுக்கு பட்டா கொடுக்க முடியும். ஆகவே சம்பந்தப்பட்டவர்களை வைத்துக்கொண்டு அளக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டுட் என்று கேட்டுக்கொள் கிறேன். நில அளவைத் துறையின் மூலம் தமிழகத்திலே நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தில் சுமார் நாலாயிரம் பேர் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகிறார்கள். ஒரே பணியைச் செய்யக் கூடிய அவர்களுக்கு 500 ரூபாய், 610 ரூபாய் என ஊதிய வேறுபாடு உள்ளது. மேலும் நான்கு ஆண்டுகளாக பணியாற்றும் அவர்களுக்கு பணிப் பாதுகாப்பு கிடையாது. அவர்கள் நிரந்தரம் செய்யப்படவில்லை. அப்படியானால் இந்த திட்டப்பணி எப்படி முடிவு பெறும்? முடிவுற்ற பிறகு வேலைக்கு உத்தரவாதம் உண்டா? அவர்களுக்கு மாற்று வேலை என்ன என்று நான் அறிய விரும்புகிறேன்.

இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு சம்பந்தமாக ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1985 ஆம் ஆண்டு, சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர் முதலியவை வெள்ளத்தாலும், 1986-இல் வறட்சியாலும் பாதிக்கப்பட்டிருக் கின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடிந்த குடிசைகளுக்கு அவர்கள் வீடு கட்டிக் கொள்ள நிவாரணமாக ரூபாய் 300 அரசு கொடுக்கிறது. இந்த 300 ரூபாயில் அவர்கள் வீடுகளைச் செப்பனிட முடியாது. அதுபோல, குறிப்பாக என்னுடைய தொகுதியில் இருக்கின்ற பழவாறு பகுதியில் சாதாரணமாக ஒரு மழை பெய்தால்கூட அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப் படுகிறார்கள். குறிப்பாக முள்ளுக்குடி, விளத்தொட்டி, ஆரனூர், வேலூர், கருப்பூர், அழகேசபுரம், அம்மன்பேட்டை போன்ற பகுதிகள் அடிக்கடி பாதிக்கப்படுவதால் அப்பகுதிகளை மேடாக்குவதோடு அவர்கள் விரும்பினால் அவர்களுக்கு வேறு இடத்திலே மனை ஒதுக்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் அவர்களுக்கு முன்னுரிமை அளித்து ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் N.R.E.P., R.L.E.G.P. போன்ற திட்டங்களின் வாயிலாக வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு நிவாரணமாக 300 ரூபாய் கொடுக்கப்படுகிறது. விலைவாசியில் இந்த 300 ரூபாய் போதுமானதல்ல. இப்போதுள்ள தீ விபத்துக்குள்ளான கூரை வீடு எல்லாவற்றிற்கும் ரூபாய் 500 கொடுத்து நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அதைப் போலவே தீ விபத்தில் இறந்தவர்களுக்கு இப்போது இரண்டாயிரம் ரூபாய் நிவாரணம் கொடுக்கப்படுகிறது. அதையும் பரிசீலித்து முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஐந்தாயிரம் ரூபாயாக கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

(பிற்பகல் 12-20)

பதவி நீக்கம் செய்யப்பட்ட கிராம அதிகாரிகள் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களாக இருந்தால், அவர்களை கிராம நிர்வாக அதிகாரிகளாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



வட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி ஆகியோரின் பதவிகளில் பல நூறு பதவிகள் காலியாக உள்ளன. அவற்றை நிரப்ப வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கி. மனோகரன்:** மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, நில வரித் துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, இழப்பீடுகள்-ஒதுக்கீடுகள், மாவட்ட ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய மானியத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இதிலே நான் முதற்கண் குறிப்பிட விரும்புவது, நிலவரித் துறையைப் பற்றி. நில வரித் துறையைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் நான் அரசாங்கத்தின் சீரிய கவனத்திற்கு சில கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே ஒன்று, கடந்த பல ஆண்டுகளாக நாம் பேசிக் கொண்டிருப்பதும், நமது கொள்கை என்று ஏற்றுக்கொண் டிருப்பதும் பினாமி நிலங்களைக் கையகப்படுத்துதல் என்பதாகும். நான் தெரிந்துகொள்ள விரும்புவது, இதுவரை எத்தனை ஆயிரக் கணக்கான ஏக்கர் பினாமி நிலங்கள் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன? நிலமில்லாத ஏழை எளிய மக்களுக்கு எவ்வளவு அளவுகளில் வழங்கப்பட்டிருக்கின்றன?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அப்படி இதுவரை பினாமி நிலங்களைக் கையகப்படுத்தா விட்டால், அதற்கு என்ன காரணம்? அதைத் தடுத்து நிறுத்தும் தீய சக்திகள் எவையாவது இருக்கின்றனவா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மாவட்ட வாரியாக எவ்வளவு பினாமி நிலங்கள் இருக்கின்றன என்று கண்டுபிடிப்பதற்கு நிச்சயமாக இந்த அரசால் முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. யார் யார் பெயரிலே இன்றைக்கு நிலங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்த நிலங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டால் நிலச் சீர்திருத்தம் என்ற சொல்லுக்கு ஒரு மரியாதை இருக்குமென்று நான் கருதுகிறேன். அதை இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவருகின்றேன். அரசு அதைப் பார்த்து அந்தக் காரியத்தைத்

தனியாகச் செய்ய முடியாது என்று கருதுவார்களானால், அரசாங்க இயந்திரம் முழுவதுமாக முடுக்கி விடப்பட்டாலும், அந்த இயந்திரத்தாலே அந்தக் காரியத்தை நிறைவேற்ற முடியாமல் போகுமென்ற நிலை இருக்குமானால் நான் அரசாங்கத்திற்கு தெரிவிக்கும் யோசனை இதுதான். அந்தந்த மாவட்டத்தில் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களை, அமைக்க வேண்டும். யார் யார் பினாமி நிலங்கள் வைத்திருக்கிறார்கள் என்பது அந்தந்தப் பகுதிகளில் இருப்பவர்களுக்குத் தெரியும். எனவே அந்தக் குழுக்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து, மாவட்ட ஆட்சித் தலைவரையும் அந்தக் குழுவுக்கு உதவுகின்ற வகையில் பயன்படுத்தி, அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் அவை முன்னவரையும், முதல்வரவர்களையும் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நிலத் திமிங்கலங்கள் ஒழிக்கப்பட்டாலொழிய நிலச் சீர்திருத்தம் வெற்றி பெற முடியாது என்பது நாம் கண்கூடாகக் கண்டு வருகிற உண்மையாகும். இரண்டாவது, இன்னொரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். பயிர் விளைவிக்கும் பூமி என்று கருதப்படுகிற 'அக்ரிகல்சுரல் லேண்ட்ஸ்' தனியார்களால் கையகப்படுத்தப்பட்டு, அவர்கள் விரும்புகிற காரியங்களில் ஈடுபடுவதற்கு இந்த அரசு மறைமுகமாக உதவுவதாக நான் கருதுகிறேன். யார் அந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அவை முன்னவருக்குத் தெரியும். அவர் கேட்டால் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

மூன்றாவது, ரியல் எஸ்டேட் என்ற பெயரில் ஒரு 'ப்ராட்' நடைபெறுவதாக நான் கருதுகிறேன். குறைந்தளவு விலைக்கு நிலங்களை அவர்கள் வாங்கி, ஏராளமான விலைக்கு அவர்கள் விற்று, அதன் மூலம் கோடிக் கணக்கான பணத்தை இன்றைக்கு சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடைப்படுத்துவதற்கு அரசாங்கம் எந்த நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது என்பதையும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இப்படி ரியல் எஸ்டேட் என்று சொல்லப்படுபவைகள் சமூகவிரோதிகளுக்கு எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்பது நாட்டிற்கு நிச்சயமாகத் தெரியும் என்று நான் கருதுகிறேன். நான் பட்ஜெட் தொடர் கூட்டத்திலேயே சொன்னேன். 'முதலாளித்துவ



முகாம்களும், முன்னோடிகளும், திமிங்கலங்களும் சேர்ந்து உருவாக்கிய கடுமையான நீ வளையத்திற்குள் மாட்டிக்கொண் டிருக்கின்ற அரசு அந்த வளையங்களை உடைத்துக்கொண்டு வெளியே வந்தாலொழிய நிலச்சீர்திருத்தம் என்ற பேச்சுக்கள் வெறும் பேச்சுக்களாக அமையுமே தவிர பலனுடைய பேச்சுக் களாகப் பரிமளிக்காது'. பேறிஞர் அண்ணா அவர்கள் குறிப் பிட்டதைப் போல, 'சோஷலிசம் என்பது காகிதப் பூ அல்ல. காகிதப் பூ மணக்காது. அந்த காகிதம் பூவின் மீது கொஞ்சம் பன்னீர் தெளித்தால் அது மணப்பது கணநேரத்திற்குத்தான்.' ஆகையினாலே உண்மையான சோஷலிசத்தை உருவாக்கு வதற்குத் தயாராக வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்னார் இனியவர் என்று பாரபட்சம் காட்டாமல், தாட்சண்யம் காட்டாமல், எந்த பிரிவினராக இருந்தாலும் சரி, உயர்ந்த இடத்திலே இருப்பவர் ஆனாலும் சரி, பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை பதுக்கி வைத்திருப் பார்களேயானால், அதை பறிக்கின்ற கடமை இன்றையதினம் இந்த அரசுக்கு உண்டு என்பதை மீண்டும் மீண்டும் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டாவது, இன்றைக்குப் பேசிய நண்பர்களிலே பலர் மாவட்டக் கலெக்டர்களைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் அந்த பிரச்சினையிலே அதிகமாக ஈடுபட விரும்பவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப் பினர்களை மாவட்ட கலெக்டர்கள் மதிப்பதில்லை. அத்தோடு வேதனை, மதிப்பிற்குரிய, மரியாதைக்குரிய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களையேக்கூட தடுத்து நிறுத்துகின்ற அளவுக்கு சில அதிகாரிகள் இருந்திருக்கின்றார்கள் என்றும் சொல்லி அவர்களே இன்று வருத்தப்பட்டார்கள். நாவலர் அவர்களைத் தெரியாதவர்கள் தமிழகத்திலே இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன், அவரது உயரத்திற்கும் ஆண் அழகிற்கும், அவரைப் பார்த்தாலேயே பட்டுத் தெறிப்பவராக இருப்பார்கள். எனக்கு அவரை நாவலர் என்று தெரியவில்லை என்று எந்த ஒரு அதிகாரியாவது சொன்னால் அந்த அதிகாரி தொடர்ந்து இந்த ஆட்சியிலே இருப்பதற்கு லாயக்கில்லை என்று நான் கருதுகிறேன். ஒருவேளை தெரியாது என்று சொல்லக் கூடும். ஏனென்றால் மாவட்ட கலெக்டர்கள் தமிழகத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல. வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்

[திரு. கி. மனோகரன்] [1987 ஏப்ரல் 22

களும் இருக்கின்றார்கள். ஆனால், 'நான் இன்னார்' என்று தெரிவித்ததற்குப் பிறகும், நாவலர் அவர்களிடம் 'நான் வழி விடமாட்டேன்' என்று சொல்லி மறுக்கிறார்கள் என்றால் அதற்கு நாவலர் அவர்கள் வேதனைப் பட்டுக்கொண்டு நின்றார்களே தவிர, கார் எடுத்துக்கொண்டு திரும்பி வருவதற்கு முயன்றார் என்று நான் பத்திரிகையிலே படித்தேனே தவிர அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடுத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கலெக்டர்கள் வருத்தப்படக்கூடாது. நான் இதைச் சொல்வதற்காக முதலமைச்சர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் வருத்தப்படக்கூடாது. கலெக்டர் என்பவர்கள், அந்தந்த மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டவும், ஒழுங்கான அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதற்கும் நியமிக்கப்பட்டவர்களே தவிர அவர்களே அந்தந்த மாவட்டத்தின் ராஜாக்கள், பாதுஷாக்கள் என்று அவர்களைக் கருதிக்கொள்ளக் கூடாது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒரே ஒரு கருத்தைச் சொல்லிவிடுவது நல்லது என்று நான் கருதுகிறேன். என்னை ஒரு ரூட்டிலே வரச்சொன்னார்கள். நான் அந்த ரூட்டிலே போனேன். அங்கே இருக்கின்ற காவல் அதிகாரி அந்த ரூட்டிலே போகக்கூடாது என்று சொன்னார். நான் என்னை இந்த ரூட்டிலே தானே வரச்சொன்னார்கள் என்று சொன்னேன். இந்த வழியிலே போகக் கூடாது என்று சொன்னார்கள். அப்படி தடுத்த இரண்டு பேர்களும் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் இதைப் பற்றி பின்னர் சொல்லவேண்டிய அவசியம் இருக்காது என்பதற்காகச் சொல்கிறேன். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவிக்க தான் இதை சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே ஒரு திருப்தி நாவலருக்கு ஏற்பட்டால் எனக்கு மகிழ்ச்சிதான்.



1987 ஏப்ரல் 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்தியா, அதிருப்தியா என்பதல்ல. முறைப்படி காரியங்கள் நடைபெறுகின்றனவே தவிர, இதிலே திருப்தி, அதிருப்தி என்பதல்ல.

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைப்படி காரியங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. இரண்டு பேர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பது திருப்தி படக்கூடிய விஷயம் என்பதில் யாருக்கும் ஆட்சேபம் இருக்க முடியாது. அந்த அடிப்படையிலேதான் நான் அந்த கருத்தைச் சொன்னேனே தவிர வேறல்ல என்பதை இந்த மாமன்றத்தில் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய நாவலர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பிறகு மாவட்டக் கலெக்டர்களின் சார்பாக நடைபெற்று வருகின்ற வறட்சிப் பணி துரிதமாக நடைபெறவில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த மாமன்றத்தில் சொல்லியாக வேண்டுமென்று கருதுகின்றேன். எனக்குக் கிடைத்த புள்ளிவிவரப்படி நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

மதுரை மாவட்ட கலெக்டர் வறட்சி நிவாரணத்திற்காக கேட்டது 7.47 கோடி ரூபாய், ஆனால் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 35 லட்சம். நெல்லை மாவட்ட கலெக்டர் கேட்டது [illegible] கோடி ரூபாய், ஆனால் ஒதுக்கப்பட்டது வெறும் [illegible] லட்சம் ரூபாய். சேலம் மாவட்டத்தின் சார்பாக கேட்கப்பட்ட தொகை ரூபாய் 19 கோடி, ஆனால் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 66 லட்சம். வட ஆற்காடு மாவட்டத்தின் சார்பாக கேட்கப்பட்ட தொகை, மிக குறைந்த தொகை ரூபாய் [illegible] கோடி, ஆனால் ஒதுக்கியது 50 லட்சம் ரூபாய். இந்த அளவிற்கு தான் இதுவரை ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மற்றைய மாவட்டங்கள் விடுபட்டிருக்கின்றன. இங்கே இருக்கின்ற மற்ற மாவட்டங்களும் வறட்சியில் பிடிபட்டிருந்தாலும் அவைகள் இதனுடன் இணைக்கப்படவில்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சர் நாவலர் அவர்களுக்குத் தெரியும் என்று, [illegible] நெற்களஞ்சியங்கள் என்று கருதப்படுகின்ற தஞ்சை

மாவட்டமும், கன்னியாகுமரி மாவட்டமும் இன்றைக்கு பாலைவனங்களாக மாறிக் கொண்டிருக்கின்ற காட்சியை நாம் பார்க்கிறோம். பல மாவட்டங்களிலும் இன்றைக்கு தமிழகத்தில் வறட்சியின் பிடியில் சிக்கிக் கொண்டிருக்கும்போது அனைத்து மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக நீங்கள் அறிவிப்பு செய்திருப்பீர்களானால் மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய பணத்தை காலம் தாழ்த்தியாவது நிச்சயமாக பெற்றிருக்கக் கூடிய வாய்ப்பை பெற்றிருக்கக் கூடும். அதை நீங்கள் செய்ய தவறிவிட்டீர்கள் என்று நான் அவை முன் வைத்தால் அதற்காக வருத்தப்படமாட்டீர்கள் என்று கருதுகின்றேன்.

அதற்குப் பிறகு இந்த விவாதத்திலே அமைச்சர்களைப் பற்றி வருகிறது. எல்லா அமைச்சர்களும் நமக்கு வேண்டியவர்கள். இன்னும் குறிப்பாக சொன்னால் எல்லா அமைச்சர்களும் எனக்கு வேண்டியவர்கள். ஆக, அவர்களிடமிருந்து நான் எதையாவது எதிர்பார்த்தால் அதை அவர்கள் தவறாக கருதக் கூடாது. அமைச்சர்களுக்கு என்று திட்டவட்டமான பணிகள் இருக்கின்றன. அந்தப் பணிகள் நிறைவேறுவதற்காக அமைச்சர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். ஒவ்வொரு தொகுதிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு எம்.எல்.ஏ. அல்லது சட்டமன்ற உறுப்பினர் உண்டு. அந்த ஒவ்வொரு பிரதிநிதிக்கும் அவரது தொகுதியை பொறுத்த வரையில் சில பிரச்சினைகள் உண்டு. அந்தப் பிரச்சினைகளைப் பற்றி அவர்கள் எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு இருக்கின்ற சுலபமான கருவி, வழிமுறை அமைச்சர்கள்தான் என்று நான் கருதுகின்றேன்.

என்னைத் தேர்ந்தெடுத்தது புரசைத் தொகுதி. அந்தத் தொகுதிக்கு அமைச்சர்கள் எல்லாம் வர வேண்டுமென்று நான் ஆசைப்பட்டது உண்டு. அப்போது எல்லா இடங்களையும் பார்க்க வேண்டுமென்று நான் அமைச்சர்களை விரும்பி கேட்கவில்லை. அது வர முடியாத காரியம், சிரமமான காரியம் என்று எனக்குத் தெரியும். ஆனால் மிகவும் பாதிக்கப்பட்ட, பல ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட அந்தத் தொகுதியிலுள்ள பல பகுதிகளுக்கு விசிட் செய்கின்ற கடமை, தார்மீக பொறுப்பு அமைச்சருக்கு உண்டு, அமைச்சர்களுக்கு உண்டு. அதிலே யிருந்து அவர்கள் இடம் வழுவி, நழுவி போய்விடக் கூடாது





என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி என்றால், அனைத்து அமைச்சர்களுக்கும், இதுவரை உனது தொகுதியைப் பற்றி ஏதாவது கருத்துக்களைச் சொல்லி யிருக்கின்றாயா என்று கேட்கக் கூடும். இதுவரை ஏராளமான மனுக்களை, தொகுதியின் சார்பாக பெற்று அமைச்சர்களுக்கு எல்லாம் தந்திருக்கிறேன். குறிப்பாக எனது போன்புக்குரிய அமைச்சர் மாண்புமிகு ப. உ. ச. அவர்களுக்கு நான் அந்தக் குறிப்புக்களை எல்லாம், மக்கள் கொடுத்த மனுக்களை எல்லாம் கொடுத்து, நீங்கள் இவைகள் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அந்தப் பகுதி மிகக் கடுமையான பகுதி என்கிற காரணத்திற்காக தொகுதி மக்கள் தந்த மனுக்களுடன் வந்து நிற்கிறேன் என்றும் நான் அவர்களிடம் விரும்பி கேட்டேன், மன்றாடிக் கேட்டேன் என்றுகூடச் சொல்வதிலே எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் அந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில் நான் தந்த மனுக்களை அவர் பெருமையோடு பெற்று, அன்போடும் ஆசையோடும் பெற்று, எனக்கு உடனடிக் கடிதம் எழுதினார். அதற்காக நான் அவரைப் பாராட்டுகின்றேன். எழுதப்பட்ட கடிதத்திலே அவர்கள் சொல்லியிருந்தார்கள். நீங்கள் அனுப்பிய மனுக்களைப் பெற்றேன்; இரண்டு நாட்களுக்குள்ளாக எனக்குக் கடிதம் வந்தது. அதற்கு நான் மாண்புமிகு அமைச்சர் ப. உ. ச. அவர்களுக்கு எனது பாராட்டுதலை இங்கே வைக்க அல்ல, குறிக்க விரும்புகிறேன். அவர் உடனடியாக எனக்குக் கடிதம் தீட்டினார் இரண்டு நாட்களுக்குள்ளாக. அனுப்பிய அத்தனை மனுக்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறேன், விரைவில் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று சொல்லி, ஏறத்தாழ 85-லே அவருக்குச் சொல்கிறேன், அவர் 85-இலே எனக்குப் பதில் தந்தார். இதுவரை அந்த மனுக்களிலே தரப்பட்ட, கேட்கப்பட்ட கோரிக்கைகளிலே ஒன்றாவது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. இது எனக்கல்ல அவமானம்; அமைச்சரவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், ஒரு அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு இந்தக் காரியத்தை உடனடியாகச் செய் என்று சொன்னால் அதைச் செய்வதைத் தவிர அந்த அதிகாரிகளுக்கு என்ன வேலை என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சரின் பண்பு,

[திரு. கி. மனோகரன்] [1987 ஏப்ரல் 22

அமைச்சரின் அன்பு, நேசம் ஒரு பக்கம்; ஆனால் அதிகாரிகளின் பாராமுகமான தன்மை எந்த அளவிற்கு அமைச்சர்களின் பெயரைக் கெடுக்கிறது என்பதை நினைத்து நான் வருத்தப்படுகிறேன்.

அதைப்போல நல்லுசாமி அவர்கள் அப்பொழுது அமைச்சராக இருந்தவர்கள். அவருக்கும் நான் மனுக்களைக் கொடுத்தேன். என்னைப் பலபேர்கள் கேட்டார்கள். இந்த மனுக்களைச் சுமந்து கொண்டு நீங்களே சட்டமன்றம் செல்லுகிறீர்களா என்று கேட்டார்கள். அதுதான் எனது வேலை என்று அவர்களுக்குச் சொன்னேன். இங்கே வந்தேன். அதை அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்களிடம் கொடுத்தேன். அந்த மனுக்களை அவரே எடுத்துக்கொண்டுதான் அவரது அலுவலகம் போனார். அதில் ஒன்றும் வேறுபாடு இல்லை. வேறுபாடு காட்ட வேண்டிய அவசியமும் இல்லை. அவர் காட்டவும் இல்லை. அதைப்போல நல்லுசாமி அவர்களுக்கு நான் அளித்த அந்த மனுக்களைப் பற்றி அவர் உடனடியாக எனக்குக் கடிதம் தீட்டி நடவடிக்கை உடனடியாக உங்களது புகைப் பகுதியில். இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் எடுக்கப்படும் என்று சொன்னார்கள், 1985-இல். நான் இப்பொழுது கேட்பது 1987-இல் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், நமக்குள்ளே பேசிக்கொள்வோம், நான் வேறு கட்சியைச் சேர்ந்தவனாக இருக்கக்கூடும், என்னை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள் என்பதற்காகத் தயவு செய்து அந்த மக்களைத் தண்டித்து விடக் கூடாது என்று மெத்தப் பணிவன்போடு நான் அமைச்சர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர்களே, தவறுதலாக அல்ல, கொஞ்சம் விளக்கம் நானும் பெறுவதற்காகத் தான் இதைச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் மனுக்களை அனுப்பியது உண்மை, நான் கடிதம் எழுதியதும் உண்மை, அதிகாரிகளுக்கு அனுப்பியிருப்பதும் உண்மைதான். இப்பொழுது திடீரென்று அந்த மனுக்களெல்லாம் என்னவாயிற்று என்று கேட்டார்கள். அவை எந்தெந்த மனுக்கள் என்கிற விவரம் என்னிடத்திலே இல்லை. இப்பொழுது உள்ளாட்சித் துறை அமைச்சர் பொறுப்பையேற்றுக் கொண்டிருப்பவர்களிடத்திலும் திடீரென்று கேட்டால்

1987 ஏப்ரல் 22] [திரு. ப. உ. சண்முகம்]



அவரிடத்திலும் இப்பொழுது இருப்பதற்கு நியாயம் இல்லை. இருக்கவும் முடியாது. பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்த மனுவை அனுப்பினேன், இந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொல்லியிருப்பார்களேயானால் அதைப் பற்றி உடனடியாக விசாரிப்பதற்கு முடியும். சாத்தியக் கூறுகள் இருக்கும். நான் மனுக்களை அனுப்பினேன், நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஒட்டுமொத்தமாகச் சொல்வது பொருத்தமாக இருக்காது என்று கருதுகிறேன். நிச்சயம் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருப்பார்கள்; நடவடிக்கை எடுக்கத் தவறியிருந்தால் நிச்சயம இந்த அரசு நடவடிக்கையை அவர்கள் மீது எடுக்கும்.

திரு. கி. மனோகரன்: மதிப்பிற்குரிய திரு. ப. உ. ச. அவர்கள், நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபொழுது அந்த மனுக்கள் வந்தன; இப்பொழுது நான் வேறு துறைக்கு அமைச்சராக ஆகிவிட்டேன், ஆகையினாலே மனுக்களிலே என்னென்ன கோரிக்கைகள் எழுப்பப்பட்டிருந்தன என்பது பற்றி எனக்கு நினைவு இல்லை என்று குறிப்பிட்டார்கள். அது சரியான பதிலாக எனக்குப் படவில்லை. இலாக்காக்கள் மாறக் கூடும்; ஆனால் ஏற்கனவே இருந்த அமைச்சர் என்ற காரணத்திற்காக பொதுவாக நான் அதை மறந்து விட்டேன் என்று ப. உ. ச. அவர்கள் சொல்வது. . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் மறந்துவிட்டேன் என்று சொல்லவில்லை. உள்ளாட்சியிலே இருந்திருந்தால் கூட திடீரென்று கேட்டால் கூட எப்படி என்னுடைய நினைவிற்கு வருவதற்கு நியாயம் இருக்கும் என்று தெரியவில்லை. நினைவுபடுத்துவதற்காகச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சில் மனோகரன் அதே அன்பின் காரணமாக, இதுபோல அனுப்பினேன், இந்த மனு என்னவாயிற்று என்று கேட்டால் சொல்லலாம். அவர் தொகுதியிலே நானும் போயிருந்தேன், ஒரு தெருவுக்குச் சென்றேன், ஒரு தெரு வழியாக குறைகளை விசாரிப்பதற்குப் போகும் பொழுது, அதிகாரிகளோடு போகிறபொழுது மாநகராட்சி அதிகாரிகளோடு போனேன். ஓரிடத்தில் குடிப்பதற்குத் தண்ணீர் கொண்டு வந்து என்னிடத்திலே கொடுத்தார்கள். அசுத்தமாக இருந்தது. என்ன

காரணம் என்று கேட்டேன். அங்கிருந்து வாட்டர் போர்டு அதிகாரிகளைக் கூப்பிட்டு 24 மணி நேரத்திற்குள்ளே இதைச் சரி செய்ய வேண்டுமென்று சொன்னேன். 24 மணி நேரத்திற்குள் அவர் தொகுதியில்தான் சரி செய்யப்பட்டிருக்கிறது. இல்லை என்று சொல்லிவிட முடியாது. இவைகளைச் செய்திருக்கிறோம். என்னென்ன செய்யவில்லை என்று சொன்னால் பரவாயில்லை; கொடுத்தேன், எதுவுமே செய்யவில்லை என்று மொத்தமாகச் சொல்வது பொருத்தமாக இருக்காது என்பதற்குச் சொன்னேனே தவிர, உள்ளாட்சித் துறைக்கே நான் அமைச்சராக இருந்தாலும் கூட இதே பதிலைத்தான் நான் சொல்லியிருக்க முடியும், வேறு பதில் சொல்லியிருக்க முடியாது.

(பிற்பகல் 12.40)

**திரு. கி. மனோகரன்:** என்னைப் பொறுத்தவரை இதைவிட அதிகமாக அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்கள் செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. தன்னடக்கத்தோடு பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். ஆனால் தன்னடக்கம் விளைவுகளை உருவாக்கப் பயன்படுவதாக இருந்தால் வரவேற்கத்தக்க ஒன்றாக இருக்கும்.

அடுத்து, அமைச்சர்களைப் பற்றிப் பேசுவதற்கு வருத்தப்படக் கூடாது. ஒரு நாணயம் இருக்கக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன் இதே கருத்தை சென்ற ஆண்டும் நான் பேசும்போது சொன்னேன். Co-ordination is a must. ஒரு அமைச்சர் ஒரு அறிக்கை விடுத்து, அதற்குப் பின்னாலே அதே அமைச்சர் அந்த அறிக்கையை வெளியிட்டதற்கப்பாலே அந்த அறிக்கையை 'வாபஸ்' வாங்கிக் கொண்டேன் என்று சொல்வது அல்லது மாண்புமிகு முதலமைச்சர் சொல்லிய காரணத்தால் வாபஸ் வாங்கிக் கொண்டேன் என்று சொல்வதை, அமைச்சர்களுக்கு நல்லது அல்ல; அமைச்சரவைக்கும் நல்லதல்ல. என்னிடம் அது பற்றிய குறிப்புகள் இருக்கின்றன.

ஜீயர் அவர்கள் தெளிவாக கொதித்தெழுந்த பிறகு ஏற்கெனவே ஒத்துக்கொள்ளப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் வி. வி. சுவாமிநாதன் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்த பிறகு, தேதி மாற்றம் தேவை என்று தெளிவாகத்





தெரிவித்த பிறகு, தனது கருத்தை மேலே இருக்கிற பிரதமர் இராஜீவ் காந்திக்கு அனுப்பி, நான் தன்னந்தனியாக நின்று செய்வேன்; தன்னந்தனி மனிதனாக நின்று போராடுவேன் என்று சொன்னதற்குப் பிறகு ஆக கீழே இறங்கி வந்ததா அல்லது முதலமைச்சர் சொல்லியதால் இந்த அறிக்கையை அமைச்சர் வி. வி. சுவாமிநாதன் அவர்கள் விட்டார்களா என்பது தெரியாது. எது எப்படி இருந்தாலும் சரி, இது ஒரு அமைச்சரவைக்கு அழகல்ல என்று மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதன் பிறகு மிக முக்கியமான ஒன்றை நான் சொல்வதற்காக வருத்தப்படக் கூடாது. அமைச்சர்கள் எல்லோரும் திறமை மிக்க அமைச்சர்களாக வந்துவிட முடியாது என்பது தெரியும். சில அமைச்சர்கள் பழக்கம் காரணமாக, இயற்கையில் அவர்களுக்கு இருக்கிற ஆற்றல் காரணமாக நல்ல அமைச்சர்களாக, நன்றாகச் செயல்படும் அமைச்சர்களாக வந்துவிட முடியும். ஆனால் ஒரு பொதுக் கருத்தை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். முக்கியமான ஒரு நண்பர் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அதனை உங்கள் அனுமதியோடு படிக்கிறேன்.

It does not, it will not raise any controversy.

"The new Ministers must desist from whirlwind tours, flamboyant receptions and extravagant spending. They must consider no task too daring and no sacrifice too great to achieve administrative acumen.

A rank holder graduate will not shine as a District Collector if he is appointed straightway to that post. He gets intensive training after selection to the I.A.S. cadre in the Lal Bahadur Sastri Administrative Academy and undergoes probation for a stipulated period in the department before he becomes a District Collector."

இது கலெக்டருக்கு. அவர் போதுமான அளவுக்கு பயிற்சி பெற்றாக வேண்டும். ஐ.ஏ.எஸ். தேர்வில் பாஸ் செய்து விடுவதினாலே, 'ராங்க்' இருக்கிறது என்ற காரணத்திற்காக, 'ராங்க் ஹோல்டர்' என்பதற்காக, அனுபவம் இல்லாத ஒருவரை அந்தப் பதவியில் அமர்த்தக்கூடாது என்று சொல்லிவிட்டு, அவர்

[திரு. கி. மனோகரன்] [1987 ஏப்ரல் 22

இவர்கள் 'டிரெயினிங்' பெற்றாக வேண்டும்; டிரெயினிங் பெற்றுத் தான் கலெக்டர் வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

"Similarly, it is essential for Ministers to get administrative training under veteran administrators"

தலைசிறந்த நிர்வாகிகள், நிர்வாகப் பழக்கம் உள்ள பெரியவர்கள், முதிர்ச்சி அடைந்துவிட்டவர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களிடம் அமைச்சர்கள் கொஞ்சம் பயிற்சி பெற்று வருவது நல்லது என்ற நல்ல எண்ணத்தோடு தெரிவித்திருக்கிறார்.

"With this end in view, why not Ministers attend the lecture classes of the Professors of the Administrative Staff College for atleast six months to understand the difference between........

இங்கே கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது கொஞ்சம் குத்தலாக, குடைச்சலாகக்கூட இருக்கும். அவர் குறிப்பிடுகிறார், ட்ரெயினிங் காலேஜுக்கு அனுப்பி, அதன் மூலம் ஆறு மாதம் பயிற்சி பெற்று வர வேண்டும்.

to understand the difference between cognizable offence and non-cognizable offence, between autonomy and autocracy, between State subject and Concurrent subject and between syringe and stethescope.".

இவைகளையாவது அமைச்சர்கள் தெரிந்திருக்க வேண்டும். இவையெல்லாம் அடிப்படை உண்மைகள்.

Ministers who do not come up to the required standard . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அமைச்சராக இருந்தபோது இவைகளுக்கெல்லாம் வித்தியாசங்களைத் தெரிந்திருப்பார் என்றுதான் நான் நம்புகிறேன்.

திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, தெரிந்த காரணத்தால்தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதை மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்களும் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

"In accordance with the promise of the Left Democratic Front......



1987 ஏப்ரல் 22] [திரு. கி. மனோகரன்]

அதற்குப் பிறகு ஒருசில . . . (குறுக்கீடு) தமிழ்நாட்டில் . . . (குறுக்கீடு) . . . சபாநாயகர் சொல்வது மாதிரி நான் இங்கிலாந்தில் இல்லை. தமிழ்நாட்டில் உட்கார்ந்து கொண்டு விவரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன். ஆகவே அமைச்சர்களாக இருப்பவர்கள் கொஞ்சம் விஷயத்தைத் தெரிந்தவர்களாக, கருத்துக்களைக் கேட்டுத் தெரிந்து கொள்பவர்களாக, இன்னும் சொல்லப்போனால் கோப்புகளைப் பார்க்கிற ஆற்றல் பெற்றவர்களாக அமைய வேண்டும் என்ற கருத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல என்னுடைய மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய நாவலர் அவர்கள் ஒன்றைத் தெரிவித்தார்கள். கடந்த ஆண்டு இந்த அவையிலே அருமை நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது முதலமைச்சரின் சார்பில் கேட்கப்படுகிற கேள்வி களுக்கு பதிலே வருவதில்லை, அந்த பதில் வருமா என்று கேட்டபோது என்னுடைய மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய நாவலர் அவர்கள் நிச்சயமாகப் பதில் வரும், அந்த உறுதியை இந்த மன்றத்திற்கு அளிக்கிறேன் என்று சொன்னார்கள். நான் அவரைப் பார்த்துக் கேட்கிறேன், இதுவரையில் ஒரு கேள்விக்காவது, முதலமைச்சரின் சார்பாக கேட்கப்பட்ட ஒரு கேள்விக்காவது நீங்கள் பதிலளித்து இருக்கிறீர்களா? அளித்தது உண்டா என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இதிலே மிக முக்கியமான ஒரு பிரச்சினை இருக்கிறது. * * செலவினங்களைப் போக்க வேண்டுமென்று திரு. ராஜீவ் காந்தி அவர்களும் சொன்னார்கள். நமது முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள். ஆனால் * * செலவு நடக்கிறதா இல்லையா என்றால் நான் துணிந்து சொல்ல விரும்புகிறேன். நிச்சயமாக . . நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஓர் அரசியல் கட்சித் தலைவர் ஒரு மாவட்டத்திற்குச் செல்லும்போது அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், அவரைப் பின்பற்றுகிற தொண்டர்கள், தோழர்கள், முன்னணித் தலைவர்கள் அவருக்கு வளமான வரவேற்பு அளிப்பதும், வண்ண விளக்குகளால் வந்த பகுதியை அலங்காரம் செய்வதும் நியாயமான காரியம்தான். அதை நான்

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[திரு. கி. மனோகரன்] [1987 ஏப்ரல் 22

மறுக்கவில்லை. அதை அவர்கள் செய்து தீர வேண்டிய பொறுப்பாகக்கூட கருத முடியும். அந்த அளவுக்கு மன வளம் பெற்றவன் நான். ஆனால் அப்படிச் சொல்கிறபோது அந்த நிகழ்ச்சிகளில் அரசாங்கப் பணம் விரயமாக்கப்படுவதை எந்தக் காரணத்தைக் கொண்டும், யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

சொல்வதற்காக யாரும் வருத்தப்படக் கூடாது.

* *

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: * *

* *

(பிற்பகல் 12.50)

திரு. கி. மனோகரன்: * *

* *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வார்த்தையைப் பற்றி அல்ல. நேற்று கூட பார்லிமெண்ட்டிலே dishonest என்ற வார்த்தையைப் பார்லிமெண்டரி அல்ல என்று நீக்கியிருக்கிறார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலே எந்தச் சூழ்நிலையிலே பேசுகிறீர்கள் என்பதுதான் பிரச்னை. * * என்று சொல்லக்கூடிய வார்த்தை * * இருக்கத் தேவையில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லாம் அவைக் குறிப்பிலே இருக்காது. * *

* * இரண்டு பேர் பேசியதையும் எடுத்து விடுகிறேன்.

திரு. கி. மனோகரன்: எடுப்பதுதான் உங்கள் வேலை என்றால் நான் என்ன பண்ண முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய வார்த்தையில் தவறு வரும் காரணத்தினால்தான் என் வேலை வருகிறது.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1987 ஏப்ரல் 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, வார்த்தைகளைச் சொல்லுகிற போது குறைகள் குற்றங்கள், மற்றவைகளையெல்லாம் சாட்டலாம். ஆனால் இந்தியாவினுடைய குடியரசுத் தலைவர், பிரதமர், மற்றவர்கள் எல்லாம் செல்லுகிறபோது ஏற்படும் செலவுகள், அரசைப் பொறுத்தவரைக்கும் அது அவசியமான செலவு என்றுதான் கருதுகிறோமே தவிர வேறு அல்ல. அதை அக்கவுண்டெண்ட் ஜெனரலும் கூட * * செலவு என்று சொல்ல மாட்டார்கள். அவர்கள் சொல்லுகிற மாதிரி கணக்கை நான் உடனேயே சொல்லிவிட முடியாது. ஏனென்றால் கணக்குகள் எல்லாம் வர வேண்டும். ஆனால் என்றைக்காவது ஒரு நாள் தஞ்சாவூரைப் பொறுத்த வரையில் அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு என்பதைப் பற்றி நான் இந்த அவைக்கு வைக்கத் தயாராக இருக்கிறேன். * * என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அது அரசைப் பொறுத்த வரையில் தேவையானது. * * அவர் கட்டாயம் அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று நாடே விரும்புகிற காரணத்தாலும் மக்கள் விரும்புகிற காரணத்தாலும், குடி தழுவி கோலோச்சுகின்ற பண்பு இருக்க வேண்டும் என்ற காரணத்தாலும் இது அவசியம் தேவை என்று இந்த அரசு கருதுகிறது.

திரு. கி. மனோகரன்: சபாநாயகர் அவர்களே * * என்ற வார்த்தை பாராளுமன்ற முறைகளுக்கு அப்பாற்பட்டது என்று நீங்கள் தீர்ப்பு அளிப்பீர்களேயானால் * *

* * என்று இருக்கட்டும் அல்லவா? அது பாராளுமன்ற முறைகளுக்கு அப்பாற்பட்டது அல்லவே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * என்ற வார்த்தையையும் நீங்கள் பேசிய பாணியையும் நீக்கிவிடுகிறேன். (சிரிப்பு) மாண்புமிகு நாஞ்சிலார் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நீக்கப்படுகிறது.

திரு. கி. மனோகரன்: பாணியை நீங்கள் நீக்க முடியாது. வார்த்தையைத் தான் நீக்க முடியும். * *

* * என்பது இருக்கட்டும்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[1987 ஏப்ரல் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது மட்டும் இருந்தால் தொடர்பே இருக்காது.

**திரு. கி. மனோகரன்:** பாவாயில்லை இருக்கட்டும். நாவலர் அவர்கள் இன்னும் கணக்கு வைக்கவில்லை சொன்னார்கள். அவர்கள் வைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இந்த நேரம் பார்த்து நாவலர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்வது, ஒரு பத்து நாட்களுக்கு முன்பு என்பது எனக்கு நினைவு; 20 ஆம் தேதிக்கு முன்பு என்று எனக்கு நினைவு. அரசினர் தீர்மானத்தின் கதி என்ன ஆயிற்று என்று நாவலர் அவர்களைப் பார்த்து கேட்டேன், மைய அரசுக்கு அனுப்பியது குறித்து. இரண்டு நாட்களுக்குள்ளாக தகவலை இந்த அவைக்கு தருகிறேன் என்று சொன்னவர் எனக்கு முன்னாலே உட்கார்ந்திருக்கிற நாவலர் அவர்கள். இதுவரையில் அவர்கள் வைக்கவில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இப்போதாவது நீங்கள் அதற்குப் பதில் சொல்கிறீர்களா, நான் அமரவா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதற்கான குறிப்பைத் திரட்டி வைத்திருக்கிறேன். இடையிலே ஏழு நாட்கள் நீங்களும் நானும் விடுமுறையில் போய் விட்டோம். ஆகவே இன்று மாலை உரையாற்றுகிறபோது அதற்கு ஒரு கால் மணி நேரம் வேண்டும், சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மாலையில் மாண்புமிகு திரு. மனோகரன் அவர்கள் வந்தால் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள்.

**திரு. கி. மனோகரன்:** நான் இந்த அவைக்கு வர வேண்டும் என்பதில் எனது பாசத்திற்குரிய அமைச்சர் பண்ருட்டி அவர்கள் காட்டுகிற நேசத்திற்கு நன்றி. நான் வருகிறேனோ இல்லையோ எழுப்பப்பட்ட இந்த கேள்விக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 4.00 மணிக்கு வர வேண்டும்.



1987 ஏப்ரல் 22]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அவ்வளவு அக்கறையோடு கேட்டவர்கள், அவரே இப்படிச் சொன்னால் அக்கறை இல்லையென்றக் குற்றச்சாட்டு அவர் மீது வந்து விடும். எனவே தான் அவர் வந்தால் நல்லது.

**திரு. கி. மனோகரன்:** தலைவர் அவர்களே, எந்தக் குற்றச் சாட்டையும் தாங்குகிற மனோபலம் படைத்தவன் நான் என்பதை மாண்புமிகு பண்ருட்டி. அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், அவர்களுக்கு என்னைப் பற்றித் தெரியும். எனக்கு அவரைப் பற்றித் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு 4.00 மணிக்கு அவர்கள் வந்து விடுவார்கள்.

**திரு. கி. மனோகரன்:** சபாநாயகர் அவர்கள் ஒரு உறுப்பினர் அவையில் கலந்து கொள்ள வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கலாம் என்று May's Parliamentary Practice- -ல் கூட இல்லை.

Mr. SPEAKER: Indian Parliamentary Practice -இல் என்ன?

**திரு. கி. மனோகரன்:** Indian Parliamentary Practice- -லும் இல்லையென்பதை நான் உங்களுடைய கவனத்திற்குச் கொண்டு வர விரும்புகிறேன்.

Hon. Member of Parliament or Assembly must attend the House என்று எங்காவது இருக்கிறதா?

Mr. SPEAKER: A responsible Member should attend the House.

THIRU K. MANOHARAN: That is an entirely different matter. A responsible Speaker must accept a responsible interpretation of a responsible Member. But one thing, I know. Human nature is human nature; human nature continues to be human nature so long as human nature remains human nature. அது உங்களுக்கும் பொருந்தும், எனக்கும் பொருந்தும். ஆகவே அது குறித்து நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு திரு. ப. உ. ச. அவர்களுக்கு எழ வேண்டுமென்று துடிப்பு இருக்கிறது. மாண்புமிகு திரு. ப. உ. ச. அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் அதிகமாகப் பேசப் போவதில்லை.

[திரு. இ. மனோகரன்] [1987 ஏப்ரல் 22

கடைசியாக இன்னொன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். ரொம்ப சீரியசாக நான் தெரிவிக்க விரும்புவது, நமது சார்பில் டெல்லி பிரதிநிதி, ஸ்பெஷல் ரெப்ரசென்டேடிவ் என்று ஒருவரை நாம் நியமித்து இருக்கிறோம். நான் கேட்க விரும்புவதெல்லாம் அந்தப் பிரதிநிதி இதுவரையில்—பிரதிநிதிகள் இதுவரையில்—தமிழக அரசாங்கத்தின் சார்பாக அங்கே என்னென்ன வேலைகளைச் செய்தார்கள்? முதலமைச்சர் பேசிவிட்டு வந்ததற்குப் பிறகு அவர்கள் மேற்கொண்ட follow up action என்ன? அதிலே எத்தனை பேர்களை அங்கேயிருக்கிற அமைச்சர்களுக்குத் தெரியும்? இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து, அவர்கள் ஒரு ஆண்டிற்கு எத்தனை முறை சென்னைக்கும் டெல்லிக்கும் சென்று வருகிறார்கள், அதுவும் விமானத்தில் சென்று வருகிறார்கள்? அதற்கு என்று எத்தனை லட்சம் ரூபாய் விரயமாக்கப்படுகிறது—இது பார்லிமெண்டரி என்று கருதுகிறேன்—என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல், இன்னொரு பரிதாபமான செய்தி என்னவென்றால், உங்களுடைய அனுமதியின் பேரில் நான் இதைத் தெரிவிக்க விரும்புகிறேன். சில பிரதிநிதிகள் Special Representative என்று நம்மால் நியமிக்கப்படுகிற பிரதிநிதிகள் அங்கேயிருக்கிற அமைச்சர்களைத் தெரிந்தவர்களாக இருப்பது உண்டு. உதாரணத்திற்குச் சொல்வதானால் என்னுடைய அருமை நண்பரும், மாண்புமிகு அமைச்சருமான இராசாராம் அவர்களுக்கு டெல்லியில் பல அமைச்சர்களைத் தெரியும். அவர்களோடு நெருங்கிப் பழகுகிற வாய்ப்பினை அவர் பெற்றவர். ஆனால் இராசாராம் ஓராண்டு காலம், இரண்டாண்டு காலம் அங்கேயிருந்து அவர் என்ன சாதித்தார் என்பதை நீங்கள் ஆத்ம பரிசோதனை செய்து கொள்ள வேண்டுமே தவிர, என்னைக் கேட்டால் நான் எதுவும் தடை பெறவில்லை என்பதற்கு ஆதாரங்களைத் தரமுடியும் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அது தேவையற்ற ஒரு போஸ்ட். நமக்கென்று தமிழக இல்லம் என்று ஒன்று அங்கே இருக்கிறது. அங்கே ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் பணியாற்றுகிறார். அவர் செய்யக்கூடிய காரியம் அது. இன்னொன்று சொல்வேன். நமக்கென்று அண்ணா தி.மு.க.வில் இருக்கிற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு தமிழ் நாட்டுக்கு உதவுவதற்காக, தி.மு.க. உறுப்பினர்களும் தயாராக இருக்



1987 ஏப்ரல் 22] [திரு. இ. மனோகரன்]

கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் தேவையில்லாத இந்த அமைப்பு தேவை தானா? இதற்கென்று இவ்வளவு லட்சங்கள் கொட்டப்படுவது தேவை தானா? தயவுசெய்து அவை முன்னவர் அவர்கள் இந்தக் கருத்தை நமது முதல்வருக்குச் செய்வி See that the post is abolished அது தேவையில்லாத ஒன்று. இன்னும் சொல்கிறேன். மாதத்திற்கு ஒரு முறை இங்கேயிருந்து நாவலர் அவர்கள் டெல்லிக்குச் சென்றால், பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முடியும் என்பது எனது நம்பிக்கை. நகரும், ஒரு இடத்திலே நிலுவையில் நிற்காமல் நகரும். ஆனால் டெல்லிக்குத் தொடர்பே இல்லாத, சந்தர்ப்பமே இல்லாத, எந்தவிதமான சேர்க்கையும் இல்லாத ஒருவரை, ஏதோ ஒரு காரணத்திற்காக, ஒரு பதவியிலே அமர்த்துவதும் அதற்காக லட்சக்கணக்கான பணத்தை வாரி இறைப்பதும், தேவையில்லை. இப்போது புதிதாக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை. அவர் எனக்கும் நெருங்கிய நண்பர். அவர், இந்தந்தப் பிரச்சனைகளைப் பற்றி நான் மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். உதாரணத்திற்கு சேது சமுத்திர திட்டம், தூத்துக்குடியை ஆழ்கடலாக ஆக்குகிற திட்டம், கரூர்—திண்டுக்கல் அகலப் பாதையாக ஆக்குகிற திட்டம், வல் கார்னரிலிருந்து தொங்கு பாலங்கள் போன்றவைகளை எல்லாம் அமைக்கவும், விரைவு படுத்தவும் மத்திய அரசை அடிக்கடி சென்று கேட்கவுமான சூழ்நிலைக்கு, எனக்குப் போதுமான சாட்சியங்கள், ஆதாரங்கள் தேவை என்று இப்போது இருக்கிற ஸ்பெசல் ரெப்ரசன்டேடிவ் கேட்டிருக்கிறார். இதுவரையில் அரசாங்கத்தின் சார்பில் அவருக்கு பதில் அளிக்கப்படவில்லை என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

ஒரு மணிக்கு முடிக்க வேண்டும் என்று சொன்னதற்காக ஒரே ஒரு வார்த்தையைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். நேற்றைக்கு நீங்கள் இருந்ததைப் போல் இன்றைக்கு இருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். ஏன் என்றால், நீங்கள் உட்கார்ந்த நேரத்திலிருந்து மகிழ்ச்சியோடு, கலகலவென்று [illegible] கடைசியாக நான் தெரிவித்துக் [illegible] இதை நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கலெக்டர்களுக்கு

[திரு. கி. மனோகரன்] [1987 ஏப்ரல் 22

நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாவட்ட கலெக்டர்கள் இங்கே இருக்கிறார்களா, இல்லையா, என்று எனக்குத் தெரியாது. முதலமைச்சர் மேலே தனிப்பட்ட ஆசை, பற்று, நம்பிக்கை, உள்ள கலெக்டர்கள் இருக்கிறார்கள், இருப்பார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் அந்த பற்றை, பாசத்தை, நேசத்தை, அணைப்பை, பிணைப்பை பொது இடங்களிலே காட்டவேண்டும் என்பது மரபுக்கு அப்பாற்பட்டது என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் டி. வி. யிலே கூட பார்த்தேன், ஒரு கலெக்டர், காரிலிருந்து வந்து நமது முதலமைச்சர் இறங்கியவுடன் அவருடைய காலைத் தொட்டு கும்பிடுகிறார். இதே காரியத்தை அவர், ராமாவரம் தோட்டத்திலேயோ, அல்லது நமது முதலமைச்சருடைய வீட்டிலேயோ செய்தால் நான் பாராட்டியிருப்பேன். ஆனால் பொது மக்கள் கூடியிருக்கிற அந்தக் கூட்டத்திலே, காரிலிருந்து அவர் இறங்கியவுடன் ஐ.ஏ.எஸ். பெற்ற ஒரு அதிகாரி, திறமைசாலி, காலிலே விழுகிறார் என்றால், அது சரியாக இருக்காது என்பதை மட்டும் இந்த நேரத்திலே மாவட்ட கலெக்டர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதன் மூலம் மாவட்ட கலெக்டர்களை துஷ்பிரயோகப்படுத்துகின்ற வாய்ப்பு அரசியல் கட்சிகளுக்கு ஏற்படும் என்பதற்காக நான் இதைச் சொல்கிறேனே தவிர மற்றல்ல, எப்போதும் 1½ மணிக்குத்தான் முடியும், இன்றைக்கு ஒரு மணிக்கே நிறுத்துவது என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 4 மணிக்கு வரவேண்டும் அல்லவா, அதற்காகத்தான்.

**திரு. கி. மனோகரன்:** ஆகவே நான் சொன்ன கருத்துக்களை தயவுசெய்து இதய பூர்வமாக ஏற்று, அதற்குப் பரிகாரம் காண்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்று இந்த அமைச்சரவையைக் கேட்டு, நான் முடித்து உட்கார்ந்ததற்கு பிறகு எந்தவிதமான கேள்விகளோ அல்லது எந்தவிதமான பதில்களோ வராது என்ற நம்பிக்கையோடு நான் அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** *

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1987 ஏப்ரல் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-04 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## வரவு-செலவுத் திட்டம், 1987-88,—வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

**திரு. த. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டிற்கான வருவாய்த் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு பல்வேறுபட்ட சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றி சாதனை புரிந்துள்ளார்கள் என்பதை நாட்டு மக்கள் உணர்ந்து மூன்றாவது முறையாக புரட்சித் தலைவர் அவர்களுக்கு மணிமகுடம் சூட்டி மகிழ்ந்து உள்ளார்கள்.

இன்று காலையிலே பேசிய மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள், இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்திருக்கிற அவர்கள், தஞ்சை மாவட்டம் வறட்சியாகிவிட்டது நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டம் வறட்சியாகிவிட்டது என்று சொல்லி மெத்த வருத்தப்பட்டுக் கொண்டார்கள். தஞ்சை மாவட்டம் வறட்சியானதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி சரியான நேரத்திலே அது குறித்த ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளாததும் கோர்ட்டில் தாக்கல் செய்த மனுவை வாபஸ் பெற்றதும்தானே தவிர வேறல்ல. அதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். தஞ்சை மாவட்டம் வறட்சியானதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான் சாருமே தவிர அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைச் சாராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. த. மாரிமுத்து] [1987 ஏப்ரல் 22

பினாமி நிலங்களைப்பற்றி 'அவர்கள் பேசும்போது சொன்னார்கள். பினாமி நிலங்களை எடுக்க சட்டத் திருத்தம் கொண்டு வந்து மைய அரசிற்கு அனுப்பியது புரட்சித் தலைவர் அரசு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பினாமி நிலங்களைக் கைப்பற்றுவதற்கு புரட்சித் தலைவர் ஆட்சிதான் துரிதமான' நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மக்களின் நலன் கருதி வருவாய் வாரியத்தைக் கலைத்து பல பிரிவுகளாக அதைப் பிரித்து ஆணையர்கள், சிறப்பு ஆணையர்கள் நியமனம் செய்து அவர்கள் மூலம் வருவாய்த் துறையைச் செவ்வனே நிர்வகித்து வரும் ஆட்சித் திறனை மனமாரப் பாராட்டுகிறேன்.

வருவாய்த் துறை அன்றாடப் பணிகளை கவனிப்பதோடு மட்டும் அல்லாமல் நிர்வாகத்தில் ஒரு மாற்றம் செய்து 1098 பிர்க்காக்கள் அடங்கிய தமிழகத்தில் உள்ள 17,029 வருவாய்க் கிராமங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வளர்ச்சிப் பணிகளைப் பொறுப்பேற்று நடத்த வைத்து இந்திய சுதந்திரமடைந்ததற்குப் பிறகு வருவாய்த் துறை நிர்வாகத்தில் சிறந்த பாராட்டுக்குரிய அம்சம் உருவாக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் உள்ள வருவாய்த் துறை புரட்சித் தலைவர் நிர்வாகத் திறமைக்கு ஒரு அற்புதமான எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

கிராமங்களின் மாமன்னர்களாக விளங்கிய கிராம கர்ணம், முன்சீப்களை தொலைத்தது மட்டுமல்லாமல் கிராம கர்ணங்களாக முன்சீப்களாக ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இல்லாது இருந்த நிலையை மாற்றி ஆதிதிராவிடர்களுக்குரிய விழுக்காட்டுக்கு அதிகமாகவே ஒதுக்கி அவர்களை நியமனம் செய்த புரட்சித் தலைவர் அவர்களை ஆதிதிராவிட மக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள், நானும் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு மாவட்டம் அமைக்க [illegible] கோடி ரூபாய் செலவு ஏற்பட்டாலும் அதை கணக்கில் எடுத்துக்கொள்ளாது மக்களின் நன்மையைக் கருதி மாவட்டம், கோட்டம், வட்டங்களைப்



1987 ஏப்ரல் 22] [திரு. த. மாரிமுத்து]

பிரித்து நிர்வாகம் செம்மையாக நடக்க சீர்திருத்தங்களைச் செய்துவரும் புரட்சித் தலைவரின் ஆட்சி பொற்கால ஆட்சியாகும்.

மாவட்டங்களில் அரசுத் துறை அலுவலர்களைக் கொண்டு மனுநீதித் திட்டத்தின் கீழ் மக்களின் குறைகளைத் தீர்க்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் மனுநீதிச் சோழனின் மறுபிறவியாகும். நிலவுடைமைப் பதிவேடு வழங்கல் திட்டத்தின்மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நில அளவுகளுடன் கூடிய வரைபடங்கள் மற்றும் நில உரிமை நில வரி, கடன் மற்றும் செட்டில்மெண்ட் விவரங்களுடன் நில உரிமை பதிவேடு வழங்கல் விவசாய மக்களைப் பெரிதும் நிர்வாகச் சிரமத்திலிருந்து காப்பாற்றும் ஓர் வரப்பிரசாதம் ஆகும். மேலும் வருவாய்த் துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள், நலிவுற்ற ஏழை மக்களுக்கு நிலம் மற்றும் வீட்டுமனைப் பட்டா வழங்கல், ஒப்படை செய்த வீட்டு மனைகளின் பேரில் சாதி வேறுபாடு இன்றி வங்கிக் கடன் பெற அனுமதி ஆணை, வறட்சி, புயல் நிலைமைகளுக்கேற்ப வரி தள்ளுபடி பிரதமரின் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் மரப்பட்டா வழங்கும் முறை, தரிசு நிலங்களில் காடு வளர்ப்பு, தரிசு நில மேம்பாடு தொடர்பான மாநிலக் குழு போன்ற மக்கள் நல்வாழ்வுக்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு மக்கள் பணியே மகேசன் பணி என்ற பேரறிஞர் அண்ணாவின் அரசாகும். மக்கள் பணிபுரியும் அரசுத் துறையில் நில அளவைத் துறை ஒரு சிறந்த துறையாகும். நில அளவைத் துறை, நில உடைமைப் பதிவேட்டு துறைகளில் பணிபுரியும் பிரிவு எழுத்தர்களைச் சார்ந்த பல ஆயிரக்கணக்கான ஊழியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் உள்ளது. அதைக் கனிவுடன் பரிசீலித்து நில அளவைத் துறையிலோ அல்லது மாற்றுப் பணி வழங்கியோ மக்கள் பணி புரியும் அவர்களுக்கு நிரந்தரப் பணி வழங்கித் தருமாறு பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பிரிவு எழுத்தர்கள் நியமனம் செய்யும்போது தற்காலிகம் என்றாலும் அவர்கள் தொடர்ந்து 8 ஆண்டுகள் பணிபுரிந்துவிட்டதாலும் இந்தப் பணியை நம்பியே திருமணம் செய்து குடும்பப் பொறுப்புகள் ஏற்பட்டு விட்டதாலும் பிற

[திரு. த. மாரிமுத்து] [1987 ஏப்ரல் 22

துறைகளில் நியமனம் செய்வதற்கு அரசு ஆணை உள்ளதாலும் அவர்கள் தற்காலிக நிலை என்றிருப்பதை மாற்றி, நிரந்தரமாக அவர்களுக்குப் பணி கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று பணிவுடன் வேண்டு கிறேன். கடந்த ஆண்டு புரட்சித் தலைவருடைய பணி புதுக் கோட்டை மாவட்டத்திற்குத் தாமதமாகக் கிடைத்தது. எனவே, இப்பொழுது உடனடியாக புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, வறட் சிக்கு மத்திய அரசு கொடுக்கும் உதவித் தொகை 75 சதவீதத்தை மானியமாக வழங்க மத்திய சர்க்காரை வலியுறுத்திக் கோர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளாகவே வறட்சி கடுமையாக உள்ளதால் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வரிகள் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய புதுக்கோட்டை மாவட்டத்திலே உள்ள திருமயம் தொகுதி மிகப் பெரிய தொகுதி. அந்தத் திருமயம் தொகுதியில் உள்ள திருமயம் வட்டத்தை இரண்டாகப் பிரித்துக் கொடுக்க வேண்டுகிறேன்.

அதைப் போலவே, குளத்தூர் தொகுதியில் உள்ள குளத்தூர் வட்டம் பெரிய வட்டமாகும். இலுப்பூர் நகரைத் தலைமை இடமாகக் கொண்டு இரண்டு வட்டங்களாகப் பிரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதை விரைவுபடுத்தி எங்கள் மாவட்டமான புதுக்கோட்டைக்கு வருகை தரும்போது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் துவக்கி வைப்பதற்கு இப்போதே அறிதப்படுத்த வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அடுத்து, குளத்தூர் தொகுதியிலே உள்ள கீரனூர், விராலி மலை நகரங்களில் நில அளவைத் துறை பிரிவு செயல்பட்டு வருவதால் அதற்கென தனிக் கட்டடம் வருவாய்த் துறை மூலம் அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 22] [திரு. த. மாரிமுத்து]

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 100 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. மற்ற துறைகளுக்கான அலுவலகங்கள் அனைத்தையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள்ளே கட்டினால் சிறப்பாக இருக்கும். பொதுமக்களும், பொது மக்கள் தொண்டர்களும் மாவட்ட அரசுத் துறை அலுவலர்களும் ஒரே இடத்தில் சந்திக்க வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அனைத்துத் துறை அலுவலகக் கட்டிடங்களையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குள்ளேயே அமையும் வகையில் ஏற்பாடு செய்து கட்டித் தர வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆதி திராவிட மக்கள் வாழ்ந்து வரும் வீடு, குடிசைகளுக்குப் பல்லாண்டுகளாகப் பட்டா வழங்கப்படாமல் உள்ளது. ஆதி திராவிட மக்களுக்கும் பிற்பட்டோர் வகுப்பு மக்களுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பல நல்ல திட்டங்களை அறிவித்துச் செயல் படுத்தி வருகிறது. ஆகவே, அவர்கள் குடியிருக்கும் வீடு களுக்குச் சிறப்பு அலுவலர்களை நியமனம் செய்து உடனடியாக தமிழ்நாடு முழுவதும் உள்ள அந்த மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க தனித் திட்டம் வகுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

கிராமங்களில் வாழும் ஆதி திராவிட மக்கள் ஜாதி இந்துக் களுடைய பிடியில்தான் வேலை செய்து வாழ்ந்து வருவதால் அவர்கள் முன்னேற வழி இல்லை. அதனால் அங்கே இருக்கிற அரசு புறம்போக்கு நிலங்கள் அனைத்தையும் ஆதி திராவிட மக்களுக்கு நில ஒப்படை செய்ய தனித் திட்டம் வகுக்குமாறு பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களில் வீடுகள் வாடகைக்கு விடப்படுவது அரிது. அதனால் கிராம நிர்வாக அலுவலர்கள் அங்கேயே தங்கி பணி யாற்ற குடியிருப்புகளைத் தமிழ்நாடு முழுவதும் அமைத்துத் தரும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கித் தந்தவரும் ஆதி திராவிட மக்களின் கண் போன்றவருமான டாக்டர் அண்ணல் அம்பேத்கார் அவர்களுடைய படத்தைச் சட்டப் பேரவையி லேயே திறக்க வைத்தும் அவர் எண்ணங்களை நிறைவேற்றியும் வருகிற புரட்சித் தலைவர் அவர்கள் மேலும் டாக்டர் அம்பேத் கார் புகழ் மணக்கும் வகையிலும் ஆதி திராவிட மக்களைப்

பெருமைப்படுத்தும் வகையிலும் அருள்கூர்ந்து கருணையுடன் பரிசீலித்து, புதிதாக அமைய இருக்கும் மாவட்டத்திற்கு அம்பேத்கார் பெயரைச் சூட்டுமாறுப் பணிவுடன் வேண்டிக் கேட்டு, வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி, மானியக் கோரிக்கையை வரவேற்று, பாராட்டி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே எங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற 'பாலிசி நோட்'டிலே, பக்கம் 48-லே, என்ட்ரி 12-லே, எங்களுடைய மாவட்டத்தின் பெயர் நெல்லை கட்ட பொம்மன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு திருநெல்வேலி கட்டபொம்மன் என்றுதான் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது பாயிண்ட் ஆப் ஆர்டரிலும் வராது, பாயிண்ட் ஆப் இன்பர்மேஷனிலும் வராது. முந்தைய உறுப்பினர் பேசியதிலே தவறு இருந்தால் கேட்கலாம், அல்லது உங்களுக்குப் பேசுகிற சந்தர்ப்பம் இருந்தால் கேட்கலாம். (குறுக்கீடு) எழுத்துப் பிழைகளை ஒரு பிரச்சினையாக எழுப்பிக் கொண்டிருந்தால், சபையை நடத்த முடியாது. (குறுக்கீடு) எழுத்துப் பிழை, கமா, இவற்றை யெல்லாம் 234 உறுப்பினர்களும் எழுப்பினால், சபையை நடத்த முடியாது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** எங்கள் மாவட்டப் பெயரை அரசு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் கட்சி யிலே யார் பேசுகிறாரோ அவரிடம் பேசச் சொல்லுங்கள். தயவு செய்து உட்காருங்கள் (குறுக்கீடு) நீங்கள் 62 பேர்கள் இருந் தால், 62 பேர்களும் பேசுவதா? அது சரியாக இருக்காது. (குறுக் கீடு) உங்கள் கட்சியிலே திரு. சித்தன் பேசினால் அவரிடம் கொடுத்து பேசச் சொல்லுங்கள்.

(மாலை 4-10)

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மற்றும் பல துறைகளைப் பற்றி வந்துள்ள இந்த மானியக் கோரிக்கைமீது நான் சார்ந்திருக்கிற மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.



குறிப்பாக இன்றையதினம் இந்த வருவாய்த் துறை மானியக் கோரிக்கையை நாம் விவாதித்துக்கொண்டிருக்கும்போது மாநிலத்திலே மக்கள் மிகப் பெரும் வறட்சியின் கோரப்பிடியிலே சிக்கி இருக்கிறார்கள். குறிப்பாக கடந்த 10 வருடங்களில் 6 வருடங்கள் வறட்சி ஆண்டுகளாகவே மாறி மாறி வந்திருக் கின்றன. இரண்டு ஆண்டுகள் வெள்ளத்தின் கோரப் பிடியிலும் சிக்கி இருக்கிறார்கள். இப்படி 10 ஆண்டுக்காலத்தில் 8 ஆண்டுக் காலம் வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய நேரத்தில் குறிப்பாக வறட்சியின் கோரப்பிடியில் தமிழகம் இருந்துகொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் நாம் வருவாய்த் துறை மானியக் கோரிக்கைமீது விவாதித்துக் கொண்டிருக்கிறோம். எனவே அரசு இந்த மாநிலம் முழுவதும் வறட்சியைப் பற்றி பரிசீலிப்பதாக இந்தக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறது. 9—2—1987 முதல் 12—3—1987 வரையிலே பரிசீலனை நடத்தி, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் இதுபற்றிய விவரம் கேட்டு, அந்தந்த மாவட்டங்களுக்குச் சென்று பரிசீலனை செய்து அதற்குப்பிறகு 1 மாத காலம் பரிசீலனை செய்ததற்குப் பிறகு வறட்சியைப் பற்றி ஒரு அறிக்கையைத் தயாரித்து மத்திய பேரரசுக்கு அனுப்பி 347.25 கோடி ரூபாய் நிதி கோரியுள்ளதாக இந்தக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாநில அரசுக்கு, மத்தியப் பேரரசினுடைய ஒரு ஆய்வுக் குழுவினரும் ஏப்ரல் மாதத்திலே வந்து பார்த்துவிட்டு போய் இருக்கிறார்கள். நம்முடைய மாநில அரசு, வறட்சியின் கோரப்பிடியிலே இருந்து தமிழகத்தைப் பாது காப்பதற்காக மத்தியப் பேரரசினுடைய உதவியாக 347 கோடி ரூபாயை கோரிவிட்டு அதற்குப்பிறகு திடீரென்று ஒரு 30 கோடி ரூபாயை அட்வான்ஸாக கொடுத்தால் போதும் என்று கோரியிருப்பது ஏனென்று புரியவில்லை. 347 கோடி ரூபாய் அனுப்பி, அவர்கள் அட்வான்ஸாக ஒரு தொகை தருகிறோம் என்று சொன்னால் நம்மால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் மாநில அரசே எங்களுக்கு அட்வான்ஸாக 30 கோடி ரூபாய் கொடுங்கள் என்று மறுபடியும் கோருவது என்பது, அது என்ன என்றே புரிந்துகொள்ள முடியவில்லை. தமிழகத்தினுடைய வறட்சி நிலைக்கு உரிய அளவிற்கு மத்தியப் பேரரசை வற்புறுத்தி உரிய நிவாரணம் பெறுவதற்கான முயற்சியை இது

[திரு. கோ. வீரய்யன்] [1987 ஏப்ரல் 22

பாதிக்கச் செய்யும் என்று நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். எவ்வளவு நாம் கோரியிருக்கும் அந்த முழுத் தொகையையும் வற்புறுத்துவதுதான் பொருத்தமாக இருக்கும். தவிர 30 கோடி ரூபாயை அட்வான்ஸாகக் கொடுங்கள் என்று கோருவது பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய தமிழகத்தைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கையாக அமையாது. பாதிக்கக்கூடிய நடவடிக்கையாக அது அமைந்துவிடும் என்று இந்த நேரத்திலே நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் போலத்தான் மத்தியப் பேரரசைப் பொறுத்தமட்டில் எவ்வளவு நிதி தருகிறோம் என்று எதுவும் அறிவிக்காத நிலையிலே இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் இப்படி தொடர்ச்சியாக இந்த வறட்சி நிலை என்பது வந்துகொண்டிருக்கிறது. நிவாரணம் கிடைக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவேதான் இந்த வறட்சி நிலைக்கு நிரந்தரமாக தீர்வு காண்பதற்கான முறையிலே எந்த ஒரு நீண்டகாலத் திட்டத்தை இந்த அரசு வைத்திருக்கிறது என்பதை இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, மழை குறைவாகப் பெய்தாலும்கூட, பெய்யக்கூடிய மழைநீர் கடலுக்குச் சென்று வீணாகாமல் தடுத்து நிறுத்துவதற்குரிய, அதைப் பாதுகாப்பதற்குரிய ஏற்பாடு என்ற முறையில் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏரிகள் முழுவதையும் தூர் வாரியும், சில இடங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றியும், மழைநீரை தேக்கி வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழகத்திலே மழை குறைவாகப் பெய்தாலும்கூட அந்த மழையினுடைய ஒரு சொட்டு நீர்கூட கடலுக்குப்போய் சேராமல், மழையினுடைய அவ்வளவு நீரும் தமிழகத்தின் மண்ணுக்குள்ளே போவதற்கான முறையிலே ஒரு நீண்டகாலக் குறிக்கோளோடு ஒரு திட்டத்தை மாநில அரசு உருவாக்குவதற்கு முன் வரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், வறட்சிபற்றி அரசு பரிசீலனை செய்தாலும், மத்தியப் பேரரசினுடைய உதவியை நீங்கள் கோரியிருந்தாலும், அதிகாரபூர்வமாக இன்று வரையிலே தமிழகத்தின் வறட்சிப் பகுதி என்று ஒரு வட்டத்தையோ, ஒரு மாவட்டத்தையோ, மாநிலத்தின் ஒரு பகுதியையோ, அரசு அறிவித்து உத்தரவிடாத காரணத்தி



1987 ஏப்ரல் 22] [திரு. கோ. வீரய்யன்]

னாலேதான் இன்றைக்கு வறட்சியால் பாதிக்கப்படக்கூடிய அந்த மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு அல்லது அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதற்கு நீங்கள் நிதி ஒதுக்கீடு செய்திருந்தாலும்கூட, அதிகாரபூர்வமாக இன்னும் அறிவிக்கப்படாததன் விளைவாக ஒரு மோசமான நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, இவ்வளவு பெரிய வறட்சி ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமையிலும் நிலவரிக்காக ஜப்தி போன்ற கடுமையான கெடுபிடி நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய நிலைமையும்கூட ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் ஏப்ரல் மாதம் 9 ஆம் தேதி அன்று செங்கை மாவட்டம் வெண்பாக்கம் கிராமத்தில் வருவாய்த் துறை அதிகாரிகள் சென்று நில வரியாக தட்டு முட்டு சாமான்கள் உட்பட எல்லாவற்றையும் ஜப்தி செய்து கொடுமை செய்து இருக்கக்கூடிய ஒரு கோரக் காட்சி நடந்து இருக்கிறது.

அதோடு மட்டும் அல்லாமல் வறட்சி என்று அறிவிக்காததன் விளைவாக அணா வாரி சர்டிபிகேட் கொடுத்தால் தான் நிலவரி தள்ளுபடி ஆகும் என்ற நிலைமை இருக்கிறது. இன்றைக்கும் அந்த நிலைமை நடக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மற்றும் உறுப்பினர்களும் கூட நாம் எல்லாம் இன்றைக்கு வேட்டி கட்டி வாழக்கூடிய இடத்தில் இருக்கிறோம், சூட்டு போட்டு வாழக்கூடிய இடத்தில் வாழ வில்லை என்று எல்லாம் சொல்லுகிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன், வேட்டி கட்டி வாழக் கூடிய இந்த சூழ்நிலையில் இருக்கக்கூடிய நமக்கு சூட்டு போட்டு வாழ்ந்த வெள்ளைக்காரனால் நியமிக்கப்பட்ட, போடப்பட்ட, அந்த அணா வாரி சர்டிபிகேட் வழங்கினால் தான் இந்த அரசாங்க உதவி கிடைக்கும் என்று இன்னும் தமிழகத்து மக்கள் தலையில் ஒரு தலைவிதியாக, அரசு விதியாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த விதி பொருத்தம் தானா? நியாயம் தானா? ஆகவே இந்த அணா வாரி சர்டிபிகேட் வழங்காமலேயே நிலவரியை தள்ளுபடி செய்ய, அந்த விதியை மாற்றுவதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டாமா என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த விதியை மாற்ற வேண்டும் என்று நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கோ. வீரய்யன்] [1987 ஏப்ரல் 22

வறட்சியால் தமிழகம் முழுவதும் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்றாலும் அதிகாரபூர்வமாக வறட்சி என்று அறிவிக்கப்பட்டு வறட்சிக்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் தான் 10 ஆண்டு காலமாக ஏற்பட்ட வறட்சி, வெள்ளத்தின் விளைவாக குத்தகை விவசாயிகள் குத்தகையை முழுமையாக அளக்க முடியாமல் கொஞ்சம் கொஞ்சமாக அளந்ததன் காரணமாக ஒரு பெரும் அளவுக்கு சுமை அவர்கள் தலையில் சேர்ந்து அவர்கள் கடன்காரர்களாக இருக்கிறார்கள்.

இந்த வறட்சி கடுமையாக பாதித்த நேரத்தில்தான் அரசும் அதை ஒத்துக்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, வறட்சியால் பாதிக்கப்பட்டு இருப்பதால் இந்த குத்தகை விவசாயிகள் குத்தகையை திருப்பி செலுத்த முடியாது என்பதை அரசும் ஒத்துக்கொண்டு இந்த குத்தகை விவசாயிகளின் பாக்கியை ஒத்தி வைத்து அதற்கு தவணை கொடுத்து சட்டங்கள் கூட நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டு மெஜின்யூகேசர்ட் திறக்கப்பட்டு பழைய குத்தகை பாக்கிகளுக்காக எவிக்ஷன் நடவடிக்கை எடுத்து இருப்பது எப்படி நியாயம் ஆகும். பொருத்தமாக இருக்கும்?

அதோடு மட்டும் அல்லாமல் இயற்கை பாதிப்பினால் பாதிக்கப்பட்ட அந்த குத்தகை விவசாயிகளுக்கு தவணையாக அந்த குத்தகையை கொடுத்துத் தான் தீரவேண்டும் என்று சொல்லுவது எப்படி சமூக நீதியாக இருக்கும். எனவே அந்த பழைய குத்தகை பாக்கி முழுவதையும் தள்ளுபடி செய்து அந்த குத்தகை விவசாயிகளுக்கு இந்த, வரப் போகும் ஆண்டி லிருந்து 75 : 25 என்ற முறையில் வாரம் அளக்க செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமே தவிர பழைய பாக்கிகளை அவர்கள் தலையில் கடனாக சுமக்க வைப்பது கொடூர்த்து, அது தண்டனையான முறையில் அவர்கள் தலைசுத்த மேலே இருக்கிற கத்தியை போல அந்த கடன், தொங்கிக்கொண்டு இருக்கிற நிலையில் தான் இருந்து கொண்டு இருக்கும். இந்த நிலையி லிருந்து அந்த குத்தகை விவசாயிகளை விடுவிப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 22] [திரு. கோ. வீரய்யன்]

இந்தக் குத்தகைப் பதிவைப் பொறுத்தவரையில் சில தினங்களுக்கு முன்னால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள், இன்னும் பதிவு செய்யப்படாமல் இருக்கக்கூடிய குத்தகை விவசாயிகள் பதிவதற்காக ஒரு 57 வட்டங்களில் குழுக்கள் நியமிக்கப்பட்டு இருக்கின்றன. மீதம் உள்ள இடங்களிலும் நியமிக்கப்படும் என்று சொன்னார்கள். இதிலே குறிப்பாக சொல்ல வேண்டுமானால் என்னுடைய தொகுதியில் நாகை தாலுக்காவில் கூட ஒரு குழு அமைக்கப் பட்டு இருக்கிறது. அந்தக் குழுவில் நானும் ஒரு உறுப்பினராக இருக்கிறேன். 5 பேர் கொண்ட அந்தக் குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அதிலே நானும் இன்னொரு உறுப்பினரும் தவிர மற்றும் உள்ள 3 பேர் இதுவரையில் ஒரு கூட்டத்திற்கு கூட வந்தது இல்லை. இந்தக் குழு அமைக்கப்பட்டதற்குப் பிறகு அந்த வட்டத்தில் ஒரு குத்தகை விவசாயியும் குத்தகையை பதிவு செய்யவில்லை. இப்படித்தான் மற்ற 56 வட்டங்களில் இருக்கக் கூடிய குழுக்களும் இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே அதை சரியான முறையில் பரிசீலித்து விடுபட்டு போய் இருக்கக் கூடிய அந்த குத்தகை விவசாயிகளைப் பதிய நடவடிக்கை எடுக்க முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு புறத்தில் இந்த குத்தகைப் பதிவை பினாமியாக சிலபேர் பதிவு செய்து வைத்துக்கொண்டு தங்கள் கையில் நிலத்தை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் திருக்குவளை என்ற கிராமத்தில் தருமபுரம் மடத்திற்கு சொந்தமான நிலத்தை ஒரே குடும்பத்தினர் 48 ஏக்கர் நிலத்தை பல்வேறு பெயர்களில் பினாமியாக பதிவு செய்து வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்த பினாமி பதிவை ரத்து செய்ய வேண்டும் என்று கூறியதற்காக அதிகாரிகள், நாங்கள் எடுத்த நடவடிக்கையை ஆதரிப்பதற்கு பதிலாக, எங்கள் மேல் கடுமையான கிரிமினல் வழக்குகளைப் போட்டு பல்வேறு ஆயிரக்கணக்கான ரூபாயை செலவு செய்து அந்த கிரிமினல் வழக்கிலிருந்து நாங்கள் விடுபட்டு வரவேண்டியதாக இருக்கிறது. எனவே அப்படி பினாமியாக வைத்து இருக்கக்கூடிய அந்தக் குத்தகைப் பதிவை ரத்து செய்து உண்மையில் இருக்கக்கூடிய குத்தகை விவசாயிகளுக்கு அதைக் கொடுப்பதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கோ. வீரய்யன்] [1987 ஏப்ரல் 22

(மாலை 4-20)

அதேபோல்தான் குடிமனைப் பட்டா வழங்குவதிலும். பல லட்சக்கணக்கான பட்டாக்கள் வழங்கப்பட்டன என்று சொல்லியிருக்கிறார்கள். வழங்கப்பட்டு இருக்கிறது. இன்னும் வழங்கப்படாமல் ஏராளமாக இருக்கிறது. ஒரு குறிப்புக்காக 2 உதாரணங்களை மட்டும் உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டு இருக்கிறேன். குறிப்பாக சேலம் மாவட்டம் மேட்டூர் பகுதியில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்துவதற்கு சகலவிதமான ஏற்பாடுகளும் 4 ஆண்டுகளாக செய்யப்பட்டு வந்தன. ஆரம்பத்தில் தாசில்தார் அவர்கள் நிலத்தை அளந்து பார்த்து, அதனுடைய கிரய விலை ரூ. 70,000 என்று அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். திடீரென்று ஒரு ஆண்டு காலத்திற்குள் அந்த கிரயத்தை ரூ. 7 இலட்சம் என்று கூடுதலாக்கி, ப்ரபோசல்ஸ் அனுப்பி, அந்த நிலத்திற்கு கிரய விலை ரூ. 7 லட்சம் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கு அதிகாரிகள் அவ்வளவு தொகையை கொடுக்க முடியாது என்று சொன்னதால், அந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக அந்த குடியிருப்பு மனைகள் கிடைக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதேபோன்று நாகை வட்டத்தில் சிராக்குடி புலியூர் என்ற கிராமத்தில் 10 ஆண்டுகளாக 27 ஹரிஜன குடும்பங்களுக்காக, அந்த நிலச் சொந்தக்காரர்கள் அரசு விலைக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று ஒப்புதல் கொடுத்த பிறகும்கூட, அந்த மனைகளை அவர்களுக்கு கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த அரசு தரிசுப் புறம்போக்கு நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுத்து விவசாயம் செய்து வாழ்வதற்கு வழிவகை செய்து உதவி செய்ய வேண்டும். அமைச்சரவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஏறத்தாழ 28 இலட்சம் ஏக்கர்கள் அரசாங்கத்தினுடைய நிலம் இருக்கிறது. அந்த 28 இலட்சம் ஏக்கரும் சாகுபடிக்கு லாயக்கான நிலம் என்று நான் வாதிடவில்லை. அந்த 28 இலட்சம் ஏக்கரில் ஏறத்தாழ 10, 15 இலட்சம் ஏக்கர்கள் விவசாயத்திற்கு லாயக்கான நிலங்களாக இருக்க முடியும்.



1987 ஏப்ரல் 22] [திரு. கோ. வீரய்யன்]

குறிப்பாக சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுக்காவில், இராமநாயக்கன்பாளையம், அப்பம்மசமுத்திரம், தும்பல், பைதூர், [illegible]வாடி போன்ற இடங்களில் சாகுபடிக்கு லாயக்கான அந்த நிலங்களை, நிலமற்ற ஏழைகள் விவசாயம் செய்து கொண்டிருக்கும்போது, அதற்கு பட்டா கொடுக்கக் கூட முடியாத நிலை இன்னமும் இருந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்களை எல்லாம்—அரசு புறம்போக்கு நிலங்களை, நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். (மணியடிக்கப் பெற்றது). (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 10 பேர் பேசவேண்டும். அமைச்சர் பதில் அளிக்க வேண்டும். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கோ. வீரய்யன்:** உபரி நிலங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. பட்டாவும் கொடுக்கப்பட்டு விட்டது. ஆனால் இன்னமும் அந்த உபரி நிலம் விவசாயிகளுக்கு ஒப்படை செய்யப்படவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், தஞ்சாவூர் மாவட்டத்தில் வலங்கிமான் வட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம் வட்டத்திலும் உள்ள பகுதிகளுக்கு எல்லாம் நிலப்பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலப் பட்டா பெற்றவர்களிடமிருந்து ஆண்டுக்காண்டு அரசு பணம் வசூலித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் நிலம் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட முடியாத நிலை இருக்கிறது.

அதேபோன்றுதான் திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் பகுதியில் 800 ஏக்கருக்கு மேல் உபரி நிலமாக எடுத்து, நிலமற்றவர்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டிய நிலத்தை குறிப்பிட்ட சமூகத்தினர், இரண்டு செல்வாக்கு படைத்த நபர்கள் அவரவர்கள் பெயருக்கு பட்டா பெற்று, குறிப்பாக வி.ஜி.பி. சந்தநிதியின்ரும், திருச்சி பாண்டா தைலா முகவி என்ற குடும்பத்தைச் சார்ந்தவர்களும் அந்த 800 ஏக்கருக்கு பட்டா பெற்றிருக்கிறார்கள். அந்தப் பட்டாவை ரத்து செய்து நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் காரியம்கூட [illegible] அரசு கவனிக்காத சூழ்நிலை இருக்கிறது. ([illegible])

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் யாருமே குறிப்பிட்ட நேரத்திற்குள் பேசிமுடிப்பதில்லை. 20 நிமிடங்கள், ½ மணி என்று பேசுவதற்கு நேரத்தை ஒதுக்கினால் கூட, பேசி முடிக்க மாட்டேன் என்கிறார்கள். இது என்ன நியாயம்? இன்னும் 11 உறுப்பினர்கள் பேசியாக வேண்டும். மணி அடித்தாலும் ஒன்றும் பிரயோசனம் இல்லை.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்த வரையில், நம்முடைய அரசு பினாமி நிலத்தை எடுப்பதற்கான ஒரு சட்டத்தை 1980 ஆம் ஆண்டு கொண்டு வந்தது. அதை மத்திய அரசுக்கு திரும்பி அனுப்பிய பிறகு, அது அப்படியே கிடப்பில் இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், அதே போன்று, அதே காலத்தில், மேற்கு வங்க அரசும், ஒரு திருத்த சட்டத்தைக் கொண்டு வந்து மத்திய அரசுக்கு அனுப்பி, அவர்களும் அதை நிராகரித்ததற்குப் பிறகு, அதை வற்புறுத்தி, வற்புறுத்தி 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் பெற்று, அதை அமுல்படுத்தக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி நம்முடைய அரசு அந்த பினாமி நிலங்களை எடுப்பதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். ஏராளமான விதிவிலக்குகள் இன்றைக்கும் அந்தச் சட்டத்திலே இருக்கின்றன. அந்த விதிவிலக்குகள் முழுவதையும் ரத்து செய்து விடுவார்களேயானால், ஏறத்தாழ 20 இலட்சம் ஏக்கர் தமிழகத்தில் உபரி நிலங்கள் இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்த வகையில் நில உச்சவரம்புச் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களால் இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கின்ற 1987-88 ஆம் ஆண்டு வருவாய்த்துறை மானிய கோரிக்கையின் மீது நானும் கலந்துகொண்டு மானிய கோரிக்கையினை வரவேற்று பேசுகின்ற வாய்ப்பினை கொடுத்த உங்களுக்கு முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வருவாய்த்துறையை பொறுத்தவரையில், கிராமப்புற மக்களாக இருந்தாலும் சரி, நகர்ப்புற மக்களாக இருந்தாலும் சரி அவர்களுடைய வாழ்க்கையிலே ஒன்றி பின்னி



பிணைந்து இருக்கின்ற ஒரு துறையாகும். இன்றைக்கு பல்வேறு துறைகளில் எந்த ஒரு பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும சாதிச் சான்றிதழ் பெறவேண்டும் என்று சொன்னாலும் சரி, வருவாய்ச் சான்றிதழ் பெறவேண்டும் என்று சொன்னாலும் சரி, சொத்துச் சான்றிதழ் பெறவேண்டும் என்று சொன்னாலும் சரி, இன்றைக்கு வருவாய்த்துறை அதிகாரிகளைச் சார்ந்துதான் இவைகளையெல்லாம் நாம் செய்ய வேண்டிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். இந்தத் துறையை பொறுத்தளவிற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு பல்வேறு புரட்சிகரமான மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள். கிராமப்புறங்களில் இருந்த கணக்குப்பிள்ளை, மணியக்காரர்களை ஒழித்தது புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு. வருவாய்த்துறை வாரியத்தை ஒழித்து ஆணையாளர்கள், சிறப்பு ஆணையாளர்களை நியமித்து அந்தத் துறையினுடைய வேலைகளை எளிதாக்கியது புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு.

அதைப்போல நிர்வாகத்தை எளிமையாக்க வேண்டும் என்பதற்காகத்தான் பெரிய மாவட்டங்களையெல்லாம் இரண்டாகப் பிரித்து அந்த மாவட்டத்திலே இருக்கின்ற மக்கள் பயன்பெறத்தக்க அளவிற்கு பல்வேறு திட்டங்களையெல்லாம் கொண்டு வந்தது புரட்சித் தலைவர் அரசுதான். ஒரு காலத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர்களை சந்திக்கவேண்டும் என்று சொன்னால் நூற்றுக்கணக்கான மைல்கள் பயணம் செய்தும் மாவட்ட ஆட்சித் தலைவர்களை சந்திக்கமுடியாமல் திரும்பி வந்த நிலைமைகள் எல்லாம் இருந்திருக்கின்றன. ஆனால் இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களை சந்திக்க வேண்டும் என்று சொன்னால் 50 மைல்களுக்குள்ளாக மாவட்ட ஆட்சித் தலைவர்களைச் சந்திக்க முடியும். பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல முடியும். அந்த அளவிற்கு இன்றைக்கு இந்த அரசு பல்வேறு மாறுதல்களையெல்லாம் செய்திருக்கிறது. கடந்த ஆண்டு கடுமையான வறட்சி தமிழகத்திலே இருந்தாலும், அந்த வறட்சியை வெற்றிகரமாக இந்த அரசு சமாளித்திருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் வறட்சி இல்லாத காலத்திலே, ஒரு காலத்திலே செயற்கையான ஒரு பஞ்சத்தை முன்னாலே ஆட்சியிலே இருந்தவர்கள் உருவாக்கினார்கள். ஆனால் தஞ்சை தரணி பொய்த்தும் தமிழகத்தின் மற்ற

[திரு. ச. பாலகிருஷ்ணன்] [1987 ஏப்ரல் 22

பாகங்கள் வறட்சியினாலே கடுமையாக பாதிக்கப்பட்டும் ஏழை எளிய மக்கள் வாங்குகின்ற அரிசியினுடைய விலையை ஒரு கட்டுக்குள் வைத்தது புரட்சித் தலைவர் அரசு. அரிசி கிலோ ரூ. 3.80 என்ற விலைக்கு மேலாக எந்தப் பகுதியிலும் விற்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல வறட்சி நிவாரணப் பணிகளை எடுத்துக் கொண்டாலும், முன்னாலே இருந்தவர்கள் வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்தார்கள். ஆனால் வறட்சி நிவாரணப் பணி, யாருக்கு வறட்சி நிவாரணப் பணியாக இருந்திருக்கும் என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இன்றைக்கு இந்த அரசு செய்திருக்கின்ற வறட்சி நிவாரணப் பணிகளின் உதாரணங்கள், எடுத்துக் காட்டுகள் பல்வேறு பகுதிகளில் இருந்துகொண்டிருக்கின்றன. ஆழ்குழாய் கிணறுகளை உருவாக்கிக் கொடுத்தது புரட்சித் தலைவர் அரசு. அதே போல சமுதாய கிணறுகள் இன்றைக்கு எந்தப் பகுதியில் பார்த்தாலும் இருந்துகொண்டிருக்கின்றன. அப்படி வறட்சி நிலவிய நேரங்களிலெல்லாம் அந்த வறட்சி பிரச்சனையை சிறப்பாக சமாளித்து மக்களுக்கு வேலைவாய்ப்புகளை அளித்து மக்கள் அந்த வறட்சியினுடைய கோரத்தை உணராமல் இருக்கிற அளவிற்கு பணியாற்றிவருவது புரட்சித் தலைவர் அரசு. ஏழை எளிய மக்களுக்கு விட்டுமனைப்பட்டா வழங்குவதைப் பொறுத்த அளவில் முன்னாலே இருந்தவர்கள் ஏறத்தாழ 30 ஆண்டுக் காலமாக ஏன் இப்படி பட்டாக்கள் வழங்காமல் இருந்தார்கள் என்பது எங்களுக்குப் புரியவில்லை. புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்கு பிறகுதான், இன்றைக்கு கிராமப்புறங்களில் உள்ள அனைவருக்கும் பட்டா வழங்க வேண்டும் என்ற முறையிலே பட்டா வழங்கப்பட்டு வருகிறது. அதைப்போலவே, ஆதிதிராவிட மக்களுக்கு பட்டா வழங்குவதிலே ஒன்றை நாம் நினைவிலே கொள்ள வேண்டும். அவர்களுக்கு என்.ஆர்.ஈ.பி. மூலமாகவோ, தாட்கோ மூலமாகவோ, ஆர்.எல்.ஈ.ஜி.பி. மூலமாகவோ வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும் என்று சொன்னால் 2 செண்ட் நிலம் இருந்தாக வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் பல பகுதிகளில் உள்ள அதிகாரிகள் 1/2 செண்ட், முக்கால் செண்ட் என்று கொடுத்துவிடுகிறார்கள், அதனால் அவர்கள் அந்த அரசாங்கத்தினுடைய பயனையும்,



1987 ஏப்ரல் 22] [திரு. ச. பாலகிருஷ்ணன்]

திட்டத்தையும் அனுபவிக்க முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே எந்தப் பகுதியாக இருந்தாலும் 2 செண்ட்டிற்கு குறையாமல் விட்டுமனைப் பட்டா வழங்க ஆணையிட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4-30)

இங்கே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்—ஏதோ இந்த அரசு வரி வசூலிலே கெடுபிடி செய்கிறது; ஜப்தி நடவடிக்கைகளிலே ஈடுபடுகிறது; மாடுகளைப் பிடித்து வருகிறார்கள்; ஆடுகளைப் பிடித்து வருகிறார்கள்; பாத்திரம், பண்டங்களை எடுத்துவருகிறார்கள் என்று. 10, 15 ஆண்டுகளுக்கு முன்னாலே நடந்ததை மனதிலே வைத்துக் கொண்டு சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், ஜப்தி போன்ற நடவடிக்கைகள் இல்லாமலேயே, வரி வசூலை அமைதியான முறையிலே செய்தது புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு. கட்டாய நடவடிக்கை இப்போது நில வரி வசூலிலே எடுக்கவேண்டாம் என்று கூட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதை உண்மையிலேயே நான் இந்த நேரத்தில் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த வரி வசூலைப் பொறுத்த அளவில், பெரியார் மாவட்டத்திலே கீழ் பவானி பாசனம் பெறுகின்ற பகுதிகளிலே பல்வேறு பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலே கீழ்பவானி பாசனத்தின் மூலமாகப் பயன் பெறுகிற விவசாயிகள் ஒரு கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு பயிர் வாரித் தீர்வை விதிக்கப் படுகிறது. அந்த பயிர் வாரித் தீர்வை விதிக்கப்படுவதன் காரணமாக, அவர்கள் பல்வேறு இன்னல்களுக்கும், இடையூறுகளுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். அந்தப் பயிர் வாரித் தீர்வையை ரத்துச் செய்துவிட்டு, ஏக்கர் வாரித் தீர்வை விதிக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் வைத்து இருக்கிறார்கள். சென்ற ஆண்டு, இந்தக் கோரிக்கையின் மீது நான் பேசுகிறபோதுகூட, இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னேன். பயிர் கட்டுப்பாடு, தண்டத் தீர்வை—இவைகள் ரத்துச் செய்யப்பட வேண்டும், ஒழிக்கப்படவேண்டும். இன்றைக்கு கீழ்பவானி வாய்க்காலிலே 4 மாதங்கள் தண்ணீர் விடுகிறார்கள். 4 மாதங்கள்

தண்ணீர் விட்டுவிட்டு, கரும்பிற்கும், மஞ்சளுக்கும், வாழைக்கும் 50 மடங்கு, 60 மடங்கு என்று தண்டத் தீர்வை விதிக்கிறார்கள். தென்னை போன்ற பயிர்களுக்கு அப்படிப்பட்ட வரி விதிக்கப்படுகிறது. ஆண்டுக்கு 4 மாதங்களுக்குத் தண்ணீர் விட்டுவிட்டு, ஒரு வருட காலம் பயிராகி இருக்கின்ற மஞ்சள், வாழை, கரும்பு, நெல் போன்றவைகளுக்கு இப்படி வரி விதிக்கின்றது முறை தானா என்பதை சிந்தித்துப் பார்த்து, இவைகளை புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தாய் உள்ளத்தோடு அனுசரித்துச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பல பகுதிகளிலே தண்ணீரைத் தவறாகப் பயன்படுத்துகிறவர்கள், தண்ணீருக்குண்டான தீர்வையை ஒழுங்காகச் செலுத்துகிறார்களா என்றால் செலுத்துவது இல்லை. இதனால் பல பகுதிகள் பாதிக்கப்படுகின்றன. பெரியார் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், பண்ணாரி சக்தி சர்க்கரை ஆலையிலிருந்து, சர்க்கரை ஆலைக்கென்று தண்ணீர் எடுக்கிறார்கள். ஆனால் தண்ணீரை ஆலைக்கு மட்டும் பயன்படுத்தவேண்டும் என்று விதி இருந்தும்கூட, அதை மீறி ஏறத்தாழ ஆயிரம் ஏக்கரிலே அவர்கள் கரும்பு பயிரிடுகிறார்கள். ஆனால், அதற்கு எந்தவிதமான தீர்வையும் செலுத்துவதில்லை. இப்படித் தவறாகப் பயன்படுத்துவதன் காரணமாக, மற்றவர்களும் அதைப் பின்பற்றுவதற்கு வழிகோலிவிடும். எனவே, உடனடியாக இதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், பவானி ஆற்றிலிருந்து மிக அதிகமான குதிரை சக்தியைக் கொண்ட மோட்டாரை வைத்து ஏறத்தாழ 10 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பிலே தண்ணீர் பாய்ச்சுவதற்கான நடவடிக்கையிலே சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கு அனுமதி வழங்கப்படுமானால், கீழ் பவானி பாசனத் திட்டத்தின் மூலமாக பலன் பெற்று வருகின்ற ஏறத்தாழ 3 இலட்சம் விவசாயிகளும், காலிங்கராயன், தரப்பள்ளி, அரக்கன்கோட்டை கால்வாய்களின் மூலமாகப் பயன் பெற்று வருகின்ற 60 ஆயிரம் விவசாயிகளும் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். அப்படி தண்ணீர் எடுப்பதற்கு அனுமதிக்கப்படுமேயானால், அந்தப் பகுதிகள் பாலைவனமாக மாறி விடுகின்ற அபாயம் இருந்துகொண்டிருக்கிறது.



இன்னும் சொல்லப் போனால், கீழ் பவானி பாசனத்திலே பயன் பெறுகின்ற விவசாயிகள் அந்த அணை கட்டப்படுவதற்குண்டான செலவைக் கட்டியிருக்கிறார்கள். கால்வாய் வெட்டுவதற்குண்டான செலவை அபிவிருத்தி வரி என்று கட்டியிருக்கிறார்கள். அங்கே பாலங்கள் கட்டுவதாக இருந்தாலும் சரி, வாய்க்கால் வெட்டுவதற்கு ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு நஷ்ட ஈடு என்றாலும் சரி, அவர்கள் அபிவிருத்தி வரி என்று முழுத் தொகையையும் இத்தனை நாள் செலுத்தியிருக்கிறார்கள். வரி செலுத்திய விவசாயிகள் நலன், உரிமை பாதிக்கப்படாத அளவுக்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், இந்த அரசைப் பொறுத்தவரையில், முன்பு தீ விபத்திலே ஒரு குடும்பம் பாதிக்கப்பட்டால், அந்தக் குடும்பத்திற்கு 100 ரூபாய்க்குக் குறைவாகவே கொடுத்து வந்தார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகுதான் 300 ரூபாய், பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு வழங்கப்படுகிறது. அதோடு, 5 கிலோ அரிசி, ஒரு வேஷ்டி, சேலை, இந்த அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் உயிர்ச் சேதம் அடைந்தால், அவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் வரை பணமும் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான் கொடுத்துக்கொண்டிருக்கிறது. இப்படி ஏழை எளிய மக்களுடைய நலனிலே அக்கறை கொண்ட அரசாக இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு கிராமங்களிலே தரிசாக இருக்கின்ற புறம்போக்கு நிலங்களை விவசாயிகளுக்கு, விவசாய நிலமாகப் பட்டா கொடுக்கலாம் என்று இருந்துவருகிறது. ஆனால் அப்படி பட்டா கொடுக்கிறபோது பல தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே அப்படிப்பட்ட தவறுகளைக் களைய வேண்டுமென்றால் அந்த முறையையே ரத்து செய்ய வேண்டும். இன்றையதினம் கிராமப்புறங்களில் ஆதிதிராவிட மக்களுக்கு மான்யத்துடன் கூடிய கடன்களையும்—கறவை மாடுகளை வாங்கவும்—ஆடுகள் வாங்கவும் மற்றும் கால்நடைகள் வாங்கவும்—கொடுக்கிறோம். அப்படி அவர்கள் வாங்குகிற கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் கண்டிப்பாகத் தேவைப்படுகிறது. இப்படி விவசாய நிலங்களுக்கெல்லாம் பட்டா

கொடுத்துவிட்டால் இனி கிராமப்புறங்களில் உள்ள கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலமே இல்லாமல் போய்விடும். எனவே இப்படிப்பட்ட பட்டாக்களைக் கொடுப்பதை நிறுத்திவிட்டு அந்த நிலங்களை எல்லாம் மேய்ச்சல் நிலங்களாகப் பயன்படுத்திட அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் (மணி அடிக்கப்பெற்றது).

தற்போது மாநிலத்தில் எங்கும் கடுமையான வறட்சி நிலவிக் கொண்டிருக்கிறது. கிராமப்புறங்களில் இருக்கிற விவசாயத் தொழிலாளர்கள் வேலை இல்லாமல் அவதிப்படுகிறார்கள். வறட்சியைப் போக்குவதற்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்கும் பல்வேறு வழிமுறைகளை வகுத்து அதன்படி செயல்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஆழ்குழாய்க் கிணறுகளைப் போடுவதால்மட்டும் அந்தப் பிரச்சினை தீர்ந்துவிடாது. எனவே குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நிரந்தரமான தீர்வு காண என்ன வழிமுறைகளைச் செய்யவேண்டுமோ அந்த வகையில் திட்டமிடப்பட வேண்டும். அதைப் போலவே ஏரி, குளங்களையெல்லாம் தூர் எடுத்து, ஏரி குளங்களில் இருக்கிற ஆக்கிரமிப்புகளையும் அகற்றியாக வேண்டும். அணைக்கட்டாக இருந்தாலும் சரி, ஏரி குளங்களாக இருந்தாலும் சரி தற்போது அங்கெல்லாம் ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் செய்து வருகிறார்கள். அதிலும் குறிப்பாக வசதி படைத்தவர்களே பலர் இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். வறட்சி நிலவுகிற நேரத்தில் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி ஏரி, குளங்களைத் தூர் எடுக்கும் பணிகளை முடுக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கே கடுமையான வறட்சி நிலவுகிறது. மத்திய அரசிலிருந்து வந்த வறட்சிக் குழுவினர்கூட பெரியார் மாவட்டத்தில் கடுமையான வறட்சி நிலவுகிறது என்று அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். மாநிலத்திலேயே பெரியார் மாவட்டம் மிகவும் கடுமையான வறட்சியில் சிக்கி இருக்கிறது. இதைத்தான் மத்திய அரசின் வறட்சிக்குழுவும் அறிவித்திருக்கிறது. ஆகவே மாண்புமிகு



அமைச்சர் அவர்கள் பெரியார் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து அங்கே நிலவரியை—அதாவது இந்த ஆண்டுக்கான நில வரியை—ரத்து செய்ய வேண்டும் என்றும்—கூட்டுறவுக் கடன்களையெல்லாம் முடிந்த அளவுக்குத் தள்ளி வைக்கவேண்டுமென்றும், கூட்டுறவு கடன்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற வட்டித் தொகையை ரத்து செய்யும் ஏற்பாட்டைச் செய்ய அரசு முன்வர வேண்டும் என்றும் நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கீழ்பவானி பாசனப் பகுதியைப் பொறுத்தவரையில் பயிர் வாரி தீர்வையை ரத்து செய்து ஏக்கர்வாரி தீர்வையை விதிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அரசு இவைகளையெல்லாம் இந்த நேரத்தில் செய்து தர வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களாலும் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளான நிலவரி, மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மற்றும் உள்ள மானியக் கோரிக்கைகள் மீது பேசுகிறபோது, மாநில ஆட்சித் தலைவர்பற்றி—அதாவது ஆளுநர் பற்றி குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆளுநர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் மிக அதிகமாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய அதிகாரத்தை பயன்படுத்தி கடந்த 1976 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசையும் 1980 ஆம் ஆண்டில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசையும் கலைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாதிரியான ஒரு அதிகாரத்தை மாநில ஆளுநர்களுக்கு வழங்காமல் இருப்பதற்கான கோரிக்கையை மத்திய அரசுக்கு மாநில அரசு விடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்யும்போது அந்தந்தத் தொகுதியின் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் தெரிவித்து வந்தால் மிக நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்தத் தொகுதியில் அமைச்சர் அவர்கள் வந்த பிறகு

[திரு. எ. எல். ஏ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 22

நாங்கள் மேடையில்தான் சந்திக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஏற்கெனவே அவர்களுடைய சுற்றுப்பயண நிகழ்ச்சி வந்திருந்தால் அவர்கள் தங்கியிருக்கும் ஆய்வாளர் மாளிகைகளுக்கு அல்லது மற்ற இடங்களுக்குச் சென்று நாங்கள் அவர்களைப் பார்த்து மக்களுடைய பிரச்சினையைக் குறித்துப் பேச வாய்ப்பாக இருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 4-40)

அதே போல சட்டமன்ற உறுப்பினர்கள் பொது மக்களுக்காக, பொது மக்கள் பிரச்சினைகள் மீது அமைச்சர்களிடம் கேட்கக் கூடிய காரியங்களை அவர்கள் உடனுக்குடன் தீர்த்து வைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர்களுக்கு எழுதுகின்ற தபால்களுக்கு நீண்ட நாட்களாக பதில் வராமல் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் ஞாபகப்படுத்தி, அமைச்சர்கள் தங்களுக்கு வரக்கூடிய தபால்களுக்கு உடனுக்குடன் பதில் எழுத வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம் கோவிலில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதை ஒத்தி வைக்க வேண்டும் என்று இந்த அரசு அறிவித்தது. பிறகு ஜீயர் அதை நடத்தியே தீருவேன் என்று பிடிவாதம் பிடித்த காரணத்தால் முதல்வர் அவர்கள் அனுமதி அளித்தார்கள். அதைப் பற்றிய பிரச்சினைக்குள் நான் வரவில்லை. அந்தச் சம்பவம் நடந்த பல தினங்களுக்குப் பிறகு மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், இந்தச் சம்பவத்திற்கு முதல்வர் பொறுப்பல்ல; நான்தான் பொறுப்பு என்று விளம்பரம் செய்திருக்கிறார். இந்த விளம்பரங்கள் தேவைதானா? உண்மையிலேயே அறநிலையத் துறை அமைச்சர்தான் பொறுப்பு என்று சொன்னால் அதைப் பற்றி சட்டமன்றத்திலே ஓர் அறிக்கையை வைத்தால் அதை அனைத்துப் பத்திரிகைகளும் போட்டுவிடுவார்களே, அப்படியிருக்கும்போது அரசு பணத்தைச் செலவழித்து இதற்கு விளம்பரம் கொடுக்க வேண்டுமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 22]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கத்திலே நடைபெற்ற குடமுழுக்கு பற்றி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோவை மாவட்டப் பகுதியில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் அதை ஒத்தி வைக்க வேண்டும் என்ற எண்ணம் காஞ்சி சங்கராச்சாரியாருக்கு ஏற்பட்டு அந்த முடிவு எடுத்தபோது அது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரியாது. அந்த முடிவின் அடிப்படையில் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. அந்தக் கருத்து பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. அதை அங்கேயுள்ள ஜீயர் ஏற்றுக்கொள்வார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் முடிவு எடுக்கப்பட்டது. இந்தப் பணிகளை மேற்பார்வை செய்த ஜீயர் ஏற்கெனவே குறிப்பிட்ட நாளில் நடைபெறும் என்று எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகு பத்திரிகைகளில் சில சந்தேகங்களுக்கு விளக்கம் தர வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாக, அமைச்சர் அவர்கள் அறிக்கை விட வேண்டிய நெருக்கடிக்கு ஆளானார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். பிறகு பணிந்துவிட்டார், ஜீயருக்குப் பணிந்துவிட்டார் என்று வந்ததற்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அந்தச் செய்தி தெரியாது என்றும் முதல்வருக்குத் தெரிந்த பிறகு ஜீயர் கருதுகிறபடி நடக்கட்டும் என்று சொன்னார்கள் என்றும் முதலிலே முடிவு எடுத்ததற்கு மாறாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாற்றிக்கொள்ளவில்லை, இதற்கும் முதல்வருக்கும் தொடர்பு இல்லை, அப்படிப்பட்டச் செய்தி வருவது தவறு என்று விளக்க வேண்டிய கட்டாய அவசியத்தின் காரணமாக விளம்பரப்படுத்த வேண்டிய அவசியம், நெருக்கடி அமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டது. இப்படிப்பட்ட நெருக்கடியை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உருவாக்காமல் இருப்பார்களேயானால் இப்படிப்பட்ட விளம்பரத்திற்கு அவசியமிருக்காது, எனக்கும் செலவு இல்லை. (சிரிப்பு).

**திரு. எ. எல். ஏ. ஆறுமுகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கு நெருக்கடி ஏற்பட்டது என்று சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரியாது என்று சொன்னதற்கு நான் ஒப்புக்கொள்கிறேன்.

[திரு. எ. எல். ஏ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 22

அதைச் சொல்ல நான் வரவில்லை. நான் கேட்க விரும்புவது எப்படி விளம்பரம் செய்ய வேண்டுமா என்பதுதான். அதையே சபையில் ஓர் அறிக்கையாக வைத்திருந்தால் அனைத்துப் பத்திரிகைகளும் போட்டிருப்பார்களே! விளம்பரம் எதற்காக அரசு பணத்தைச் செலவழித்து போடுகிறார்கள் என்பதுதான் கேள்வி.

அதே போல பத்திரப் பதிவுக்கு கூடுதல் விலை மதிப்பு இருப்பதாக இங்கேயுள்ள அனைத்துத் தரப்பு உறுப்பினர்களும், ஆளும் கட்சி உறுப்பினர்களும் சேர்ந்து ஒட்டுமொத்தமாக கோரிக்கைகளை விடுத்தபோது அப்போது மாண்புமிகு பத்திரப் பதிவு அமைச்சர் திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்கள் ஒன்றிரண்டு தினங்களில் இது பற்றி சபையிலே அறிக்கை வைப்பேன் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் வைக்கவில்லை. இதனால் பல இடங்களில் பத்திரப் பதிவில் சிரமங்கள் இருக்கின்றன என்று தமிழ்நாடு முழுவதும் இருக்கக் கூடிய நாங்கள் சொல்லியும் கூட உடனே கவனிக்காதது வருந்தத்தக்கது. அந்த அறிக்கையை சபையிலே வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல உள்ளாட்சித் துறையிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கக் கூடிய மரியாதை குறைவுகளைப் பற்றிச் சொன்னோம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் அது சம்பந்தமான அறிக்கையை சபையில் வைப்பதாகச் சொன்னார்கள். அது இன்னும் சபையில் வைக்கப்படவில்லை. அதையும் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் காமராஜ் மாவட்டத்திற்கு இரண்டு தடவை வருகை தந்திருக்கிறார்கள். சென்ற ஆகஸ்டில் அருப்புக்கோட்டை இடைத் தேர்தல் சமயம் ஒரு தடவை வந்தார்கள். குல்லூர் சந்தை, வெம்பக்கோட்டை அணைக்கட்டைத் திறக்க 12-ஆம் மாதம் வந்தார்கள். மற்றும் பல 200, 300 திட்டங்களை துவக்கி வைக்கவும், கால்கோள் விழாவிற்கும் வந்தார்கள். அந்த அளவிலே அங்கே பல் வேறு திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்படாமலேயே, துவக்கி வைக்கப்படாமலேயே இருந்திருக்கின்றன. நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புவது, மாண்புமிகு முதல்வரவர்கள்



1987 ஏப்ரல் 22] [திரு. எ. எல். ஏ. ஆறுமுகம்]

வரும்போது மதுரையிலிருந்து அவர் செல்லும் இடம்வரை சாலைகளிலுள்ள ஸ்பீட் ப்ரேக்கர்சை நீக்கியிருக்கிறார்கள். அவை இன்னும் போடாமல் இருக்கின்றன. ஸ்பீட் பிரேக்கர்ஸ் என்பது விபத்தைத் தடுக்க அரசு சட்டப்படி போடும் தடை. அதை நீக்கிவிட்டால் விபத்து ஏற்படாமல் இருக்குமா? மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கேட்டபோது, அவற்றைப் போட அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு முதல்வரவர்கள் உடல் நலத்திற்காக ஹெலிகாப்டரில் கூட வரட்டும். அதை வரவேற்கிறேன். ஸ்பீட் பிரேக்கர்ஸ் எடுத்ததை உடனடியாகப் போட வேண்டும். அவர் ஹெலிகாப்டரில் வருவதைப் பற்றிக் கவலையில்லை. அவர் உடல்நலம் சரியாக இருக்க வேண்டும். ஸ்பீட் பிரேக்கர்சை எல்லா இடங்களிலும் எடுத்திருக்கிறார்கள். அவற்றை மீண்டும் போடவேண்டும்.

அடுத்து, மாண்புமிகு முதல்வரவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி அலுவலகம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒவ்வொரு தொகுதியிலும் அலுவலகம் அமைத்துத் தர வேண்டும். அவை நிரந்தரமாக இருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினராக யார் வெற்றி பெற்று வந்தாலும், அது அவர்களுக்கு உதவிகரமாக இருக்க வேண்டும். சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தில் குமாஸ்தா, ஸ்டெனோ போட வேண்டும். தொலைபேசி வசதி எல்லாம் வைத்து முறையாக அது செயல்பட வேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் எப்படி செயல்படுகின்றனவோ, அப்படி இவை செயல்பட மாண்புமிகு முதல்வரவர்கள் உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர்கள் சொல்லும் பதிலைக்கேட்டு நாங்கள் உள்ளாட்சி மன்றங்களுக்குச் சென்று அவைகளைப் பார்க்கும்போது நாங்கள் மனம் புழுங்கும் நிலை ஏற்படுகிறது. அவர்களிடம் ஜீப் கேட்டு, மூன்றாம் பிரஜை போல அலைவது, தபால் எழுதுவது இவையெல்லாம் மிகச் சிரமமாக இருக்கிறது. ஊராட்சி ஒன்றிய ஆணையர், மானேஜர் ஆகியோருக்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அதையெல்லாம் பார்த்து, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் தொகுதி அலுவலகம் வைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 22

அடுத்து தலைமையிடப் பணியாளர்கள் என்று சொல்லும்போது, சட்டமன்றம் கூடும்போது அவர்கள் அலுவலகத்திலேயே இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மக்களுடைய குறைகளைப் பற்றிச் சொல்ல அவர்களிடம் சென்றால், அவர்கள் அதிகாரிகள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, அங்கே இருக்கிறார்கள். வர ஒரு மணி, இரண்டு மணி ஆகுமென்று சொல்லுகிறார்கள். அதனால் அவர்களைப் பார்க்க முடியவில்லை. ஏதாவது ஒரு நேரம், காலை அல்லது மாலையில் அலுவலகத்தில் இருந்தால், நாங்கள் சென்று, தொகுதி மக்களுடைய பிரச்சினைகளைச் சொல்ல வசதியாக இருக்கும்.

அடுத்து ஒரு சம்பவம். கால்நடை மருத்துவமனை விருதுநகர் தொகுதி, குமிளங்குளத்தில் கட்டப்பட்டு, 22—8—1985 ஆம் தேதியன்று கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் திறப்பு விழா செய்யப்படுவதாக இருந்தது. அது ஒத்தி வைக்கப்பட்டது. பல முறை அவர்களைக் கேட்டும் நடைபெறவில்லை. அதைப் பற்றி உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த திரு. ப. உ. ச. அவர்களுக்கு 10—10—1985 ஆம் தேதியன்று தபால் எழுதினேன். திறப்பு விழா செய்யப்படாமல் இருக்கிறது, வேண்டிய நடவடிக்கை எடுத்து; திறப்பு விழா செய்ய வேண்டுமென்று எழுதினேன்.

(மாலை 4.50)

அதற்கு கடிதம் அரசினுடைய ஆணையாளர் மற்றும் அரசு செயலாளர் அவர்களிடமிருந்து, வேளாண்மைத் துறையிலேயிருந்து வருகிறது. இந்த 1986 ஆம் வருடம் 12 வது மாதம் கடிதம் வருகிறது. பதில் வருகிறது. 10—10—1985-ல் எழுதிய தபாலுக்கு பதில் வந்திருக்கிறது. 5—12—1986-ல் எழுதப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி கால்நடை மருத்துவமனை இல்லை என்று எழுதுகிறார்கள். ஒரு லட்சம் இரண்டு லட்சம் போட்டு கட்டிய மருத்துவமனை மறைந்து விட்டதா? அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திறப்பு விழா செய்யப்படவில்லை. அந்த மருத்துவ மனையே அங்கே இல்லை என்று சொன்னால் என்ன அர்த்தம்? எனக்குத் தெரியவில்லை. கால்நடை மருத்துவமனை தலைமை அலுவலகம் ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கின்றது. ஆனால் பரிசீலனை பண்ணிக் கொண்டிருக்கின்றது. திறப்பு விழா செய்வதற்கு என்று சொல்கின்றார்கள். (குறுக்கீடு) உள்ளாட்சித் துறை அமைச்சர் அதாவது . . .



1987 ஏப்ரல் 22]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இங்கே பார்த்து பேசுங்கள். அப்படியெல்லாம் பேசினால் முடித்து விடுங்கள். வேலையே ஓடாது. அவர் பேசக் கூடாது. அப்படி பேசினாலும் அவரைப் பார்த்து நீங்கள் பேசக்கூடாது அங்கே பார்த்து பேசக்கூடாது.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** அவர்கள் என்னைப் பார்த்துப் பேசுகிறார்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசினாலும் அவரைப் பார்த்து பேசக் கூடாது.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்திலே சட்டமன்ற பேரவைச் செயலகத்திலே தினக் கூலி வாங்குகின்றவர்கள் பலர் வேலை செய்கின்றார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிலே பெண்கள் பலர் இருக்கிறார்கள் அவர்களை எல்லாம் நிரந்தரமாக்கித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் வெளியூரிலே இருந்து வந்து போகின்றார்கள். நிரந்தரமாக்கும்வரை அவர்களுக்கு பஸ் கட்டணம் கொடுக்க வேண்டும். அந்தப் பெண்களுக்கு தனி விடுதி அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே ஆசிரியர்கள் போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்த தலைமைச் செயலகத்திலே உள்ள ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கின்றார்கள். இன்னும் அவர்களை வேலையில் சேர்க்காமல் இருக்கிறார்கள். அவர்களை வேலையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. மக்கள் குறை தீர்க்கும் நாள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் வாரம் ஒரு முறை கூட்டுகின்றார்கள். திங்கட்கிழமை தோறும் கூட்டுகின்றார்கள். கூட்டிய உடனே என்ன சொல்கிறார்கள்? இன்று தேதி 22—4—1987 என்று இருந்தால், அன்றைக்கு எழுதிக் கொடுத்தால், அதற்குப் பிறகு 22—5—1987 அன்றைக்கு வா என்பார்கள், அன்றைக்குப் போனால் அதற்குப் பிறகு 22—6—1987 அன்றைக்கு வா என்பார்கள். அதைத்தான் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

[திரு. ஏ. எல். ஏ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 22

அதுதான் நடக்கிறதே தவிர, மக்கள் குறை தீர்க்கும் நாள் ஒழுங்காக நடக்கவில்லை. உள்ளபடியே மக்களுக்கு இருக்கக் கூடிய குறைகளைத் தீர்க்க இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. காமராஜர் மாவட்டத்திலே அருப்புக் கோட்டைத் தொகுதியிலேயுள்ள வெப்பம்தட்டையிலே மக்கள் குறை தீர்க்கும் நாள் விழாக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருவதாக இருந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மனுக்களை வாங்காமலேயே காத்துக் கொண்டிருந்தார்கள். அவர் சாயங்காலமாக வந்து 800 மனுக்களை பொட்டலமாகக் கட்டிக் கொண்டு வந்தார்கள். என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடத்தப் படுகின்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் இப்படித்தான் நடந்து கொண்டிருக்கின்றது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்னொன்று. அருப்புக்கோட்டை தொகுதியைச் சேர்ந்த 14 பஞ்சாயத்துக்களும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத் திலே இருக்கின்றன. அந்தக் கிராமங்களை எல்லாம், அந்த ஊராட்சிகளை எல்லாம் காமராஜர் மாவட்டத்திலே சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம் கட்டுவதிலே மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. அதற்கு அதிகமான பணத்தை ஒதுக்கி சீக்கிரமாக கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விருதுநகர் தொகுதி, ஆவுடையாபுரம் ஊராட்சி மன்றத்திலே குடிநீர் தொட்டி திறப்பு விழா. அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் செய்கிறார். அதற்காக நான் இதை சொல்கிறேன். அங்கே இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினரைத் தலைமையாகப் போடுகின்றார்கள். இவர் திறந்து வைத்து நான் வாழ்த்துரை சொல்ல வேண்டி யிருக்கின்றது. தொகுதியிலே இருக்கின்ற குடிநீர் தொட்டியைத் திறப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர் தலைமை வகிக்கலாம்.



1987 ஏப்ரல் 22] [திரு. ஏ. எல். ஏ. ஆறுமுகம்]

நாடாளுமன்ற உறுப்பினர் வாழ்த்துரை வழங்கலாம். இது [illegible] எதிர் கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்த ஃபங்க்ஷனிலே தலைமை வகிக்கக் கூடாது என்று திட்டம் போட்டு காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். இதையெல்லாம் அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. காமராஜர் மாவட்டத்திலே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முறையாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மரியாதையைக் கொடுக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். இன்னொன்றுகூட சொல்வேன். ஏடுகளிலே வந்த செய்திப்படி சொல்கிறேன். செங்கை மாவட்டத்திலே அச்சிறுப்பாக்கம் பற்றி சொல்கிறேன். அங்கே செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார். அதாவது வறட்சி என்று சொன்னால் தென்னை மரங்கள் காய வேண்டும். என்னென்னமோ கணக்குகளை எல்லாம் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் தான் வறட்சி என்று சொல்லுவோம் என்கிறார்கள். அதாவது வறட்சி என்று சொல்ல வேண்டுமென்றால் தென்னை மரங்கள் [illegible] வேண்டும். [illegible] விட வேண்டும், ஆடு மாடுகள் [illegible] வேண்டும். [illegible] போட வேண்டும், பூமி வெடிக்க வேண்டும். இவை எல்லாம் இருந்தால்தான் நாங்கள் வறட்சி என்று சொல்லுவோம் என்கிறார்கள். இப்படி மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்கிறார். இவை எல்லாம் சரிதானா? மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இந்த மாதிரி எல்லாம் நீங்கள் சொல்லியிருக்கிறீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

[illegible] அதுபோல, ஒண்டிப்புலி கல் குவாரியில் விருதுநகருக்கு குடிதண்ணீர் எடுக்க அதன் உரிமையாளர் மெட்ராஸ் சிமெண்ட்ஸ் அதிபர், இராமசுப்பிரமணிய ராஜாவை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும் நானும் விருதுநகர் நகர மன்றத் தலைவரும் சென்று பார்த்தோம். அவர் தண்ணீரை எடுக்க சம்மதித்தார். பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்து அங்கே அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். ஆனால் [illegible] என் பெயரைப் போடவில்லை, கலெக்டரை கேட்டதற்கு, நகர மன்றத் தலைவர் அவசரமாக கல்லை போட்டு விட்டார்கள். அதனால் உங்கள் பெயரை விட்டுவிட்டார்கள்.

[திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 22

என்று சொல்கிறார்கள். பெயரை போட மறந்து விட்டது, பார்த்து போடுகிறோம் என்று இப்போது சொல்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களைப் போட மட்டும் ஏன் மறக்கிறது? அப்படி என்றால் மற்ற தலைவர்களுடைய பெயர்களை எல்லாம் போடுகிறார்களே. சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களை மட்டும் போட மறந்து விடுகிறது என்றால், அதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இவைகளை எல்லாம் சரி செய்து ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 4.38-க்கு பேச ஆரம்பித்தீர்கள். 18 நிமிடங்களாக பேசிக் கொண்டிருக்கிறீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 1985 ஆம் வருட பட்ஜெட்டில் சிவகாசியிலும், விருதுநகரிலும் ஆய்வாளர் அலுவலகம் கட்டப்பட இருக்கிறது என்று சொல்லியிருந்தார்கள். அப்படி கட்டவும் பட்டன. திறப்பு விழா என்று வருகிறபோது மாண்புமிகு முதலமைச்சர் வந்தபோது சிவகாசியில் திறந்து வைக்கப்பட்டது. ஆனால் விருதுநகரில் அது திறந்து வைக்கப்படவில்லை. விருதுநகரில் மட்டும் ஏன் திறந்து வைக்கவில்லை? 4 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட அலுவலகம் திறந்து வைக்கப்படுகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் பால்கிருஷ்ணன் இருக்கிறார்களே, அவர்கள் ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர். நான் ஜனதா கட்சி உறுப்பினர் என்பதால் அதைத் திறக்க மறுக்கிறார்களா? 12 லட்சம் ரூபாய் செலவழித்து கட்டியதை திறக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன். இவைகளைப் பற்றியெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டால் திரிமாதிரி சில திறப்பு விழாக்கள் செய்யப்படாமல் இருக்கின்றன என்று அவர்கள் சொல்கிறார்கள். மேலும் இதைப்பற்றி கேட்டால் அங்கேயுள்ள ஊர் பொது மக்கள் கேட்கவில்லை என்று சொல்கிறார்கள். ஊர் பொது மக்கள் திறப்பு விழாவை சொல்லிக் கேட்டார்கள் என்று சொல்கிறார்களா? இன்னொன்றையும் சொல்கிறார்கள். சின்ன முறையில் திறப்பு விழாக்கள் செய்யாமல் பெரிய அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



1987 ஏப்ரல் 22] [திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்]

என்று சொல்கிறார்கள். ஆனால் இதற்கு முன்பெல்லாம் என்ன [illegible] சதுக்கங்கள் கூட்டங்களை எல்லாம் [illegible] அவர்களே ஏற்பாடு செய்து நடத்தியிருக்கிறார்களே, இப்போது மட்டும் எதிர்க் கட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி என்பதால் இப்படிப்பட்ட நிலைமையா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, நில வரியைப் பொறுத்தவரையில் தமிழகம் முழுவதும் வறட்சி இருக்கும்போது முறையாக தள்ளுபடி செய்யாமல் வசூல் செய்யப்படும் நிலை இருக்கிறது. உடனடியாக ஓர் உத்தரவு மூலமாக நிலவரி வசூலை நிறுத்தி வைக்க வேண்டும். இந்த கடுமையான வறட்சி நேரத்தில் விவசாயிகளிடமிருந்து கடன் தவணைகளை வசூலிக்காமல், அவர்களை தொல்லைகளுக்கு ஆளாக்காமல் விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வறட்சியின் காரணமாக வட்டி கடன் பாக்கிகளை தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதனால் கூட்டுறவு வங்கிகளுக்கு இன்றையதினம் பணப் பற்றாக்குறை இருக்கிறது. கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு பணம் தராத நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி அரசு பணம் தராத நிலை இருந்தால் எப்படி அவர்கள் சரியாகச் செயல்பட முடியும்? ஆகவே, தள்ளுபடி செய்யப்பட்ட வட்டி கடனை உரிய காலத்தில் அரசு அந்த கூட்டுறவு வங்கிகளுக்கு தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

அடுத்து, நில அளவு செய்வதைப் பொறுத்தவரையில் பல்வேறு குறைகள் இருக்கின்றன. கல் போடுவதற்கு 25 ரூபாய் கேட்கிறார்கள். அதையும் சரியாக அளந்து கொடுப்பதும் இல்லை. ஒருவர் நிலத்தில் இன்னொருவர் நிலத்து கல்லை போடுவதால் பல இடங்களில் சண்டைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் சரி பார்த்து, நல்ல முயற்சிகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என் பேச்சை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜனதா கட்சி உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது மேதகு ஆளுநர் அவர்களுக்கு அதிகாரம் [illegible] இருந்த காலத்தில் தி.மு.க. ஆட்சியையும்,

[திரு. ஜி. கே. ஜெ. பாரதி] [1987, ஏப்ரல் 22

அண்ணா தி.மு.க. ஆட்சியையும் கலைத்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது மாண்புமிகு உறுப்பினர் திரு. [illegible] அவர்களுடைய கொள்கையா அல்லது அகில இந்திய ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகரன் அவர்களுடைய கொள்கையா என்று நான் அறிய விரும்புகிறேன். மேலும் அவர்கள் கட்சி 1977-ல் ஆட்சி கட்சியாக, ஜனதா கட்சி மத்திய அரசை ஆண்டு கொண்டிருந்தது. அப்பொழுது [illegible] அமைச்சராக இருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள் ஒன்பது சட்ட மன்றங்களைக் கலைத்திருக்கிறார்கள். அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

(மாலை 5-00)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: 1975 இல் அல்ல. 1977-ல்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: 1977 என்றுதான் நான் சொன்னேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: அப்பொழுது இருந்த சட்டசபைகளைக் கலைத்ததற்குக் காரணம், ஐந்து வருடங்களாக இருந்ததை ஆறு வருடங்களாக உயர்த்தினார்கள். மாண்புமிகு பிரதம அமைச்சராக இருந்த இந்திரா காந்தி ஆட்சிக் காலத்திலே ஆறு வருடங்களாக நீட்டிக்கப்பட்டது. அப்படி அதிகமாக இருந்த காரணத்தினாலே அவைகள் கலைக்கப்பட்டன. இன்னொன்றையும் நான் [illegible] விரும்புகிறேன். அப்பொழுது இருந்த நிலைமையெல்லாம் உங்களுக்குத் தெரியும். சில மாநிலங்களிலே—ஒரு தொகுதியிலே கூட வெற்றி பெறாத சில மாநிலங்களும் இருந்தன—அவைகளையும் கலைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டோமே தவிர, ஜனநாயக முறைப்படி ஜனதாக் கட்சி அப்பொழுது [illegible] செயல்பட்டது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே, கோரிக்கை எண்கள் 1, 9, 11, 41 மற்றும் 48 ஆகியவற்றின் கீழ் 143 கோடியே 67 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப் பெற வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய [illegible] கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். முதற்கண் என்னுடைய



1987, ஏப்ரல் 22] [திரு. பி. என். இராமச்சந்திரன்]

தொகுதியின் சார்பில் ஒருசில கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் எடுத்து வைத்து, பின்னர் நான் மானியக் கோரிக்கைகளைப் பற்றிப் பேசலாம் என்று கருதுகிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதியில்—எனது தொகுதியின் [illegible] [illegible] பட்டுக்கோட்டை [illegible], செம்பங்காடு, ஆத்திகோட்டை, நாட்டுச்சாலை, [illegible], வெண்டார்கோட்டை, துவரங்குறிச்சி ஆகிய பகுதிகள் வரை ஏறத்தாழ 14 கிலோ மீட்டர் சாலை, 1981-ஆம் ஆண்டு ஆர். ஆர். திட்டத்தில் எடுக்கப்பட்டு, தார்ச் சாலையாக மாற்றியமைக்கப்பட்டது. அந்தச் சாலையை அமைப்பதற்கு நிலமும் கையகப்படுத்தப்பட்டதில் மிகவும் ஏழை எளிய மக்களின நிலமும் பிடிபட்டிருக்கிறது. ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலங்கள் உள்ள மக்கள் தங்கள் நிலங்களை இந்தச் சாலைக்காக விட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

அதேபோல இன்னொரு பகுதி, கல்யாணங்காடு, [illegible] ஆகிய பகுதி. அங்கே ஒரு நான்கு கிலோமீட்டர் சாலை.

இப்படி இரண்டு பகுதி சாலைகளுக்காக நிலத்தைக் கையகப்படுத்தி, அந்த நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, [illegible] ஆண்டுகள் ஆனாலும்கூட பல்வேறுபட்ட சாலைப் போக்குவரத்துகளுக்காக—இன்றையதினம் பேருந்துகள் எல்லாம் ஓடுகின்ற வகையிலே அந்தச் சாலைகள் அபிவிருத்தி அடைந்திருந்தாலும் கூட,—அந்தச் சாலைகளை அளித்த ஏழை எளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னும் அரசு பணம் கொடுக்கவில்லை. அதிகாரிகளைக் [illegible] கேட்கின்ற நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் [illegible] [illegible] வட்டத்தில், கோட்டத்தில் இருக்கிற [illegible] அதிகாரிகள் சொல்கிறார்கள். மாவட்ட ஆட்சித் [illegible] கேட்போமேயானால் ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் [illegible] நிலைமை கேட்க வேண்டுமென்று சொல்கிறார்கள். [illegible] உறுப்பினராகிய நான் அந்தப் பகுதிக்கு மக்களின் [illegible] [illegible] சென்றபொழுது, இந்தக் [illegible] [illegible] நான் மீண்டும் வருகின்றபொழுது [illegible] என்று சொன்னேன். மீண்டும் [illegible] [illegible] நிலைதான் இருக்கிறது. ஆகவே, [illegible] மாண்புமிகு [illegible] அந்தத் தொகுதி

மக்களுடைய கோரிக்கையாக இருக்கின்ற, ஏழை எளிய மக்கள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் உள்ளவர்கள் அந்தச் சாலைக்காக விட்டுக்கொடுத்த நிலங்களுக்கு உரிய பணத்தை உடனடியாகக் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும், உத்திரவிட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நமது மரியாதைக்குரிய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் தமிழகத்தின் முதலமைச்சரவர்கள் பட்டுக்கோட்டையில் இருக்கின்ற அதிராம்பட்டினத்திற்கு ஒரு துவக்க விழாவிற்கு 1981 ஆம் ஆண்டு வருகை தந்தார்கள். வருகை தந்த அவர்கள் அந்தத் தொகுதி மக்களின் மத்தியில் ஒரு அறிவிப்பைத் தந்தார்கள். அதிராம்பட்டினத்தைத் தனித் தாலுக்காவாக மாற்றித் தருகிறேன் என்ற அறிவிப்பை அந்த நேரத்தில் அவர்கள் சொன்னார்கள். பட்டுக்கோட்டை தாலுக்காவைப் பொறுத்தவரைக்கும் ஒரு பெரிய பகுதியாக இருக்கிறது. அதிலே பட்டுக்கோட்டை ஒன்றியம், மதுக்கூர் ஒன்றியம் ஆகிய பகுதிகளும், பேராவூரணி ஒன்றியத்தைச் சேர்ந்த பகுதியும் பட்டுக்கோட்டை தாலுக்காவில் இருக்கின்றன. ஆகவே, மிகப்பெரிய பகுதியாக இருக்கின்ற அந்தப் பட்டுக்கோட்டை தாலுக்காவை இரண்டாகப் பிரித்து மதுக்கரையைத் தலைமையிடமாகவோ அல்லது அதிராம் பட்டினத்தைத் தலைமையிடமாகவோ கொண்டு ஒரு தாலுக்காவாகப் பிரித்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்னொன்றையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அண்மையிலே மைய நிபுணர் குழு தமிழகத்தின் வறட்சி நிலைமையைப் பார்வையிட வந்தபோது தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் வரவில்லை. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. தஞ்சை மாவட்ட மக்கள் இன்றைக்கு கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் தென்னை மரங்கள் எல்லாம் கூட பட்டுப்போகின்ற நிலைமைக்கு வறட்சி கடுமையாக இருக்கிறது. இதை எல்லாம் கருத்திற்கொண்டு, மைய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்ற 97 கோடி ரூபாய் கோரிக்கையில் தஞ்சை மாவட்டத்தையும் சேர்த்து





உரிய நிவாரணம் அளிக்க தமிழக அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சமுதாய நீதி கிடைக்க வேண்டுமென்று மிகுந்த கவனம் செலுத்தி, பல்வேறு துறையில் திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் அம்பிரோஸ் கமிட்டி பரிந்துரைகளை அதிகமாகச் செயல்படுத்தி, பல்வேறுபட்ட வகைகளிலே நல்லமுறையில் வளர்ச்சிப் பணிகளை வெகுவேகமாக நடைமுறைப்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். நான் அதை மனதாரப் பாராட்டுகிறேன்.

இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் சமுதாயத்தில் மன்னர்களாக இருந்தவர்கள் ஒழிக்கப்பட்டார்கள்: மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டது. ஆனால் கிராமங்கள், குக்கிராமங்களில் இருந்த மணியக்காரர்கள் அந்தந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையில் மாமன்னர்களாக இருந்து குட்டி இராஜ்ஜியம் நடத்தினார்கள். அப்படிப்பட்டவர்களை தமிழக அரசு நீக்கி, தாழ்த்தப்பட்டவர்களும் மணியக்காரர்களாக, வில்லேஜ் முன்சீப்களாக, கிராம அதிகாரிகளாக வரமுடியும் என்ற நிலையை உருவாக்கி, 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கி, இன்றையதினம் தாழ்த்தப்பட்ட மக்களும் கிராம நல அதிகாரிகள் பொறுப்பில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையை உருவாக்க அடித்தளமாக அமைந்திருந்தது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஏற்படுத்திய திட்டங்கள் என்பதால் நான் அதை முழுமையாக வரவேற்று, இதயசுத்தியோடு பாராட்டுகிறேன்.

இன்றைதினம் சமுதாயத்தில் இருக்கிற மாற்றங்கள், வாழ்வில் இருக்கிற ஏற்றத்தாழ்வுகள் அகல வேண்டுமென்றால் கிராமத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் மாற்றங்கள் உருவாக வேண்டுமென்ற அடிப்படையில் தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மணியக்காரர்களை ஒழித்து கிராமநல அதிகாரிகளைக் கொண்டு கிராமங்களை நல்ல மறுமலர்ச்சியை உருவாக்கி இருக்கிறார்கள். நான் அதை மனதாரப் பாராட்டுகிறேன்.

அதேநேரத்தில் இன்றையதினம் கிராம நல அதிகாரிகள் அவர்களுடைய சொந்த வட்டத்தில் பணி செய்ய, சொந்த வட்டத்திற்கு அவர்களை மாற்றம் செய்ய சட்டத்தில் இடமில்லை. சொந்தக் கிராமங்களில் வசிக்கும்போதுதான் சில பிரச்சனைகள் உருவாக இடமிருக்கும். ஆகவே, அவர்கள் தங்களுடைய சொந்தக் கிராமத்திற்கு வரக்கூடாது என்றாலும் அந்த வட்டத்தில் வேலை பார்க்க அரசு உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றையதினம் மாவட்ட அளவில் வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை என்று இரண்டு துறைகள் மக்கள் நலன் கருதி பணியாற்றி வருகின்றன. உதாரணமாக எடுத்துக்கொண்டால் ஒன்றியங்கள் என்றும் வட்டங்கள் என்றும் நிர்வாக அமைப்பு இருக்கிறது. ஒன்றியத்தில் சேர்மன் என்ற அமைப்பும், அதற்கு மேலே பி.டி.ஓ. என்ற கோட்ட வளர்ச்சி அதிகாரி அமைப்பும், அதற்கு மேலே மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற அமைப்பும் மாவட்டங்களில் இருந்து சிறப்பான முறையில், முறையாக வளர்ச்சிப் பணிகளை நடத்தி வருகின்றன. இந்த அமைப்பு முறையை மாற்றி, தாலுகாவை ஒன்றிய அளவில் உருவாக்கி, இரண்டையும் ஒன்று சேர்த்து பணிகளை மேற்கொண்டால் நிர்வாகச் செலவுகள் குறையும், சிக்கனம் ஏற்படும். ஆகவே, அரசு இதை பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நிர்வாக வசதியை கருத்தில்கொண்டு பல்வேறுபட்ட நல்ல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். மாவட்டங்களைப் பிரித்து, மாவட்டங்களுடைய பரப்பளவைக் குறைத்து, அதிகமான மாவட்டங்களை உருவாக்கினால் நிர்வாக வசதிக்கு ஏற்றதாக இருக்கும் என்று முடிவு செய்து 14 அல்லது 15 மாவட்டங்களாக இருந்ததை 20 மாவட்டங்களாக்கி, அந்த மாவட்டங்களுக்கு நல்ல நிர்வாக வசதிகளையும் பெருக்கித் தந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நல்ல நிர்வாக அமைப்பு அமைவதற்கு காரணமாக அடித்தளமாக அமைந்திருக்கிற காரியத்தைச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசைப் பாராட்டுகிறேன்.





அதைப்போன்று இன்றையதினம் நில உரிமைப் பதிவேடு திட்டம் என்ற ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் நில உரிமைப் பதிவேட்டில் விவசாயிகள் பெறுகின்ற கடன்களையும் சம்பந்தப்பட்ட நிலத்தினுடைய விவரக் குறிப்புகளையும் எழுதியிருக்கிறார்கள்.

(மாலை 5-10)

பத்திரப்பதிவு அலுவலகத்தில் அதைப் பதிவு செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. நான் இந்த நல்ல திட்டத்தினை வரவேற்கிற அதேநேரத்தில் இன்னொரு கருத்தையும் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறை அமைச்சராகவும் இருக்கிறார்கள். அந்த நில உடைமைப் பதிவுப் புத்தகத்தில் கூட்டுறவுத் துறையிலிருந்து பெறுகிற கடனையும் பதிவு செய்ய வேண்டுமென்ற ஒரு உத்தரவை இட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் கூட்டுறவுச் சங்கங்களில் பணம் பெற்றவர்கள் நிலங்களை விற்கிறபோது இந்தக் கடன் இருக்கிறது என்பது சம்பந்தப்பட்ட துறைக்குத் தெரியும். ஆகவே கூட்டுறவுச் சங்கத்திலிருந்து பெறுகிற கடனையும் அதிலே பதிவு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பொறுத்தவரையில் 30 நாட்களும் ஏதாவது ஒரு கூட்டத்தைத் தலைமையிடத்தில் நடத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அதாவது ஸ்டேச்சுட்டரி மீட்டிங் நடத்த வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு இருக்கிறது. வளர்ச்சிக் கூட்டம் மற்றும் ஏதாவது ஒரு பணியை அவர்கள் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவருக்குக் கீழே ப்ராஜக்ட் ஆஃபீஸர் என்ற வகையில் ஒரு திட்ட அலுவலர் இருக்கிறார். அதேபோல் இன்னொரு அதிகாரியையும் டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் ஆஃபீஸர் என்ற அளவில் மாவட்ட ஆட்சியருக்குக் கீழே ஒருவரை நியமித்து அவர் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று மக்களின் குறைகளையும், கோரிக்கைகளையும் அறிந்து என்னென்ன திட்டங்களை அந்தப் பகுதிகளில் நிறைவேற்றலாம் என்பதை ஆய்ந்து அரசுக்குத் தகுந்த தகவல்களைத் தர, கோப்புகளைத் தர ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு அதிகாரியை நியமித்தால்

[திரு. பி. என். இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 22

இன்னும் கொஞ்சம் நல்ல நிலைமையில் நிர்வாக வசதி பெருகும் என்று இந்த நோக்கில் நான் கருத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வொன்றையும் கோடிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். குத்தகை நிலப் பிரச்சினை இருக்கிறது. குத்தகைக்காரர்களுக்கு நிலம் கொடுக்கிறோம். அவ்வாறு நிலம் கொடுப்பதில் உள்ள ஒரு நிலைமையைச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு தினங்களுக்கு முன்புகூட அந்தக் கேள்வி சட்டமன்றத்தில் வந்தது. அப்போது நாவலர் அவர்கள் பதிலளிக்கிறபோது சரியான தகவல் இல்லை என்று சொன்னார்கள். அதில் நான் ஒன்றைக் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு ஏக்கா, இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருக்கின்ற நிலைமையில் உள்ள சில குடும்பத்தினர் மற்றும் விதவைகள் விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். அக் குடும்பங்களில் இளைஞர்களாகவும், சின்ன கைக்குழந்தைகளாகவும் இருக்கின்ற நிலைமையில் அவர்களால் விவசாயம் செய்ய முடியாமல் நிலத்தைக் குத்தகைக்குக் கொடுக்கிற நிலைமை இருக்கிறது. ஆனால் அந்தக் குழந்தைகளைப் பொறுத்தவரையில் 18, 20 வயதைத் தாண்டிய பின் குத்தகை நிலத்தைத் திரும்பப் பெறலாம் என்று நினைத்தால் திரும்பப் பெற சட்டத்தில் இடம் இல்லை. முன்பு அந்த வாய்ப்பு இருந்தது. 1975-ல் என்று நான் கருதுகிறேன், அது எடுக்கப்பட்டு இருக்கிறது. அது ஒரு பாதகமான நிலைமையை ஏழை எளிய மக்களுக்கு உருவாக்குகிறது. எல்லோரையும் ஒரே தராசில், ஒரே நிலையில் எடைபோடுவதென்பது இயலாது. ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று நிலம் வைத்திருப்பவர்கள் சக்திக் குறைவால் வேளாண்மை போட முடியாதவர்களாக இருக்கலாம். ஆனால் பிறகு தனக்கு அந்த வசதி வாய்ப்பு வருகிறபோது அவற்றில் அவர்கள் விவசாயம் செய்ய வசதியாக சட்டத்தில் ஒரு திருத்தம் செய்து குத்தகைதாரர்கள் மீண்டும் நிலத்தை நிலச் சொந்தக்காரர்களிடம் ஒப்படை செய்கிற முறையில் ஏற்பாடு செய்யவேண்டும். அந்த வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்னொன்றையும் கோடிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை. இன்றைதினம் விவசாயத்திற்கு வருமான வரி போடுகிறார்கள். இந்த விவசாய வருமான வரி போடுவதைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டத்தின் சார்பில் ஒன்றை



1987 ஏப்ரல் 22] [திரு. பி. என். இராமச்சந்திரன்]

அழுத்தந்திருத்தமாகக் கூறிக் கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். இது எந்த வகையிலும் நியாயமாகவும் இருக்காது, நீதியாகவும் இல்லை. தென்னந் தோட்டம் வைத்திருப்பவர்களுக்கு வேண்டுமானால் அது சரியாக இருக்கும். ஏலக்காய் தோட்டத்தில் இலாபம் அதிகமாக இருக்கும். ஆனால் வருஷம் பூராவும் விதைத்து 10 மூட்டை நெல்லைக் கூட ஒரு ஏக்கரில் அறுக்க முடியாமல் தஞ்சையில் சிரமப்படுகிற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு வருமான வரி போடுவது எந்த வகையிலேயும் நியாயமற்றது. உடனடியாக அதை நீக்க வேண்டும். புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஏழைகளின் பால் ஈடுபாடு கொண்ட அரசு. ஏறத்தாழ 145 கோடி கூட்டுறவுக் கடன்களை ஏழை எளிய மக்கள் பெரும்பாலும் நன்மை பெறுகிற வகையில் தள்ளிக் கொடுத்திருக்கிறது. அப்படிப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு இதையும் பரிசீலனை செய்து தள்ளிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்று. நிலம் ஒப்படை செய்வதைப் பொறுத்தவரையில், கோவை மாவட்டத்தில் சென்ற ஆண்டு ஒப்படை செய்ததைப் பொறுத்தவரையில் சில கருத்துக்களைக் கூறி இருக்கிறார்கள். புறம்போக்கு நிலங்கள் இருந்தும் கூட நிலம் ஒப்படை செய்யப்படவில்லை. அதற்கான காரணம் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் உதகைமண்டலம் தாலுக்காவை உதகைமண்டலம், குந்தா என்று இரண்டு வட்டங்களாகவும், கூடலூர் வட்டத்தை கூடலூர், பந்தலூர் என்று இரண்டு வட்டங்களாகவும் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, வாய்ப்புத் தந்த தலைவருக்கு நன்றி சொல்லி இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று நிறைவு செய்கிறேன். நன்றி.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வருவாய் துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கை சீற்றங்கள் குறித்த மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லி பேச முற்படுகிறேன்.

இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் மழை பொய்த்துவிட்ட காரணத்தினால் சில மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து வறட்சி பணிகளுக்கான வேலைகளை

செய்துக் கொண்டிருக்கக் கூடிய நேரத்தில் தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் இன்றையதினம் வறட்சி நிவாரணப் பணி என்ற வகையில் எந்தவித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடல் ஓரம் இருக்கக்கூடிய பகுதிகளில் மழை பெய்து இருந்தாலும் மழை பெய்யாமல் இருக்கக் கூடிய கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், சின்னசேலம் போன்ற இடங்களில் மழை இல்லாமல் வாடிக் கொண்டிருக்கின்றது. ஓரளவு தூறல்கள் இருந்தாலும் கூட கிணற்றிலே இருக்கும் தண்ணீரை வைத்து பயிர்கள் சாவி ஆகாமல் இருக்கும் வகையில் பயிர் செய்து கொண்டிருந்தார்கள். இன்றையதினம் அதற்குக் கூட வழி இல்லாமல் பயிர்கள் காய்ந்து கொண்டிருக்கின்றன. குடிதண்ணீருக்கே பிரச்சினையாக இருக்கிறது. இந்த நேரத்தில் அந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்காமலும், குடிநீர் பிரச்சினை தீர்க்கப்படாமலும் இருக்கிறது. ஆகவே உடனடியாக என்னுடைய பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத்தோடு மாவட்ட பிரிவினை குறித்து, மாவட்டங்களில் நிர்வாகம் சீராக நடைபெற வேண்டும் என்று நினைக்கக் கூடிய நேரத்தில் தென்னாற்காடு மாவட்டத்தை மட்டும் ஏனோ பிரிக்காமல் காலம் கடத்திக் கொண்டே இருக்கிறார்கள். பிரிக்கப்படுமா பிரிக்கப்படாதா என்ற ஐயப்பாடே இப்போது இருந்து கொண்டிருக்கிறது. அத்தோடு ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரிக்கிறபோது 7 சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது 5 சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தொகுதிகளாக பார்த்து பிரிக்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 21 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கிற ஒரு பெரிய மாவட்டமாக விரிந்து பரந்து இருக்கிறது. எனவே இந்த மாவட்டத்தை 3 மாவட்டங்களாக பிரிக்க வேண்டும் என்று நான் மெற்ற முறை கூட சட்ட மன்றத்தில் எடுத்துக் கூறியிருந்தேன்.

விழுப்புரத்தை தலைநகரமாகக் கொண்ட ஒரு மாவட்டமும் கடலூரை தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டமும், கள்ளக்குறிச்சியை தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டமும்





பிரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தேன். கள்ளக்குறிச்சியை தலைநகரமாக வைத்து சங்கராபுரம் தாலுக்கா பிரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நெடுநாட்களாக இருந்து கொண்டிருக்கிற நேரத்தில், பல பகுதிகளிலும் தாலுக்காக்களைப் பிரித்திருக்கிறார்கள். கள்ளக்குறிச்சி தாலுக்கா பிரிக்கப்படவில்லை. கள்ளக்குறிச்சி தாலுக்காவை பிரித்து சங்கராபுரம் தாலுக்கா அமைய வேண்டும். எனவே சங்கராபுரத்தை ஒரு தாலுக்காவாகவும் கள்ளக்குறிச்சியை ஒரு தாலுக்காவாகவும் பிரித்து கோட்ட தலைநகரமாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, உளுந்தூர் பேட்டை, திட்டக்குடி போன்ற தாலுக்காக்களையும் கள்ளக்குறிச்சியோடு சேர்த்து இந்திரா காந்தி அவர்களின் பெயரால் ஒரு மாவட்டத்திற்கு பெயர் வைக்க வேண்டும் என்று நான் ஏற்கெனவே சட்டமன்றத்திலே கூறியிருந்தேன். அதையே மீண்டும் வலியுறுத்துகிறேன்.

அடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பற்றி. அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் கடிதங்களை எழுதினால் பதில் அளிக்க வேண்டும். மைய அரசிலே இருக்கக் கூடிய அதிகாரிகளாக அல்லது அமைச்சர்களாக இருந்தாலும் சரி, எழுதுகின்ற கடிதங்களுக்கு 10 நாட்களுக்குள் பதில் கடிதம் எழுதி விடுகிறார்கள். ஆனால் தமிழக அரசில் இருக்கிற பல அலுவலகங்களுக்கு அப்படி எழுதினால் பதில் வருவதில்லை. அவைகளை மாற்றி, சம்பந்தப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு யாராக இருந்தாலும் சரி உடனடியாக பதில் கடிதங்கள் எழுதுகின்ற அளவுக்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தாலுக்கா அலுவலகங்களுக்கு தாலுக்கா தலைநகரங்களுக்கு வருகிறபோது எந்தவித முன் அறிவிப்பும் இன்றி வந்து கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு முன்னாடியே தெரிவிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எந்த நகரங்களுக்கு வந்தாலும் எங்களுக்கு கடிதம் எழுத வேண்டும். ஏதாவது நிகழ்ச்சிகள் இருந்தால் எங்களுக்குத் தெரிவித்து வரச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நேற்று நான் தினம் கூட நான் சட்டமன்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தாலும்

மாவட்ட ஆட்சித் தலைவர் எனக்குத் தெரியாமல் கள்ளக்குறிச்சியில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறார்கள். இது எந்த வகையில் நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. இதை ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் வெட்டப்படாத ஒரு கால்வாய்க்கு தண்ணீர் வருகிறது என்று சொல்லி வசூல் செய்கிறார்கள் ஏரிகளை ஒட்டி வெட்டும்போது அங்கே, பைங்கா நத்தம் பரிசந்துறை தொட்டியம், மணச்சநாதபுரம் ஆகிய கிராமங்களுக்கு வெட்டப்பட்டிருப்பதாக ஏட்டிலே எழுதப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(மாலை 5-20)

அந்த வாய்க்கால் வெட்டப்படவில்லை. வானம் பார்த்த ஏரியாக அங்கு மேட்டுப் பகுதியிலிருந்து ஓடிவருகிற தண்ணீர் தான் வந்து கொண்டிருக்கிறது. அதற்கு நிலவரி என்று வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைய நிலைம் விதித்துக் கொண்ட மக்கள் அதைக் கட்ட முடியாது என்று சொல்கிறபோது கட்டித் தான் ஆக வேண்டும், இதுநாள் வரையில் கட்டியிருக்கிறீர்கள், இனிமேலும் கட்டத்தான் வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி கட்டவில்லையென்றால் ஜப்தி நடவடிக்கை மேற்கொள்வோம் என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் கண்டித்து ஒரு வாரத்திற்கு முன்னால் கூட வட்டாட்சியர் அலுவலகத்தில் உண்ணாவிரதம் மேற்கொண்டு இருக்கிறார்கள். வெட்டப்படாத வாய்க்காலுக்கு, நீர் பாயாத நிலங்களுக்கு அந்த வகையில் வரி வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். புரியாத புதிராக இருந்து கொண்டிருக்கிறது. இதை உடனடியாக கவனம் செலுத்தி இந்த வரி வசூலை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடியிருப்பதற்கு வீட்டு மனைப் பட்டா வேண்டு மென்று ஆதி திராவிட மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு மனுக்களை அவர்கள் கொடுத்திருந்தாலும் வீட்டு மனைப் பட்டா கொடுக்கப்படாமல் அவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி பல முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லியும் எதிர்க்கட்சி என்பதால் எடுக்கவில்லையோ என்ற அச்சம் எனக்கு இருந்து கொண்டிருக்கிறது.





அந்த அளவிற்கு பல கிராமங்களுக்கு என்னுடைய தொகுதியில் வீட்டு மனைப் பட்டா கொடுக்காமல் காலம் கடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கள்ளக்குறிச்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் விளம்பார், காட்டானந்தல், ஒச்சியம், தென்புரசலூர், வானவரட்டி, சிறுமங்கலம், பெருமங்கலம் ஆகிய கிராமங்களிலும், சின்னசேலம் ஒன்றியத்தில் வி. மாணாம்பாடி, கரும்குழி, கரும்பாகுறிச்சி, செம்பாகுறிச்சி, நல்லகுப்பம், வெட்டிப்பரவா நகரம், கல்லா நத்தம், திம்மாபுரம், பாண்டியன்குப்பம், ஈசாந்தை ஆகிய கிராமங்களிலும் ஆதி திராவிட மக்கள் வீட்டு மனைப் பட்டா கேட்டு மனு செய்திருந்தும், இதுவரையில் அதைக் கொடுப்பதற்கு அவர்கள் முன்வரவில்லை. எனவே இதை யெல்லாம் கவனத்தில் கொண்டு உடனடியாக அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர், தாசில்தார் ஆகியோரின் நிர்வாகத்தில் இருக்கிற அலுவலகக் கட்டடத்தை கள்ளக்குறிச்சியில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். ரெவின்யூ ஆய்வாளர்களின் வீடுகளையும் திறந்து வைத்தார்கள். திறந்து வைத்த கல்லைக் கூட அந்த வீட்டில் எடுத்து வைக்கவில்லையென்றால் அந்தத் துறையில் இருக்கிற அமைச்சருக்கும், அந்தப் பகுதியில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினருக்கும் எந்த அளவிற்கு அலட்சியம் காட்டுகிறார்கள் என்பதை கண்கூடாக பார்த்துத் தெரிந்து கொண்டிருக்கிறேன். எனவே, இவற்றையெல்லாம் மனதில் கொண்டு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நில உடைமைப் பதிவேட்டுத் திட்டத்தில் இன்றைக்கு நிலங்களை அளந்து தனிப்பட்ட முறையில் பட்டாக்களைப் பிரித்துக் கொண்டிருக்கிறார்கள், வரைபடங்களை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், கடந்த காலத்தில் கொடுக்கப்பட்ட வரைபட பதிவேட்டையும் பாருங்கள். இப்போது கொடுக்கக் கூடிய பதிவேட்டையும் பாருங்கள். நீண்ட காலத்திற்கு வராத அளவிற்கு சாதாரண பேப்பராக இருந்து கொண்டிருக்கிறது. இன் இப்படி கனமான பேப்பரில் கொடுக்க வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன். இந்தத் திட்டத்திற்குத் தனியாக

அதிகாரிகள் செயல்படுகிறார்கள். அவர்கள் சம்பந்தப்பட்ட விவசாயிகளைப் பார்த்து நிலத்திற்கு நேரடியாகச் சென்று, அவர்களை வைத்துக் கொண்டே அளக்க வேண்டுமே தவிர, எங்கோ வீட்டில் உட்கார்ந்து கொண்டு வரைபடத்தை வைத்து அதனைத் தயாரிப்பது சரியாக இருக்காது. இவர்கள் இப்படி செய்து கொண்டு கிராமங்களில் கெடுபிடி சண்டைகளைத்தான் செய்து கொண்டிருக்கிறார்களே தவிர மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கையை தராமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவற்றை பரிசீலித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வாய்ப்பினை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. தமிழரசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை கோரிக்கையின் மீது இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். வருவாய்த் துறை தமிழகத்தின் நிர்வாகத் துறைகளில் ஒரு மிகப் பெரிய துறையாக இருந்து கொண்டிருக்கிறது. சாதாரண ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட தொழிலாள மக்களுடைய பிரச்னைகளை நாள்தோறும் சந்தித்துக் கொண்டிருக்கிற துறையான இந்தத் துறையின் மீது நான் சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்படி, நில உச்சவரம்புச் சட்டத்தின்படி 15 ஏக்கருக்கு மேல் ஒருவரும் வைத்திருக்கக்கூடாது என்பது வெறும் சட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் பெரும் செல்வாக்கு படைத்தவர்களும், அரசியலில் கூட மிக முக்கியமாக இருந்து கொண்டிருப்பவர்களும் ஆயிரக்கணக்கான ஏக்கர்களை பினாமி பெயரிலேயும், டிரஸ்டுகளின் பெயரிலேயும் இன்றைக்கு வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இது 40 ஆண்டுக் கால சுதந்திரத்திற்குப் பிறகும், ஜமீன்தார் முறை ஒழிக்கப்பட்டு விட்டது என்று நாம் சொல்லிக் கொண்டிருப்பதற்குப் பிறகும் இன்றைக்கு கிராமப்புறங்களில் ஒரு நிலப் பிரபுத்துவ அமைப்பை கட்டிக் காத்துக் கொண்டிருக்கிறது.





தஞ்சை மாவட்டத்திலேயும், தென் ஆர்க்காடு மாவட்டத்திலேயும் இப்படிப்பட்ட பெரும் நிலப் பிரபுக்கள் இன்றைக்கு பெரும் அரசியல் செல்வாக்கோடு இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே இவைகளை எல்லாம் கண்டறிந்து, யார், எவர் என்று தயவுதாட்சண்யம் இன்றி அந்த பினாமி நிலங்களை எல்லாம் அரசு கையகப்படுத்தி, இன்றைக்கு கிராமங்களிலே விவசாயத் தொழிலிலே, சாதாரண நாற்று நடுதல், களை பதித்தல், ஏர் அடித்தல் போன்ற அடிப்படைக் காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த பினாமி நிலங்களை எல்லாம் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த அரசை வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோல் டி.சி. புறம்போக்கு நிலங்களை எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தர வேண்டும் என ஒரு நடைமுறையும் மரபும் இருந்து வருகிறது. ஆனாலும், இன்றையிலும தமிழகம் முழுவதிலும் இருக்கிற டி.சி. புறம்போக்கு நிலங்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தரப்பட்டிருக்கிறதா என்று ஆராய்ந்தால், அவைகளை எல்லாம் பினாமிகள் பெயரில் யார் யாரோ வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் வீட்டு வேலைக்காரன் பெயரிலும், தங்கள் நிலத்தில் கூலிக்காரனாக இருந்து கொண்டிருக்கின்றவர்களுடைய பெயரிலும், அந்த நிலப் பிரபுக்கள் டி.சி. புறம்போக்கு நிலங்களை வைத்துக் கொண்டு; அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சாதாரண ஏழைகளாக இருந்து கொண்டிருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இவைகளை வழங்க வேண்டும். இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறது. எனவே உடனடியாக ஒரு கணக்காய்வு செய்து, அனைத்து டி.சி. புறம்போக்கு நிலங்களையும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கோயில்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. இப்படி கோயில்களுக்குச் சொந்தமான அந்த நிலங்களை பல நிலப் பிரபுக்கள் குத்தகைக்கு எடுத்து, அந்த நிலப் பிரபுக்கள் சப்-லீஸ் என்று சொல்வார்களே, அப்படி துணை குத்தகைக்கு அங்கேயிருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கு கொடுத்து, அவர்கள் இன்றைக்கு வைத்துக்

கொண்டிருக்கிறார்கள். மகாத்மா காந்தி அவர்கள் சொல்கிற போது, தாழ்த்தப்பட்ட மக்களை அரிசனங்கள் என்ற பெயரோடு அழைத்தார்கள். அரிசன் என்று நான் ஏன் அழைக்கிறேன் என்றால், அரி என்றால் கடவுள், இவர்கள் எல்லாம் கடவுளின் குழந்தைகள், எனவே நான் இவர்களை அரிசன் என்று அழைக்கிறேன் என்று சொன்னார்கள். எனவே நான் அன்போடு ஒன்றை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தாழ்த்தப்பட்டவர்கள் எல்லாம் கடவுளின் குழந்தைகள் என்று காந்தியார் சொன்ன அந்த வார்த்தை உண்மையாக இருக்குமானால், அது நியாயமாகத் தெரியுமானால், கடவுளின் பெயரால் இருக்கிற அந்த கோயில் நிலங்களை எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கோயில் நிலங்களை எல்லாம் கடவுளின் குழந்தைகள் என்று சொல்லப்படுகிற தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தந்தாக வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

வீட்டு மனைப் பட்டா கூட இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களிடையே ஒரு மிகப் பெரிய பிரச்சனையாக இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு எல்லாம் இலவச வீட்டு மனைப் பட்டா தருகிறோம் என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். முடிந்த வரை தந்து கொண்டிருக்கிறோம். 11 வருடங்கள் ஒரு நிலத்திலே ஒரு தாழ்த்தப்பட்டவனோ அல்லது ஏழைத் தொழிலாளியோ குடிசை போட்டிருந்தால் அந்த நிலத்தை அவனுக்கே தரலாம் என்ற நிலைமை இருக்கிறது. இவற்றை எல்லாம் மாற்றி, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் 5 வருடம் ஒரு நிலத்திலே குடிசை போட்டிருந்தால் அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா தரலாம் என்ற அளவிற்கு சட்டத்தை திருத்தம் செய்து, 5 வருடத்திலே அவர்களுக்குத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தமிழ்நாடு முழுவதிலும் இருக்கிற அனைத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வெகு விரைவிலே வீட்டு மனைகள் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கையை அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





அதேபோல் கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகளுக்கு குறைந்தபட்ச கூலித் திட்டம் இருக்கிறது. இதுவும் வெறும் சட்ட ளவிலும், பெயரளவிலும் இருந்துகொண்டிருக்கிறதே தவிர, இன்றைக்கு தமிழகத்திலே எந்த கிராமத்திற்குப் போய்ப் பார்த்தாலும் இந்த குறைந்தபட்ச கூலி விகிதம் முறையாக தரப்படவில்லை.

சில இடங்களில் தானியங்களுக்கும், சில இடங்களில் வெறும் உணவிற்காகவும், சில இடங்களில் கடனுக்கு வட்டிக்காகவும், சில இடங்களில் வெறும் 4 ரூபாய்க்கும், 2 ரூபாய்க்கும் கூட ஏழை விவசாயிகள், அதுவும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் இன்றைக்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் குறைந்தபட்ச கூலி விகிதச் சட்டம் நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது.

(மாலை 5-30)

எனவே இந்தக் குறைந்தபட்சக் கூலி சரியாக வழங்கப்படுகின்றதா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்வதற்கு—எப்படி தொழிலாளர்களுக்கு ஒரு லேபர் வெல்பேர் ஆபீசர் இருக்கிறாரோ—அதைப் போல ஒரு துணைத் தாசில்தார் தலைமையில் ஒவ்வொரு தாலுகா அலுவலகத்திலும் ஒரு கண்காணிப்புக் குழு போட்டு அந்தக் குறைந்தபட்சக் கூலியை ஒழுங்காகத் தருகிறார்களா என்று சர்க்கார் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாவட்டங்களைப் பிரிப்பது பற்றி கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு வட ஆற்காடு மாவட்டம் பிரிக்கப்பட இருக்கிறது. நாங்கள் நீண்டகாலமாக தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப் பெரும் தலைவராக இருந்த, இந்தியாவின் 20 கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவராக இருக்கின்ற, பேரறிஞர் பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பெயரில் ஒரு மாவட்டம் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். கடந்த மாதம் ஏப்ரல் 14-ந் தேதி அன்று அவர்களுடைய 97-வது பிறந்தநாள் விழா இந்தியா முழுவதும் எல்லோராலும் கொண்டாடப்பட்டது. மாநில அரசும், மைய அரசும் கொண்டாடியது. மைய அரசு விடுமுறை அன்று விட்டது. எங்கள் மாவட்டத்திற்கு அந்த நன்னாளில் அவருடைய பெயர் வைக்கும் அறிவிப்பு வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் ஏமாந்தோம்.

[திரு. கு. தமிழரசன்] [1987 ஏப்ரல் 22

எனவே, இந்த அரசை வேண்டிவிரும்பி கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த நடப்பு ஆண்டிலாவது அல்லது வடஆற்காடு மாவட்டத்தைப் பிரிக்கும்போது, வேலூரைத் தலைநகராகக் கொண்டு பிரிக்கும் மாவட்டத்திற்கு, எங்கள் நீண்டநாளைய கோரிக்கையை ஏற்று டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பெயரை வைக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல கிராமப்புறங்களில் இன்றைக்கு படிப்பற்ற ஏழைப் பாமர மக்கள் ஜாதி சான்றிதழ் வேண்டும், சொத்துச் சான்றிதழ் வேண்டும்; வருமானச் சான்றிதழ் வேண்டும், உணவுப் பங்கீட்டு அட்டை வேண்டும் என்று தங்கள் கோரிக்கைகளை வைத்து வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் போகிறபோது அவர்களுக்குத் தெளிவாக அவற்றையெல்லாம் எப்படி பெறுவது என்று தெரியாமல், அவற்றையெல்லாம் வாங்கமுடியாமல் தவிக்கிறார்கள். வாரக் கணக்காக, அல்லது மாதக் கணக்காக அதற்காக அலைந்து அலைந்து போகக் கூடிய நிலைமை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு ஒவ்வொரு தாசில்தார் அலுவலகத்திலும் ஒரு அறிவிப்புப் பலகை வைத்து, ஒரு வார காலத்திற்குள் அவைகளையெல்லாம் வழங்க அறிவிப்பு வைத்தால் அந்த வேலைகள் எல்லாம் துரிதப்படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இப்போது எல்லாம் ஜனவரி முதல் ஏப்ரல் முடிய தமிழகம் முழுவதும் எல்லா தாலுகா அலுவலகங்களிலும் ஜமாபந்தி முறை வைத்து 2 மாதம் 3 மாதம் அந்தப் பணியில் தாசில்தாரும், மற்ற அலுவலர்களும் ஈடுபடுகிறார்கள். அதனால் ஜாதி சான்றிதழோ, சொத்து சான்றிதழோ வேண்டும் என்றால் அவைகளை வழங்குவதிலே காலதாமதம் ஆக்கப்படுகிறது. எனவே, ஜமாபந்தி முறையை மாற்றி ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு தாலுகா அலுவலகத்திலும் ஜமாபந்தி முறையை வைத்து, ஆண்டு முழுவதும் அதை நடத்தலாம். அதை ஓரிரு மாதங்களில் எல்லா தாலுகா அலுவலகங்களிலும் நடத்தும் திட்டம் இருப்பதனால், இந்தப் பணிகள் எல்லாம் தடைபடுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தீ விபத்து ஏற்படுகிறபோது, அந்தத் தீ விபத்தினால் மரணம் அடைகின்றவர்களுக்கு, ரூ. 2,000 வீதம் நம்முடைய அரசு உதவித் தொகை தருகிறது. தற்போது தரப்பட்டு வரும் அந்த ரூ. 2,000-ஐ குறைந்தபட்சம் ரூ. 5,000 ஆக உயர்த்திக் கொடுத்தால்



1987 ஏப்ரல் 22] [திரு. கு. தமிழரசன்]

தீ விபத்தால் மரணம் அடைகின்றவர்களுடைய குடும்பத்தினருக்கு அது மிக நலமாக இருக்கும். பெருமளவு பாதிக்கப்படுகிறவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களாகவே இருக்கிறார்கள். இந்த தீ விபத்தினால் பல கிராமங்களில் குடிசைகளும், தாழ்த்தப்பட்டவர்களுடைய குடியிருப்புகளும் பெருமளவில் பாதிக்கப்படுவதால், அவர்களுக்கு தீப் பிடிக்காத வீடுகள் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சிதம்பரத்தில் நந்தனார் கல்விக் கழகம் என்று ஒரு கல்விக் கழகம் இருந்துகொண்டிருக்கிறது. இந்தக் கல்விக் கழகம் பழம் பெரும் தலைவர் சகஜாநந்தா அவர்களால் 1952-ல் சிதம்பரத்தில் ஆதிதிராவிட மக்களின் கல்வி வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட ஒரு கல்விக் கழகமாகும். அரசு இதற்காக 1952-ல் 52 ஏக்கர் நிலத்தை கொடுத்திருக்கிறது. 1923 முதல் இந்தக் கல்விக் கழகம் ஆதிதிராவிட மக்களின் கல்வி வளர்ச்சிக்காக சிறப்பான பணியைச் செய்து வருகிறது. இன்றைக்கு கிட்டத்தட்ட 100 ஏக்கருக்கு மேல் அந்தச் சிதம்பரம் கல்விக் கழகத்திற்குச் சொந்தமாக இருக்கிறது. இதில் முறைகேடுகளும், சில சமயங்களில் ஊழல்களும் நடந்து வருவதால், மாவட்ட அளவில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த தலைவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் பல்வேறு வகைகளில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 1959 முதல் 1972 வரையில் கிட்டத்தட்ட 1½ லட்சம் ரூபாய் அளவிற்கு ஊழல்களும், முறைகேடுகளும் நடந்திருப்பதாக இந்தச் சட்டமன்றத்தில் அதற்கான புள்ளிவிவரத்தையும் தந்திருக்கிறார்கள். எனவே, இந்த நிர்வாகத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று நாங்கள் பல்வேறு சமயங்களில் வலியுறுத்தி வந்தோம். அரசு இன்றைக்கு அந்த நந்தனார் கல்விக் கழக நிர்வாகத்தை கையகப்படுத்தி ஏற்றுக்கொள்வதாக சொல்லப்படுகிறது. அதனால் அந்தக் தாழ்த்தப்பட்ட மக்களிடையே ஒரு மகிழ்ச்சி உருவாகி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று காலை கிட்டத்தட்ட 15 நிமிடங்கள் வரை விவாதம் செய்யப்பட்டு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியாகி விட்டது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

[1987 ஏப்ரல் 22

**திரு. கு. தமிழரசன்:** நான் சொல்ல விரும்புவது எல்லாம், நந்தனார் கல்விக்கழகம் இன்றைக்கு சீரோடு செயல்பட வேண்டுமானால் அதற்கு நம்முடைய அரசு ஒரு குழுவை நியமித்து அங்கே இருக்கிற பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து ஒரு டிரஸ்ட்டை அமைக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தீ விபத்தினால் மரணம் அடைந்தவர்களுக்கும், தீ விபத்துக்கு உள்ளாகின்றவர்களுக்கும் எப்படி அரசு நிவாரணம் தருகிறதோ அதைப்போலவே மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாதிக்கப்படுகிற ஏழை எளியவர்களுக்கும் நிவாரணம் தரவேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களிலே ஜாதிக் கலவரங்கள் நடக்கிறபோது தாழ்த்தப்பட்ட மக்களுடைய குடியிருப்புக்கள் தான் கொளுத்தப்படுகின்றன. அவர்கள் மீண்டும் வீடு கட்டி வாழமுடியாத நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, அரசு தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தீப்பிடிக்காத குடியிருப்புகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும்.

தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடிசையில் வசித்த மக்களுக்கு ரூபாய் 300 நிவாரணத்தொகையாகத் தரப்படுகிறது. இந்த 300 ரூபாய் அவர்களுக்குப் போதாது. கடந்த சில மாதங்களுக்கு முன்னால் என் தொகுதியிலே பெரியவேடு என்ற இடத்திலே 75 வீடுகள் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டன. அவர்களுக்கு ரூபாய் 300 தரப்பட்டது. அதை வைத்துக்கொண்டு அவர்கள் ஒன்றும் செய்ய முடியாமல், தங்கள் வீடுகளை இழந்து, சொத்தை இழந்து நின்ற பரிதாபமான நிலையை நான் பார்த்தேன். அவர்களுக்குக் குறைந்த பட்சம் ரூபாய் 2,000 மாவது கொடுத்தால்தான் அவர்கள் மீண்டும் வீடு கட்டிக் கொள்ளவும், அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளவும் வசதியாக இருக்கும்.

குடியாத்தம் என்னுடைய தொகுதியான பேரணாம்பட்டில் இருக்கிறது. இது 80 கிலோ மீட்டர் விஸ்தீரணம் உள்ள தொகுதியாகும். ஆனால் பேரணம்பட்டு குடியாத்தம் வட்டத்திலே இருக்கிறது. எனவே, பேரணாம்பட்டை தலைநகரமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்க வேண்டும்.



1987 ஏப்ரல் 22] [திரு. கு. தமிழரசன்]

வட ஆற்காடு மாவட்டம் வறண்டு கிடக்கிற ஒரு மாவட்டம். அங்கே காவேரி போன்ற எந்த நதியும் இல்லை. கிராமங்களையே அடிப்படையாகக் கொண்ட மாவட்டம். அங்கே இருக்கிற பாலாறு வறண்டு, தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. அதை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள வருவாய்த்துறை மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைச் சொல்லி வருவாய்த்துறை மானியக்கோரிக்கையை நான் வரவேற்றுப் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்றதற்குப் பிறகு, அனைத்துத் துறையிலும் குறிப்பாக வருவாய்த்துறையில், பல்வேறு மறுமலர்ச்சிகளை புரட்சித் தலைவர் அவர்கள் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது. இன்றைக்கு கிராமங்களை நகரங்களாக மாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு, மாவட்டங்களையும், வட்டங்களையும் பிரித்து, கிராமப்புற மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்று சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வங்கிகளை தேசிய மயமாக்குகின்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, அதற்குப் பின்னாலே சாதாரண மக்கள் கூட இன்றைக்கு வங்கிக்குச் செல்லக்கூடிய நிலைமையை ஏற்படுத்தித் தந்தார்கள்.

அதைப்போலவே, ஆண்டாண்டுக் காலமாக இருந்து வந்த, கிராம முன்சீப் பதவிகளை இருந்து வந்த, பரம்பரை முறையை ஒழித்து, 12,000-க்கு மேற்பட்ட படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

[திரு. அ. வெங்கடாசலம்] [1987 ஏப்ரல் 22

(மாலை 5-40)

புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் பல்வேறு மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகள் தொடங்கி நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், அந்த மாவட்டத்தைத் துவக்குகின்ற அந்த நேரத்திலேயும், திருச்சியில் வறண்ட பகுதியையும் தஞ்சை மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகக்கூடிய பகுதியையும் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து நிரந்தரமாக அந்த மாவட்டம் வறட்சிக்கு இலக்காகக்கூடிய மாவட்டமாக உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இன்றைக்கு வறட்சிக்கு இலக்காகக்கூடிய மாவட்டமாக உருவாக்கித் தந்தாலும் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபிறகு இன்றைக்கு அது வளர்ந்து வரக்கூடிய மாவட்டங்களில் ஒன்றாக மக்கள் நல்வாழ்வுப் பணிகளை புதுக்கோட்டை மாவட்டம் பெற்றிருக்கிறது.

இன்றைக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் மிகக் கடுமையான வறட்சி ஏற்பட்டு வறட்சி நிவாரணப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இருந்தாலும் வறட்சி நிவாரணப் பணிகளை நாங்கள் சுற்றிப் பார்க்கின்றபோது, அறிவிக்கப்பட்டு கொடுக்கப்பட்ட நிதியைக்கூட முழுமையாக வறட்சி நிவாரணப் பணிக்குச் செலவு செய்யாமல் காலதாமதம் ஏற்பட்டிருப்பதை நான் இந்த மன்றத்தின் மூலமாக தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குடிநீர் பைப் இல்லாமல் மொத்தமாக அந்த மாவட்டத்தில் 100 கிலோ மீட்டருக்குமேல் குடிநீர் பைப் தேவைப்படுவதையொட்டி அங்கே குடிநீர் பொதுமக்களுக்குக் கொடுக்க முடியாத ஒரு அவல நிலைக்கு இன்றைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு வறட்சி மாவட்டமாக புதுக்கோட்டை மாவட்டத்தை அறிவிப்பதோடு எப்போதுமே வறட்சிக்கு இலக்காகக் கூடிய அந்த மாவட்டத்தினுடைய மக்களின் நல்வாழ்வுக்கான பணிகளைச் செய்வதற்கு அதிகமான நிதியை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஒதுக்குவதோடு வறட்சி நிவாரணப் பணிகள் விரைவாகவும், வேகமாகவும் நடைபெறுவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்கும்படி நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவே, மாவட்டங்களையும், வட்டங்களையும், கோட்டங்களையும் பிரிக்கின்ற புரட்சித் தலைவர் அரசு இன்றைக்கு ஆலங்குடியை கோட்டமாக அறிவிக்க



1987 ஏப்ரல் 22] [திரு. அ. வெங்கடாசலம்]

வேண்டும். 45 ஆயிரம் வாக்காளர்கள் கொண்ட கரம்பக்குடியை ...ரிக்க வேண்டுமென்பது, அந்த மக்கள் நீண்ட நாட்களாக ...வத்திருக்கக்கூடிய கோரிக்கையாக இருக்கிறது. ஆலங்குடியை கோட்டமாகவும், கரம்பக்குடியை ஒரு தனி தாலுக்காவாகவும் அறிவிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருக்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. ஆகவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஆலங்குடியை கோட்டமாக அறிவிக்கக்கூடிய உத்தரவினை வழங்க வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு வருவாய்த்துறை மானியக் கோரிக்கையைப் பொறுத்து பார்க்கின்றபோது கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய சாதாரண மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையை நாம் ஆராய்ந்து பார்த்தால் பயிரிடத்தக்க தரிசு நிலங்களில் பயிரிடக்கூடிய சாதாரண மக்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள விவசாயிகள், ஆதிதிராவிட மக்கள், அப்படிப்பட்ட மக்களுக்கு கொடுக்க வேண்டுமென்று சொன்னாலும் அல்லது பொது நிறுவனங்களுக்கு, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளி இப்படிப்பட்ட பொது நிறுவனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னாலும், நீர்பிடிப்பு இருக்கக்கூடிய அந்தப் பகுதியை கொடுக்க முடியாத ஒரு காலகட்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பொதுப் பணித் துறையாக இருந்தாலும், அல்லது ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நிலமாக இருந்தாலும், பொதுப் பணித் துறையினுடைய பொறியாளர்களுடைய சம்மதத்தின்பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர்களே அந்த நிலத்தை அவர்களுக்கு ஒப்படைக்கக்கூடிய ஒரு உத்தரவினை, ஒரு அதிகாரத்தை நம்முடைய அரசு வழங்கவேண்டுமென்பதை நான் இங்கே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம், இன்றைக்கு என்னுடைய தொகுதியில் மராமடக்கியில் மேய்ச்சல் தரிசு இடத்தை, நீரே தங்காத இடத்தை உயர்நிலைப்பள்ளிக்கு வேண்டுமென்று சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர் அத்தனை பேரும் அந்த நிலத்தை ஒப்படைக்கும் அளவிற்கு, பரிந்துரை செய்தும், 6, 7 ஆண்டுகள் ஆகியும் அந்த நிலத்தை அவர்களிடம் ஒப்படைக்க முடியவில்லை. ஆகவே, இன்றைக்கு அரசு கட்டிடங்கள் கொடுக்கின்றபோது கூட அந்தக் கட்டிடத்தை

[திரு. அ. வெங்கடாசலம்] [1987 ஏப்ரல் 22

எங்கே கட்டுவது என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அந்த நிலத்தை ஒப்படைக்கக்கூடிய அதிகாரத்தை இன்றைக்கு, டிரான்ஸ்பர், அலியனேஷன் . . . என்று சொல்லக்கூடிய அந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரடியாகச் சென்று பார்த்து, இந்த நிலத்தை ஒப்படைக்கலாம் என்று அவர்கள் எண்ணினால் அவர்களுக்கு அந்த அதிகாரத்தை அரசு வழங்க வேண்டுமென்பதை நான் இங்கே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மறுப்பு இல்லாத புறம்போக்கு என்று இப்போது இருக்கிறது. மறுப்பு இல்லாத புறம்போக்கு என்று சொன்னால் நத்தம் புறம்போக்கு, தீர்வை ஏற்பட்ட, தீர்வை ஏற்படாத அந்த நிலங்களை நஞ்சை, புஞ்சை நிலங்களை அங்கே இருக்கக் கூடிய குடிசைவாழ் மக்களுக்கு, ஆதிவாசி மக்களுக்கு, ஆதிதிராவிட மக்களுக்கு கொடுக்கக்கூடிய அந்த அதிகாரத்தை கொடுக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, மறுப்பு உள்ள புறம்போக்கு என்று ஒரு புறம்போக்கு இருக்கிறது. மறுப்பு உள்ள புறம்போக்கு என்று சொன்னால் மேய்ச்சல்கரை புறம்போக்கு, நீர் பிடிப்பு புறம்போக்கு, வாரி புறம்போக்கு, இப்படிப்பட்ட நிலங்களை நீண்ட நாட்களாக அந்த நிலங்களில் குடிசைகளே இல்லாத மக்கள், நிலப் பட்டாவே இல்லாத மக்கள், ஆண்டாண்டு காலமாக அந்தவகையான நிலங்களில் குடிசைகளைக் கட்டி அவர்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வாரி புறம்போக்கு, நீர்பிடிப்பு புறம்போக்கு போன்றவற்றை அவர்கள் ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது; அவைகளுக்குப் பட்டா வழங்கக்கூடாது என்று இப்போது சட்டம் இருக்கிறது.

ஆனால் 30, 35 ஆண்டு காலமாக அவர்கள் குடிசை போட்டுக் கொண்டு அந்த இடத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு அந்த இடத்தை பட்டா போட்டுக் கொடுக்கவேண்டும் அல்லது அவர்களுக்கு வேறு பட்டாவை கொடுத்து வேறு இடத்திற்கு மாற்றம் செய்யவேண்டும். ஆகவே இப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கு [illegible] மாவட்டத்திலும் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட நிலைமையை நம்முடைய அரசு போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 22] [திரு. அ. வெங்கடாசலம்]

ஆக இன்றைக்கு நம்முடைய அரசு நகரப் புற நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் இன்றைக்கு ஒரு கொள்கையை வகுத்து வைத்துக்கொண்டு இருக்கிறது. நகரப் புற நில உச்ச வரம்பு என்று சொல்லுகிறபோது ஒரு குடும்பம் இருப்பது போக மற்றும் கூடுதலாக 500 சதுர மீட்டர் இடத்தை வைத்துக் கொள்ளலாம் என்ற கொள்கையை வகுத்து வைத்துக்கொண்டு இருக்கிறது. இதில் சாதாரணமாக வறுமை கோட்டுக்கு கீழே இருப்பவர்கள், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் முழுமையாக பாதிக்கப்படுகிறார்கள். சட்டம் என்ன சொல்லுகிறது என்று சொன்னால் கூடுதலாக இருக்கக்கூடிய நிலத்தை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று சொல்லுகிற போது வசதி படைத்தவர்கள் அதில் புல்லை வளர்க்கிறார்கள், அல்லது பூச்செடிகளை வளர்க்கும் நிலைமை வந்து விடுகிறது. ஆனால் வசதி இல்லாதவர்கள் புல் வளர்க்க முடியாமல் அந்த நிலத்தை அரசு எடுக்கக்கூடிய சூழ்நிலைக்கு ஆளாக்கப் படுகிறார்கள். ஆகவே வசதி படைத்தவர்கள் சட்டத்தில் இருக்கக்கூடிய ஓட்டையை பயன்படுத்திக்கொண்டு அல்லது செல்வாக்கை பயன்படுத்திக்கொண்டு அல்லது அதிகாரிகளை தன் வசம் வைத்துக் கொண்டு அதிகமாக நகர்ப் புறங்களில் இருக்கக்கூடிய நிலத்தை அவர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். அப்படி எடுக்கவேண்டும் என்று சொன்னாலும் அவர்கள் நீதி மன்றங்களுக்குச் சென்று தடையை வாங்கிவிடுகிறார்கள். ஆகவே இன்றைக்கு கொள்கை அளவில் இருக்கக்கூடிய 500 சதுர மீட்டரை கூடுதலாக வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லுகிறபோது அதைவிட கூடுதலாக அந்த அளவுக்கு வசதி படைத்தவர்கள் நகர்ப் புறங்களில் அந்த உச்ச வரம்பை மீறி வைத்து இருப்பவர்களுக்கு கூடுதலாக வரியை போடவேண்டும். விகிதாச்சாரத்தின் அடிப்படையில் வரியை போட்டால் அந்த வரி எவ்வளவு வருகிறதோ அதை வசதி படைத்தவர்கள் கட்டுவார்கள். அரசுக்கும் வருமானம் வரும் என்று சொல்லி அந்த நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டத்தை மாற்றி எந்த அளவுக்கு அவர்கள் நிலம் கூடுதலாக வைத்து இருக்கிறார்களோ அதை விகிதாச்சார அடிப்படையில் அவர்களுக்கு நாம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. வெங்கடாசலம்] [1987 ஏப்ரல் 22

இன்றைக்கு நம்முடைய அரசு நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தை கொண்டு வந்ததன் அடிப்படையில் இன்றைக்கு கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய சாதாரண மக்கள் பட்டாவை வாங்கமுடியாத மக்கள், ஆதி திராவிட மக்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்த மக்கள் இன்றைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும் பாராட்டுகிறார்கள், வாழ்த்துகிறார்கள். ஆனால் அதில் ஒரு சங்கடம் அன்றைக்கு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கூட சென்ற வாரம பதில் சொல்லும்போது நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிலங்கள், உரியவர்களுக்கு இல்லாமல் வேறு நபர்களுக்கு மாற்றி இருந்தால் அதை உடனடியாக கொடுப்பதற்கு உரிய ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு தாலுக்கா எட் குவார்ட்டசிலும் என்று சொன்னார்கள். ஆனால் இந்த நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வசதி படைத்தவர்கள், வாய்ப்பு உள்ளவர்கள் சில வறியவர்களுடைய நிலத்தை அவர்கள் பட்டா போட்டு அரசு அதிகாரிகளை வைத்து சரிகட்டி பட்டா போட்டுக்கொண்டு இன்றைக்கும் இருந்து கொண்டு இருக்கிறார்கள். தாலுக்கா அலுவலகத்தில் சென்று அந்த பட்டாவை மாற்றித் தாருங்கள் என்று சொன்னால் வட்ட ஆட்சியர் உங்களிடம் உள்ள ரெக்கார்டுகளை கொண்டு வாருங்கள் என்று சொல்கிறார், ரெக்கார்டை பார்க்கிறார். அது ஒரு 6 மாத காலம் 1 ஆண்டு காலம் ஆகிறது. இன்றைக்கு 6 மாதத்திற்குள் ஒரு பட்டா வாங்குவதற்கு உரிய நிலைமை சாதாரண விவசாய தொழிலாளிக்கு இல்லாத ஒரு அவல நிலை இருக்கிறது. ஆகவே ஒரு கால கெடுவை வைத்து இந்த நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பட்டா கொடுக்க அல்லது பட்டாவை மாறுதல் செய்து கொடுக்கக்கூடிய ஒரு நேரத்தை ஒரு கால அளவுக்குள் விசாரணை செய்து உடனடியாக பட்டா வழங்கவேண்டும் என்ற ஆணையை நம்முடைய மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் போட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணி யடிக்கப்பெற்றது).

இன்னும் ஒன்றை சொல்லி முடித்துக்கொள்கிறேன், கிராமப் புறங்களில் விவசாயம் செய்யும்போது ஒரு விவசாயி பாம்பு கடித்து இறந்தால் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய அந்த விவசாயிகளுக்கு யாருக்குமே பாம்பு கடித்து இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் அரசு



1987 ஏப்ரல் 22] [திரு. அ. வெங்கடாசலம்]

கொடுக்கிறது என்ற விளம்பரமே தெரியவில்லை. ஆகவே பாம்பு கடித்து இறந்த உடனே அவர்களை கொளுத்திவிடுகிறார்கள், அல்லது புதைத்துவிடுகிறார்கள். ஆகவே நமமுடைய அரசு பாம்பு கடித்து இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள் என்ற உண்மையை வட்ட ஆட்சியர் மூலம் அனைத்து வி.ஏ.ஓ.-க் களின் மூலம் விளம்பரம் செய்யவேண்டும். அந்த நிலைமையை உருவாக்கவேண்டும். அதிலே ஒரு சங்கடம் பாம்பு கடித்து இறந்த உடனேயே அவர்கள் வி.ஏ.ஓ. இடம் சொல்லி அந்த இறப்புக்கான காலத்தில் அதை பார்வையிட்டுதான் எழுதுகிறார், பாம்பு கடித்து இறந்துவிடுகிறார் என்று. ஆனாலும் அவர்கள் நம்புவது இல்லை. மருத்துவ சான்றிதழ் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் பாம்பு கடித்து இறந்தால் பொது மக்களிடம் கோட்ட ஆட்சித் தலைவர் விசாரித்து அனுப்பினால் போதும் என்று இருக்கிறது. ஆனால் அதையும் மீறி அதற்கு மருத்துவச் சான்று கேட்கும்போது, இறந்து 15 நாட்கள் கழித்து மருத்துவச் சான்று வாங்கமுடியுமா என்றால் முடியாது. ஆக அதைப் போக்குவதற்கு என்ன காரணத்தினால் இறந்தார் என்பதில், பாம்பு கடித்து இறந்தார் என்ற காரணம் குறிப்பிடப்பட்டிருந்தால், அதையே சான்றிதழாகக் கொண்டு, கிராமப்புறங்களிலுள்ள விவசாயிகள் இறந்தால், ரூ. 10,000 பெறு வதற்கான விளம்பரத்தைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5-50)

இறுதியாக ஒரேயொரு கோரிக்கையைத் தெரிவிக்க விரும்பு கிறேன். இப்போது நம்முடைய அரசு தலைமைச் செயலகத்தில் இருக்கக்கூடிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கோட்டாட்சித் தலைவர்கள், டெபுட்டி தாசில்தார் கள் போன்றவர்களை பயிற்சிக்காக ஒவ்வொரு மாவட்டத் திற்கும் அனுப்புகிறார்கள், ஆகவே பயிற்சிக்காக அவர்களை அனுப்புகிறபோது, டெபுட்டி தாசில்தார்கள், கோட்டாட்சித் தலைவர்கள் போன்றவர்கள் பயிற்சிக்கு அரசு போட்டிருக்கிற அந்த விகிதாச்சாரப்படி அந்த மாவட்டங்களுக்கு அனுப்பவேண்டும். அப்போதுதான் தலைமைச் செயலகத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு, வெறும் சட்டத்தையும், ஃபைல் களையும் பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்கு கிராமங்களிலே இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அனைத்துத்

தாப்பு, அனைத்து வகுப்பைச் சார்ந்தவர்கள் என்ன சிரமங்களை அனுபவிக்கிறார்கள், அவர்கள் கோரிக்கைகள் என்ன, கஷ்டங்கள் என்ன என்பதைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பாக அமையும். எனவே அந்தப் பயிற்சிக்காக மாவட்டங்களுக்கு அனுப்பினால், அங்கிருக்கின்ற நிலைமைகளையெல்லாம் தெரிந்து கொள்வார்கள். கிராமங்களில் இருக்கக்கூடிய சாதாரண விவசாயிகள், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் எப்படிப்பட்ட வாழ்க்கையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள், எப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமைகளை தெரிந்துகொள்ளக்கூடிய வகையில், அவர்கள் மீண்டும் தலைமைச் செயலகத்திற்கு வந்து, அப்படிப் பட்ட அதிகாரிகள் கிராமங்களில் இருக்கக் கூடியவர்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடியவர்களுக்கு, அவர்களுக்கான நியாயமான காரியங்களை நிறைவேற்றுவதற்கு, விரைவான, தக்க நடவடிக்கை எடுப்பதற்கு அது ஏதுவாக இருக்குமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தீப்பிடித்து எரிந்தால் அந்த ஓலைக் குடிசைகளை மாற்ற முடியாத அளவிற்கு, ஓடு போட முடியாத நிலையில், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இறந்தால் ரூ. 2000, அந்தக் குடிசைகள் முழுவதுமாக எரிந்தால் அதற்கு ரூ. 300 என்றிருக்கிறது. ஆகவே ரூ. 300 என்று சொல் கிறபோது, ஒரு கீற்று ரூ.1, ரூ. 1¼ என்று விற்கிறது. கம்பு விலை ஏறியிருக்கிறது. அனைத்துப் பொருட்களின் விலையும் ஏறியிருக்கிறது. ரூ. 300 கொடுக்கிறபோது நிச்சயமாக கீற்று மட்டும்தான் வாங்கமுடியும். ஆகையினால் புரட்சித் தலைவர் அவர்கள், இன்றைக்கு மக்களுடைய நல்வாழ்வுக்காக, எப்படிப் பட்ட நல்ல திட்டங்களை எல்லாம் அறிவித்து, வாரி வழங்கி கொண்டிருக்கிற வள்ளலாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறார். ஆகவே ரூ. 200 சேர்த்து, ரூ. 500 ஆகக் கொடுத்தால் அது நன்றாக இருக்கும். மேலும் குடிசை தீப்பிடித்து எரிந்த நிலையில், அவர்களுடைய பட்டாக்களும், தஸ்தாவேஜுகளும் முழுவதுமாக எரிந்து விடுகிறது. ஆகவே மீண்டும் அந்த பட்டா வேண்டும். அந்த நிலத்திற்குரிய சான்று வேண்டும் என்று தாலுக்கா அலுவலகத்திலே கேட்டால், அவர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். கொடுப்பதற்கு காலதாமதப்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருந்து வருகின்றது. ஆகவே முழுவதுமாக குடிசை தீப்பிடித்து எரிந்தால், அவர்களுக்குரிய நிலச் சான்று, மற்ற



உரிய சான்றுகளை அந்த அடங்கலைப் பார்த்து, உடனடியாகக் கொடுக்கவேண்டும் என்ற அந்த ஆணையை நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கவேண்டுமென்று சொல்லி, இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு அனைத்துத் துறைகளிலேயும், இந்தியத் துணைக் கண்டமே பாராட்டக் கூடிய அளவிற்கு மறு மலர்ச்சி கண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் அரசு, என்னுடைய ஆலங்குடி தொகுதியை—மீண்டும் ஒரு முறை சொல்கிறேன்—கோட்டமாக அறிவிக்கவேண்டுமென்று சொல்லி, நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று 1, 9, 11, 41 மற்றும் 46 ஆம் எண் மானியக் கோரிக்கைகள்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு நல்கியமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நிர்வாகத்தை நாட்டு மக்களுக்கு நெருக்கமாக கொண்டு செல்ல வேண்டும் என்ற கொள்கையினை தமிழக அரசு கொண்டு இருப்பதாக பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லப்பட்டு வருகிறது. அப்படி நிர்வாகத்தை நாட்டு மக்களுக்கு மிக நெருக்கமாகக் கொண்டு செல்லும் அந்தக் கொள்கையைக் கொண்டுள்ள நம்முடைய தமிழக அரசு, அந்த வகையில் என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற கல்குளம் தாலுக்காவை இரண்டாகப் பிரித்து, புதியதாக அமைக்கப்பட இருக்கும் அந்த தாலுக்காவிற்கு இரணியல் தாலுக்கா என்ற பெயரிட்டு, இரணியல் தாலுக்கா தலைமையிடமாக அமைத்துத் தரப்படும் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளது. அந்த வேலையை மிக விரைவாக முடித்துக் தரவேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைக்க விரும்புகிறேன்.

அதுபோன்று 1982 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் மதத்தின் பெயரால் ஒரு கலவரம் நடைபெற்றபோது, அந்தக் கலவரம் ஏன் நடைபெற்றது, எதற்காக நடைபெற்றது என்பதைக் கண்டு ஆய்ந்து அறிவதற்கும், அப்படிப்பட்ட சம்பவங்கள் மீண்டும் நிகழா வண்ணம் கட்டுப்படுவதற்கும், தடுப்பதற்கும் ஏற்ற வழிவகைகளைச் சொல்லவேண்டும் என்பதற்காக ஓய்வுபெற்ற நீதிபதி திரு. வேணுகோபால் அவர்கள் தலைமையில் வேணுகோபால் விசாரணைக் கமிஷன் நியமிக்கப் பட்டது. அந்த விசாரணைக் கமிஷன் இடைக்கால அறிக்கை [illegible]

காலப் விசாரணையை நடத்தி முடித்து பல்வேறு கருத்துக் களை, பரிந்துரைகளை இந்த அரசிற்கு வைத்தது. அந்தப் பரிந்துரைகளில் ஒன்று 'சோஷியோ இக்கனாமிக் ப்ரோக்ரஸ்' என்ற தலைப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தலைப்பில் சொல்லப்பட்டு இருக்கின்ற கருத்துக்களையெல்லாம், பரிந்துரை களையெல்லாம் ஏற்றுக் கொண்டதாக அரசாங்கமும் அரசு ஆணை மூலமாக தெரிவித்திருக்கிறது. அந்தக் கமிஷன் தெரிவித்திருப்பதில் ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் தாலுக்கா உட்பட எல்லா தாலுக்காக்களையும் இரண்டாகவோ, மூன்றாகவோ பிரித்து அவைகளின் பரப்பை, அளவை சிறிதாக்கவேண்டும் என்றும் அந்த தாலுக்காக்களில் உள்ளடங்குகின்ற வருவாய் கிராமங்களையும் மிகச் சிறிய கிராமங்களாகப் பிரிக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக் கிறது. ஆகவே அந்தப் பரிந்துரையை ஏற்றுக் கொண்டதாக அறிவித்திருக்கும் நம்முடைய அரசாங்கம் முதலில் என்னுடைய கல்குளம் தாலுக்காவை இரண்டாகப் பிரிப்பதோடு அந்த கல்குளம் தாலுக்காவிற்கு உட்பட்ட வருவாய் கிராமங்களையும் சிறு சிறு கிராமங்களாகப் பிரித்து நிர்வாக வசதியைச் செய்து தரவேண்டும் என்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

அதுபோன்று கன்னியாகுமரி மாவட்டம் வறட்சியின் கோரப் பிடியில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறது. அந்த வறட்சிக்குக் காரணம் மழையின் அளவு குறைவு என்று சொல்லப்பட்டாலும் அது மட்டுமே காரணம் அல்ல என்பது எங்களுடைய வாதமாக இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. பெய்கின்ற மழையின் நீரைத் தேக்கி வைப்பதற்கு பயன்படுகின்ற குளங்களையும் குட்டைகளையும் அங்கே ஆக்கிரமிப்பாளர்கள், ஆக்கிரமிப்பு செய்கின்ற காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதும் பல்வேறு காரணங்களில் ஒன்றாக எங்களால் இன்றைக்கு சுட்டிக்காட்டப்படுகிறது. ஆகவே குளங்களில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த வேண்டும் என்று பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரை இந்த மாமன்றத்தில் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த நேரத்தில் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லப் பட்டுள்ள நேரத்திலே கூட அங்கே வருவாய்த்துறையின் பொறுப்பிலே இருக்கின்ற பல்வேறு குளங்கள் இன்றைக்கு இந்த



வறட்சி நிலையைப் பயன்படுத்தி ஒரு சிலரால் ஆக்கிரமிப்பு செய்யப்படுகின்ற நிலைமை அங்கே உருவாகியிருக்கிறது. ஆகவே அதைத் தடுக்கின்ற வகையில் அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை ஆக்கிரமிப்புக் காண்காணிப்பு பறக்கும் படை என்ற பிரிவை நியமனம் செய்து, அந்தப் பிரிவின் மூலமாக அங்கு ஆக்கிரமிப்புகள் புதியதாக நடைபெறாத வண்ணம் தடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். அது போன்று வருவாய்த்துறையின் பொறுப்பிலே இருக்கின்ற குளங்கள் அல்லது வேறு இடங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டால் அப்புறப்படுத்துவதற்கு தனியார் யாரேனும் முன்வருவதாக இருந்தால் அவர்களுக்கு இந்த அரசு காவல்துறை மூலமாக பாதுகாப்பு தர முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதுபோன்று பட்டா வழங்குவதில் இன்றைக்கு பல்வேறு பகுதிகளில்—தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் குடியிருக்கின்ற பகுதிகளுக்கு பட்டா வழங்கு வதில் ஏனோ ஒரு வகையான காலதாமதம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலைமையை மாற்றி அவர்களுக்கு உடனடியாக பட்டா கொடுக்கின்ற வழிவகைகளைக் காண வேண்டும். இன்றைக்கு சிதம்பரனார் மாவட்டத்தில், கோவில் பட்டி தாலுக்கா, பாண்டமங்கலம் கிராமத்தில் சர்வே எண் 558/1ஏ வில் உள்ள 1 ஏக்கர் 24 சென்ட் நிலத்தை ஒரு முன்னாள் இராணுவத்தினருக்கு குத்தகைக்கு விட்டு அந்த குத்தகை நிபந்தனையை அவர் மீறியதால் அந்த நிலத்தை அவரிடமிருந்து மீட்டு எடுத்த பிறகு அதை ஏழைகளுக்கு குடியிருப்பதற்காக பட்டா கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து அறிவிக்கப் பட்டது. அப்போது 33 பேர்கள் பினாமிகளாக அதற்கு மனு செய்து அவர்கள் அதைப் பெறுவதற்கு முயன்றபோது அந்த 33 பேர்களும் பினாமிகள் என்று அங்கே உள்ள பொது மக்கள் சொல்லி, ஏழை எளியவர்கள் தகுதி பெற்றவர்கள் என்ற அடிப் படையில் 46 பேர்கள் மனுச் செய்தார்கள். அப்படி 46 பேர்கள் மனு செய்த பிறகு அவர்களுக்கு பட்டா கொடுக்க வேண்டும் என்ற நிலைமை அங்கே உருவான பிறகு அவர்களுக்கு 1987, இந்த வருடம் பிப்ரவரி மாதத்திற்கு முன்னால் பட்டா தரப்படும் என்று சொல்லப்பட்டது. அதற்கான ஆணைகள் கூட வழங்கப் பட்டன. ஆனால் இப்போது அந்த 46 பேர்களுக்கும் பட்டா கொடுக்கப்படாமல் பினாமிகள் என்று ஏற்கெனவே [illegible] சப்-கலெக்டர் அவர்களால் கண்டு பிடிக்கப்பட்டு, பட்டா

[திரு. வை. பாலச்சந்திரன்] [1987 ஏப்ரல் 22

கொடுக்கப்படக்கூடாது என்று சொல்லப்பட்ட அந்த 33 பேர்களுக்கும் மீண்டும் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இதை அரசு அருள்கூர்ந்து கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரை வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்னென்ன வரிச் சலுகைகள் அளிக்க முடியுமோ அந்தச் சலுகைகளை எல்லாம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் டிஸ்ட்ரிக்ட் ரெவின்யூ ஆபீசர் புதியதாக நியமனம் செய்யப்பட்டு இருப்பதால் அவர்களுக்கு குடியிருப்பு வசதி இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே டி.ஆர்.ஓ. அவர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். என்னுடைய கல்குளம் தாலுக்கா வட்டாட்சியர் அலுவலகம் இட நெருக்கடி இருந்திருக்கிறது. மிகப் பரவலான அந்த வளாகத்திலுள்ள இருக்கின்ற அந்த அலுவலகம் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது என்ற காரணத்தினால் அங்கே இட நெருக்கடி இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த அலுவலகத்தை சற்று விரிவுபடுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 6-00)

இன்னொரு மிகப் பெரிய பிரச்சினை என்னவென்றால் எங்களுடைய மாவட்டத்திலே 'கவராக்கள்' என்ற பிரிவினர் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், ஏழை மக்கள். ஆனால் அவர்கள் தாங்கள் 'கவராக்கள்' என்று சொல்லி தங்களுக்கு ஜாதிச் சான்றிதழ்கள் தரவேண்டும் என்று கேட்டு அங்கே வட்டாட்சியரை அணுகினால், காரணங்கள் சொல்லப்படாமல் அவர்களுக்கு 'கவராக்கள்' என்ற ஜாதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதேயில்லை. பல ஆண்டுகளாக இந்த நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

இதற்கான காரணம் என்னவென்பதை ஆய்ந்தறிந்து, 'கவரா' இன மக்களுக்கு 'கவரா இன' மக்கள்தான் என்ற அளவிற்கு ஜாதிச் சான்றிதழ்களைக் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டும்.



1987 ஏப்ரல் 22] [திரு. வை. பாலச்சந்திரன்]

இன்னொரு முக்கியமான வேண்டுகோள். 1982-வது ஆண்டு, 14 பேர்களும், 1986-வது ஆண்டு ஒருவரும் வன்முறைக் கூட்டத்தால் கட்டி இழுக்கப்பட்டு, கடலுக்குக் கொண்டு செல்லப்பட்டு, கடலிலே ஆழ்த்தப்பட்டு, கடல் மீனுக்கு இரையாக்கப்பட்டு, அவர்கள் இறந்து போன காரணத்தால், அந்த 15 பேர்களுடைய மனைவிமார்களும், பிள்ளைகளும் பட்டினியால் வாடிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் வன்முறைக் கூட்டத்தால் கடலுக்குக் கொண்டு செல்லப்பட்டு, கொலை செய்யப்பட்ட அந்த 15 பேர்களின் மனைவிமார்கள் மற்றும் பிள்ளைகளுக்கு இதுவரை அரசாங்கம் எந்த நிவாரணமும் செய்யவில்லை என்பது வேதனைக்குரியது. ஆகவே, அந்த 15 பேருடைய குடும்பங்களுக்கு அரசாங்கம் ஒரு கணிசமான பரிகாரம் என்ற அளவில் கணிசமான உதவிசெய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்துக்கொள்கிறேன்.

அதுபோல, கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்றைக்கு இந்த வறட்சி நிலைமையிலே கூட திடீரென்று குடிநீருக்காக, குடிநீர் வேண்டும் என்ற அளவில் பேச்சிப்பாறை அணை திறக்கப்பட்டு, சானலில் நீர் விடப்பட்டது. வறட்சியால் சானல் கரைகள் எல்லாம் காய்ந்து போய், உறுதியாக இருந்த நேரத்தில் குடிநீருக்கு குளங்களை நிரப்பவேண்டும் என்பதற்காக அணை திறக்கப்பட்டு நீர் விடப்பட்டது. அந்த குறைந்த அளவு நீர் விடப்பட்ட நேரத்தில் கூட, பத்மனாபபுரம் புத்தனார் கரை உடைந்து நீர் வீணாகச் சென்று விட்டது. இந்த நேரத்தில் கூட நிலைமை இந்த அளவுக்கு இருக்கிறது. ஆகவே, இப்படிப் பட்ட நிலைமைகளை மாற்றத் தேவையான பணிகளுக்கு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, பல்வேறு திட்டங்களைத் தரவேண்டும் என்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கை மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்றைக்கு நமது தமிழக அரசு பல்வேறு மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து இருக்கிறது. ஆனால் தஞ்சை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்கவில்லை. அதற்கு நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில்

[திரு. பொ. உத்திராபதி] [1987 ஏப்ரல் 22

நெல் இந்த ஆண்டு அதிகமாக கண்டுமுதல் ஆகியிருக்கிறது. ஆகவே, தஞ்சை மாவட்டத்தை அப்படி அறிவிக்கவேண்டியதில்லை என்ற எண்ணத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், நெல் அதிகமாகக் கண்டு இருக்கலாம். ஆனால் இவ்வொரு ஆண்டும் தண்ணீர் பாய்ந்து குறைந்து விட்டது. முழுவதும் குறைந்து விட்டது. நெல் கண்டுமுதலை வைத்து மட்டும் மாவட்டம் செழித்துப் போய்விட்டது என்று சொல்ல முடியாது.

காரணம், நிதியமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். தஞ்சை மாவட்ட அனுபவத்தைத் தெரிந்தவர்கள். குளங்களிலே தண்ணீர் கிடையாது. ஏரிகளிலும் தண்ணீர் கிடையாது. இப்போது வடுவூர் ஏரியிலே பூராவும் கருவு கல்லை போட்டு விட்டார்கள். ரெவின்யூ துறையிலேயே அவர்கள் அதைத் தூர்த்து விடலாம் என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். இதையெல்லாம் தஞ்சை மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 15—4—1987 தேதி முதல் 20—4—1987 முடிய 14 இடங்களிலிருந்து 60 மைல் தூரம் பாதயாத்திரை துவக்கினோம். வறட்சி நிலைமை, காவேரி நீர் பிரச்சினை சம்பந்தமாகவும் என் தலைமையில் தலைஞாயிறில் இருந்து, 15-ந் தேதி புறப்பட்டு தஞ்சையில், 60 மைல் பாத யாத்திரை சென்று எல்லா கிராமங்களையும் பார்த்து, கலெக்டரிடம் மனு கொடுக்கலாம் என்று பல விவரங்கள் சேகரித்துக் கொண்டு வந்து மாவட்ட ஆட்சித் தலைவரை சந்திக்கச் சென்றோம். ஆனால் அலுவலகத்தில் இல்லை, வீட்டிலிருந்து சொன்னார்.

இப்போது தஞ்சை மாவட்டத்திலே குளங்கள், ஏரிகள் முழுமையாக வற்றிவிட்டன. கை பம்பிலே கூட தண்ணீர் வரும். இப்போ போகப் போக, காற்று தான் வருகிறது. தண்ணீர் வரவில்லை. குடி நீருக்குக் கூட வழி இல்லாத நிலை இருக்கிறது. நான் அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், தஞ்சை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, வறட்சி நிவாரண நிதி கொடுத்து, வேலைகளைத் துவக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 22] [திரு. பொ. உத்திராபதி]

அதுபோல், வறட்சி சம்பந்தப்பட்ட அல்லது யூனியன் சம்பந்தப்பட்ட நிலவரங்களைப் பற்றிப் பேசுவதற்காக நாங்கள் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைச் சந்தித்தால், கட்சியாக பிரதிநிதிகள் சொல்வதைக் கேட்கமாட்டேன் என்கிறார். 5 ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களும், நானும் போய் நிலவரத்தை எடுத்துச் சொல்லப் போனால், 'எனக்கு எல்லாம் தெரியும், போங்கய்யா' என்று சொல்லிவிட்டுப் போகிறார். தஞ்சை மாவட்டத்தில் இது வரை இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இப்படியெல்லாம் நடந்து கொண்டது கிடையாது. மக்கள் பிரதிநிதிகள் யார் போனாலும் கூட, குறைகளைக் கேட்ட வரலாறுதான் தஞ்சை மாவட்டத்திற்கு உண்டு. இதற்கு மேல் மாவட்ட ஆட்சித் தலைவரைப் பற்றிச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆகவே 20-4-87 ஆம் தேதி அன்றைக்குக் கூட 4 மணிக்கு வருவதாகச் சொல்லி, இவ்வளவு தூரம் நடந்து போகிறோம், வீட்டிலே இருந்து கொண்டே போன் பண்ணி, 'வந்து விட்டுப் போய் விட்டார்களா?' என்று கேட்டு நாங்கள் மாவட்ட வருவாய் அதிகாரியிடம் மனுக் கொடுத்த பிறகு அவர் வருகிற சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலை எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பது நல்லது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்தபோதுகூட இவ்வளவுதூரம் கெட்ட பெயர் உண்டு பண்ணியதற்குக் காரணமே என்னுடைய தாழ்மையான கருத்து இந்த மாவட்ட ஆட்சித் தலைவர்தான். ஒவ்வொருவரும் ரூ. 15,000-க்கு ஒரு ஆர்ச் போட வேண்டும் என்று பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்குச் சொல்லியிருக்கிறார். அவர்கள் எந்தக் கணக்கில் எழுதுவது என்று கேட்டபோது நான் சொல்லுகிறபடி கணக்கு எழுதிவிட்டுப் போ என்று சொல்லியிருக்கிறார். இப்படி அரசுக்கு ஒரு கெட்ட பெயர் வருகிற மாதிரி செய்தார் என்பதைப்பற்றி அரசாங்கம் விசாரணை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் முதலமைச்சர் வருகையை விளம்பரம் செய்வதற்கு யூனியன் பணத்தைச் செலவு செய்து அதைப் பெரிய பிரச்சினையாக உருவாக்கிவிட்டதைக் குறித்தும் அரசாங்கம் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீ விபத்து நடைபெற்றால் அளிக்கப்படும் நிவாரணத்தொகை குறித்து பரிசீலனை செய்து வருவதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு தீ விபத்தால் குடிசைகள் எரிந்துபோனால் ரூ. 300 கொடுக்கிறோம். இது போதாது. 500 ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம் தற்போது கயிறு, பாளை, மூங்கில் எல்லாவற்றின் விலையும் ஏறிவிட்டது. எனவே இந்த நிலையில் அரசு பரிசிலிப்பதாகச் சொன்னதை விரைவில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து ஒரு குடும்பத்தில் ஒருவர் இறந்தால்—அவர் குடும்பத் தலைவர் என்றால் மட்டும் ரூ. 2,000 கொடுக்கிறார்கள். குடும்பத் தலைவருக்குப் பதிலாக எதிர்காலத்தில் குடும்பத்திற்குத் தலைவராக வருகிற பையன் இறந்தால்கூட அவர்களுக்கு ரூ. 5000 கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

24—1—1987 அன்று காசிமேடு சிங்காரவேலர் நகரில் 800 குடிசைகளில் 400 குடிசைகள் தீ விபத்தால் முழுவதுமாக எரிந்து போய்விட்டன. சர்க்காரும் அவர்களுக்கு உதவி செய்திருக்கிறது. ஆனால் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இப்படி ஒவ்வொரு ஆண்டும் குடிசைகள் எரிந்து போகும்போதும் அதற்காக அரசாங்கம் நிதி கொடுப்பதால் இந்தப் பிரச்சினை தீராது. அங்கெல்லாம் குடிசைகளை அகற்றி, நிரந்தரமாகவே தீ விபத்தில் பாதிப்படாத நல்ல வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். தமிழகத்தில் 60 சதவீதம் பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே விவசாயத் தொழிலாளர்களாக வாழ்கிறார்கள். அதில் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 8 லட்சம் பேர் விவசாயத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்க வேண்டுமென்றால் வேலைகளைக் காண்ட்ராக்டில் விடக் கூடாது. அந்தந்த ஊராட்சி ஒன்றியமே விவசாயத் தொழிலாளர்களைக் கொண்ட ஒரு கமிட்டி அமைத்து அதில் அரசு அதிகாரிகளையும் அமைத்து வேலைகளைச் செய்தால்தான் வேலையும் சுத்தமாக இருக்கும். விவசாயத் தொழிலாளர்களுக்கு





வேலையும் கிடைக்கும். அந்த அளவுக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாத நிலைமை இருக்கிறது. காரணம் அறுவடை முடிந்து விட்டது. அடுத்த ஆண்டு தண்ணீர் வருகிற வரை வேறு விதமான வேலையும் அவர்களுக்குக் கிடையாது. ஆகவே விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க அந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வறட்சிப் பணிகளுக்காக என்று ரூ. 347 கோடி மத்திய அரசிடம் கோரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 30 கோடி ரூபாய் கேட்டு இருக்கிறார்கள். இப்படி தமிழகத்தில் மாறிமாறி வறட்சி வந்து கொண்டிருக்கிறது. வறட்சி வருவது தெரிந்தும் கூட முன்னெச்சரிக்கையாகக் குடி தண்ணீர் கொடுக்கக் கூட அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அது சரியில்லை. தஞ்சை மாவட்டத்திலேயே வரவுக்கோட்டை என்கிற பகுதியில் பெண்கள் 4 அல்லது 5 பானைகளைத் தலையில் வைத்துக் கொண்டு போய் 3, 4 மைல் சென்று தண்ணீர் கொண்டு வருகிறார்கள். தஞ்சை மாவட்டத்திலேயே இப்படி என்றால் புதுக்கோட்டை, இராமநாதபுரம், வடாற்காடு போன்ற மாவட்டங்களில் ஒரு குடம் தண்ணீர் ரூ. 5 என்கிற அளவுக்கு வியாபாரம் செய்கிற நிலைமை வந்திருக்கிறது. எனவே வறட்சி என்பதால் ரூ. 347 கோடியை மத்திய அரசிடமிருந்து கோரியிருக்கிறோம் என்றாலும் கூட மத்திய அரசுக்கு நாம் இடைத்தரகர்கள் போல் இருக்கக் கூடாது. மத்திய அரசிடம் வற்புறுத்தி வறட்சி நிவாரணப் பணிகளுக்கு இன்னும் அதிகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அறிந்து குறை தீர்க்கும் நாள் என்று வைத்திருப்பது நல்லது தான். அதுவும் கொஞ்ச நாள் நன்றாக நடந்தது. இப்போது ஆயிரக்கணக்கான பேர் காத்துக் கொண்டிருந்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி வருவார் என்று சொல்லிவிடுகிறார். அவரோ மாலை 6 மணிக்குத்தான் வருகிறார். அவருக்காக 4,000 பேர் அல்லது 6,000 பேர் காத்திருந்துவிட்டு போகிற நிலைமைதான் இருக்கிறது. கொள்கை விளக்கக் குறிப்பில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் திரும்பத் திரும்ப மனு கொடுப்பவர்களுக்கு இனிமேல்

[திரு. பொ. உத்திராபதி] [1987 ஏப்ரல் 22

கலரில் கார்டு கொடுத்து, குறிப்பிட்ட நாளில் வந்தால் மனுமீது நடவடிக்கை எடுத்தது குறித்து விவரம் சொல்லப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 50 மைலுக்கு அப்பால இருந்து வந்து மனு கொடுத்துவிட்டு இப்படி ஒரு கார்டு வாங்கிக் கொண்டு போய் மீண்டும் 50 மைல் திரும்ப எப்படி அவர்களால் வர முடியும். எனவே அந்தந்த பஞ்சாயத்து யூனியன் ஏரியாவிலேயே கோரிக்கை மனுக்களைப் பெற்று அதிகாரிகள் அங்கேயே டிஸ்போஸ் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வீட்டுமனைப் பட்டா ஆங்காங்கே வழங்கிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் கிராமங்களில் இன்றைக்கும் 80 சதவீதம் மக்களுக்கு மனைப்பட்டா வழங்கப்படவில்லை. மனைப்பட்டா இருந்தால்தான் எந்தக் கடனும் கிடைக்கும்; எந்த அரசாங்கச் சலுகையும் கிடைக்கும் என்று இருக்கிறது. எந்தச் சலுகை கேட்டாலும் பட்டாவைக் கொண்டு வா என்கிறார்கள். குறிப்பிட்ட ஓராண்டுக்குள்ளாக எல்லோருக்கும் மனைப் பட்டா வழங்க வேண்டும் என்கிற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்—ஏற்கெனவே பட்டா வழங்குவதற்காக தனியாக தாசில்தார் இருந்தாலும்கூட அந்த வேலை இன்னும் முழுமையாகச் செய்யப்பட்டு எல்லோருக்கும் பட்டா வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நிலச் சீர்திருத்தச் சட்டம் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். 1961 ஆம் ஆண்டு 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு 30 ஏக்கர் நிலம் இருக்கலாம் என்றும் கூடுதல் ஒருவருக்கு 5 ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்றும் காங்கிரஸ் ஆட்சியின் போது கொண்டு வந்தார்கள். அதற்குப் பெரிய போராட்டமே நடந்தது. கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்தபோது 5 பேரைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டு வந்தார். அதனால்கூட உபரி நிலம் அதிகமாகக் கிடைக்கவில்லை.

(இரவு 6-10)

இப்போது உபரியாக அறிவித்திருப்பது 1,65,787 ஏக்கர். அவற்றில் தடை ஆணையில் கோர்ட்டில் இருப்பது 26,204 ஏக்கர். எவ்வளவு நிலம் விநியோகம் செய்திருக்கிறது என்ற விவரம் இல்லை. நிலச்சீர்திருத்தத்தை இப்படிக் கொண்டு வந்தால்



1987 ஏப்ரல் 22] [திரு. பொ. உத்திராபதி]

நிச்சயமாக நிலப்பிரபுக்கள் மாறி மாறி எழுதி வைத்து தப்பித்துக் கொண்டிருப்பார்களே தவிர, உண்மையான நிலச் சீர்திருத்தமாக அமையவில்லை. ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதற்குப் பதிலாக சாதாரண 15 ஏக்கர் என்று வைக்க வேண்டும். சாதாரணமாக ஐந்து ஏக்கர் கூட சாகுபடி செய்யமுடியவில்லை. இந்த வருடம் ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர்கூட சாகுபடி பண்ண முடியவில்லை. ஆகவே 15 ஏக்கர் சாதாரண ஏக்கரா உச்சவரம்பு கட்டி மிச்ச நிலத்தை எடுத்து நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளிக்குக் கொடுத்து அவர்களை வறுமையிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசு புறம்போக்கு. சாதாரண ஏழையெளிய மக்கள் அரை ஏக்கர், முக்கால் ஏக்கர் என்று பதினைந்து 20 வருடங்களாக சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அபராதம் போடுகிறார்கள், அவர்களால் 100, 500 என்று கட்ட முடியவில்லை. அப்படி அரசு புறம்போக்கு நிலங்களில் யார் யார் ஏழைகளாக இருக்கிறார்கள் என்று கருதுகிறார்களோ, யார் யார் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள் என்று கருதுகிறார்களோ அவர்களுக்கு பட்டா வழங்க, குறைந்த பட்சம் கிஸ்தி போடக்கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1952 ஆம் ஆண்டு பண்ணையாள் சாகுபடி பாதுகாப்புச் சட்டம் திரு. இராஜகோபாலாச்சாரியார் முதலமைச்சராக இருந்தபோது—திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் ஐந்து இலட்சம் மக்கள் இரண்டு குத்தகை விவசாயிகளை வெளியேற்றி னால் நாங்கள் உழுவோம் என்று பெரிய போராட்டம் நடத்தி, முன்னாள் அமைச்சர் திரு. பிரகாசம் அவர்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களும் கலந்துகொண்டு—அறிவித்தார்கள். அதற்குப் பிறகு 1952-இல் சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அடுத்த வருடம் 1956-இல் நியாயவாரச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதற்குப் பிறகு 40 விவசாயிகளுக்கும் 60 பிரபுதாரர்களுக்கும் என்றும், பிறகு 60 விவசாயிகளுக்கு 40 பிரபுதாரர்களுக்கு என்றும் கொண்டு வந்தார்கள். இப்போது அரசு 75 குத்தகை விவசாயிகளுக்கும் 25 பொதுவானவர்களுக்கும் பிரபுதாரர்களுக்கும் என்று கொண்டு வந்திருக்கிறது. கடந்த ஐந்தாறு வருடங்களாக, 1983-இல் இருந்து இயற்கைச் சீற்றத்தால் குத்தகை கட்ட முடியாமல்

இருக்கிறார்கள். இப்போது ஐந்து தவணை கட்ட வேண்டும் என்று அறிவித்துள்ளீர்கள். ஐந்து தவணையில் விவசாயிகளால் தர முடியவில்லை. இந்த ஆண்டு விளைந்தது, ஆகவே கொடுத்திருக்கிறார்கள். ஐந்து தவணை என்பதை கணக்கெடுத்து ஒரு தவணை கட்டினால் இடையில் கட்டியதை சேர்த்து பாக்கியை தள்ளுபடி செய்து விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கேரளாவில் குத்தகைதாரர்களுக்கே நிலத்தைச் சொந்தம் ஆக்கியதைப் போல குத்தகை நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். குத்தகை விவசாயிகள் நிலத்தை சொந்தக்காரர்கள் திருப்பிக் கேட்டால் அவற்றைத் திருப்பி எடுப்பதற்கு பரிசீலித்து வருவதாக அறிவித்திருக்கிறார்கள். இது சரியல்ல. நீண்டகாலமாகப் போராடி, உயிர்த் தியாகம் செய்து இந்தச் சட்டத்தைப் பெற்றிருக்கிறோம். அதை கைவிட்டுவிட்டு குத்தகை விவசாயிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சாவூரில் ரெவின்யூ கோர்ட் திறக்கப்பட்டிருக்கிறது. அவற்றை மீண்டும் மூடிவிட்டு குத்தகை விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிழக்குத் தஞ்சாவூரில் விவசாயக் கூலி 7 லிட்டர் நெல், ரூ. 2.80 என்று இருக்கிறது. வரப்பு அண்டை போட்டு, நாற்று விட்டு, நடவு நட்டு களை எடுப்பதற்கு 6 லிட்டர், ரூ. 1.80 என்று இருக்கிறது. இப்போது 11, 8 என்று இருக்கிறது. அதாவது தாய்மார்களுக்கு 8 ரூபாய் என்றும், ஆண்களுக்கு 11 ரூபாய் என்றும் இருக்கிறது. கடந்த மூன்றாண்டுகளாக விவசாயக் கூலி உயர்வை அறிவிக்கவில்லை. அரசு ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கும் நான்காவது சம்பளக் கமிஷனை அறிவித்திருக்கிறார்கள். கிராமப்புறத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக்கூடியவர்களுக்கு போதுமான கூலி அறிவிக்கப்படவில்லை. உழவுப் பெண்கள் நடவு நடும்போது முழங்கால் அளவிற்கு சேற்றில் பின் நோக்கி நடக்கிறார்கள். இப்படி கால் கிலோ மீட்டர் அளவிற்கு நடந்து கஷ்டப்படக் கூடிய பெண்களுக்குச் சம்பளம் எட்டு ரூபாய். என்? தாய்க் குலத்தை பாதுகாக்கக் கூடிய தமிழக அரசு நியாயமான சம்பளத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமானால் ஒரு கமிஷனை அமைத்து



வரக்கூடிய சாகுபடி காலத்திலே, விலைவாசி ஏற்றத்திற்குத் தகுந்தபடி எல்லாப் பணிகளுக்கும் சமக் கூலி, ஆண்களுக்கும் பெண்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் சம வேலைக்கு சம சம்பளம் அறிவிக்க துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து அறுவடைக் கூலி என்பது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. நடைமுறையில் 7 லிட்டர் என்று இருக்கிறது. இப்போது 8 லிட்டர் கேட்டு மன்னார்குடியில் ஆர்.டி.ஓ. முன்னிலையில் ஏழரை லிட்டர் என்று ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். எதிர்காலத்திலே 8 லிட்டர் என்று அறிவிக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடைசியாக, சட்டமன்றத்திலே பணியாற்றக் கூடிய காவலர்களுக்கு படி ஆறு ரூபாய் கொடுக்கப்படுகிறது. வெளியே உள்ள காவலர்களுக்கு படி அதிகமாக இருக்கிறது. அவர்களுக்கு படியை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது தனி மானியம். அது சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் வருகிறது.

திரு. பொ. உத்திராபதி: அடுத்து, என்னுடைய தொகுதியிலே முத்துப்பேட்டை, கோட்டூர் என்று இருக்கிறது. மாவட்டம் பிரிக்கப்படுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் இப்போது நடக்கிறது. முத்துப்பேட்டை தாலுக்காவாக மாற்றப்பட வேண்டும். கோட்டூர் பெரிய யூனியன். 57 பஞ்சாயத்துக்களைக் கொண்ட யூனியன். அதையும் தாலுக்காவாக மாற்றி, அந்தப் பகுதி மக்களுக்கு வருவாய்த் துறை மூலமாகக் கிடைக்கும் பலன்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருத்துறைப்பூண்டி தாலுக்கா அலுவலகத்திற்கு எப்போதோ கட்டிய கட்டடம்தான் இருக்கிறது. கொஞ்சம் மழை பெய்தாலே அங்கே வேலை செய்ய முடியவில்லை. இன்றைக்கு விஞ்ஞான மாறுதல்களுக்குத் தக்கபடி அந்த கட்டடத்தைப் புதிதாகக் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து தாலுகா அலுவலகம், ஆர்.டி.ஓ. அலுவலகம் ஆகிய அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்க வேண்டும். கிராமங்களில் பணியாற்றும் வி.ஏ.ஓ. க்களைப் பொறுத்தவரையில் 20 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ளவரைப் போடுகிறார்கள். எனவே சாயங்காலம் அவர்கள் வீட்டுக்குப் போய்விடுகிறார்கள். எங்கேயாவது நெருப்பு பற்றிக் கொண்டாலும் சான்றிதழ் வாங்க, பார்க்க முடியவில்லை. எனவே ஒவ்வொரு பஞ்சாயத்திலும் சின்ன அலுவலகம் அல்லது அவர்கள் குடியிருக்க ஏற்பாடு செய்தால் நல்ல முறையிலே பணியாற்ற முடியும். பொதுமக்களுக்கும் நல்லது.

இறுதியாக பினாமி நிலம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நமது மாநிலத்தில் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பினாமி நிலங்களாக பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. நமது தமிழக அரசு பினாமி நிலங்களை எடுக்க வேண்டுமென்று, 1958–61 ஆகிய 3 ஆண்டுகளில் பதுக்கி வைக்கப்பட்ட நிலங்களை எடுக்க வேண்டுமென்று சட்டமியற்றி மத்திய அரசுக்கு அனுப்பியது. மத்திய அரசு அதை திருத்தி அனுப்ப வேண்டுமென்று திருப்பி அனுப்பியது. அது கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. எனவே பினாமி நிலங்களை எடுத்து, தஞ்சை மாவட்டத்திலே மறைத்து வைத்திருக்கும் நிலங்களை எடுத்து, நிலமற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

அடுத்து, குத்தகை விவசாயிகளைப் பதிவு செய்ய வேண்டும். இன்றைக்கு லட்சக்கணக்கான பேர்களுக்கு கூட்டுறவுக் கடன் கிடைக்கவில்லை. பூச்சி மருந்து மானியம் கிடைக்கவில்லை. குத்தகை பதிவு இல்லாத விவசாயிகளுக்கு சர்க்கார் சலுகைகள் கிடைக்காத நிலை இருக்கிறது. அதிகாரிகள் கூட குத்தகை பதிவு செய்யும் காரியத்தில் சரியான முனைப்பு காட்டுவது கிடையாது. கும்பகோணம் அருகில் வலங்கைமான் வட்டம், நல்லூர் கிராமத்தில் ரங்கராஜன் என்பவர் 3 ஆண்டுக் காலத்திற்கு முன்பு மனுக் கொடுத்தும், இன்னமும் விசாரணை முடிந்து, அவர் உண்மையான குத்தகை விவசாயியா, இல்லையா என்று சொல்லவில்லை. இடையில் பெரிய நிலப் பிரபு தலையீட்டின் பேரில் தடைப்பட்டு உள்ளது. இன்றைக்கு பினாமி நிலங்களை





வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு சாதகமாக வருவாய்த் துறை அதிகாரிகள் நடப்பது என்ற நிலை இல்லாமல் ஏழை எளியவர்களுக்கு சாதகமாக, உண்மையான குத்தகை விவசாயியைப் பதிவு செய்து, அரசுடைய சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிகள் நிலப் பிரபுக்களுக்காக, அவர்களுக்குக் காவல் புரியும் அளவுக்கு குத்தகைப் பதிவில் பாரபட்சம் காட்டக் கூடாது என்று சொல்லி, இதற்கெல்லாம் துரித நடவடிக்கை எடுத்து, அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று சொல்லி, முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது நிலத்தை யாருக்கு குத்தகைக்கு விடுகிறார்களோ, அவர்களுக்கே அந்த நிலத்தைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதிலே வேறுவிதமான கருத்து இல்லாவிட்டாலும், ஏழை விதவைப் பெண் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல 2 வயதுக் குழந்தையையும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை அவர்கள் குத்தகைக்கு விட்டு, அந்த நிலத்தை குத்தகைதாரர் வைத்துக் கொண்டால், அந்தப் பெண் தெருவில் பிச்சை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சாதாரணமாக ஒரு விதவை அல்லது ஏழையாக இருக்கிறவர்கள் ஒரு ஏக்கர், 2 ஏக்கர் என்று கொடுத்து, அதை சாகுபடி பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு முழுப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்றுதான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சொல்லுகிறது. அவர்களை அனாதையாக விட வேண்டுமென்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்களும் அதைத்தான் சொன்னார். நிலைமைகளைப் பரிசீலித்து, நியாயங்களை அனுசரித்து சட்டத் திருத்தம் கொண்டு வரலாம் என்று சொன்னார்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 6 மாதம், 1 வருடம் அவகாசம் கொடுத்து, Safty Valve போல அமைத்து சொந்த சாகுபடி செய்கிறார்களா என்று பார்க்கலாம்.

(இரவு 6-20)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இந்த அவைக்கு அளிக்கப்பட்டுள்ள நிலவரி, மாவட்ட நிர்வாகம், இயற்கைச் சீற்றம், இழப்பு—ஒதுக்கீடு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அமைச்சர் பெருமக்கள், தலைமையிடப் பணியாளர்கள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கிற இந்திய தேசியக் காங்கிரஸ் சார்பிலே என்னுடைய கட்சி உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே இந்த நூற்றாண்டிலே இல்லாத அளவுக்கு கடுமையான வறட்சி இந்த ஆண்டு நிலவுவதை நாம் நன்றாக அறிவோம். இந்த நான்காவது ஆண்டாக, இந்த ஆண்டும் பருவ மழை பொய்த்து விட்டக் காரணத்தினாலே தமிழகத்திலே பல இடங்களிலே பஞ்சம் தலைவிரித்து ஆடுகின்ற நிலை இருக்கின்றது. ஒரு சில மாவட்டங்களிலே மக்கள் வேலை இல்லாத காரணத்தினாலே குடும்பம் குடும்பமாக வெளியேறக் கூடிய நிலை இருக்கின்றது. இங்கே மத்திய அரசு சார்பிலே சில நாட்களுக்கு முன்னாலே ஒரு குழு இங்கே வந்து ஒரு சில இடங்களைப் பார்வையிட்டு விட்டுப் போனார்கள். நான் அவர்களை மதுரையிலே சந்தித்தேன். கேரள மாநிலத்திலே கொடுத்ததுபோல டிரௌட் அட்வான்ஸ் டெப்பாசிட் என்ற முன்பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டோம். மதுரையிலே அந்த அதிகாரிகள் ஒன்றிரண்டு நாட்களிலே அறிவிப்பதாக சொன்னார்கள். மாண்புமிகு நாவலர் அவர்கள் மத்திய அரசு வந்துபோன பின்னர், எப்போது எவ்வளவு நிதி உதவி கொடுக்கும் என்று இந்த அரசு எதிர்பார்க்கிறது என்று சொல்ல வேண்டும்.

தமிழகத்திலே 123 வட்டங்களிலே வறட்சி என்றும், 25 வட்டங்களிலே கடுமையான வறட்சி இருப்பதாகவும் நம் அரசினுடைய அறிக்கைகள் கூறுகின்றன. இப்படி





25 இடங்களிலேதான் கடுமையான வறட்சி என்று அரசு குறிப்பிடுவது மிக மிகக் குறைவான கணக்கு என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தோராயமாக, 60, 70 வட்டங்கள் கடுமையான வறட்சியின் பிடியிலே சிக்குண்டு இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதிலே பல இடங்களிலே நம்முடைய வருவாய்த் துறை அதிகாரிகள் கணக்குப் போடுகின்ற நேரத்திலே இந்த அனாவாரி சர்டிபிகேட் கொடுக்கின்ற நேரத்திலே 50 சதவிகிதத்திற்கு மேலே விளைந்திருப்பதாக கணக்குக் கொடுத்திருக்கின்றார்கள். அதன் காரணமாக வறட்சி பற்றி முழுமையான நடவடிக்கை எடுக்க முடியவில்லை. அறிவிக்க முடியவில்லை என்று சொன்னார்கள். எனக்குக் கூட சந்தேகம் இருக்கின்றது. அரசின் சார்பிலே Oral Instruction கொடுத்து அதிகமான அளவுக்கு புள்ளிவிவரங்கள் கொடுங்கள் என்று சொல்லியிருப்பார்களோ என்று நான் நினைக்கிறேன். அப்படி இருக்கக் கூடாது என்று நான் விரும்புகிறேன். இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கிறபோது, பல இடங்களிலே கடுமையான வறட்சி இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். நான் சார்ந்திருக்கின்ற மதுரை மாவட்டத்தில் பல வட்டங்களிலே வறட்சி இருந்தாலும் கூட பெரிய குளத்திலே கடுமையான வறட்சி என்றும், மற்ற வட்டங்களிலே, திருமங்கலம், உசிலம்பட்டி வட்டங்களிலே வறட்சி அதிகமாக இல்லை என்று கணக்கை பார்க்கிறபோது, ஒருவேளை இப்படிப்பட்ட விவரங்கள் அரசினிடத்திலிருந்து வருவாய்த் துறை அதிகாரிகளுக்குப் போய் இருக்குமோ என்று நான் நினைக்கிறேன். அதுபோல் வறட்சி நிலை என்று வருகின்றபோது குடிநீர் தட்டுப்பாடும் இருக்கும் என்பது நமக்குத் தெரியும். குடிநீர் கட்டுப்பாடு இப்போது இருப்பதைக் காட்டிலும் வருகின்ற கோடைக் காலத்திலே, காற்றுக் காலத்திலே மிக அதிகமாக இருக்கும் என்று நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். இப்போதுள்ள அந்த நிலையில் குடிநீர்ப் பற்றாக்குறையை போக்குவதற்காக அரசு ஒரு தொகுதியிலே 4 இடங்களிலே அல்லது 5 இடங்களிலே என்று அதிகபட்சமாக 10 இடங்களிலே ஆழ்குழாய் போட உத்தரவு வழங்கி இருக்கின்றது. இது மிகக் குறைவாக இருக்கின்றது. நான் இன்னொன்றையும் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக்

கொண்டு வரவிரும்புகிறேன். தற்போது அந்த ஆழ்குழாய்கள் எல்லாம் 4 அங்குலம் விட்டத்திலே போடுகிறார்கள். அப்படி போட்டால் 125 அடி ஆழம் வரைதான் போட முடிகிறது. ஆனால் வறட்சி கடுமையாக இருக்கின்ற காரணத்தினாலே அந்தப் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் அதற்கும் கீழே போகுமானால், இதைப் போட்டும் பயன் இல்லாமல் போகின்ற காரணத்தினால், 6 அடி விட்டத்திலே 300 அடி ஆழத்திற்கு போடுவதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு செய்தியைக் கேள்விப்படுகிறேன். இப்போது ஒரு ஆழ் குழாய்க்கும் இன்னொரு ஆழ் குழாய்க்கும் இடையில் ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். அதற்கு இடையிலே புதிதாக குழாய் போடக் கூடாது என்று ஒரு உத்தரவு இருப்பதாலே பிப்ரவரி மாதத்திலே குறிப்பிட்ட தேதியிலேயிருந்து புதிதாக ஆழ் குழாய் போடாது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று கேள்விப்பட்டேன். மதுரை மாவட்டத்திலே இந்தச் செய்தியைச் சொன்னார்கள். இந்த செய்தி தவறாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். வறட்சி கடுமையாக இருக்கின்ற காரணத்தினாலே ஒரு கிலோ மீட்டர் தூரம் இடையிலே போடக் கூடாது என்று விதியிருந்தால் நிச்சயமாக அடிநீர்த் தட்டுப்பாட்டை போக்க முடியாது. இதற்கான அந்த நடைமுறையைத் தளர்த்தி அதிகமான அளவுக்கு ஆழ் குழாய்கள் போடுவதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வரி வஜா பற்றி சொல்கின்ற நேரத்திலே இதற்கு முன்னாலே பல முறை சொல்லியிருக்கிறோம். நஞ்சைக்கு வரி வஜா செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறோம். புஞ்சைக்கு நில வரி இல்லை. ஆனால் அதையொட்டிய மற்ற செஸ் இருக்கின்றது, வரிகள் இருக்கின்றன. அரசாங்கம் அது குறித்து அறிவித்தால் தான் அவர்கள் கூட்டுறவுக் கடன் பெறுவதற்கும், வேறு சலுகைகள் பெறுவதற்கும் பொருத்தமாக இருக்கும். அப்படி அரசாங்கம் இன்னும் அறிவிக்காத காரணத்தினாலே பல இடங்களிலே கிராம அதிகாரிகள் இன்றைக்கு வரியை வசூலித்துக் கொண்டிருக்கின்றார்கள்.





மற்றும், கொஞ்சம் கூட மழை இல்லாமல் விளைவே இல்லாமல் இருக்கின்ற இடங்களிலே இன்றைக்கு வரி வசூலிக்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலே அரசாங்கம் இதிலே தெளிவான உத்தரவை பிறப்பிக்க வேண்டும். விவசாயிகள் கடனாளியாகப் பிறந்து, கடனாளியாக வாழ்ந்து, கடனாளியாக மாறுகின்ற நிலையில் இருக்கின்றார்கள். இந்த ஆண்டு வாழ்வா சாவா என்று ஜீவ போராட்டத்தில் இருக்கின்ற இந்த நேரத்திலே வரி வசூல் செய்வது எந்த விதத்திலும் பொருத்தமாக இருக்காது. அரசாங்கம் அது குறித்து தெளிவான உத்தரவை பிறப்பிக்க வேண்டும். அரசு கொள்கைக் குறிப்பில் மனித உழைப்பை அடிப்படையாகக் கொண்ட ஏரி, கண்மாய், குளம் போன்றவைகளை தூர் வார 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. பல திட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இதற்கு இன்னும் அதிகமாக பணம் ஒதுக்கப்பட வேண்டும். மனித உழைப்புக்கு முன்னுரிமை கொடுத்து வேலை வாய்ப்பு கொடுத்து ஏரி, கண்மாய், குளம் போன்றவைகளை தூர் எடுக்கிறோம். ஆனால் இப்பணியை செய்யும்போது வெறும் கண் துடைப்புக்காக இது இருக்கக் கூடாது. அதுபோல் நிறைய பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிறோம் என்று சொன்னால் மட்டும் போதாது. குறைந்த பட்சம் 3 அடி, 4 அடி, 5 அடி என்கிற அளவில் ஆழப்படுத்தினால் தான் மழை பெய்கிற நேரத்தில் நீர் அங்கே தேங்க வாய்ப்பாக இருக்கும். காரணம் நீர் தேக்கமாக நமக்கு தேவைப்படுகிறது. அதுபோல சமுதாய கிணறுகளை அதிகமாக தோண்டினால் அங்கே தேங்குகிற நீர் ஊற்றுநீருக்கும் பயன்படும், அதோடு பாசனத்துக்கும் அதனை பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அதிகமான அளவில் சமுதாய கிணறுகளைத் தோண்ட அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு வேதனையான விஷயம் என்னவென்றால் இன்றைக்கு தமிழகத்திலிருந்து கேரளாவிற்கு போகிற சாலையில் தினசரி மந்தை மந்தையாக, சாரி சாரியாக கால்நடைகள் ஓட்டப்படுகின்றன. இங்கே கால்நடைகளை விவசாயிகள் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள முடியாத நிலையில்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 ஏப்ரல் 22

இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வேறு அவர்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது. இப்படி கால்நடைகள் கோசாலைக்கு சென்று கொண்டிருந்தால் மழைக் காலங்களில் கால்நடை இல்லாத நிலையில் அவர்கள் விவசாய பணிகளை செய்ய முடியாது. இன்றைக்கு அந்த விவசாயிகள் வந்த விலைக்கு கால்நடைகளை விற்கிறார்கள். இந்த வறட்சியான காலத்தில் கால்நடைகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற தீவன பற்றாக்குறையைப் போக்க அரசு நியாய விலையில் கால்நடை தீவனங்களை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏற்கெனவே இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். எந்த அளவிற்கு இதுவரை இது குறித்து முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்? நியாயமான விலைக்கு அதனை கொடுத்திருக்கிறார்களா? இதுவரை இல்லையென்றால் உடனடியாக கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு விவசாயம் செய்கின்றபோது மழை, பூச்சி போன்றவற்றின் காரணமாக பயிர் அழிந்து போகின்ற நிலை இருக்கிறது. சமுதாயத்திலுள்ள ஏனைய பகுதியினருக்கு பல விதங்களிலும் பாதுகாப்பு கொடுப்பது போல விவசாயிகளின் பயிர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நிலவரி வசூல், நிலச் சீர்திருத்தம், மறுவாழ்வு இப்படி எல்லாவற்றிலும் இந்த அரசு தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது. வருவாய் வாரியம் பல ஆண்டுகளுக்கு முன்பே ஒழிக்கப்பட்டு விட்டது. வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலம் வரை இது செயல்பட்டு வந்தது. அப்போது தலைமைச் செயலாளர் அந்தஸ்துக்கு இணையாக வாரியத்தின் முதல் உறுப்பினரின் அந்தஸ்து இருந்தது. மூதறிஞர் இராஜாஜி அவர்கள் ஆட்சிக் காலத்திலிருந்து பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலம் வரை வருவாய் வாரியத்திற்கு இணையாக மாற்று ஏற்பாடு ஒன்றினை செய்ய வேண்டுமென்று எண்ணிப் பார்த்து திட்டங்கள் போட்டும் அவை எல்லாம் கைவிடப்பட்டிருக்கின்றன. மண்டல ஆணையாளர் என்கிற பெயரில் தமிழகத்தில் 4 மண்டலங்களை ஏற்படுத்தி அதில்



1987 ஏப்ரல் 22] [திரு. என். எஸ். வி. சித்தன்]

ஆணையாளர்களைப் போட்டால நன்றாக இருக்கும் என்கிற யோசனை கூட ஒரு காலத்தில் சொல்லப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு பின்னால் அது கைவிடப்பட்டது. ஆக, இதிலே சீர்திருத்தம் செய்ய மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று எண்ணி திட்டமிட்டிருந்தாலும் கூட அவை எல்லாம் அப்போது நிறைவேற்றப்படவில்லை. அதற்குக் காரணம் அன்றைக்கு வருவாய் துறைக்கு இருந்த பணியின் தன்மையால் தான் அவ்வாறு செய்ய முடியாத நிலை இருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் வருவாய் துறை அமைச்சராக இருந்தபோது வருவாய் வாரியம் ஒழிக்கப்பட்டது. இன்றைக்கு அங்கே பல்வேறு ஆணையாளர்கள் இருக்கிறார்கள். நில நிர்வாகம், நில சீர்திருத்தம், துயர் துணிப்பு, மதுவிலக்கு, வணிக வரி இப்படி பல்வேறு துறைகளுக்கு ஆணையாளர்கள் இருந்தாலும் இன்றைக்கு இந்த ஆணையாளர்களிடையே ஒரு ஒருங்கிணைப்பு இல்லை. முன்பெல்லாம் போர்ட் ஆப் ரெவின்யூ இருந்த காலத்தில் எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து ஒட்டுமொத்தமாக முடிவெடுத்தார்கள். ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட ஓர் ஒருங்கிணைப்பு இந்த ஆணையாளர்களிடையே இல்லாததால் மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணியில் தடை ஏற்படுகிறது. வருங்காலத்தில் இந்த ஆணையாளர்களுடைய பணி நல்ல முறையில் பயன்படுவதற்காக ஒருங்கிணைப்பு செய்யப்பட வேண்டுவது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ ஆணையாளர்களாக இவர்கள் இருக்கிறார்கள் என்கிற தன்மையிலிருந்து இவர்களை விடுத்து இந்த நாட்டு மக்களுக்கு நல்ல முறையில் உருப்படியான சேவை செய்ய, இவர்களை செயல்பட விட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 6-30)

நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து அல்லது நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து விலக்கு கோரி பல்வேறு அமைப்புகள் மனுக்கள் செய்தும் பல ஆண்டுகளாக உத்தரவு கிடைக்கவில்லை என்று நான் கேள்விப்படுகிறேன். பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும், தொண்டு அமைப்புகளிலேயிருந்தும், விளையாட்டு, போட்டி போன்ற நிறுவனங்களிடமிருந்தும், அங்கீகரிக்கப்பட வேண்டிய பல்வேறு அமைப்புகளிலேயிருந்தும்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 ஏப்ரல் 22

நியாயமான காரியங்களுக்கை நகர்ப்புற நில உச்சவரம்பிலேயிருந்து விலக்கு அல்லது சட்டத்திலேயிருந்து விதிவிலக்கு கோரி வந்த விண்ணப்பங்கள் பல இன்னமும் நீக்கப்படாமல் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை பெறப்பட்டன, ஏன் காலதாமதத்திற்கு ஆளாகின்றன என்கின்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் எனக்குச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பொது அமைப்புகள் விரிவாக்கத்திற்காகக் கடன் வாங்கி பல்வேறு அமைப்புகளிலேயிருந்து கடன் வாங்கி வட்டி கட்டினாலும் கூட இந்தத் துறையிலேயிருந்து அதற்கான தீர்ப்பு வராத காரணத்தினாலே அவைகளெல்லாம் இன்றைக்கு நஷ்டப்படுகின்ற சூழ்நிலையிலே, தொல்லைப் படுகின்ற சூழ்நிலையிலே இருக்கின்றன. நான்கூடக் கேள்விப்படுகிறேன், ஒருமுறை நம்முடைய நாவலரும், வேறு இரண்டு அமைச்சர்களும் ஆக மூன்று அமைச்சர்களாக சேர்ந்துகூட இதற்குத் தீர்ப்பு அளிப்பதற்காக அல்லது முடிவு எடுப்பதற்காக குழு அமைக்கப்பட்டதாகவும், அதன்மூலமாகவும் உருவான பலன் எதுவும் கிடைக்கவில்லை என்றும் கேள்விப்படுகிறேன். அது அப்படியில்லாமல் இந்த நிறுவனங்களுக்கான நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நில வரியைப் பொறுத்து இன்றைக்கு மானியக் கோரிக்கையாக இருக்கின்ற காரணத்தினாலே, இதற்குத் தொடர்புடையதாக இல்லாவிட்டாலும்கூட ஒன்றை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வது பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். 28—2—1987 வரை கூட்டுறவுக் கடனினுடைய மொத்த நிலுவை 295.75 கோடியாக இருந்தது. ஆனால் அதில் வசூல் செய்யப்பட்டது 183 கோடியே 76 இலட்சம் என்று சொல்கிறார்கள். இன்றைக்கு நிலுவையாக 111 கோடியே 91 இலட்சம் இருக்கிறது. ஆகவே வசூல் செய்தது 62 சதவீதம் என்றும், வசூல் ஆகாதது 38 சதவீதம் என்றும் சொல்கிறார்கள். ஆனால் நான் அறிந்தவரையில் இதே கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்கினோர் இந்த நிலுவையைத் தீர்த்திருக்கிறார்கள். அப்படித் தீர்த்துவிட்டு மறுபடியும் கடன் வாங்கி



1987 ஏப்ரல் 22] [திரு. என். எஸ். வி. சித்தன்]

யிருக்கிறார்கள். விவசாயிகளினுடைய கடன் பளு எந்த வகையிலேயும் குறையவில்லை. விவசாயிகள் கடனைச் செலுத்துகின்ற நிலையிலே இல்லை என்பதைக் கேள்விப்படுகிறேன். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மயிலாடுதுறையிலே கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைத் திறந்து வைக்கின்ற நேரத்திலே விவசாயப் பெருமக்கள் செலுத்த வேண்டிய கூட்டுறவுக் கடன்களுக்கு ஆறு மாத தவணை தள்ளிக்கொடுத்து ஒத்தி வைத்திருப்பதாக நான் ரேடியோவிலே செய்தி கேட்டேன். ஆகவே, அது பிப்ரவரி மாதம் கட்ட வேண்டிய தவணையா அல்லது ஜூன் மாதம் கட்ட வேண்டிய தவணையா அல்லது இரண்டுக்கும் சேர்ந்திருக்கிறதா என்ற செய்தியை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயப் பெருமக்கள் இன்றைக்குக் கஷ்டப் படக்கூடிய இன்னொரு பிரச்சினை என்னவென்று சொன்னால், கிணற்றிலே தண்ணீரே கிடையாது, கிணற்றிலேயிருக்கின்ற பம்பு செட்டைக் கழற்றி வீட்டிலே வைத்திருக்கிறார்கள். ஆனால் ஹார்ஸ் பவர் ஒன்றுக்கு 75 ரூபாய் என்று கட்ட வேண்டிய ஒரு நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதிலே முற்றாகத் தண்ணீரே இல்லாமல், வறண்டு போய் விட்ட கிணற்றுக்கு அந்தப் பம்பு செட்டு வைத்திருக்கின்ற விவசாயிகளிடம் 75 ரூபாய் ஹார்ஸ் பவருக்கு என்று வாங்குவது மொத்த பொருத்தமாகவே இருக்காது. ஆகவே, இதை அரசாங்கம் கவனித்து அவர்களிடமிருந்து இந்தத் தொகை பெறப்படாத அளவிற்கு, அவர்கள் செலுத்தாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையிலே ஜனவரி மாதத்திலேயிருந்து கைட் லைன் வேல்யூவேஷன் என்று சொல்லி, நிலங்களுடைய மதிப்பு பல மடங்கு உயர்த்தப்பட்டு இருப்பதாகவும், அதன்காரணமாகப் பத்திரப்பதிவு அலுவலகத்திலே விவசாயப் பெருமக்கள் நிறையப் பணம் கொடுத்துப் பதிய வேண்டிய நிலையிருக்கிறது. இரண்டு மடங்கு, மூன்று மடங்கு என்று நிலங்களினுடைய மதிப்பு உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்லி செய்திகள்

[திரு. என். எல். வி. சித்தன்] [1987 ஏப்ரல் 22

வந்திருக்கின்றன. இது கொஞ்சம்கூட நியாயமாக இருக்காது. உயர்த்த வேண்டுமென்று சொன்னால்கூட 5 சதவீதம், 10 சதவீதம், 15 சதவீதம் என்று இருக்க வேண்டுமே தவிர, 300 சதவீதம் உயர்த்துவது என்பது எந்த வகையிலேயும் பொருத்தமாக இருக்காது என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழே விவசாயி களுக்கு நன்மை செய்வதற்காக இந்த நிலங்களை அளந்து அவர்களுக்கு யார் யாருக்கு எந்த நிலம் சொந்தம் என்று வரையறுப்பதற்கான திட்டம் வந்திருக்கிறது. ஆனால் அதற்காக ஒரு ஏக்கருக்கு 70 ரூபாய் வரையில்கூட அதை வசூலிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இது உண்மையாக இருக்கக்கூடாது என்றே நான் விரும்புகிறேன். 70 ரூபாய் என்று சொன்னால் அது எந்தவிதத்திலேயும் நியாயமாக இருக்காது சாதாரணமாக ஒரு நாமினல் பீஸ் என்று சொல்லக்கூடிய அந்த அளவிற்கு ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்றுதான் போட வேண்டும். ஆகவே, அப்படி அதிகமாக வசூலிக்கின்ற நிலைமை இருக்குமேயானால் அதற்கு அரசாங்கம் நிவாரணம் அளிக்க வேண்டும். இது மிகவும் அதிகமான தொகை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இயற்கைச் சீற்றங்களான வெள்ளம், மழை, பேய்மழை, புயல், வறட்சி போன்றவை தலையெடுக்கும்பொழுதெல்லாம், துயர் துடைப்புப் பணி என்று நம்முடைய துயர் துடைப்பு ஆணையாளர், அவர்கள் கவனித்துக் கொள்கிறார்கள். ஆனால் இது பெரும்பாலும் பாதிப்பு ஏற்படுகின்ற நேரத்திலே இந்தத் துயர் துடைப்புப் பணிகளை ஏற்றுக் கொள்கிறோம்; மத்திய அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுக்கிறோம்; மத்திய அரசாங்கத் திலேயிருந்து பிரதிநிதிகள் வருகிறார்கள், பார்க்கிறார்கள்; முக்கால் பங்கு கடன் கொடுக்கிறார்கள், கால் பங்கு மானியம் கொடுக்கிறார்கள் என்ற நிலையிருந்துகொண்டிருக்கிறது. ஆனால் இதுமாதிரி இயற்கை உற்பாதங்கள் வருகின்ற நேரத்திலே ஒரு மார்ஜினல் மணி என்று நம்முடைய நிதி நிலை அறிக்கையிலே ஒதுக்கி வைத்து, அந்த மார்ஜினல் மணியிலேயிருந்து, அந்தத் துயரங்கள் வருகின்ற நேரத்திலே செலவழித்து, பின்னாலே அதற்கு இணையான ஒரு தொகையை மத்திய அரசிடமிருந்து



1987 ஏப்ரல் 22] [திரு. என். எல். வி. சித்தன்]

பெறக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். அப்படிப்பட்ட ஒரு மார்ஜினல் மணி இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதற்கான விவரங்களை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும், நம்முடைய மத்திய அரசாங்கத்திலேயிருந்து வருகின்ற வல்லுநர்களெல்லாம், ஒவ்வொருமுறையும் வரும்பொழுதும் ஒருசில யோசனைகளை நமக்குச் சொல்கிறார்கள். ஒவ்வொரு மாநிலமும் நிரந்தரமாக ஒரு நிதியை உருவாக்க வேண்டும் இதுமாதிரி இயற்கை உற்பாதங்களுக்கு. இரண்டாவதாக வெள்ளம், புயல், வறட்சி ஏற்படுகின்ற நேரத்திலே நாம் அப்போதைக்கப்போது ஒட்டு பிளாஸ்திரி போடுவதைப்போல அப்போதைக்கப்போது இருக்கின்ற கஷ்டங்களை நிவர்த்திப் பதற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்கிறோம். அப்படி எல்லாம் தொலைதூர நோக்கோடு நீண்டகால அடிப்படையில் நல்ல திட்டங்களை உருவாக்க வேண்டும். கிராமப்புற வேலைவாய்ப்பு களை உருவாக்குகின்ற வகையில் திட்டங்கள் இருக்க வேண்டு மென்று நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்மைப் பொறுத்த வரை வெள்ளம் வரும்போது அந்த வெள்ளத்தைத் தேக்கி வைக்க கசிவுநீர் குட்டைகளை, குளங்களை அதிகமாக ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் பலமுறை மத்திய அரசின் சார்பில் இங்கே வருகின்ற குழு அவ்வப்போது நினைவுபடுத்துகிறது. அப்படி நினைவுபடுத்தியும் அரசாங்கம் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. அதிலே உரிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வருங்காலத் திலாவது தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு, வெள்ளம் வருகின்றபோது ஒரு சொட்டு வெள்ளம் கூட வீணாகாத அளவுக்கு நீண்டகால திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய திருவொற்றியூர் தொகுதியில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்போன்று புழல் ஒன்றியத்திலும் கடுமையான பஞ்சம் இருக்கிறது. இதே சென்னை மாநகரில் இன்றைக்கு குடிநீர்ப் பஞ்சம் மிக அதிகமாக இருக்கிறது. 1982-83 ஆம் ஆண்டில் சென்னையில் கடுமையான குடிநீர்த் தட்டுப் பாடு ஏற்பட்ட போது மிகத் திறமையாக அரசு சமாளித்தது. ஆழ்குழாய்களைப் போட்டது; லாரிகளில் தண்ணீர் வழங்கியது; கைப் பம்புகளை ஆங்காங்கே நிறைய போட்டது. 1982—83-ல் போடப்பட்ட துளைக் கிணறுகளில் எத்தனை இன்னும்

[திரு. என். எல். வி. சித்தன்] [1987 ஏப்ரல் 22

இயங்கிக்கொண்டிருக்கிறது; மாயமாக மறைந்தது எத்தனை என்பதை அரசாங்கம் கண்டறியவேண்டும். முறையில் அவை பராமரிக்கப் பட்டிருந்தால் ஒழுங்கான நேரத்தில் மக்களுக்கு நல்ல பயனுடையதாக இப்படிப்பட்ட இப்போது அதனுடைய பயன் மக்களுக்குக் இருந்திருக்கும். போய்விட்டது. கிடைக்காமல்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆரம்பிக்கப்பட்டபோது பத்து ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டில் எல்லா இடங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு தொடங்கப் பட்டது. ஆனால் தற்போது அந்த நோக்கம் அந்தத் திட்டம் நிறைவேறவில்லை. உலக வங்கி நிதி உதவியுடன் பெரியார் மாவட்டத்தில் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டத் திட்டத்திற்கு பணம் பெற்றும் பணி இன்னும் தொடங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அது உண்மை என்றால் அதற்கான காரணம் என்ன என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. வறட்சி நேரங்களில் தனியார் நிறுவனங் களிடமிருந்து துளை போடும் கருவிகள் வாடகைக்குப் பெறுகிறோம். அதிலே பல முறைகேடுகள் இருப்பதாக செய்தி கள் வருகின்றன. முறைகேடுகள் இருக்கக்கூடாது தனியார் நிறுவனங்களிடமிருந்து துளை போடும் கருவிகளை வாடகைக்கு பொறுவதிலே தவறுகள் நடக்காமல் இருந்தால் நன்றாக இருக்கும். அதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இனி வருகின்ற காலங்களிலே வறட்சி வருமானால் நிவாரணப் பணிகளைத் தொடங்கும்போது இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படுவதற்கு இடமில்லாமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதே மாமன்றத்தில் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த திரு. இராஜாமுகமது அவர்கள் இந்த மாநிலம் ஒவ்வொரு ஆண்டும் நிலைமைகள் உருவாவதை மனதில் கொண்டு, நிபுணர் குழுவின் யோசனையை ஏற்று, நீண்டகாலத் திட்டம் ஒன்றை அறிவித்தார்கள். மாஸ்டர் பிளான் ஒன்று தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட விருக்கிறது என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? அது என்னவாயிற்று



1987 ஏப்ரல் 22] [திரு. என். எல். வி. சித்தன்]

என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்டத் திட்டங்களுக்கு செலவு அதிகமாகும் என்றாலும் பல்வேறு தொண்டு நிறுவனங்கள், நிதி நிறுவனங்களிலிருந்து பலத்தைப் பெற்று, திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய தலைமைச் செயலகத்தைப் பொறுத்தவரையில் முன்பெல்லாம் நல்ல அதிகாரிகள், திறமை வாய்ந்த வல்லுநர்கள் நிறைய பேர் வந்து அரசிலே பங்கேற்றுக் கொண்டார்கள். அப்படிப்பட்ட திறமை வாய்ந்தவர்கள் இப்போது மருத்துவத் துறையாக இருந்தாலும், பொறியியல் துறையாக இருந்தாலும், இதர அரசுத் துறையாக இருந்தாலும் வர தயக்கம் காட்டுகிறார்கள். காரணம் என்னவென்றால் அரசுத் துறையில் இருக்கிற அதிகாரிகள் ஓய்வுபெற்று போகும் போது—அவர்களுடைய பணிக்காலத்தில் ஏதாவது தவறு செய்தி ருந்தால் அப்போது நடவடிக்கை எடுக்காமல்—நடவடிக்கை எடுத்து சஸ்பெண்ட் செய்கிறார்கள். எனக்கு தெரிந்த ஒரு அதிகாரி ஓய்வு பெற்று, அவருக்கு பாராட்டு விழா நடத்தி, பிரிவு உபச்சார விழா நடத்தி, அவர் வீட்டுக்குப் போகும்போது சஸ்பென்ஷன் ஆர்டர் கொடுத்தார்கள். அப்போது அவருடைய நிலைமை எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப்பாருங்கள். தவறு செய்தால் நடவடிக்கை எடுங்கள், வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. எப்போது தவறு செய்தார் என்று தெரிகிறதோ அப்போது தகுந்த நடவடிக்கை எடுத்து முடித்துவிடுங்கள். அப்போது விட்டுவிட்டு, ஏதோ ஒரு காரணம் சொல்லி, ஓய்வு பெற்று வீட்டுக்குப் போகும்போது சஸ்பென்ஷன் செய்வது என்பது ஒரு பழிவாங்கும் நடவடிக்கையாக இருக்கிறது. அப்படி பழிவாங்குகின்ற முறையில் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

...பரல் கமிஷன் அறிக்கை பற்றி விரிவாகப் பேசப்பட்டது. ...அது சம்பந்தமாக மொழிபெயர்ப்புத் துறையைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். அவர்களில் ஒருவரை வேலைக்கு எடுத்துக்கொண்டார்கள். ஐந்தாண்டுக் காலம் ஆகியும் இன்னொருவருக்கு வேலை இன்னும் கொடுக்கப் படவில்லை. பாவம்ங்கும் எண்ணம் இல்லாமல், அதிலே

அரசாங்கம் கவனம் செலுத்தி, தயாள குணத்தோடு தாராளமாக நடந்துகொண்டு, உடனடியாக அவரை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று தலைமைச் செயலகத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களில் 12 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகாலம் ஆகிவிட்டது. இன்னும் அவர்கள் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படாமல் இருக்கிறார்கள். தாராள மனதோடு அவர்களையும் அரசாங்கம் வேலையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

(இரவு 6-40)

இங்கே அமைச்சர் பெருமக்களைப் பற்றிச் சொல்கிற நேரத்தில் நான் அவர்களுக்கு ஒரு யோசனையாகச் சொல்ல விரும்புகிறேன். தோழமைக்கட்சிக்காரன் என்ற முறையில் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் பெருமக்கள் சென்னையில் இருக்கிற காலங்களில் தலைமைச் செயலகத்திற்கு தினமும் இரண்டு நேரமும் வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எப்படி அரசாங்க அதிகாரிகள் அலுவலகத்திற்கு வருகிறார்களோ அதைப்போலவே அமைச்சர் பெருமக்களும் தலைமைச் செயலகத்திற்கு வந்து காலையிலிருந்து மாலை வரையில் இருப்பார்களேயானால் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். நான் ஒரு ஆலோசனையாகத்தான் சொல்ல விரும்புகிறேன். அப்படி வந்தால் எங்களைப் போன்றவர்களை, பொதுப்பணியில் ஈடுபட்டிருப்பவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் சட்டமன்றத்திற்கு வரவேண்டுமோ அதைப்போல எனைய நாட்களிலும் தலைமைச் செயலகத்திற்கு வரவேண்டும். அவர்கள் வெளியூருக்குப் போகாத நாட்களில் கோட்டைக்கு வரவேண்டும்.

அமைச்சர்கள் கோட்டைக்கு வந்தால்தான் எங்களைப் போன்றவர்கள் வந்து பார்ப்பதற்கு எளிதாக இருக்கும். மக்கள் வந்து பார்ப்பதற்கும் உதவியாக இருக்கும். அருமைத் தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்தபோது தமிழகத்தில் அவர் பாதம் படாத கிராமங்களே இல்லை என்று சொல்லலாம். அந்த அளவுக்கு அவர் வெகுவாக



எல்லா ஊர்களுக்கும் போய் வந்திருக்கிறார்கள். அப்படிப் போகின்ற அதே நேரத்தில் கோப்புகள் தேங்கிக் கிடக்கின்றன என்று சொன்னால் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். கேள்விப் பட்ட உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் வந்து கோப்புகளில் கையெழுத்துப் போட்டு விட்டுப் போவார்கள். அந்த முறையில் அமைச்சர்கள் நன்றாகச் செயல்படவேண்டும். உங்களுடைய விழுமிய பணிகள் தமிழகத் தில் நன்றாக வரவேண்டும் என்றுதான் நான் ஒரு ஆலோசனை யாகச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் எல்லாம் வந்து கோப்பு களைப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்னொன்றைக்கூட நான் ஆலோசனையாகச் சொல்ல விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒரு மாத கால அளவிற்கு தங்களுடைய நிகழ்ச்சி நிரலை அனுப்புகிறார்கள். ஒரு மாத காலத்தில் எங்கெங்கே இருக்கிறோம் என்று அனுப்புகிறார்கள். அமைச்சர் பெருமக்களும் கூட அதை உதாரணமாக எடுத்துக்கொண்டு செய்யலாம். ஒரு மாத காலம் என்பது கஷ்டமாக இருக்கும். ஆகவே 15 நாட்கள் என்ற அளவுக்காவது எடுத்துக்கொண்டு நிகழ்ச்சி நிரலை அனுப்பி வைத்தால் அமைச்சர்கள் தலைமையிடத்தில் இருக்கிறார்களா அல்லது தொகுதிக்குப் போகிறார்களா என்பதை எங்களைப் போன்றவர்கள் அறிந்துகொள்ள நல்ல வாய்ப்பாக இருக்கும். எனவே இதனை ஒரு முன்னுதாரணமாக தமிழகத்தில் உள்ள அமைச்சர்கள் செய்யலாம். அந்த வகையில் நிகழ்ச்சி நிரலை அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்த படியாக அவர்கள் தினமும் தலைமைச் செயலகத்திற்கு வந்தால் அதிகாரிகளும் சரியாக வருவார்கள். தலைமை ஆசிரியர் ஒழுங்காகப் பள்ளிக்கு வந்தால் துணைத் தலைமை ஆசிரியரும் வருவார், துணைத் தலைமை ஆசிரியர் வந்தால் மற்ற ஆசிரியர் களும் வருவார்கள், மற்ற ஆசிரியர்கள் வந்தால் மாணவர்களும் ஒழுங்காக வருவார்கள் என்று நாம் சொல்லுவதைப்போல இவர்கள் கோட்டைக்கு வந்தால் அதிகாரிகளுக்கு ஒரு பய உணர்வு இருக்கும். எனவே அவர்கள் நிச்சயமாக வரவேண்டும். நிர்வாகம் நல்லமுறையில் நடப்பதற்கு உதவியாக இருக்க வேண்டும். (குறுக்கீடு) நான் வரவில்லை என்று சொல்லவில்லை. வரவேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன். இதனை ஒரு

ஆலோசனையாகத்தான் சொல்கிறேன். எனக்கு எந்த அமைச்சர் மீதும் காழ்ப்புணர்ச்சி இல்லை. நிர்வாகம் நல்ல முறையில் வரவேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இப்படி வந்தால் . . .

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற போது நிர்வாகம் நல்ல முறையில் இருக்க வேண்டும், அதனாலே அமைச்சர்கள் வரவேண்டும் என்று சொன்னார்கள். நிர்வாகம் நல்ல முறையில்தான் இயங்கி வருகிறது. அமைச்சர்களும் இங்கே சென்னையில் இருக்கிறபோது கோட்டைக்கு வந்து கொண்டுதான் இருக்கிறோம். அமைச்சர்கள் வந்தால் சட்ட மன்ற உறுப்பினர்கள் பார்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால் நாங்கள் கோட்டைக்கு வருகிறபோது சட்டமன்ற உறுப்பினர்கள்தான் தொகுதிக்குச் சென்று விடுகிறார்கள். நாங்கள் இங்கே இருக்கிற நேரத்தில் கட்டாய மாக மக்களைச் சந்திக்கிறோம். இங்கே எங்களைப் பார்க்க வருகிற சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அவைத் தலைவர் அவர்களே தாங்கள் கோட்டைக்கு வருகிறபோது சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குப் போகிறார்கள் என்று கூறுகிறார்கள். அது நியாயம்தானே! நாங்கள் தொகுதியில்தானே இருக்கவேண்டும் இங்கே வேலை இருக்கிற நேரத்தில் இங்கே தாங்கள் வர வேண்டும். நீங்கள் வருவதாகச் சொல்கிறீர்கள். வந்தால் எங்களுடைய பாராட்டுக்கள், நான் வரவேற்கிறேன். வரவில்லை என்று சொன்னால் வரவேண்டும் என்று சொல்வதில் தவறில்லை. யாரையும் புண்படுத்தவேண்டும், குறையாகச் சொல்லவேண்டும் என்பதற்காக இதை நான் சொல்லவில்லை. இன்னும் நல்ல முறையில் இருக்கவேண்டும் என்ற உணர்வோடுதான் பேசிக் கொண்டு இருக்கிறேன்.

தமிழகத்தில் வறட்சி கடுமையாக இருப்பதன் காரணத்தால் நான் ஒன்றை, அவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு மாவட்டத் திற்கும் ஒரு அமைச்சர் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். சிறிய மாவட்டம் என்றால் இரண்டு மாவட்டங்களை எடுத்துக்





காள்ளலாம். அவ்வாறு எடுத்துக்கொண்டு மாவட்டங்களில் றட்சி நிவாரணப் பணிகளைக் கண்காணித்தால், நிவாரணப் ணிகளைத் திடீர், திடீரென்று போய்ப் பார்த்தால் அதன் மூலம் அந்தப் பணம் நல்ல முறையில் செலவாக ஏதுவாக இருக்கும். மக்களின் குறைகள் நிவர்த்தியாகும். அரசுக்கும் நல்ல பெயர் கிடைக்கும். மக்களுக்கும் நன்மை கிடைக்கும். அந்த வகையில் அமைச்சர்கள் பொறுப்பேற்றுக்கொண்டு பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வரிசையில் பல உறுப்பினர்கள் பேசி இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதி ன்ற நேரத்தில் பதிலே வருவதில்லை என்று நீண்ட நாட்களாக நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அடுத்த முறை சட்ட மன்றத்திற்கு நாங்கள் வருகிறபோது இந்தக் குறை எங்களுக்கு இல்லாத அளவுக்கு அருள் கூர்ந்து பதில் எழுதவேண்டும். யாராக இருந்தாலும் பதில் எழுத வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் நிச்சயமாகப் பதில் எழுதக்கூடிய நிலையில் அவர்கள் இருக்கவேண்டும்.

தலைநகராம் சென்னையில் ஒரு அலுவலகம் இருக்கிறது. அதனுடைய பெயர் மாநிலத் திட்டக் குழு. இந்தத் திட்டக் குழுவுக்கு ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவாகிறது. நான் கேட்க விரும்புகிறேன், இது மாநிலத் திட்டக் குழுவா அல்லது மாநில அரசின் ஒதுக்கப்பட்ட அலுவலகமா என்பது னக்குச் சந்தேகமாக இருக்கிறது. திட்டக் குழு தோற்றுவிக்கப் ட்டதே ஏதோ ஒரு முறையில் பதவி கொடுக்க வேண்டும் அல்லது வேண்டாதவர்களை அந்தப் பதவியில் அமர்த்த வேண்டும் என்று கருதப்படுவதுபோன்ற ஒரு உணர்வு மக்களுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். திட்டக் குழு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திட்டக் குழுவுக்குத் தலைவராக இருந்தார்கள். அமைச்சர் அந்தஸ்து பெற்ற ஒருவர் துணைத் தலைவராக இருந்தார்கள்.

அதைப்போலவே பல்வேறு தொழில் இருக்கக் கூடிய வல்லுநர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், தமிழகத்திலே பல்வேறு துறைகளிலே இருக்கிற வல்லுநர்கள் எல்லாம் இந்தத் திட்டக்

குழுவிலே இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அந்தத் திட்டக் குழு எப்படி வந்திருக்கிறது என்று சொன்னால் கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாக, 16, 15 உறுப்பினர்கள் இருந்த அந்தக் குழு இன்றைக்கு 3 உறுப்பினர்களே உள்ள அளவிற்கு வந்திருக்கிறது. இந்தத் திட்டக் குழு நல்ல முறையில் செயல்பட வேண்டும். அதனுடைய உபயோகம் தமிழகத்திற்கு வரவேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் சொல்லுகிறேன்.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது ஒரு பழமொழியைச் சொன்னார்கள். ஏதோ தேய்ந்து கட்டெறும்பு ஆன கதை என்றார்கள். அது அவைக்குறிப்பிலே இருக்கலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதிலே ஒன்றும் இல்லை. இருக்கட்டும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 16, 15 பேர்கள் உறுப்பினர்களாக இருந்த திட்டக் குழு 3 பேர்களாக சுருங்கி விட்ட காரணத்தினாலே நான் சொல்லுகிறேன். சில நேரங்களில் முடிவு எடுக்கப்பட்டதாகக் கூட நான் அறிகிறேன். மாவட்டத்திற்கு ஒரு திட்டக் குழு வேண்டும் என்று கூட அரசாங்கத்தில் முடிவு எடுத்தார்கள் ஒரு முறை, அந்த வகையில் தமிழகத்தில் இந்தத் திட்டக் குழுவின் பணி இருக்க வேண்டும். இல்லை என்று சொன்னால் 10 லட்சம் ரூபாய் செலவு செய்து ஒரு வெள்ளை யானையாக அது மாறி விடக் கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன். அந்த வகையில் அதைக் கவனிக்க வேண்டும்.

அடுத்து மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கும் பிரச்சினை. பல்வேறு மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற கருத்து இந்த வரிசையிலிருந்தும் அந்த வரிசையிலிருந்தும் சொல்லப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டம், திருச்சி மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம் போன்றவைகள் எல்லாம் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று சொல்வதில் அரசாங்கத்திற்கும் கூட உடன்பாடு இருக்கும் என்று கருதுகிறேன். கடந்த ஆண்டிலே



திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கப்பல் ஓட்டிய தமிழர் சிதம்பரனார் பெயரால் ஒரு மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டத்தை நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் என்றும் பிரித்திருக்கிறீர்கள். அதிலேகூட ஏதோ கருத்து வேறுபாடு இருப்பதாகத் தெரிகிறது. எப்படி தமிழ் நாட்டிற்கு தமிழகம் என்று பெயர் வைத்தோமோ அது போல நெல்லை திருநெல்வேலி என்ற பெயரே நன்றாக இருந்தது. அதற்குரிய கட்டபொம்மன் என்று வைத்த காரணத்தினாலே கட்டபொம்மன் சிறப்பு குறைந்ததாகக் கூட உணருகிறார்கள். பெயரை வைப்பதில் எனக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. திருநெல்வேலி வேறு இடங்களுக்கு வைத்துக் கொள்ளலாம். மாவட்டம் என்று வந்தால் இன்னும் கூட சிறப்பாக இருக்கும். இரண்டாகப் பிரித்ததை நான் பாராட்டுகிறேன். ஏனென்றால் நிர்வாகம் நல்லமுறையில் நடைபெறும். மக்கள் அதிகமாக அதிகாரிகளோடு தொடர்பு கொள்ள முடியும். அந்த அளவிலே அரசினர் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்தப் பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கும் முயற்சி [illegible] இந்த ஆண்டு சில மாவட்டங்களைப் பிரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மாவட்ட வளர்ச்சி மன்றம். நல்ல நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது இந்த மாவட்ட வளர்ச்சி மன்றம். ஆனால் இப்போது எங்கோ போய்க் கொண்டிருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இந்த மாவட்ட வளர்ச்சி மன்றம் கூடுகிறது. நாங்கள் எல்லாம் கலந்து கொள்கிறோம். மாவட்டங்களிலே இருக்கிற பெரிய அதிகாரிகள் கூட அதற்கு வருவது கிடையாது. நான் கூட ஒரு சமயம் வேடிக்கையாகச் சொன்னேன். மாவட்டங்களில் இருக்கிற அதிகாரிகள் வரவில்லை என்றால் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எங்களுடைய பிரதிநிதிகளை அனுப்புவது பொருத்தமாக இருக்குமா என்று சொன்னேன். அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களின் தீர்மானத்திற்கு எந்தவித மரியாதையும் இருப்பதாகத் தெரியவில்லை. கூடுகிறது, தீர்மானம் நிறைவேற்றுகிறோம். ஆனால் அந்தத் தீர்மானங்கள் மீது அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்கிறதா, பின் விளைவுகள் என்ன என்பதற்குச் சரியான விளக்கம் இல்லாததினாலேயே

அது மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் இருந்தும் கூட எந்தவிதமான மதிப்பும் இல்லாமல் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லித்தான் ஆக வேண்டும்.

அதைப்போல மாவட்ட அதிகாரிகள் ஒவ்வொருவரும் 'கிரீவன்ஸ் டே' என்று சொல்லி மனுக்கள் வாங்குகிறார்கள். ஏழை எளிய மக்கள் தங்கள் வாழ்வில் அதனால் திடீர் என்று ஏதாவது சிறப்பு நடக்கும் என்ற நம்பிக்கையோடு 10 ரூபாய் எடுத்துக்கொண்டு வந்து காத்திருக்கிறார்கள். அந்த மனுவைக் கொடுக்கிறார்கள். அந்த மனுக்களினால் ஏற்பட்ட பின் விளைவுகள் என்ன என்பதைப்பற்றி மாநில அளவில் ஒரு ஆய்வு நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நீங்கள்தான் இந்த ஆண்டு இந்த அவையின் சார்பிலே பெட்டிஷன் கமிட்டி என்ற மனுக்கள் குழுவை ஏற்படுத்திக் கொடுத்தீர்கள். அந்த பெட்டிஷன் குழுவிற்கு இந்த மனுக்கள் சம்பந்தப்பட்ட தொடர்ச்சி என்ன என்பது ஒட்டு மொத்தமாக வருமேயானால் இன்னும் கொஞ்சம் அதிகப் பயன் உண்டு. மக்களுடைய குறைகள் என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். இப்போது நாம் எவ்வளவு தீர்த்திருக்கிறோம், எவ்வளவு தீர்க்கவேண்டும் என்பதற்கு ஒரு தொடர்ச்சியாக இருக்கும். அந்த அளவில் இந்த முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு கிராம நல அதிகார்கள் என்று எடுத்துக் கொண்டால் முன்பெல்லாம் கிராம அதிகாரிகள் அந்தந்தக் கிராமங்களிலேயே இருப்பார்கள். இப்போது அந்தக் கிராமத்தில் அவரைப் பார்ப்பதே துர்லபமாக இருக்கிறது. அவர் வேறு இடத்தில் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே ஏழை எளிய மக்கள் பல்வேறு சான்றிதழ்களை வாங்க முடியாமல் தவிக்கிறார்கள். அதனால் கிராம அதிகாரிகள் நிச்சயமாக அதே இடத்தில் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து அநாதைகளைப் பற்றி. நேற்றுகூட நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்கள். எனக்குத் தெரிந்தவர் ஒருவர் அநாதை இல்லத்திலேயே படித்து உத்தியோகம் பெற்றவர். அநாதை இல்லத்திலே இருக்கக்கூடிய ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டிருக்

கிறார்கள். ஆகவே இரண்டு அநாதைகளுக்குப் பிறந்த குழந்தைக்கு என்ன ஜாதி என்று கொடுப்பது? கொடுக்க இயலாத நிலை இருக்கிறது. நேற்று விரைவில் அறிவிப்பு வருமென்று அமைச்சர் அவர்கள் சொன்னதாகப் பார்த்தேன். அது சம்பந்தமான அறிவிப்புகளை அந்தக் குழந்தைகளின் எதிர்காலத்தை, வேலை வாய்ப்பைக் கருத்தில் கொண்டு விரைவில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 6-50)

அடுத்து மாவட்டங்களைப் பிரிப்பது பற்றி எங்களுடைய கட்சியைச் சார்ந்த சொர்ணலிங்கம் அவர்கள் பேச இயலாத காரணத்தால் ஒரு குறிப்பை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். அவருடைய தொகுதி திருவாடானை பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டத்தில் முன்பு இருந்தது. இப்போது இராமநாதபுரம் பிரிக்கப்பட்ட பிறகு பசும்பொன் மாவட்டத்தில் பாதியும், இராமநாதபுரம் மாவட்டத்தில் பாதியுமாக அவருடைய தொகுதி இரண்டு மாவட்டங்களில் இருக்கிறது. மாவட்டப் பிரிவினையால் தேவகோட்டை ஒன்றியத்தில் இருக்கிற 15 பஞ்சாயத்துகள் ஆர். எஸ். மங்கலம் ஒன்றியத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அவருடைய தொகுதியில் நான்கு ஒன்றியங்கள், ஒரு நகரம் இருக்கிறது. திருவாடானை தொகுதி இரண்டு மாவட்டங்களில் இருப்பதால் மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுக் கூட்டத்திற்குப் போவதென்றாலும் எந்த மாவட்டத்திற்குப் போவது என்று கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அந்தத் தொகுதியை ஒரே மாவட்டத்தில் சேர்க்கிற அளவிற்கு செய்யு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக காமராசர் மாவட்டத்தில் இருக்கிற சிவகாசியை தனி வட்டமாக அறிவிக்க வேண்டும். சிவகாசியைப் பொறுத்தவரையில் பல துறைகளில் முன்னேறிக் கொண்டிருக்கும் பகுதியாக இருக்கிறது. அதனை அரசு தனி வட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 40 ரூபாய் வீட்டு வாடகை பற்றி விசாரிப்பதற்குச் சிட்டி சிவில் கோர்ட் என்ற முன்சீப் கோர்ட்டிற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தாசில்தாரைப் பொறுத்தவரையில் 10 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள நிலக் குத்தகை வழக்குகளை விசாரிக்கிற முறையில் இன்றைய முறை இருந்து

[திரு. என். எஸ். வி. சித்தன்] 1987 ஏப்ரல் 22]

கொண்டிருக்கிறது. இதை மாற்ற வேண்டும். ஏனென்றால் தாசில்தார் கோர்ட்டிற்கு வருகிறவர்கள் கூட வழக்கறிஞர்களை வைத்துத்தான் வாதாட வேண்டியிருக்கிறது. ஆகவே இதனை சிவில் கோர்ட்டிற்கு மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிலக் குத்தகை பெறும் நிலச் சொந்தக்காரர்கள் பற்றி இதற்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் கூட சொன்னார்கள். அந்த ஏழை எளிய மக்கள் நிலக் குத்தகைக்கு விட்டிருப்பார்களானால் அந்த நிலத்தைத் திரும்பப் பெறுவதற்கு உரிய வகையில் அரசாங்கம் பாதுகாப்பைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகிகள் பாரம்பரை இன்றைக்கு அருகிக் கொண்டே வருகிறது. உயிரோடு இருக்கிற பாரம்பரையை நான் சொல்கிறேன். மத்திய அரசு பெரிய மனதோடு இந்தத் தியாகிகளுக்கு 500 ரூபாய் பென்ஷன் கொடுத்து வருகிறது. நம்முடைய மாநில அரசாங்கம் 250 ரூபாய் கொடுப்பதாக நான் அறிகிறேன். மத்திய அரசுக்கு இணையாக அருகிக்கொண்டே வருகிற இந்தத் தியாகிகள் பரம்பரைக்கு, அவர்களுடைய கடந்த கால வாழ்க்கையை எண்ணிப்பார்த்து 500 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் 250 ரூபாய் என்பது மிகக் குறைவான தொகையாக இருப்பதால் அதனை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பீகார் போன்ற மாநிலங்களில் 500 ரூபாய் கொடுப்பதாக அறிகிறேன். ஆகவே கொஞ்சம் தாராள மனதோடு நம்முடைய இந்தத் தியாகிகளுக்கு பென்ஷன் கொடுக்க வேண்டும். அதைப்போல தியாகிகளுடைய குழந்தைகளுக்கு, தியாகிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கல்வியில் முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று ஏற்கனவே பேசியிருக்கிறேன். அவர்கள் எல்லா பாலிடெக்னிக் காலேஜிற்கும் வருகிற அளவிற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதைப்போல வீட்டு வசதி தருவதிலும், உத்தியோகங்கள் கொடுப்பதிலும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். ஆகவே இந்தத் தியாகிகளின் குடும்பங்கள் வாடாமல் இருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுத்துக் கொள்ள வேண்டும். அதுபோல சிலை விழா, சுதந்திர தின விழா போன்ற தேசிய விழாக்களில் இந்தத் தியாகப் பெருமக்களை அழைத்து மரியாதை செய்கிற முறையில் செய்ய வேண்டும்.



[1987 ஏப்ரல் 22 [திரு. என். எஸ். வி. சித்தன்]

இறுதியாக நம்முடைய முன்னாள் கிராம அதிகாரிகள் பற்றி குறிப்பிடுகிறேன். இவர்களால் மீண்டும் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்களைப் பணியில் சேர்ப்பது சம்பந்தமாகச் சொல்கிறேன். 14—11—1980-ல் தமிழ்நாடு அரசு அவசரச் சட்டத்தின் மூலம் பதவி இழந்த கிராம அதிகாரிகளில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு சம்பந்தமாக, 1984-ம் ஆண்டு மார்ச்சில் தேர்வு எழுதி பாஸ் செய்தவர்களுக்கு அரசு ஆணை பிறப்பித்தது. 31—7—1985 நகராட்சிகள் நிர்வாகத் துறையிலிருந்து ஆணை எண் 919-ல் தமிழ்நாடு அரசு அத்தனை நகராட்சிகளிலும் இருக்கிற இளநிலை உதவியாளர்களை வரித்தண்டலர் போன்ற வேலைகளுக்கு நியமனம் செய்ய ஆணை பிறப்பித்தது. ஆனால் 31—7—1986-ல் அரசு ஆணையிட்டபோது தமிழ்நாட்டில் 98 நகராட்சிகள் மற்றும் 106 நகர்மன்ற அமைப்புகளில்—நான் கேள்விப்படுகின்றேன்—சிவகாசி நகராட்சியில் மட்டும் ஒரே ஒருவர் தான் உதவியாளராக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார். எஞ்சிய நகராட்சிகளில் யாரும் எடுத்துக்கொள்ளப்படவில்லையென்று அறிகிறேன். எனவே அவர்களுக்கு இருக்கிற அவல நிலையை எண்ணிப்பார்த்து நகராட்சிகள், ஊராட்சிகள் உள்ளாட்சி மன்றங்களில் பணி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல நில அளவைத் துறையில் பிரிவு எழுத்தர் ஒன்றியத்திலிருந்து ஒரு கோரிக்கை வந்திருக்கிறது. தமிழ்நாடு நில்வரிச் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் 2,484 பிரிவு எழுத்தர்கள் மூன்று ஆண்டுக்காலமாக பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் அரசு ஊழியர்கள் பெறும் எந்தச் சலுகையும் இல்லாமல் அல்லல்படுகிறார்கள். நான் கேள்விப்படுகிறேன் அவர்களுக்கு இனக்கூலியாக 12 ரூபாய் தரப்படுகிறது. 27—10—1986-ல் வெளியிட்ட அரசாணை எண். 1092-ஐ அமல்படுத்தி அவர்களுக்கு வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம நல அதிகாரிகளைப் பொறுத்தவரையில், கிராம நல அதிகாரிகளுக்கான தேர்வு 1984-லே நடைபெற்றது. 1984 ஆம் ஆண்டு பிப்ரவரியிலே தேர்வு செய்யப்பட்டார்கள். 3 ஆண்டுகள் முடிந்துவிட்டன. தற்போது பணி நியமனம் கிடைக்காதவர்கள் 1986 ஆம் ஆண்டு நவம்பர் 382 பேர்களாக இருக்கிறார்கள்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 ஏப்ரல் 22

மாதம் 17 ஆம் தேதி இந்தக் கேள்வியை இங்கே எழுப்பினேன். அந்த நேரத்திலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதுபற்றிய செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டு இருப்பதாகவும், விரைவில் 382 பேர்களுக்கு பணி கொடுக்க இருப்பதாகவும் சொன்னார்கள். இந்த 382 பேரிலே நான் கேள்விப்படுகிறேன், 32 வயதுக்கு மேற்பட்டவர்கள் கூட இருக்கிறார்கள். திருநெல்வேலியிலே 36 வயதுடைய பெண் வேலை கிடைத்ததற்குப் பின்னாலே தான் திருமணம் செய்து கொள்வேன் என்று காத்துக் கொண்டு இருக்கிறார்கள். இப்படிப் பட்ட பரிதாப நிலைமையை எண்ணிப் பார்த்து, அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை நிறைவாக்குகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நிதித் துறை பற்றியும், மாநில ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள் மற்றும் தலைமையிடப் பணியாளர்கள் பற்றியும், மாவட்ட நிர்வாகம் பற்றியும், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றியும், இழப்பீடுகள் மற்றும் ஒதுக்கீடுகள் பற்றியும் கோரிய மானியக் கோரிக்கையையொட்டி நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் பல்வேறு கருத்துக்களை, இந்தச் சூழ்நிலையிலே சுட்டிக்காட்டி பல்வேறு கோரிக்கைகளையும் இங்கே வைத்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல் பல்வேறு தொகுதி பிரச்சினைகளையும் தங்கள் விவாதத்தின் மூலமாக எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகள் அத்தனைக்கும் விடை பிறப்பது என்று சொன்னால், இன்று இரவு முழுவதும் போதாது தான். என்றாலும் கூட அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் அத்தனைக்கும் அதிகாரிகள் உரிய மதிப்பை அளித்து அவற்றிலே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை உரிய நேரத்திலே முறைப்படி எடுப்பார்கள் என்பதை மட்டும் இப்போது நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதத்தில் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் பல்வேறு கருத்துக்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்த வகையிலே கூறப்பட்ட கருத்துக்களிலே ஒருசிலவற்றை மட்டும்



1987 ஏப்ரல் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். பொதுவாக உறுப்பினர் பெருமக்கள் இப்போது நாட்டிலே நிலவி வருகிற வறட்சி நிலைமைகளைப் பற்றியும், வறட்சி நிவாரணப் பணிகள் பற்றியும் அதுபற்றி எடுத்து வருகிற நடவடிக்கைகள் பற்றியும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஏற்கனவே வறட்சி நிவாரணப் பணிகளைப் பொறுத்து இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதை இந்த அவையிலே சில பல அறிக்கைகளின் மூலமாக அரசு தெளிவுபடுத்தியிருக்கிறது. அது மட்டுமல்லாமல் என்ன என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதையும் இங்கே அறிக்கையின் வாயிலாக தெளிவுபடுத்தியிருப்பது மட்டுமல்லாமல், இவற்றுக்கெல்லாம் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்பதையும், எந்த அளவிற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதையும் இங்கே நாம் குறிப்பிட்டுக் காட்டினோம். ஆகவே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முறைப்படி எடுத்திருக்கிறோம் என்பதற்கான காரண காரிய விளக்கங்களை நாம சுட்டிக்காட்டினோம்.

1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டில் கடுமையான வறட்சி ஏற்பட்ட காலத்திலேயும் கூட, அதற்கு முன்னால், 72 ஆண்டுக் காலமாக இந்த மாநிலத்தில் ஏற்படாத வறட்சி நிலைமை மிகக் கடுமையான முறையிலே தற்போது ஏற்பட்டாலும், தமிழக அரசு அவற்றைச் சமாளித்தது என்பது மட்டுமல்ல, உணவுத் தட்டுப்பாடு ஏற்படாத அளவிற்கும், அதன் மூலமாக பசி, பட்டினி, பட்டினிச் சாவு ஏற்படாமல் இருப்பதற்கும், அதைத் தடுத்து நிறுத்துகின்ற அளவிற்கும், இவற்றைச் சமாளித்து மக்களுடைய வேதனையையும், வாட்டத்தையும் நீக்குகிற அளவிற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பதை நான் சுட்டிக்காட்டினேன். அதற்குப் பிறகு சென்ற ஆண்டு 1986-லே ஏற்பட்ட வறட்சி நிலைமையையொட்டி, நாம் அவ்வப்போது எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் அடிப்படையிலே மொத்தத்திலே வறட்சி நிவாரணப் பணிகளுக்கு, ஏற்கனவே நாம் வரவு-செலவுத் திட்டத்திலே ஒதுக்கீடு செய்யாமல் அவ்வப்போது கூடுதலாக ஏற்பட்ட செலவினங்களை நாம் ஈடுகட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டதினுடைய விளைவாக 105 கோடி ரூபாய் அளவிற்கு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதை இந்த அவையிலே நான் குறிப்பிட்டேன். இந்த 105 கோடி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] 1987 ஏப்ரல் 22]

அளவிற்கு நிவாரணப் பணிகள் நடைபெற்றன. எப்படி ஆயினும், முன்னூற்றுச் சில்லரை கோடி ரூபாய்க்கு சில பல நிரந்தரப் பணிகளை மேற்கொள்கின்ற வகையிலே நிதி உதவி கேட்டு நாம் மத்திய அரசுக்கு எழுதினாலும், மத்திய அரசு 31 கோடி சில்லரை ரூபாய்க்கு அனுமதி அளித்திருந்தாலும், ஏற்கனவே மார்ஜின் மணி 4½ கோடி ரூபாய் அளவிற்கு இருப்பது போக

(இரவு 7-00)

மிகுதியிலே 50 சதவிகிதம் மானியமாகவும், 70 சதவிகிதம் கடன் என்பதாகவும் வறட்சியைப் பொறுத்தவரையிலே அளிப்பார்கள் என்ற முறையில், மத்திய அரசினுடைய உதவி மானியமாக [illegible] கோடி ரூபாய் அளவுக்கு வர, 105 கோடி ரூபாய் மீதித் தொகை முழுவதையும் மாநில அரசு தாங்க வேண்டிய அளவுக்கு வந்து நாட்டு புஞ்செய் வளர்ச்சித் திட்டத்தையும் வேறு பல திட்டங்களையும் ஓரளவுக்கு நாம் கட்டுப்படுத்திக் கொண்டு வறட்சி நிவாரணப் பணிகளிலே ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதையும் நான் சுட்டிக்காட்டினேன்.

என்றாலும், அந்த வகையினுடைய அடிப்படையிலேதான் இப்போதும் வறட்சி நிவாரணப் பணிகளிலே நாம் ஈடுபட்டு பல்வேறு பணிகளையும் ஆற்றிக் கொண்டு வருகிறோம் என்பதையும், அவ்வப்போது எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறோம் என்பதையும் நாம் சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம். தமிழ்நாட்டிலுள்ள 168 வட்டங்களில் கடுமையான அளவிலே வறட்சி இப்போது தாக்கி இருக்கின்ற அளவிலே 128 வட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த இடங்களிலெல்லாம் 8,625 ஆழ் துளைக் கிணறுகள் அமைக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதற்கான விளக்கக் குறிப்பையும் இந்த அவையிலே தந்திருக்கிறோம். அதற்காக, 28 கோடி ரூபாய் ஆரம்பக் கட்டத்திலே ஒதுக்குவது என்று முடிவு செய்ததையும் இந்த அவைக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறோம். அதற்குப் பிறகு வேலை வாய்ப்புத் திட்டத்திற்கும், குடிநீர் வசதிக்காகவும் பல்வேறு வகைகளில் எடுத்துச் சொன்ன விளக்கங்கள் அத்தனையையும் நான் இப்போது சொல்ல விரும்பவில்லை என்றாலும் இன்றைய அளவிலே 41 கோடியே 14 லட்சம் ரூபாய் அளவுக்கு குடிநீர் வசதி வாய்ப்புகளைச் செய்யவும் வேலை வாய்ப்புப் பணிகளைச் செய்வதற்கும் நாம் ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். அவ்வப்போது ஏற்படுகின்ற



[1987 ஏப்ரல் 22 [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சூழ்நிலையையொட்டி இந்த ஒதுக்கீடு தன்மை வளர்ந்து கொண்டு போகிறது என்பதையும், ஆங்காங்கே இருக்கிற நிலைமைகளைக் கவனித்துக் கொண்டு வருகிறார்கள் என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆங்காங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களும், வருவாய்த் துறையைச் சார்ந்தவர்களும், வளர்ச்சித் துறையைச் சார்ந்தவர்களும், பிற துறையைச் சார்ந்தவர்களும் இந்த வறட்சி கால நிவாரணப் பணிகளிலே போர்க்கால அடிப்படையிலே தங்களுடைய முழு வலிமையும் பயன்படுத்தி ஈடுபட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல், வருவாய்த் துறையைச் சார்ந்த சிறப்பு ஆணையர்கள் 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு தமிழகத்தினுடைய நான்கு பகுதிகளுக்குச் சென்று அவர்களுடைய மேற்பார்வையின் கீழே இந்த மாவட்டங்களெல்லாம் பிரிக்கப்பட்டு இந்தப் பணிகள் செம்மையாக, சிறப்பாக நடைபெற மேற்பார்வை இட வேண்டுமென்றும், அவ்வப்போது அறிக்கையை இங்கே அனுப்ப வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அடிக்கடி சென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்து கொண்டு செய்து கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் எடுத்துச் சொல்லியதற்கு இணங்கவும், வேறு சிலர் எடுத்துச் சொல்லியிருப்பதற்கு இணங்கவும், அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்களும், ஆங்காங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு கலந்து செய்ய வேண்டிய பணிகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்து வருகிறார்கள். அவர்கள் எடுத்துச் சொல்லியது மாதிரி ஆங்காங்கு இருக்கிற பொதுமக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், அவர்கள் மக்களிடம் நெருங்கி இருப்பதன் காரணமாகவும் நிலைமைகளைத் தெளிவாகவும் திட்டமாகவும் அறிந்து கொண்டு, புரிந்து கொண்டு செய்யவேண்டியவைகளை, வழிவகைகளைப் புரிந்து கொள்கிற நிலைமையை அவர்கள் பெற்றிருக்கிற காரணத்தினாலும், அவர்களோடு கலந்து கொண்டு, இருக்கிற நிலைமைகளைத் தீர்க்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் [illegible] கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆங்காங்கே [illegible] சென்றிருக்கிற காலத்திலும் வருவாய்த் துறை அமைச்சர் என்ற

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 ஏப்ரல் 22

முறையிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றவர்களைக் கூட்டி வைத்து ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் ஆங்காங்கே நடைபெறுகின்றவைகளையெல்லாம் ஆராய்ந்து மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளிலே கவனம் செலுத்தி வரப்படுகிறது. தமிழ்நாட்டிலே, நான் ஏற்கெனவே தெரிவித்தபடி 12—3—1978 ஆம் தேதியன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட வகையில் நாம் நிரந்தரமாக, மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களும் மற்றவர்களும் எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க இப்படிப்பட்ட வறட்சி நிலைமைகள் வந்தால் அதைச் சமாளிக்கக் கூடிய அளவுக்கு இப்போது நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுகிற அளவுக்குத்தான் நாம் செலவழிக்கிறோமே தவிர, மறுபடியும் இப்படிப்பட்ட நிலைமைகள் வந்தால் தாக்குப் பிடிக்கிற ஒரு பல அடிப்படைகளையும் வசதிகளையும் செய்வதற்கு ஏற்ற வகையில்தான் 347 கோடியே 25 லட்ச ரூபாயை நாம் கேட்டு இருக்கிறோம். இவ்வளவையும் மத்திய அரசு தருமா என்பது ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய ஒன்று என்றாலும் நாம் கேட்க வேண்டியதையெல்லாம் கேட்க வேண்டியது தான், 'கேள் கொடுக்கப்படும், தட்டு திறக்கப்படும்' என்று இயேசு கிறிஸ்து வேறு ஒன்றுக்கு வேறு ஒரு இடத்திலே எடுத்துச் சொல்வார்கள். அதைப்போல் நாம் கேட்க வேண்டிய நோக்கிலே கேட்க வேண்டும், தட்ட வேண்டிய நோக்கில் தட்ட வேண்டும் என்ற அடிப்படையில் மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். அந்த வகையிலே அவர்களுக்கு எழுதியிருக்கிறோம். அதற்கு இடையிலே உடனடியாக அவர்களிடத்தில் நாம் கேட்டது, பின்னால் நமக்கு ஒதுக்கப்படுகின்ற தொகையிலே முன் பணமாக ரூ. 30 கோடி உடனடியாக வேண்டுமென்று கேட்டோமே தவிர, அதோடு அவர்கள் நிறுத்திவிட வேண்டும் என்பது அல்ல. அட்வான்சாக, முன் பணமாக, ரூபாய் 30 கோடி கேட்டிருக்கிறோம். அதை மத்திய அரசு தந்தால் செலவினங்களுக்கு ஓரளவிற்குப் பயன்படும். பிறகு குழுவினர் சென்று அறிந்து மத்திய அரசுக்குத் தெரிவித்து, மத்திய அரசு ஒதுக்கீடு செய்கின்ற பணத்தில் கழித்துக் கொள்கிற அளவிற்கு முன்னாலே தர வேண்டுமென்ற அளவிலே ரூபாய் 30 கோடி கேட்டிருக்கிறோம்.

தமிழ் நாட்டு வறட்சி நிலவரத்தை மதிப்பீடு செய்வதற்கு முன்னமேவே நான் இந்த அவையிலே எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க, 5 உறுப்பினர்கள் கொண்ட மத்திய நிபுணர் குழு 12—4—1987ஆம் தேதி புது டெல்லியில் இருந்து புறப்பட்டு சென்னைக்கு வந்து சேர்ந்தது என்பதை உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். இக்குழு இரண்டு பிரிவாகப் பிரிந்து மாவட்டங்களில் காணும் வறட்சி நிலையைக் கண்டு பொருட்டு; புறப்பட்டுச் சென்றன. கோயம்புத்தூர், பெரியார், திருச்சிராப்பள்ளி, அண்ணா, மதுரை மற்றும் காமராசர் மாவட்டங்களுக்கு ஒரு குழு சென்று வறட்சி நிலைமையைக் குறித்து மதிப்பீடு செய்தது. பின்னர், 15—4—1987 ஆம் தேதி முற்பகல் அக்குழு சென்னை நகரையும் சுற்றிப் பார்த்து மதிப்பீடு செய்தது.

மற்றொரு குழு, புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம், திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் வறட்சி நிலைமையைக் குறித்து மதிப்பீடு செய்யச் சென்றது.

இந்த இரண்டு குழுக்களும் சுற்றிப் பார்க்க வந்தபோது இங்கு உறுப்பினர்கள் கேட்டதற்கு இணங்க, அவர்களை சட்டமன்ற உறுப்பினர்கள் சந்தித்து நிலைமைகளை எடுத்துக் கூற வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டபோது, அவர்களுக்கு நேரம் இருந்து, இடம் கிடைக்குமானால், வாய்ப்பு இருக்குமானால் நல்லது என்று சொல்லி, உடனே தலைமைச் செயலாளரிடத்திலே சொல்லி, கேட்டபோது, சில பல இடங்களிலே அதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட ஆங்காங்கு இருக்கிற நிலைமைகளை அதிகாரிகளுடன், அலுவலர்களுடன் சேர்ந்து விண்ணப்பங்கள் மூலமாகவும், அவர்கள் கேட்கின்ற சில கேள்விகளுக்கு விடைகளை அளிப்பதன் மூலமாகவும், விளக்கங்கள் அளிப்பதன் மூலமாகவும் ஆங்காங்கு சொல்லியிருப்பதாம் மகிழ்ச்சிக்குரியது என்றாலும், சில பல இடங்களில் ½ மணி நேரம், 1 மணி நேரம் அவர்கள் செலவழிக்க இருப்பதும், அவர்களிடத்திலே நிலைமைகளைக் கேட்டறிந்திருப்பதும் மகிழ்ச்சிக்குரியது என்றாலும், குழுவினர் சென்று வந்ததற்குப் பின்னர் சென்னையில் தலைமைச்

செயலாளர் உட்பட வருவாய்த் துறைச் சேர்ந்த மற்றும் பலவேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்களை, அதிகாரிகள் எல்லோரும் உட்கார்ந்து, சென்று வந்த நிலைமைகளை எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர் எடுத்துச் சொன்னபோது, குறிப்பிட்ட சில மாவட்டங்களுக்குத் தான் இக்குழு சென்று வந்ததே தவிர தங்கள் தங்கள் மாவட்டங்களுக்கு வரவில்லை என்று எடுத்துச் சொன்னார்கள். 20 மாவட்டங்களுக்கும் வருவதென்றால் இன்னும் 2, 3 நாள் ஒதுக்கியிருந்தால், அந்தப் பணிகளைச் செம்மையாகச் செய்திருக்க முடியும். அவர்கள் 1 நாள், 2 நாள்தான் ஒதுக்கித் தந்தார்கள். அந்த 1, 2 நாளில் பயணம் செய்வதற்கு எடுத்துக் கொள்கிற நேரம், முக்கியமான இடங்களைப் பார்ப்பதற்கு எடுத்துக் கொள்கிற நேரம் ஆகியவற்றைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது இதுவே அவர்களை அலைக்கழிக்கிற வகையில் போடப்பட்ட புரோகிராம் என்கின்ற அளவிலே இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்களும், வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் புள்ளிவிவரங்களைக் கொடுக்கின்றபோது 20 மாவட்டங்களின் சூழ்நிலைகளையும் வருவாய்த் துறையைச் சேர்ந்தவர்களும் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மற்றவர்களும் எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் தெளிவாய்ப் புள்ளிவிவரங்களை எடுத்துச் சொல்லி, எந்த எந்த வகையில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி ஆங்காங்கே இருக்கிற மழை பெய்த அளவு, குளங்கள், ஏரிகள், கிணறுகளின் தன்மை, ஆழ்துளைக் கிணறுகளால் ஏற்பட்ட வாய்ப்பு வசதி, இப்போது அவை ஏற்படாத நிலை, கால்நடைகளுக்குத் தீவனம் கிடைக்காத சூழ்நிலை இவைகள் மாத்திரம் இல்லாமல் ஆங்காங்கு இருக்கிற சூழ்நிலைகளை நீங்கள் நிழற்படங்களாக எடுத்து, நிழற்படங்கள் மூலமாக, அவர்கள் நேரடியாகச் சென்று பார்க்காத இடங்களிலே, இருக்கிற நிலைமைகளை அவர்களுக்கு எடுத்துக் காண்பியுங்கள் என்று அறிவுறுத்தப்பட்டதன் காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிழற்படங்களை எடுத்து உடன் வைத்ததன் காரணமாக அந்த நிழற்படங்களை வைத்தே அந்தக் குழுவினருக்குத் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே பல மாவட்டங்களுக்கு அவர்கள் வரவில்லை என்றாலும் அந்த மாவட்டத்தினுடைய சூழ்நிலைகளை அவர்கள் தெளிவாக





அறிந்து கொள்ளத் தக்க அளவுக்கு அவர்களுக்குப் புள்ளிவிவரங்களும் அந்த நிலைமைகளும் விளக்கப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த வாய்ப்பில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(இரவு 7-10)

இந்த நிபுணர் குழுவினுடைய தலைவராக திரு. ஜே. ஆர். சர்மா என்பவர் தலைமை தாங்கினார். இந்த குழுக் கூட்டங்கள் எல்லாம் நடந்து முடிந்த பிறகு அவர்கள் இங்கே சென்னையில் எடுத்துச் சொல்லுகிறபோது கூட நல்ல முறையில் எடுத்துச் சொல்லிவிட்டுச் சென்று இருக்கிறார்கள். அவர்கள் சொல்லுகிற போது தமிழ் நாட்டில் வறட்சி நிலை காரணமாக குடிநீர்ப் பற்றாக்குறை, விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமை, கால்நடைகளுக்குத் தீவனம் பற்றாக்குறை ஆகியவைகள் ஏற்பட்டுள்ளன. நாங்கள் பார்வையிட்ட எல்லா மாவட்டங்களிலும் குடி தண்ணீருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதையும், விவசாயத்திற்கு நீர்ப்பாசனம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதையும் நேரடியாகக் கண்டோம். குறிப்பாக மதுரை, சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பருவ மழை பொய்த்ததன் காரணமாக அங்குள்ள குடிநீர் ஆதாரங்கள் வற்றிக் கிடக்கின்றன என்பதை நாங்கள் உணர்கிறோம். 20 முதல் 25 சதவீதம் உள்ள நிலங்கள் சாகுபடி செய்ய முடியாத நிலையில் இருப்பதால் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு குறைந்து இருக்கிறது. தமிழக அரசு அவசரத் திட்டங்கள் மூலமாக விவசாயத் தொழிலாளர்களுக்கான வேலை வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளன. இந்த முயற்சியை நாங்கள் பாராட்டுகிறோம்: இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் அளிக்கப்படும் விளக்கங்களையும், [illegible] நாங்கள் தெரிந்து கொண்டோம். வறட்சி [illegible] அறிக்கையை இன்னும் 2 வாரங்களுக்குள் [illegible] வறட்சி நிவாரண உயர்மட்டக் குழுவிடம் [illegible] நாங்கள் [illegible] செய்வோம். வறட்சி நிவாரண வேலைகளைச் [illegible] தமிழக அரசுக்கு [illegible] இன்னும் 2, 3 நாட்களுக்குள் [illegible] நாங்கள் செய்வோம் என்று சொல்லிவிட்டுச் சென்று [illegible] இருக்கிறார்கள் [illegible] கூட [illegible]

மறுபடியும் அவர்களுக்கு நாங்கள் தந்து அடைந்து இருக்கிறோம். ஆகவே வரையில் அந்த 30 கோடி ரூபாய் வரவும், இந்தக் குழு அறிக்கையை தந்ததற்குப் பிறகு மத்திய அரசு எந்த அளவுக்கு உதவி செய்யும் என்பதும் இருக்கும். ஆகவே மத்திய அரசின் உதவி வருகிறபோது வரும். அது மானியமாகவும் வரும், 70 சதவீதம் கடனாகவும் வரும். அதற்காக எந்த ஒரு வேலையையும் நாங்கள் நிறுத்தாமல் நம்முடைய நிதியிலிருந்து நாம் செய்து கொண்டு தான் வருகிறோம் என்பதைத் தான் முதலில் நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டது போல இப்படி வறட்சி நிலை ஏற்படுகிறபோது அதைச் சமாளிப்பதற்கும், வெள்ளத்தால் பாதகம் ஏற்படுகிற போது அதைச் சமாளிப்பதற்கும் என்று 8-வது நிதிக் குழு அறிவுரை கூறியது போல் நம்முடைய மாநில நிதி ஆதார வசதி ஆகியவற்றின் அடிப்படையில் ஆண்டுதோறும் 8¾ கோடி ரூபாயை ஒதுக்கிவைக்க வேண்டும் என்பது ஒரு நியதி. வறட்சி அல்லது வெள்ளச் சேதம் ஏற்படாத காலத்திலும் இந்த 8¾ கோடி ரூபாயை ஒதுக்க வேண்டும். 2, 3 ஆண்டுகளுக்கு இந்த மாநிலம் செம்மையாக இருக்குமானால் அந்த 8¾ கோடி ரூபாய் கூட்டிக் கொண்டே வரப்படும். பிறகு என்றைக்கேனும் எந்த ஆண்டிலாவது வறட்சி அல்லது வெள்ளச் சேதம் ஏற்படுகிறபோது அந்தப் பணம் முழுவதும் இந்த வறட்சி நிவாரணத்திற்குப் பயன்படுத்தப்பட்டு அல்லது வெள்ளச் சேதத்திற்கு பயன்படுத்தப்பட்டு அதற்கு செலவு செய்யப் பட்டதற்குப் போக மீதி இருப்பதைப் பொறுத்து மத்திய அரசு கடன் தருவதும், மானியம் தருவதுமான நிலைமை வரும். ஒரு அளவுக்கு 8-வது நிதிக் குழு சொன்ன அளவில் நாம் 8¾ கோடி ரூபாயை நம்முடைய பட்ஜெட்டில் ஒதுக்கிக் கொண்டு வருகிறோம். அது எந்த அளவுக்கு வருகிறது, அதைக் கூட்ட வேண்டி வருமா என்பதை எல்லாம் அடுத்த நிதிக் குழு தான் முடிவு செய்ய வேண்டிய கட்டத்திற்கு ஆளாகும் என்பதை இந்த வாய்ப்பில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நிலவரி முதலியவற்றைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். நிலத்தின் வகை, மண் வளம், தரம் ஆகியவற்றிற்கு ஏற்ப நிலவரி பொதுவாக விதிக்கப் படுகிறது. நிலவரிக்கு மேல் விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல் வரி, கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர் செஸ் போன்றவைகள் நிலவரி மதிப்பீட்டில் ஒரு பகுதியாகத் தான் அமைகின்றன. கிராமக் கணக்கில் புஞ்சை நிலங்கள் என்று பதிவாகி உள்ள அனைத்துக்கும் முன்பே அடிப்படை நில வரி ரத்து செய்யப்பட்டு இருக்கிறது. புஞ்சை அல்லது மானாவாரி நிலங்களுக்கு தற்போது தல வரி, தல மேல் வரி மட்டுமே விதிக்கப்படுகிறது. ஒரு ரூபாய் நிலவரி என்றால் அதன் மேல் 45 காசு தல வரியும் லோக்கல் செஸ் ஊராட்சி ஒன்றியங்களின் கருத்தின் அடிப்படையில் அடிப்படை நிலவரிக்கு மேல் அதிகபட்சமாக ஒரு ரூபாய்க்கு 250 சதவீதம் தல வரி, லோக்கல் செஸ், சர்சார்ஜ் வசூலிக்க தற்போது பஞ்சாயத்து சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது. இந்த தல வரி, தல மேல் வரி, உள்ளாட்சித் துறையைச் சார்ந்தது. வருவாய்த் துறையினரால் வசூலிக்கப்படும் வரியின் அளவை ஒட்டியே, அரசால் மேச்சிங் கிராண்ட் வழங்கப்படுகிறது. எந்த அளவுக்கு வசூலிக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு நாம் ஈடுகட்டி அந்தந்த ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம் ஆகியவை களுடைய பணிகளைச் செம்மையுற நிறைவேற்றுவதற்கு உதவுகிறது. எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டு தள்ளப் படுகிறதோ, வசூலிக்கப்படுகிற அந்த அளவுக்குத் தருகிறோம். அறவே தள்ளிவிட்டாலும் கூட, சென்ற ஆண்டு எந்த அளவிற்கு நாம் கொடுத்திருக்கிறோமோ, நல்ல ஆண்டுகளில், அந்த அளவிற்கு நாம் கொடுக்கின்ற மானியத்தை அந்தந்த ஊராட்சி ஒன்றியத்திற்குக் கொடுக்கிறோம். இந்த ஆண்டு வறட்சி வந்து, குறிப்பிட்ட ஒன்றியத்தில் குறிப்பிட்ட ஊராட்சி மன்றத்தில், எந்த வரியும் வசூலிக்கப்படவில்லையென்பதற்காக மேச்சிங் கிராண்டே இல்லையென்று நாம் தள்ளுவதில்லை. அந்த அடிப்படையிலே தான், நாம் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறோம். அலுவலர்கள் ஒவ்வொருவரும் நிலத்தை ஆய்வு செய்த பின்னர், பயிர் விளைச்சல் 37 காசு, அதாவது 50 சதவீதம், அதற்குக் குறைவாகவும் உள்ளது என்று கண்டறிந்து, அந்தப் பகுதிகளில் உள்ள நிலங்களுக்கு நில வரி, தண்ணீர் தீர்வைகள், உள்ளூர் செய், உள்ளூர் செஸ் மேல் வரி, கூடுதல் தீர்வை, கூடுதல் தண்ணீர் தீர்வை, தனி வரி விதிப்பு, தனி தண்ணீர் தீர்வை போன்றவற்றை தள்ளுபடி செய்யுமாறு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையருடைய

கருத்துக்கள் பெறப்பட்டு, தள்ளுபடிக்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. முந்தைய ஆண்டுகளுக்கான பாக்கித் தொகைகளை வசூலிப்பதும், அடுத்த பசலி ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்படுவது என்பதையும், அதற்கு அரசாணை வெளியிடப்பட்டது என்பதையும், இந்த வாய்ப்பிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே இயல்பாகவே எடுத்துச் சொல்கிறபோது 26.63 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் நெல்லும், 18 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் சிறு தானியமும், பொதுவாக, இயல்பாக விளைவு ஏற்படும். இந்த ஆண்டு 31—1—1987 வரை 18.85 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் நெல் சாகுபடியும், 16 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் சிறு தானியம் சாகுபடியும் செய்யப்பட்டன. இருந்தும் வறட்சி நிலையிலும் இந்த ஆண்டு மொத்தம் நான் முன்பே இந்த அவையிலே எடுத்துச் சொன்னதற்கிணங்க 56 லட்சம் டன் அரிசியும் மற்றும் 20 லட்சம் டன் சிறு தானியமும் உற்பத்தியாகக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே விளைச்சல் இன்றைக்கு நன்றாக இருக்கிறது என்று சொல்வதற்குக் காரணம், 13 லட்சம் ஹெக்டேர் விளைச்சலின் பரப்பளவு குறைந்தாலும் கூட, விளைச்சல் நன்றாக இருக்கிறது. ஆனால் 6 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் விளைச்சலே இல்லாமல் இருக்கிறது. அங்கே மாவட்டம் பாதிக்கப்பட்டிருக்கிற நேரத்தில், நாம் மாறுவதையும் கூற வேண்டும். இப்போது வறட்சி ஏற்பட்டிருக்கக் கூடிய சூழ்நிலையின் காரணமாக குடிதண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. குடிக்க தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படாத வண்ணம் [illegible] மாதங்களில், வருகின்ற மாதங்களில் ஏற்படுகின்ற சூழ்நிலை எப்போது ஏற்படுகின்ற பாசன வசதிகளுக்கு மற்றவைகளுக்குக் கொஞ்சம் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கிணற்றுப் பாசனத்தின் மூலமாகக் கரும்புகள் பயிரிடுபவர்களுக்கு மற்ற கோடைக்காலப் பயிர்களைப் பயிரிடுபவர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் [illegible] சொன்னதற்கிணங்க, [illegible] சில பயிர்களை கிணற்றுப் பாசனத்தின் மூலம் செய்கின்றவர்களுக்குக் கூட தண்ணீர் கிடைக்க முடியாத [illegible] நீர் பற்றாக்குறை சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கோடைக் காலத்தில் மட்டும்.



தஞ்சை மாவட்டம், மற்றும் பல இடங்களைப் பார்க்கின்ற போது இன்று மேற்குத் தொடர்ச்சி மலையில் மழை பெய்து அதன் மூலமாக நீர் வர வேண்டும் அல்லது வடகிழக்குப் பருவக் காற்று மூலமாகப் பெய்கின்ற மழையின் மூலமாக வருகின்ற காலத்தில் தான் நாம நஞ்சைப் பயிர்கள், மற்றவைகள் எல்லாம் பயிரிடுகின்ற காலம் வரும். இவைகள் எல்லாம் தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் என்றைக்கும் இளவேனிற்காலப் பருவம், முதுவேனிற்காலப் பருவம், கோடைக் காலம், சங்க கால பாலை நிலங்கள் வர்ணனை எல்லாம் காணுகின்றபோது, இன்றைக்கு என்ன நிலைமை என்று பார்க்கும்போது அத்தகைய நிலைமை அன்றைக்கே இருந்திருக்கிறது. ஆக இப்படிப்பட்ட சூழ்நிலை வரும். இப்படிப்பட்ட காலங்கள் தான் உள்ளபடியே ஓய்வு பெறுகின்ற காலங்களாகவும் இருக்கின்றன. ஆகவே எப்போதுமே ஓய்வு பெறுகின்ற காலம். ஆகையால்தான் திருவிழாக்கள், தேர்த் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்ற காலம், மாசி, பங்குனி, சித்திரை மாதங்களில் தான். எங்கு பார்த்தாலும் ஓய்வு பெற்று, வீட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கிற காலம் அது. ஆடி பிறந்தால் அவரவர்கள் நிலத்திற்குப் போவோம் என்று நினைக்கின்ற காலம். அதிலேயே தட்டுப்பாடு ஏற்படுகிற சூழ்நிலை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். ஆக ஜூன் கடைசியில் மேற்குத் தொடர்ச்சி மலையில் மழை பெய்து, மெர்காராவில் மழை பெய்து, அது மேட்டூர் அணைக் கட்டில் வந்து சேர வேண்டும். ஜூலை மாதத்தில் பெய்து, அதற்குப் பிறகு அக்டோபர், நவம்பரிலே வட கிழக்குப் பருவக் காற்றின் மூலமாக பெய்ய வேண்டும். இந்த ஆண்டு பெய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனாலும் கோடைக் கால மழை ஒன்றிரண்டு முறை பெய்தால் பெரிது. அதுவரையில் நாம் சமாளிக்க வேண்டும். சமாளிப்பதற்கேற்ற வகையில் நாம் தொடர்ந்து அந்தப் பணியில் ஈடுபடுவோம் என்பதையும் இந்த வாய்ப்பில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(இரவு 7.20)

ஆனால் கடன்கள் வசூலிப்பதிலே நாம் கெடுபிடி காட்டவில்லை. சாதாரணமாக ஆண்டுக்காண்டு இருக்கின்ற நிலைமையும், தக்காவிக் கடன்கள் வசூல் நிலைமையும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 ஏப்ரல் 22

பார்ப்போமானால் கூட 23—2—87 நிலவரப்படி நாம் கணக்கிட்டுப் பார்ப்போமானால் கூட சாதாரணமாக மொத்த கேட்புத் தொகை மட்டும் ரூ. 14,93,56,767 இருக்கிறது. அதிலே வசூலானது ரூ. 62,98,347 தான். அதிலே இன்னமும் பாக்கி இருப்பது நிலுவையிலே இருப்பது ரூ. 14,30,58,420. எவ்வளவு தாராளமாக இருக்கிறோம் என்பதும், கெடுபிடி இல்லாமல் இருக்கிறோம் என்பதும், வசூலில் கடுமை இல்லை என்பதும், ரூ. 14,93,56,767-லே ரூ. 62,98,347 தான் வசூலாகியிருக்கிறது என்பதிலிருந்து தெரியும். ரூ. 14,30,58,420 இன்னமும் நிலுவையில் இருக்கிறது. ஆகவே கெடுபிடி இல்லை. நான் முதலிலே எடுத்துச் சொன்னபடி ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களுக்கு இப்படிப்பட்ட கஷ்டங்கள் இல்லை. 5 ஏக்கருக்கு கீழே வைத்து இருப்பவர்கள் நில வரி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை நஞ்சையைப் பொறுத்தவரையிலும், புஞ்சையைப் பொறுத்தவரையிலும் யாருமே அடிப்படை நில வரி செலுத்த வேண்டியதில்லை. நிலம் உடைய விவசாயிகள் தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் 72 இலட்சத்து சில்லரை பேர்கள் கூட்டுறவுக் கடன்கள் மற்றவைகள் வாங்குகின்றவர்களுடைய கணக்கைப் பார்த்தால் மொத்தம் 27 இலட்சம் தான். மற்றவர்கள் எல்லாம் கடன் வாங்காமலேயே பயிர்ச் செலவை நடத்திக் கொண்டுதான் வருகிறார்கள். இதில், 10 ஏக்கர் 15 ஏக்கர் வைத்திருக்கின்ற வசதி படைத்தவர்கள் பல பேர்கள். சாதாரணமானவர்கள் உள்ளபடியே பார்ப்போமானால் 60 பங்கு, 70 பங்கு, 75 பங்கு நாணயமாக நேர்மையாகக் கட்டி விடுகிறார்கள். இங்கு மின் மிச்சாட்டியம் பண்ணுகிறவர்கள் எல்லாம் வசதி படைத்தவர்கள் தானே தவிர. தைரியம் அவர்களுக்குத் தான் வருகிறதே தவிர. எப்படியாவது கட்டாமல் வேண்டும் நாங்கள் பிழைக்க வேண்டும் என்ற அளவிற்கு இருப்பவர்கள் சாதாரணமானவர்கள் என்னுடைய கணக்குப்படி. அந்தப் பள்ளிகளைங்களை இன்னொரு நாளைக்குத் தனியாகத் தருகிறேன். ஆகவே நாம் கெடுபிடி செய்கிறோம் என்றால் 10 ஏக்கர் என்றால்—கோபிசெட்டிபாளையத்தில் ஒரு ஏக்கர் 2½ இலட்சம் 3 இலட்சம் விற்கிறது. இன்று அவர்களிடம் எல்லாம் 1½ இலட்சம் இரண்டு இலட்சம், 3 இலட்சம் ரூபாய்— எவ்வளவு இலட்சம் விற்கிறது என்பதும், அவர்கள் கட்டாமல் வாங்கி வைத்து அதை வாடகைக்கு விட்டுவிட்டு



1987 ஏப்ரல் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அவர்கள் சம்பாதித்து அந்தப் பணத்தை பாங்கெட்டிலே போட்டுக் கொண்டு வட்டியைக் கட்டாமல் இருந்தால் அவர்களை எல்லாம் விட்டு சொன்னால் எப்படி விட முடியும்? ஆகவே அவர்கள் கட்டாமல் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளைத்தான் சொல்கிறோமே தவிர ஏழை எளியவர்களைப் பற்றி அல்ல. எவ்வளவு சலுகைகளை அளிக்க முடியுமோ அவ்வளவு சலுகைகளை நாம் அளித்துக்கொண்டு வருகிறோம் என்பதற்காகத்தான் இவைகளைச் சொல்கிறோம். அது மட்டுமல்ல தக்காவிக் கடன்கள் கூட நாம் தள்ளுபடி செய்யாமல் இல்லை. ஏற்கெனவே இரண்டு முறை 18,80,445 பேர் பலன் அடையத்தக்க அளவிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச்செம்மல், புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு, தக்காவிக் கடன்களை மட்டும் கடன் சுமையைக் கருதி நிலம் வைத்திருப்பவர்களுடைய தன்மையைக் கருதி இட்டதட்ட 27,95,72,419 ரூபாயை நாம் தள்ளுபடி செய்திருக்கிறோம். நான் இந்த கூட்டுறவு கடனைப் பற்றிச்சொல்லவில்லை. இது தக்காவி கடன், இதனால் பலன் பெற்றவர்கள் 18,80,445 பேர்கள். இதிலேயும் இரண்டு முறை தள்ளுபடி செய்திருக்கிறோம். நான் மொத்தத்தையும் சொல்கிறேன். ஆக எவ்வளவு சலுகை தர முடியுமோ அந்த அளவிற்குத் தருகிறோம். சாதாரணமாக அதிக பலன் அளித்து, குறைந்த அளவிற்கு வரி செலுத்துகின்ற அளவிற்கு வேறு பல நிலைமைகளில் இருப்பவர்களுக்கு நாட்டினுடைய திட்டம் போடுகின்றவர்கள், டெல்லியில் இருப்பவர்கள் போடுகின்றபோது, நாம் செலவழிப்பதற்கு ரிடர்ன் என்று வருகின்றபோது ரொம்ப குறைவாக இருப்பது நிலம் வைத்திருப்பவர்களிடம் தான் இந்த கணக்கு வருகின்றதே தவிர, மற்ற ட்ரேட் அண்டு காமர்ஸ் மற்றைய தொழில் நடத்துபவர்களிடமிருந்து வருகின்ற அளவைவிடக் குறைவாக வருகிறது. அதிலேதான் ரிடர்ன் மிக மிகக் குறைவு என்ற கணக்கைச் சொல்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் இருப்பவர்கள் இதை நம்பியே வாழ்கிறார்கள். 5 பேர் 6 பேர், 7 பேர் ஒரு குடும்பத்தில் இருக்கின்றபோது 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு அளவிற்கு மிஞ்சாது' என்பது இந்த நாட்டினுடைய ஆயிரம் காலத்து பழமொழியாக இருந்து வருவதன் காரணமாக இவைகளையெல்லாம் நாம் கணக்கிட்டுப் பார்த்துத்தான் இந்தச் சலுகைகளை எல்லாம் வழங்கிக்கொண்டு வருகிறோம். ஆனால்

அவர்களைக் கொடுமைப்படுத்தாமல் இருந்தாலும் அரசும் நடைபெற வேண்டும், தொடர்ந்து நடைபெற வேண்டும், பொது மக்களை வாட்டி வதைக்காமல் பொது மக்களுடைய வரிப் பணத்தை வாங்கி நல்ல பணிகளுக்கு ஆக்கம் தரவேண்டும், அவர்களும் வளர வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலே தான் இப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் நாம் தீட்டிக் கொண்டு வருகின்றோம் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக்கொள்கிறேன்.

மற்றொன்று இந்த வாய்ப்பிலே நான் கூறிக் கொள்ள விரும்புவது இந்த கூட்டுறவுக் கடன்கள் செலுத்துவதைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே, அந்த வகையிலே பல தடவை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. 10 ஆண்டுக் காலம், 8 ஆண்டுக் காலம், 7 ஆண்டுக் காலம் பாக்கி வைத்து, அதன் காரணமாக வட்டியும் அபராத வட்டியும் செலுத்துகின்ற அளவுக்கு வந்து நான் ஏற்கெனவே எடுத்துத் தெரிவித்தது மாதிரி, 20 ஆயிரம் ரூபாய் அசல் கட்டவேண்டியவர்கள் கூட, 22 ஆயிரம், 23 ஆயிரம் ரூபாய் அபராத வட்டியும், வட்டியும் சேர்த்துக் கட்டுகிற நிலை எல்லாம் கூட, பல மாவட்டங்களில், பல இடங்களில் வந்திருக்கின்றன. இந்த நிலைமைகளை எல்லாம் பார்த்து, இருக்கிற சூழ்நிலைகளை எடுத்துக் கொண்டு உழவர் பெருங்குடி மக்கள் மேல் மட்டக் குழுவினரின் சிபாரிசையும் ஏற்று, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு 'நாபார்டு' எதிர்த்த நிலைமையிலே கூட, ரிசர்வ் பாங்க் ஒப்புக் கொள்ளாத நிலையிலும் கூட, மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாத நிலைமையிலும் கூட, மத்திய அரசினுடைய கூட்டுறவுத் துறை அமைச்சர், மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளாத நிலையிலும் கூட, இந்தப் பழக்கத்தை உருவாக்குவது கூடாது என்று அவர்கள் கண்டித்துக் கடிதம் எழுதியும்கூட, வேறு எந்த மாநிலத்திலும் அப்படிப்பட்ட நிலை இல்லாத நிலையிலும்கூட, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பெருந்தன்மையோடு, இனிமேல் கிடையாது என்கிற தன்மையில், அடிப்படையில் அவர்களுடைய வட்டி, அபராத வட்டி ஆகியவை 125 கோடி ரூபாய் அளவுக்கு தள்ளுபடி செய்யப்படும் என்றும், அந்தக் குறிப்பிட்ட காலத்தில் 1—7—1985-லிருந்து 31—3—1986 வரையிலும் ஏற்கெனவே செலுத்தியிருந்தால் திருப்பிக் கொடுக்கப்பட்டு விடும் என்கிற முறையில் இட்டத்தட்ட 125 கோடி, மேற்கொண்டு 20





கோடி ரூபாய் என்று 145 கோடி ரூபாய் அளவுக்குத் தள்ளுபடி செய்யப்படும் என்றால், நான் ...டி செய்யப்படும்—தள்ளுபடி செய்யப்படும் என்றால், நான் ஏற்கெனவே இந்த அவையிலே சொன்னது மாதிரி இந்த 140 கோடியோ அல்லது 145 கோடியோ அரசு பொறுப்பு ஏற்கிறது என்று பொருள்.

மற்றவர்கள் மீது வரி போட்டு, அரசினுடைய பணத்தை எடுத்து, கூட்டுறவுச் சங்கங்களுக்கு நாம் தந்து, 'நாபார்டுக்கு' ...தில் சொல்கிறோம் என்று பொருள். ரிசர்வ் பாங்கிற்கு நாம் திருப்திப்படுத்துகிறோம் என்று பொருள். அதை கூட்டுறவுச் சங்கங்கள் இழப்பதில்லை. கூட்டுறவுத் துறையும் என் கையிலே தான் இருக்கிறது. நிதித்துறையும் என் கையிலேதான் இருக்கிறது. வலதுகைப் பணம் இடது கைக்குப் போகிறது. அதனால் மக்களுக்காகச் செலவழிக்க வேண்டிய வளர்ச்சித் திட்டங்கள் பாதிக்கப்படுகின்றன என்று பொருள்.

தள்ளுபடி என்றால்—நிலவரி தள்ளுபடி என்றால் நமக்கு வரவேண்டிய வருவாய் வரவு நிற்கிறது. ஆனால் கூட்டுறவு கடன் தள்ளுபடி என்றால், வந்த வரவை எடுத்து செலவழிக்க வேண்டும். வருகின்ற வரிப்பணத்தை எடுத்துச் செலவழிக்க வேண்டும். ஆகவே, 125 கோடி ரூபாய் வேறு வளர்ச்சித் திட்டத்திற்கோ அல்லது பள்ளிக்கூடத்திற்கோ, அல்லது மருத்துவத்துறைக்கோ அல்லது வேறு பல துறைகளுக்கோ செலவழிக்க வேண்டியவைகளை, அதிகமான திட்டங்கள் போட வேண்டியவற்றைக் கட்டுப்படுத்தி, அதிலிருந்து எடுத்துச் செலவழிக்க வேண்டும் என்று பொருள்.

என்றாலும், அவர்கள் நிலை கருதி செலவழிக்க வேண்டும் என்ற அளவுக்குத்தான் முதலிலே 31—12—1986-க்குள்ளாக செலுத்த வேண்டும் என்று கணக்குப் போட்டுச் சொன்னோம். அதற்குப் பிறகு பலர் சொன்னதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாதியைச் செலுத்தி விட்டால் 6 மாதம் தவணை கொடுத்து, 30—6—1987-க்குள்ளாக மீதிப் பாதியைச் செலுத்தலாம். செலுத்திவிட்டால், அவர்கள் அத்தனை பெருக்கும் அந்த வட்டி, அசல் வட்டி, அபராத வட்டி ...க்கப்படும் என்று சலுகையும் தந்தார்கள். மறுபடியும் எடுத்துச் ...சொல்கிறபோது அதனை எல்லாம் ... மாதத்திலேதான் ...ஜனவரி, பிப்ரவரியிலே பெரும்பாலும் ...கிறது. எனவே,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 ஏப்ரல் 22

அறுவடை ஆகி கையிலே பணம் வருகிற நேரம். ஆகவே அந்த மாதத்திற்கும் சேர்த்து தள்ளுபடி ஆகிற அளவுக்கு அரைப் பங்கைக் கட்டுகின்ற சலுகையைத் தந்தால் நல்லது என்று சொன்னதற்குப் பிறகு, 31—12—1986-க்குள் பாதி அளவாவது கட்டவேண்டும் என்பதில் மறுபடியும் ஒரு சலுகை தந்து 28—2—1987 வரை பாதி கட்டலாம். அதற்குப் பிறகு மீதிப் பாதியை 30—6—1987க்குள் கட்டினால் அவர்களுக்கு உண்டு என்கிற அளவிற்கு சலுகை தந்து, 125 கோடி—அசலை மட்டும் கட்ட வேண்டும். வட்டியைக் கட்டுகிற பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளும். தண்ட வட்டி கட்டுகிற பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளும்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஈடுகட்டுவதை அரசு ஏற்றுக் கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் என்று கருதுகிறேன் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேரவேண்டிய தொகை சேரவில்லை என்று சொன்னார். அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு கட்டிக் கொண்டு வருகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு ஈடுகெட்டுகிற அளவுக்கு நிதித்துறை தந்து கொண்டு வருகிறது.

ஒட்டுமொத்தமாக அல்ல. எவ்வளவு செலுத்த வேண்டும் என்று கணக்கு தருகிறார்களோ, அந்தக் கணக்கைப் பார்த்துப் பார்த்து, அவர்களுக்கு ஈடு கட்டுகிற அளவுக்கு நிதித்துறை பணத்தைச் செலவழித்துக் கொண்டு வருகிறது. இதிலே ஒரு விளக்கத்தைச் சொல்கிறேன் இப்போது இந்தக் கொள்கையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

மயிலாடுதுறையில் புரட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள் பேச்சு தவறாகத் தான் பத்திரிகையிலே வந்து இருக்கிறது. ஆமாம். இதில் நான் விளக்கம் கேட்டேன், புரட்சித் தலைவர் அவர்களிடத்தில் விளக்கம் கேட்டேன். அவர்களுடைய அறிவிலிருந்து எனக்கும் வந்து இருக்கிறது. ஒரே ஒரு பத்திரிகைதான் தவறாக வெளியிட்டிருக்கிறது. மற்ற பத்திரிகைகள் எல்லாம் தெளிவாகத் தான் வெளியிட்டு இருக்கிறார்கள்.

அதை வைத்துக்கொண்டு தவறாக அவர்கள் சொன்னது பத்திரி வானொலி, டெலிவிஷன் ஆகியவற்றிலே தவறாக வந்திருக்கிறது. காரணம் பி.டி.ஐ. தவறாகப் போட்டு விட்டது. அது காரணமாக மற்ற சில பத்திரிகைகள் போட்டு விட்டன. சில



1987 ஏப்ரல் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பத்திரிகைகள் நேரடியாக ஒழுங்காகத் தான் போட்டிருக்கின்றன. இதுவரையில் இருக்கிற நிலைமையை மட்டும் சொல்கிறேன். அதிலே மாற்றம் இல்லை. அந்த நிலை அப்படியே இருக்கிறது.

(இரவு 7-30)

அதில் இருக்கிற நிலைமையைப் பார்த்தால் மயிலாடுதுறை கூட்டுறவு ஆலைத் தொடக்க விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயக் கடன் வசூல் 6 மாதத்திற்கு ஒத்திப் போடப்படும் என்று அறிவிப்பு செய்ததாகச் செய்தி வெளியாகியிருக்கிறது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வாறு அந்த அறிவிப்பைச் செய்யவில்லை. விவசாயிகளுடைய கடன் சுமையை நீக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்கள் கட்ட வேண்டிய வட்டி, அபராத வட்டி ஆகியவற்றிலிருந்து ரூ. 125 கோடி அளவுக்குத் தள்ளுபடி செய்தேன். அதுமட்டுமல்லாமல் அசல் தொகையைக் கட்ட வேண்டிய கால கெடுவை மேலும் 6 மாதத்திற்குத் தள்ளி வைத்தேன், அதாவது 30—6—1987 வரை. ஆணை பிறப்பித்ததைக் குறிப்பிட்டு அவர்கள் பேசினார்கள். 6 மாதத்திற்குத் தள்ளி வைத்ததைக் குறிப்பிட்டார்கள். இனி 6 மாதம் தள்ளி வைப்பார் என்ற அளவுக்குச் செய்தி தவறாக வந்திருக்கிறது என்று சொன்னார்கள். தினமலர் பத்திரிகை ஒழுங்காகத் தான் வெளியிட்டிருக்கிறது. அதில் வந்திருப்பது "விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் புரட்சித் தலைவர் பேசியதாவது" என்று போட்டு "அவர்கள் கட்டவேண்டிய அபராத வட்டியை ரூ. 125 கோடியை தள்ளுபடி செய்தேன். அசல் தொகையைக் கட்ட வேண்டிய கால கெடுவை 6 மாதத்திற்குத் தள்ளியும் வைத்தேன்" இதுதான் அவர் சொன்னது.

அதே மாதிரிதான் தினத் தந்தி பத்திரிகையிலும் வந்திருக்கிறது. இதையெல்லாம் நான் தினத் தந்தியிலிருந்து கத்தரித்து வைத்திருக்கிறேன். "விவசாயிகள் கடன் சுமையைப் போக்க வேண்டும் என்ற நோக்கில் அவர்கள் கட்ட வேண்டிய வட்டி, அபராத வட்டி ஆகியவற்றிலிருந்து ரூ. 125 கோடி அளவுக்குத் தள்ளுபடி செய்தேன். அதுமட்டுமல்ல அசல் தொகையைக்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 எப்ரல் 22

கட்ட வேண்டிய கால கெடுவை மேலும் 6 மாதத்திற்குத் தள்ளியும் வைத்தேன்" என்றுதான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபோல்தான் அதில் வந்திருக்கிறது.

அண்ணா பத்திரிகையிலும் அப்படித்தான் வந்திருக்கிறது. ஆனால் பி.டி.ஐ. செய்தியை நம்பி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை மட்டும் போட்டுவிட்டது. அதன் காரணமாகத்தான் இத்தகைய நிலைமை வந்ததே தவிர வேறல்ல. கோளாறே அதிலிருந்துதான் வருகிறது. பி.டி.ஐ. என்று நல்ல வேளையாக பிராக்கெட்டில் போட்டுவிட்டார்கள். அந்தச் செய்தி மட்டும்தான் அப்படி வந்துவிட்டது. அதில் என்ன வந்துவிட்டது என்றால் பிராக்கெட்டில் அவர்களும் போட்டுவிட்டார்கள். அதாவது அவர்களுடைய நிருபர் அல்ல. பி.டி.ஐ. செய்தி என்று அவர்கள் போட்டுவிட்டார்கள்.

"லோன் ரீபேமெண்ட் டெபர்டு" என்று போட்டு

"Chief Minister M. G. Ramachandran had announced six months" postponement of the collection of agricultural loan repayments (adds PTI.)

என்று போட்டு பிராக்கெட்டில் "பி.டி.ஐ." என்று போட்டுவிட்டார்கள். எனவே அவர்கள்மீது குற்றமில்லை. பி.டி.ஐ. தான் இதைச் செய்துவிட்டது. எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் இன்றையவரை வந்த நிலை அப்படியே இருக்கிறது. வேறு நிலை அல்ல என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டார்கள். பட்டாக்கள் வழங்குவதைப்பற்றி சொல்லும்போது நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் 1—6—1979 முதல் 1—3—1983 வரையில் அது [illegible] விரைவுத் திட்டமாக மாற்றப்பட்டு அந்தத் திட்டத்தின் இரண்டாவது கட்டம் 15—11—198[illegible] முதல் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதன் மூலம் முதல் கட்டத்திற்கான பணி முடிந்தது என்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு 70.485 சதுர கிலோ மீட்டராகும். அதன் மூலம் வழங்கப்பட்ட பட்டாக்கள் எண்ணிக்கை 73.31.000. இதனால் பயன் அடைந்த நபர்களின் எண்ணிக்கை 1 09.44.518 ஆகும்.



1987 ஏப்ரல் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இரண்டாவது கட்டத்தில் வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை 14,44,689. இதனால் பலன் அடைந்தவர்களின் எண்ணிக்கை 22,13,610. ஆக மொத்தம் 87,80,689 பட்டாக்கள் 1,33,18,137 நபர்கள் பலன் அடையத் தக்க அளவுக்குச் செய்யப்பட்டிருக்கிறது. இத்துறையின் பணிகள் மேலும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அதன் மூலமாக ஏற்பட்டுள்ள விளைவுகளைப்பற்றியும் மற்றவைகளைப் பற்றியும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

ஆக, நில உடைமைப் பதிவேட்டில் வேறு சில தன்மைகளைச் சேர்க்க வேண்டும் என்றும் சில யோசனைகளையும் தன்மைகளையும் குறிப்பிட்டார்கள். கூட்டுறவுக் கடன் போன்றவற்றை அதில் சேர்த்தால் கடன் வாங்க வசதியாக இருக்கும் என்றும் சிலர் சொன்னார்கள். இது எந்த அளவுக்குச் சாத்தியப்படும் என்பதை ஆராய்ந்து பார்த்து அது சௌகரியமாக இருக்குமானால், நில உடைமைக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் எளிதாகக் கடன் வாங்க, கணக்குப் பார்க்க, காலதாமதம் ஏற்படாமல் இருக்கச் சாதகமாக இருக்குமானால் அதை ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவு கட்டலாம். அந்த அளவுக்கு சாத்தியக் கூறு இருக்குமானால் நன்மையைச் செய்ய நாம் முயற்சி செய்யலாம்.

மாவட்ட மற்றும் வட்டப் பிரிவினைபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இந்த அவையில் பல நேரங்களில் வினாக்களுக்கு விடை அளிக்கும்போதே நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

ஆண்டுக்கு ஒரு மாவட்டத்தைப் பிரிக்கின்ற அளவிற்கு 7 மாவட்டங்களைப் பிரித்து கூடுதலாக 9 மாவட்டங்களை கொண்டு வருகிற அளவிற்கு திட்டம் போட்டிருந்தாலும் ஏற்கெனவே இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்ததையும், மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்ததையும், திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்ததையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். வட ஆற்காடு, தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சி ஆகிய மாவட்டங்கள் ஏற்கெனவே அறிவித்ததன் அடிப்படையில் பிரிக்க வேண்டிய மாவட்டங்கள். வருகிற ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்தைப் பிரிப்பது மேற்கொள்ளப்படும் என்பது இந்த அவையில் எடுத்துச்சொல்லப்-

பட்டது. ஒரு மாவட்டத்தைப் பிரிப்பது என்றால், 35, 36 துறைகளினுடைய தலைமையிடத்தை மாவட்டத் தலைநகருக்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. முழுமையாக ஒரு மாவட்டத்தை உருவாக்கிக் கொண்டு நிலைநிறுத்த வேண்டுமென்றால் மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு 12 கோடி ரூபாய் அவர்களுக்குச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. தொடரும் செலவினம் மூன்று கோடியிலிருந்து மூன்றரை கோடி ரூபாய் வரை செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆண்டுக்காண்டு ஒவ்வொரு மாவட்டமும் பிரிக்கின்றபோது அது மாதிரி வட்டங்களையும் பிரிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். சில பல வட்டங்களைப் பொறுத்த செயற்குறிப்புகள் வருவாய்த் துறை ஆணையரிடத்திலும், சிறப்பு ஆணையரிடத்திலும், வருவாய்த் துறையிடமும் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளைப் பற்றிய குறிப்பு வந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும். வேறுசில வட்டங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் முதலிலே எடுத்துச் சொன்னபடி அந்தந்த வட்டத்தினுடைய பரப்பு, மக்கள் தொகை, வரி வருமானம், அதனுடைய பணிகள், மக்களுடைய சௌகரியம் ஆகியவற்றைப் பார்த்து இரண்டு வட்டமாகப் பிரிப்பதன் காரணமாக மக்களுக்கு நன்மை ஏற்படுமானால், எப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும் என்பதெல்லாம் ஆய்வு செய்து குறிப்புகள் தயாரிக்கப்படுகின்றன. அப்படியிருக்கும்போது திண்டுக்கல், பழனியை அண்ணா மாவட்டத்திலிருந்து எடுத்து இன்னுமொரு வட்டத்தைப் பிரிக்க இந்த இரண்டு வட்டங்களிலிருந்து ஒட்டன்சத்திரம் என்ற ஒரு வட்டத்தைப் பிரிக்க வேண்டும் என்ற செயற்குறிப்பு ஆய்வில் இருந்து கொண்டிருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில், கொளத்தூர் வட்டத்திலிருந்து இலுப்பூரைப் பிரிக்கும் செயற்குறிப்பும், அம்பாசமுத்திரம், தென்காசியில் இருந்து ஒரு வட்டத்தைப் பிரித்து அங்கே சேரன்மாதேவி, வீரகேரளம்புதூர் என்று வைக்கலாமா என்பதும் ஆய்வில் இருக்கிறது. அங்கே சண்டை இருப்பதைப் பார்க்கும்போது சண்டை வருவதை விட அந்த வட்டம் அப்படியே இருக்கலாம் என்றுகூட தோன்றுகிறது. கத்தி, கம்பி என்று வராமல் இருக்க சேரன்மாதேவியைப் பொறுத்த வரையில், வீரகேரளம்புதூரைப் பொறுத்த வரையில் சுமூகமான சூழ்நிலை ஏற்படுகிற அளவிற்கு பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. முதுகுளத்தூரைப்





பொறுத்த வரையில் சாயல்குடியைத் தனி வட்டமாக பிரிக்க வேண்டும் என்பது ஆய்வில் இருந்து கொண்டிருக்கிறது. பெரியகுளம் வட்டத்திலிருந்து ஆண்டிப்பட்டியைத் தனி வட்டமாகப் பிரிக்க வேண்டும் என்பதும் கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு, கல்குளம் ஆகிய இரண்டு வட்டங்களிலிருந்து இரணியல் வட்டத்தைத் தனியாகப் பிரிக்கும் செயற்குறிப்பும் ஆய்வில் இருக்கிறது.

புரசை, பெரம்பூர் சென்னையிலிருந்து எடுத்து தனி வட்டமாகப் பிரிக்க செயற்குறிப்பு தனியாக இருந்து கொண்டிருக்கிறது. இவைகள் எல்லாம் செயற்குறிப்பு வடிவில் இருந்து கொண்டிருக்கின்றன. இப்படி வேறு சிலவற்றையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சைதாப்பேட்டையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். பெரிய வட்டமாக இருக்கிறது. அதைப் போலவே பல்லடம் ஆகிய சில பல வட்டங்களையும் சொல்லியிருக்கிறார்கள். அவைகளைப் பற்றிய குறிப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்ததற்குப் பிறகு முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல் 20 அம்சத் திட்டத்தின் கீழ் வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். இத்திட்டத்தின் கீழ் 1982-83 இல் 1,49,742 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1983-84 இல் 2,16,348 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1984-85-இல் 2,12,940. 1985-86 இல் 1,76,400. 1987-88 இல் 2,34,330 வீட்டு மனைப் பட்டாக்கள் 20 அம்சத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருக்கின்றன. வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டத்தை நிறைவேற்றுவதில் நான் ஏற்கனவே எடுத்துச் சொன்னபடி 16, 17 அம்சத்தில் நூற்றுக்கு நூறு என்றும் 150, 200, 250 சதவிகிதம் சென்று சாதனைக்குத் தாண்டி இந்தியாவிலேயே மூன்றாவது ஆண்டாக நாம் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறோம். மூன்று அம்சத்தில் 80 சதவிகிதம், 74 சதவிகிதம், 75 சதவிகிதம் நிறைவேற்றும் அளவிற்கு இருக்கிறோம்.

வருவாய் கோட்டத்துக் கோட்டாட்சியாளர்களின் 18—5—1984 முதல் 28—2—1987 வரை 1,52,134 பேருக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உச்சவரம்பின்

மிச்சப்பட்ட நிலத்தைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். 1977-க்கும் 1987-க்கும் இடையில் இருப்பதை மட்டும் நான்—குறிப்பாக ஆண்டுதோறும் சொல்வதைவிட, மொத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். உச்சவரம்பில் மிச்சப்படுவதாக குறிப்பிடப்பட்ட அளவு 1,66,857 ஏக்கர். ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவு 1,24,275 ஏக்கர். ஆதி திராவிடர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது 47,946 ஏக்கர். அதிலே நபர்கள் மட்டும் 43,224. பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது 127 ஏக்கர். நபர்கள் 34. பிறருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது 76,202 ஏக்கர். நபர்கள் 54,374. மொத்தம் ஒதுக்கீடு 1,24,275 ஏக்கர்.

(இரவு 7.40)

நில உச்சவரம்புச் சட்டம், பினாமி நிலம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் அவர்கள் தம்முடைய உரையிலே விரிவாகக் கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராயன் அவர்களும் கூறினார்கள். திரு. உத்திராபதி அவர்களும் வழக்கம்போலக் குறிப்பிட்டார்கள். இருக்கிற நிலைமைகளை எடுத்துச் சொன்னார்கள். அதைப் பற்றி அடிக்கடி நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். 1961 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு நிலச் சீர்திருத்த நில உச்சவரம்பு நிர்ணயச் சட்டம் 6—4—1960 முதல் அமலுக்கு வந்தது. ஆனால் இந்தச் சட்டம் அமலுக்கு வருகிறது என்பதை 1958 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் சட்டப் பேரவையில் அறிவித்து விட்டார்கள். இப்படி ஒன்று வருகிறது என்று அறிவித்து விட்டார்கள். சட்டம் வருகிறது. ஜாக்கிரதையாக இருங்கள் என்று சொல்லியாகி விட்டது, 1958-லே. 1958 மார்ச் திங்களிலே சட்டப் பேரவையில் அறிவித்ததால், சில நில உடைமைக்காரர்கள் சட்டம் வருவதை எதிர்நோக்கி தங்கள் நிலங்களைத் தங்கள் உறவினர்கள் பெயரிலும், காக்க வேண்டிய நிலம் [illegible] பெயரிலும் பினாமியாக பெயர் இரவல் கொண்டு, நில மாற்றம் செய்து, தொடர்ந்து அந்த நிலங்களைத் தாங்களே அனுபவித்துக் கொண்டு வந்தனர். இதனால் இந்தச் சட்டம் பெற்றப் பட்டதன் நோக்கம் ஏமாற்றப்பட்டு. அரசாங்கத்திற்கு உபரி நிலங்கள் அளவு குறைந்தன. சட்டம் அமலான தேதியான 6—4—1960-இருந்து அறிவிப்பு நாளான 2—10—1962 வரையில்



உள்ள நில மாற்றங்களைச் செல் திறனற்றதாக ஆக்குவதற்கு [illegible]ப் பிரிவு 22 ஏற்படுத்தப்பட்டது. ஆனால் சட்டத்தை நடைமுறையில் 1962-ல் கொண்டு வந்தாலும், 1960-62-க்கு இடையிலே என்ன மாற்றம் ஏற்பட்டாலும் அது செல்லாது என்று சட்டத்தில் கொண்டு வந்தோம். ஆனால் 1960-க்கு முன்னாலே உள்ள மாற்றம் செல்லாது என்று சொல்ல சட்டத்தில் இடமில்லை. 6—4—1960-க்கு முன் ஏற்பட்ட நில மாற்றத்தை செல்திறனற்றதாக்க சட்ட ஷரத்து இல்லை. எனவே 1—1—1958 முதல் 6—4—1960 வரையிலான காலத்தில் செய்யப்பட்ட பினாமி நில மாற்றங்களைச் செல் திறனற்றதாகச் செய்யும் ஷரத்துக்கள் அடங்கிய நிலச் சீர்திருத்த திருத்த சட்ட முன்வடிவு, பினாமி நிலம் பற்றிய சட்டம் 14—7—1980 அன்று இந்தச் சட்டசபையில் கொண்டு வரப்பட்டது. 11—8—1980 அன்று சட்டப் பேரவையிலும், 12—8—1980 அன்று சட்ட மேலவையிலும் பினாமி ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. மைய அரசுக்கு அனுப்பப்பட்டது. மைய அரசு சில காரணங்களைக் காட்டி திரும்பவும் இவ்வரசுக்கு அதைத் திருப்பி அனுப்பியது. அந்தச் சட்டத்தில் கையெழுத்துப் போட வேண்டும், போட வேண்டுமென்று சொன்னாலும், அவர்கள் திருப்பி அனுப்பி விட்டார்கள். அதில் ஒரு மாற்றமும் செய்யவில்லை. மத்திய அரசு ஒரு காரணம் சொல்லியது. இந்தச் சட்டமுன்வடிவால் ரத்து செய்ய விழையும் நில மாற்றங்கள், நில மாற்றச் செயல்கள் (transactions) கிட்டதட்ட 20 ஆண்டுகளுக்கு முன்னால் செய்யப்பட்டவை என்பது இந்திய அரசின் கருத்தாகும். இடைப்பட்ட காலத்தின்போது, சம்பந்தப் பட்ட நிலங்கள் பல தடவைகள் கை மாறியிருக்கலாம். அத்துடன் தற்போதைய உரிமையாளர், தீய எண்ணத்துடன் செய்யப்பட்ட நில மாற்றச் செயல்களுக்கு (malafide transactions) பெரும்பாலும் ஒரு தரப்பினராக இருந்திருக்க மாட்டார். சிறிய நில உடைமையாளர்களுக்கும், உண்மையாகவே பயிரிடுபவருக்கும் விதி விலக்கு (exemption) அளிக்கப்படுவதோடு, பாகப் பிரிவினை (Partition) மூலமாகச் செய்யப்பட்ட செயல்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டால், எஞ்சி உள்ளவை மிகச் சிலவாக இருக்கும். அத்துடன் அவற்றுக்காக சட்ட முன்வடிவு எடுக்கக் கருதி யுள்ளது அசாதாரணமான நடவடிக்கை 'எக்ஸ்ட்ரா-ஆர்டினரி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 ஏப்ரல் 22

மெஷர்' என்பது நியாயமானதாகும், பாகப் பிரிவினைச் சட்டமாவது முதன்மைச் சட்டத்தில் இருக்கிறது என்றும், அரசாட்சி குடியரசுத் தலைவரின் இசைவுடன் ஏற்கப்பட்டது என்றும் மாநில அரசு சுட்டிக்காட்டியது. அப்படி இருந்தும்கூட 20 ஆண்டுகள் ஆனதனாலே பலபேர்கள் வாங்கியிருப்பார்கள், பலபேர்கள் கை மாறியிருக்கும். ஆகவே இப்போது செல்லுபடி ஆகாது என்று ஆக்குவோமானால், அதனால் கஷ்டப்படுபவர்கள் பலபேர்கள் இருப்பார்கள். அதை பினாமி பெயரிலே இருக்கிறது என்றும் சொல்லிவிட முடியாது. ஆகவே இதிலே பல சங்கடங்கள் எல்லாம் வரும். இதை நிறைவேற்றுவது கடினம். ஆகவே இந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கமுடியாது என்று அவர்கள் அப்படியே அந்தச் சட்டத்தைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். இதில் என்ன செய்வது என்பதால் இந்தச் சட்டத்தை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். மறுபடியும் இந்த அவைக்கு கொண்டுவந்து, தீர்மானத்தைப் போட்டு மறுபடியும் அனுப்புவதா என்பதை அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து முடிவு செய்து, இந்த அவைக்கு கொண்டு வந்து, இந்த அவையினுடைய கருத்துக்களை மறுபடியும் பெற்று, மறுபடியும் இந்த அவை விரும்புகிறது என்று சொல்லி, இதிலே இருக்கின்ற சாதக பாதகங்கள், மத்திய அரசு சொன்ன கருத்துக்கள், நாம் ஏற்கெனவே சொன்ன கருத்துக்கள், இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் ஆகிய இவைகளையும் எடுத்துச்சொல்கின்றபோது எடுத்துச் சொல்லலாம். ஆக இதிலே சொல்கிறபோது, யார் யார் என்று எடுத்துச் சொல்ல முடியாது. அதிலே பல மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. உள்ளபடியே இருக்கின்ற நில உச்சவரம்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதைத் தீர்க்கமுடியாத அளவிற்கும் இருக்கின்றது. சட்டத்திலே புகுந்து கோர்ட் வரையிலே, சுப்ரீம் கோர்ட் வரையிலேயும் போய் தப்பித்துக்கொண்டு இருப்பவர்கள் பலபேர்கள் இருக்கின்றார்கள். ஏற்கெனவே ஒழுங்காக சட்டத்தை நிறைவேற்றமுடியாத அளவிற்கு இருக்கும்போது இதை எப்படி நிறைவேற்ற முடியும் என்ற அளவிற்குத்தான் அவர்கள் திருப்பி அனுப்பிவிட்டார்கள். அதை மீண்டும் வேண்டுமென்றால் ஆராயலாம். ஆனால் அமைச்சரவை கூட்டத்திலே வைத்துத்தான் இதைப்பற்றி முடிவு எடுக்கவேண்டும். திருப்பி அனுப்பி இருக்கிறார்கள். அதைப் பற்றி நாம் யோசிக்க



1987 ஏப்ரல் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வேண்டும். இதைப் பற்றி இல்லஸ்ட்ரேட்டட் வீக்லியில் வந்ததைப்பற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். ஆக எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களே எழுதியிருக்கிறார்கள். மற்றவர்களும் எழுதியிருக்கிறார்கள். தனிப்பட்டவர்களில் யார் யார் குற்றம் சாட்டப்பட்டார்களோ அவர்களுடைய கருத்துக்களையும் வாங்கித்தான் போட்டு இருக்கின்றார்கள். அவர்களுடைய 'ஒன் சைடட் வெர்ஷன்' என்றுகூட இல்லாமல், இல்லஸ்ட்ரேட்டட் வீக்லியில் எல்லோருடைய கருத்துக்களையும் வாங்கிப் போட்டிருக்கிறார்கள். பொதுமக்கள் பார்த்து தீர்ப்பு அளிக்கட்டும் என்றுதான் விட்டிருக்கின்றார்கள். அவர்களுடைய 'ஒபீனியன்' என்றுகூட அதிலே வைக்கவில்லை. ஆனால் எடுக்கின்ற அவரவர்களுடைய கருத்துக்களை மட்டும் எடுத்துக்கொண்டு மக்களிடத்திலே வைக்கிறார்கள். அந்த அளவிலேதான் அந்த நிலைமைகள் இருக்கின்றன.

நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் பற்றிய புள்ளி விவரங்களைப் பற்றிக் கேட்டார்கள். தகுதி வாய்ந்த அதிகாரிகள் [illegible] மனுக்கள் 1986-87-ல் 19,206. வரம்புக்கு உட்பட்டவைகள் 14,818. உச்சவரம்புக்கு மேலும் நிலமுள்ளவர்கள் மனுக்கள் 4,387. விலக்குக் கோரப்பட்ட மனுக்கள் 1,814. விலக்கு அளிக்கப்பட்டவைகள் 806. நிராகரிக்கப்பட்டவைகள் 508. ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள இனங்கள் 420. பிரிவு 9-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவேண்டியவை 3,081. இந்த அளவுக்கு நகர்ப்புற உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜசேகர் அவர்கள் காலையிலே பேசுகிறபோது இந்த மாவட்டத்தின் நிலைமையைப் பற்றிச் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் ஒரு கணக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லி அவர்கள் அதிகமாக கொடுத்திருக்கிறார்களோ என்ற அளவுக்குச் சொன்னார்கள். உள்ளபடியே அந்தந்த மாவட்டத்தினுடைய சூழ்நிலையை வைத்து உத்தேசமதிப்பாக 8 கோடி, 10 கோடி, 15 கோடி, 20 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனை உத்தேசமதிப்பாக கணக்கிலே வைத்துக்கொண்டு கொடுக்கின்றபோது அவைகளைச்

சேர்த்துக்கூட்டினால் ரூ. 200 கோடி, ரூ. 250 கோடிக்குக்கூட போகும். ஆனாலுங்கூட இருக்கின்ற சூழ்நிலையை வைத்து மொத்தமான கணக்கை அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இருக்கின்ற அதிகாரிகள் மற்றவர்கள் எல்லாம் அவ்வப்போது தேவைப்படுகின்ற அளவுக்கு என்னென்ன பணிகளுக்கு எந்தெந்த அளவுக்கு செய்யவேண்டும் என்று அறிந்து திட்டங்களை நோக்கி அதற்கான அளவுக்கு அவ்வப்போது நிதித்துறையையும் மற்றவைகளையும் பார்த்துப் பார்த்து பணம் ஒதுக்கீடு செய்து கொண்டு வருகிறோம். ஆனால் தேவைப்படுகின்ற பணம் முழுவதும் மாவட்ட அளவிலே மற்ற அளவிலே கொடுத்துவிடுவோம். ஆனாலுங்கூட அதிலே மோசடிகளும் மற்றவைகளும் நடப்பது கூட இருக்கிறது. விரயம் ஆவதற்கு வழி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேர்கள் சுட்டிக்காட்டியபடி விரயம் ஆவதற்குக்கூட பல்வேறு வழிகள் ஏற்பட்டுவிடுகின்றன. அதனால்தான் தேவை எவ்வளவு ஏற்படுகின்றதோ அந்த அளவுக்குக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். அவர்கள் கணக்குச் சொன்னபடி உள்ளபடியே நாம் கொடுத்துக்கொண்டு வருகிற அடிப்படையிலே 41 கோடி ரூபாய் சில்லரை கொடுத்தாலுங்கூட மொத்த அளவுக்கு நாம் ரூ. 20 கோடியே 82 லட்சம் ரூபாயில், ஒதுக்கீடு செய்த அளவில், கிட்டத்தட்ட அண்ணா மாவட்டத்திற்கு ஒரு கோடியே ஆறு லட்சம் ரூபாய் என்று இருக்கிறது. அந்த 20 கோடி ரூபாய் கணக்கிலேதான் இதைச் சொல்கிறேன். இன்றைக்கு 41 கோடி ரூபாய்க்கான கணக்கைப் பார்க்கின்றபோது ஒன்றை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு அண்ணா மாவட்டத்திற்கு 1 கோடியே 6 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். செங்கல்பட்டு மாவட்டத்திற்கு 1 கோடியே 34 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 1 கோடியே 92 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். சிதம்பரனார் மாவட்டத்திற்கு 1 கோடியே 5 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். காமராஜர் மாவட்டத்திற்கு 1 கோடியே 37 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 1 கோடியே 26 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். மதுரை மாவட்டத்திற்கு 1 கோடியே 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். வட ஆற்காடு மாவட்டத்திற்கு 2 கோடியே 37 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.



பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திற்கு 1 கோடியே 2 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். சேலம் மாவட்டத்திற்கு 1 கோடியே 11 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு 1 கோடியே 45 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். ஆக, இந்த அளவுக்கு இதனை பிரிவுபடுத்தி கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது தான் இறுதி என்பதல்ல. இப்படி நாம் ஒதுக்கீடு செய்து கொண்டு வரும்போது 1986-ல் பார்க்கும்போதே 105 கோடி ரூபாய் அளவுக்குப் போனது. இந்த ஆண்டும் இது கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகிக் கொண்டே வரும், நாம் கொடுக்க வேண்டியும் வரும். அந்தவகையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இறுதியில் 3 கோடி, 4 கோடி, 5 கோடி என்கிற அளவுக்கு கூடிக் கொண்டே போகும்.

(இரவு 7-50)

அடுத்து, வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில் நாம் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. சிலபல திட்டங்களின் மூலமாக அதனை நாம் உருவாக்கினால் வறட்சி நிவாரணம் மூலமாக வேலைவாய்ப்பினை உருவாக்குகிறோம் என்பதல்ல. இன்றைக்கு நீர்ப்பாசனத் திட்டத்திற்காக 79 கோடியே 36 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருந்தாலும் அதனை வேலைவாய்ப்புக்காகப் பயன்படுத்தினாலும் கூட வறட்சி நிவாரண சூழ்நிலையையும் மனதில் கொண்டுதான் காரியங்களைச் செய்கிறோம். ஆக, அந்த வகையில் சிறப்பாக கிட்டத்தட்ட இதில் 35 கோடி ரூபாய் வேலைவாய்ப்புக்கு தான் பயன்படும் என்பதையும் மனதில் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

அதுபோல நெடுஞ்சாலை ஊரகப் பணிக்கு 74 கோடியே 68 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். இப்படிப்பட்ட திட்டங்களுக்கெல்லாம் நாம் படிப்படியாக செலவழிக்கும்போது நாம் சொல்லியுள்ளவை எல்லாம் படிப்படியாக நிறைவேறும்.

மாண்புமிகு உறுப்பினர் காஞ்சி [illegible] அவர்கள் பேசும்போது மொழி பற்றிய தீர்மானம் போட்டு நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோமே. அதற்கு என்ன பதில் வந்தது என்று [illegible] விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதுபற்றி நான் அறிந்தவற்றை அவைக்குத்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 ஏப்ரல் 22

சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். மொழிப் பிரச்சினை என்பது நீண்ட காலமாக இருந்து வருகிற ஒன்று என்பதை இந்த அவையிலுள்ள நாம் அனைவரும் தெளிவாக உணர்கிறோம். மத்திய அரசைப் பொறுத்தவரையில் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி 1965 ஆம் ஆண்டு வரை ஆங்கிலம் இருக்கும். 1965 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தி தான் இருக்கும் என்று இருந்தும் நாட்டில் ஏற்பட்ட எழுச்சி, படித்தவர்கள் எல்லாம் அதுபற்றி எடுத்துரைத்ததன் பேரிலும், குறிப்பாக தமிழகத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியின் அடிப்படையில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் 1965 ஆம் ஆண்டுக்குப் பிறகும் ஆங்கிலம் நீடிக்கும், அதுவும் இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரைக்கும் நீடிக்கும் என்று வாக்குறுதி அளித்தார்கள். இந்தி தங்களுக்கு வேண்டுமா வேண்டாமா என்பதை நிர்ணயிக்கும் மக்கள் இந்தி பேசாத மாநில மக்களே தவிர இந்தி பேசுகிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்கள் அதை கட்டளையிடக் கூடாது என்று தெளிவாக அன்றைக்கு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி அது வகுக்கப்பட்ட பிறகு 15 ஆண்டுகள் தான் ஆங்கிலம் இருக்கும் என்றும் அதற்குப் பிறகு இந்தி தான் இருக்கும் என்றும் சொன்னார்கள். இன்னும் சொல்லப்போனால், காந்தியார் அவர்கள் விரும்பியதுகூட இந்துஸ்தானியே தவிர இந்தி அல்ல. ஆனால் அப்புறம் நடைமுறைக்கு வந்தது இந்தி. இது மிகப் பெரிய பிரச்சினையாதலால் மேலும் பேசிக் கொண்டே போனால் இன்னும் நேரம் ஆகிக் கொண்டேயிருக்கும். மத்திய அரசைப் பொறுத்தவரையில் ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு மொழிக் கொள்கையைப் பயன்படுத்துகிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு மற்ற மாநிலங்கள் எல்லாம் மூன்று மொழிக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றன. அதாவது வட்டார மொழி, ஆங்கிலம் மற்றும் இந்தி என்கிற மொழிகள்தான் அவை. நம்முடைய மாநிலத்திலும் முன்பு மூன்று மொழிக் கொள்கைதான் இருந்தது. ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு அதனை மாற்றினார்கள். மக்கள் எந்தக் கொள்கையை நம்பி என்னைத் தேர்ந்தெடுத்தார்களோ, எதை நிறைவேற்றவேண்

1987 ஏப்ரல் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]



என்று நம்பி என்னிடத்தில் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்களோ அந்தக் கொள்கைக்கு ஆக்கமும், ஊக்கமும் தரவேண்டியது என்னுடைய கடமை என்கிற நோக்கத்தில் இந்த அவையில் இதுசம்பந்தமாக தீர்மானம் கொண்டு வந்து, அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் இந்த மாநிலத்தில் இனிமேல் இரண்டு மொழிக் கொள்கையைத்தான் கடைப்பிடிப்போம் என்று சொல்லி தீர்மானமும் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் தீர்மானத்தின்படி இந்த மாநிலத்திலே இரு மொழிக் கொள்கைதான். தமிழும், ஆங்கிலமும் மட்டும் தான் இருக்கும். இந்தியோ அல்லது பிற மொழிகளோ அவரவர்கள் விருப்பப்படி படிப்பதைப்பற்றி ஒன்றுமில்லை. மாநில அரசினுடைய பணம் தாய்மொழி தமிழுக்கும், உலக இயலை அறிந்து கொள்ள, தெரிந்து கொள்ள, அறிவியலைப் புரிந்து கொள்ள, அறிந்து கொள்ள நமக்குத் துணையாக இருக்க ஒரு நவீன உலக மொழி தேவை என்கின்ற அடிப்படையில் ஏதேனும் ஒரு மொழி வேண்டும். இன்றைக்கு ஜெர்மன் மொழியோ, பிரெஞ்சு மொழியோ அல்லது ஆங்கில மொழியோ வேண்டும். இன்றைய நூற்றாண்டிலே, இந்த நூற்றாண்டிலே ஆங்கிலம்தான் இன்டர்நேஷனல் லாங்குவேஜ்—அகில உலக மொழியாக இருக்கிறது. சென்ற நூற்றாண்டிலே அகில உலக மொழி பிரெஞ்சு மொழியாக இருந்தது. 17-வது, 18-வது நூற்றாண்டிலேயெல்லாம் அகில உலக மொழி லத்தீனாக இருந்தது. அப்பொழுது இருந்த ஒப்பந்தத்தையெல்லாம் லத்தீன் மொழியிலேதான் எழுதினார்கள். சென்ற நூற்றாண்டிலே பார்த்தால் பிரெஞ்சு மொழியிலேதான் எழுதினார்கள். இந்த நூற்றாண்டிலே இன்டர்நேஷனல் லாங்குவேஜ் ஆங்கிலம்தான். ஆகவே, சரியாகவோ தப்பாகவோ உலகோடு தொடர்புடைய ஆங்கிலம் நமக்குத் தேவை. ஆகவே, தமிழ் நமக்கு நாட்டிடைத் தேவை. எனவே தமிழும் ஆங்கிலமும் என்று இந்த அவையிலேயே அறிஞர் அண்ணா இருந்து தீர்மானத்தையும் கொண்டு வந்து நிறைவேற்றி அறிஞர் அண்ணாவே மத்திய அரசுக்கு அனுப்பி, இந்த அடிப்படையிலே மத்திய அரசு அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று அவர்கள் அப்பொழுதே கேட்டுக்கொண்டார்கள். இந்தி மொழிபற்றிய இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவின் 17-வது பிரிவை நீக்க வேண்டுமென்றுங்கூடக் கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுது உள்துறை அமைச்சராக சவான் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் நீண்டதொரு கடிதம்—

அறிஞர் அண்ணாவுக்குப் பதில் எழுதும்போதுகூட எழுதி, இந்திய அரசினுடைய அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதம், அது கொண்டிருக்கிற கொள்கைக்கு விரோதம், கான்ஸ்டிடியூஷனை உருவாக்கியவர்களுடைய தன்மைக்கு விரோதம், இருந்தாலும்கூட தமிழக மக்களுடைய உணர்வை மதித்து, எல்லாவற்றையும் ஏற்று, ஆங்கிலத்திற்கு இடம் அளிப்போம், மக்கள் விரும்புகின்ற காலம் வரையிலும் ஆங்கிலம் நீடிக்கும்; நாங்கள் திணிக்க மாட்டோம் என்றெல்லாம் எழுதி அதற்குப் பதில் அனுப்பி வைத்தார்கள். ஆனால் இரண்டு மொழித் திட்டம் என்பது நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் தமிழ், ஆங்கிலம். மத்திய அரசைப் பொறுத்தவரைக்கும் இரண்டு மொழித் திட்டம் ஆங்கிலம், இந்தி. மற்றைய மாநிலங்களைப் பொறுத்தவரையில் தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகியவை, மூன்று மொழித் திட்டம்.

இங்கே கொண்டு வந்த தன்மைகளைப் பொறுத்தவரையிலும், 1968-லே நாங்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பினோம். பண்டித நேரு ஒரு உறுதிமொழி தந்தார்கள். பிறகு இந்திராகாந்தி அம்மையாரும் உறுதிமொழி தந்தார்கள். லால் பகதூர் சாஸ்திரி அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். இப்பொழுது வந்திருக்கின்ற இந்தியாவினுடைய பிரதமர் மாண்புமிகு இராஜீவ் காந்தி அவர்களும் இந்த உறுதிமொழியை ஏற்று அதை நான் கடைப்பிடிப்பேன் என்று சொன்னார்கள். ஆனால் நாம் எடுத்துச் சொல்வதெல்லாம், திருப்பித் திருப்பி எடுத்துச் சொல்வதெல்லாம், 1963-ஆம் ஆண்டு பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட "லாங்குவேஜ் ஆக்ட்" என்ற மொழிச் சட்டத்தினுடைய அடிப்படையிலே ஆங்கிலத்தைப் பயன்படுத்தலாம் என்றிருக்கிறது. நாம் அதற்கு ஒரு [illegible] வேண்டும் என்று சொல்கிறோம். இந்தி பேசாத மாநிலத்திலே வாழ்கின்ற மக்களுக்கு அச்சம் [illegible] எதிர்காலத்திலே [illegible] இந்தி ஆதிக்கக்காரர்களுடைய [illegible] வரக்கூடும் என்ற [illegible] வேண்டுமானால் அரசமைப்புச் சட்டத்திலேயே இந்த [illegible] நீண்ட நெடுங்காலமாக இந்தக் [illegible] சொல்லி [illegible] இந்த அடிப்படையில் 1968-லே தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினோம். அதற்கு அப்பொழுது பாராளுமன்றத்திலே பல உறுப்பினர்கள்—







தென்னகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எழுப்பும்பொழுது கூட அவர்கள் பதில் சொல்லியபொழுது என்ன சொன்னார்கள் என்றால், இந்த உறுதிமொழியே அந்தச் சட்டத்திலே ஏற்றுகிற அளவிற்கு வலிவு உடையது, இந்த ஆக்டிலே இருப்பதே இருந்தால் போதும்; சட்டத்திலே ஏற்ற வேண்டாமென்றுதான் பதில் சொன்னார்கள். நாம் சட்டத்திலே ஏற்ற வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம், அந்தச் சட்டத்திலே ஏற்றிவிட்டால் அதற்கு அதிக மதிப்பு ஏற்பட முடியும். சுப்ரீம் கோர்ட் வரைக்கும் அதற்கு மதிப்பு ஏற்படும். அரசமைப்புச் சட்டத்திலே இடம் பெற்றுவிட்டால் யாரும் ஆட்ட முடியாது, அசைக்க முடியாது. ஒரு தீர்மானத்தின் மூலமாகப் பாராளுமன்றமே எடுத்துவிடலாம் அந்த ஆக்டை. ஆனால் அரசமைப்புச் சட்டத்தைத் தீர்மானத்தின் மூலமாக திருத்த முடியாது. டூ தேர்ட் மெஜாரிட்டியின் மூலம்தான் திருத்த வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையால்தான் நாம் திரும்பத் திரும்ப வற்புறுத்தினோம்.

அந்த அடிப்படையிலேதான் நவம்பர் மாதம் 13 ஆம் தேதி மாண்புமிகு உறுப்பினர்கள், இந்த மாநிலத்திலே ஏற்பட்ட உணர்வு, மக்களிடத்திலே ஏற்பட்ட உணர்வு, இடையிலே சில அமைச்சகங்களெல்லாம் ஏற்படுத்தி இந்திக்கு மறுபடியும் திணிப்பு ஏற்படுத்துகின்ற சூழ்நிலையும், இந்தி பேசாத மாநில மக்கள் வருந்துகின்ற அளவிற்கும், வேதனைப்படுகின்ற அளவிற்கும் இந்தித் திணிப்பு என்ற நோக்கத்தினுடைய அடிப்படையிலே கொண்டு வரப்படுகின்ற அந்த அச்சம் ஏற்படுகின்ற அளவிற்குச் சூழ்நிலை ஏற்பட்டபொழுது மறுபடியும் நம்முடைய கருத்தை வலியுறுத்த வேண்டிய அவசியம் திரும்பத் திரும்ப ஏற்பட்டதினுடைய அடிப்படையில் இந்த அவையினுடைய உறுப்பினர்கள் அத்தனை பேர்களுடைய ஒத்துழைப்பினுடைய அடிப்படையில் 13—11—1986 அன்று, சென்ற ஆண்டு நவம்பர் மாதம், இந்த அவையிலேயே நாம் தீர்மானத்தை நிறைவேற்றினோம். எல்லோரும் சேர்ந்து நிறைவேற்றிய இந்தத் தீர்மானத்தினுடைய அடிப்படையில் 20—11—1986 இல் மாண்புமிகு முதலமைச்சரவர்கள், இருக்கின்ற சூழ்நிலையையும் இந்தத் தீர்மானத்தினுடைய தன்மையையும் பற்றி எழுதி, இந்தத் தீர்மானத்தினுடைய ஆங்கிலப் படிவத்தையும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 ஏப்ரல் 22

இந்தியாவினுடைய பிரதமர் மாண்புமிகு இராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்தார்கள். அதிலும் குறிப்பாக, முக்கியமாக அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியதை, இருக்கின்ற சூழ்நிலைகளைக் குறிப்பிடும்பொழுது அதிலே குறிப்பிட்டதை மட்டும், முக்கியமான கருத்தை மட்டும் உங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

(இரவு 8.00)

20—11—1986-ல் மாண்புமிகு முதலமைச்சர் எழுதிய கடிதத்தில்

"May I request you to recall my letter dated 1st October 1986 about the situation in Tamil Nadu following the issue of the directive dated 5th September 1986 by the Ministry of Information and Broadcasing on the use of Hindi? When I explained to you in person the gravity of the situation, you assured that there was no question of imposition of Hindi on the non-Hindi speaking people and that you stood by the assurance of Pandit Nehru and Thirumathi Indira Gandhi regarding the continued use of English as official language till the non-Hindi speaking people desire it. However, some Ministries do not seem to attach seriousness to the matter and there have been many instances in which they have deviated from the assurance. For instance, the invitation to the recent National Cultural Festival had been printed in Hindi and had been sent to the Members of Parliament from the non-Hindi speaking States also. Such instances give rise to grave misgivings in the minds of the non-Hindi speaking people. Therefore, until the assurance regarding the continued use of English as official language is given a more concrete form of guarantee, the situations as the one which recently arese are bound to recur. With a view to allay the fears of the non-Hindi speaking people, it is felt that the assurance should be incorporated in the Constitution of India. Accordingly the Tamil Nadu Legislative Assembly in its session held on 13th November 1986 considered the matter and has passed a Resolution seeking to amend Part XVII of the Constitution of India for the above purpose which would have made the assurance to the non-Hindi speaking people binding on all concerned. I send herewith an English version of the resolution passed by the Tamil Nadu Legislature for consideration of the Government of India. I would request you to kindly use your good offices for incorporation of the assurance in the Constitution.".

என்ற அளவுக்கு முக்கியமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நவம்பர் 20-ந் தேதி பிரதமருக்கு எழுதி



1987 ஏப்ரல் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அனுப்பினார்கள். பிரதமர் அவர்கள் நவம்பர் 27-ந் தேதி அதற்கு சுருக்கமாக, இரண்டு வாக்கியங்களில் பதில் எழுதியிருக்கிறார்கள்.

This refers to your letter of 20th November. I would like to state once again that there is no change in our policy in this regard. என்று சொல்லி, இந்தியைப் புகுத்துவதாகச் சொல்லப்பட்டிருந்த அந்தப் பிரிவுக்கு மட்டும் பதில் சொல்லுகிற மாதிரி ஏற்கெனவே இருந்த பாலிஸியைச் சொல்லியிருக்கிறார்கள். இதை கான்ஸ்டிட்யூஷனில் சேர்ப்பதா இல்லையா என்று சொல்லாமல் இந்த அளவுக்குத்தான் பதில் எழுதியிருக்கிறார்கள். நாம் எழுதியது அந்த அளவுக்கு; அவர்கள் எழுதியது இந்த அளவுக்கு. இதுதான் நிலைமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. மனோகரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்கள் 'நான் விளக்கமாக, தெளிவாக மாலையில் பேசும்போது இந்த அரசின் தீர்மானத்தின் மீது மத்திய அரசு கொண்டிருக்கிற கருத்தைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொல்கிறேன்' என்று குறிப்பிட்டார்கள். நான் திருப்பி, திருப்பிக் கேட்பதெல்லாம் இந்தப் பேரவை ஏகோபித்த ரீதியில் நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்திற்கு மத்திய அரசு நேரடியாகப் பதில் தரவில்லை என்பது மட்டுமல்லாமல் இங்கே எழுதி அனுப்பியிருப்பது பதிலே அல்ல என்பதையும் மைய அரசு இந்த மாநில அரசை மதிக்கவில்லை என்பதையும் குறிப்பிட்டுக் காட்டுகிற வகையில் உங்களது அந்தக் கடிதம, பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதம் நாட்டுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, இதற்கு மேல் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? இந்த அவை ஒரு தீர்மானத்தை அரசுத் தீர்மானமாக நிறைவேற்றியிருக்கிறது. இருந்தாலும் நீங்களே சொல்வது இந்தியை நுழைக்க மாட்டோம் என்று சொல்கிறார்களே தவிர நேரடியாகப் பிரச்சனைக்கு பிரதமர் வரவில்லை என்று. எனவே இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

எப்படி இதை அரசியல் சட்டத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க இந்த அரசு முனையப் போகிறது? அப்படி இந்த அரசு முனையப் போகிறதா? அல்லது இரண்டிலுமே

தீர்மானம் கொடுத்ததோடு நீங்கள் திருப்தி அடைந்துவிடப் போகிறீர்களா? இதை எல்லாம் நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பீர்களேயானால் உங்களுடைய நிலையை பற்றி புரிந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொல்வேன். எவ்வளவோ சட்டங்களை நாம் கொண்டு வந்து நிறைவேற்றினோம். பினாமி நில ஒழிப்புச் சட்டத்தைக் கூட நிறைவேற்றி அனுப்பினோம். மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. இப்படி எவ்வளவோ சட்டங்களை இந்த அவை நிறைவேற்றி அனுப்புகிறபோது மத்திய அரசு ஏற்றுக் கொள்வதில்லை. நாம் நிறைவேற்றி அனுப்புகிறபோது மத்திய அரசு ஏற்றுக்கொள்ளாதபோது திருப்பத் திரும்ப நாம் வற்புறுத்தித் தான் தீர வேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் வாழ்நாள் முழுவதும் போராடிப் போராடி, எடுத்துச் சொன்னார்கள். ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்த, நம்மை எல்லாம் விட வலிவு மிக்க, ஆற்றல் மிக்க, எல்லா வகையிலும் சிறந்த அறிஞர் அண்ணா அவர்களே வற்புறுத்தி, வற்புறுத்திப் பார்த்தும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை. டாக்டர் கலைஞர் அவர்கள் 7 ஆண்டுக் காலம் முதலமைச்சராக இருந்து அவர் வற்புறுத்தி, வற்புறுத்தி, எடுத்துச் சொல்லியும் கூட ஏற்றுக்கொள்ளவில்லை. இப்படி திரும்பத் திரும்பத்தான் வற்புறுத்திச் சொல்ல முடியும். அவ்வாறு வற்புறுத்தியும் ஏற்றுக்கொள்ளவில்லை. நாமும் 1968-லே வற்புறுத்தினோம். அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போதும் வற்புறுத்துகிறோம், அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 20 மாநிலங்களில் இருப்பவர்களும் வற்புறுத்த வேண்டும். பாராளுமன்றத்தில் இருப்பவர்களும் வற்புறுத்த வேண்டும். அங்கே மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி வேண்டும். அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. என்றால் நாமாகத் திருத்தம் கொண்டு வர ஏற்பட வேண்டும். அந்த வலிவு ஏற்படுவதற்கான [illegible] உருவாக்க வேண்டும். அதனை நாம் அத்தனை பேரும் சேர்ந்துதான் உருவாக்க வேண்டும். அனைத்துக் [illegible] அத்தனை பேரும் சேர்ந்து உருவாக்குவதை [illegible] தவிர இந்த அரசு என்ன செய்ய இயலும்? திருப்பித் திரும்ப





வற்புறுத்துவோம். அவ்வளவு பேரும் சேர்ந்து தீர்மானம் நிறைவேற்றுகிறோம். 20 மாநிலங்களில் நாம் ஒரு மாநிலம். 540 பேர்களில் 'டு தர்ட்' மெஜாரிட்டி வேண்டும். அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் நாமாவது மெஜாரிட்டி கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். எல்லா மாநிலத்தவர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்ற வகையில் அதையாவது நாம் அத்தனை பேரும் சேர்ந்து செய்ய வேண்டும். வேறு விஷயங்களில் நாம் சண்டை போட்டுக் கொண்டாலும் கூட இந்த விஷயத்திலே ஒன்றாக இருந்து கருத்துக்களைத் தெரிவிப்போம். கடைசி வரையிலும் போராடி, போராடித்தான்—பல பேர் சுதந்திரத்தைக் காணாமலே கூட போய் விட்டார்கள், பின்னாலே வந்தவர்கள் சுதந்திரத்தைப் பெற்றார்கள்—விதைக்க வேண்டிய அளவுக்கு விதைத்துக் கொண்டிருப்போம். இந்தக் கருத்தை வலியுறுத்திக் கொண்டிருப்போம். நம்முடைய வாழ்நாள் முழுவதும் வலியுறுத்துவோம். சட்ட மன்றத்திலும் வலியுறுத்துவோம். எந்தெந்த முறைகளில் வலியுறுத்த முடியுமோ அந்த அளவுக்கு வலியுறுத்திக் கொண்டே இருப்போம். அதைத்தான் நாம் செய்ய முடியும். வேறு ஏதாவது நல்ல வழிகள் இருந்தால் அந்த வழியில் செய்யலாம், மாற்றிவிடலாம் என்று சொன்னால் மாற்றிவிடலாம். அல்லது பிரதமராகப் பார்த்து டைரக்ஷன் கொடுக்க வேண்டும்; விப் கொடுக்க வேண்டும். அவர்கள் ஏற்றுக் கொண்டால் விப் தந்துவிடுவார்கள். 'இந்தத் தீர்மானத்தை காங்கிரஸ் கட்சி கொண்டு வருகிறது. எல்லோரும் ஆதரியுங்கள்' என்று சொன்னால் சுலபம். அதை திரு. சித்தன்தான் செய்ய வேண்டும். காங்கிரஸ் தலைவர்கள் செய்தால் ரொம்பச் சுலபம். அவர்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். அதையாவது திரு. சித்தன் அவர்கள் செய்யட்டும். வேறு எந்த வேலையையும் செய்யா விட்டாலும் கூட இந்த ஒரு வேலையையாவது அவர்கள் செய்யட்டும். (சிரிப்பு).

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி முன்னேற்றக் கழகத்தின் [illegible] தலைவர் அவர்கள் சொன்னதுபோல் இல்லாமல், இங்க அவையிலே இருக்கின்ற அனைவரும் தீர்மானத்தின் மாண்புமிகு [illegible] [illegible] [illegible] [illegible] தீர்மானத்தை [illegible] [illegible] வரவேற்கிறார்கள்.

மதிக்காமல், மதிக்காமல் என்ற வார்த்தையைச் சொல்கிறார். மதித்துத்தான் நல்ல முறையில சுருக்கமாக, விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். எங்கள் நிலைமையில் மாறுதல் இல்லை, இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. நாஞ்சிலார் அவர்கள் தனக்கு ஏதோ ஒரு கடிதம் வந்ததைப் போலவும் அந்த வகையில் கடிதம் வைத்திருக்கிறேன், கடிதம் வைத்து இருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தை இப்போது வெளியிடுவார்களேயானால் அது அவருக்கும், நாட்டுக்கும் நல்லது.

**திரு. கி. மனோகரன்:** தலைவர் அவர்களே, நான் பேசும்போது மிகத் தெளிவாக நாவலரிடம் கேட்டேன். அப்போதெல்லாம்—பிரதம அமைச்சரிடமிருந்து வந்திருக்கிற கடிதத்தைப் பொறுத்தவரையில், அவர் படித்த கடிதத்தின் தேதியிலிருந்து நான் புரிந்து கொண்டேன்—அவர் நமக்குச் சொன்னபோது கடிதம் வரவில்லை என்று குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகுதான் சொன்னார்கள், நிலைமையை ஒட்டி விளக்குகிறேன் என்று. நான் பணிவன்போடு நாவலர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மொழி உணர்ச்சி படைத்தவர்கள் நீங்கள். பல தீர்மானங்களை நிறைவேற்றி நாம் டெல்லிக்கு அனுப்புகிறோம். அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள், ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு வருகிறீர்களே தவிர—அவற்றில் சில கொள்கைப் பிரச்சினைகளாக இருக்கக்கூடும். ஆனால் இது கொள்கைப் பிரச்சினை அல்ல உரிமைப் பிரச்சினை என்பதைத் தயவுசெய்து மறந்துவிடக் கூடாது. நான் இன்னும் சொல்கிறேன். மத்திய அரசில் இன்றைக்கு இருக்கின்ற பாரதத்தின் இளைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் ஒன்றைச் செய் என்று சொன்னால் உடனே செய்கிற அளவுக்கு நாடாளுமன்றம் இருக்கிறபோது, அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி நியாயமான நமது கோரிக்கையை ஏற்றுக் கொண்டு நேரு அவர்களின் வாக்குறுதியை அரசியல் சட்டத்தில் இடம் பெறச் செய்வதற்கு என்ன சிக்கல் இருக்கிறது என்பதை நாவலர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



தள்ளி விடுகிறார்கள். பொது நோக்கோடு, பொது மக்களுக்கு [illegible]ற்றம் விளைவிக்கக்கூடிய அளவில், நியாயம் வழங்கப்படாத நிலையில், அதைமட்டும் தேர்ந்தெடுத்து இந்தக் குழுவுக்குத் தருகிறார்கள். அந்தக் குழுவும் உரியதுறைக்கு அனுப்புகிறது. உரிய துறை அதற்குப் பதில் எழுதுகிறார்கள்; பதில், அந்த கமிட்டிக்கு வந்து சேருகிறது. இந்தநிலை இருப்பதன் காரணமாக, மதிப்பீட்டுக் குழுவானாலும் சரி, கணக்குக் குழுவானாலும் சரி, மற்ற குழுக்களானாலும் சரி, அதிலே இடம் பெறுபவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து மிகச் சிறப்பான பணிகளைச் செய்து குற்றங்குறைகளையெல்லாம் சுட்டிக்காட்டுகிற அளவுக்கு மற்ற நிலைமைகள் வருமேயானால்கூட அந்தக் குறைபாடுகளையெல்லாம் ஆங்காங்கு களைவதற்கு எடுத்துக்காட்டாக இருக்கும். அந்த வகையிலே, குழுக்களிலே இடம் பெற்றவர்களெல்லாம் பணியாற்றுவார்களேயானால் அரசுக்கும் நல்லது, நிர்வாகம் செம்மையுற நடைபெறுவதற்கும் வழிவகை ஏற்படக்கூடும். சுமைகளை அதிகமாக வளர்த்துக்கொண்டே போவோமானால் நாம் எந்தப் பணியையும் சிறப்பாகச் செய்துவிட முடியாது. இந்த மனுக்கள் குழுவை இப்போதுதான் அமைத்து இருக்கிறோம். அந்தக் குழு ஓரளவுக்கு பணியாற்றிக்கொண்டு வருகிறது. [illegible]தனுடைய பணியை இன்னும் செம்மையாக்குவதற்கு என்ன செய்யலாம் என்பதை யோசித்து, அதற்குப் பிறகு மாண்புமிகு அவையினுடைய துணைத் தலைவர் சொல்வதைப்பற்றி நாம் பரிசீலிக்கலாம்.

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்கள் பதில் உரை சொல்லு[illegible] ஆண்டுதோறும் வீட்டுமனைப் பட்டாக்களை [illegible]ன்ற நோக்கில் ஆண்டுதோறும் அளவுக்கு ஆண்டுதோறும் 1½ லட்சம் 2 லட்சம் என்கின்ற கொண்டிருக்கிறோம் என்கிற ஒரு கருத்தினை கொடுத்துக் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே உள்ள வருவாய்த் துறை, பொதுப்பணித் துறை, காட்டு இலாக்கா போன்ற பகுதிகளில் நிரம்ப இருக்கிற புறம்போக்கு நிலங்களை கண்டுபிடித்து இப்படி லட்சக்கணக்காக வீட்டுமனை இல்லாமல் அன்றாடம் மனு கொடுத்துக்கொண்டு இருப்பவர்களுக்கு உடனடியாக கிடைக்கிற வகையில் இந்தச் சட்டமன்றத்திலே அமைக்கப்பட்டிருக்கிற [illegible]ழுவும் கமிட்டி என்கிற குழு மாவட்டங்களுக்குச் சென்று, அதைப் பார்த்து அவர்களுக்கு உடனடியாக [illegible]னடியாக கிடைக்க ஒரு அனுமதி வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஹவுஸ் கமிட்டி என்பது இங்கே விடுதியைப் பற்றி, இந்த ஹவுஸைப்பற்றி, உறுப்பினர்களுக்கான சௌகரியங்களைப் பற்றி கவனிப்பதற்காக இந்த அவையால் நியமிக்கப்பட்ட ஒரு குழு ஆகும். அதனிடம் இந்தப் பொறுப்புகளையெல்லாம் ஒப்படைக்க முடியாது. அதற்கென்று ஆங்காங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மற்றவர்களும் இந்தப் பணிகளையெல்லாம் செய்துகொண்டு வருகிறார்கள். ஆங்காங்கு இருக்கின்ற நிலங்களையெல்லாம் முறைப்படி செய்ய வேண்டிய காரணத்தினால் ஆண்டொன்றுக்கு 1½ லட்சம் அளவுக்கு மனைப்பட்டாக்கள் வழங்குகின்ற முறையை நாம் வகுத்துக் கொண்டு வருகிறோம். இப்போதே பல இடங்களிலே நிலங்கள் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் நிலம் வேண்டுமென்றாலும்கூட, ஆதிதிராவிடர்களுக்கு, மற்றவர்களுக்கு வீடுகட்டுவதற்கு நிலம் இல்லை. கையகப்படுத்த வேண்டியிருக்கிறது. கையகப்படுத்தினாலும்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நஞ்சை நிலத்தை எக்காரணம் கொண்டும் கையகப்படுத்தக்கூடாது என்று சொல்லி விட்டார்கள். தஞ்சை மாவட்டத்தில் இப்போது களத்துக்கு கூட நிலம் கிடையாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் புஞ்சையும் அங்கே இல்லை. அப்படிப்பட்ட இடர்ப்பாடு இருக்கின்ற இடத்தில் தஞ்சை மாவட்டம் போன்ற இடங்களில் இடம் கிடைப்பது அரிது. அவர்கள் சொல்வது மாதிரி, காடு என்கிற பெயரால் எந்த மரமும் வளராமல் காடு என்று இருக்கிறது. அதிலே ஆக்கிரமிக்கக் கூடாது என்று இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலே சில பல திருத்தங்களைக்கொண்டு வந்து, அப்படிப்பட்ட இடங்களை எளிய மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குவதற்கு வசதி இருக்கிறதா என்பதை ஆராயச் சொல்லியிருக்கிறோம். அதற்கு சட்டத் திருத்தம் கொண்டுவந்து செய்ய முடியுமேயானால் அதை நாம் செய்யலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மொழிக் கொள்கையைப் பொறுத்த வரையிலே காங்கிரஸ் கட்சிக்கு என்று ஒரு நிலை உண்டு. நாங்கள் மும்மொழிக் கொள்கையை ஆதரிக்கிறோம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இரு மொழிக் கொள்கையை ஆதரிக்கிறார்கள். இந்தியாவிலிருக்கிற பல்வேறு மாநிலங்களிலேயெல்லாம், காங்கிரஸ் ஆட்சி இல்லாத





மாநிலங்களிலேகூட மும்மொழிக் கொள்கையை ஆதரிக்கிறார்கள். அரசியல் சட்டத்திலே இதற்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பதிலே காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் ஆட்சி மொழி சட்டத்திலே நாங்கள் பாதுகாப்பு கொடுத்து இருக்கிறோம். ஆசிய ஜோதி ஜவகர்லால் நேரு அவர்கள் உறுதிமொழி கொடுத்து இருக்கிறார்கள். அன்னை இந்திராகாந்தி அவர்களும் உறுதிமொழி கொடுத்து இருக்கிறார்கள். இப்போது இருக்கிற பிரதமர் அவர்களும் உறுதிமொழி கொடுத்து இருக்கிறார்கள். எங்களைப் பொறுத்த அளவிலே உங்களோடு, தமிழகத்திலே இந்தி திணிக்கப்படக்கூடாது என்பதிலே நாங்கள் தெளிவாக இருக்கிறோம். அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம் நாவலர் அவர்கள் சொன்னார்கள். அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்ன செய்து கொண்டிருந்ததோ அதைத்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் செய்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் நான் உங்கள் மூலமாக மீண்டும் நம்முடைய திராவிட முன்னேற்றக்கழக தலைவரை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வது, அவர் நல்ல பாராளுமன்ற சம்பிரதாயம் உள்ளவர்கள். சில நாட்களுக்கு முன்னாலே ஒரு கடிதம் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு இந்தியாவினுடைய தலைமை அமைச்சரிடமிருந்து. அந்தக் கடிதத்திலே அவர்கள் என்ன சொன்னார்கள்? அந்தக் கடிதத்தில் என்ன பதில் எழுதி இருந்தார்கள்? என்ன பதில் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்? இந்திய பிரதமருக்கு என்ன எழுதினார்கள் என்பதை, அன்றைக்கு என்னிடம் இருக்கிறதை சொல்வேன் என்று சொன்னார்கள். அதைச் சொல்வார்களேயானால் அது நலன் பயப்பதாக இருக்கும். அருள்கூர்ந்து அவர்கள் அதைச் சொல்லவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்தக் கடிதத்தைப்பற்றி இங்கே சொல்வேன் என்று சொல்லவில்லை. The communication is strictly in between myself and the Prime Minister.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி என்றால் அது இந்த சபைக்கு வருவானேன்? அதைப்பற்றி இந்த அவையில் சொல்வானேன்? அன்று நீங்கள் கொடுக்கிறேன் என்று சொன்னீர்கள்.

திரு அ. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் வறட்சி நிவாரணப் பணிக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிற தொகையைப்பற்றி நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே சட்டமன்றத்தில் எடுத்துச சொன்னார்கள். ஆனால் புதுக்கோட்டை மாவட்டத்துக்குப் பணம் ஒதுக்கீடு செய்து இருப்பதாக சொல்லவில்லை. ஒதுக்கப்படவில்லையா அல்லது இனிமேல் ஒதுக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்டு இருப்பது பற்றி எல்லா மாவட்டத்துக்கும் நான் சொல்லவில்லை. சிலவற்றைக் குறிப்பிட்டேன். மொத்தத்தில் 20 கோடி ரூபாய் என்று சொன்னேன். ஒதுக்கிக்கொண்டே வருகிறோம். அதன்படி புள்ளி விவரங்கள் இருக்கின்றன. மேலெழுந்த வாரியாக சில மாவட்டங்களைப் பற்றி மட்டும் நான் குறிப்பிட்டேன். எல்லா மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 1—நிலவரித்துறை.**

திருவாளர்கள் கோ. வீரய்யன், கே. சுப்பராயன் மற்றும் மா. சுந்தரதாஸ் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 1 நில வரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 20,12,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.





**கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.**

திரு. கோ. வீரய்யன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் பொ. உத்திராபதி மற்றும் ஈ. வே. கி. ச. இளங்கோவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 41,61,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்.**

திரு. கோ. வீரய்யன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப்பெற்றது.

திரு. எஸ். ரெத்தினராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 50,71,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

## கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு.

திரு. சோ. மா. இராமச்சந்திரன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப் பெற்றது.

திருவாளர்கள் எ. எஸ். எ. ஆறுமுகம் மற்றும் ஜே. முகம்மது கனி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 59,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

## கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

திருவாளர்கள் கோ. வீரய்யன் மற்றும் எல். என். இராமசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 30,62,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (23—4—1987) காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8-33 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

எதுவுமில்லை.

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

168. கோரிக்கை எண் 1—நில வரி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88 (தமிழ், ஆங்கிலம்).

169. கோரிக்கை எண் 9—நிறுவன நிதிப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88 (தமிழ், ஆங்கிலம்).

170. வருவாய்த்துறை பற்றிய சாதனை அறிக்கை, 1987-88 (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்புகள்.

(689 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### வருவாய்த் துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு—1987-88.

### 1. முன்னுரை.

1980 டிசம்பரில் வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்னர், வருவாய் நிர்வாகம், நிலம், நிலச் சீர்திருத்தத்துறை நிர்வாகம் தனித்தனியே குறித்த பணிகளைக் கவனிக்கும் மூன்று ஆணையர்களிடம் மாநில அளவில் சிறப்பு ஆணையாளர்—வருவாய் நிர்வாக ஆணையாளர், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையாளர், சிறப்பு ஆணையாளர் மற்றும் நில சீர்திருத்த ஆணையாளர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டன. வருவாய் நிருவாகத்துறை, மாவட்ட வருவாய் நிருவாகத்திற்கும் பொது நிருவாகத்திற்கும் பொறுப்பானதாகும். நிலவரி, செஸ், அவை தொடர்பாக வரிகள் ஆகியவற்றை விதித்தல், வசூலித்தல் நிலங்கள் வருவாய் ஆவணங்களை பாதுகாப்பது ஆகியவை இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நில நிருவாகத்துறை, நிலம் கையகப்படுத்தல், நில உரிமை மாற்றம் செய்தல், வீட்டு மனைகளை ஒப்படை செய்தல், நிலப் பட்டாக்களை வழங்குதல் ஆகியவற்றிறகுப் பொறுப்பாகும். நிலச் சீர்திருத்தம், குத்தகைச் சீர்திருத்தம் ஆகியவற்றைச் செயற்படுத்தும் பொறுப்பு நிலச் சீர்திருத்தத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட வருவாய் அதிகாரிகளும் நில நிருவாகம், நிலச் சீர்திருத்தம், வருவாய் நிர்வாகம், ஆகியவை தொடர்பான பணிகளைக் கவனிக்கின்றனர். வருவாய்க் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிருவாக அதிகாரிகள் ஆகியோர் அப்பணியில் அவர்கட்கு உதவுகின்றனர் இந்திய விடுதலைக்குப் பின் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம்,

வருவாய் நிருவாகம் இதுகாறும் கவனித்து வந்ததுபோல, இனி மேலும் அன்றாட நிருவாகம் தொடர்பான பணிகளையும், அவசர நிவாரணப் பணிகளை மட்டும் கவனிப்பதாக அமைந்திராமல், மாறாக பல வளர்ச்சிப் பணிகளிலும் நாட்டம் செலுத்துவதாக அமைந்திருக்கும் என்பதாகும். இம்மாநிலத்தில் 20 மாவட்டங்களில் 50 கோட்டங்கள், 168 வட்டங்கள் 1,098 பிர்க்காக்கள், 17,029 வருவாய்க் கிராமங்கள் ஆகியவை உள்ளன.

2. கிராம நிருவாகம்.

தமிழ்நாட்டில் 12,498 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்கள் உள்ளன. 195 பணியிடங்கள் தவிர மற்ற பணியிடங்கள் அனைத்தும் நியமனம் செய்யப்பட்டுவிட்டன. கிராம நிருவாக அலுவலர் பதவிக்கு நியமனம் செய்ய, தமிழ்நாடு தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டவர்களில் 382 பேர்கள் மட்டுமே உள்ளனர். இந்த நபர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு 6 பயிற்சிப் பள்ளிகளைத் துவக்கி, இவர்களில் தேர்வு பெற்றவர்களை காலியுள்ள பணியிடங்களில் நிரப்ப செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

2. புதிய கிராம நிருவாக அலுவலர்கள் மாவட்டத்திற்குள் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு மாற்றம் செய்ய இயலும். முழுநேர அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் அனைத்து சலுகைகளும், கிராம நிருவாக அலுவலர்களுக்கும் பொருந்தும். முன்பிருந்த பகுதிநேரக் கிராம அதிகாரிகள் அமைப்பில், தாழ்த்தப்பட்டோருக்கு உரிய விழுக்காடு பணியிடங்கள் ஒதுக்கப்படவில்லை. தற்போது புதிய முறையில், தாழ்த்தப்பட்டோருக்கு உரிய பணியிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கிராம நிருவாக அலுவலர்களுக்கு பதவி உயர்வுக்கு வகை செய்ய ஆணையும் வெளியிடப்பட்டுள்ளது.

3. பகுதிநேரக் கிராம ஊழியர்களாக கிராமக் காவலர்கள், கிராமப் பணியாளர்கள் மற்றும் பாசனக் காவலர்கள் தொடர்ந்து பணியில் உள்ளனர். அவர்களுக்கெனத் தனியாக 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊழியர்கள் பணி விதிகள் இயற்றப்பட்டுள்ளன. அவர்களது ஓய்வு பெறும் வயது 60 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவர்கள் 1-8-1986 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ. 310 மதிப்பூதியமாகப் பெற்று வருகின்றனர். அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது பஞ்சப்படியை உயர்த்தும்போது, இவர்களுக்கும் மதிப்பூதியத்தை உயர்த்தி அளிக்கப்பட்டு வருகிறது. அரசு, கிராம ஊழியர்களுக்கும், குடும்ப நலநிதியாக, ரூ. 20,000 வழங்கும் திட்டத்தினை விரிவுபடுத்தி 1-4-1985 முதல் வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.

3. வருவாய்த்துறை ஆட்சி அமைப்பு.

1986-87 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம் (1) திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்ட திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் என்றும் (2) தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்ட சிதம்பரனார் மாவட்டம் என்றும்





இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இப்புதிய மாவட்டங்கள் 20-10-1986 முதல் செயற்படத் தொடங்கியுள்ளன. பிரித்தமைக்கப்பட்டபின் எஞ்சியுள்ள திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு வருவாய்க் கோட்டமும், தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு வருவாய்க் கோட்டமும் ஆக இரண்டு புதிய வருவாய்க் கோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. செங்கல்பட்டு மாவட்டத்தில் அடங்கிய மதுராந்தகம் வட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, புதிய செய்யூர் வட்டம் அமைக்கப்பட்டது.

2. வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து அமைக்க வல்லுநர் குழு அளித்த அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

3. புதிய மாவட்டம் ஒன்றை அமைப்பதற்குத் தோராயமாக ரூ. 3.5 கோடி தொடரினச் செலவும், ரூ. 11.00 கோடி தொடரா இனச் செலவும் ஆகும்.

4. தற்போது தமிழ்நாட்டில் 20 மாவட்டங்கள், 59 வருவாய்க் கோட்டங்கள், 168 வட்டங்கள், 1,098 குறு வட்டங்கள் உள்ளன.

4. மாவட்ட வருவாய் நிருவாகம்

மாவட்ட வருவாய் நிருவாகத்தின் திறமையை உயர்த்துவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளது. திரு எம். பி. ஆம்ஸ்ட்ராங், இ.ஆ.ப., தலைமையில் நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழு 184 பரிந்துரைகள் செய்துள்ளது. அவை பெரும்பாலானவை தற்பொழுதுள்ள நடைமுறைகளை எளிதாக்குதல்; நிலவருவாய்முறை மற்றும் நிலம் கையகப்படுத்தும் பணிகளின் நடைமுறைகளில் மாற்றங்கள் செய்தல்; நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள், நடைமுறை அதிகாரங்கள், நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் ஆகியவற்றை மாவட்டாட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர்/ கோட்டாட்சியர்/ வட்டாட்சியர்களுக்கும் பகிர்ந்து அளித்தல் போன்ற பல்வேறு பரிந்துரைகளாகும். அரசு இதுவரை 165 பரிந்துரைகள் மீது ஆணைகள் வெளியிடப்பட்டது. மீதியுள்ள 19 பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

மக்கள் குறை நீக்கும் நிருவாகம்.

சமுதாயத்தில் உள்ள நலிந்த பிரிவினரின் கோரிக்கைகளையும், குறைகளையும், உடனுக்குடன் கவனித்து குறைகளைத் தீர்ப்பதற்கும், வருவாய்த்துறை அலுவலர்களை ஒரு குறிப்பிட்ட நாட்களில் சந்திக்க வாய்ப்பளிக்கும் வகையில் அரசு மக்கள் குறை தீர்க்கும் திட்டத்தையும், மனு நீதித் திட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

I. மனுநீதித் திட்டம்.

மனுநீதித் திட்டத்தின் கீழ் மாவட்டாட்சியர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்ற அரசுத் துறைகளின் அலுவலர்களுடன் தங்களது அதிகார வரம்பின் கீழ் வரக்கூடிய கோட்டங்

களில் சுழல் முறையில் சென்று பொது மக்களின் குறைகளை
அவர்களது கிராமத்திலேயே தீர்த்திடல் வேண்டும். கோட்ட
அதிகாரிகள் தங்களது அதிகார வரம்பின் கீழ் வரக்கூடிய ஒவ்
வொரு வட்டத்திலுமுள்ள ஒரு கிராமத்தில் மேற்கூறிய முறையில்
மனுநீதி திட்டத்தை நடத்த வேண்டும். மனுநீதித் திட்ட
அலுவலர்கள் கோட்டம் அல்லது கிராமத்திற்கு வருவதை ஒரு
வாரத்திற்கு முன்பே அறிவிப்பு செய்துவிட வேண்டும். அதிகாரி
ஒருவர் இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட நாட்களுக்கு முன்பே
பொது மக்களிடமிருந்து மனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு
பரிசீலனை செய்யப்பட்டு, அதிகாரிகளுடன் நிர்ணயிக்கப்பட்ட
நாளன்று கிராமத்திற்குச் சென்று ஒவ்வொரு மனு குறித்தும்
இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டதை பொது மக்களுக்கு தெரிவிக்க
வேண்டும்.

## I.I. குறை தீர்க்கும் நாள்.

மக்கள் குறை தீர்க்கும் திட்டப்படி ஒவ்வொரு திங்கட்
கிழமையும் மாவட்டங்களில் குறைதீர்க்கும் நாளாகக் கருதப்
படுகிறது. மாவட்டாட்சியர்கள்/ கோட்டாட்சியர்கள்/வட்
டாட்சியர்கள் ஆகியோர் தங்களது தலைமை இடங்களில் ஒவ்
வொரு திங்கட்கிழமையும் மனுதாரர்களுக்குப் பேட்டியளித்து
மனுக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவர்களது குறை
களைப் போக்க அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட மனுக்கள்
மீது உரிய நடவடிக்கை எடுத்து முடிக்க தொடர்புடைய அலு
வலருக்கு அனுப்பப்படுகிறது. சமீபத்தில் மக்கள் குறை தீர்க்கும்
நாள் நடத்தப்படும் முறைகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்
டுள்ளன. அம்முறைப்படி மனுதாரரிடம் மனுவை பெற்றுக்கொண்
டதற்கு ஒரு 'வெள்ளை' அடையாள அட்டை வழங்கப்படும்.
அவற்றில் எந்த நாளில் பதில் அனுப்பப்படும் என்பதையும் குறித்
தல் வேண்டும். தங்களது குறைகள் குறித்து திரும்பத் திரும்ப
மனுக்கள் கொடுப்பவர்களுக்கு "இளஞ் சிவப்பு" நிறத்தில்
அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். அவ்வட்டையில்
மனுதாரரின் மனு மீது எடுக்கப்படும் நடவடிக்கையின் முடிவைத்
தெரிந்து கொள்ள வசதியாக எந்நாள் அன்று அலுவலகத்திற்கு
வர வேண்டுமென்று ஒரு நாளினைக் குறிப்பிட வேண்டும். மாவட்
டாட்சியர்களும் மற்ற அலுவலர்களும், சார்நிலை அலுவலர்களிட
மிருந்து மற்றத்துறை அலுவலர்களிடமிருந்தும் குறிப்பிட்ட
காலக் கெடுவுக்குள் அறிக்கை பெற்று மனுதாரருக்கு வழங்கப்
பட்ட "இளஞ் சிவப்பு" நிற அட்டையில் குறிக்கப்பட்டிருக்கும்
நாளில் மனுதாரர் வரும்போது மனுதாரருக்கு உரிய பதில் அப்
பொழுது அளிக்கப்பட வேண்டும்.

## 5. வருவாய்த்துறை கட்டடங்கள்.

1. பொது:

1.1. கடந்த சில ஆண்டுகளாகவே வாடகைக் கட்டடங்களிலும்
போதிய இட வசதியின்றியும் இயங்கி வரும் வருவாய்த்துறைக்
கட்டடங்களுக்குப் பதிலாக புதியக் கட்டடங்கள் கட்டிட அரசு



அதிக முன்னுரிமை வழங்கி வருகின்றது. இம்மாதிரியே, வரு
வாயத்துறை அலுவலர்களுக்கும் குடியிருப்புகள் கட்டி வழங்கிட
வும் போதிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

2. வட்டாட்சியர் அலுவலகங்கள் :

2.1. மாநில அளவில் மொத்தம் 168 வட்டாட்சியர் அலு
வலகங்கள் உள்ளன. அவைகளில், 47 வட்டாட்சியர் அலுவலகங்
களுக்குப் புதிய கட்ட டங்கள் அல்லது கூடுதல் இட ங்கள் தேவைப்
படுகின்றன. 1987–88 ஆம் நிதியாண்டில், செங்கல்பட்டு மாவட்
டத்திலுள்ள பள்ளிப்பட்டு வட்டாட்சியர் அலுவலகம், திருநெல்
வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள சிவகிரி வட்டாட்சியர்
அலுவலகம் மற்றும் சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள சங்கரன்
கோவில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு நிலங்களை
கையகப்படுத்துவதற்கும் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம்
மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் இளையான்
குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிதாக வட்டாட்சியர்
அலுவலகம் கட்டவும் கருதப்பட்டுள்ளது.

3. வருவாய் கோட்டாட்சியர் குடியிருப்புகள்

3.1. மொத்தம் உள்ள 59 வருவாய் கோட்டாட்சியர்களில்,
53 பேர்களுக்கு அரசு குடியிருப்புகள் ஏற்கனவே வழங்கப்பட்டு
உள்ளன. 1987–88 ஆம் நிதியாண்டில் (1) கடலூர், (2) தாரா
புரம், (3) கிருஷ்ணகிரி ஆகிய மூன்று கோட்டங்களில் கோட்டாட்
சியர் குடியிருப்புகள் கட்ட கருதப்பட்டுள்ளது.

4. வட்டாட்சியர் குடியிருப்புகள் :

4.1. மாநிலத்தில் உள்ள 168 வட்டாட்சியர்களில், 148
வட்டாட்சியர்களுக்கு அரசு குடியிருப்புகள் தரப்பட்டுள்ளன.
1987–88 ஆம் நிதியாண்டில், 19 வட்டாட்சியர் குடியிருப்புக்
கள் கட்ட கருதப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு வட்டாட்சியர்
குடியிருப்புக் கட்டடம் கூடிய விரைவில் கட்டிட நடவடிக்கை
எடுக்கப்படும்.

5. வருவாய் ஆய்வாளர் அலுவலகம், இணைத்திட்ட குடியிருப்புகள் :

5.1. சரக அளவில் வருவாய் ஆய்வாளர் கிராம மக்களுடன்
நெருங்கிப் பழகி, அரசின் சமூகப் பொருளாதாரத் திட்டங்களை
சரிவரச் செயல்படுத்தி பணியாற்றக் கூடியவர்கள். மாநிலத்தில்
மொத்தம் 1,098 சரகங்கள் உள்ளன. அவற்றில் 20 சரகங்கள்
சென்னை மாவட்டத்தில் மட்டும் உள்ளன. சென்னை மாவட்
டத்தில் அரசு குடியிருப்பு வசதிகள் இருப்பதால், ஏனைய
மாவட்ட அளவிலான 1,078 சரகங்களில், வருவாய் ஆய்வர்
குடியிருப்பு கட்டும் பணியில் 1986–87 முடிய 987 குடியிருப்புகள்
கட்ட ஏற்கனவே அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவைகளில்

[1987 ஏப்ரல் 22

864 குடியிருப்புகள் முழுவதுமாக முடிக்கப்பட்டும், 123 குடியிருப்புகளில் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. இவை விரைவில் கட்டி முடிக்கப்படும். மீதமுள்ள 91 இடங்களிலும் வரும் நிதியாண்டு 1987–88-ல் இரண்டாம் பகுதி திட்டத்தின் கீழ் குடியிருப்புகள் கட்ட கருதப்பட்டுள்ளது. எனவே, விரைவில் அனைத்து வருவாய் ஆய்வாளர்களுக்கும் அலுவலகம் இணைந்திட்ட குடியிருப்புகள் கட்டி முடிவடையும் நிலை உருவாகும்.

## 6. நிலவரி–செஸ்வரி.

நிலவரி என்பது, நிலத்தின் வகை, மண் வளம், தரம் ஆகியவற்றிற்கேற்ப, நிலவரி விதிக்கப்படுகிறது. நிலவரியின் மேல் விதிக்கப்படும் உள்ளூர் செஸ் உள்ளூர் செஸ் மேல்வரி, கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர் செஸ் போன்றவை நிலவரி மதிப்பீட்டின் ஒரு பகுதியாக அமைகின்றன. நிலவரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும், 45 காசு என்ற வீதத்தில் விதிக்கப்படும் உள்ளூர் செஸ், நிலவரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் 250 காசு வரை விதிக்கப்படும். உள்ளூர் செஸ் மேல்வரி ஆகியவை நிலவரியுடன் வசூலிக்கப்படும் ஊராட்சி வரிகளாகும். அத்தொகை வசூலிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் வளர்ச்சித் திட்டங்களுக்காக அத்தொகை பகிர்ந்தளிக்கப்படுகிறது. 1—7–1967 லிருந்து புன்செய் நிலங்கள் அனைத்திற்குமான அடிப்படை வரி விதிப்பு தள்ளுபடி செய்யப்பட்டது. இதே போன்று, 5 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவாக நன்செய் நிலம் வைத்திருப்போருக்கு ஒருங்கிணைந்த நன்செய் தீர்வைகளிலிருந்து நிலவரி மட்டும் 1—7–1971 முதல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

1395 ஆம் விளைச்சல் ஆண்டின் (அதாவது 1—7–1985-லிருந்து 30–6–1986 வரை) இத் தலைப்பின் கீழ் 30,26,14,606 ரூபாய் வசூலிக்கப்பட்டது. கடந்த 15 ஆண்டுகளில் (அதாவது 1380 ஆம் விளைச்சலாண்டு முதற்கொண்டு) இரண்டாம் முறையாக வசூலிக்கப்பட்ட பெரு மொத்த நிலவரி வசூல் இதுவேயாகும்.

(2) 1395 ஆம் விளைச்சலாண்டின் போது சில மாவட்டங்களில் வறட்சி நிலவிய போதும், வருவாய்ப் பணியாளர்கள் மிகச் சிறந்த முறையில் பணியாற்றியதால், அம்மாவட்டங்களில் வரி வசூல் செய்ய இயன்றது. நிலுவைத் தொகையை வசூலிக்கக் கட்டாய நடவடிக்கை எடுக்க வேண்டாமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டது. எனவே, வருவாய்ப் பணியாளர்களின் மிகச் சிறந்த ஒன்றுபட்ட முயற்சியின் மூலம் அமைதியான முறையில் தொகை வசூலிக்கப்பட்டது.



1987 ஏப்ரல் 22]

## தள்ளுபடி செய்தல்.

### 1. பாதகச் சூழலுக்கேற்ப தள்ளுபடி செய்தல்

உழவர் ஒருவர் குறிப்பிட்ட காரணத்திற்காகத் தன் நிலத்தின் வரி தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று விரும்பினால், அவர் அந்த நிலத்திற்கு வரி தள்ளுபடி செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரோ, அந்த நிலத்தைக் குறிப்பிட்டு, தக்க நேரத்தில் சம்பந்தப்பட்ட வருவாய் அலுவலருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். பின்னர், பயிராய்வு அலுவலரின் கருத்தின் அடிப்படையில், அதிகாரமளிக்கப்பட்ட வருவாய் அலுவலர் வரியைத் தள்ளுபடி செய்வார். 13 ஆம் எண். வருவாய் நிலை ஆணையின் கீழ், பாதிக்கப்பட்ட உழவர்களுக்குப் பாதகச் சூழலுக்கேற்ப வரித் தள்ளுபடி செய்யப்படுமே தவிர செஸ் வரியும், கூடுதல் செஸ் வரியும் தள்ளுபடி செய்யப்படுவதில்லை.

### 2. அசாதாரணமான சூழ்நிலைகளில் நிலவரியைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தலும் தள்ளுபடி செய்தலும்.

கடுமையான சூழ்நிலைகளில் பஞ்சம்போன்ற இயற்கைச் சீற்றங்களினால் வறட்சி பெரும் பகுதியில் பயிர் விளைச்சல் பாதிப்பு ஏற்படும் இன்னல்களைக் களைவதற்காக அரசு, வரி விதிப்பைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறது அல்லது தள்ளுபடி செய்கிறது. அத்தகைய சூழ்நிலைகளில், வருவாய் அலுவலர்களே நடவடிக்கை மேற்கொண்டு வருவாய் நிர்வாக ஆணையர் மூலமாக அரசுக்குச் செயற் குறிப்புகளை அனுப்புவர்.

### 3. 1395 ஆம் விளைச்சலாண்டிற்கு (1985–86) தள்ளுபடி :

1985 ஆம் ஆண்டில் வட கிழக்குப் பருவமழை போதிய அளவு பெய்யாததால், இம்மாநிலத்தில் வறட்சி நிலவியது. இதனால், பெரும்பான்மையான மாவட்டங்களில் வேளாண்மைப் பணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. எனவே, வருவாய் அலுவலர்கள் ஒவ்வொரு நிலத்தையும் ஆய்வு செய்த பின்னர், பயிர் விளைச்சல் 37 காசும் (50 சதவீதம்) அதற்குக் குறைவாகவும் உள்ளது என்று கண்டறியப்பட்ட பகுதிகளிலுள்ள நிலங்களுக்கு நிலவரி, தண்ணீர்த் தீர்வை, உள்ளூர் செஸ், உள்ளூர் செஸ் மேல் வரி, கூடுதல் தீர்வை, கூடுதல் தண்ணீர்த் தீர்வை, தனி வரி விதிப்பு, தனித் தண்ணீர்த் தீர்வை போன்றவற்றைத் தள்ளுபடி செய்ய அரசு உத்தரவிட்டது. 1395 ஆம் ஆண்டு விளைச்சல் ஆண்டிற்கான நிலவரி, உள்ளூர் செஸ், அரசு கடன் ஆகியவற்றின் பாக்கித் தொகை வசூலிப்பு அடுத்த விளைச்சலாண்டிற்கு அதாவது 1396 ஆம் விளைச்சலாண்டிற்கு ஒத்தி வைக்கப்படலாமென்றும் அரசு ஆணை பிறப்பித்தது

7. தண்ணீர் கட்டண விதங்கள் :

இம்மாநிலத்திலுள்ள வேளாண்மை நிலங்களின் மீதான தண்ணீர் வரி, கூடுதல் வரி முதலானவை பொறுத்தவரையில் இப்போதுள்ள கொள்கையில் மாற்றங்கள் ஏதும் இல்லை. தண்ணீர்த் தீர்வை வீத அமைப்பு முழுவதையும் சீரமைப்பது பற்றி ஆராய அரசு அமைத்த குழு, 1979 ஆம் ஆண்டில் அர சிடம் அளித்த அறிக்கை ஆராயப்பட்டது. அத்தருணத்தில் விவசாயிகளுக்கு அரசு அளித்துள்ள பல சலுகைகளை கருத்தில் கொள்ளுதல் பொருத்தமானதாக கருதப்பட்டு, தற்போதைய நிலவரப்படி அறிக்கை பெற அரசு ஒரு புதிய குழு ஒன்று அமைத்தது. அதன் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அதன் இறுதி அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்பு அதன் மீது முடிவு எடுக்கப்படும்.

8. நில உரிமைப் பதிவேடு வழங்கல் திட்டம் :

தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டைய நில உரிமைப் பதிவேடு சட்டம் (1986 ஆம் ஆண்டு 4-வது சட்டம்) 1986 ஆம் ஆண்டு சனவரி திங்களில் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி நிலத் தின் உரிமையாளர் ஒவ்வொருவருக்கும், அவர், அந்த வட்டத்தில் சொந்தமாக வைத்துள்ள நிலங்களுக்கு நில உரிமைப் பதிவேடு ஒன்றை அவ்வட்டாட்சியர் வழங்குவார். இந்நில உரிமைப் பதிவேடு நிலப்பட்டாதாரர்கள் தங்களிடமுள்ள நில உடைமை களின் நாளது வரையிலான விவரங்களை உள்ளடக்கியுள்ளது. அதில் நிலத்திலுள்ள பதிவு பெற்ற சாகுபடியாளர்களின் பெயர் களும், கூட்டுப் பட்டாதாரரின் விவரமும் அவர்களுக்குரிய பங்கு விதமும் குறிக்கப்படும். மேலும் நில உரிமையாளர் அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி, செலுத்திய நிலவரி மற்றும் நிலத்தி லுள்ள வில்லங்கங்களும் பதியப்படும். இது வருவாய்த் துறை நிர்வாகத்திற்கு ஒரு பயனுள்ள புத்தகமாக உதவும். இச்சட்டத் தின்படி நில விற்பனை கொடை, அடமானம்,, பரிவர்த்தனை மற்றும், செட்டில்மெண்ட் மூலமாக அல்லது வேறு வகையில் ஏதேனுமொரு நிலத்தை உரிமை மாற்றம் செய்வதற்காகத் தாக்கல் செய்யப்படும் பத்திரம் எதையும், அந்நிலம் தொடர்பான நில உரிமைப் பதிவேட்டைத் தாக்கல் செய்தாலன்றி, பத்திரப் பதிவு செய்யும் அலுவலர் பதிவு செய்யக் கூடாது. கடன் வழங்கும் நிறுவனங்கள் கடன் வழங்கக் கூடாது. எல்லாவித நில மாற்றங் களையும் நிலத்தின் மீது பெற்ற கடன்களையும் நில உரிமைப் பதிவேட்டில் பதிவு செய்வதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. இது நில உரிமையை நிலைநாட்டும் வலுவான சாட்சியாக இருக் கும். வீட்டு மனை நிலங்களுக்கும் நில உரிமைப் பதிவேடு வழங்கவும் இச்சட்டம் வகை செய்கிறது.

2. கீழ் நிலை அலுவலர்களுக்கு வழி காட்டுவதற்கான விதிகள் ஒழுங்கு முறைகள் மற்றும் அறிவுரைகள் ஆகியவை அரசால் விரைவில் வெளியிட உள்ளது.



9. மத்திய அரசு துறைகளுக்கு மாநில அரசு நிலங்கள் நில மாற்றம் :

தொழிற்சாலைகள் மற்றும் திட்டப் பணிகளை அமைப்பதற்கு. அதன் வாயிலாக மாநில மற்றும் நாடு தழுவிய பொருளாதார மேம்பாட்டிற்கு வழி செய்யும் வகையில் மத்திய அரசின் பல துறைகளுக்கும், நிறுவனங்களுக்கும், மாநில அரசு நிலங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பொதுவாக நிலக்கிரயம் வசூலித்துக் கொண்டே, மைய அரசுக்கு மேற்படி நில மாற்றங்கள் செய்யப் படுகின்றன. சில இனங்களில் நிலமதிப்பு வசூல் செய்யப்படாமல் நில மாற்றங்கள் செய்யப்படுவதுண்டு.

10. அரசு நிலம் மற்றும் நில வருவாய் உரிமை மாற்றம் செய்யப்படுதல் :

அரசு வருவாய் நிலை ஆணை 24-இன் கீழ் நிலம் மற்றும் நில வருவாய் அல்லது நில வருவாய் மட்டும், தனிப்பட்டவர், நிறுவனம் அல்லது உள்ளாட்சி நிறுவனத்திற்கு பள்ளி, கோவில், சத்திரம், சாலை, மருத்துவமனை, உள்ளாட்சி நிறுவன அலுவலகக் கட்டிடம் போன்ற பொது நோக்குகளுக்கு, சூழ் நிலைக்கேற்றவாறு முழு நிலக்கிரயம் அல்லது சலுகை அடிப் படையிலான நிலக்கிரயம் வசூல் செய்து கொண்டு அல்லது நிலக்கிரயமின்றி உரிமை மாற்றம் செய்கிறது.

3. கீழ்க்கண்ட அலுவலர்களுக்கு அவர்களுக்கு எதிரே குறிப் பிடப்பட்டுள்ள வரம்புக்குள் உரிமை மாற்றம் செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

| அலுவலர். | அரசு சார்புள்ள நிறுவனம். | தனிப்பட்ட அல்லது நிறுவனம் தபர்கள் — நிலக்கிரயத்துடன். | நிலக்கிரயமின்றி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| நில நிர்வாக ஆணையர் | 1,00,000 | 50,000 | 15,000 |
| மாவட்ட ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர். | 25,000 | 15,000 | 5,000 |
| வட்டாட்சியர் ... | 10,000 | 5,000 | 2,000 |

11. வீட்டுமனை வழங்குதல் : [1987 ஏப்ரல் 22

பொருளாதார நிலையில் நலிவுற்றவர்களின் முன்னேற்றத்தை கொள்கையாகக் கொண்டு பொது மக்களுக்கு வீட்டு வசதி அளிக்கும் வகையில் வீடில்லாதவர்களுக்கு நகர்ப்புறங்களிலும் கிராமப் புறங்களிலும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. அரசு புறம்போக்கு நிலங்களில் குடிசைகள் மற்றும் [illegible] மூலம் செய்துள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துவதற்கு திட்டமிட்ட ஊக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது பாரதப் பிரதமர் அவர்களின் 20 அம்ச திட்டம் '9ஏ' யின் கீழ் வருகிறது. ஆண்டு வருமானம் ரூ. 3,500-க்கு குறைவாக இருந்தால் அத்தகைய குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்கும் கீழே உள்ளவர்களாகக் கருதப்பட்டு வீட்டு மனைப் பட்டா பெறுவதற்கு தகுதி உள்ளவர்களாகிறார்கள். போரில் வீர மரணமடைந்த அல்லது இயலாமையிலுள்ள இராணுவ வீரர்களின் குடும்பங்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்கள், முன்னாள் படைவீரர்கள், கொத்தடிமைச் சட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள், பர்மா, ஸ்ரீலங்கா, ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்கள், தங்கக் கட்டுப்பாடு ஆணையினால் வேலையிழந்த பொற்கொல்லர்கள் முதலியவர்களுக்கு முன்னுரிமையுடன் வீட்டு மனை ஒப்படை வழங்கப்பட்டு வருகிறது.

2. சென்னை மாநகரில் சென்னை நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆக்கிரமிப்பையும் அடையாளம் கண்டு கொண்டு சென்னை மாவட்ட ஆட்சியரால் கணக்கெடுக்கப்பட்டு மேம்பாட்டு வேலை குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குடிசை மாற்று வாரியம், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினரை கலந்து அடிப்படை வசதிகளான ரோடு, பொதுக் கழிப்பிடம், வடிகால் வசதி ஆகியவற்றை உலக வங்கித் திட்ட உதவியுடன் செய்து வருகிறது. மேலும், மனைப் பிரிவு வரை படங்களுக்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டு குடிசைவாழ் மக்களுக்கு அவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்திற்கு உரிமைப் பட்டயம் கொடுக்கப்படுகிறது.

3. அண்மையில் அனைத்து நீர் நிலை புறம்போக்கு நிலங்களிலும், மேய்க்கால் புறம்போக்கு நிலங்களிலும் நில ஒப்படை மற்றும் குத்தகை ஆகியவற்றிற்கு தடை வழங்கப்பட்டுள்ளது.

4. வீட்டு மனைப் பட்டா பெற்ற அனைவருக்கும் ஜாதி இன வேறுபாடின்றி தேசிய வங்கிகளில் ஒப்படை செய்த வீட்டு மனையை அடமானம் வைத்து வீடு கட்டுவதற்குத் தேவையான பணத்தை கடனாகப் பெறுவதற்கு அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



5. பெண்களின் முன்னேற்றம் மற்றும் நலத்தை ஊக்குவிக்கும் வகையில் வீட்டு மனை மற்றும் நில ஒப்படை செய்யும்போது கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரின் பெயரிலும் கூட்டுப் பட்டா வழங்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

12. நிலமற்ற ஏழை மக்களுக்குப் பயிரிடத்தக்க நிலம் ஒப்படை செய்தல்

பயிரிடத்தக்க தரிசு நிலங்கள் தகுதி வாய்ந்த நிலமற்ற ஏழை மக்களுக்கு இலவசமாக ஒப்படை செய்யப்படுகின்றன. 5 நபர்களோ அல்லது அதற்குக் குறைவாகவோ உள்ள ஒரு குடும்பத் தலைவருக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக வருமானமிருப்பின் அவர் "ஏழை" எனக் கருதப்படுகிறார். அவ்வாறே ஒரு குடும்பத்தில் 5 நபர்களுக்கு மேல் இருப்பின் அக்குடும்பத்தின் மாத வருமானம் ரூபாய் 250 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் குடும்பத் தலைவர் "ஏழை" என்று கருதப்படுகிறார்.

2. பின்வரும் முன்னுரிமை அடிப்படையில் அரசு நிலங்கள் ஒப்படை செய்யப்படுகின்றன :

(1) போரில் வீர மரணம் அடைந்த அல்லது இயலாமையுற்ற எல்லைப் பாதுகாப்பு படையினர், பிரதேச இராணுவப் படையினர் ஆகியோர் உட்பட முன்னாள் இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு.

(2) நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் :

(2-அ) உரிமையாளராகவோ அல்லது குத்தகைதாரராகவோ நேரடியாகப் பயிரிட்டு வருபவர்களின் நிலங்கள், பொதுக் காரியத்திற்காகக் கையகப்படுத்தப்பட்டதனால் அவர்கள் வைத்திருந்த நிலத்தின் அளவு 3 ஏக்கர் புன்செய் நிலம் அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலத்தை விடக் குறைந்து போயிருந்தால் . அவர்களுக்கும் நிலம் ஒதுக்கப்படுகிறது. அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு ஒதுக்கப்படும் நிலத்தின் மதிப்பு அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

(2-ஆ) 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை ஒழிப்புச் சட்டத்தின் (மத்திய சட்டம் 19/976)ன்படி கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு.

(3) முன்னாள் துப்பாக்கிப் படையினர், அசாம் எல்லைப் பாதுகாப்பு முன்னாள் படையினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர் மற்றும் அவர்களது விதவைகள்.

(4) பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்து தாய் நாட்டிற்குத் திரும்பி வந்தவர்கள்.

(5) தங்கக் கட்டுப்பாடு ஆணையின் காரணமாக பாதிக்கப் பட்ட பொற்கொல்லர்கள்.

(6) ஏனைய நிலமற்ற ஏழைகள்.

(7) விடுவிக்கப்பட்ட சிறைக் கைதிகள்.

3. போரில் வீர மரணமடைந்த அல்லது இயலாமையுற்ற எல்லைப் பாதுகாப்பு படையினர், பிரதேச இராணுவத்தினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்களுக்கு அடுத்த உயர் முன்னுரிமை நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்கள், பழங் குடியினருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

4. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங் களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் உயரளவு பரப்பும் அவர் ஏற்கனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும் சேர்ந்து மொத்தம் 3 ஏக்கர் புன்செய் நிலமாக அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலமாக உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் விலை அதிகமானதால், அங்கு ஒருவருக்கு உயரளவு புன்செய் நிலமாயிருந்தால் ஒருஏக்கர் புன்செய் நிலமோ, நன்செய் நிலமாயிருந்தால் அரை ஏக்கர் நன்செய் நிலமோ ஒப்படை செய்யப்படுகின்றது.

5. நிலங்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்படை செய்யப்படுகிறது. நிலம் ஒப்படை பெற்றவர், ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்குள் நிலத்தில் பயிர் செய்ய வேண்டும். 10 ஆண்டு காலத்திற்குள் அந்நிலத்தை விற்கவோ, அன்றி உரிமை மாற்றம் செய்யவோ கூடாது. ஆனால், பயிரிடுவதற்காக கடன் வாங்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கலாம். நிலம் ஒப்படை பெற்றவரே நிலத்தைப் பயிரிட வேண்டும் அல்லது அவருடைய குடும்ப உறுப்பினர்களாலோ அல்லது கூலி பெறும் தொழிலாளர் களைக் கொண்டோ தான் அந்த நிலத்தைப் பயிரிட வேண்டும். வேறு எவரும் அந்நிலத்தைப் பயிரிடக் கூடாது.

13. நிலச் சீர்திருத்தம் :

1. 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61) 6—4—1960 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. 5 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு உச்சவரம்பு 30 தர ஏக்க ராக நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் 5 தர ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்றும், ஆனால், அதனை சேர்த்து மொத்த உச்சவரம்பு 60 தர ஏக்கருக்கு மேற்படக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டது.



இந்த உச்சவரம்பு குறைக்கப்பட்ட முதன்மைச் சட்டத்தின் (சட்டம் 58/61-ல்) மூலம் அளிக்கப்பட்டிருந்த சில விதிவிலக்கு [illegible] 17/70 ஆம் சட்டத்தினாலும், அடுத்து இயற்றப்பட்ட பிற [illegible] திருத்திய சட்டங்களாலும் நீக்கரவு செய்யப்பட்டன. 5 அல்லது அதற்கும் குறைவான பேர்கள் கொண்ட குடும்பத்திற்கு தற்போது உச்சவரம்பு 15 தர ஏக்கராகும். குடும்பத்தின் மொத்த உச்சவரம்பு தற்போது 30 தர ஏக்கராகும்.

31—12—1986 ஆம் நாள் வரையில் உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் அடைந்த முன்னேற்றம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1. உபரியாக அறிவிக்கப்பட்ட நிகரப் பரப்பு (ஒப்படை நடவடிக்கைகளுக்கு முன்பும், பின்பும் நீக்கரவு செய்யப்பட்ட பரப்பு நீங்களாக) .. .. .. .. | 1,65,787 |
| [illegible]. ஒப்படை நடவடிக்கைக்கு முன்பும், பின்பு மாக நடையாணையின் கீழ் உள்ள பரப்பு .. .. .. .. | 26,804 |
| [illegible]. முடிவு செய்யப்பட்ட நிலப்பரப்பின் விவரம்— | |
| அ. தமிழ்நாடு சர்க்கரை கழகத்திடம் ஒப்படைத்த பரப்பு .. .. | 4,041 |
| ஆ. உபரிநில வினியோக விதிகளின் 13-ம் விதியின்கீழ் பொது நலனுக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட நிலப்பரப்பு .. | 9,967 |
| இ. 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (உ.நி.வி.) விதிகளின்கீழ் ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு.. மற்றும் பயனடைந்தோர் விவரம் :— | |

| | நபர்கள். | ஒப்படை செய்யப்பட்ட பரப்பு. (ஏக்கரில்). |
|---|---|---|
| ஆதிதிராவிடர் .. .. | 42,918 | 47,549 |
| பழங்குடியினர் .. .. | 77 | 114 |
| ஏனையோர் .. .. | 53,955 | 75,816 |
| | 96,950 | 1,23,479 |

[1987 ஏப்ரல் 22

4. ஒப்படை செய்ய வேண்டிய நிலப்பரப்பு 1,487. 1-2-1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்கள் விநியோக) விதிகளின் கீழ் ஏற்கெனவே ஒப்படைதாரர் வசமுள்ள நிலங்கள் உட்பட உயரளவு 3 ஏக்கர் புன்செய் நிலத்தையோ அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலத்தையோ தகுதி வாய்ந்தவர்களுக்கு ஒப்படை செய்யப்படுகின்றது.

2. தமிழ்நாடு நில உச்சவரம்புச் சட்டத்தில் எடுக்கப்பட்ட உபரி நில ஒப்படை பெறுறவருக்கு நிதி உதவி செய்யும் திட்டம்.

2.1. தமிழ்நாடு நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட உபரி நிலங்களை ஒப்படை பெறுவோருக்கு நிதி உதவி அளிக்கும் திட்டத்தை 1975 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு செயல்படுத்த தொடங்கியது. நில ஒப்படை பெறுவோர்களில் பெரும்பான்மையோர் ஆதி திராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த விவசாயத் தொழிலாளர்களாக இருப்பதால் உடனடியாக, விவசாயத்திற்குத் தேவையான உபகரணங்கள் முற்றும் பொருள்கள் வாங்குவதற்கான நிலைமையில் இல்லாதவர்களாக இருக்கக் கூடும் எனக் கருதப்பட்டது. மேலும் பொதுவாக ஒப்படை செய்யப்படும் நிலங்கள் வெற்று நிலங்களாகவும் மற்றும் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலையில் இருப்பதாலும் இந்தத் திட்டம் அமலுக்கு கொண்டு வரப்பட்டது.

2.2. 1979-80 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசின் நிதி உதவி பெறும் இத்திட்டம் முழுமையான மானியம் கொடுக்கக் கூடிய திட்டமாக மாற்றப்பட்டது. ஒரு ஹெக்டேருக்கு ரூ. 1,000 நிதி உதவி அளிக்கப்பட்டது. 1980-81 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மத்திய அரசும் மாநில அரசும் 50 : 50 என்ற விகிதாச்சாரத்தில் செலவுகளை ஏற்றுக் கொள்ளப்படும் திட்டமாக மாற்றப்பட்டது. முன்பு கொடுக்கப்பட்ட நிதி உதவியான ரூபாய் 1,000 1984-85 முதல் ரூ. 2,500 ஆக உயர்த்தப்பட்டது. இந்தத் தொகை முழுவதும் ஒப்படை பெறுபவர்களுக்கு மான்யமாக அளிக்கப்படுகிறது. இம்மான்யத்தை 80 விழுக்காடு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உரமாகவும் மீதம் 20 விழுக்காடு ரொக்கமாகவும் அளிக்கப்படுகிறது.

3. நிதி தேவைகள் குறித்த விளக்கங்கள் :

3.1. 1986-87 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் அரசு ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

4. இதுவரை எய்திய திட்ட இலக்கு :

4.1. வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபாய் 20,00,000-ல் இத்திட்டத்தின் கீழ் 31-12-1986 வரை ரூ. 16,54,000 செலவிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொகை 31-3-1987 தேதிக்குள் செலவிடப்பட்டது.



5. இலக்கு :

5.1. 1986-87 ஆம் நிதி ஆண்டிற்கு உபரி நிலமாக எடுக்கப்பட்டு விநியோகம் செய்யப்படும் நிலத்தின் இலக்கு 2,000 ஏக்கராக நிர்ணயம் செய்யப்பட்டது. இதில் 31-3-1987 வரையிலான காலத்திற்கு 2119 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. பயனடைந்தவர்களின் விவரம் :

| | |
|---|---|
| ஆதி திராவிட இனத்தவர்/பழங்குடியினர் .. | [illegible] |
| ஏனையோர் .. .. .. .. | [illegible] |
| மொத்தம் .. | [illegible] |

5.2. 1981-82 ஆம் ஆண்டிலிருந்து 1985-86 வரையிலான காலத்திற்கு பயனடைந்தவர்களின் விவரம் :

| (1) | 1981-82 (2) | 1982-83 (3) | 1983-84 (4) | 1984-85 (5) | 1985-86 (6) |
|---|---|---|---|---|---|
| 1 ஆதி திராவிட இனத்தவர். | 992 | 1,301 | 829 | 1,761 | 762 |
| 2 பழங்குடியினர். | .. | .. | 3 | .. | 6 |
| 3 மற்றவர்கள். | 1,406 | 1,245 | 1,227 | 1,403 | [illegible] |
| மொத்தம் | 2,398 | 2,546 | 2,059 | 3,164 | [illegible] |

6. 1987-88 நிதி ஆண்டிற்கான இலக்கும் திட்டமும் :

6.1. இந்த நிதி ஆண்டில் மத்திய அரசின் உதவியால் நடத்தப்படும் திட்டத்திற்கு 16 இலட்ச ரூபாயும் மற்றும் சிறப்பு [illegible] திட்டம் 4 இலட்ச ரூபாயும் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

1987-88 நிதி ஆண்டில் தகுதியான நபர்களுக்கு ஒப்படை செய்வதற்கான 2,000 ஏக்கர் நிலம் குறியீடாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

II. தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் சட்டம், 1955.

1.1. இந்த சட்டத்தின்படி எந்த ஒரு பயிரிடும் குத்தகைதாரரும், குத்தகைப் பணத்தை சரிவர செலுத்தாத நிலையிலும், நிலத்திற்கோ அல்லது அதிலுள்ள பயிர்களுக்கோ சேதம் விளைவிக்கின்ற செயல்கள் எதுவும் செய்யாத பட்சத்திலும், நிலத்தை சாகுபடி செய்யாமல் இருந்தாலும், விவசாயமற்ற, மற்ற காரியங்களுக்கு நிலத்தைப் பயன்படுத்தினாலும், நில உரிமையாளருக்கு நிலத்தின் உரிமையை எந்த ஒரு பட்சத்திலும் மறுக்கும் வகையில் செயல் புரிந்தாலும் தவிர நிலத்திலிருந்து வெளியேற்றப்படமாட்டார். நில உடைமையாளர் யாவரும் (முன்னாள் ஆயுதப் படையினரைத் தவிர) மேலே குறிப்பிட்ட காரணத்தின்றி மற்ற காரணங்களுக்காக குத்தகைதாரரிடமிருந்து நிலம் மீளப் பெறமுடியாது. நில உரிமையாளருக்கும், குத்தகைதாரர்களுக்கும் ஏற்படக்கூடிய வழக்குகள் வருவாய் நீதி மன்றங்களால் தீர்த்து வைக்கப்படும்.

2. தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956.

2.1. இச்சட்டத்தின்படி குத்தகைதாரர்களால் நிலச்சொந்தக்காரர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய குத்தகைப் பணம் தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களாக இருந்தாலும் அல்லது பொதுப் பொறுப்புக் கழகங்களாக இருந்தாலும் வருடத்தில் மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு அளிக்கப்பட வேண்டும். அரசுக்கு செலுத்த வேண்டிய நிலவரி மற்றும் நிலம் சம்பந்தப்பட்ட செலவினங்களை நிலத்தின் உரிமையாளர் செலுத்துவார். ஆனால், விவசாயத்திற்கான செலவு முழுவதையும் பயிரிடும் குத்தகைதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுபற்றி வழக்குகள் இதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள வருவாய் நீதி மன்றங்களால் தீர்த்து வைக்கப்படும்.

3. 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு (பொது நிறுவனங்கள் வேளாண்மை நிலங்களின் நிர்வாகம் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 57/61.

3.1. தமிழ்நாடு பொதுப் பொறுப்புக் கழகங்கள் தன்னுடைய நேரிடையான விவசாயத்திற்கு (அல்லது) குத்தகைக்கு எடுத்திருக்கக் கூடிய நிலங்களைப் பயிரிடுதல் மற்றும் அது சம்பந்தமான விவசாயக் காரியங்களை முறைப்படுத்துவதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

3.2. எந்த ஒரு பொதுப் பொறுப்புக் கழகமும் தன்னுடைய சொந்த சாகுபடிக்கு 20 தர ஏக்கர் வரை நிலத்தினை வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேலுள்ள நிலத்தினை உண்மையான பயிரிடும் குத்தகைதாரர்களுக்குக் குத்தகைக்கு விட வேண்டும்.



4. தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டம், 1969.

தமிழ்நாட்டில் நிலச் சொந்தக்காரர்களிடம் அல்லது பொதுப் பொறுப்புக் கழக நிலங்களிடம் உள்ள விவசாய நிலங்களைப் பயிரிடும் குத்தகைதாரர்கள், தங்களது பெயரினை பதிவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டமாகும். இச்சட்டத்தின்படி வட்டாட்சியர், இதற்கான பதிவுருக்களை வைத்துக் கொள்ளக் கூடிய அதிகாரியாவார். இச்சட்டத்தின் பிரிவு 5 (ஏ)இன்படி வட்டாட்சியருக்கு உதவி புரிவதற்காக அலுவல் சார்பற்ற குழு ஒன்று அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் நிலமற்ற ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த ஒருவர், பயிரிடும் குத்தகைதாரர் ஒருவர் மற்றும் சமூக நல ஊழியர்கள் மூவர் உறுப்பினர்களாக இருப்பார். இந்தக் குழு தற்சமயம் 57 வட்டங்களில் இயங்கிக் கொண்டிருக்கிறது. கடந்த 28-2-1987 வரை தமிழகத்தில் 4,39,603 நபர்கள் பயிரிடும் குத்தகைதாரர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் வசமுள்ள நிலம் 6,36,739 ஏக்கர்களாகும்,

| | |
|---|---|
| ஆதி திராவிட இனத்தவர் .. .. | 1,27,750 |
| பழங்குடியினர் .. .. | 718 |
| மற்றவர்கள் .. .. .. | 3,11,135 |
| மொத்தம் ... | 4,39,603 |

5. தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், 1969.

5.1. இச்சட்டம், தமிழ்நாட்டில் விவசாயக் கூலிகளுக்கு வழங்கப்படும் கூலியை முறைப்படுத்துவதற்கும் அதுபற்றி விசாரித்து ஆவன செய்வதற்கும் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம் நெல் பயிரிடும் நிலங்களுக்கு மட்டும் பொருந்தும். இருக்கு தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட 11 வட்டங்களில் இச்சட்டம் அமுல்படுத்தப்படுகிறது:—

1. மன்னார்குடி
2. திருத்துறைப்பூண்டி
3. மயிலாடுதுறை
4. சீர்காழி
5. நாகப்பட்டினம்
6. நன்னிலம்
7. திருவாரூர்
8. வேதாரண்யம்
9. நீடாமங்கலம்
10. தரங்கம்பாடி
11. குடவாசல்

[1987 ஏப்ரல் 22

5.2. தற்போதைய திருத்தத்தின்படி கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் உழவுத் தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க ஊதியங்கள் குறித்த விவரம் வருமாறு :—

உரிய வயது வந்தோர் :

| | |
|---|---|
| அ. உழுதல், விதைத்தல், நாற்று பறித்தல், செப்பனிடுதல், கத்தரித்து ஒழுங்குபடுத்துதல், நிலங்களையும், வாய்க்கால்களையும் பராமரித்தல், விதைப்பதற்கும், நடவு நடுவுவதற்கும் நிலத்தைத் தயார் செய்தல். | 7 லிட்டர் நெல்லுடன் ரூ. 2.80 அல்லது ரூ. 11.00 நாளொன்றுக்கு விதம். |
| ஆ. நாற்று நடுதல், களையெடுத்தல் அல்லது திட்டமிடப்படாத ஏனைய வேளாண்மை தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு. | 6 லிட்டர் நெல்லுடன் ரூ. 1.80 அல்லது நாளொன்றுக்கு ரூ. 8 விதம். |
| இ. உரிய வயதடையாதவர்கள்— அனைத்து வகை வேளாண்மைத் தொழில்களுக்கும். | 4 லிட்டர் நெல்லுடன் ரூ. 1.50 அல்லது நாளொன்றுக்கு ரூ. 6 விதம். |

5.3. உழுதல் தவிர ஏனைய வேளாண்மை பணிகளுக்குரிய வேலை நேரம் நாளொன்றுக்கு 7 மணி நேரமாகும். உழவுக்கு மட்டும்தான் நாள் ஒன்றுக்கு 5 மணி நேரமாகும்.

6. தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை அளித்தல்) சட்டம், 1971.

6.1. இச்சட்டம், குடியிருப்புகள் அனுபோகதாரர்களுக்கு உடைமை அளிக்கிறது. அதன்படி 19–6–1971 அன்று குத்தகைதாரர் அல்லது உரிமைதாரர் என்ற முறையில் குடியிருப்பு மனையை அனுபோகத்தில் வைத்திருந்த உழவர் ஒருவர் அல்லது உழவுத் தொழிலாளர் ஒருவர் இச்சட்டம் அமுலுக்கு வந்த நாளிலிருந்து உரிமையாளராக இருப்பார். அக்குடியிருப்பு வில்லங்கம் எதுவுமின்றி அவரிடமே நிலைபெற்று இருக்கும்.

6.2. 31–12–1986 வரை வழங்கப்பட்டுள்ள குடியிருப்பு பட்டாக்கள் விவரம் பின்வருமாறு :

| | |
|---|---|
| ஆதி திராவிடர் .. .. .. .. | 98,968 |
| பழங்குடியினர் .. .. .. .. | 244 |
| பிற்பட்டோர் .. .. .. .. | 48,910 |
| ஏனையோர் .. .. .. .. | 31,968 |
| மொத்தம் .. | 1,80,090 |



1987 ஏப்ரல் 22]

1,082 இனங்கள் விசாரணையில் உள்ளன. 477 வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் உள்ளன.

7. தமிழ்நாடு கிராம கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டம், 1976 (சட்டம் 38/76).

7.1. குத்தகைதாரர் அல்லது உரிமைதாரர் என்ற முறையில் 1–7–1975 அன்று தமிழ்நாட்டில் குடியிருப்புக்களை அனுபோகத்தில் வைத்துள்ள கிராமப்புற கைவினைஞர்களுக்கு உடைமை உரிமை வழங்க இச்சட்டம் வகை செய்கிறது.

7.2. 31–12–1986 ஆம் நாள் வரையில் வழங்கப்பட்டுள்ள குடியிருப்புப் பட்டாக்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| ஆதி திராவிடர் .. .. .. | 37 |
| பழங்குடியினர் .. .. .. .. | 15 |
| பிற்பட்டோர் .. .. .. .. | 230 |
| ஏனையோர் .. .. .. .. | 116 |
| மொத்தம் .. | 398 |

7.3. 414 இனங்கள் விசாரணையில் உள்ளன.

14. நகர்ப்புற நில உச்சவரம்பு.

கிராமப்புறங்களிலிருந்து பெருமளவில் மக்கள் வெளியேறி வேலை மற்றும் இதர வசதிகளைத் தேடி நகர்ப்புறப் பகுதிகளுக்கு வந்துள்ளதால், நகர்ப்புற பகுதிகளில் உள்ள நிலங்களுக்குத் தேவை அதிகமாக உள்ளது. எனவே, அரிதாகக் கிடைக்கும் நகர்ப்பகுதிகளைப் பயன்படுத்துவதை முறைப்படுத்தி, முறையாக மேம்படுத்துவது, ஒரு சிலரிடமே நிலங்கள் குவிந்து, அதனை அதிக விலைக்கு விற்பது போன்றவற்றைத் தடுக்கும் பொருட்டு, தனிப்பட்ட ஒருவர் வைத்துள்ள நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்க லாம் என்றும், நியாயமான அளவிற்கு அதிகமாக நகர்ப்பகுதி நிலங்களைச் சொந்தமாக வைத்திருப்பதைத் தடை செய்யலாம் என்றும் கருதப்பட்டது. இந்நோக்கத்துடன் தமிழ்நாடு நகர்ப் புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1976 (குடியரசுத் தலைவர் சட்டம் 34/1976) இயற்றப்பட்டது. அது 3–8–1976 முதல் அமுலாக்கப்பட்டது.

2. இச்சட்டத்தின் மூன்று முக்கிய அம்சங்கள் வருமாறு :—

(1) தனிப்பட்ட ஒருவர், ஒரு குடும்பம், ஒரு நிறுவனம், ஒரு கம்பெனி அல்லது ஒரு குழு அல்லது தனிப்பட்டவர்கள் சேர்ந்த ஒரு சங்கம் வைத்திருக்கின்ற காலி நிலத்தின் மீது உச்சவரம்பு விதித்தல்.

(2) எதிர்காலத்தில் கட்டப்படும் விடுகளின் பரப்புக்கு உச்சவரம்பு விதித்தல்.

(3) நகர்ப்பகுதி சொத்தை உரிமை மாற்றம் செய்து கொடுப்பதை முறைப்படுத்தல் ஆகியவையாகும்.

3. இச்சட்டத்தைச் செயலாக்குவதில் பொது மக்கள் அடைந்த இடர்ப்பாடுகள் குறித்து எண்ணற்ற முறையீடுகளும், பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட செய்திகளும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இவற்றைக் கருத்திற் கொண்டு, குடியரசுத் தலைவரின் 1976 ஆம் ஆண்டு 34 ஆம் சட்டத்தை ரத்து செய்து, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, நகர்ப் பகுதி நில (உச்சவரம்பு கட்டுதல்—முறைப்படுத்துதல்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 24/1978) அரசு இயற்றியது.

4. தமிழ்நாட்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டமும் 3-8-1976 முதல் சென்ற காலம் உள்பட அமுலுக்கு வந்தது. (Retrospective effect)

5. இச்சட்டம் பின்வரும் நகர் கூட்டுப் பகுதிகளில் செயலில் உள்ளது :—

நகர் கூட்டுப் பகுதிகளின் பெயர் —

(1) சென்னை

(2) மதுரை

(3) கோயம்புத்தூர்

(4) திருச்சிராப்பள்ளி

(5) சேலம்

(6) திருநெல்வேலி

6. கீழே குறிப்பிட்டுள்ள நகர் கூட்டுப்பகுதி ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட ஒருவரோ, ஒரு குடும்பமோ, ஒரு தொழில் நிறுவனமோ நிலம் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்ட உச்சவரம்பின் விவரம் வருமாறு :—

தமிழ்நாடு சட்டம் 24/1978.

| நகர் கூட்டுப் பகுதி. (1) | வகைப் பாடு. (2) | தனிப்பட்ட ஒருவர். (3) | ஒரு குடும்பம். (4) | தொழில் நிறுவனம். (5) |
|---|---|---|---|---|
| | | ச.மீ. | ச.மீ. | ச.மீ. |
| சென்னை .. | I | 500 | 2,000 | 2,000 |
| மதுரை .. | | | | |
| கோயம்புத்தூர் | II | 1,500 | 3,000 | 3,000 |
| திருச்சிராப்பள்ளி | | | | |
| சேலம் | | | | |
| திருநெல்வேலி | III | 2,000 | 4,000 | 4,000 |





7. இச்சட்டம் செயலுக்கு வந்த நாளன்று உச்சவரம்புக்கு மிகையாக காலி நிலம் வைத்துள்ள நபர் எவரும் அவ்வாறு மிகையாக வைத்துள்ள நிலம் குறித்த விவர அறிக்கை ஒன்றை மேற்படி சட்டப் பிரிவு 7(1)-ன்கீழ் அப்பகுதியின் மீது அதிகார வரம்பினைக் கொண்டுள்ள தகுதிவாய்ந்த அதிகாரியிடம் தாக்கல் செய்ய வேண்டும். தகுதிவாய்ந்த அதிகாரி அதனை பரிசீலனை செய்து சட்டப்பிரிவு 9–11-ன் கிழ் நடவடிக்கை எடுத்து, அறிக்கை தாக்கல் செய்த மனுதாரரிடம் உள்ள மிகை வெற்று நிலத்தைக் கணக்கிட்டு அதனை கையகப்படுத்துவார்க்கு தகுதி வாய்ந்த அதிகாரியின் உத்தரவினால் அவர் பாதிக்கப்பட்டிருந்தால், அவர் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், நிலச் சீர்திருத்தத்துறை அவர்களுக்கு சட்டப்பிரிவு 33-ன் கீழ் மேல் முறையீடு மனு தாக்கல் செய்யலாம். நிலச்சீர்திருத்த ஆணையரின் முடிவு இறுதியானதாகும்.

8. மத்திய, மாநில அரசுகள், அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், அட்டவணையிடப்பட்ட வங்கிகள், வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், சமய அறக்கட்டளை நிறுவனங்கள் முதலியவை வைத்துள்ள நிலங்களுக்கு இச்சட்டத்தின் விதித்துறைகள் பொருந்தாது.

9. தனி நபரோ, நிலையங்களோ அல்லது தொழில் நிறுவனங்களோ அவர்களிடம் உள்ள மிகை வெற்று நிலங்களை பொதுக் காரியங்களுக்கு உபயோகப்படுத்துவதாக இருந்தால், அவர்கள் சட்டப்பிரிவு 21 (1) (ஏ)–இன் கீழ் விலக்கு கோரலாம். அதே போல் தனிநபருக்கு ஏற்படுகின்ற எதிர்பாராத இடர்களின் அடிப்படையிலும், அரசு, சட்டப்பிரிவு 21 (1) (பி)-ன் கீழ் விலக்களிக்கிறது.

10. மேற்சொன்ன சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட மிகையான காலி நிலங்கள், மேற்சொன்ன சட்டத்தின் 24 ஆம் பிரிவின் விதித்துறைகள், மேற்சொன்ன சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் 23 ஆம் விதி ஆகியவற்றின்படி தொழில் விரிவாக்கம் பொருட்டு தனி நபருக்கோ, தொழிற்சாலையில் வேலை பார்ப்போருக்கு வீடு கட்டும் பொருட்டோ, மேற்படி நிலங்களை நன்மை அளிக்கும் பொருட்டு யாருக்கும் அரசு ஒதுக்கீடு செய்யலாம். அரசு கீழ்க்கண்ட முதன்மையில் ஒதுக்கீடு செய்கிறது :—

(1) மாநில அரசுத் துறைகள்.

(2) மாநில அரசின் கீழ் உள்ள நகராட்சி மன்றங்கள், மாநகராட்சிகள் மற்றும் பொது நிறுவனங்கள்.

(3) மத்திய அரசுத் துறைகள்.

(4) மத்திய அரசின் கீழ் உள்ள கூட்டு நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்கள்.

(5) வீட்டு வசதி நிறுவனங்கள்.

(6) தொழிற்சாலைகள்.

(7) தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளிகளுக்கு வீடு கட்டுவதற்கு.

(8) பிற நிறுவனங்கள்/நிலையங்கள்.

(9) தனியார்.

11. மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட காலி நிலங்களில் 31–12–1986 வரை 121 ஹெக்டேர், 38 ஏர், 65 சதுர மீட்டர் நிலத்தை, அரசுத் துறைகள், அரசுக் கழகங்கள், வீட்டுவசதி வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. 323—0.4.25 ச.மீ. நிலங்கள் ஒதுக்கீடு செய்வதற்கு தயார் நிலையில் உள்ளன.

12. மிகை வெற்று நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான செலவுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 1986–87-க்கு ரூ. 5,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது. 31–12–1986 வரை ரூ. 2,69,301.30 செலவழிக்கப்பட்டுள்ளது. இதனை நிலத்தை ஒதுக்கப்பட்டவர்களிடமிருந்து நிலம் ஒதுக்கப்பட்டவுடன் வசூலிக்கப்படும்.

15. நகர்ப்புற நிலவரி.

1966 ஆம் ஆண்டையத் தமிழ்நாட்டு நகரக நிலவரிச் சட்டத்தைத் திருத்துவதை எதிர்நோக்கி, அரசானது நகரக நிலவரி விதிப்பு தொடர்பாக கீழ்க்கண்ட சலுகைகளை அளித்துள்ளது :—

(க) அரசுக்கு அளிக்கப்படும் விண்ணப்பத்தின்பேரில், கல்வி, சமய, அறநிலையங்கள், மக்கட் பணியாற்றும் நிலையங்கள் ஆகியவற்றின் வெற்று நிலங்களுக்கும் வருமானம் தரும் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ள நிலங்களுக்கும் வரிவிதிப்பிலிருந்து முழு விலக்களிக்கப்படுகிறது. ஆயினும், கட்டடத்திலிருந்து பெறப்படும் வருமானத்தின் பெரும்பகுதியானது நிலையத்தின் நோக்கத்திற்காகப் பயன்பட்டால்தான் இவ்விலக்களிக்கப்படும்.

(ங) சமுதாய நலமன்றங்கள், மனமகிழ் மன்றங்கள், படப்பிடிப்பு நிலையங்கள், இசை, நாடகம், இதர கலை நிகழ்ச்சிகளை நடத்தும் சபைகள் போன்றவற்றிற்குச் சொந்தமான வெற்று நிலங்கள் மற்றும் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ள நிலங்களுக்கும் 50 விழுக்காடு வரிச்சலுகை அளிக்கப்படுகிறது.

(ச) 1977 ஆம் ஆண்டையத் தமிழ்நாட்டுக் குடிசைக் குடியிருப்பு ஒழிப்புச் சட்டத்தின் பிரிவு 3 (பி) இன் கீழ் குடிசை குடியிருப்பாக அறிவிக்கப்பட்ட எல்லா நிலங்களுக்கும், நகர்ப்புற நிலவரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.





(ஞ) அனைத்து திரைப்பட அரங்குகளுக்கும் விதிக்கப்படும் நகர்ப்புற நிலவரியிலிருந்து 10 விழுக்காடு சலுகை அளிக்கப்படுகிறது.

(ட) கட்டடத்தின் உரிமையாளரே தன்னுடையக் கட்டடம் முழுவதிலும் தானே குடியிருப்பின், அப்படிப்பட்டக் கட்டடத்திற்கு 50 விழுக்காடு வரிச்சலுகை அளிக்கப்படுகிறது.

2. (க) சென்னை உயர்முறை மன்றம், 4397/78 மற்றும் 4439/78 ஆம் எண் கொண்ட முறைமைப் பேராணை மனுக்களின்மீது அளித்துள்ள தீர்ப்பில், ஒரு நகரகப் பகுதியில் ஒரு நில உடமையாளருக்குச் சொந்தமான அனைத்து நிலங்களையும் ஒட்டு மொத்தமாகச் சேர்த்து அந்நிலங்களின் மீது படிநிலை முறையில் விதிக்கப்படும் நகர்ப்புற நிலவரி சொத்தின் மீது போடப்படும் சொத்து வரி என்றுதான் கருதப்படும் என்றும், இதனை நிலத்தின்மீது போடப்படும் வரி என்ற நோக்கில் எடுத்துக்கொள்ள இயலாது என்றும், இம்மாதிரியான வரி விதிப்பு மாநில அரசின் அதிகாரத்தின் எல்லைக்குள் இல்லை என்றும், எனவே இச்சட்டத்தின் இது தொடர்பான 6-பி பிரிவு செல்லத் தக்கதன்று எனவும் தீர்ப்பளித்துள்ளது.

(ங) எனவே, ஒரு நகரகப் பகுதியில் ஒரு நில உடைமைதாரருக்கு ஒரு புலத்தில் மட்டுமோ அல்லது ஒரு உட்பிரிவில் மட்டுமோ உள்ள தனி நிலத்திற்கு மட்டும் ஒருங்கிணைத்தல் குறித்த கோட்பாடின்றி வரிவிதிப்பு செய்து தண்டல் செய்யும் படி அனைத்து வரிவிதிப்பு அலுவலர்களுக்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

16. வேளாண்மை வருமான வரி :

தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச்சட்டம், 1955-ம் ஆண்டு முதல் செயலிலுள்ளது. காப்பி, தேயிலை, ரப்பர், ஏலக்காய், சின்கோனா போன்ற மலைத்தோட்டப் பயிர்கள் மீதுதான் முதற்கண் வேளாண்மை வருமானவரி விதிக்கப்பட்டது. மலைத்தோட்டப் பயிர் அல்லாத பயிர்களுக்கும் வேளாண்மை வருமான வரி விதிப்பதற்கு, 1958 ஆம் ஆண்டு திருத்தச்சட்டம் வகை செய்கிறது. முந்தைய ஆண்டின் (கணக்கு ஆண்டு) மொத்த வேளாண்மை வருமானத்தின் மீது ஒவ்வொரு நிதியாண்டிற்கும் வரி விதிக்கப்படுகிறது.

2. வருமான அடிப்படையிலும், நில அளவு அடிப்படையிலும் வேளாண்மை வருமான வரி விதிக்கப்படுகிறது.

[1987 எப்ரல் 22

(i) வருமான அடிப்படையிலான வரி விதம்.

வேளாண்மை வருமானம் ரூ. 8,000 முதல் ரூ. 1,00,00 வரையில் இருக்கும்போது, வரி விதம் ரூபாய்க்கு 25 காசி லிருந்து 60 காசு வரையில் விதிக்கப்படுகிறது. வேளாண்மை வருமானம் ஓர் இலட்சம் ரூபாய்க்கு மேற்படுமானால், வரி விதம் ரூபாய்க்கு 65 காசு விதிக்கப்படுகிறது.

மொத்த வேளாண்மை வருமானம் ரூ 10,000-க்கு மேற்படாமல் இருக்குமானால், வேளாண்மை வருமானம் வரி விதிக்கப்படுவதில்லை ஆயினும், மொத்த வேளாண்மை வருமானம் ரூ. 10,000-க்கு மேற்பட்டு, ஆனால் ரூ. 11,100-க்கு மேற்படாமல் இருக்குமானால், அவ்வருமானத்திற்கு விதிக்கத் தக்க வேளாண்மை வருமான வரி, மொத்த வேளாண்மை வருமானத் தொகை ரூ. 10,000-க்கு மேற்பட்டு எவ்வளவு ரூபாய் உள்ளதோ அத்தொகையில் 70 சதவீதத்திற்கு மேற் படக்கூடாது.

ஒவ்வொரு கம்பெனியைப் பொருத்தவரையில், மொத்த வேளாண்மை வருமானம் முழுவதற்கும் உயரளவு விதத்தில் வேளாண்மை வருமான வரி விதிக்கப்பட வேண்டும்.

(ii) நில அளவு அடிப்படையிலான வரிவிதம் (இணக்க வரிவிதங்கள்)

முதல் இருபது ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு வரி விதிக்கப் படுவதில்லை 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேற்பட்டு 80 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையிலான நிலங்களுக்கு ரூ. 15 முதல் ரூ. 80 வரையில் வெவ்வேறு விதத்தில் வரி விதிக்கப்படுகிறது. 80 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு அதிகமாக உள்ள நிலத்திற்கு, 1 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கான வரி விதம் ரூ. 100 ஆகும். மலைத் தோட்டப் பயிர்களைப் பொறுத்த வரையில், 100 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையில் இணக்க வரி விதம் உள்ளது. ஆனால், மலைத் தோட்டப் பயிர்கள் அல்லாத பயிர்களுக்கு அத்தகைய வரம்பு ஏதும் இல்லை. பயிரிடப்பட்டுள்ள பயிர் களின் தன்மையின் அடிப்படையில், ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்கிடப்படுகிறது. ஒவ்வொரு கம்பெனியைப் பொறுத்த வரையில், மொத்தம் எந்த அளவு நிலப்பரப்பிற்கு இணக்க வரி விதத்தில் வரித் தொகையைச் செலுத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த நிலப்பரப்பு அக்கம்பெனி கும் உயரளவு விதத்தில் ஒட்டு மொத்தமாக வரி செலுத்தத் தக்கதாகும.



1987 எப்ரல் 22]

3. 1981–82 முதல் 1986–87 வரையிலான வரி விதிப்பு ஆண்டுகளுக்கு வருமானத்தின் அடிப்படையிலும், இணக்க வரியின் கீழும் வரி விதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை வருமாறு :

| ஆண்டு. | மலைத் தோட்டம். வருமான அடிப்படை. | மலைத் தோட்டம். இணக்க வரிவித அடிப்படை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1981–82 .. .. | 1,020 | 3,550 | 4,570 |
| 1982–83 .. .. | 1,000 | 3,660 | 4,660 |
| 1983–84 .. .. | 920 | 3,714 | 4,634 |
| 1984–85 .. .. | 913 | 3,705 | 4,618 |
| 1985–86 .. .. | 878 | 3,798 | 4,676 |
| 1986–87 .. .. | 809 | 3,824 | 4,633 |

31-12-86 வரை

| ஆண்டு. | மலைத் தோட்டமல்லாதவை. வருமான அடிப்படை | மலைத் தோட்டமல்லாதவை. இணக்க வரி வித அடிப்படை | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1981–82 .. .. | 3,992 | 28,621 | 32,613 |
| 1982–83 .. .. | 3,901 | 26,360 | 30,261 |
| 1983–84 .. .. | 3,814 | 26,216 | 30,030 |
| 1984–85 .. .. | 3,736 | 23,824 | 27,560 |
| 1985–86 .. .. | 3,678 | 24,758 | 28,436 |
| 1986–87 .. .. | 3,643 | 25,732 | 29,375 |

31-12-86 வரை

4. வேளாண்மை வருமான வரியின் மூலம் கிடைக்கும் வருவாயில் பெருமளவு, மலைத் தோட்டப் பயிர்களிலிருந்து கிடைக்கிறது. இந்த வருவாய் வாயிலின் மொத்த வருவாயில் 90 சதவீதத்திற்கு மேல் மலைத் தோட்டப் பயிர்களிலிருந்து கிடைக்கிறது.

5. இத்துறைக்குப் புதிதாக வந்த அனைத்து வேளாண்மை வருமான வரி உதவி ஆணையர்களுக்கும், வேளாண்மை வருமான வரி அதிகாரிகளுக்கும், விரிவான பயிற்சித் திட்டம் ஒன்று ஆண்டுதோறும் தயாரிக்கப்படுகிறது. வரித் தொடர்பான பல்வேறு சட்டங்கள், கணக்குகள் குறித்து 9 நாட்களுக்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு, பல்வேறு துறைகளில் வல்லுநர்கள் இப்பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றனர். ஏனைய உதவி ஆணையாளர்களுக்கும், வேளாண்மை வருமான வரி அதிகாரிகளுக்கும் நினைவூட்டுப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி, நமது மாநிலத்தில் வேளாண்மை வருமான வரி நிருவாகத்தில் இந்த அதிகாரிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

17. மரங்களுக்கு பட்டா வழங்கும் திட்டம் :

இம்மாநிலத்தில் மரங்களுக்கு பட்டா வழங்கும் திட்டம் செயலிலுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பட்டா வேண்டி விண்ணப்பிப்பதன் பேரில், அரசு நிலங்களில் உள்ள குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பழ மரங்களின் விளை பொருள்களை அனுபவிக்கவும் இலைகளைச் சேகரிக்கவும் மட்டும் அனுமதிக்கின்ற வகையில் தகுதியான நபர்களுக்கு உரிமையளித்து மரப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் நிலத்தின் மீதுள்ள உரிமை தொடர்ந்து அரசிடம் நிலை பெற்றிருக்கும். பட்டா, (உயிருள்ள) பச்சை மரங்கள் குறித்து எவ்வித உரிமையையும் அளிக்காது ; இதுவரை இத்திட்டத்தின் கீழ் 22,22,314 மரங்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

2. சமுதாயப் புறம்போக்கு நிலங்கள், சாலை ஓரங்கள், கால் வாய்கள், ஏரிகள் ஆகியவற்றிலும், ஏனைய சில வகைப்பாடுகளிலும், விறகு மரங்கள் வளர்ப்பதற்காக, பிரதமரின் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், பொருளாதார வகையில் நலிவுற்ற ஏழை மக்களுக்கும் மரப் பட்டாக்கள் வழங்குமாறு அரசு 1986 ஆம் ஆண்டில் ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்டவர்கள் அந்த நிலங்களில் விறகு மரங்களை வளர்த்து அவை முதிர்வடைந்தவுடன், விறகு மரங்களை வெட்டி, அவர்கள் விருப்பத்திற்கேற்ப விற்று, விளைபொருள்களைச் சேகரித்துக் கொள்ளலாம். ஆனால் நிலம் அரசிடம் நிலை பெற்றிருக்கும் நிலத்தின் மீதான உடைமையுரிமை எக்காரணத்தினாலும் மாற்றத்தக்கதல்ல.



3. 1986-87 ஆம் ஆண்டுக்கு நம்முடைய மாநிலத்தில் 7,500 மரப் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டுமென்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. வளர்ச்சி வட்டாரம் ஒன்றிற்கு 20 மரப் பட்டாக்கள் என்ற விகிதத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள வளர்ச்சி வட்டாரத்தின் எண்ணிக்கைக்கேற்றவாறு இந்த இலக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடையே பிரித்தளிக்கப்பட்டுள்ளது.

18. தரிசு நிலங்களில் காடு வளர்ப்பு :

சுற்றுப் புறச் சூழல்களைப் பாதுகாக்கும் நோக்குடன் மேதகு இந்தியப் பிரதமர் தொடங்கிய 10 ஆண்டுகளில் பெருமளவில் காடு வளர்க்கும் திட்டத்தை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதிக்குள், 5 இலட்சம் எக்டேர் பரப்பளவு நிலத்தில் காடு வளர்க்கக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரசு மட்டுமின்றி சமுதாயத்தில் பல்வேறு பிரிவைச் சேர்ந்தவர்களாலும் பெருமளவில் மரங்கள் நடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து அரசு நிலங்கள் மற்றும் தனியார் நிலங்களைக் கண்டறிவதே இத்திட்டத்திற்காக முதற்கண் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியாகும். இத்திட்டத்திற்காக அரசு மற்றும் தனியார் நிலங்களை கண்டறிய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அரசின் பல்வேறு துறைகள், ஊராட்சிகள் ஏனைய முகவர் அமைப்புகள் ஆகியவற்றிடம் உள்ள பயிரிடப்படாத தரிசு நிலங்களை கண்டறிவதற்கும், அத்தகைய நிலங்கள் எவ்வளவு பரப்பளவு உள்ளன என்பதை அறியவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில், பழங்கள், விறகு, மரம், தீவனம், உரம், நார் ஆகியவற்றை அளிக்கக்கூடிய உள்ளூரில் வளரும் மரங்களும் சிறுவெட்டு மரங்களும், நடப்படும். மருத்துவத் தன்மை வாய்ந்த ஏனைய நன்மை பயக்கக்கூடிய வகையான மரங்கள், மலைப் பகுதிகளில் வளர்க்கப்படும். அத்தகைய மரங்களை வருவாய் நிலை ஆணையின் கீழ் 2-சி மரப் பட்டாக்களைச் சமுதாயத்தின் வறிய நிலையிலுள்ள மக்களுக்குக் குறிப்பாக மகளிருக்கு ஒப்படை செய்யப்படும். அவ்வாறு செய்வதன் மூலம் அம்மரங்களினால் கிடைக்கும் பலனைக் கொண்டு அவர்கள் தங்களுடைய வருவாயை உயர்த்திக் கொள்ள முடியும். சென்னை மாநகரிலும், கிராமப் பகுதிகளிலும் மரம் நடும் பணி பல இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த (19-11-1986) தேசிய சுற்றுச் சூழல் பாதுகாப்பு நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மரம் நடு விழாவை தொடங்கி வைத்தார்.

3. மரம் நடும் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பது குறித்து கண்டறிவதற்கான ஆய்வுப்பணியை சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையாளர் தலைமையிலான குழு பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் மேற்கொண்டுள்ளது.

4. கிராம வளர்ச்சித் துறையின் 29-9-1986 ஆம் நாளிட்ட 760 ஆம் எண் அரசாணையின்படி அரசுத் தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ் காடுகள் வளர்ப்பு தரிசு நில மேம்பாடு தொடர்பான மாநில அளவிலான குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

5. செயற்கைக் கோளைப் பயன்படுத்தித் தரிசு நிலங்களைக் கண்டறிதல் தொடர்பான திட்ட அறிக்கையின்படி அண்ணா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 'தொலையுணர்வு நிறுவனம்' இந்திய அரசு, தேசிய தரிசு நில மேம்பாட்டு வாரியம் ஆகியவற்றின் நிதி உதவி பெற்று தயாரித்து வருகிறது. தருமபுரி, சேலம் மாவட்டங்களில் தரிசு நில வரைபடத் தயாரிப்புப் பணி முடிவடைந்து விட்டது. மதுரை, அண்ணா, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் தரிசு நிலங்கள் பற்றிய வரை படங்கள் தயாரிப்புப் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

19. வெள்ளம் மற்றும் வறட்சி :

1. 1985 ஆம் ஆண்டு வெள்ளம்

1.1. 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தமிழ் நாட்டில் பரவலாக மழை பெய்து, சென்னை, செங்கல்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சாவூர் மாவட்டங்கள் மற்றும் வட ஆற்காடு மாவட்டம் பகுதியாக பாதிக்கப்பட்டன. மத்திய நிதியுதவி கோருவதற்கு முன்பாகவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிசை மானியம், அரிசி, வேட்டி, புடவைகள் முதலியவற்றை மாநில அரசே வழங்கியது. அதே போல், பாதிக்கப்பட்ட சாலைகள் நீர் நிலையங்கள் சீர்படுத்த, மாநில அரசு ரூ. 24.65 கோடிக்கு 21-11-1985 அன்றே ஒப்புதல் அளித்தது. சேத மதிப்பை கணக்கிட்டு, ரூ. 187.33 கோடி நிதியுதவி கேட்டு ஒரு விவர அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய நிபுணர் குழு தமிழ் நாட்டில் வெள்ள சேதத்தைக் கணக்கிட 22-11-1985 முதல் 25-11-1985 வரை சுற்றிப் பார்த்தது. அந்தக் குழு கேட்ட விவரங்களின் பேரில் 2-12-1985 அன்று ஒரு மேல் அறிக்கை கொடுக்கப்பட்டது. மத்திய அரசு ரூ. 66.81 கோடி நிதியுதவியை 2-1-1986 அன்று அறிவித்தது. உடனே 8-1-1986 அன்றே மீதி ரூ. 42.16 கோடிக்கு ஆணைகள் வெளியிடப்பட்டன. மத்திய அரசு அறிவித்த ரூ. 66.81 கோடியில் ரூ. 59.31 கோடி 31-3-86க்குள் செலவிடப்பட்டது. மீதி ரூ. 7.50 கோடியை 30-6-86க்குள் செலவு செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.



இதில் ரூ. 5.50 கோடி 30-6-86க்குள் செலவு செய்யப்பட்டது. மீதமுள்ள ரூ. 2.00 கோடி அடையாற்றின் கரையை பலப்படுத்த 31-3-1987 வரை அவகாசம் தேவை என்று மத்திய அரசிடம் தெரிவிக்கப்பட்டது. மத்திய அரசும் இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

1.2. எட்டாவது நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு மார்ஜின் தொகையாக ரூ. 8.75 கோடி நிர்ணயித்துள்ளது. இதில் பாதித் தொகையான ரூ. 4.375 கோடி தமிழ்நாட்டின் பங்காகும். இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் சேதங்களுக்கு இதற்கு மேல் ஆகும் செலவினங்களுக்கு மத்திய அரசை அணுக வேண்டும். மத்திய அரசு அறிவிக்கும் உச்சவரம்புத் தொகையில் ரூ. 8.75 கோடி மார்ஜின் தொகையைக் கழித்து மீதமுள்ள தொகையில் 75 சதவீதம் மத்திய அரசு மாநில அரசுக்கு அளிக்கும். மீதமுள்ள 25 சதவீதம் மாநில அரசு ஏற்க வேண்டும். முடிவாக மத்திய அரசு அளிக்கும் தொகையும், மாநில அரசு ஏற்கும் தொகையும் கீழே விளக்கப்பட்டுள்ளன :—

(ரூபாய் இலட்சத்தில்)

| (1) | (2) |
|---|---|
| மத்திய அரசு அறிவித்த உச்சவரம்புத் தொகை .. | 6,681.40 |
| மார்ஜின் தொகை .. | 875.00 |
| மீதி .. | 5,806.40 |
| மத்திய அரசின் பங்கு 75 சதவீதம் .. | 4,354.80 |
| மாநில அரசின் பங்கு 25 சதவீதம் .. | 1,451.60 |

2. 1986 ஆம் ஆண்டு வறட்சி.

2.1. 1985 ஆம் ஆண்டு, தென்மேற்கு பருவக்காற்று மற்றும் வட கிழக்கு பருவக் காற்று பொய்த்து விட்டதனால், 1986 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் வறட்சி நிலவியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1986 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் மே மாதங்களில் மாவட்ட ஆட்சியர்களுடன் வறட்சி நிலவரம் குறித்து ஆய்வு செய்தார். அதன் அடிப்படையில் மத்திய அரசுக்கு ஒரு

முதல் அறிக்கை 1986 ஆம் ஆண்டு மே மாதம் அனுப்பப்பட்டது. பிறகு 25—7—1986 அன்று ரூ. 310.02 கோடி நிதியுதவி கோரி மத்திய அரசுக்கு ஒரு விரிவான அறிக்கை அனுப்பப்பட்டது. மத் திய அரசு நிதியுதவி தருவதற்கு முன்பே, பல்வேறு குடிநீர்ப் பணி களுக்கென ரூ. 24.75 கோடிக்கு அரசு ஆணைகள் வெளியிட்டது. இது தவிர, விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கென பொதுப் பணித்துறை நெடுஞ்சாலைத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மூலம் ரூ. 80.92 கோடி ஒதுக்கப்பட்டது. இதற்குப் பிறகு தான் மத்திய நிபுணர் குழு 24—8—1986 அன்று தமிழ்நாட்டிற்கு வந்து வறட்சிப் பணிகளை மேற்பார்வையிட்டது. 24—10—1986 அன்றுதான் மத்திய அரசு ரூ. 31.77 கோடிக்கு அனுமதி அளித்தது. இதன் படி சில இனங்களில் மிகுதியாக தொகைகள் இருந்தன. அவற்றை கருத்திற்கொண்டு மாநில அரசு ரூ. 2.49 கோடிக்கு குடிநீர் பணி களுக்கெனவும், ரூ. 7.38 கோடி வேலை வாய்ப்புப் பணிகளுக் கெனவும் அனுமதிக்கப்பட்டது.

2.2. வறட்சிக்கு மத்திய அரசு மாநில அரசுக்கு முடிவாக அளிக்கும் தொகையின் விவரம் :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| மத்தியஅரசு அனுமதித்த உச்சவரம்புத்தொகை | 3,176.82 |
| மார்ஜின் தொகை .. .. .. .. | 437.50 |
| மீதி .. .. | 2,739.32 |
| மத்திய அரசு மாநில அரசுக்கு அளிக்க வேண்டிய தொகை : | |
| 70 சதவீதம் கடன் .. .. .. | 1,917.53 |
| 30 சதவீதம் மானியம் .. .. .. | 821.79 |

1987 ஆம் ஆண்டு வறட்சி :

3.1. இயற்கை இடர்களான புயல், வெள்ளம், மற்றும் வறட்சி ஆகியவற்றின் விளைவாக ஏற்படக்கூடிய எந்த விளைவு களையும் எச்சரிக்கையுடன் எதிர்நோக்கும் வகையில் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.





3.2. தமிழ்நாடு மழைபெறும் பருவங்களை நான்காக பிரிக்க லாம். தென்மேற்கு பருவக்காற்று, வடகிழக்குப் பருவக் காற்று, குளிர்காலம் மற்றும் கோடைகாலம், இவைகளில் அதிகமாகமழை பெறும் காலங்கள் தென்மேற்குப் பருவக்காற்று மற்றும் வட கிழக்குப் பருவக்காற்று வீசும் காலங்கள் ஆகும். தென்மேற்கு பருவக்காற்றினால் (ஜூன்—செப்டம்பர்) நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் மட்டுமே பயன்பெறுகின்றன. வடகிழக்கு பருவக் காற்றின்போது (அக்டோபர்—டிசம்பர்) பரவலாக மாநிலம் முழு வதும் மழை பெய்கிறது. இக்காலத்தில் அதிகமாக மழை பெய்து வெள்ளம் ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே, இப்பருவக் காற்று தொடங்குமுன், வெள்ளம், புயல் முதலிய சீற்றங்களினால் ஏற் படக்கூடிய விளைவுகளை சமாளிக்கவும், அதற்கு ஆயத்த நிலை யில் இருக்கவும், தேவையான திட்டம் தீட்ட பல்வேறு துறை யைச் சார்ந்த செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள், கடலோரப் பகுதி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியவர்களை உறுப்பினர்களாகவும், தலைமைச் செயலாளரை தலைவராகவும் கொண்ட ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு வின் கூட்டங்களில், மத்திய அரசின் இராணுவ அதிகாரிகள் அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலைய அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

3.3. 3—7—1986 அன்று, தலைமைச் செயலாளர் தலைமை யில் உயர்மட்டக்குழு கூடியது. 24—10—1986 அன்று மீண்டும் உயர்மட்டக்குழு கூடி, அப்போதுள்ள நிலைமை குறித்து தலைமை செயலாளர் அவர்கள் பரிசீலித்தார். இதன் தொடர்பாக அனைத் துத் துறைத் தலைவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கும் ஆயத்த நிலையில் இருக்குமாறு அறிவுரைகள் வழங்கப் பட்டன.

3.4. வடகிழக்கு பருவமழையின் தொடக்கம் தமிழ் நாட்டில் 25—10—1986 முதல் காணப்பட்டது. 3 அல்லது 4 நாட்களுக்கு மழை இருந்தது. இதன் காரணமாக இரவு பகல் முழுவதும் தொடர்ந்து பணி இயங்கும் கட்டுப்பாடு அறைகள் தலைமைச் செயலகத்தில் வருவாய்த்துறை, சிறப்பு ஆணையர் மற்றும் வரு வாய் நிருவாக ஆணையர் அலுவலகம், குடிமை பாதுகாப்பு இயக்குனரகம், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றில் அமைக்கப்பட்டன. இந்திய வானிலை துறை யின் பருவநிலை குறித்து நாளறிக்கை, பொதுப் பணித்துறை யிலிருந்து நீர்த்தேக்கங்களில் தண்ணீர் இருப்பளவு அறிக்கை, மற்றும் பெருநகர் குடிநீர் வழங்கல் துறையிலிருந்து சென்னை நகருக்கான 3 ஏரிகளின் தண்ணீர் இருப்பளவு ஆகியவை பெறப் பட்டன. இது குறித்த ஒரு குறிப்பு நாள்தோறும் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு வந்தது.

3.5. ஆனால் வடகிழக்கு பருவமழை தொடக்கத்தில் பெய்து, பின்னர் பெய்யவில்லை. எனவே, வடகிழக்கு பருவமழையின் விளைவு குறித்து மதிப்பிட்டு விரிவான அறிக்கை அரசுக்கு

25—12—1986-க்குள் அனுப்புமாறு அனைத்து மாவட்ட ஆட்சித்
தலைவர்களும் 2—12—1986 அன்று கேட்டுக் கொள்ளப்பட்டனர்
அவர்கள் மதிப்பீட்டில் மழை பெய்த அளவு, பாசனம்,
வேளாண்மை பணி குறித்த நிலை, குடிநீர் நிலைமை, மற்றும்
சேதம், ஆகியவை குறித்த விவரங்கள் தருமாறு கேட்டுக் கொள்
ளப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தத்தம் மதிப்
பீட்டை குறிப்பிட்ட நாளுக்குள் சிறப்பு ஆணையர் மற்றும் வரு
வாய் நிருவாக ஆணையருக்கும் அரசுக்கும் அனுப்பிவைத்தனர்.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் ஆகி
யோரின் அறிக்கைகள் அடிப்படையிலும் மற்றும் சிறப்பு ஆணை
யர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் மேற்கொண்ட சுற்றுப்
பயணங்கள் மூலமும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்
களிலும் கடும் வறட்சி இருப்பது அறியப்பட்டது. 1—9—1987
அன்று தென்னார்க்காடு, தருமபுரி, பெரியார், அண்ணா மற்றும்
கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சென்னை வந்த
போது அம்மாவட்டங்களில் வறட்சிநிலைபற்றி சிறப்பு ஆணையர்
மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் மற்றும் நகராட்சி
நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகிய துறைச் செயலர்கள்
ஆய்வு செய்தார்கள்.

3.6. 29—1—1987 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்
கள் தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி சூழ்நிலை குறித்து அமைச்சர
வைக் கூட்டத்தில் ஆய்வு செய்தார். இக்கூட்டத்தில் தலைமை
செயலாளர் மற்றும் நிதிச் செயலாளர் அவர்களும் உடன் இருந்
தனர். 1986-ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை பொய்த்து
விட்டதன் தொடர்பாக குடிநீர் வழங்கும் நிலைமை பாதிக்கப்
பட்டது. எனவே, 8,625 ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் தமிழ்
நாட்டில் அமைப்பதற்கு உடனடியாக ரூபாய் 28 கோடிக்கு அரசு
ஒப்புதல் அளித்தது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த
வரையில் கடுமையாக பாதிக்கப்பட்டதையொட்டி, திறந்தவெளிக்
கிணறுகள் அமைக்க, லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம்
செய்ய, தனி மின் வழித்தடம் அமைக்க, ஆகியவற்றிற்காக ரூபாய்
32 இலட்சம் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு
போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை எச்சரிக்கை
யுடன் செயல்படுத்துவதற்கும், நிவாரணப் பணிகளை மேற்
கொள்ளும் நிர்வாக இயந்திரங்களை முடுக்கிவிடுவதற்கும்,
மாவட்டங்கள் சிறப்பு ஆணையர்கள் மற்றும் மதுவிலக்கு மற்றும்
ஆயத்துறை ஆணையர் ஆகியவர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்
டுள்ளது. ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணிகளை விரைவு
படுத்தும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தனியார்
''ரிக்குகளை'' (தோண்டும் கருவிகளை) வாடகைக்குப் பெறவும்,
ஏனைய அரசுத் துறைகளான வேளாண்மைப் பொறியியல் துறை,
தமிழ்நாடு குழாய் கிணறு வாரியம், தமிழ்நாடு வேளாண்மை
பொறியியல் சேவை மற்றும் கூட்டுறவு இணையம் ஆகியவற்றிட
முள்ள வசதிகளைப் பெற்றுக்கொள்ளவும் அரசு அனுமதித்தது.



தற்போதுள்ள குடிநீர் ஆதாரங்களைப் பழுது பார்க்கவும், செம்
மையான முறையில் பராமரிக்கவும், அறிவுரைகள் வழங்கப்பட்டன
வேலை வாய்ப்புத் திட்டங்களை பொறுத்தமட்டில், தேசிய ஊரக
வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத்
திட்டம் மற்றும் இதுபோன்ற திட்டங்களின்கீழ் தற்போது கிடைக்
கக் கூடிய தொகைகளை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளப்
படும். இது தவிர, பலதரப்பட்ட நிவாரணப் பணிகளை மேற்
பார்வையிடுவதற்கு மண்டல அலுவலர்களை (Zonal Officers)
பணியமர்த்த அரசு ஆணையிட்டது. மண்டல அலுவலர்கள்,
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் சிறப்பு ஆணையர்கள்
ஆகியோரிடமிருந்து பெறப்படும் அறிக்கைகள் சிறப்பு ஆணையர்
மற்றும் வருவாய் நிருவாக ஆணையரால் ஆய்வு செய்யப்பட்டு
நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மாவட்டங்களில் சுற்றுப்
பயணங்கள் மேற்கொண்டு சூழ்நிலைகளை மதிப்பிட்டு அறிக்கை
களை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையருக்
கும் அவற்றின் நகல்களை அரசுக்கும் அனுப்பிவைக்குமாறு
சிறப்பு ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

3.7. தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி நிலை குறித்த முதல்
நிலை அறிக்கை 2—2—1987 அன்று மத்திய அரசுக்கு அனுப்பி
வைக்கப்பட்டது.

3.8. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிப்ரவரி மாதத்
தில் டில்லியில் பிரதமரை சந்தித்த பொழுது தமிழ்நாட்டில்
நிலவிவரும் வறட்சிபற்றியும் எடுத்துரைத்தார். மாண்புமிகு
நிதியமைச்சர் அவர்களும் புதுடில்லி சென்றிருந்த பொழுது
மத்திய வேளாண்மை அமைச்சரையும், வேளாண்மைத் துறை
செயலாளரையும் சந்தித்து தமிழ்நாட்டில் நிலவிவரும் வறட்சி
நிலை குறித்து தெரிவித்தார்கள்.

3.9. தலைமைச் செயலாளர் அவர்களும் டில்லியில் முகாம்
சென்றிருந்தபோதும் மத்திய அரசு வேளாண்மைத் துறை
செயலாளரிடமும், நிதித்துறை செயலாளரிடமும் வறட்சி
பற்றி எடுத்துக் கூறினார். 17—2—1987 அன்று மைய அரசின்
வேளாண்மைத்துறைச் செயலாளர் சென்னை வந்திருந்த
பொழுது வேளாண்மை உற்பத்தி ஆணையர், செயலாளர்கள்
நிதி, வேளாண்மை மற்றும் வருவாய் அவரை சந்தித்து, வறட்சி
பற்றி எடுத்துக்கூறினார்கள். சிறப்பு ஆணையர் மற்றும்
வருவாய் நிருவாக ஆணையர் டில்லி முகாம் சென்றிருந்த
பொழுதும் மைய அரசின் இணைச் செயலாளரிடம் (Scarcity
Relief) வறட்சி பற்றி எடுத்துக் கூறினார். தமிழ்நாட்டில்
நிலவி வரும் வறட்சி பற்றிய விவரம் அவ்வப்போது மத்திய
அரசுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

[1987 ஏப்ரல் 22

3-10. மாவட்டங்களில் நிலவி வரும் வறட்சி பற்றிய ஆய்வுகள் தொடர்ந்தன :—

| | |
|---|---|
| 1 தலைமைச் செயலாளர் மாவட்ட ஆட்சியர்களுடன் ஆய்வு— | |
| வட ஆற்காடு மாவட்டம் .. | 9— 2—1987 |
| செங்கற்பட்டு மாவட்டம் .. | 10— 2—1987 |
| 2 தலைமைச் செயலாளர் சிறப்பு ஆணையர்கள் மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை ஆணையருடன் ஆய்வு. | 11— 2—1987 |
| 3 நிதியமைச்சர், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மற்றும் தலைமைச் செயலாளர் ஆகியோர் தென்மாவட்ட ஆட்சியர்களுடன் (11) ஆய்வு. | 1— 3—1987 |
| 4 சிறப்பு ஆணையர் (ம) வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் வருவாய்த் துறை செயலர் சில மாவட்ட ஆட்சியர்களுடன் ஆய்வு. | 5— 3—1987 |
| 5 தலைமைச் செயலாளர், சிறப்பு ஆணையர்கள், சில துறைச் செயலாளர்கள் மற்றும் சில துறைச் தலைவர்களுடன் ஆய்வு. | 6— 3—1987 |

அத்துடன் சிறப்பு ஆணையர்கள் அவ்வப்போது மாவட்டங்
களுக்குச் சென்று நிலைமையை மதிப்பிட்டு, அரசுக்கும் சிறப்பு
ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையருக்கும் அறிக்
கைகள் அனுப்பிவைத்தனர்.

3.11. நிலைமையை ஆய்ந்து 11—3—1987 அன்று கீழ்க்
கண்ட தொகைகளை நிவாரணப் பணிகள் உடனடியாக மேற்
கொள்ள அரசு அனுமதித்தது :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| 1 விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த. | |
| 2 திறந்த வெளிக் கிணறுகள் அமைக்க .. | 5.00 |
| 3 வாகனங்கள் மூலம் குடிநீர் வழங்க.. .. | 1.00 |
| | 0.1[illegible] |
| | 6.18 |



1987 ஏப்ரல் 22]

3.12. இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்தின் புள்ளி
விவரங்களின்படி 1986 ஆம் ஆண்டு பெய்த மழையின் விவரம்
கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| இயல்பான மழை. | பெய்த மழை. | வேறுபாடு. | வேறுபாடு விழுக்காடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (மில்லி மீட்டரில்). | | | |
| 942.8 | 785.1 | (—)157.7 | (—) 16.8 சதவீதம். |

ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அளித்த மழை விவரப்
படி தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவக் காற்றினால்
பெய்த மழையின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| இயல்பான மழை. | பெய்த மழை. | வேறுபாடு. | வேறுபாடு விழுக்காடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (மில்லி மீட்டரில்). | | | |
| 942.8 | 648.7 | (—) 294.1 | (—) 31.2 சதவீதம். |

3.13. ரூபாய் 347.25 கோடி நிதியுதவி கோரி ஒரு விவர
அறிக்கை 12—3—1987 அன்று மைய அரசுக்கு அனுப்பப்பட்டது.

3.14. வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை இடர்
பாடுகள் ஏற்படும்போது மக்களுக்கு உடனடியாக தேவைப்படும்
நிவாரணப் பணிகளை மாநில அரசு தனது சொந்த நிதியிலிருந்து
செலவு செய்துவிட்டு, விரிவான அறிக்கை ஒன்றின் மூலம்
நிதியுதவி கோரி மத்திய அரசை அணுகுவது வழக்கம்.

20. தீ விபத்துக்கள்.

பொதுவாக தீ விபத்து எளியவர்கள் வசிக்கும் குடிசைப்
பகுதிகளில் ஏற்படுவதால், பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும்
ஏழைகள், அவர்களுக்கு தங்களது வீடுகளைத் திரும்பக் கட்ட
அரசு உதவி உடனடியாகத் தேவைப்படுகிறது.

2. தீ விபத்தில் பாதிக்கப்பட்டவரின் குடும்ப மாத வரு
மானம் ரூபாய் 300 அல்லது அதற்குக் குறைவாக இருந்து, குடிசை
முழுமையாகப் பாதிக்கப்படின் ரூபாய் 300-ம் பகுதியாகப் பாதிக்
கப்படின் ரூபாய் 150-ம் நிதியுதவி வழங்கப்படுகிறது. இது தவிர,

தீ விபத்தில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பமும் இலவசமாக தரப்படும் ஐந்து கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் (72 மணி நேரமும் அதற்கு மேலும் மீண்டும் மின் இணைப்பு பெறக்கூடிய வாய்ப்பு இல்லாவிடின்) மற்றும் ஒரு வேஷ்டி அல்லது லுங்கி மற்றும் ஒரு புடவை அடங்கிய துணி வகைகள் பெறுவதற்கு தகுதியுடையதாகும்.

3. குடும்பத் தலைவராகவும் குடும்பத்தின் பொருளீட்டுபவராகவும் ஏழ்மை நிலையிலும் இருந்து, தீ விபத்தால் மரணமடைந்தவரின் நிரந்தரமாக உடல் ஊனமடைந்தவரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு வந்த ரூபாய் 1,000, 10—11—1984 முதல் ரூபாய் 2,000 ஆக உயர்த்தப்பட்டது. 19—9—1986 முதல் தீ விபத்தால் மரணமடைபவர் குடும்பத் தலைவராகவும், குடும்பத்தின் பொருளீட்டுபவராகவும் இருந்திருப்பினும், இருந்திராவிடினும் அவரது குடும்பத்திற்கு ரூபாய் 2,000 வழங்கப்படுகிறது. மரணமடைந்தவர் குழந்தையாக இருந்தாலும் இந்நிதியுதவி வழங்கப்படும். ஒரே குடும்பத்தில் ஒன்றிற்கு மேற்பட்டவர் மரணமடைந்திருப்பின், மரணமடைந்தவரின் எண்ணிக்கைக்கேற்ப இந்நிதியுதவி வழங்கப்படும். மரணமடைந்தவரின் குடும்பத்திற்கு கருவூல விதி எண். 27-ன் கீழ் மாவட்டங்களிடம் உள்ள தொகையிலிருந்து நிதியுதவி வழங்க மாவட்டாட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நில வருவாய்—மானியக் கோரிக்கை

1987-88

பகுதி—II.

(நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறை)

21. நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறை.

(1) இடைத்தரகர்களை ஒழித்தலும் ரயத்துவாரியாக மாற்றலும் :—

சுதந்திரம் அடைந்த பின்னர், அரசுக்கும் ரயத்துக்களுக்கும் இடையே இருந்து ஜமீன்தார், குத்தகை கைப்பற்றுகள் மற்றும் இனாம்கள் முதலியன இடைத்தரகர்களை ஒழிக்கும் பொருட்டு பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. அவைகளில் பெரும்பாலான சட்டப் பணிகள் கீழ்க்கண்டவாறு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன,



இவ்வினத்தில் முன்னேற்றம் கீழே குறிப்பிட்டுள்ளவாறு ஏற்பட்டுள்ளது.

(அ) தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1948 (சட்டம் XXXVI/48) :

| (1) | மொத்த உடைமைகளின் எண்ணிக்கை. (2) | பரப்பு (சதுர கிலோ மீட்டரில்). (3) |
|---|---|---|
| 1. அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த உடைமைகள் | 5,134 | 29,931.21 |
| 2. 31-12-1986 வரை நிலவரித் திட்டம் செயல்படுத்தப்பட்ட பரப்பு | 5,134 | 29,291.21 |
| 3. நிலுவை | இல்லை. | இல்லை. |

(ஆ) தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம், 1963 (சட்டம் 2619/63) :—

| | | |
|---|---|---|
| (1) அரசால் எடுத்தும் கொள்ளப்பட்ட மொத்த உடைமைகள் | 2,129 | 4,139.43 |
| (2) (அ) 31-12-1986 வரை நிலவரித் திட்டம் செயற்படுத்தப்பட்ட பரப்பு | 2,097 | 4,070.20 |
| (ஆ) செயல் முறையில் உள்ள பரப்பு | 23 | 52.91 |
| (3) நிலுவை | 9 | 16.32 |

(இ) தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம், 1963 (சட்டம் 30/63) :—

| | | |
|---|---|---|
| (1) அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த உடைமைகள் | 13,565 | 4,049.02 |
| (2) 31-12-1986 வரை நிலவரித் திட்டம் செயற்படுத்தப்பட்ட பரப்பு | 13,565 | 4,049.02 |
| (3) நிலுவை | இல்லை. | இல்லை. |

[1987 ஏப்ரல் 22

(ஈ) தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம், 1963 (சட்டம் 27/63) :—

| (1) | மொத்த உடைமைகளின் எண்ணிக்கை. (2) | பரப்பு (சதுர கிலோ மீட்டரில்). (3) |
|---|---|---|
| (1) அரசால் எடுத்துக் கொள்ளப் பட்ட மொத்த உடைமைகள் | 13 | 83.20 |
| (2) நிலவரித் திட்டம் செயல்படுத் தப்பட்ட பரப்பு .. | 13 | 83.20 |
| (3) நிலுவை .. .. | இல்லை. | இல்லை. |

(உ) தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம், 1969 (சட்டம் 24/69) :—

| | | |
|---|---|---|
| (1) அரசால் எடுத்துக் கொள்ளப் பட்ட மொத்த உடைமைகள் | 10 | 324.10 |
| (2) நிலவரித் திட்டம் செயற்படுத் தப்பட்ட பரப்பு .. | 3 | 146.18 |
| (3) நிலுவை .. .. | 7 | 177.92 |

தற்சமயம் மொத்தம் 9 இனாம் எஸ்டேட்டுகளில் மட்டுமே நிலவரித் திட்டம் அமுல்படுத்த வேண்டியுள்ளன.

சட்டம் 26/1963-இன்கீழ் பாக்கியிருந்த 32 இனாம் எஸ்டேட்டுகளில் 23 இனாம் எஸ்டேட்டுகளுக்கு உச்ச நீதிமன்ற தடையாணை தற்போதுதான் நீக்கம் செய்யப்பட்டு நிலவரித் திட்டப் பணிகள் மேற்கொள்ள மேல் நடவடிக்கை தொடரப் படுகிறது. மேலும் பாக்கியுள்ள 9 இனாம் எஸ்டேட்டுகள் தடையாணையால் நிலுவையில் உள்ளன.



1987 ஏப்ரல் 22]

2. 31-12-1986 வரை பல்வேறு வட்டங்களின் கீழான விதி முறைகளின்படி ரயத்துவாரிப் பட்டா வழங்கப்பட்டுள்ள பட்டாதாரர்களின் எண்ணிக்கை மற்றும் நிலப்பரப்பு விவரங்கள் கீழ் வருமாறு :—

| சட்டத்தின் பெயர்கள். (1) | பயனடைந்தோர் எண்ணிக்கை. (2) | பட்டா வழங்கப் பட்ட நிலப்பரப்பு (எக்டேரில்) (3) |
|---|---|---|
| 1. தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1948 (சட்டம் XXXVI/48) .. | 23,33,840 | 18,17.390 |
| 2. தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (சட்டம் 26/1963) .. | 3,56,038 | 1,93,806 |
| 3. தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (சட்டம் 27/63) .. | 6,002 | 5,606 |
| 4. தமிழ்நாடு இனாம்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (சட்டம் 30/1963) .. .. | 5,11,181 | 3,64,246 |
| 5. கூடலூர் ஜென்மம் உடைமைகள் (உடைமைகள் ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969 (சட்டம் 24/1969) .. .. .. | 6,468 | 10,771 |

3. ஒழிப்புச் சட்டங்களுக்குப் புறம்பாகப் பட்டா வழங்குதல் :

தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம் 1948 அமுல்படுத்தப்பட்ட பின்னர் தான் அரசின் நடைமுறை ஆணைகளின்படி பட்டா வழங்குவதில் தளர்த்தப்பட்டதால் அரசால் அச்சட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட உடைமைகளின் மிகப் பெரும்பான்மையான

நபர்கள் பல ஆண்டுகளாக நிலங்களைக் கைப்பற்றிலும், ஆளு கையிலும் வைத்திருந்தும், அவர்கள் சட்டத்தின் பல விதிகளின் கீழோ அல்லது அரசின் ஆணைகளுக்குக் கீழோ வராமையால் பட்டா பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர் என்பது காணப் பட்டது. எனவே, அரசு 1971-ல் விளம்பரப்படுத்தப்பட்ட நாளுக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடர்ந்து அனுபவத் தில் வைத்திருந்த நிலங்களுக்கும் கைப்பற்றுதாரர்களுக்கும் பட்டா வழங்கப்படுதல் வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்தது. இச்சலுகை பின்னர் சட்டம் 26/1963 மற்றும் 30/1963-ன் கீழ் வரும் இனங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. இனாம் ஒழிப்புச் சட் டங்களுக்கு அப்பீல் இதுநாள் வரை 22,532 நபர்கள்பயனடைந்து, 34,192 ஹெக்டேர் நிலங்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டு உள்ளன.

**4. நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்திலுள்ள ஜென்மம் உடைமைகள் ஒழிப்பு :**

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் மிகப் பெரும் பான்மை நிலப்பரப்பைக் கைவசம் வைத்திருந்த ஜென்மிகள் சாகுபடி உரிமைகளை வழங்கி குத்தகைக்கு விட்டு வந்தனர். அக்குத்தகை உரிமை 1929 ஆம் ஆண்டில் மலபார் குத்தகைதாரர் கள் சட்டத்தினால் ஏற்புடையதாக்கப்பட்டு குத்தகைதாரர்கள் பயிரிடும் நிரந்தர உரிமையைப் பெற்று விட்டனர். ஜென்மம் உரிமை முறையை நீக்கி கைப்பற்றுதாரர்களுக்கு அவ்வுரிமையை வழங்கவே கூடலூர் ஜென்மம் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்று தலுமான) சட்டம், 1969 (சட்டம் 24/1969) இயற்றப்பட்டது. இச்சட்டம் 27-11-1974 முதல் அமுலுக்குக் கொண்டு வரப் பட்டது. அதன்படி 324.10 சதுர கிலோ மீட்டர் கொண்ட நிலப்பரப்பு அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டு நில அளவைப் பணி முடிக்கப்பெற்றது. இப்பரப்பு முழுவதுக்குமான ரயத்து வாரி பட்டா வழங்குவதற்கான சட்டப் பூர்வ விசாரணைப் பணியும் முடிக்கப்பட்டுவிட்டது. சில ஜென்மம் உடைமைகளை கைப்பற்றில் வைத்திருப்பவர்கள் அவர்கள் கைப்பற்று நிலங்களுக்கு இச்சட்டம் செல்லுபடியாகாதென வாதிட்டுச் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனுக்கள் 23-9-1976 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், அவர் களில் சிலர் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்து தடை யாணையும் பெற்றுள்ளனர். உச்ச நீதி மன்றத்தில் மாற்றப் பட்ட தடையாணையின்படி கூடலூர் வட்டத்தில் தடையாணைக் குட்பட்ட பகுதியில் சட்டபூர்வ விசாரணை வரையிலான நில வரித் திட்டப் பணிகள் வரை நடைபெற்று, அத்துடன் நிறுத்தப் பட்டுள்ளன. 31-12-1986 வரை நிலவரித் திட்டம் 146.18 சதுர கிலோ மீட்டர் பரப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ரயத்துவாரிப் பட்டாக்கள் 10,771 ஹெக்டேர் நிலப்பரப்புக்கு 6,468 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 177.92 சதுர கிலோ மீட்டரில் நிலவரித் திட்ட அமுலாக்கம் உச்ச நீதி மன்றத்தின





தடையாணை நீக்கத்தை எதிர்பார்த்து நிறுத்தி வைக்கப்பட் டுள்ளது. உச்ச நீதி மன்ற தடையாணையினால், இப்பகுதியில் உள்ள மரங்கள் போன்றவை வெட்டப்பட்டு வருவதை இந்நீதி மன்றத்தின் மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த மேல்முறையீடுகளை விரைவாக பைசல் செய்யக் கோரி விண் ணப்பம், புதுடெல்லியில் உள்ள தமிழ் நாடு அரசு வழக்குரைஞர் மூலமாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் தமிழக அரசின் சார்பில் வாதாட இந்திய சொலிஸிடர் ஜெனரல் அவர் கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். இதனிடையே, புதுடெல்லி அரசு வழக்குரைஞர், அரசு விண்ணப்பத்திற்கு எதிராக தாக்கல் செய் யப்பட்டுள்ள எதிர் மனுவினை (Counter Affidavit) இவ் வரசின் குறிப்புக்காக அனுப்பியுள்ளார். இது குறித்து அரசு உதகை மாவட்ட ஆட்சியாளர் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் துறை இயக்குநருடன் கலந்து ஆலோசித்து வருகிறது.

**5. தமிழ்நாடு வரியற்ற நிலங்களின் மீது ரயத்துவாரி தீர்வை விதிக்கும் சட்டம், 1973 :**

1959 ஆம் ஆண்டிலிருந்து சில ரயத்துவாரிச் நிலங்கள் அவற்றின் மீதான 20 தடவை ஆண்டுத் தீர்வையை செலுத்தி விட்டு நிலவரி விதிக்கப்படாமல் வரியில்லாமல் கைப்பற்றில் உள்ளன. வேறு சில நிலங்கள் நில வரியை சலுகை விகிதத்தில் செலுத்தியபடி கைப்பற்றில் உள்ளன. இவை வரியற்ற நிலங்கள் என சொல்லப்படுகின்றன. இவற்றிற்கும் மற்ற ரயத்துவாரி நிலங்களுக்கும் உள்ள ஒரே வித்தியாசம் என்னவெனில் முன்னதில் ரயத்துக்கள் ஆண்டுதோறும் தீர்வை செலுத்துகின்றனர். பின்னதில் சில இனங்களுக்கு தீர்வையே கிடையாது. மற்றும் சில இனங்களுக்கு சலுகை தீர்வை வசூலிக்கப்படுகிறது. என்பதே. 1972 ஆம் ஆண்டில் அத்தகைய வரியற்ற வரி குறைந்த நிலங் களை ஒழித்து அவற்றை ஏனைய ரயத்துவாரி நிலங்களுக்குள்ளது போன்ற தீர்வை முறையை அமுல்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இச்சட்டத்தின்படி இந்த நோக்கத்தை அடைவதற்கு 1972 வரியற்ற நிலங்களுக்கு (வரி விதித்தல் சட்டம்) 31/1973, 1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் தேதி அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

(1) இச்சட்டம் தமிழ்நாட்டில் 12 மாவட்டங்களில் 4,777.23 ஹெக்டேர் விஸ்தீரணத்தில் வரியற்ற நிலங்கள் என உள்ளனவற்றிற்குப் பொருந்தும், இதனுடன் 231.56 ஹெக்டேர் நிலங்கள் ''மோகினி இனாம் நிலங்கள்'' என்ற பெயரில் தஞ்சாவூர் மாவட்டத்தில் சட்டத்தின் 2-வது ஷெட்யூலில் காணப் படுகின்றன.

(2) மோகினி நிலங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்ப கோணம், மயிலாடுதுறை, சீர்காழி மற்றும் நன்னிலம் வட்டங் களில் மதசம்பந்தமான நிலையங்களின் கைப்பற்றிலுள்ளன. சட்டத்தின் பட்டியலுக்கு மேலும் கூடுதலான வரியற்ற நிலங் களுக்கு இணைப்புப் பட்டியல் தயாரித்து 27-4-1983 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் விளம்பரம் மூலம் சேர்க்கப்பட்டது.

இச்சட்டத்தை (31/73) அமுலாக்கம் செய்ய சட்டப் பிரிவு 8-இன் கீழ் மாவட்டம் வாரியாக அறிவிக்கைகள் அரசின் ஒப்புதலுடன் பிரசுரிக்கப்பட்டன.

இச்சட்டத்தின் கீழ் இதுவரை 106 கிராமங்களில் 90.39 ச.கி. மீட்டருக்கு பணி முடிவுற்றுள்ளது. பாக்கியுள்ள 14.73 ச.கி. மீ. பரப்பில் (13 கிராமங்கள்) இச்சட்டம் அமுல்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

6. வருவாய் பின்தொடர் பணி :

மாநிலத்தில் சில பகுதியில் காலப் போக்கில் அசல் நில அளவை உருவழிந்துள்ளதாலும் உள்ள ஆவணங்களைக்கொண்டு பராமரிப்புப் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள இயலாமையாலும் அரசின் ஆணை பெற்று அப்பகுதிகளில் மறு நில அளவை மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து அங்கு நில உடைமைகளை மேம்படுத்தி பராமரிப்புக்குகந்ததாகச் செய்ய மறு நிலவரித் திட்டம் மேற்கொள்வதற்குப் பதிலாக வருவாய்ப் பின் தொடர்பணி மேற்கொள்ளப்படுகிறது. வருவாய் பின் தொடர் பணிக்கும் மறு நிலவரித் திட்டத்திற்கும் இடையான முக்கியமான வேறுபாடு மண் வயனம் வகைப்பாடு, தீர்வை விதிப்பு விதம் ஆகியவை வருவாய்ப் பின்தொடர் பணியில் மாற்றப்படுவதில்லை என்பதே. மறு நில அளவை ஆவணங்களை கொண்டு நில உடைமைகளை மேம்படுத்தியும் பழைய தீர்வை விகிதங்களை அப்படியே வைத்துக் கொண்டும் ஒரு புது கிராம ஆவணங்களின் தொகுப்பு தயாரிக்கப்படுகிறது.

வருவாய் பின்தொடர் பணி கீழ்க்காணும் வட்டங்களில் முடிக்கப்பெற்றுள்ளது.

| மாவட்டம். (1) | வட்டம். (2) | பரப்பு (சதுர கிலோ மீட்டரில்). (3) | பயனடைந்தோர் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| பெரியார் .. | கோபிசெட்டி பாளையம். } | 657.67 | 88,182 |
| பெரியார் .. | சத்தியமங்கலம் } | | |
| பெரியார் .. | பவானி .. | 729.07 | .. |
| பெரியார் .. | ஈரோடு .. | 699.17 | 47,202 |
| தென்ஆற்காடு .. | கடலூர் .. | 1,548.79 | 1,39,632 |
| தென் ஆற்காடு .. | திண்டிவனம் .. | 649.13 | 64,78[illegible] |
| சேலம் .. | மேட்டூர் .. | 1,404.14 | 41,4[illegible] |
| மதுரை .. | கொடைக்கானல் | 237.67 | 9,846 |
| நீலகிரி .. | கூடலூர் .. | 392.10 | [illegible] |
| | | [illegible] | [illegible] |



வருவாய் பின் தொடர்பணி கீழ்க்காணும் மாவட்டங்களில் நடைமுறையில் உள்ளது.

| மாவட்டம். (1) | வட்டம். (2) | மொத்த விஸ்தீரணம். (3) | பணி முடிவு பெற்றவை. (4) | பணி நிலுவையில் உள்ளவை, (5) |
|---|---|---|---|---|
| | | ச.கி.மீ. | ச.கி.மீ. | ச.கி.மீ. |
| பெரியார் | தாராபுரம் .. | 767.20 | 501.17 | 266.03 |
| | காங்கேயம் .. | 491.54 | 145.56 | 345.98 |
| வடஆற்காடு | திருவண்ணாமலை .. | 264.56 | 149.10 | 115.46 |
| | வேலூர் .. | 60.87 | 26.31 | 34.56 |
| | வாணியம்பாடி .. | 23.66 | 4.91 | 18.75 |
| நீலகிரி .. | உதகமண்டலம் | 195.03 | 465.73 | 729.30 |
| | கூடலூர் .. | 299.94* | 47.33 | 18[illegible].61 |
| | கோத்தகிரி .. | 288.12* | .. | 288.12 |

* திருத்திய பரப்பளவு அனுசரிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் தலைமையிடமாகக் கொண்டு ஒரே நிலவரித் திட்ட அலுவலர் பணி புரிகிறார். அவர் கீழ் தஞ்சாவூர், மதுரை, திருவண்ணாமலை, தாராபுரம், கூடலூர் ஆகிய இடங்கள் கிளை நிலவரித் திட்ட அலுவலகங்களை எஞ்சிய நிலவரித் திட்டப் பணிகளையும், சட்டம் 31/73ன் கீழ் நிலவரித் திட்டப் பணிகளையும் மற்றும் வருவாய்ப்பின் தொடர் பணியினையும் மேற்கொண்டு இயங்கி வருகின்றன.

7. பல்வேறு உடைமைகள் ஒழிப்புச் சட்டங்களின் கீழ் ஈட்டுத் தொகை மற்றும் அரசு கொள்கைகள்.

நில உடைமையாளர்கள் மற்றும் இனாம்தாரர்கள் ஆகியோரிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்களின் மேல் முன்றீடு [illegible] நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இவ்வகைகளைத் [illegible] தீர்மானமாக [illegible] ஏனைய நிலங்களுக்குப் பல்வேறு ஒழிப்புச் சட்டங்களின் [illegible] அனுமதிக்கப்படும் ஈட்டுத் தொகை நிர்ணயிக்கப்பட்டு

அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மதம் சார்ந்த நிறுவனங்
கள், கல்வி நிலையங்கள் மற்றும் அறக் கட்டளைகள் ஆகியவற்
றின் கைவசமிருந்த உடைமைகளுக்கு நட்ட ஈட்டுத் தொகை
அரசுக் கொடையாக ஆண்டுதோறும் அச்சட்டங்களில் வகை
செய்துள்ளபடி நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.

8. குறியீடுகள் நிர்ணயித்தல் :

அரசினால் வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் அனைத்தும் குறிப்
பிட்ட காலக் கெடுவுக்குள் செவ்வனே நிறைவேற்றப்பட வேண்
டும் என்ற கருத்துடன் இவ்வரசு 1985–86 ஆம் ஆண்டு முதல்
ஒவ்வொரு துறைக்கும் அத்துறை சம்பந்தப்பட்ட பொருள்
களனைத்திற்கும் குறியீடுகள் நிர்ணயித்து ஆணைகள் வெளி
யிடப்பட்டுள்ளன. இத்தகைய ஆணைகள் நில வரித் திட்டப்
பிரிவிற்கும் நிர்ணயிக்கப்பட்டு, 1985–86, 1986–87 ஆம் ஆண்டு
களில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் இக்குறியீடு
களின் அடிப்படையில் நிலவரித் திட்டப் பிரிவு அடைந்துள்ள
முன்னேற்றம் குறித்த அறிக்கை பிரதி மாதமும் இத்துறையி
லிருந்து பெறப்பட்டு ஆய்வுரைகள் அரசால் வழங்கப்பட்டு வரு
கின்றன. இவ்வாய்வுரைகள் வழங்கப்பெறும்போது இத்துறை
அடைந்துள்ள முன்னேற்றம் குறிக்கப் பெற்று மதிப்பீடுகள்
வழங்கி இப்பணிகள் சீரிய முறையில் செயலாக்கப்படத் தகுந்த
வழி முறைகள் குறிக்கப் பெற்று வெளியிடப்படுகின்றன. இவ்
வாறு குறியீடு நிர்ணயம் மற்றும் ஆய்வுரைகள் வழங்கப்பெறுதல்
ஆகியவைகளினால் துறையின் பணிகள் சிறப்பான முன்னேற்றம்
காண வழி வகுக்கப்பட்டுள்ளது.

1987–88 ஆம் ஆண்டிலும் இத்தகைய குறியீடு நிர்ணய
பணி தொடர்ந்து கடைபிடிக்கப்பெறும்.

504. ஏ. ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் குறித்த
மூலதனச் செலவு ஏ. பி. ஜமீன்தார் முறை ஒழிக்கப்படுவதன் மேல்
நில கைப்பற்றுதாரர்களுக்கு இழப்பீடு முதலியன. மேற்கண்ட
அரசுத் தலைப்பின் கீழ் கொடுக்கப்படும் நட்ட ஈடுகள் குறித்த
குறிப்பு·

அரசுக்கும், ஜமீன் கிழக்காணியாட்சி, இனாம் மற்றும் இதர
சிறப்பு உரிமம் முறைகளின் கீழ் நிலத்தை உழுபவருக்கும் இடை
யில் தரகர்களை ஒழிப்பதற்கென அரசு பல்வேறு ஒழிப்புச்
சட்டங்களை உருவாக்கியுள்ளது. அச் சட்டங்களின் கீழ் ரயத்து
வாரி நிலவரித் திட்டம் அமுலாக்கப்படும்போது இறுதியில்,
இடைத் தரகர்களான ஜமீன்தார், இனாம்தார் போன்ற நிலச்
சுவான்தாரர்களுக்கு நட்ட ஈட்டுத் தொகை வழங்க வழிவகை
செய்துள்ளது. இத்தொகை நிலவரித் திட்டம் அமுலாக்கப்பட்ட
பிறகே நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, உடைமைகளை அரசு
எடுத்துக் கொள்ளும்போது இடைத் தரகர்களுக்கு (ஜமீன்தாரர்
இனாம்தார்) ஒரு தோராயமான தொகை வழங்கப்படுகிறது



இதற்கு 'இடைக் காலத்தொகை' என கூறப்படுகிறது. மத
நிலையங்கள், தர்ம சத்திரங்கள், கல்வி நிறுவனங்கள் போன்ற
வைகளுக்கு ஆண்டு தோறும் ஈட்டுத் தொகையாக கொடுப்பதற்கு
'தஸ்திக்படி' எனப்படும். இத்தொகை உடைமைகளின் ஆண்டு
அடிப்படைத் தொகையாக நிர்ணயம் செய்து சம்பந்தப்பட்ட
நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் பல்வேறு சட்டங்களின் கீழ் இதுவரை 20,816
உடைமைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு நிலவரித் திட்டம் அமு
லாக்கப்பட்டது. அவ்வுடைமைகளின் நிலச்சுவான்தாரர்களுக்கு
இறுதி நட்ட ஈட்டுத் தொகையாக இதுவரை ரூ. 7,67,96,954
பல்வேறு சட்டங்களின் கீழ் தீர்மானிக்கப்பட்டு வழங்கப்பட்
டுள்ளன. இதுபோல இடைக்காலத் தொகையாகவும்
ரூபாய் 2,45,90,313 வழங்கப்பட்டன.

மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களுக்கு அதாவது சமய
சார்புடைய நிறுவனங்கட்கு அவர்களது பணிகள் தடையின்றி
நடைபெறுவதற்கும், இச்சட்டத்தின்கீழ் ஏற்படும் நஷ்டத்தை
ஈடு செய்வதற்கும், 'தஸ்திக் படிகள்' ஆண்டு தோறும் வழங்கப்
படுகின்றன. இதுவரை ரூ. 21,15,585 தஸ்திக் படி வழங்கப்
பட்டுள்ளது.

பல்வேறு ஒழிப்புச் சட்டங்களின் கீழ் 'தஸ்திக்படி' இறுதி
நட்ட ஈட்டுத் தொகையை நிர்ணயிக்கும் பணி நிலவரித் திட்ட
இயக்குநரைச் சார்ந்ததாகும். ஒவ்வொரு உடைமைக்கும்
நிர்ணயிக்கப்பட்ட தொகையை தனித்தனியே ஒவ்வொன்றிற்கும்
அரசின் ஒப்புதல் பெறப்பட்டே வழங்கப்படுகின்றன. இதன்
நோக்கம் என்னவெனில் முன்னாள் ஜமீன்தார், இனாம்தார்,
மற்றும் நிலச்சுவான்தாரர்கட்கு இந்த ஒழிப்புச் சட்டத்தின் மூலம்
ஏற்படும் நட்டத்தை ஈடு செய்வதேயாகும். இதுமாதிரியே,
ஒழிப்புச் சட்டம் 30/63-ன் கீழ் சிறு இனாம்களை ஒழித்து,
தஸ்திக் படி நிர்ணயிக்கும் பணி நிலவரித் திட்ட அலுவலரால்
நிர்ணயிக்கப்படுகிறது. பெரும்பாலும் தமிழ் நாட்டில் எல்லா
உடைமைகளும் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டன. எஞ்சிய
ஒரு சில உடைமைகள் நீதிமன்ற தடையாணைகளால் பாதிக்கப்
பட்டுள்ளன. அவைகள் தடையாணை நீங்கிய பின் அரசால்
எடுத்துக் கொள்ளப்படும்.

தமிழ்நாடு, ஆந்திரா பிரதேசப் பிரிவினையை 'படாஸ்கர்
அவார்டு'-ல் செயல்படுத்திய வகையில் தமிழ்நாட்டிற்கு 112
உடைமைகள் வந்து சேர்ந்துள்ளன. மேற்படி உடைமைகளுக்கும்
இறுதி நட்ட ஈட்டுத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. நிலுவை
இனங்கள் முடிவுற்றவுடன் திருத்திய நட்ட ஈட்டு முன் மொழிவு
எப்பொழுது பெறப்படுகிறதோ அவ்வப்பொழுதே இப்பணியும்
முடிக்கப்பட்டு திருத்திய நட்ட ஈட்டுத் தொகையும் நிர்ணயிக்கப்
படுகின்றன.

சட்டம் XXXVI/48 பிரிவு 54 பி (பி)-ன் கீழ் முன்னாள் ஜமீன் நிலச் சுவான்தாரர்களுக்கு (ஆந்திரா, தமிழ்நாடு) மாநிலம் முழுமைக்கும் நட்ட ஈட்டுத் தொகை வழங்க 12½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஆந்திரப் பிரதேச அரசுடன் தமிழ்நாடு அரசு கடித தொடர்பில் உள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இதுவரை நட்ட ஈட்டுத் தொகையாக ரூ. 7,67,96,954 நிர்ணயிக்கப்பட்டு கொடுக்கப் பட்டுள்ளது.

1986–87 ஆம் நிதியாண்டின் ''ஏஏ. இழப்பீடு'' தலைப்பின் கீழ் ரூ. 1,50,000 ''ஏ.பி. இடைக்காலத் தொகை'' தலைப்பின் கீழ் ரூ. 75,000 ஒதுக்கப்பட்டுள்ளன. இதுநாள் வரை தொகை ரூ. 36,386 ''ஏஏ. இழப்பீடு'' என்ற தலைப்பிலும் தொகை ரூ. 18,900 ''ஏ.பி. இடைக்காலத் தொகை'' என்ற தலைப் பிலும் செலவழிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய தொகையை செல வழிக்க முடியாமைக்கு காரணம், சிவில், நீதிமன்றங்களில் உள்ள இனங்கள் முடிவுறாததினாலும் மற்றும் நிலுவையினங்கள் நீக்கப் பெறாததாலும்தான். இந்நிதியாண்டில் 1986–87-க்கு ''ஏஏ. இழப்பீடு தஸ்திக் படியைப் பொறுத்த வகையில் மத நிலையங் களுக்குத் தொகை ரூ. 27,50,000ம் தர்ம சத்திரங்களுக்குத் தொகை ரூ. 7,45,000ம் கல்வி நிறுவனங்களுக்கு ரூ. 11,000ம்'' நிதி ஒதுக்கீடு நிதியாண்டு 1986–87க்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

நிலவரித் திட்ட இயக்குநர் இழப்பீடு தொகையை நிர்ண யித்து சம்பந்தப்பட்ட எஸ்டேட் ஒழிப்பு மன்றத்தில் வைப்புத் தொகையாக அனுப்பப்பட்டுள்ளன. இம்மன்றங்கள் நில உரிமை தாரர்களுக்கு பல்வேறு சட்டங்களில் உட்பிரிவில் உள்ள அதிகாரங் களுக்கு இணங்க தொகை பிரித்து வழங்கப்படுகின்றன.

நில அளவைப் பணிகள்.

1. தமிழ்நாட்டில் உள்ள கிராமம் மற்றும் நகர்ப்புறங்களுக் குரிய வரைபடங்களைத் தயாரித்து, அவற்றைப் பராமரிப்பதும், தமிழ்நாடு நில அளவை மற்றும் பதிவேடுகள் துறையின் பொறுப் பாகும். விவசாயப் பகுதிகளிலும், நகரங்களிலுமுள்ள பகுதிகளி லும் தேவைக்கேற்ப மூல அளவை, மறு அளவை, அல்லது துணை அளவை இத்துறையால் மேற் கொள்ளப்படுகிறது. அவ்வாறு அளவைச் செய்து, கிராம படங்கள், வட்டப் படங்கள், மாவட்டப் படங்கள் மற்றும் நகரப் படங்கள் இத்துறையால் தயாரிக்கப்படுகின்றன. நகரப் படங்களுடன் மேலும் நகரிலுள்ள ஒவ்வொரு நபரின் நிலச் சொத்தின் எல்லைகள், பரப்பு முதலிய வைகள் அளவைச் செய்யப்பட்டு, தொடர் பகுதி, சிறு பகுதி, (பிளாக்), (வார்டு) மற்றும் நகர் படங்கள் தயாரிக்கப்படுகின் றன. கைப்பற்றிலுள்ள நிலங்களின் அன்றாடம் ஏற்படும் பாகப்



பிரிவினை, விற்கிரையம், பரம்பரை உரிமை தானமாகக் கொடுத் தல் அல்லது பரிவர்த்தனை போன்றவற்றால் ஏற்படும் மாறுதல் களை சம்பந்தப்பட்ட ஆவணங்களில் மேற்கொண்டு அவற்றைப் பராமரித்து வருவதும் இத்துறையின் பொறுப்பாகும்.

2. நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர், நில அளவைத் துறை பிரிவிற்கும் தலைவர் ஆவார். அவருக்கு நில அளவைத் தொடர்பான நில அளவைப் பிரிவு செயல் முறை அளவைத் தொடர்பான நில அளவைப் பதிவேடுகள் துறை, கூடுதல் களில் உதவுவதற்கு நில அளவைப் பதிவேடுகள் துறை, இத்துறையில் மூன்று மண்டல இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர்களின் கீழ் மாவட்ட நில துணை இயக்குநர்களும் பணியாற்ற 20 உதவி இயக்குநர் அளவை அலுவலகங்களில் உள்ளனர். தலைமை களும், 10 தனி உதவி இயக்குநர்களும் அலுவலகம், பிடமாகிய சென்னையில், நில அளவை மத்திய இயக்குநரின் கீழ் ஒரு துணை இயக்குநரின் (தற்போது இணை இயக்குநரின்) வரைப் இயங்கி வருகிறது. இவ்விணை இயக்குநருக்கு உதவியாக பிரிவுக்கு ஒரு பட பிரிவுக்கு ஒரு உதவி இயக்குநரும், ஆவணப் பிரிவுக்கு ஒரு உதவி இயக்குநரும், நிழற்பட சிங்கோ அச்சகத்திற்கு ஒரு பணி மேலாளர் மற்றும் அலுவலக நிர்வாகத்தை நிர்வகிக்க ஒரு நிர் வாக அலுவலரும் செயல்பட்டு வருகின்றனர். இவ்வலுவலகம், அரசுத் துறை சம்பந்தப்பட்ட படங்களைத் தயாரிப்பதுடன், வருவாய்த்துறை மற்றும் நில அளவைத் துறை ஆகியவற்றிற்கும் தேவையான கருவிகளையும், இதர பொருட்களையும் வாங்கி வழங்குவதற்கான பணிகளையும் மேற்கொண்டுள்ளது. இத் துறை வரைபடம் மற்றும் கார்டோகிராபிக் வரைபடம் தயாரிக்க தனித் திறமைகளைக் கையாள்வதன் மூலம் தயாரிப்புத் தன்மை யின் தரத்தை மேம்படுத்தும் வகையில், நவீன வரைபடக் கருவி கள் மற்றும் ''வான் நிழற்பட வரைவு'' (ஏரியல் போட்டோ கிராப்) மூலம் வட்ட வரை படங்களைத் தயாரிக்கலாம் எனக் கருத்துக் கொண்டுள்ளது.

3. துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள்.

(i) நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் :

மறு நில அளவை மற்றும் மறு நிலவரித் திட்ட பணியினை 30 வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளும் அரசின் கொள்கை கைவிடப்பட்டது. விவசாய கிராமங்களுக்காக மூல கிராமப் புதி வேடுகள், நிலவரித் திட்ட பதிவுருக்கள், புலப்படச் சுவடிகள் மற்றும் கிராமப் பதிவேடுகள், குடியிருப்பு பதிவுருக்கள், புலப் படச் சுவடிகள் மற்றும் கிராம வரைப்படங்கள் நாற்பது முதல் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்டதால், தற்காலத் திற்கு ஒவ்வாததாகவும், உபயோகமற்றதாகவும் ஆகிவிட்டன. மேலும், விற்கிரையம், பரம்பரை உரிமை, பாகப்பிரிவினை, ஆகியவைகளால் எண்ணற்ற நில உட்பிரிவுகள் உண்டானதால், திருத்தப் பதிவு பல காரணங்களாலும், சரியான முறையில்

[1987 ஏப்ரல் 22

கிராமப் பதிவேடுகளில் பதியப்படவில்லை. மறு நில அளவை மேற் கொள்ளாததால், நில அளவைப் பதிவு ஆவணங்களை அன்றாட நிலைக்கேற்ப மாற்றி அமைப்பது மிக அவசியம் என உணரப்பட்டது. இந்நோக்கத்தைக் குறைந்த செலவில் செய்து முடிக்க ''நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்'' 1979-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத் திட்டத்தின் கீழ் கிராமத்திலுள்ள எல்லா பயிர்விளை நிலங்களிலும் துணை அளவை மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் துணை அளவையுடன் வருவாய்த் தொடர் பணியும் ஒருங்கே இணைத்து ஒரே துறைப் பணியாளர்களால் நடைபெற்று வருகின்றது. இத்துறையால், புதிய பதிவேடுகளும், பட்டாதாரருக்கு பட்டா வழங்கும்போது, பட்டாவுடன் அன்னாரின் நிலத்தினைக் காட்டும் தோராய வரைபடம் மற்றும் அளவைகள் கொண்ட புதிய பட்டா பட்டாதாரருக்கு வழங்கப்படுகிறது.

இத் திட்டம், 1979-ல் குறைந்த எண்ணுள்ள வட்டாட்சியர்களை அரசு அனுமதித்து நில அளவை துறையில் உள்ள பணியாளர்களைக் கொண்டு 28 அலகுகளில், 1-6-1979-ல் அரசால் அறிமுகப்படுத்தி, பணி மேற் கொள்ளப்பட்டது. 1982-ல் அரசு ஆய்வுக்குப் பின் இத்திட்டத்தை புதியத் திட்டத்தின் மூலம் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்த அரசு தீர்மானித்தது. இந்நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தில் தற்போது சுமார் 10,000 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

முதற் கட்டமாக, இத் திட்டம் 100 வட்டங்களிலுள்ள, 70,485 சதுர கிலோ மீட்டரில் பணி மேற் கொள்ளப்பட்டு, 31-3-1986-ல் பணி முடிந்துள்ளது. உயர்நீதி மன்ற தடையாணையில் உள்ள 12 சதுர கிலோ மீட்டர்கள் தவிர, மற்ற எல்லாப் பகுதிகளுக்கான பதிவுருக்கள் மத்திய நில அளவை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. முதற் கட்டப் பணியில் 73,34,000 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 1,09,44,518 நபர்கள் பயனடைந்து உள்ளனர்.

இம் முதற் கட்டப்பணி, முடிவு நிலையில் உள்ள போதே தீவிர உட்பிரிவுத் திட்டப்பணி நடைபெற்ற • இடங்களாகிய இணைப்பில் குறிப்பிட்டுள்ள 49 வட்டங்களில், அரசு இத்திட்டத்தை தொடர நீட்சியில் அனுமதித்துள்ளது. பிரிவு (பேட்ச்) பிரிவாக பணியாளர்களை முதற் கட்டப்பணி முடிய இரண்டாம் கட்டப் பணிக்கு அனுப்பி, நில அளவைப் பணியினை மேற்கொள்ளச் செய்து, 15-11-1985-ல் தொடரப்பட்டு தற்போது, 14 மாவட்டங்களிலுள்ள 49 வட்டங்களையும் அலகுகளாகப் பிரிக்கப்பட்டு, 1-4-1986 முதல் முழுப் பணியும் சுறுசுறுப்பாக நடைபெற்று வருகிறது.



1987 ஏப்ரல் 22]

இப்பணியில் 27,000 சதுர கிலோ மீட்டரில் பணித் தொடர்ந்ததில், இந்நாள் வரை 21,397 சதுர கிலோ மீட்டர்கள், 31-12-1986 முடிய அளக்கும் பணி முடிந்துள்ளது. இப்பணி மூலம் 8,19,238 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 12,82,985 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் பயன்கள் :**

நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தால் விவசாயிகள் எண்ணிறைந்த நன்மைகள் பெற்றுள்ளனர். மேலும், இதனால் வருவாய் நிர்வாகத்திற்கும் பயன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

(அ) நில உரிமையாளர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. அப்பட்டாவில் நிலத்தின் படமும், நில அளவும் குறிப்பதுடன், அந்நிலத்தின் அடையாளம் எளிதாகத் தெரிந்து கொள்ளும் வகையில், பக்கத்திலுள்ள நில வரையும், வடபுறம் பட்டாதாரரின் பெயர்களையும் குறித்துள்ளோம்.

(ஆ) கூட்டு உடைமைகள் தனி உடைமையாக மாற்றப்பட்டது. முதல் நில உட் பிரிவு பிரிப்பதற்கு மனுவோ அல்லது கட்டணமோ இன்றி நில அளவைச் செய்யப்படுகிறது. கூட்டுப் பட்டாக்களிலிருந்து தனிப் பட்டாக்கள் பிரிக்கப்பட்டு, பட்டாக்களுடன் நில வரைபடமும், விவசாயிகளுக்கு வழங்கி, அவர்கள் கடன்தரும் நிறுவனங்களிலிருந்து நிதி உதவி பெறவும் வழிவகை செய்கிறது.

(இ) கிராமத்தின் அடிப்படை நிலப் பதிவுருக்கள், 'ஏ' பதிவேடுகள், நில அளவைப் புத்தகம், நிலவரித் திட்டக் (சிட்டா) குறிப்பேடு மற்றும் கிராமப் படம் புதுப்பிக்கப்பட்டு, அடுத்த முப்பது ஆண்டுகளுக்கு பயன் விளையும்படிச் செய்கிறது.

(ஈ) இத் திட்டம், நாளைய தேதி வரை நிலப் பதிவேடுகள் நன்கு தயாரித்து முடிப்பதற்கு வசதியாக இந்திய அரசின் புதிய 20 அம்சத் திட்டத்தின் 5-வது சரத்தின்படி செயல்பட்டு வருகிறது.

(உ) பட்டா பாஸ் புத்தகத் திட்டம், அறிமுகப்படுத்த நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் வழி வகுக்கிறது.

(ஊ) இந்நில உடைமையால் மறைந்த அளவை எல்லைக் கற்கள் புதுப்பிக்கப்பட்டு, அளவை அமைப்பு பணியை பராமரிக்கிறது.

(எ) அனைத்து ஆக்கிரமிப்புகளை அடையாளம் கண்டு, வருவாய்த்துறைக்கு அறிவிக்கப்படுகிறது. அதனால், ஆக்கிரமிப்புக்களை முறையாக்குதலோ அல்லது வெளியேற்றுவதோ ஒவ்வொரு இனத்தின் இயற்கை தன்மையைப் பொறுத்து அமையும்.

(ஏ) புல்திநி பட்டா நிலங்கள் மற்றும் வேறு நிலங்களில் நன்செய்யை புன்செய்யாகவும், புன்செய்யை நன்செய்யாகவும், பட்டா நிலங்களை அரசு நிலங்களாகவும் (புறம்போக்காகவும்) மாற்ற தேவை ஏற்பட்டால், அதனை அறிந்து வருவாய்த்துறைக்கு மேல் நடவடிக்கைக்காக தெரிவிக்கப்படுகிறது.

(ஐ) இத்திட்டம், கிராமப்புற மக்களுக்கு கிராம அளவில் வேலை வாய்ப்பினை வழங்குகிறது. மேலும் இத் திட்டத்தால், 7,500 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது. இத் திட்டத்தால், சங்கிலி பிடித்து அளக்கவும், அளவைக் கற்களை நிலங்களுக்குத் தூக்கிச் செல்லவும், கற்களை புதைப்பதற்கும் 20,000-க்குப் மேற்பட்ட பணியாளர்கள் தினக் கூலியாகப் பணியாற்றி பயன் பெற ஏதுவாகிறது.

நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் செலவு :

முந்தைய கட்டப் பணியாக 70,485 சதுர கிலோ மீட்டரில் பணி மேற் கொள்ளப்பட்டது. அதற்காக ரூ 3,305·20 இலட்சங்கள் செலவிடப்பட்டது. அதில் ரூ. 2,136·56 இலட்சங்கள் விவசாயிகளிடமிருந்து மீள் வசூலிக்கப்பட வேண்டியவையாகும் ஒவ்வொரு விவசாயியும் நன்செய் நிலம் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 58·20 (ஒரு ஏக்கருக்கு ரூ. 23.60) யும் புன்செய் நிலம் ஹெக்டேர் ஒன்றிற்கு ரூ. 38.80ம் (ஒரு ஏக்கருக்கு ரூ. 15.70) செலுத்த வேண்டும். விவசாயிகளிடமிருந்து 30–11–1986 வரை வசூலித்த தொகை ரூ. 567.68 இலட்சங்கள் ஆகும்



நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டப் பணியின் டிசம்பர் 1986-லும் 31–1–1986 வரையிலும் பல்வேறு பணிகள் விவரம் பின்வருமாறு:—

| | 1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில். | | 1986 ஆம் ஆண்டு டிசம்பர் 31 முடிய. | |
|---|---|---|---|---|
| | கிராமங்களின் எண்ணிக்கை. | பரப்பளவு சதுர கிலோ மீட்டரில். | கிராமங்களின் எண்ணிக்கை. | பரப்பளவு சதுர கிலோ மீட்டரில். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 திட்டப் பணியில் வரும் மொத்த பரப்பளவு. | .. | .. | 4,907 | 27,770 |
| 2 அளவைச் செய்யப்பட்ட பரப்பு (இடமுந்தும் உட்பட). | 334 | 1,787 | 3,487 | 21,397 |
| 3 பட்டா வழங்கப்பட்ட பரப்பு .. | 342 | 1,959 | 1,470 | 7,800 |
| 4 அரசு கணக்குகள் வருவாய்த் துறைக்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பு. | 378 | 1,995 | 1,150 | 5,796 |
| 5 மத்திய நில அளவை அலுவலகத்திற்கு அனுப்பிய மூல பதிவேடு களிலுள்ள நில பரப்பளவு. | 195 | 1,238 | 435 | 2,300 |
| 6 13-வது பிரிவு விளம்பரம் செய்யப்பட்ட இடத்தின் பரப்பளவு. | 120 | .. | 367 | .. |
| 7 அளக்கப்பட்ட உட்பிரிவுகளின் எண்ணிக்கை. | 1,45,042 | | 18,16,224 | |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 8 புதுப்பிக்கப்பட்ட கற்களின் எண்ணிக்கை. | .. | 51,017 | .. | 5,89,353 |
| 9 ஆக்கிரமிப்பு தெரிவிக்கப்பட்ட எண்ணிக்கை. | .. | 2,337 | .. | 22,507 |
| 10 முடிக்கப்பட்ட ஆட்சேபணைகளின் எண்ணிக்கை. | .. | 7,787 | .. | 38,747 |
| 11 அளந்துக் குறிக்கப்பட்ட விளக்கிகளின் எண்ணிக்கை. | .. | 15,841 | | 2,17,431 |
| 12 தரமாற்றம் தேவையான இனங்களின் எண்ணிக்கை. | .. | 783 | .. | 11,277 |
| 13 வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை. | .. | 2,15,109 | .. | 8,19,890 |
| 14 பயனடைந்தோர் எண்ணிக்கை. | .. | 3,22,016 | | 12,82,985 |
| 15 திட்டத்தின் பயன்— | | | | |
| | | தனிப்பட்டா. | கூட்டுப்பட்டா. | மொத்தம். |
| (அ) நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்பு. | | 4,30,992 | 2,38,799 | 6,69,791 |
| (ஆ) நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்திற்கு பின்பு. | | 5,90,470 | 2,28,768 | 8,19,238 |





(இ) நில அளவைப் பதிவேடுகள் பராமரிப்புப் பணி :

வருவாய்த்துறைப் பணியாளர்கள் மற்றும் நில அளவைத் துறைப் பணியாளர்களின் உதவியுடன் வட்டாட்சியர்கள், நில அளவை மற்றும் பதிவேடுகள் பராமரிப்புப் பணியினை கவனித்து வருகிறார்கள். பட்டா மாற்றங்களால் நிலங்களில் உட்பிரிவு ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும், பொதுமக்கள் தங்கள் நிலத்தின் எல்லைகளை காட்டவும், எல்லையினைப் பார்வையிடவும், மற்றும் எல்லைக் கற்களைப் புதுப்பிக்கவும், மனுக்கள் கொடுத்தால், அவைகளைப் புதுப்பித்தல் ஆகிய பணிகளை பராமரிப்புப்பணி மேற்கொண்டுள்ளது.

கிராமம் முதல் மாநிலம்/தேசியம் அளவில் எல்லைகளை அறிய தீவிரக் கவனத்துடன் பராமரிப்புப் பணியினை மேற்கொள்ளல் மிக அவசியமாகும். உண்மையிலேயே விவசாயிகளின் நிலங்களிலுள்ள அளவுபடியே வருவாய்ப் பதிவேடுகளில் இல்லையானால், விவசாயிகள், கூட்டுறவு மற்றும் விவசாயத்துறையைப் போன்ற துறைகளிலுள்ள நிதி நிலையங்களில் விவசாயத்திற்காகக் கடன்கள் பெற்று, விவசாயப் பணியை செவ்வனே செய்வது மிக சிரமமாகும். தற்போது, பராமரிப்புப் பணியாளர்களில் 50 சதவீதம் பணியாளர்கள், நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டப் பணிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அதனால், அன்றாட பராமரிப்புப் பணி பழைய நிலையிலேயே உள்ளது. நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டப் பணியால், அதிக நிதி செலவிடப்பட்டுத் தயாரிக்கப்பட்டப் பதிவேடுகள் சரிவர பராமரிக்கப்படாமல் போயின் இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேறாமல் போகும்.

இத்திட்டத்தின் பயன் குறித்து அரசு முதற்கண் செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணி வட்டத்திலும், மதுரை மாவட்டத்தில் மேலூர் வட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்தில் ஓசூர் வட்டத்திலும், பரிட்சார்த்த முறையில் செயலாக்கியது. இம்முன்னோடி திட்டத்தின் பயன் குறித்து பகுத்தாய்வு குழுவின் அறிக்கையுடன் பெற்று அரசு ஆழ்ந்து பரிசீலித்து பராமரிப்புப் பணி திட்டத்தினை 1—4—1987 முதல் இரண்டு கட்டங்களில் செயலாக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி முதற்கட்டமாக நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டப் பணி முடிந்த 100 வட்டங்களிலும் பின்பு இரண்டாம் கட்டப் பணியாக நடைபெற்று வரும் 49 வட்டங்களிலும் ஏனைய 20 வட்டங்களிலும் அறிமுகப்படுத்த வேண்டும்.

இத்திட்டத்தில் வட்ட அளவிலும், பிர்கா அளவிலும் கீழ்க்கண்ட பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்—

வட்ட அளவில்.

1. துணை ஆய்வாளர் .. ..
2. நிலப்பதிவேடு வரைவாளர் .. ..
3. புல உதவியாளர் .. ..

[1987 ஏப்ரல் 22

பிர்கா அளவில் :

பிர்கா அளவர்—ஒரு பிர்காவிற்கு ஒருவர். இத்திட்டம்
அமுல்படுத்தப்பட்ட பிறகு நில உடமை மேம்பாட்டுத் திட்டத்
தின் வாயிலாக ஏற்படுத்தப்பட்ட நிலப் பதிவேடுகள் [illegible]
முறையில் பராமரிக்கப்படும் என்று அரசு கருதுகிறது.

நாட்டுக்கு நல்ல பயனளிக்கும் இப்பராமரிப்புப் புனரமைப்பு
பணி கொண்டு வருவதால், பலவித கட்டணங்களையும் வசூலிப்
பதோடு, இப்பணியினை செய்பவர்களுக்கு ரூ. 81.12 இலட்சங்
களே செலவாகும்.

(iii) நத்தம் அளவை :

தற்போதுள்ள கிராம நத்தம் பரப்பினை இத்துறையால்
விரிவாக அளவைச் செய்யப்படவில்லை. நத்தம் மற்றும்
பொது கட்டிடங்களில் எல்லைக் காண்பிக்கும் குறிப்பு மட்டும்
தான் உள்ளது. பட்டா பாஸ் புத்தகச் சட்டத்தின் மூலம்
வீட்டு மனைகளுக்கும் பட்டா வழங்கலாம் என அரசு கருதி
யுள்ளது. எனவே, நத்தத்தையும், பயிரிடப்படாத விவசாய
நிலங்களையும் விரிவாக அளவைச் செய்யத் தீர்மானிக்கப்பட்
டுள்ளது.

இந்த நத்தம் அளவையால், குறிப்பாக, ஆதி திராவிட
விவசாயிகளிடமுள்ள நிலங்களின் உரிமை பெற பயனுடையதாக
அமையும். எனவே, அரசு ஆய்வுப் பணியாக, செங்கல்பட்டு
மாவட்டத்தில் சைதாப்பேட்டை வட்டம், திருச்சி மாவட்டத்
தில் திருச்சி வட்டம், மதுரை மாவட்டத்தில் மதுரை வடக்கு
வட்டம் ஆகிய மூன்று இடங்களைத் தேர்வு செய்து, அவை
களில் நில அளவைப் பணியால் பயன் விளைவு கவனிக்கும்
பொருட்டு, 1-11-1986 முதல் பணி மேற்கொள்ளப்பட்டது.
இதற்கான அறிக்கை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டு, பணிக்
தாய்வுக் குழுவின் ஆய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்
குழுவின் அறிக்கை பெறப்பட்டபின், மேற்படி திட்டத்தினை
மாநிலத்தில் அமுல்படுத்துவது குறித்து முடிவு மேற்கொள்ளப்
படும்.

(iv) மலைப் பகுதிகளில் மறு நில அளவை :

நடைபெற்றுக் கொண்டிருக்கும் நில உடமைப் பதிவு மேம்
பாட்டுத் திட்டத்தின் துணை அளவையால் நில அளவைப் பதி
வேடுகள் நாளையத் தேதி வரை தயாரிக்கப்பட்டு, திருத்தப்
படுகிறது. கிராமங்களில் ஏற்கனவே உள்ள அளவை வடிவமை
புப்பணியின் முக்கியத்துவத்தைக் கவனிக்காமல் துறை அளவை
யும் மேற்கொள்ளாமல் விட்டு விட்டதால் அவ்வளவைச் சீர்
கெட்டு விட்டது. எனவே, புதிய கிராம வரைபடங்கள் தயாரிக்க
மறு நில அளவை மேற்கொள்ள வேண்டும். இக் கிராமங்கள்



1987 ஏப்ரல் 22]

பெரும்பாலும் ஆதிவாசிகள் வசித்து வருகின்ற மலைப்பகுதி
களாகும். அவைகள் ஏற்காடு, சேலம், திருச்சி முதலிய
மாவட்டங்களிலுள்ள 80 மலைச் சார்ந்த கிராமங்கள் உள்ளன.
அவ்விடங்களில் 1889 முதல் 1910 வரை பலவித முறையில்
அளவை செய்யப்பட்ட நிலையிலேயே உள்ளது. நில அளவைப்
பதிவேடுகள் அனைத்தும், இன்றைய நிலைக் கேற்றதாக
இல்லை. இம்மலைக் கிராமங்களின் அரணாகவுள்ள அரசு
புறம்போக்கு நிலம் மற்றும் மலைக்காடுகள் அனைத்தும் அளவை
செய்யாமலே உள்ளது. அந்த பரந்த மலையிடங்கள் அனைத்தும்
மலைவாழ் ஆதிவாசி மக்களால் 50 முதல் 80 ஆண்டுகளாக
வெள்ளாமை பயிர் தொழிலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது என
அறிவிக்கப்பட்டது. வெள்ளாமை பயிர் தொழிலின் கீழ் உள்ள
நிலங்கள் அனைத்தும் அளவைச் செய்யாமலும், அவைகளை
அங்கீகரித்து பட்டா வழங்காமலும் அம்மக்களிடம் உள்ளன.
மறு அளவை மற்றும் வருவாய்த் தொடர் பணிகள் மேற்கொண்டு,
அம்மலைவாழ் மக்களுக்கு நல்வாழ்வினைக் கருத்தில் கொண்டு,
அவர்களின் நிலங்களை வரன்முறைச் செய்யப்பட உள்ளது.

(v) நகர அளவை :

நகர அளவையோ அல்லது மறு நகர அளவையோ, நில
அளவைத் துறையால் விரிவாக மேற்கொண்டு, அளவைப்
பதிவுருக்கள் தயாரிக்கப்பட்டு, நில அளவைப் பணியாளர்களின்
உதவியுடன் வருவாய்த்துறை நகர அளவையினை பராமரித்து
வருகிறது. உள்ளாட்சித் துறையினால் அளவைச் செலவினில்
ஒரு பகுதியை வழங்குவதாக ஒப்புக் கொண்டபின் இந்நகர
அளவை மேற் கொள்ளப்படுகிறது.

பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட நகர பஞ்சாயத்து மற்றும்
பஞ்சாயத்திலுள்ள தெருக்களையும், சந்துகளையும், தெரு
அளவை என்ற பெயரில் அளவைச் செய்யப்படும். நகரப்
பஞ்சாயத்துக்கள் தங்கள் தீர்மானத்தில் நில அளவைச் செல
வினில் 1/3 பாகச் செலவினை ஏற்றபின் இந்நகரத் தெரு அளவை
மேற் கொள்ளப்படுகிறது.

இந்நகர அளவை, சேலம் மாவட்டத்தில், குமாரபாளையம்
அக்ரஹாரம், செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆவடி, அம்பத்தூர்,
ஆகிய இடங்களில் நகர அளவை நடைபெற்று வருகிறது. இதே
போன்று செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மாதவரம், கத்தி
வாக்கம், தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரி, திருநெல்வேலி
மாவட்டத்தில் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் இந்நகர
அளவைத் திட்டத்தினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 1,900 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உள்ள
100 நகராட்சி மற்றும் நகரிய குழுக்களும் இருக்கின்றன. இவற்றில்
1,800 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உள்ள 76 நகராட்சி
கள் 1901 முதல் 1930 வரை நகர அளவைத் திட்டத்தின்

இது அளவைச் செய்யப்பட்டது. மீதமுள்ள 700 சதுர கிலோ மீட்டர்கள் பரப்பளவுள்ள 33 நகராட்சிகள் இன்றுவரை நகர அளவை மேற்கொள்ளப்படவில்லை. ஏற்கனவே நகரங்களில் செய்த அளவைப் பணி நகராட்சிக்குள்ளேயே விரிவு பெறாமல் உள்ளது. மேலும் பழைய நகரங்களில் தோராயமாக 1/3 பகுதி விரிவடைந்து உள்ளது. அவை 400 சதுர கிலோ மீட்டர் பரப்பளவாகும். வட்டங்களில் உள்ள பல கிராமங்கள் நகரத்தையும் மாநகரத்தையும் ஒட்டியிருப்பதால், அவைகள் மிக விரைவில் நகர நிலையில் மேம்பாடு அடைந்துள்ளது. பெரும்பாலான கிராமங்கள் 75 ஆண்டுகளுக்கு முன் நில அளவை செய்யப்பட்டது. அளவைப் பதிவுருக்கள் மிகவும் சீர்கெட்ட நிலையிலும், தொடர் பணிக்கு உதவாத நிலையிலும் உள்ளது.

சென்னை மாநகரம் மற்றும் பெரிய நகரங்களாகிய மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்கள் மிக வேகமாக வளர்வதால், விவசாய நிலங்கள் வீட்டு மனைகளாக்கப்பட்டு வீட்டுக் காலனிகளும் தொழில் நிறுவனங்களும் ஏற்பட்டுள்ளன. இவைகளில் நில அளவைப் பணி இனிச் செய்யப்படும்.

பல பஞ்சாயத்துக்கள் மற்றும் நகர பஞ்சாயத்துக்கள், எங்கும் உள்ள மக்கள் பெருக்கம் அதிவேகமாக வளர்ந்துள்ளது. இதனால் இவைகள் நகராட்சி அந்தஸ்துக்கு உயர்ந்துள்ளது. அவைகளுக்கு மக்கள் உற்பத்திக்கேற்ப நகர வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

மேற்காணும் காரணங்களால், 109 நகரங்களிலும் மற்றும் 3 மாநகரங்களிலும் முதன்மை அளவை நகர நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் தொடர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

4. நில அளவை பயிற்சிப் பள்ளி :

இத்துறையின் நன்குறிக்கோளினால், நில அளவைப் பயிற்சிப் பள்ளி, தஞ்சையிலுள்ள ஒரத்தநாட்டில், ஆரம்பிக்கப்பட்டது. இப் பள்ளியின் வருவாய் மற்றும் பல பிறத்துறைப் பணியாளர்களுக்கு நில அளவைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் இ.ஆ.ப. மற்றும் தகுதிகாண் பருவத்திலுள்ள துணை மாவட்ட ஆட்சியர் ஆகியவர்களுக்கும் நில அளவைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பள்ளி, ஒரத்தநாட்டிலுள்ள பட்டதாரி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி வளாகத்திலுள்ள கட்டிடத்தில் நடைபெற்று வருகிறது. இப்பள்ளிக்கும் இங்கு பயிலுபவர்கள் தங்குவதற்கும், கட்டிடம் கட்டுவதென்று நோக்கமுள்ளது. எனவே, இத்துறை மேற்காணும் பட்டதாரி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி வளாகத்தில் உள்ள காலி இடத்தில் புதிய கட்டிடம் ஒன்றை கட்ட தீர்மானித்துள்ளது.





5. நிழற்பட சிங்கோ அச்சகம் :

நிழற்பட நாகத் தகடு (சிங்கோ) அச்சு கல்வரைவு (லித்தோகிராபிக்) தொழில் நுணுக்கத்துடன் அரசுத் துறைகளுக்குத் தேவையான படங்கள், அட்டவணை படங்கள், முதலியவற்றையும் கிராமம், வட்டம் மற்றும் நகரப் படங்கள் கருப்பு வண்ணம் மற்றும் ஆறு வண்ணங்களில் மறு பதிப்புச் செய்து அச்சிடுவது நிழற் பட துத்தநாகத் தகடு அச்சகத்தின் முதன்மையானப் பணியாகும். இதைத் தவிர, அரசின் பிற துறைகளும் உள்ளாட்சித்துறை, மற்றும் பிற மாநிலங்களின் அரசுகள் கேட்கும் படங்களையும் அச்சிட்டுத் தரும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. பிற அரசுத் துறைகளுக்காக அச்சிடும் பணிக்கான செலவு நில அளவைத் துறையிலேயே நிதி ஒதுக்கீடு செய்வதால், பிற துறைக்காகச் செய்யப் பெறும் பணிக்காகும் செலவுத் தொகையை சரிக்கட்டும் பட்டியல் மூலம் வசூலிக்கப்படுகிறது. இவ்வாறாக நிழற்படத் துத்தநாகத் தகடு (சிங்கோ) அச்சகம், அரசுக்கு வருவாய் ஈட்டித் தரும் அலகாக இயங்கி வருகிறது.

மேற்படி அச்சகம் பணி மேலாளர் மேற்பார்வையிலும், உதவி பணி மேலாளர், மற்றும் பலப் பிரிவு பணியாளர்களின் உதவியுடன் இயங்கி வருகிறது. இவ்வச்சகம், கிராம வரை படங்களை 1:5000 என்ற மெட்ரிக் விகிதத்தில் நிழற்படம் எடுத்து மறுப் பதிப்பு செய்யப்பட்டு வருகிறது.

6. பண்டக நிர்வாகப் பிரிவு :

நில அளவை மற்றும் பிற துறைகளுக்கு, குறிப்பாக, வருவாய்த் துறைகள், பராமரிப்புப் பிரிவு, தனி அளவைப் பிரிவு நில அளவை பணியாளர்களுக்கும், வருவாய்த்துறைப் பணியாளர்களுக்கும் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் தேவைப்படும் தியாடலிட், வரைபடக் கருவி, சங்லி மற்றும் கிராஸ் டாப், அனைத்தும் துறைகளின் தேவைக்கேற்ப மத்திய நில அளவை அலுவலகத்தால் வாங்கி வழங்கப்படுகிறது.

இத் துறை நவீன உத்திகளைக் கையாண்டு, நாளது தேதி வரை நில அளவை பதிவுருக்களை பேணுவதற்காக மைக்ரோ கம்பியூட்டரின் உதவியால், தயாரித்து, நிழற்படச் சிங்கோ அச்சகத்தாலோ அல்லது பிரதான எல்லைக்கோடு முறையிலோ (ஆப்செட்) அச்சிட்டு வரை படங்களை சேமித்து வைக்கப்படுகிறது. இத்துறை ஏற்கனவே வரைபட நகல்களை விரைவில் எடுக்கும் நகல் எடுப்பு இயந்திரம் மூலம் நகல் எடுத்து வழங்கிக் கொண்டிருக்கிறது.

தற்காலத்தில் மக்களிடையே வரைபடம் பற்றிய உணர்வுகள் பரவியும், அவைகளின் தேவைகளும் அதிகரித்துள்ளன. மேற்காணும் காரணத்தினால் வரைபட உற்பத்தியைப் பெருக்கி

மக்களின் அதிகத் தேவைகளை விரைவில் பூர்த்தி செய்ய இவ் வரைப்பட பிரிவினை நவீனமாக்க இத்துறை எண்ணியுள்ளது. எனவே, வரைபடங்கள் தயாரிக்கும் நோக்கோடும் அழகிய வரைபட நவீனக் கருவிகள் (கார்ட்டோ கிராபிக் இன்ஸ்ட்ருமெண்ட்டு) வாங்குவதென தீர்மானித்துள்ளது.

(1) ரோட்டரிங் நம்பர் ஸ்கிரைபர்.

(2) ஜியோடெடிக் தூரம் அளக்கும் கருவி.

(3) மத்திய நில அளவை அலுவலகத்தில் பணிபுரிய நவீன கார்ட்டோகிராபிக்.

(அ) மிரர் ஸ்டீரியோஸ்கோப் வித் பைனாகுலர்.

(ஆ) பாக்கெட் ஸ்டீரியோஸ்கோப்.

(இ) ஆப்டிக்கல் ரிப்பளக்டிங் புரொஜக்ஷன்.

(4) இண்டர் பெர்டன் கேசம்.

(5) பேரலல் பார்.

(6) ஸ்கெச் மாஸ்டர்.

ஆண்டுக் குறியீடுகள் நிர்ணயித்தல் :

அரசினால் வகுக்கப்படும் திட்டங்கள் செவ்வனே நடைபெற வேண்டும் என்ற கருத்துடன் 1985–86 ஆண்டு முதல் இவ்வரசு ஒவ்வொரு துறைக்கும் அத்துறை சம்பந்தப்பட்ட பணிகளுக்கு குறியீடுகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற முடிவு மேற்கொண்டுள்ளது. இதற்கிணங்க நில அளவை திட்ட துறையிலும் 1985–86 மற்றும் 1986–87 ஆம் ஆண்டுகளில் இத்துறையினைச் சார்ந்த பல்வேறு பணிகளுக்கு குறியீடுகள் நிர்ணயிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இக்குறியீடுகளுக்கு எதிராக நில அளவை திட்டத்துறை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து பிரதி திங்களிலும் ஆய்வுரைகள் அரசினால் வழங்கப்பட்டு வருகின்றன. இத் திட்டப் பணியில் சிறப்பான முன்னேற்றம் கண்டுள்ள இனங்கள், பணியில் பின் தங்கியுள்ள இனங்கள் ஆகியவைகளில் ஆய்வுரைகள் தெளிவாகக் குறிப்பிட்டு இப்பணிகள் மேலும் சிறப்புற செயல்படுத்துவதற்கான அறிவுரைகள் வழங்குதல் இவ்வாய்வுரைகளின் குறிப்பான அம்சமாகும்.

அரசின் முடிவுப்படி 1987–88 ஆம் ஆண்டிற்கும் நில அளவை பல்வேறு துறையின் பணிகளுக்கான குறியீடுகள் நிர்ணயிக்கப்படும்,



இரண்டாவது கட்ட திட்டப் பணியில் 15–11–1985 முதல் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணி எடுத்துக் கொண்ட 49 வட்டங்கள்:—

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | வட்டத்தின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1 செங்கற்பட்டு .. .. | 1. பொன்னேரி. |
| | 2. காஞ்சிபுரம். |
| | 3. செங்கல்பட்டு. |
| | 4. சைதாப்பேட்டை. |
| | 5. ஸ்ரீபெரும்புதூர். |
| | 6. உத்திரமேரூர். |
| 2 வட ஆற்காடு .. .. | 7. வேலூர். |
| | 8. செங்கம். |
| | 9. குடியாத்தம். |
| 3 தென்னாற்காடு .. .. | 10. செஞ்சி. |
| 4 தஞ்சாவூர் .. .. | 11. பாபநாசம். |
| | 12. வலங்கைமான். |
| | 13. கும்பகோணம். |
| | 14. திருவிடைமருதூர். |
| | 15. நன்னிலம். |
| | 16. திருவாரூர். |
| | 17. குடவாசல். |
| | 18. தரங்கம்பாடி. |
| | 19. மயிலாடுதுறை. |
| | 20. சீர்காழி. |
| 5 தர்மபுரி .. .. | 21. கிருஷ்ணகிரி. |
| | 22. ஊத்தங்கரை. |
| | 23. அரூர். |
| 6 மதுரை .. .. .. | 24. திருமங்கலம். |
| | 25. மதுரை (வடக்கு). |
| | 26. மதுரை (தெற்கு). |
| 7 அண்ணா .. .. | 27. மேலூர். |
| | 28. நத்தம். |

| (1) | (2) |
| --- | --- |
| 8 பசும்பொன் முத்து ராமலிங்கம். | 29. திருப்பத்தூர்.<br>30. தேவகோட்டை.<br>31. காரைக்குடி. |
| 9 திருச்சிராப்பள்ளி .. | 32. திருச்சிராப்பள்ளி.<br>33. முசிறி.<br>34. லால்குடி.<br>35. பெரம்பலூர்.<br>36. துறையூர். |
| 10 சேலம் .. .. .. | 37. நாமக்கல். |
| 11 இராமநாதபுரம் .. | 38. கமுதி.<br>39. முதுகுளத்தூர்<br>40. இராமநாதபுரம்.<br>41. இராமேஸ்வரம். |
| 12 நெல்லை கட்டபொம்மன். | 42. திருநெல்வேலி.<br>43. பாளையங்கோட்டை. |
| 13 சிதம்பரனார் .. .. | 44. திருச்செந்தூர்.<br>45. சாத்தான்குளம்.<br>46. கோயம்புத்தூர்.<br>47. பொள்ளாச்சி.<br>48. மேட்டுப்பாளையம்.<br>49. அவிநாசி. |
| 14 கோயம்புத்தூர் .. .. | |

நிறுவன நிதித்துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு.

1987–88.

நாட்டின் பொருளாதார திட்டங்களின் மேம்பாட்டிற்கும் நலிவுற்ற மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் நிறுவன நிதித்துறை உறுதுணையாக உள்ளது. நிதிநிறுவனங்கள் மூலம் கிடைக்கக்கூடிய நிதியை பெருமளவு பயன்படுத்தும் நோக்குடன் வேளாண்மை துறை, தொழில் துறை மற்றும் பணிகள் சம்பந்தப்பட்ட துறைகள் முன்னுரிமை பிரிவுகளாக கருதப்பட்டு அவற்றிற்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. இப்பிரிவுகளுக்கு வழங்கப்படும் மொத்த கடன்களின் அளவு மாநில திட்ட நிதி ஒதுக்கீட்டு தொகைக்கு ஏறத்தாழ சமமானதாகும். மேற்குறிப்பிட்ட பிரிவுகளின் திட்டச் செலவின் முன்னேற்றம் குறித்து கண்காணிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, மாநில அரசு 1983 ஆம் ஆண்டு ஜூலைத்



திங்களில் நிறுவன நிதித்துறையை ஏற்படுத்தியது. இத்துறை அரசுத்துறைகள்/முகவரமைப்புகள், வணிக வங்கிகள் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்வதோடு காலத்தில் வங்கிகளிடமிருந்து கடன் உதவி கிடைக்கிறதா என்பதைக் கண்காணித்து வருகிறது. இத்துறையின் முயற்சிகள் காரணமாக வழங்கப்படும் கடன்தொகை அளவு பலமடங்கு உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

2. கடன்கள் :

முன்னுரிமை துறைகளுக்கு கடன்கள் வழங்குதல்

வங்கிகள் அளிக்கும் கடன் தொகையில் முன்னுரிமைத் துறைகளுக்கு பெரும்பகுதியான தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 1984 ஆம் ஆண்டில் முன்னுரிமைத் துறைகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன் ரூ. 753 கோடியாக இருந்தது. 1985 ஆம் ஆண்டில் இது ரூ. 1038 கோடியாக உயர்ந்தது. 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களின் இறுதியில் இந்த அளவு ரூ. 827.62 கோடியாக உள்ளது. இவ்வாண்டின் இறுதியில் (1986) இப்பிரிவிற்கான கடன் ரூ. 1,103.49 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னுரிமைத் துறைகளுக்கு வழங்கப்பட வேண்டிய முன்பணம் 40 சதவீதமாக இருக்க வேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி வரையறை செய்துள்ளது. இந்த முன்பணக் கோட்பாட்டளவு மிஞ்சப்பட்டுள்ளது. 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதியிலுள்ளவாறு சாதவையின் அளவு 46.3 சதவீதமாகும் வட்டார கிராமப்பகுதி வங்கிகள், அவை வழங்கியுள்ள மொத்த முன்பணத் தொகையில், முன்னுரிமைத் துறைகளுக்கு 70.3 சதவீதத் தொகையை முன்பணமாக வழங்கியுள்ளது. 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதியிலுள்ளவாறு, நிலுவையாக உள்ள முன்னுரிமைத் துறைகளுக்கு வழங்கப்பட்ட மொத்த முன்பணத் தொகை ரூ. 2,433.42 கோடியில் வேளாண்மைக்காக வழங்கப்பட்ட நேரடி முன் பணத்தொகை ரூ. 927.01 கோடியும் அடங்கும்.

1986 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதியிலுள்ளவாறு தமிழ்நாட்டில் முன்னுரிமைத் துறையில் உள்ள நலிந்த பிரிவினருக்கு முன்பணமாக ரூ. 587.07 கோடி வழங்கப்பட்டது. இதனால் 24.66 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர். வழங்கப்பட்ட மொத்த முன்பணத் தொகையில், இம்மாநிலத்திலுள்ள நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட முன்பணத் தொகை 11.3 சதவீதமாகும். நலிந்த பிரிவினருக்காக முன்னுரிமை பிரிவுகடனில் 10 சதவீதம் அளிக்கப்பட வேண்டும் என்ற இந்திய ரிசர்வ் வங்கியின் குறியீட்டை விஞ்சியிருப்பது குறிப்பிடத்தக்கது.

[1987 ஏப்ரல் 22

வேறுபாட்டு வட்டி விதத்திலான முன் பணங்கள்.

1986 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதியிலுள்ளவாறு வேறுபாட்டு வட்டி விதத்தில் வழங்கப்பட்ட முன்பணத்தொகை யில் ரூ. 55.09 கோடி நிலுவையாக இருந்தது. ஆனால் மேற் சொன்ன வகையில் வழங்கப்பட்ட தொகையில், 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ரூ. 39.52 கோடி மட்டுமே நிலுவையாக இருந்தது. மொத்த முன்பணத் தொகையில் முந்தய ஆண்டில் இம்மாநிலத்தில் வேறுபாட்டு வட்டி விதத்தில் வழங்கப்பட்ட முன்பணம் 1.2 சதவீதமாக இருந்தது. இந்த அளவு இந்திய ரிசர்வ் வங்கி வரையறை செய்த குறைந்த அளவைவிட அதிக மானதாகும். வங்கி வாரியான தகவல் ஒப்பிட்டு ஆய்வு பற்றிய விவரம் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3. இந்திய ரிசர்வ் வங்கி வரையறை செய்துள்ள கோட்பாடுகள் :

முன்னுரிமைத் துறைகளுக்கும் நலிந்த பிரிவினருக்கும் கடன் வசதிகள் கிடைக்க வகை செய்யும் பொருட்டு இந்திய ரிசர்வ் வங்கி அனைத்து வணிக வங்கிகளுக்கு சில குறியீட்டை நிர்ணயித்துள்ளது. நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் குறியீடுகளை விஞ்சியுள்ள நிலை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | கோட்பாடு. (1) | 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் உள்ளபடி. (2) |
|---|---|---|
| | சதவீதம். | |
| மொத்த முன்பணத் தொகையுடன் ஒப்பிடும்போது முன்னுரிமைத் துறைகளுக்கு வழங்கப்பட்ட முன் பணத்தின் சதவீதம். .. .. | 40 | 46.3 |
| மொத்த முன்பணத் தொகையுடன் ஒப்பிடும்போது வேளாண் துறைக் காக வழங்கப்பட்ட நேரடி முன் பணத் தொகையின் சதவீதம் .. | 15 | 17.85 |
| மொத்த முன்பணத் தொகையுடன் ஒப்பிடும்போது நலிந்த பிரிவின ருக்காக வழங்கப்பட்ட முன்பணத் தொகையின் சதவீதம் .. .. | 10 | 11.30 |
| கடந்த ஆண்டின் மொத்த முன்பணத் தொகையில் வழங்கப்பட்ட வேறு பாட்டு வட்டி விதத்திலான முன் பணத் தொகையின் சதவீதம் .. | 1 | |



1987 ஏப்ரல் 22]

4. வங்கிக் கிளைகளை விரிவுபடுத்துதல் :

மாநிலம் முழுவதிலும் வங்கி வசதிகளைச் சமமாக விரிவு படுத்துவது, வங்கிகளை உட்படுத்திய திட்டங்களை முறை யாகச் செயல்படுத்துவதில் பெரிதும் உதவும். வங்கிகள் இல்லாத பகுதிகளில் புதிய கிளைகளைத் திறப்பதற்கான அவசியத்தினை இத்துறை ஆய்வு செய்து, ரிசர்வ் வங்கி, வணிக வங்கிகள் மூலம் அப்பகுதிகளில் புதிய வங்கிக்கிளைகளைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நமது மாநிலத்தில் 12,307 மக்களுக்கு ஒரு வங்கிக் கிளை உள்ளது. இது 15,500 பேருக்கு ஒரு வங்கிக் கிளை என்ற நடப்பு தேசிய சராசரியினை ஒத்துள்ளது. 1985 ஆம் ஆண்டில், நமது மாநிலத்தில் 3,882 வணிக வங்கிக் கிளைகள் இருந்தன. 1986 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் வங்கிகளின் எண்ணிக்கை 3,916 ஆக உயர்ந்தது. இவை தவிர 473 கூட்டுறவு வங்கிக் கிளைகளும் உள்ளன.

இந்திய ரிசர்வ் வங்கி 1985–90 ஆம் ஆண்டிற்காக அறிவித்த வங்கிக் கிளைகளுக்கு உரிமம் அளிக்கும் வகையில் ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்தையும் ஓர் அலகாகக் கருதி இம்மாநிலத் தில் 175 வட்டாரங்களில் வங்கி வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டுமென்று குறிப்பிட்டது. அதன்படி இத்துறை, மாவட்ட ஆட்சியர்களைக் கலந்தாலோசித்து வங்கி வசதி குறைந்த 251 வளர்ச்சி வட்டாரங்களில் 486 மையங்களைத் தெரிந் தெடுத்து அம்மையங்களில் புதிய வங்கிக் கிளைகளைத் திறக்கலா மென இந்திய ரிசர்வ் வங்கிக்குப் பரிந்துரை செய்துள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட மையங்களில் தருமபுரி மாவட்டத்தில் 19 புதிய வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கு அதியமான் கிராம வங்கிக்கு இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் அனுமதி அளித் துள்ளது. மேலும் மேற்குறிப்பிட்ட தெரிந்தெடுக்கப்பட்ட மையங்களிலிருந்து தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள 19 மையங்களில் புதிய வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கும் வள்ள லார் கிராம வங்கிக்கு இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி வழங்கி உள்ளது.

[1987 ஏப்ரல் 22

அண்மையில் கீழ்க்கண்ட வங்கிகளுக்கு அதற்கு எதிரே குறிப்பிட்டிருக்கும் கிளைகளைத் திறக்க இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளது.

| வரிசை எண். | வங்கியின் பெயர். | அனுமதிக்கப் பட்ட புதிய கிளைகள். |
|---|---|---|
| 1 | சிண்டிகேட் வங்கி | 7 |
| 2 | இந்திய யூனியன் வங்கி | 7 |
| 3 | இந்திய வங்கி | 5 |
| 4 | இந்திய மத்திய வங்கி | 8 |
| 5 | விஜயா வங்கி | 1 |
| 6 | திருவாங்கூர் மாநில வங்கி | 2 |
| 7 | பரோடா வங்கி | 3 |
| 8 | யூகோ வங்கி | 1 |
| 9 | இந்திய மாநில வங்கி | 25 |
| 10 | கார்ப்பரேசன் வங்கி | 4 |
| 11 | இந்தியன் வங்கி | 30 |
| 12 | கனரா வங்கி | 30 |
| | மொத்தம் | 123 |

5. வட்டார கிராமவங்கி :

வேளாண்மை, அதனைச் சார்ந்த துறைகள் களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, அதிலும் குறிப்பாக ஊரகத் துறை தொழிலாளர்கள், கைவினைஞர்கள், சிறுதொழில் வேளாண் கள் ஆகியோருக்குக் கடன் வசதி அளிக்கும் முனைவர் வட்டார கிராம வங்கிகள் தொடங்கப்பட்டுள்ளன. பொருட்டு கடன் வசதி நிறுவனங்கள் மற்றும் வணிக வங்கிகள் கூட்டுறவுக் வற்றின் சிறப்புக்கூறுகள் கிராம வங்கிகளில் அடங்கியுள்ளது. ஆகிய இவைகள், பொதுவாக பொதுத்துறை வணிக வங்கிகளால் ஏற்று நடத்தப்படுகின்றன.

சாத்தூரில் முதல் வட்டார கிராம வங்கியான பாண்டியன் கிராம வங்கி 1977 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்த வங்கி, இராமநாதபுரம், காமராசர், பசும்பொன் முத்துராம லிங்கம், திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள கிராம மக்களின் தேவைகளை நிறைவு செய்கிறது. இம்மாவட்டங்களில் இந்த வங்கிக்கு 151 கிளைகள் உள்ளன.

இதனைத் தொடர்ந்து தருமபுரி மாவட்டத்தில் இரண்டாவது வட்டார கிராம வங்கியான அதியமான் கிராம வங்கி 1986 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இவ்வங்கி தருமபுரி மாவட்ட கிராம மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்றது. மூன்றாவது



1987 ஏப்ரல் 22]

வட்டார கிராம வங்கியான வள்ளலார் கிராம வங்கி 1986 ஆம் ஆண்டின் தென் ஆற்காடு மாவட்டத்தில் நிறுவப்பட்டது. இவ்வங்கி, தென் ஆற்காடு மாவட்ட கிராம மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்றது. தருமபுரி மாவட்டத்தில் 19 புதிய வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கு அதியமான் கிராம வங்கிக்கு இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி வழங்கியுள்ளது. இதைப் போன்றே, வள்ளலார் கிராம வங்கி தென் ஆற்காடு மாவட்டத் தில் 19 கிளைகளைத் திறந்து மக்களின் தேவையை நிறைவு செய்யும். வட ஆற்காடு மாவட்டத்தில் மற்றொரு வட்டார கிராம வங்கியினை நிறுவுமாறு இந்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்துள்ளது.

6. வைப்புத் தொகைகளும், முன்பணங்களும் :

1986 செப்டம்பர் திங்களின் இறுதியில் நிலுவையாக இருந்த வைப்புத் தொகைகள் ரூபாய் 5,785.04 கோடியாகவும் நிலுவை யாக இருந்த முன்பணம் ரூ. 5,192.07 கோடியாகவும் இருந்தது. 1985 செப்டம்பர் திங்களில் இருந்த நிலையுடன் ஒப்பிடும்போது, வைப்புத் தொகைகள், ரூ. 792.47 கோடியும் (15.9 சதவீதம்), முன்பணங்கள் ரூ. 763.43 கோடியும் (17.2 சதவீதம்) அதிகரித் துள்ளது. கடன் முதலீட்டுத் தொகை விகிதம் 1985 செப்டம் பர் திங்களில் 88.7 சதவீதமாக இருந்தது. 1986 செப்டம்பர் திங்களில் 89.8 சதவீதமாக உயர்ந்துள்ளது.

7. முதன்மை வங்கிகள் திட்டம்:

ஒவ்வொரு மாவட்டத்திலும் கிடைக்கக்கூடிய வங்கிக் கடன் வசதியை ஒருங்கிணைப்பதற்காக, 1978 ஆம் ஆண்டில் முதன்மை வங்கித் திட்டம் தொடங்கப்பட்டது. நம் மாநிலத்தில் இந்தியன் வங்கி, கனரா வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி ஆகியவை, அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட மாவட் டங்களில் முதன்மை வங்கிகளாகும். விவரங்கள் இணைப்பு-5 இல் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மாநில அளவில் வங்கிகள் குழுவின் அமைப்பாளராகவும் டுள்ளது.

மாவட்டக் கடன் வழங்கு திட்டங்களும் ஆண்டுச் செயல் திட்டங்களும்.

மாவட்டத்திற்கான கடன் வழங்கு திட்டம் நீண்ட காலத் திற்கு வங்கிகள் அளிக்கும் கடன் விவரங்களைக் கொண்டுள்ளது. ஆண்டுச் செயல் திட்டங்கள் ஒவ்வோராண்டுக்கும் வங்கிகள் அளிக்கும் கடன் பற்றிய விவரங்களைக் கொண்ட ஆவண மாகும்.

[1987 ஏப்ரல் 22

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கடன் வழங்கு திட்டமும்
ஆண்டுச் செயல் திட்டமும் முடிவு செய்யப்பட்டு அம்மாவட்டத்
தில் மாவட்ட ஆலோசனைக் குழுவால் கண்காணிக்கப்படுகிறது.
மாவட்ட ஆட்சித் தலைவர் இக்குழுவின் தலைவராவார்
இக்குழுவில் அம்மாவட்டத்திலுள்ள முக்கிய வங்கிகளின்
பிரதிநிதிகளும் வங்கிக்கடன் சம்பந்தப்பட்ட திட்டங்களைச்
செயற்படுத்தும் மாவட்ட அதிகாரிகளும் உள்ளனர். இப்பணியில்
மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, மாவட்ட கிராம வளர்ச்சி
முகவரமைப்பின் திட்ட அதிகாரியும், அம்மாவட்டத்தின்
முதன்மை வங்கி மேலாளரும் உதவி புரிகின்றனர். மாவட்ட
கிராமவளர்ச்சி முகவரமைப்பின் திட்ட அதிகாரி நிறுவன
நிதித்துறை திட்ட அதிகாரி எனவும் அழைக்கப்படுவார்.
இம்மாநிலத்தில் வெவ்வேறு மாவட்டங்களில் ஆண்டுச் செயல்
திட்டத்தின் சாதனை மாநில அளவிலான ஒருங்கிணைப்புக்
குழுவால் ஆய்வு செய்யப்படுகிறது. இக்குழுவின் தலைவர்
தலைமைச் செயலாளராவார். பல்வேறு வளர்ச்சித் துறை
களுக்குக் கடன் வழங்குவதை நுணுக்கமாகக் கண்காணிப்பதற்கு
வேளாண்மை, வேளாண்மைத் தொடர்பான பணிகள், தொழில்
பணி வசதிகள் ஆகிய துறைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்
தனியே நான்கு நிலைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
நிறுவன நிதித்துறை கடன் வழங்கும் திட்டங்களையும் ஆண்டுச்
செயல் திட்டங்களையும் செயல் படுத்துவதை நுணுக்கமாகக்
கண்காணிக்கிறது.

1987—90 ஆம் ஆண்டுக்கு மாவட்ட கடன் வழங்கு திட்டம்
வகுப்பதற்கு வழிகாட்டிக் குறிப்புகள் அடங்கிய உத்தரவுகளை
இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் பிறப்பித்துள்ளது.
விரைவில் இப்பணி மாவட்ட ஆலோசனைக்குழுவால் மேற்
கொள்ளப்படும். இக்காலத்திற்கான கடன் வழங்குத் திட்டம்
பல்வேறு துறைகளுடன் கலந்தாலோசித்து வழங்கப்படும்.

ஆண்டுச் செயல் திட்டங்களின் கீழ் வங்கிகளின் சாதனை
மனநிறைவளிக்கத்தக்க வகையிலுள்ளது. இது பற்றிய நிலைமை
வருமாறு :—

(ரூபாய் கோடியில்)

| | 1984 | | 1985 | | 1986 | |
|---|---|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | இலக்கு | 1986 செப்டம்பர் வரை சாதனை |
| வேளாண்மை | 401 | 477 | 483 | 630 | 611 | 540 |
| தொழில் | 93 | 122 | 151 | 198 | 188 | 146 |
| பணிகள் | 72 | 154 | 115 | 210 | 165 | 142 |
| மொத்தம் | 566 | 753 | 749 | 1,038 | 964 | 828 |



1987 ஏப்ரல் 22]

8. வேளாண்மை—கிராம வளர்ச்சி தேசிய வங்கி :

வேளாண்மை கிராம வளர்ச்சி தேசிய வங்கி உதவியுடன்
சிறு பாசனமற்ற திட்டங்கள், தமிழ்நாடு நிலவள வங்கி மூலம்
செயல்படுத்த அனுமதி வழங்கப்படுகிறது. தேயிலை, காப்பி,
இலவங்கம், ரப்பர், மிளகு தோட்டங்கள் முதலியவை உருவாக்கு
வது, தோட்டக்கலை, பால் பண்ணை, செம்மறியாடு, ஆடு
வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் வேளாண்மையில் எந்திரங்
களை பயன்படுத்துவதற்கான திட்டங்களை செயல்படுத்துவது
ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். இத்திட்டத்தை செயற்
படுத்தும் பொறுப்பு தமிழ்நாடு மாநில நிலவள வங்கியிடம் ஒப்
படைக்கப்பட்டுள்ளது. வேளாண்மை கிராம வளர்ச்சி தேசிய
வங்கி, இத்திட்டங்களின் அடிப்படை வசதிகளைப் பொறுத்து
இவற்றுக்கு 85 சதவிகிதம் அல்லது 90 சதவிகிதம் அளவுக்கு,
கடனீட்டுறுதிப் பத்திரங்களுக்குத் தொகை அளிக்கிறது. எஞ்
சிய தொகை மத்திய அரசாலும், மாநில அரசாலும் சமமாக
ஏற்கப்படுகிறது. திட்டத்தில் பணியாளர் செலவை மாநில
அரசு ஏற்கிறது.

வேளாண்மை கிராம வளர்ச்சி தேசிய வங்கியிடமிருந்து அதிக
அளவு உதவித் தொகையைப் பெற அரசு ஆர்வம் காட்டி வரு
கிறது. எனவே, அரசு அதிகாரமளிக்கப்பட்ட குழு ஒன்றை
அமைத்துள்ளது. நிதியுதவி நிறுவனத்துறை ஆணையாளர்—
செயலாளர் இதன் தலைவராவார். கூட்டுறவுச் சங்கங்களின்
பதிவாளர், வேளாண்மை கிராம வளர்ச்சி தேசிய வங்கியின்
பொது துணை மேலாளர் ஆகியோரும், சம்பந்தப்பட்ட துறை
களிலுள்ள அரசுச் செயலாளர்களும் இதன் உறுப்பினர்களாவர்.
தமிழ்நாடு மாநில நிலவள வங்கிகளின் தனி அதிகாரி இதன்
அமைப்பாளராவார். மாநில அரசின் பங்குத் தொகை ரூபாய்
2 இலட்சத்திற்கு மேற்படாமலிருப்பினும், புதிதாகப் பதவியை
ஏற்படுத்த வேண்டிய தேவை இல்லாமலிருப்பினும் திட்டங்க
ளுக்கு ஒப்புதலளிக்க இக்குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.
ரூ. 16.38 கோடி அளவுக்கு, தமிழ்நாடு மாநில நிலவள வங்கித்
திட்டங்களுக்கு 18-2-1987 வரை அதிகாரமளிக்கப்பட்ட குழு
ஒப்புதலளித்தது.

9. படித்து வேலையற்றுள்ள இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு :

தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் முக்கியமான திட்டங்
களில் ஒன்று படித்து வேலையற்றிருப்பவர்களுக்கு சுயவேலை
வாய்ப்பு அளிக்கும் திட்டமாகும். இது மாவட்டத் தொழில்
மையத்தினால் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ்
மாவட்ட தொழில் மையங்கள் பரிந்துரைத்தவாறு, சொந்தமாக
வியாபாரம், தொழில் தொடங்க, படித்த இளைஞர்களுக்கு முன்

[1987 ஏப்ரல் 22

பணம் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நிர்ண
யிக்கப்பட்ட இலக்கும் ஒப்புதலளிக்கப்பட்ட விண்ணப்பங்களின்
எண்ணிக்கையும் வருமாறு :—

| ஆண்டு. | இலக்கு. | வங்கிகள் ஒப்புதல் அளித்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | தொகை (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1983–84 .. | 24,000 | 21,247 | 33.16 |
| 1984–85 .. | 21,700 | 22,084 | 42.16 |
| 1985–86 .. | 18,100 | 18,722 | 37.45 |

1986–87 ஆம் ஆண்டுக்கு 18,100 படித்த வேலையற்றுள்ள
இளைஞர்களுக்கு கடன் உதவி அளிக்கும் குறியீடு நிர்ணயிக்கப்
பட்டுள்ளது. 1987 மார்ச் வரையிலான முன்னேற்ற அறிக்கை
யின்படி 18,161 விண்ணப்பதாரர்களுக்கு ரூ. 38 கோடி கடன்
வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

1986–87 ஆம் ஆண்டிலிருந்து தொழில் பிரிவுகளுக்கு ரூபாய்
35,000 வரையும், பணிகளுக்கு ரூ. 25,000 வரையும் வியாபாரம்,
வணிகத்திற்கு ரூ. 15,000 வரையும் கடன் அளிக்கப்படும்.

1986–87 ஆம் ஆண்டிலிருந்து ரூ. 10,000 வருட வருமானம்
உள்ளவர்கள் இத்திட்டத்தில் பயன் பெற தகுதி உடையவர்.
ஆதி திராவிடர்/பழங்குடியினருக்குதனி நிதியொதுக்கம் அளிக்கப்
பட்டுள்ளது. மொத்தத் தொகையில் 30 சதவீதம் அவர்களுக்கு
ஒதுக்கப்பட்டுள்ளது.

10. சமுதாயத்தில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினருக்கு
கடன்கள் :

சமுதாயத்தில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினர்
அரசின் பல்வேறு திட்டங்கள் மூலமாக கடன்களைப் பெறுவதற்
கும் வாழ்வில் அவர்கள் முன்னேற இயலும் வகையிலும் நிறுவன
நிதித்துறை அவர்களுக்கு உதவி செய்கிறது. இத்திட்டத்தின்
கீழ் ஒவ்வொரு மாவட்டத்தின் மக்கள் தொகை மற்றும் வங்கி
அடிப்படை வசதி ஆகியவற்றையொட்டி இலக்கு நிர்ணயிக்கப்
பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தகுதியான நபர்
களைத் தேர்ந்தெடுத்து வணிக வங்கி மூலம் அவர்களுக்குக்
கடன் வழங்க ஏற்பாடு செய்கிறார்கள். இத்திட்டத்தில் ஒருங்
கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் போன்று பல்வேறு திட்



1987 ஏப்ரல் 22]

டங்களின் கீழ் உதவித் தொகையுடன் கூடிய கடன், ஓரளவு
நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு பெரும் உதவித் திட்டம்,
படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்புத்
திட்டம், சமூக நலம், ஆதி திராவிடர் நலம், பிற்படுத்தப்பட்ட
வகுப்பினர் நலம் முதலிய துறைகள் தொடர்பான திட்டங்கள்
ஆகியவை அடங்கும். இத்துடன் மேலே குறிப்பிட்ட திட்டங்
களில் செயல் வரம்புக்கு அப்பாலுள்ள பகுதிகளிலுள்ளவர்களுக்
கும் கடன் வழங்கப்படுகிறது. 1986–87 ஆம் ஆண்டுக்கான
திட்டத்தின் கீழ் 10 இலட்சம் பேர்களுக்கு ரூ. 303 கோடி கடன்
அளிக்கப்படவேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
1986 டிசம்பர் வரை ரூ. 209 கோடி கடன் 6,37,740 பேர்
களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் பொருளாதார
வகையில் நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்குவதில் ஏற்பட்ட
முன்னேற்றம் பற்றிய விவர அறிக்கை இத்துடன் இணைக்கப்
பட்டுள்ளது. (இணைப்பு 6-ஐக் காண்க).

11. பொருட்காட்சியும், விளம்பரமும் :

அரசின் பல்வேறு திட்டங்கள் மூல
நிதி நிறுவனங்கள் மூலமும் அளிக்கப்படும் கடன்களின் விபரங்களும், இக்கடன்களை
உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்த வேண்டியதின் அவசியம்
பற்றியும் மக்களுக்கு சிறந்த முறையில் விளக்க,இத்துறை பல்வேறு
நடவடிக்கைகளை எடுத்துள்ளது. குறிப்பாக சென்னையில்
நடைபெறும் அகில இந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சி
யிலும் மற்றும் மதுரை, கோயம்புத்தூர், வேலூர், சேலம் ஆகிய
இடங்களில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிகளிலும் அரங்கு
அமைத்து இத்திட்டங்களின் செயல் முறைகள் விளக்கப்படுகிறது.
மேலும், வீடியோ நாடாக்கள் மூலமும், செய்திப் படங்கள் மூல
மும் இத்துறையின் நடவடிக்கைகள் விளம்பரப்படுத்தப்படுகிறது.

12. நகர்ப்பகுதி ஏழை மக்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் :

இத்திட்டம் 1–9–1986லிருந்து செயலுக்கு வந்தது. இத்
திட்டத்தின் கீழ் சென்னை மாநகரைப் பொறுத்தவரையிலும்
41,789 என்று திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில்,
10–1–1987 அன்றுள்ளவாறு, வங்கிகள் 20,213 விண்ணப்பங்
களுக்கு ரூ. 520.19 இலட்சம் கடன் வழங்கியுள்ளன.

13. சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்குதல் குறித்து
மதிப்பாய்வு :

கடன் பெற்றவர்கள் எதிர்பார்த்தவாறு பயனடைந்தார்களா
என்பது பற்றியும், கடன் வழங்கும் நடைமுறையிலுள்ள இடர்
பாடுகளைக் களைவதற்காகவும் கடன் வழங்கும் திட்டங்கள்
செயல்படுவதை கள அளவில் ஆய்வு செய்வது அவசியமாகிறது.
நிதி நிறுவனத்துறை இத்திட்டங்களின் மதிப்பாய்வைத்
தொடர்ந்து மேற்கொண்டுள்ளது. இத்தகைய மதிப்பாய்வுப்

பணி. இத்துறையின் அரசுத் துணை செயலாளர்கள் இருவரிடமும், இணை செயலாளர் ஒருவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் அதிகாரியிடமும் அவருடைய செயற்பாட்டின் பகுதியாக, சில மாவட்டங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. துணை/இணை செயலாளர்கள் மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, கடன் பெற்றவர்களை சந்தித்து அவர்களுடைய முன்னேற்றம் பற்றி ஆய்வு செய்து, இடர்பாடுகள் எவையேனும் இருப்பின் அவைகளை நேரில் கண்டறிந்து அவற்றைக் களைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அவர்கள் மாவட்ட ஆலோசனைக் குழுவில் பங்கேற்புக் கொள்வதோடு, மாவட்ட அளவில் நடைபெறும் மறு ஆய்வு கூட்டங்களிலும் கலந்து கொள்கின்றனர். ஆண்டு செயல் திட்டத்தின் மூலம் பல்வேறு துறைகளில் எய்தப்பட்ட சாதனைகளைக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை அவர்கள் ஆய்வு செய்வதோடு எப்பகுதியில் குறைவு ஏற்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்து, திட்டச் சாதனைகளை மேம்படுத்துவதற்காக முதன்மை வங்கிகள், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோரை கலந்தாலோசித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் விவரம் இணைப்பு 8-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

14. கடன் வசூல் முகாம்கள் :

கடன் கொடுப்பது எவ்வளவு முக்கியமோ, அதேபோல அத்தொகையைத் திருப்பி வசூல் செய்வதும் முக்கியமாகும். கடன் பெற்றவர்கள் வங்கிகளிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தினாலொழிய பெரும்பான்மையான மக்களுக்கு வங்கிகளால் நிதி உதவி அளிக்க இயலாது. உரிய காலத்தில் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான பொறுப்பினை கடன் பெற்றவர்கள் அறியும்படிச் செய்ய வேண்டும். மேற்சொன்ன நோக்கத்தை எய்துவதற்காக, மாவட்ட ஆட்சியர்கள் வங்கிகளுடன் ஒருங்கிணைந்து மாவட்டங்களில் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை கடன் வசூல் முகாம்களை நடத்துகின்றனர்.

15. வேளாண்மை, அதனைச் சார்ந்த நடவடிக்கைகள் :

சிறு தொழில்கள்-பணிகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு வங்கிகள் அளிக்கும் கடன் மிகவும் முக்கியமானதாகும். அரசைப் பொறுத்த வரையில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு உதவுவதில் ஒரு மிகப் பெரிய சாதனமாகவும் இருக்கிறது. சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும் முன்னுரிமை பிரிவுகளுக்கும் அதிகப்படியான நிதியுதவி கிடைக்கச் செய்ய உறுதிப்படுத்துவதற்கும் மேம்பாடடையச் செய்வதற்கும் அரசுத் துறைகளுக்கும் நிறுவனங்களுக்கும் இடையில் ஒரு முழுமையான ஒத்துழைப்பு பெறுவதற்கு நிறுவன நிதித் துறை இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

## இணைப்பு—1.

### தமிழ்நாட்டின் வங்கிப் பணிகள் குறித்த புள்ளி விவரங்கள்

(1986 ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதியிலிருந்தவாறு நிலைகள்)

(தொகை ரூபாய் கோடியில்).

(கணக்குகளின் எண்ணிக்கை நூறில்.)

| வங்கித் தொகுதி. | கிளைகளின் எண்ணிக்கை. | மொத்த வைப்பீட்டுத் தொகை. | மொத்த முன்பணங்கள். | கடன் வைப்பீட்டுத் தொகை விகிதம். | வேளாண்மைத் துறைக்கு நேரடி முன்பணங்கள். தொகை. | மொத்த முன்பணத்தின் சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| இந்திய ஸ்டேட் வங்கியும் அதனைச் சார்ந்தவைகளும் .. .. | 607 | 1,338,.93 | 1,421.78 | 106.9 | 229.53 | 16.14 |
| தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் .. | 2,077 | 3,570.82 | 2,993.76 | 83.8 | 638.31 | 21.32 |
| தனியார் வங்கிகள் .. | 1,070 | 747.15 | 542.06 | 72.5 | 43.41 | 8.00 |
| வட்டார ஊரக வங்கிகள் | 151 | 18.00 | 30.73 | 170.7 | 14.69 | 47.80 |
| வெளிநாட்டு வங்கிகள் | 11 | 120.14 | 204.74 | 170.4 | 1.07 | 0.52 |
| மொத்தம் .. .. | 3,916 | 5 785.04 | 5,193.07 | 89.8 | 927.01 | 17.85 |
| *கூட்டுறவு வங்கிகள் (1986, ஜூன் வரையில்) | 473 | 491.13 | 554.81 | 112.96 | 256.97 | 46.3 |

*மத்திய கூட்டுறவு வங்கி உட்பட.



## இணைப்பு—I—தொடர்ச்சி.

(தொகை ரூபாய் கோடியில்.)

(கணக்குகள் எண்ணிக்கை நூறில்.)

| வங்கித் தொகுதி. | முன்னுரிமைத் துறைக்கான முன்பணங்கள். தொகை. | மொத்த முன் பணத்தின் சதவீதம். | நலிந்த பிரிவுக்கான முன்பணங்கள். தொகை. | மொத்த முன் பணத்தின் சதவீதம். | வேறுபட்ட வட்டி விகிதாசாரத் தொகை முன்பணங்கள். தொகை. | முந்தைய ஆண்டின் மொத்த முன்பணங்கள். | ஆதிதிராவிடர் பழங்குடியினர் பயன்பாடுகளுக்கு முன்பணங்கள். எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | | (15) |
| இந்திய ஸ்டேட் வங்கியும் அதனைச் சார்ந்தவைகளும் .. .. | 661.91 | 46.5 | 126.12 | 8.87 | 16.88 | 1.3 | 1,097 | 18.45 |
| தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் .. | 1,83172 | 51.2 | 431.39 | 14.41 | 37.32 | 1.5 | 3,416 | 68.46 |
| தனியார் வங்கிகள் .. | 172.77 | 31.9 | 18.03 | 3.32 | 0.81 | 0.2 | 115 | 1.54 |
| வட்டார ஊரக வங்கிகள் | 21.62 | 70.3 | 11.53 | 37.52 | 0.08 | 0.3 | 257 | 4.03 |
| வெளிநாட்டு வங்கிகள் | 15.49 | 7.5 | .. | . | . | .. | .. | .. |
| மொத்தம் .. .. | 2,403.42 | 46.2 | 587.07 | 11.30 | 55.09 | 8.2 | 4,885 | 92.48 |
| *கூட்டுறவு வங்கிகள் 1986 ஜூன் வரையில். | .. | .. | 95.71 | 18.00 | 1.26 | 206.00 | 650 | 10.13 |

*மத்திய கூட்டுறவு வங்கி உட்பட.

இணைப்பு—2.

(கணக்குகளின் எண்ணிக்கை நூறில்.)

(தொகை ரூபாய் கோடியில்.)

## மாவட்ட வாரியாக வணிக வங்கிப்பணிகள் குறித்த புள்ளி விவரங்கள்

(1986 செப்டம்பர் இறுதியில் இருந்தவாறு.)

| மாவட்டம். | இலைகளின் எண்ணிக்கை. | மொத்த வைப்பீட்டுத் தொகை. | மொத்த முன் பணங்கள். | கடன் வைப்பீட்டுத் தொகை. விதம். | முன்னுரிமைத் துறை முன்பணங்கள். தொகை. | முன்னுரிமைத் துறை முன்பணங்கள். மொத்தப் பணத்தில் சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 அண்ணா .. .. | 113 | 85.84 | 90.39 | 105.3 | 62.69 | 69.4 |
| 2 செங்கல்பட்டு .. .. | 219 | 278.94 | 268.30 | 96.2 | 155.00 | 57.8 |
| 3 கோயம்புத்தூர் .. .. | 288 | 559.21 | 586.75 | 104.9 | 236.73 | 40.3 |
| 4 தர்மபுரி .. .. | 121 | 67.40 | 79.62 | 118.1 | 66.33 | 83.3 |
| 5 காமராசர் .. .. | 99 | 99.19 | 120.41 | [illegible] | 77.49 | 64.4 |
| 6 கன்னியாகுமரி .. .. | 114 | 110.84 | 62.89 | [illegible] | 39.16 | 62.3 |
| 7 சென்னை .. .. | 556 | 2,221.38 | 2,169.27 | 97.6 | 643.86 | 29.7 |
| 8 மதுரை .. .. | 232 | 258.43 | 255.88 | [illegible] | 137.80 | 53.8 |
| 9 நீலகிரி .. .. | 64 | 92.24 | 103.80 | 112.5 | 41.53 | 40.0 |
| 10 வட ஆற்காடு .. .. | 280 | 220.57 | 181.42 | 82.3 | 132.95 | 73.3 |
| 11 பசும்பொன் முத்துராமலிங்கம் | 103 | [illegible] | 45.67 | 55.9 | 27.11 | 55.4 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 12 பெரியார் .. .. | 175 | 220.19 | 172.06 | 78.5 | [illegible] | 67.8 |
| 13 புதுக்கோட்டை .. .. | 72 | 46.81 | 38.36 | 81.9 | [illegible] | 70.2 |
| 14 இராமநாதபுரம் .. .. | 65 | 41.72 | 26.02 | 62.4 | [illegible] | 62.2 |
| 15 சேலம் .. .. | 242 | 296.79 | 267.47 | 76.6 | [illegible] | 68.3 |
| 16 தென் ஆற்காடு .. .. | 270 | 179.98 | 132.91 | 73.8 | 97.82 | 73.3 |
| 17 தஞ்சாவூர் .. .. | 293 | 307.42 | 196.59 | 63.9 | 23.85 | 63.9 |
| 18 திருச்சிராப்பள்ளி .. .. | 301 | 327.28 | 265.50 | 81.1 | 140.36 | 53.9 |
| 19 திருநெல்வேலி* .. .. | 310 | 283.73 | 168.76 | 59.5 | 97.31 | 57.7 |
| மொத்தம் .. | 3,916 | 5,785.04 | 5,192.07 | 89.6 | 2,803.42 | 48.3 |

* இரண்டாகப் பிரிப்பதற்கு முன்னர்.

இணைப்பு 2—தொடர்ச்சி.

| மாவட்டங்கள். | வேளாண்மை துறைக்கு முன் பணங்கள். | | தனித்த பிரிவின ருக்கான மொத்த முன் பணங்கள். | | வட்டி வித்தியாசத் தொகை முன் பணங்கள். | | | ஆதி திராவிடர்/ பழங்குடியினர் பயன்பாடு. | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை. | மொத்த முன் பணத் தில் சதவிதம். | தொகை | மொத்த முன் பணத் தில் சதவிதம். | தொகை | மொத்த முன் பணத் தில் சதவிதம். | எண் ணிக்கை | தொகை | மொத்த முன் பணத் தில் சதவிதம். |
| (1) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) |
| | | | | | (தொகை ரூபாய் கோடியில்.) | | | | |
| 1 அண்ணா .. .. .. | 45.38 | 50.20 | 27.55 | 30.48 | 1.30 | 1.44 | 208 | 3.25 | 3.60 |
| 2 செங்கல்பட்டு .. .. | 62.48 | 22.29 | 36.96 | 13.78 | 5.53 | 2.06 | 438 | 8.58 | 3.19 |
| 3 கோயம்புத்தூர் .. .. | 67.00 | 11.42 | 33.68 | 5.74 | 2.56 | 0.44 | 210 | 3.67 | 0.62 |
| 4 தர்மபுரி .. .. | 40.02 | 50.26 | 31.73 | 39.85 | 1.99 | 2.50 | 212 | 4.95 | 6.22 |
| 5 காமராஜர் .. .. .. | 15.81 | 13.13 | 10.35 | 8.59 | 0.65 | 0.54 | 126 | 2.86 | 2.37 |
| 6 கன்னியாகுமரி .. .. | 21.66 | 34.43 | 15.40 | 24.49 | 1.61 | 2.56 | 77 | 1.06 | 1.69 |
| 7 சென்னை .. .. .. | 33.25 | 1.53 | 20.12 | 0.93 | 12.99 | 0.40 | 342 | 7.00 | 0.32 |
| 8 மதுரை .. .. .. | 74.04 | 28.94 | 42.36 | 16.55 | 3.23 | 1.26 | 291 | 5.73 | 2.24 |
| 9 நீலகிரி .. .. .. | 24.41 | 23.52 | 9.65 | 9.20 | 0.80 | 0.58 | 82 | 1.59 | 1.53 |
| 10 வட ஆற்காடு .. .. | 72.35 | 40.38 | 56.08 | 30.91 | 5.35 | 2.95 | 512 | 10.34 | 5.70 |
| 11 பசும்பொன் முத்துராமலிங்கம். | 14.72 | 32.23 | 20.27 | 21.37 | 0.89 | 1.95 | 122 | 2.76 | 6.04 |
| 12 பெரியார் .. .. .. | 66.65 | 38.74 | 39.27 | 22.82 | 1.52 | 0.88 | 169 | 2. | .35 |



| மாவட்டங்கள். | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13 புதுக்கோட்டை .. .. | 14.73 | 38.40 | 10.33 | 26.93 | 1.13 | 2.94 | 85 | 1.64 | 4.28 |
| 14 இராமநாதபுரம் .. .. | 11.42 | 42.93 | 6.02 | 22.14 | 0.55 | 2.11 | [illegible] | 1.[illegible] | 6.11 |
| 15 சேலம் .. .. .. | 77.04 | 33.87 | 54.66 | 24.03 | 2.51 | 1.10 | 244 | 4.36 | 1.92 |
| 16 தென் ஆற்காடு .. .. | 68.78 | 51.75 | 50.80 | 38.22 | 2.68 | 2.02 | 482 | 8.50 | 6.38 |
| 17 தஞ்சாவூர் .. .. | 85.70 | 43.59 | 45.57 | 23.18 | 3.76 | 1.91 | 438 | 7.03 | 3.88 |
| 18 திருச்சி .. .. .. | 79.02 | 29.76 | 46.62 | 16.31 | 3.52 | 1.33 | 416 | 7.72 | 2.91 |
| 19 திருநெல்வேலி .. .. | 51.65 | 36.61 | 36.20 | 21.45 | 3.70 | 1.59 | 389 | 6.88 | 4.06 |
| மொத்தம் .. | 927.01 | 17.85 | 587.07 | 11.31 | 55.09 | 1.06 | 4,685 | 92.46 | 1.78 |

இணைப்பு 3.

1985–90 ஆம் ஆண்டில் கூடுதல் பிரிவுகளை திறப்பதற்கென தெரிந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி வட்டாரங்களின் எண்ணிக்கை :

| மாவட்டம். | வளர்ச்சி வட்டாரங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| வட ஆற்காடு | 16 |
| சேலம் | 21 |
| தென் ஆற்காடு | 31 |
| பெரியார் | 10 |
| புதுக்கோட்டை | 8 |
| தஞ்சாவூர் | 16 |
| செங்கற்பட்டு | 14 |
| கன்னியாகுமரி | 2 |
| திருநெல்வேலி (பிரிக்கப்படுவதற்கு முன்னர்.) | 9 |
| கோயம்புத்தூர் | 13 |
| இராமநாதபுரம் | 3 |
| காமராசர் | 2 |
| திருச்சிராப்பள்ளி | 6 |
| மதுரை | 8 |
| அண்ணா | 4 |
| தர்மபுரி | 12 |
| மொத்தம் | [illegible] |

## இணைப்பு 4.

### 1987 ஆம் ஆண்டு செயல்திட்டத்தின் மூலதனம்.

| மாவட்டத்தின் பெயர். (1) | வேளாண்மைத் துறை. (2) | தொழிற் துறை. (3) | பணிகள். (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1 செங்கற்பட்டு .. .. .. | 3,894.69 | 2,109.18 | 993.10 | 6,996.97 |
| 2 வட ஆற்காடு .. .. .. | 4,993.60 | 2,000.00 | 3,130.10 | 10,123.70 |
| 3 தென் ஆற்காடு .. .. | 8,236.00 | 760.00 | 1,504.00 | 10,500.00 |
| 4 தர்மபுரி .. .. .. | 3,400.00 | 975.00 | 750.00 | 5,125.00 |
| 5 சேலம் .. .. .. | 5,883.74 | 1,633.27 | 3,379.08 | 10,896.09 |
| 6 பெரியார் .. .. . | 6,278.42 | 2,317.49 | 1,321.12 | 9,917.03 |
| 7 கோயம்புத்தூர் .. .. | 5,727.47 | 3,668.02 | 2,513.61 | 11,909.10 |
| 8 நீலகிரி .. .. .. .. | 1,460.00 | 115.00 | 408.00 | 1,983.00 |
| 9 மதுரை .. .. .. | 5,046.27 | 1,343.31 | 1,526.02 | 7,915.60 |
| 10 அண்ணா .. .. .. | 3,472.55 | 1,293.45 | 997.22 | 5,763.22 |
| 11 சிதம்பரனார் .. .. .. | 1,790.80 | 527.50 | 442.00 | 2,760.36 |
| 12 திருச்சிராப்பள்ளி .. .. | 6,461.87 | 1,749.23 | 1,831.70 | 10,042.78 |
| 13 தஞ்சாவூர் .. .. .. | 5,999.70 | 602.85 | 1,000.05 | 7,602.60 |
| 14 புதுக்கோட்டை .. .. | 2,124.53 | 411.00 | 349.22 | 2,884.75 |
| 15 இராமநாதபுரம் .. .. | 1,080.60 | 434.30 | 294.00 | 1,808.60 |
| 16 பசும்பொன் முத்துராமலிங்கம். | 1,358.17 | 364.40 | 650.50 | 2,373.07 |
| 17 காமராசர் .. .. .. | 1,990.19 | 1,446.90 | 506.87 | 3,943.96 |
| 18 திருநெல்வேலி .. .. | 2,838.09 | 499.24 | 664.34 | 4,001.67 |
| 19 கன்னியாகுமரி .. .. | 2,132.64 | 871.95 | 736.10 | 3,740.69 |
| மொத்தம் .. | 74,169.39 | 23,121.89 | 22,997.11 | 1,20,288.39 |

[1987 ஏப்ரல் 3

## இணைப்பு 5.

| முதன்மை வங்கிகள். (1) | மாவட்டங்கள். (2) |
| --- | --- |
| 1. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி .. | 1. தஞ்சாவூர்.<br>2. திருச்சிராப்பள்ளி.<br>3. புதுக்கோட்டை.<br>4. இராமநாதபுரம்.<br>5. காமராசர்.<br>6. பசும்பொன் முத்துராமலிங்கம்.<br>7. திருநெல்வேலி—கட்டபொம்மன்.<br>8. கன்னியாகுமரி. |
| 2. இந்தியன் வங்கி .. .. | 1. செங்கற்பட்டு.<br>2. தென் ஆற்காடு.<br>3. வட ஆற்காடு.<br>4. சேலம்.<br>5. தர்மபுரி. |
| 3. கனரா வங்கி .. .. | 1. மதுரை.<br>2. அண்ணா.<br>3. பெரியார்.<br>4. கோயம்புத்தூர்.<br>5. நீலகிரி. |
| 4. இந்திய மாநில வங்கி .. | 1. சிதம்பரனார். |

## இணைப்பு 6.

1986 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையிலான நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கப்பட்ட கடன் தொகை.

| தொடர் எண். | மாவட்டங்கள். | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை. | | மொத்த நிதி உதவி. | |
|---|---|---|---|---|---|
| | | ஆண்டு. இலக்கு. | சாதனை. | ஆண்டு. இலக்கு. | சாதனை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1 | சென்னை .. .. .. | 67,000 | 24,131 | 800 | 402.20 |
| 2 | செங்கற்பட்டு .. .. | 60,000 | 29,889 | 2,300 | 1,046.20 |
| 3 | வட ஆற்காடு .. .. | 60,000 | 40,806 | 1,800 | 1,840.80 |
| 4 | சேலம் .. .. .. | 1,00,000 | 78,465 | 3,600 | 2,963.21 |
| 5 | தர்மபுரி .. .. .. | 20,000 | 17,345 | 600 | 747.06 |
| 6 | பெரியார் .. .. .. | 1,00,000 | 42,589 | 2,000 | 1,929.29 |
| 7 | கோயம்புத்தூர் .. .. | 85,000 | 76,339 | 2,900 | 321.45 |
| 8 | நீலகிரி .. .. .. | 30,000 | 29,078 | 900 | 979.35 |
| 9 | தென் ஆற்காடு .. .. | 55,000 | 40,075 | 1,700 | 1,686.03 |
| 10 | தஞ்சாவூர் .. .. .. | 74,000 | 16,089 | 2,000 | 678.42 |
| 11 | திருச்சிராப்பள்ளி .. .. | 60,000 | 55,793 | 2,000 | 2,139.41 |
| 12 | புதுக்கோட்டை .. .. | 20,000 | 28,647 | 600 | 547.62 |
| 13 | மதுரை .. .. .. | 80,000 | 61,502 | 2,400 | 1,915.57 |
| 14 | அண்ணா .. .. .. | 20,000 | 13,072 | 600 | 486.71 |
| 15 | பசும்பொன் முத்துராமலிங்கம் | 25,000 | 16,314 | 1,000 | 622.00 |
| 16 | இராமநாதபுரம் .. .. | 22,000 | 4,351 | 800 | 305.43 |
| 17 | காமராசர் .. .. .. | 27,000 | 26,396 | 800 | 575.22 |
| 18 | திருநெல்வேலி .. .. | 78,000 | 11,966 | 3,000 | 510.49 |
| 19 | கன்னியாகுமரி .. .. | 17,000 | 24,893 | 500 | 704.44 |
| | மொத்தம் .. | 10,00,000 | 6,37,740 | 30,300 | 20,900.73 |

## இணைப்பு 7.

### 1986 ஆம் ஆண்டு செயல் திட்டத்தின் கீழ் மாவட்ட வாரியான துறைவாரியான இலக்குகளும், சாதனைகளும்.

(ரூபாய் இலட்சத்தில்.)

| என். மாவட்டங்கள். | ஒதுக்கீடுகள். | | | | செப்டம்பர் 1986 திங்கள் வரையிலான சாதனை. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வேளாண்மை. | தொழில்கள். | பணிகள். | மொத்தம். | வேளாண்மை. | தொழில்கள். | பணிகள். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 செங்கற்பட்டு .. | 3,407.95 | 1,757.15 | 872.45 | 6,037.55 | 2,972.13 | 1,362.70 | 1,076.35 | 5,411.18 |
| 2 வட ஆற்காடு .. | 4,158.00 | 1,816.00 | 1,281.00 | 7,255.00 | 4,498.72 | 566.47 | 1,834.97 | 6,900.16 |
| 3 தென் ஆற்காடு .. | 6,114.00 | 514.00 | 1,072.00 | 7,700.00 | 5,472.49 | 325.32 | 814.34 | 6,612.15 |
| 4 தர்மபுரி .. .. | 3,010.00 | 880.00 | 760.00 | 4,650.00 | 2,482.77 | 564.76 | 810.60 | 3,858.13 |
| 5 சேலம் .. .. | 5,014.92 | 1,252.63 | 2,503.6 | 8,771.21 | 5,433.74 | 1,452.18 | 2,571.51 | 9,457.43 |
| 6 பெரியார் .. | 4,463.72 | 2,153.69 | 1,034.78 | 7,652.19 | 4,155.74 | 1,797.56 | 663.13 | 6,616.43 |
| 7 கோயம்புத்தூர் .. | 4,491.49 | 2,856.66 | 1,903.14 | 9,251.29 | 3,838.08 | 2,359.39 | 963.95 | 7,161.42 |
| 8 நீலகிரி .. | 1,136.40 | 241.46 | 352.95 | 1,730.81 | 1,014.03 | 87.22 | 227.32 | 1,328.57 |
| 9 மதுரை .. | 4,396.29 | 1,558.90 | 1,615.35 | 7,570.54 | 3,812.09 | 789.03 | 733.11 | 5,334.23 |
| 10 அண்ணா .. | 3,196.56 | 1,115.55 | 987.85 | 5,299.96 | 2,142.46 | 154.98 | 270.18 | 2,567.62 |
| 11 திருச்சிராப்பள்ளி .. | 4,881.23 | 735.34 | 695.71 | 6,312.28 | 5,274.72 | 1,248.52 | 1,245.51 | 7,768.75 |
| 12 தஞ்சாவூர் .. | 5,500.00 | 750.00 | 850.00 | 7,100.00 | 4,627.18 | 177.44 | 704.70 | 5,512.32 |
| 13 புதுக்கோட்டை .. | 1,601.89 | 439.60 | 251.42 | 2,292.91 | 1,226.51 | 242.67 | 206.62 | 1,675.80 |
| 14 இராமநாதபுரம் .. | 876.23 | 282.75 | 156.84 | 1,315.82 | 665.06 | 81.93 | 86.52 | 833.51 |
| 15 பசும்பொன் முத்துராமலிங்கம். | 1,297.16 | 359.85 | 289.00 | 1,946.01 | 793.28 | 365.49 | 269.13 | 1,427.90 |
| 16 காமராசர் .. | 1,549.29 | 1,071.45 | 315.30 | 2,936.04 | 1,059.63 | 1,835.64 | 263.26 | 3,158.53 |
| 17 திருநெல்வேலி .. | 3,975.00 | 800.00 | 1,032.00 | 5,807.00 | 3,099.28 | 261.94 | 611.57 | 3,972.79 |
| 18 கன்னியாகுமரி .. | 1,993.28 | 237.62 | 591.26 | 2,822.16 | 1,563.07 | 780.97 | 813.91 | 3,157.95 |
| மொத்தம் .. | 61,063.41 | 18,822.65 | 16,464.71 | 96,350.77 | 54,140.98 | 14,454.21 | 14,166.68 | 82,761.87 |

சாதனைப் புள்ளி விவரங்கள் தற்காலிகமானவை.

இணைப்பு— 8.

வட்டார ஆய்வு செய்யப்பட்ட எண்ணிக்கை.

| வரிசை எண். | மாவட்டங்கள். | வட்டாரங்களின் மொத்த எண்ணிக்கை. | ஆய்வு செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை. | 1983. | 1984. | 1985. | 1986. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | செங்கற்பட்டு .. .. | 27 | 1 | .. | .. | 1 | .. |
| 2. | தென் ஆற்காடு .. .. | 34 | 5 | .. | .. | 5 | .. |
| 3. | வட ஆற்காடு .. .. | 36 | 11 | .. | .. | 11 | .. |
| 4. | சேலம் .. .. | 35 | 14 | .. | 5 | 6 | 3 |
| 5. | தர்மபுரி .. .. | 16 | 14 | .. | 4 | 11 | .. |
| 6. | கோயம்புத்தூர் .. .. | 21 | 15 | 1 | 3 | 8 | .. |
| 7. | பெரியார் .. .. | 20 | 18 | 1 | 1 | 18 | .. |
| 8. | திருச்சிராப்பள்ளி .. .. | 31 | 3 | .. | .. | 3 | .. |
| 9. | புதுக்கோட்டை .. .. | 13 | 12 | .. | 4 | 8 | .. |
| 10. | தஞ்சாவூர் .. .. | 34 | 13 | .. | 10 | 6 | .. |
| 11. | அண்ணா .. .. | 14 | 7 | .. | [illegible] | 5 | .. |
| 12. | மதுரை .. .. | 20 | 6 | .. | 1 | 5 | .. |
| 13. | இராமநாதபுரம் .. | 11 | 4 | .. | .. | 4 | .. |
| 14. | பசும்பொன் முத்துராமலிங்கம். | 11 | 6 | .. | 2 | 4 | .. |
| 15. | காமராசர் .. .. | 11 | 4 | .. | 2 | 2 | .. |
| 16. | திருநெல்வேலி .. | 31 | 11 | 1 | 4 | 7 | .. |
| 17. | நீலகிரி .. .. | 4 | 4 | .. | 4 | 1 | .. |
| 18. | கன்னியாகுமரி .. .. | 9 | 8 | 1 | 3 | 4 | .. |
| | மொத்தம் .. | 378 | 156 | 4 | 51 | 109 | 3 |

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் நூலகம் ★ சென்னை-600 008
136522
D
V211,81 N8 N87-39-U

இணைப்பு—8—தொடர்ச்சி.

ஆய்வுக்குறிப்பு சுருக்கம்.

| வரிசை எண். | பிரிவு. | இந்த ஆண்டிற்குள் ஆய்வுகளின் எண்ணிக்கை. 1983. | 1984. | 1985. | 1986. | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம். | 92 | 1,316 | 1,149 | 33 | 2,590 |
| 2. | பெரு விவசாயத் திட்டம் .. | .. | 9 | 78 | .. | 87 |
| 3. | சுய வேலை வாய்ப்புத் திட்டம். | .. | 40 | 120 | 1 | 161 |
| 4. | கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம். | .. | 4 | 12 | .. | 16 |
| | மொத்தம் .. | 92 | 1,369 | 1,359 | 34 | 2,854 |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tinnevelly) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31. Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nanchi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthathalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.

©